T. 1914

O F. 506—1,64,822—20-1-54.
**LIBRARY.**

Book No.

Date of purchase Price

This book should be returned on or before the date last marked below :—

கழக வெளியீடு: ௬0௫

# அம்பிகாபதி கோவை

சென்னை
பச்சையப்பன் கல்லூரி உயர்நிலைப்பள்ளித்
தமிழாசிரியர்:
வித்துவான், மீ. பொன். இராமநாதன் செட்டியார்
எழுதிய
உரையுடன்

:: திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1.

First Edition: Jan., 1952.

[All Rights Reserved]

*Published by:*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,

1/140, BROADWAY, :: MADRAS-1

*Head Office:*

24, EAST CAR STREET :: THIRUNELVELI

Appar Achakam, 2/140, Broadway, Madras-1.

# பதிப்புரை

நம் செந்தமிழ் மொழிக்கு உயிர்போல்வன அகப்பொருளும் புறப்பொருளும் ஆகும்.

அகப்பொருள் ஆண் பெண் இருபாலாரின் அன்பினை விளக்குவதாகும். அவ் அன்பை நிலைக்களனாகக்கொண்டு இலகுறும் நூல்கள் பல. அவற்றுள் அன்பின் திறத்தைக் கூறுபடுத்திக் கோவையாக அணிந்துரைப்பன, 'கோவை' என்னும் மாமணிகள். அவை பல. அவற்றுள் இவ் '**அம்பிகாபதி கோவை**' என்னும் நூலும் ஒன்று.

இவ் அம்பிகாபதி கோவை சொற்பொருள் நயங்கள் மிக்கதாய், 'நவிறொறும் நூனயம் போலும்' என்னும் செந்நாப்போதார் செம்மொழிக்கு ஏற்றதாய், என்றுமுள தென்றமிழ்க்கு ஏற்ற அணி செய்து திகழ்கின்றது. ஏற்கெனவே இந்நூல் இன்னும் வேறு பதிப்புக்களாக வெளிவந்துள்ளது. அவ்வாறாயினும் இதனை யாம் பதிக்க முற்பட்டது, நம் தமிழர் வாழும் இடங்களெல்லாம் புகுந்து ஒவ்வொரு தமிழ்மக்கள் கையிலும் வீற்றிருந்து நெஞ்சில் படர்ந்து நெட்டுருவாகி நிலைக்கவேண்டுமென்பதே. அதற்காக ஒரு குறிப்புரை வரைந்து வெளியிட அவாவினேம்.

அதைப், பல கோவை நூல்களின் மேற்கோள், துறை விளக்கம், இலக்கணக் குறிப்பு முதலியவற்றுடன் வேண்டும் அருஞ்சொற்களுக்குப் பொருள் முதலியவற்றுடன் கூடியதாக வித்துவான் திரு. மீ. பொன். இராமநாதன் செட்டியாரவர்கள் ஆக்கி உதவினார்கள். இவ்வுரையை நன்கு ஆய்ந்து வித்துவான் திரு. ந. சேதுரகுநாதன் அவர்கள் பார்வையிட்டு உதவினார்கள்.

தமிழ்ப்பெருமக்கள் இதனை வாங்கிக் கற்று இதுபோன்ற இறவாத புகழுடைய இனிய தமிழ்நூல்களை மேன்மேலும் வெளியிட்டுவர எம்மை ஊக்குவிக்குமாறு வேண்டுகின்றோம்.

**சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.**

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| | ஆராய்ச்சி | | ரு |
| | அவையடக்கம் | ... | 1 |
| **நூல்** | | | |
| க. | கைக்கிளை | ... | 2 |
| உ. | இயற்கைப் புணர்ச்சி | ... | 5 |
| ங. | இடந்தலைப்பாடு | ... | 15 |
| ச. | பாங்கற் கூட்டம் | ... | 25 |
| ரு. | பாங்கி மதியுடன்பாடு | ... | 41 |
| சு. | பாங்கியிற் கூட்டம் | ... | 54 |
| எ. | ஒருசார் பகற்குறி | ... | 98 |
| அ. | பகற்குறி இடையீடு | ... | 109 |
| கூ. | இரவுக்குறி | ... | 114 |
| க0. | இரவுக்குறி இடையீடு | ... | 130 |
| கக. | வரைதல் வேட்கை | ... | 141 |
| கஉ. | வரைவு கடாதல் | ... | 156 |
| கங. | ஒருவழித் தணத்தல் | ... | 169 |
| கச. | வரைவு இடைவைத்துப் பொருள்வயிற் பிரிதல் | ... | 183 |
| கரு. | வரைவு மலிவு | ... | 198 |
| கசு. | அறத்தொடு நிற்றல் | ... | 203 |
| கஎ. | உடன்போக்கு | ... | 218 |
| கஅ. | கற்பொடு புணர்ந்த கௌவை | ... | 230 |
| ககூ. | மீட்சி | ... | 243 |
| உ0. | தன்மனை வரைதல் | ... | 247 |
| உக. | உடன்போக்கு இடையீடு | ... | 249 |
| உஉ. | வரைதல் | ... | 257 |
| உங. | இல்வாழ்க்கை | ... | 258 |
| உச. | பரத்தையிற் பிரிவு | ... | 266 |
| உரு. | ஓதற் பிரிவு | ... | 309 |
| உசு. | காவற் பிரிவு | ... | 312 |
| உஎ. | பகைதணி வினைப்பிரிவு | ... | 315 |
| உஅ. | உற்றுழிப் பிரிவு | ... | 318 |
| உகூ. | பொருள்வயிற் பிரிவு | ... | 327 |
| ங0. | துறவறம் | ... | 343 |

# ஆராய்ச்சி

அமிழ்தினுமினிய நம் தமிழ்மொழியில் பொருள் இலக்கணம் மிக்க சிறப்பு வாய்ந்தது. அப் பொருள் அகம், புறம் என இரு கூற்றனவாய்ப் பிரிவுபட்டு விழங்குகின்றது.

அவற்றுள் 'அகம்' என்பது உருவும் திருவும் குடியும் குணனும் பருவமும் ஒத்து அன்புவாய்ந்த காதலன் காதலி இருவரின் உள்ளத்திற் கிளைத்தெழுந்து ஓங்கி எழுகின்ற இன்பச் செவ்வி. இச் செவ்வியைக் கிளந்தெடுத்து ஓதும் தமிழ் நூல்கள் பல. இதனை,

**கோவைகள்**

> "இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
> அன்பொடு புணர்ந்த ஐந்திணை"

என்பர் தொல்காப்பியனார்.

அவைகளுள் முறைப்படுத்தி அவ் இன்பத்துறைகள் எல்லாம் ஒருங்கே முற்ற முடிய விளக்கும் இலக்கிய நூல்களே 'கோவை' என்னும் பெயரால் வழங்கப்பெறுவன. தொடர்பு படுத்திக் கோத்து உரைத்திடுதலால்இதற்கு இப் பெயரிட்டு வழங்கினர் ஆன்றோர்.

இக் கோவை நூல்களுள், தலை சிறந்ததெனப் பாராட்டப் பெறுவது, மாணிக்கவாசகப் பெருமானாரால் அருளப் பெற்ற திருச்சிற்றம்பலக் கோவை யென்னும் திருக்கோவையார். அதனை யொப்ப எழுந்த கோவை நூல்கள் தஞ்சைவாணன்கோவை, கோடீச்சுரக்கோவை, திருவாரூர்க் கோவை, திருவெங்கைக்கோவை முதலியனவும் மற்றும் பலவும் ஆகும்.

**இக்கோவைச் சிறப்பு**

'அம்பிகாபதி கோவை' என்னும் இந் நூல், ௫௬௩ செய்யுட்களைத் தன்னகத்தே கொண்டு சொல்லணி பொருளணி முதலிய அணிகள் யாவும் ஒருங்கே

யமைந்து கற்றார் நெஞ்சம் கனிவு கொள்ளுமாறு இலங்குகின்றது. அஃதன்றி மற்றைக் கோவைகளைப் போலப் பாட்டுடைத் தலைவராகக் கடவுளர்களையோ அன்றி அரசர் வள்ளல் முதலியவர்களையோ கொண்டு பாடப்பெறாமல், பொதுப்பட நிலங்கூறி, அந் நிலத்துக் கோவைப் பொருண்மையாக வரும் ஒரு தலைவனையும் தலைவியையும் குறித்து அமைவுறப் பாடப் பெற்றுள்ளது. ஆகலான், ஒரு தலைவனைக்கொண்டு பாடுங்கால் அவனைக் குறித்த சிறப்பியல்புகள், ஒரு பெயரையே திரும்பத் திரும்பக் கூறும் நெருக்கடி, இவ் வாசிரியர்க்கு இல்லாததாயின. ஆகவே, இக்கோவை மற்றெவ்வகைக் கோவையினும் தனித்ததொரு சிறப்பினதாய்த் திகழ்ந்து விளங்குகின்றது.

**நூலாசிரியர் பெயரும் நூலின் பெயரும்**

இந் நூலை இவ்வளவு செப்பமுற ஆக்கிய ஆசிரியர் பெயர், தெற்றெனப் புலனாகவில்லை. ஊரோ பேரோ நன்கு தெளிவுற அறிய முடியாதவராகவே காணப்படுகின்றார். ஊகித்துணர வேண்டுபவராகவே உள்ளனர்.

நூல்துவக்கத்தில் கடவுள் வாழ்த்தும் செயப்படுபொருளும் அவையடக்கமும் குறிக்கப்பட்டுள்ளன. அதில் தன்மை பொருமையாகப் 'புனைந்தேன்' என்று கூறுதலால் அதை இவ் வாசிரியரே பாடியதாகத் தெரிகின்றது. அப் பாடல்,

"அருளம்பி காபதி பொன்னடித் தாமரை சூட்டியகப்
பொருளம்பி காபதி கம்**புனைந்தேன்**இப் புனைந்த செஞ்சொல்
தெருளம் புலவர்முன் செப்பிய போதுள தப்புரையார்
....................................." (க)

என்பதாம். 'அருளையுடைய அம்பிகைக்குத் தலைவனான இறைவனின் அழகிய திருவடிகளைப் போற்றி அகப்பொருள் அம்பிகாபதிகம் புனைந்தேன்' என்று புகல்கின்றாராகலின், ஆசிரியர் இந் நூற் பெயரை 'அம்பிகாபதிகம்' என்றே குறித்திருக்கின்றார் என்று தெளிவாகத் தெரிகின்றது. இவர்,

"பூமலி அசோகின் புனைநிழல் அமர்ந்த
நான்முகற் றொழுதுநன் கியம்புவன் எழுத்தே"

என்று கூறும் நன்னூல் ஆசிரியரைப் போன்றும்,

"கந்தம் மடிவில் கடிமலர்ப் பிண்டிக்கண் ணார்நிழற்கீழ்
எந்தம் அடிகள் இணையடி ஏத்தி எழுத்தசைசீர்
பந்தம் அடிதொடை பாவினம் கூறுவன்"

என்று கூறும் யாப்பருங்கலக்காரிகை ஆசிரியரைப் போன்றும் கடவுள் வாழ்த்தும் செயப்படுபொருளும் மொழிந்து அவைகளோடமையாது இவ்வொரு செய்யுளிலேயே அவையடக்கமும் அடக்கிக் கூறுவாராயினர். இவர் இதில் அம்பிகாபதி என்று கடவுட் பெயரைக் குறித்தலால், அம்பிகைக்குப் பதியாகிய சிவபெருமானிடத்துப் பற்றுடையவரென்று அறியலாம். அதனால் இவர் சைவ சமயத்தைச் சார்ந்தவரென்பதும் புலனாகின்றது. இந்நூற்கு 'அம்பிகா பதிகம்' என்று பெயர் தோற்றுவித்தாராயினும் இதனுட் கூறப்படும் பொருள்கள், கோவைக்குரிய பொருள்களாகவே இருப்பதால் இதனை 'அம்பிகாபதி கோவை' என்னும் பெயர் கொடுத்துப் பிற்காலத்தறிஞர் புனைந்தனர் போலும்! இந் நூற்கு அப்பெயரே வழக்காறாக வழங்கிவருகின்றது.

இனி, இந் நூலாசிரியரைக் குறித்துக் கம்பர் மகன் அம்பிகாபதி என்பவர் சோழமன்னன் மகள்பாற் காதல் கொண்டொழுகினரென்றும், அதை அரசன் அறிந்து வெகுண்டு அவரை அதற்காக ஒறுக்க எண்ணிப் பல செயல்களால் அதைக் கண்டறிய முற்பட்டு இறுதியில் கருத்து முற்றாமையால் சிற்றின்பத்துறை கலவாமல் நூறு பாடல்கள் பாடிவிடின் மன்னிப்பதாகக் கூறினன் என்றும் அவ்வாறு இவர் பாடிவருங்கால் காப்பும் சேர்த்து நூறு செய்யுட்கள் முடிந்ததைக் கணக்கிட்ட அரசன் புதல்வி, முடிந்ததென்று கருதி மேல்மாடியிலிருந்து எட்டிப் பார்த்தாளென்றும் அதைப் பார்த்தறிந்த அம்பிகாபதி "சற்றே பருத்த" என்று தொடங்கும் பாடலைச் சிற்றின்பத் துறையில் அமைத்துப் பாடினரென்றும், அதைக்

கேட்ட அரசன் வெகுண்டு கொன்றான் என்றுங் கூறுவர். அக்கோவை 'பலதுறைக் காரிகை' என்ற பெயரால் நிலவு கின்றது. அவ் அம்பிகாபதியே இக்கோவை பாடியவர் என்று கூறுவர். அஃது உண்மையென்று கோட்டற்குச் சான்று ஒன்றும் இன்று.

அம்பிகாபதி என்னும் பெயருடையராய்ச் 'சௌந்தரிய லகரி'யைத் தமிழில் பாடிய வீரைக்கவிராச பண்டிதர் மகன் வீரை அம்பிகாபதி என்பவர் ஒருவரும், தண்டியலங்கார நூல் செய்த தண்டியாசிரியர் தந்தையார் அம்பிகாபதி என்பவர் ஒருவரும் ஆக இருவர் உள்ளனர். அவர்களில் ஒருவராக இருத்தல் கூடுமோ என்ற ஐயுறவுக்கும் இடனுண்டு. ஆயினும் இம்மூவரில் யாரோ இவரல்லாத மற்றொருவரோ என்று கொள்ளற்கும் இடனில்லை. இது நன்கு ஆய்தற்குரியது.

சங்கநூல்களில் பெயர்தெரியாப் புலவர்கள் சிலருண்டு. அவரை அவரால் பாடப்பெற்றுள்ள செய்யுட்களில் அருஞ்சொல்லாக வரும் ஒரு தொடரைக் கொண்டு அப்பெயரை அவருக்கு அமைத்து ஆன்றோர் வழங்கினர். அவர்,

புறநானூற்றில் 'தொடித்தலை விழுத்தண்டினார்' என்பவரும், நற்றிணையில் 'தேய்புரிப் பழங்கயிற்றினார்' என்பவரும், குறுந்தொகையில் 'கல்பொரு சிறுநுரையார்' என்பவரும், பிறரும் அவர்தம் சொல்லாட்சி முறையால் வழங்கப்படும் சான்றாக உள்ளனர். அவ்வாறே இவ் வாசிரியர் நூல் தொடக்கத்தில் 'அம்பிகாபதி பொன்னடித் தாமரை' என்று தோற்றுவாய் செய்ததைக் கொண்டு ஆசிரியர் பெயரை, அச்சொல்லாற் குறித்துள்ளனரென்றுங் கருத இடந்தருகின்றது. அஃதோடு இந்நூற்குத் தலைவன் ஒருவனைக் குறிக்காமல் இந்நூல் ஆக்கப்பெற்றிருப்பதாலும் அம்பிகாபதி என்னும் பெயருள்ள ஒருவரால் பாடப்பெற்றதென்றே அறிஞர்கள் கருதுகின்றனர்.

அஃது எவ்வாறாயினும் ஆகுக. நூல் மற்றைய கோவைகளினும் சிறந்த பொருள்களையும் அருஞ் சொற்

றொடர்களையும் கோத்தமைத்துள்ள இயற்கையை நோக்குங்கால், இந் நூலாசிரியர் நல்லிசைப் புலமை வல்லுநராகவே உள்ளனர்.

**நூலின் அமைப்பும் காலமும்**

இந்நூலின் துவக்கத்தே 'காட்சி'த் துறையைத் தோற்றுவிக்குங்கால் 'பூங்காவின் புறம்படர் வல்லிகண் டேகண் களி கொண்டதே' என்று காதல் நிகழுமிடத்தைப் 'பூங்கா' என்று தோற்றுவிக்கின்றார். ஆதலால் மற்றை யாசிரியர் போல் ஒரு தனி நாடாகவோ தனித் தலைவனுக்குரிய இடனாகவோ குறித்தாரில்லை; எனவே, இந்நூல் தனி அமைப்பு முறையாக இக் காதல் எந்நாட்டிலும் எங்கும் நிகழலாம் என்பதைக் குறிப்பாற் குறித்ததாயிற்று.

இத்தகைய நூல் காலவரையறை பற்றிய செய்திகள் இந்நூலினகத்தே ஒன்றும் அகச்சான்றாகக் காண்டற்கில்லை. ஆனால், இக் கோவைச் செய்யுட்களை இலக்கண விளக்கத்துள் வைத்தியநாத தேசிகர் விரிவாக எடுத்தாள்வதால், அவர் காலமாகிய பதினேழாம் நூற்றாண்டுக்கும் முற்பட்டதென்று கொள்ளலாம். அவ்வாறானால் அதற்கு முன் எவ்வளவு காலம் முற்பட்டதென்று கோடலாமென வினவின், இத்துணைக் காலமென அறுதியிட்டுரைத்தற்கு இயலாததாக இருக்கின்றது. இந்நூல் முதல் முதல் 1899-ல் வெளிவந்துள்ளது. அதில், "கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பர் குமாரர் அம்பிகாபதி இயற்றிய 'அம்பிகாபதிக் கோவை'," என்றே குறிக்கப்பெற்றுளது.

**துறைகள்**

ஏனைய கோவைகளினும் இக்கோவையில் செய்யுள் மிகுதியாக உள்ளன. இவ்வாசிரியர் சில் புதிய துறைகளை அமைத்து செய்யுட்களை விரித்துள்ளனர். எனினும், மற்றைக் கோவை நூல் ஆசிரியர் விரிவாகக் கூறியுள்ள இடங்களில் இவர் சுருக்கியும் சுருக்கியுள்ள இடங்களில் விரித்தும் அமைத்துள்ளனர்.

திருக்கோவையாரில் 'இடந்தலைப்பாடு' கூறவந்த ஆசிரியர் ஒரே செய்யுள் கூறியிருப்ப, இவர் அதனைப் பத்தொன்பது செய்யுட்களால் விரித்துக் கூறியுள்ளார். 'பாங்கி மதியுடன்பாடு' கூறப்போந்த திருவாரூர்க்கோவை யாசிரியர், தலைவியிடத்துத் தோழியானவள் ஆராய்கின்ற நாற்றம் தோற்றம் ஒழுக்கம் உண்டி செய்வினைமறைப்பு செலவு பயில்வு என்னும் எழுவகை ஆய்வுகட்கும் சில செய்யுட்களால் விளக்கியிருப்ப இவ்வாசிரியர் அதனை, 'அவ்வகை ஏழினும் ஐயமுற்றோர்தல்' என்னும் துறையமைத்து, ஒரே செய்யுளிற் கூறிவிட்டு 'ஐயங்கரந்து தையலை வினுதல்' முதலிய பல துறைகள் அமைத்து யாத்துள்ளார்.

தலைவன் தலைவியை முதன்முதற் கண்ட 'காட்சி' என்னும் துறைக்குத் தலைவன் தலைவியின் உருவ அழகை வியந்து கூறுங்கால்,

"மாவின் கொழுந்தளிர் ஈன்றுபோற் கோங்கிடை வந்தரும்பி
மேவும் கமலம் மலர்ந்தல்லி வாய்விம்மு தேன்பொதிந்து
தாவும் சிறைவரி வண்டினம் கொண்டு தழைஅவிழ்பூங்
காவின் புறம்படர் வல்லிகண் டேகண் களிகொண்டதே" (௨)

என்று தலைவியின் இளமைச் செவ்வி வாய்ந்த அழகுருவில் ஈடுற்று அவள் மேனியொளியை மாந்தளிரென்றும் கொங்கைகளைக் கோங்கரும்புகளென்றும் முகத்தைக் கமலமலரென்றும் வாயை அல்லிமலரென்றும் கண்களை வண்டினமென்றும் இவைகளையெல்லாம் ஒருங்கே தாங்கித் தளர்ந்து மெலிந்து சிறுத்திருக்கும் இடையை வல்லி (கொடி) என்றும் அமைத்து, அவள் உறுப்புநலத்தைப் பாராட்டி, இவைகளெல்லாம் ஒரு வல்லியிடத்துக் கண்டு என் கண் களிகொண்டதெனத் தலைவன் கூற்ருகக் காட்டியிருக்கும் திறப்பாடு மகிழ்ந்து இன்புறற் பாலது.

மாந்தளிரும் கோங்கரும்பும் கமலமலரும் அல்லிப்போதும் வண்டினமும் ஒருங்கே ஒரேகொடியிற் சார்ந்திருப்பதாயின், அஃது எவ்வளவு வியத்தற்குரியது? இறும்பூது சான்ற இவ்வியல்நலத்தைத் தலைவன் தன் கண்ணுன் முகந்து பருகி ஆரா அயரா இன்புற்ருன்.

இதில், ஆசிரியர் அன்பின் ஐந்திணைக்கு நிலமும் கருப்பொருளும் தோற்றுவித்தாராயினர். 'மாவின் கொழுந்தளிர்,' என்றமையான் குறிஞ்சியும், 'பொற் கோங்கு,' என்றமையான் பாலையும், 'கமலம் மலர்ந்து அல்லிவாய் விம்முதேன்,' என்றமையான் மருதமும், 'சிறை வரி வண்டினம்,' என்றமையான் நெய்தலும், 'புறம்படர் வல்லி,' என்றமையான் முல்லையும் ஆகிய இயற்கைப் புணர்ச்சிக்கு நிலக்களனை குறிஞ்சி பாலை மருதம் நெய்தல் முல்லையாகிய ஐந்திணைகளும், அவைகளின் ஒழுக்க மாகிய புணர்தல் பிரிதல் ஊடல் இரங்கல் இருத்தலாகிய கைகோள்வகைகளும் குறிக்கப்பட்டவாறும். இக்காட்சித் துறையில் தலைவியின் ஒவ்வோர் உறுப்பையும் மலர்களின் இயற்கையோடு பொருத்திக் காட்டுவதால் தலைவியின் மென்மையும் மலரினும் மெல்லிய இயற்கைப் பண்பும் காட்டியவாறும்.

இதனல் இயற்கையாகிய நன்மணம் புணர்ந்து இற்கிழமை பூண்டு இன்பம்மிக்கு அன்புநெறியாம் இல்லறத் தொழுகி அறஞ்சாலியராய் அமைதலே இதன்பயன் என்பதைப் புலப்படுத்தவே, 'பூங்கா' என்னும் முல்லைத்திணையை இறுதியில் அமைத்துவைப்பா ராயினர்.

இனி, பாங்கற்கூட்டத்துள் 'பாங்கன் வினுதல்' என்னும் துறையில்,

> "தென்செய்த பண்ணின் திறந்தெரிந் தோதெய்வப் பாவலர்தாம்
> முன்செய்த நூலின் முறைதெரிந் தோசெம் முகங்கருகிப்
> பொன்செய்த மேனியும் புல்லென்று வாடிப் புலம்ப என்னே
> என்செய்த தோஅறி யேன்திரு மேனி இறைவனுக்கே" (சகூ)

என்பது. இதில் பாங்கன், தலைவன் காதற்புணர்வினல், அவன்றன் உடற்சோர்வும் குறிகளும் கண்டு ஐயுற்று வினவுங்கால், உலகில் யாருக்குமே உடற்சோர்வுக்குக் காரணம் மிகுதியான உழைப்பும் ஒன்றில் கருத்தூன்றிப் பார்க்கும் இயற்கையுமே ஆகும் என்பது எல்லோரும் நன்கறிந்த உண்மையாகலான், இவனிடம் அவ் வியற்கையாம் தன்மையைக் கண்கூடாகக் கண்டு, குழலும் யாழும் பிற இன்னி

சைக் கருவிகளும்கொண்டு இசைப்பாடலில் மூழ்கியிருப்ப வர்க்கும் மெல்லிய இனிய செஞ்சொற் கருவூலங்களான் இயன்று அறம் பொருள் இன்பம் முதலிய துறைகாட்டி எல்லாப் பொருளும் இதன்பால் உள என்று வியக்குமாறு பண்புடன் இலங்கும் அரும் பெருந் தீந்தமிழ் இலக்கியங் களைக் கற்போரையும் அவைகள் தம் வயமாக்கி இன் புறுத்தி உண்ணல் உறங்கல் முதலிய உடல்நலங் காக்கும் இயற்கைகளையும்கூட நாடாது தம்பால் ஈர்க்கும் பெற்றி மைத்தாகலின், 'தென்செய்த பண்ணின் திறந்தெரிந்தோ,' என்றும், 'தெய்வப் பாவலர் தாம் முன்செய்த நூலின்முறை தெரிந்தோ,' என்றும் முறையே வினவி, முகங்கருகி வாடு தற்குரிய காரணத்தையும் கேட்கின்றான்.

இத்துறையில் திருக்கோவையாரினும் பாங்கன் வின வாக,

"சிறைவான் புனல்தில்லைச் சிற்றம் பலத்தும்என் சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதில் கூடலின் ஆய்ந்தஒண் தீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோஅன்றி ஏழிசைச் சூழல்புக்கோ
இறைவா தடவரைத் தோட்கென் கொலாம்புகுந் தெய்தியதே."

'இறைவா உன் தடவரைத் தோள் மெலிவுக்குக் கார ணம் ஒண் தீந்தமிழின் துறைவாய் நுழைந்தனையோ அன்றி ஏழிசைச் சூழல்புக்கோ,' என்று அமைத்துள்ள கருத்தையே, இவ்வாசிரியர் முன்னோர் மொழிபொருளைப் பொன்னேபோற் போற்றிப் பொதிந்துவைத்திருக்கும் சதுரப்பாடு, இலக்கியச் சுவைஞர் சுவைத்து இன்புறத்தக்க தேனொழுக்காக அமைந்து மிளிர்வதைக் காணலாம்.

மீண்டும் இவ் வாசிரியர் தாம் ஆக்கியுள்ள துறை களில் சங்கநூற்களின் கருத்துக்களையும் திருக்குறள், நாலடியார், பழமொழி முதலிய அறநூல்களின் கருத்துக் களையும் அடிபொற்றி ஆங்காங்கே செறித்தமைத்து வைத் துள்ளனர்.

'கற்பொடு புணர்ந்த கவ்வை'ப் பகுதியில், செவிலி, 'முக்கோற் பகவரை வினதல்,' என்னும் துறையில் கலித் தொகை (கூ)-ஆம் பாடலின்,

"எறித்தரு கதிர்தாங்கி ஏந்திய குடைநீழல்
உறித்தாழ்ந்த கரகமும் உரைசான்ற முக்கோலும்
நெறிப்படச் சுவலசைஇ வேறோரா நெஞ்சத்துக்
குறிப்பேவல் செயல்மாலைக் கொளைநடை அந்தணீர்"

என்னும் தரவடிகளின் கருத்துக்களை உட்செறித்து,

"உறித்தாழ்ந்த கரகமும் ஊன்றுமுக் கோலும் உடுத்தசெவ்வான்
எறித்தால் அனைய இருந்துவர் ஆடையும் இந்திரவி
மறித்தால் அனைய குடையுங்கொண் டேகுவீர்" (சOக)

எனவும், ஏனைய இடங்களிலும் (கலி: கக, கசு) கருத்துக்கள் முறையே, இந்நூல், (நிசO, நிசரு) முதலிய செய்யுட்களில் பொதிந்து வைத்துள்ளமையை நன்குணரலாம்.

மற்றைய சங்க நூல்களான, அகம், புறம், பத்துப் பாட்டு முதலிய பல்வகை நூல்களின் அருங்கருத்துக்கள் இந் நூன்முழுதும் பரந்துகிடப்பதை அறியலாம். ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதமாவதுபோல, ஈங்கே இரண்டொன்று காட்டப்பெற்றன. அவைகளையெல்லாம் நூல்முழுதும் துருவி ஆய்ந்து காட்டுவதாயின், அது தனி நூலாகமுடியும். ஆகவே, இம்மட்டோடு இதை நிறுத்திக் கொண்டு இனி, திருக்குறள் முதலிய நூல்களின் கருத்துக்களை எவ்வாறு ஆண்டுள்ளனர் எனக் காண்பாம்.

உடன்போக்கில் 'தலைவன் உடன்போக்கு மறுத்தல்' என்னும் துறையில் பாலைநிலத்தின் வெப்பத்தை விளக்க வந்தகாலை,

"இலனென்னும் நாவினர்க்கு இல்லென்னும் நாவினும் இன்
புலனென்னும் நாவிற் புகையெழுங் கானம்" [சொலிலாப்
(நிகூச)

என்பதில்,

"இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்" (உஉரு)

"இன்சொல் இனிதீன்றல்" (கூக)

என்னும் குறட் பாக்களின் கருத்துக்களும்,

இல்வாழ்க்கையில், 'மணமனைசென்ற செவிலிக்குத் தோழி சொல்லியது' என்னும் துறையில்,

" அணங்குங் கடவுள் அணிநெடுந் தேரண் ணலையொழிய
வணங்குங் கடவுள்மற் றொன்றறியாள் " (சசரு)

என்பதில்,

" தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்" (ருரு)

என்னும் குறட்பாவின் கருத்தும்,

அறத்தொடு நிற்றலில், 'தலைவி தோழியை வினுதல்' என்னும் துறையில்,

" நோய்நாடி யானுற்ற நோய்முதல் நாடிஅந் நோய்தணிக்கும்
வாய்நாடி வாய்த்த மருந்துசெய் யாமல் " (கூ௫0)

என்பதில்,

" நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல் " (கூசஅ)

என்னும் குறட்பாவின் அடிகளும்,

ஒருவழித் தணத்தலில், 'கிளியைநோக்கிக் கூறல்' என்னும் துறையில்,

" தீட்டாத கூர்மையின் செவ்வாய் கவரும் தினைக்குரல்கண்டு
ஓட்டா திருந்த உதவிக் குதவி உயர்விசும்பில்
பூட்டாத நன்னுதல் பொற்றொடி யார்புனங் காவலென்ன
மாட்டாய்கொல் பைங்கிளி யேவல்லை யேசென்று மன்ன
[வற்கே" (உகூஎ)

என்பதில்,

" நன்றி மறப்பது நன்றன்று " (க0அ)

என்னும் குறட்பாவின் கருத்து உள்ளடங்கிக்கிடத்தலையும் ஓரலாம்.

இவ்வாறே நாலடியார், பழமொழி முதலிய அறநூல்களின் அரும்பெரும் நுட்பக்கருத்துக்களும் பொதிந்து இலங்குவதை அறியலாம்.

திருகோவையாரில், தலைவன், 'ஊர்வினுதல்' என்னும் துறையில்,

"வருங்கடம் ஊர்பகர்ந் தாற்பழி யோஇங்கு வாழ்பவர்க்கே" (ருரு)

எனவும்,

தஞ்சைவாணன் கோவையில்,

"புதியேன் மிகவிப் புனத்திற் கியான்தனி போந்தனனும்
பதியேது செல்லும் படிசொல்லுவீர்" (எ0)

எனவும்,

கோடீசுரக் கோவையில்,

"பதியிருக் குந்தலம் வானோ புவியோ பகர்தி" (எசு)

எனவும்,

திருவாரூர்க் கோவையில்,

"ஊரேது தாமரை யோவுரை யாமை உறுதியுண்டோ
பேரேது மேனகை யோவல்லவோ" (அக)

எனவும்,

திருவெங்கைக் கோவையில்,

"மலைநடு வந்துநொந் தேனுரை யீர்நும் வளம்பதியாது" (எங)

எனவும் கூறிப் பெயர்வினுதல், வழிவினுதல் முதலிய பல துறைகள் அமைத்து அவைகட்குத் தனித்தனியே ஒவ்வோர் செய்யுள் கூறியிருப்ப, இவர்,

"உரைக்கும் பெயரும் உறையும் பதியும்எம் ஊர்க்கும் உங்கள்
வரைக்கும் பெயரும் வழியும் சொல்லீர்" (அரு)

எனச் 'சுருங்கச்சொல்லி விளங்கவைத்தல்' என்னும் அழகமைத்துப் பெயரும் வழியும் ஒரே செய்யுளில் நயம்பல தோன்ற அமைத்துள்ளமை அறியலாம்.

பின்னரும் இரவுக்குறி இடையீட்டிலும் தனித்தனித் துறையமைக்காது,

"அன்னையும் ஊரும் அலைவாய் ஞமலியும் அம்புலியும்
கொன்னகர்க் காவல் துடியும் குடிஞையும் கோழியும்என்று
இன்னவை நம்கள விற்கிடை யூறிதற் கேற்பஅந்த
மன்னவர் தாம்வரும் நாளொரு நாளில்லை வாணுதலே" (உசக)

என ஒரே செய்யுளில் கூறிய திறப்பாடு போற்றற்குரியது. இறுதியாகப் பொருள்வயிற்பிரிவில், 'பிரிவுணர்த்தல்' என்னும் துறையில், உலகியற் செயல்கள் யாவும் பொருளொன்

றுலேயே முட்டின்று முடியும். அதனுற் பொருளீட்டச் செல்வதாகத் தலைவன் கூற்றில்வைத்துப் பொருளின் இன்றியமையாச் சிறப்பை விளக்கியிருக்கும் செப்பம் மிக மிக மகிழ்தற்குரித்து. அது,

"அருள்கொண் டியற்றும் அறமும் அறநெறி ஆய்ந்தமென்பூச்
சுருள்கொண்ட கோதையர் தோள்புணர் இன்பமும் சூழ்சுரும்பு
மருள்கொண்டு பாடும் மதுமலர்ச் சோலை மயிலனையாய்
பொருள்கொண் டொழியமுற் றுதென்று ஞாலம் புகலுமின்றே"
(ருச0)

என்பதாம்.

**தமிழ் அன்பு**

இஃதன்றி, இவர்தம் தாய்மொழியாம் தமிழிடத்து அளவற்ற அன்புடையாரென்பது அறியக்கிடக்கின்றது. முதல் இடை கடை யென்னும் முச்சங்கமிருந்து தமிழ் வளர்த்த வரலாற்றைக் கூறி, தலைவியின் இனிய மெல்லிய சொற்களுக்கு உவமங்காட்டி, "முச்சங்க வண் தமிழ் போல்மொழி" என்று கூறுகின்றார். தமிழ்முனி வன் வாழும் பொதியிலை "மந்தமாருதம் வண்தமிழ் நாறும் மலையவெற்பு" என்று மகிழ்ந்து கூறுகின்றார். தலைவன் உடல் மெலிவு குறித்துப் பாங்கன்விளுவில் அமைவுபெற, "தெய்வப் பாவலர்தாம்—முன்செய்த நூலின் முறை தெரிந்தோ—என்செய்த தோஅறி யேன்திருமேனி இறை வனுக்கே" என்று சுட்டிக்காட்டுகின்றார்.

தமிழ்இசையைக் குறித்தும் "செய்ய தண்டமிழ் தோய், பண்போல் இனிய பணிமொழிச் செந்தளிர்ப் பைந்தொடி" என்றும் "தென் செய்த பண்ணின் திற மறிந்தோ" என்றும், "பண்ணார் பணிமொழிப் பைந் தொடி" என்றும், நயம்பட விளக்குகின்றார்.

ஆகலான், இவரின் தமிழ்க் காதல் நெஞ்சில் வேரூன்றி எழுந்து வெளியிற் பாவாக வந்து தம் பற்றினைப் பின்பற்றி எல்லோரும் ஒழுகுமாறு தூண்டும் செப்பமாக வுள்ளது.

**பழக்க வழக்கங்கள்**

திருமணத்தை விரும்பித் துர்க்கையை வழிபடல், திருமணத்துக்கு ஆடவர் பொருள் (பரிசம்) கொடுத்தல், தலைவன்வரக் கரையும் காக்கைக்குப் பலி கொடுத்தல், பல்லி சொல்லும் இடப்பாகம் துடித்தலும் பெண்களுக்கு நலம் பயக்குமெனல், துறவர் வேங்கைத்தழையை உடுத்தல் முதலியனவும், பிறவும் இந் நூற்கண் வரும் பழக்க வழக்கங்களுட் சிலவாம்.

**அருஞ்சொற்கள், தொடர்கள்**

இந் நூலில் பற்பல இடங்களில் அருஞ் சொற்களையும் சொற்றொடர்களையும் அமைத்துள்ளனர். அவைகளுள் 'தாரை' என்பது இவர் குறிக்கும் சொற்களுள் ஒன்று. அது: கூர்மை, வழி, குதிரை, ஒழுக்கம் முதலியவற்றைக் குறிப்பதை அவ்வப் பாட்டுக்களில் காணலாம். பண்: இச் சொல் இனிமை, இசை முதலிய பொருள்களில் பயின்று வருவதைக் காண்கின்றோம். மழை: குளிர்ச்சி, மேகம் என்னும் பொருளில் பல இடங்களில் வழங்கப்பட்டுள்ளன. இவைகளும் இவை போல்வன பிறவும் இந் நூலில் வரூஉம் அருஞ் சொற்களாகும்.

இவை போலவே, அருஞ் சொற்றொடர்களையும் அமைத்துச் செல்வர். அவை: 'அல்லி வாய் விம்முதேன்' 'இந்திரவில் கூசிய நன்னுதல்' 'அரியார் மதர்விழி ஆலமன்னீர் சொல் அமுதமன்னீர்' 'இடிக்கொத்துருமும் இலங்கெயிற்றுளி' 'அளியாற் பெருகி அமுதம் சிதறி அனைத்துயிர்க்கும், களியாக்கிய தண் கலைமதி' 'இருகால் ஒரு சிகை வாரணம்' 'மன்றலங் காவினும் வாவி நன்னீரினும் மற்று முற்றும், ஒன்றினும் பூத்தறியா அலர்' 'அரவுங்களிறும் அணங்கும் குலாநெறி' 'அறையும் கடலன்ன அன்பு' எனவருவனவும் ஏனையவும் ஆகும். இன்னும் ஆங்காங்கே இன்னறுங் கனிச்சுவைபோல் இவை போன்றன பரந்து கிடப்பதை இந் நூலைக் கற்பார் கண்டு களிதுளும்பலாம்.

இதிற் பல இடங்களில் ஆண்பாலார் பெண்பாலார் பேசப்படுகின்ற நயங்களை அழகுற அமைத்துள்ளார்.

நயங்களிற் சில

மக்கட்கு உணர்ச்சியை ஊட்டும் மெய்ப்பாடுகள் எண் வகைய. அவற்றுள் முதலிடம் பெறுவது 'நகைச்சுவை' யென்னும் மெய்ப்பாடு. நகைச்சுவைபடப் பேசப்படுந்திறம் பல இடங்களில் வருகின்றன. அவை களுள் ஒன்று ஈங்கே பொறித்துக் காட்டுவாம்.

பாங்கி மதியுடன் பாட்டில் 'எதிர்மொழி கொடுத்தல்' 'இறைவனை நகுதல்' என்னும் துறைகளின் கண், தலைவன் 'உங்கள், கண்போல் பிணையும் கலையும் இங்கேவரக் கண்ட துண்டோ' (அசு) என்று வினவுகின்றான். அதற்குப் பாங்கி நகைச்சுவை ததும்ப விடை கூறுகின்றாள். அது,

'உடுக்கும் கலையன்றி ஈங்கொரு நாளும் ஒருவர்வந்து
கெடுக்கும் கலைகண்டு அறிகிலம் யாம்' (கூஉ)

என்பதாம். இதில் அவன் 'கலையும் இங்கே வரக் கண்ட துண்டோ' என்பதைப் பாங்கி, கலை யென்பதை ஆடை யென்று கொண்டு, 'நாம் உடுக்கும் கலை யொன்றே அறிவோம்; ஒருவர் வந்து கெடுக்கும் கலை அறிகிலோம்' என்று நகை முகங்கொண்டு உரையாடுகின்றாள். பின்னர் அவன் சந்தனத்தழை முதலியனகொண்டு,

'சாந்தகிற் போதும் தழையும் தருகுவன்
...........................................
வேழம்......போந்ததிப்போது வந்ததுண்டோ' (கூக)

என்று கடாவுகின்றான். அதற்குப் பாங்கி,

"மின்னே தழைகொண்டு வேழமெய் தார்அந்த வேழம்வந்து
பின்னே பிணைபிரி யுங்கலை ஆனது பேசிலின்னம்
கொன்னே புகழும் குறுமுயல் ஆகவும் கூடும்கொல்லோ
என்னே உலகில் இவரைஒப் பாரில்லை ஏவினுக்கே" (கூஙு)

'மின்னலை யொத்த தலைவி! இவர் முன்பு தழையைக் கொணர்ந்து வேழம் எய்தார்; அதன்பின், பிணையைப் பிரிந்த கலைமான் ஆயிற்று; பின்னர்ப் பார்ப்போமானல் சிறு முயலாகவும் போகும் போலும்! இந்த உலகத்தில்

வில்லாற்றலிற் சிறந்தவர் இவரை ஒத்தவர் இல்லை' என்று தலைவன் ஒவ்வொன்றும் வினவி, இறுதியில் தழைகொண்டு வந்து ஏற்றுக் கொள்ளுமாறு நிற்கும் நிலைகண்டு நகையாடிச் சொல்லுந் தன்மையாக அமைத்திருக்கும் செவ்வி கண்டு இன்புறற்பாலது.

**மன நிலைகள்**

இனி ஒருவர் மன நிலையை அவர்தம் சொல்லால் செயலால் காண்கின்றோம். அவ்வாறே காதலர் மனநிலை, நண்பர் மனநிலை, தாய் மனநிலை முதலிய யாவரின் மனநிலைத் திறங்களையும் செவ்வனம் ஆய்ந்து அவ்வவ்வாறே அறியுமாறு சீரிய கூரிய தீஞ்சொற்களால் அமைத்து, தேனினையுண்ணும் வண்டு அதை உண்டு மயங்கித் தன்னையுந்துறந்து கிடக்கும் தன்மைபோல, இதைக் கற்பார் இக் கோவைக் காதலராய்க் கற்றவழியே இதிற் படிந்து மூழ்கி அதன் வயமாம்படி செய்து ஆரா அயரா இன்புறுமாறு செய்கின்றார் இந் நூலாசிரியர். காட்டுதலாக,

இடந்தலைப் பாட்டின்கண் தலைவனும் தலைவியும் கூடி மகிழ்வதற்காம் காலம் நீட்டித்துக்கொண்டே செல்கின்றது; அதைத் தலைவன் எண்ணி எண்ணி ஏங்குகின்றான்; வருந்துகின்றான்; அவற்கு ஓர் கண்ணிமைப்போது ஊழிபோல் கழித்தற்கரிய கால வெள்ளமாய்க் கழிகின்றது. ஒன்றையெண்ணி அதிலேயே கருத்தூன்றி நிற்பார்க்குச் சிறு போதும் ஊழியாகத் தோன்றுவது இயற்கையின் பாற்பட்டதன்றோ? அதினும் காதலர் மனநிலை கட்டுரைக்குந் தரத்ததாமோ? இல்லையாகலான், ஓர் அறுவடி பல்லூழி போல் தோன்றுவதில் வியப்பு ஏது?

> "ஒருநாள் எழுநாள்போல் செல்லும்சேட் சென்றார்
> வருநாள்வைத் தேங்கு பவர்க்கு"

என்பது தேவர்காட்டும் செவ்விய உரை. ஆகலான், இக் காதலனும் நீடு நினைந்து மயங்குகின்றான்; உயங்குகின்றான்; புலம்புகின்றான். அது,

"காதல் மடந்தையர் கையகல் காலையும் மெய்யகலா
மேதகு நாணும் மெலியஎன் ளேைவிழி போலுநெய்தல்
போதலர் மென்மலர்ப் புன்னையங் கானல் பொருந்துமிந்த
மாதவி பெற்ற மணிமே கலைநம்மை வாழ்விப்பதே" (கஎ)

என்பது. இதில், 'தலைவியானவள் தன்னைவிட்டு நீங்காத தோழியர் விட்டுப் பிரிந்த காலத்தும் உயிரினுஞ் சிறந்த நாணமும் தன்னைவிட்டு அகலும்படி என்னோடு ஒன்று கலந்து உறவாடுவது என்றுகொலோ! அன்றே என்னை வாழ்விக்கும் நாள்,' என்று நெஞ்சறைபோகிக் கலங்கிக் கூறுகின்றான். 'மாதவி பெற்ற மணிமேகலை நம்மை வாழ் விப்பதே,' என்ற சொற்றொடரில் அவன் கைம்மிக்க காதற் பண்பு கரைபுரண்டு ஓடுவதைக் காட்டி அமைத்திருக்கும் ஒட்பம் அறிந்து அறிந்து இன்புறற்கேற்றது. இதிற் காதல் நெஞ்சின் கட்டற்றநிலை கனிவுறக் காட்டப்பெற்றுள்ளமை காண்க.

பின், தலைவனும் தலைவியும் இயற்கைப்புணர்ச்சி புணர்ந்து தனித்தனியே பிரிந்துசென்றனர். இவ்விருவ ரின் உடற்சோர்வு செயல் முதலியவற்றைக் கண்டு ஐயுற்ற இவரின் தோழனும் தோழியும் முறையே தலைவனையும் தலைவியையும் காரணங்கேட்டு வினவுகின்றனர். தலைவன் தன் ஆண்மையால் அச்சுறாது உண்மையைத் தன் தோழ னிடம் கூறிவிடுகின்றான். தலைவி தன் பெண்மைத்தன்மை யால் அஞ்சித் தன் தோழிக்கும் மறைத்துச் சில காரணங் கூறி மழுப்பிவிடுகின்றாள். ஆனால், தோழி அவள் குணஞ் செயல்களினால் அறிந்துள்ளாள் ஆதலால், கேட்டவாறே அமைகின்றாள்.

பின்பு அவரிடையே தலைவன் தோன்றுகின்றான்; அவன் இருவரையுங் கண்டு 'கெடுதி'வினாவிப் பின்னர்க் கையுறையாகப் பூந்தழை கொணர்ந்து ஏற்பிக்கவேண்டு கின்றான். தோழி அறியாள்போன்று இவன் காதலால் வருந்துஞ்செயலைக்கூறி, தழையை ஏற்குமாறு விளம்புகின் றாள். 'அவன் உன்பொருட்டால்தான் வருகின்றான்,' என்று உட்கோள் அறிய வினவுகின்றாள். 'உண்மை

சொல்க,' என்றும் வற்புறுத்துகின்றாள். தலைவி அதற்கும் மறைப்பாளாய், 'உன்னையன்றி நான் வேறெங்கே செல்கின்றேன்; நீ என்ன? இல்லா தியம்பவும் ஏலா துரைக்கவும் வல்லைகொல்லோ?' என்று கடிய மொழிகளால் மறுத்து மாற்றுரை வழங்குகின்றாள். அதற்குத் தோழி இவட்கு நாம் அறிந்துகொண்டோமென்பதை உணர்த்த வேண்டுமென்னும் நினைவுடையளாய்,

"மஞ்சறி யாமினும் வானறி யாத மருந்தும்மற்றுன்
நெஞ்சறி யாத நினைவும் உண்டோ' (கசக)

என்று தனக்கும் தலைவிக்கும் உள்ள கெழுதகை யன்பு தோன்றப் பிரிவின்றியைந்த தம் துவ்வா நட்பினைப் புலப்படுத்துகின்றாள். அது 'தோழி! மேகத்துக்குத் தெரியாத மின்னலும், வானோர் அறியாத அமுதமும், மனத்துக்குத் தெரியாத நினைவும் உலகில் உண்டோ? இல்லையே. அதுபோல் எனக்குத் தெரியாதென்று எண்ணி எனக்கு மறைத்துக் கூறுவதென்னை? உன் இயற்கைத் தன்மை செயல் யாவும் அறியேனென்று நீ கருதுகின்றாய். நான் உன் கரவுத்தன்மையெல்லாம் நன்கறிவே'னென்று கழறித் தழையை ஏற்பிக்கச் செய்கின்றாள்.

இதன்கண் தலைவி வேறு, தோழி வேறு என்ற வேறுபாட்டுணர்ச்சியில்லாத உழுவலன்புடையராம் நட்பினர் மனநிலை காட்டப்பெறுகின்றதன்றோ?

பின்னர்த் தலைவன், உடன்போக்கில் தலைவியைத் தன்னுடன் அழைத்துக்கொடு செல்கின்றான். அம்பலாக இருந்த களவுப்புணர்ச்சி, அதன்பின் பலரறியும் அலராகப் பரவுகின்றது. நினைப்பினுஞ்சுடும் நெடுஞ்சுரவழியாகத் தலைவனுடன் தலைவி சென்றதை அவள் நற்றாய் அறிகின்றாள். அறிந்ததும் மலர்மன்னு பாயலில் வைக்கினும் கைக்கும் அவள் தன் மலரடிகளின் மென்மைத் தன்மைக்கு வருந்தினாள். பின்னரும் அவளைப்பற்றிய பல்வகை நினைவுஅலைகள் வந்து தன் மனத்தை வருத்த, அவளுடன் விளையாடற் கமைந்த பூவை கிள்ளை மணற்பாவை சிற்றி

விழைத்தல் முதலியவற்றையும் தன்னை (தாய்)யும் மறந்து எவ்வாறு சென்றாளென்று தாய்மையன்பு தலைப்பிணிக் கொள்ள அயாவுயிர்த்துப் புலம்பினாள். அப் புலப்ப நிலையை—தாய்மையின் பேரன்பை—கையா றுற்றுக் கலங்கிய காட்சியை—கற்போர் நெஞ்சம் கலங்குமாறு அவலச் சுவை கால்கொண்டுகிளரத் தீட்டிக்காட்டிய படம்போல் அமைந்துள்ள செய்யுள் இது :

"பூவையுண் டோபுனக் கிள்ளையுண் டோவெண் புதியமணல்
பாவையுண் டோபெற்ற பாவியுண் டோகுன்று பார்த்தழைக்கும்
தேவையுண் டோகற்ற சிற்றிலுண் டோமற்றென் அற்றமுண்டோ
யாவையுண் டோமக ளேசெல்லும் நீஇவ் அருஞ்சுரத்தே." (நூ. ௨)

இதில் தாய்மைப் பேரன்புக்குரிய சொற்களால் அமைத்துத் தன்னைக் குறித்துப் பேசுங்கால் 'பெற்றபாவி,' என்று உள்ளத்து வேரூன்றி எழுந்த அன்பின் உயரிய நிலையை உணர்த்திய தன்மை ஓர்க.

இன்னும் இவைபொத்தனவான கருத்து நயங்கள், பொருட் செறிவுகள், அருஞ்சொற்கள், சொற்றொடர்கள், பன்னூற் கருத்தமைப்புகள் யாவும் ஆங்காங்கே இந்நூல் முழுதும் பரந்து கிடக்கின்றன. அவைகளை யெல்லாம் ஊன்றித் துறைபோவார் முறையொடு கண்டு இன்புறுவர்.

**நூல் முடிபின் நுணுக்கம்**

நூலின் முடிவுப் பகுதித் துறையாகத் திருக்கோவையார் நூலில் 'ஊதியமெடுத்தூடல் தீர்த்தல்' என்னும் துறையினும், தஞ்சைவாணன் கோவையில் 'கார்ப் பருவங் கண்டுசொல்லல்' என்னும் துறையினும், கோடீச்சுரக் கோவையில் 'கார்ப்பருவங் கண்டு சொல்லியது' என்னும் துறையினும், திருவாரூர்க் கோவையில் 'கார்ப்பருவங் கண்டு மகிழ்தல்' என்னும் துறையினும் அமைத்து நூலை முற்றுவித்திருப்ப, இவர் இந்நூலில், அக்கோவை நூல்களின் ஆசிரியரினும் விஞ்சிய வராய்ச் சிறப்பான குறிக்கோள் ஒன்றைக் கொண்டமைத்து முற்றுவிப்பாராயினர். அது தலைவன் தலைவி

ஆகிய கோவைக் கிழவர்களை உயர்ந்த தன்மையில் வைத்துச் சித்திரித்துக் காட்டி, முடிவில் காமஞ்சான்ற கடைக்கோட் காலைக் கிழவனும் கிழத்தியும் சிறந்தது பயிற்றலாகிய வீடு பேற்றின் நிமித்தம் கூறி முற்றுவித்திருக்கும் நற்பொரு ளாகும். அவைகளுள்:

தலைவன் இயல்பு

"அறத்தில் தருமன்; பொருளில் தனபதி; ஆய்ந்தஇன்பத்
திறத்தில் சிலைமதன்; சிந்தையில் புத்தி; திருந்துவண்மைப்
புறத்தில் புவி; அயல் போற்றுங் கலையில் பொதியமுனி;
மறத்தில் சிறந்த வளவயல் ஊரன் மடங்கல்இன்றே." (நிகச)

தலைவி இயல்பு

"கற்புக்கு அருந்ததி; நாணுக்கு மானக் கவரிநல்மான்;
பொற்புக்கும், வாய்ந்த பொறைக்கும், பொன்; பூமகள்;
கோமகன்தன்
அற்புத் துணைவி; அறத்துக்குஎலாம் அன்னை; ஆடகமால்
வெற்புக்கு உயர்ந்த மனைக்குநந் தாத விளக்கொளியே." (நிகரு)

இச்செய்யுட்களில் ஆடவர்க்கு வேண்டும் அரும் பெருங் குணங்களான, அறம், செல்வம், காதல்உணர்வு, அறிவு, கொடை, கலை, வீரம் முதலியனவும், மகளிர்க்கு வேண்டும் அரும் பெரும் பண்புகளான, கற்பு, நாணம், அழகு, பொறுமை, இல்லறத்துணைமை, அறம், மனையறம் பேணல் முதலியனவும் அமைந்தவர்களாகப் பொருத்திக் காட்டி ஒத்த அன்புடைய தலைவன் தலைவியாகக் குறித்து ஒன்றுபட இணைத்திருக்கும் ஒட்பம் வானினும் உயர்ந்த மாண்புடைத்தாகும்.

ஆகவே, ஆண் பெண் இருபாலரும் ஒன்றுபட்டுக் காதல் வழியிற் படர்ந்து இல்லறவியலை மேற்கொண்டொழுகி, அதனை முட்டாச் சிறப்புடன் முற்றுவித்து, பின்னர் அதன்கண் உவர்ப்புற்ற நீர்மையராய் அகம் புறம் என்னும் இருவகைப் பற்றறத் துறவறந் தாங்கலே இயல்பு என்பதை இக் கோவை வாயிலாக வைத்து மக்கள் எய்தும் பயனை வரையறுத்துக் கூறியவாறும்.

எனவே, இந்நூல் கைவல் கம்மியன் கவினுறப் புனைந்த புனையா ஓவியம் போன்று, எல்லா அழகும் இதன் கண் ஒருங்கே இயையக் கோவைகளிற் சிறந்த தலைமணி யாகப் போற்றப்பெற்று விளங்கும் இன்பப்பெரு நூலாகும் பெற்றிமை மிக்கதாகத் தமிழ்மக்கட்குத் தூண்டா முழு மணி விளக்கமாய்ச் சுடர்கான் ஞெளிர்கின்றது.

செல்லூர்க்கிழார்
செ. ரெ. இராமசாமி பிள்ளை
கழகப் புலவர்

# அம்பிகாபதி கோவை

## அவையடக்கம்

### கட்டளைக்கலித்துறை

1. அருளம்பி காபதி பொன்னடித் தாமரை சூட்டியகப்
பொருளம்பி காபதி கம்புனைந் தேனிப் புனைந்தசெஞ்சொல்
தெருளம் புலவர்முன் செப்பிய போதுள தப்புரையார்
மருளுங் குழவி மழலைக்கென் னேபொருண் மற்றிங்கென்றே.

(குறிப்புரை.) *அருள் அம்பிகாபதி-அடியார்களுக் கருள்செய்தலையுடைய சிவபெருமான். பொன் - அழகிய. சூட்டி - என்முடிக்கு அணிந்து. அம்பிகாபதி கம் புனைந்தேன் - அம்பிகாபதி கோவையென்னும் மாலையை அப்பெருமான் திருமுடிக்கு அணிந்தேன்; கம் - தலை. செஞ்சொல் - செஞ்சொல்லாலாகிய இக்கோவையை; செஞ்சொல்: சினையாகுபெயர். தெருள் அம்புலவர்-தெளிவமைந்த அழகிய புலவர். தப்பு உரையார்-நூலில் குற்றங் கூறுரர். மருள்-அறியாமை. குழந்தைகூறும் சொல்லில் குற்றங் காணுதவாறுபோல என் நூலிலும் குற்றம்கூறுர் என்பது கருத்து.*

# நூல்

## க. கைக்கிளை

[கைக்கிளை-சிறுமையுறவு. கை-சிறுமை. கிளை-உறவு. தலைவன் தலைவியாகிய இருவரிடத்தும் நிறைந்து நிற்க வேண்டுவதாய அன்பு ஈண்டுத் தலைவனிடத்தே மட்டும் இருப்பதாகக் கூறப் படுதலின், இது கைக்கிளையாயிற்று. இதனை ஒருதலைக்காம மென்று கூறுதலுமுண்டு.]

### காட்சி

**[தலைவன் தலைவியைக் காணுதல்]**

2. மாவின் கொழுந்தளி ரீன்றுபொற் கோங்கிடை வந்தரும்பி
மேவுங் கமல மலர்ந்தல்லி வாய்விம்மு தேன்பொதிந்து
தாவுஞ் சிறைவரி வண்டினங் கொண்டு தழையவிழ்பூங்
காவின் புறம்படர் வல்லிகண் டேகண் களிகொண்டதே.

(து - ரை.) மாவின் கொழுந்தளிர் தலைவியினது மேனியை யும், கோங்கு முலையையும், கமலம் முகத்தையும், அல்லி வாயையும், தேன் உமிழ்நீரையும், வண்டினம் கண்களையும், வல்லி தலைவியை யும் உணர்த்திநின்றன.

கோங்கு - கோங்கமுகை. விம்முதல் - நிறைதல். கா - சோலை. வல்லி - கொடி. ஒருகொடி மாந்தளிரை யீனுதல் முதலியன எங்கும் காணுக் காட்சியாதலின் அவ்வருங்காட்சியைக் கண்ட தலைவன் கண் களிகொண்ட தென்க. க

### ஐயம்

**[இப்பெண் மக்கட்பெண்டோ அன்றிக் கடவுட்பெண்டோ என ஐயமுறுதல்]**

3. திருவோ வரையுறை தெய்வங்கொ லோதெண் திரையமுதின்
உருவோ வளர்கொல்லி யோவிய மோவுயர் வானிடையில்
வருவோர் சிலவிஞ் சையர்மக ளோவன்றி மானிடமோ
தருவோடு வல்லி தழுவுந்தண் சாரலிற் சூழ்குழலே.

(து - ரை.) வரை உறை தெய்வம்-மலையரமகள். திரை அமு தின் உரு-நீரரமகள். கொல்லி ஓவியம்-கொல்லிப்பாவை; கொல்லி

மலையின் மேற்புறத்தில் தெய்வத்தால் அமைக்கப்பட்ட ஓரழகிய பெண்ணுருவப்பாவை உண்டென்றும், அதனைக் கண்டோர் யாவரும் காதல்கொண்டு மயங்கி வீழ்ந்து உயிர்விடுவரென்றும் நூல்கள் கூறும்.

"கொல்லிக், கருங்கண் தெய்வம் குடவரை எழுதிய, நல்லியற் பாவை யன்ன இம், மெல்லியற் குறுமகள்" - குறுந்—அக.

தரு-மரம். வல்லி-கொடி. தாழ்குழல்-தாழ்ந்த கூந்தலையுடைய தலைவி; அன்மொழித்தொகை. தாழ்குழல் திருவோ......மானிடமோ எனக் கூட்டுக. உ

துணிவு

[வண்டு மூசுதல், மாலைகருகல் முதலியவற்றால் இவள் மக்கட் பெண்டேயெனத் தலைவன் துணிதல்]

4. மூசிய வண்டு முரல்கின்ற தாமம் முகங்கருகும்
பூசிய சாந்தும் புலருநம் போற்பொரு நீர்க்கயலை
ஏசிய கண்களும் இவ்வா றலமரும் இந்திரவிற்
கூசிய நன்னுதற் கொம்பைவம் பேயென் குறித்தனமே.

(கு - ரை.) மூசிய - மொய்த்த. முரல்கின்ற - ஒலிக்கின்றன: அன் பெறுத அஃறிணைப் பன்மை வினைமுற்று. தாமம் - தலைவி யணிந்துகொண்டுள்ள மாலை. முகம் கருகும் - வாடும். புலரும் - உலரும். கயலை ஏசுதலாவது, தமக்கு ஒப்பாகாவென இகழ்தல். இவ்வாறு அலமருமென்று நேரிற்கண்டதைச் சுட்டிக் கூறுகின்றான். அலமரல் - சுழற்சி: ஈண்டு இமைத்தலை உணர்த்தி நின்றது. இந்திரவில் - வானவில். கூசுதல் நுதற்குத் தோற்று நாணுதல். நுதல்-நெற்றி. கொம்பு-பூங்கொம்பையொத்த தலைவி. வம்பே-வீணுகை. என்குறித்தனமே யென்றது விண்ணுறை மகளோ என்று ஐயப்பட்டமையை. வண்டு மூசல் முதலியன விண்ணவமகளிரிடை மேவா என்க. ந

குறிப்பறிதல்

[தலைவிக்குத் தன்பால் வேட்கையுண்டென்பதைத் தலைவன் அவளுடைய பார்வைக் குறிப்பால் அறிதல்]

5. ஒருகா லுமையவ ருண்டது பொய்யெனு முண்மகிழ்ந்திங்
கொருகா லிமையவ ருண்டது பொய்யெனு முதைபுகுந்
தொருகா லசைய வொசியுமின் சாய லுருவவஞ்சி
யொருகா னிறைவுங் குறைவுமில் லாமதி யுற்பலமே.

(து - ரை.) உமையவர் - சிவபெருமான்: அவர் உண்ட தென்றது நஞ்சினை. இமையவர் உண்டது-அமிழ்து. இவற்றைப் பொய்யென்றது இவ்விரண்டின் தன்மையையும் தலைவியின் கண் காட்டுதலானென்க. தலைவியின் கருவிழிக்கும் பொதுநோக்கிற்கும் நஞ்சும், வெள்விழிக்கும் சிறப்பு நோக்கிற்கும் அமிழ்தும் முறையே உவமையாகும். ஊதை - காற்று. ஒசிதல் - துவளுதல். மின்சாயல் உருவம் வஞ்சி - மின்னலையொத்த சாயலையுடைய அழகிய வஞ்சிக் கொடிபோன்றதலைவி. நிறைவுங் குறைவுமில்லா மதியென்றது தலைவியின்முகத்தை. அதன்கண் உற்பலமென்றது கண்களை. உற்பலம் - குவளைமலர். உற்பலம் பொய்யெனும் எனக்கூட்டுக. இச் செய்யுளின் பொருள் 'மேல் ஆழி தன்னுள் விடத்தோடு அமிர்தம் விளைந்தது ஒக்கும், நூலாம் இடையினள் வேல்விழித் தோன்றிய நோக்கங்களே' (கோடீச்சுரக்கோவை.-4) என்பதுடன் ஒத்திருத்தல் காண்க.

கைக்கிளை முற்றும்.

## உ. இயற்கைப் புணர்ச்சி

[இயற்கை - ஊழ்வினை. ஊழ்வினை கூட்டுவிக்கக் கூடும் புணர்ச்சி யாதலின் இஃது இப்பெயர் பெற்றது. இதனைத் தெய்வப் புணர்ச்சி, காமக்கூட்டம் என்றும் கூறுவர்.]

### கலந்துழி மகிழ்தல்

*[துறைப்பொருள் வெளிப்படை]*

6. கருகிய பைங்கயல் செங்கய லாயன்ன கண்மலர்கள்
செருகிய பைங்குழல் வஞ்சிமென் கிஞ்சுகச் செங்கனிவாய்
பருகி முயங்கி மயங்கியிவ் வாறு படுமெழுகில்
உருகிய வன்பையென் னேயிங்ங னின் றுரைசெய்வதே.

(து - ரை.) பைங்கயல் செங்கயல் ஆய் அன்னகண்-கருங்கயல்கள் செங்கயல்களானமையை யொத்த கண்களையும். குழல் - கூந்தல். கண்ணையும் குழலையுமுடைய வஞ்சியென்க. வஞ்சி - வஞ்சிக்கொடி போன்ற தலைவி. கிஞ்சுகம் செங்கனிவாய் - முள்முருக்க மலரையும் சிவந்த கோவைக்கனியையும் போன்ற வாய். வஞ்சியது வாயென இயைக்க. முயங்கி - கலந்து. மெழுகில் - மெழுகைப்போல. க

### நலம் பாராட்டல்

*[தலைவியின் நலத்தைத் தலைவன் பாராட்டிக் கூறுதல்]*

7. தள்ளா வளமையுந் தாவா இளமையுந் தங்குமின்பக்
கள்வான் மயங்கிவெங் காமா னலஞ்சுடக் காய்ந்துருகி
உள்ளா ருயிர்கலந் தொன்றா யுடம்பி னுடம்பொளித்து
விள்ளா நலமிங்ங னியாவர்பெற் றார்மண்ணில் விண்ணிலுமே.

(து - ரை.) தள்ளா வளமை-கெடாத செல்வம். தாவா-கெடாத. இளமையும் செல்வமும் இன்பத்திற்குத் துணைக்காரணமென்க. காம அனலம் - காமத்தீ. உள்ஆர் உயிர் - இருவர் உடம்பினுள்ளும் பொருந்திய உயிர். உடம்பின் உடம்பு ஒளித்தலாவது: இறுக முயங்கல். விள்ளா நலம் - சொல்லற்கரிய இன்பம். மயங்கி உருகி ஒன்றாய் ஒளித்து நலம் பெற்றார் மண்ணிலும் விண்ணிலும் யாவர்? எனக் கூட்டுக. உ

### ஏற்புற அணிதல்

*[புணர்ச்சியிற் கலைந்த அணிகளைத் தலைவன் தலைவிக்குத் திருத்தமுற அணிதல்]*

**8.** தூசுங் கலையுந் தொலையா அழகெறிக் குந்தொடியும்
வாசங் கமழு மதுமல ரோதியும் வண்களபம்
பூசுங் கனதனம் பூணுமுத் தாரமும் பூங்குழையும்
ஆசும் பழுதில்பொன் னேபண்டு போல வணிந்தனமே.

(கு - ரை.) தூசு - சேலை. கலை - மேகலை யென்னும் இடையணி. தொடி - வளையல். ஓதி - கூந்தல். வண்களபம் - அழகிய கலவைச்சாந்து. பூங்குழை-பொலிவுமிக்க குண்டலம். ஆசும் பழுது இல் பொன்னே - சிறிதும் குற்றமற்ற திருமகள் போன்றவளே. பண்டுபோல - முன்போல. பொன்னே! தூசு முதலியவற்றைப் பண்டுபோல அணிந்தனம் எனக்கூட்டுக. ௮

### மென்மொழி விரும்பல்

*[தலைவியின் மென்சொல்லைக் கேட்க விரும்பிய தலைவன் வண்டை முன்னிலைப்படுத்திக் கூறல்]*

**9.** தோளானும் வெய்ய துணைமுலை யானும் துவக்கிநம்மை
ஆளா தவரினின் றாண்டுகொண் டாரன்ன மென்னடையும்
வாளார் விழியு மெழுதவொண் ணாத வடிவுங்கண்டாற்
கேளா ததுமொழி யேயளி யேமுனங் கேட்குதுமே.

(கு - ரை.) துவக்கி - பிணித்து. தலைவி புணர்ச்சிக்கு அரிதின் உடன்பட்டமை தோன்ற 'ஆளாதவரின் இன்று ஆண்டுகொண்டார்' என்றான். நின்றெனப் பிரித்தலுமாம். 'கண்டால்' என்னும் எச்சம் பின்னின்ற கேளாக்குறையை உணர்த்தி நின்றது. அளியே - வண்டே; விளி. முனம் கேட்குதும் - இனிக்கேட்பேம்.

### பெருநயப்பு உரைத்தல்

*[தலைவன் தனது மிக்க காதலைப் புகழ்ச்சிவகையால் வெளிப்படுத்து உரைத்தல்; நயப்பு—விருப்பம்]*

**10.** சுருங்கா விரிசினைச் சூதமு நீள்சுர புன்னையுஞ்சூழ்
இருங்கா வியலும் இசையினங் காளிவ் விருஞ்சிலம்பின்
மருங்காவி யின்கண் மலர்வதுண் டோசொல்லும் வாசியறக்
கருங்கா வியுஞ்செங் குமுதமுந் தோயுங் கமலமொன்றே.

(கு - ரை.) சினை - கிளை. சூதம் - மாமரம். இரு கா - பெரிய சோலை. இசை இனங்காள் - வண்டுக் கூட்டங்களே; விளி. இசை பாடுதலையுடைய வண்டிற்கு இசையென்றது ஆகுபெயர். சிலம்பின் மருங்கு ஆவியின்கண் - மலைப்பக்கத்திலுள்ள குளத்தில். வாசி அற - வேற்றுமையின்றி. கருங்காவி - கருங்குவளை போன்ற கண்கள். செங்குமுதம் - செவ்வல்லிபோன்ற வாய்; இவ்விரண்டும் பொருந்திய கமலமென்றது முகத்தை. மலர்தோறுஞ் சென்று தேனெடுத்தற்குரிய நீவிரும் இத்தகைய மலரைக்காண இயலாதெனத் தலைவியைப் பாராட்டினமை காண்க. ௫

### தெய்வத்திறம் பேசல்

*[தம்மைக் கூட்டுவித்த ஊழ்வினையின் தன்மையைத் தலைவன் கூறுதல்; தெய்வம்—ஊழ்வினை]*

11. யாங்காணு மாவியொன் றுயிரு வேமு மெழுபிறப்பும்
நீங்கா நிலைபெற்ற நேயமுந் தந்து நினைவறவிப்
பூங்காவில் இங்ஙனம் புல்லும் புணர்ச்சி புணர்ந்தவெல்லாங்
கோங்கார் வனமுலைக் கோமள மேநங் குலதெய்வமே.

(கு - ரை.) எழுபிறப்பும் நீங்கா நிலைபெற்ற நேயம் - உழுவலன்பு. கலவியின் மகிழ்ச்சியால் நினைவற்றனர் என்க; 'தன்னையும் மறக்குந்தன்மை காமத்தே தங்கிற் றன்றே' என்றலும் இக்கருத்துப் பற்றியதேயாகும். புணர்ந்த எல்லாம் - (ஆவி யொன்றுதல், நேயம் தரல்,) புணர்தல் ஆகிய இவற்றிற்கெல்லாம் அடிப்படையாயுள்ளது குலதெய்வமே எனக் கூட்டி முடிக்க. குலம் தெய்வம் - சிறந்த ஊழ்வினை. வனம் - அழகு. கோமளம் - இளமை; ஈண்டு அதனையுடைய தலைவிக்குப் பண்பாகு பெயராய் வந்தது. ௬

(வே - ம்.) புணர்த்த.

### பருவரல் உணர்தல்

*[அயலார் தங்கூட்டத்தை அறியின் என்செய்வதென்று தலைவி வருந்துவதைத் தலைவன் உணர்தல்; பருவரல்—துன்பம்]*

12. கறியுறு சாரற் களியுறு தோகைக் கணநடஞ்செய்
வெறியுறு சோலை விறைவுற நீடில் வெருவுறுமான்
மறியுறு செங்கண் மதுமலர்க் கோதை நொதுமலர்வந்
தறியுறல் கூடுமென் றேதிரு மேனி யழுங்குவதே.

(கு - ரை.) கறி உறு சாரல் - மிளகுக்கொடி பொருந்திய மலைச்சாரல். தோகைக் கணம் - மயிற்கூட்டம். வெறி - நறுமணம். நீடில் - காலம் நீட்டிப்பின். வெருவுறல் - அஞ்சல். மான்மறி உறு செங்கண் - இளமையான மானின் கண்களைப்போன்ற செங்கண்ணை யுடைய. கோதை - மாலையையணிந்த தலைவி; விளி. நொதுமலர் - அயலார். அழுங்குவது - வருந்துவது. கோதை! சோலை(யில்) நீடில், நொதுமலர் அறியுறல் கூடுமென்றோ அழுங்குவது? எனக் கூட்டுக. எ

(வே - ம்.) நாடி.

பிரிவச்சம்

*[தலைவியைப் பிரியின் இறந்துபடுவாளோ எனத் தலைவன் அஞ்சுதல்]*

**13.** நீங்கிற் சிறிது பொழுதுநில் லாவுயிர் நேரிழைக்கின்று
ஈங்கிப் படிவைகில் எய்தும் பழிநமக் கென்றுசிந்தித்து
ஓங்கற் சிலம்பிடை நின்றூச லாடி யுயங்குநம்மைத்
தாங்கத் தகுந்துணை யாதுகொல் லோவென் தனிநெஞ்சமே.

(கு - ரை.) நேரிழைக்கு - தலைவிக்கு. ஈங்கு இப்படி வைகில் - இச்சோலையில் இவ்வாறு தலைவியுடன் சேர்ந்தே தங்கில். பிறர் காணநேருமாதலின் 'பழியெய்தும்' என்றுணர்க. ஓங்கல் சிலம்பு - உயர்ந்த மலை. உயங்குதல் - வருந்துதல். நெஞ்சமே! நீங்கின் நேரிழைக்கு உயிர் நில்லாது (என்றும்) ஈங்கு வைகில் பழி எய்து மென்றும் சிந்தித்து ஆடி உயங்கும் நம்மைத் தாங்கத்தகும் துணை யாது? எனக் கூட்டுக. அ

(வே - ம்.) நமை எய்தும் பழியதற்கு. இ. வி. க உ ௫.

பிரியேன் என்றல்

*[ஆவியனையாய் பிரியேன் நீ கவலற்க என்றது]*

**14.** நினையோ மறந்தும் பிரியப் பிரிய நினையினுமித்
தனையோ பொழுதுந் தரிக்ககி லேன்தடஞ் சூழுமன்றில்
அனையோ மிருவர்க்கு மாவியொன் றேயென் றறிந்திருந்தும்
வினையோ மலரனங் கேதிரு மேனி மெலிகின்றதே.

(கு - ரை.) 'மறந்தும் பிரிய நினையோம்' எனக் கூட்டுக. இத்தனையோ பொழுதும் - சிறிது பொழுதும்; ஓகாரம்: அசை.

தரிக்ககிலேன் - பொறுக்கமாட்டேன். வினையோம், தரிக்ககிலேன் என்றது ஒருமைப் பன்மை மயக்கம். தடம் - மலைச்சாரல்; அன்றில்: ஆணும் பெண்ணும் இணைபிரியாத ஒருவகைப் பறவை. மலர் அணங்கு - திருமகளையொத்த தலைவி. வினையோ என்றது யான் பிரியேன் நீ மெலியற்க என்றபடி. அணங்கே! வினையோம்; தரிக்ககிலேன்; அறிந்திருந்தும் மெலிகின்றது வினையோ? எனக் கூட்டுக. க

பிரிந்து வருகென்றல்

*[பிரிந்துபோய் மீண்டுவருவேன் எனத் தலைவன் தலைவிக்குக் கூறல்; வருகு—வருவேன்]*

**15.** சுரியேர் நறுங்குழல் துஞ்சிய வின்பத் துயில்பயில
உரியே னெழிந்தும் உறைவதுண் டோகெண்டை யோடவென்ற
வரியேர் மதர்விழி யன்னமுன் னேகுபின் யானுமந்தச்
சரியே வருகுவன் நீவண்ட லாடுமத் தண்டலைக்கே.

(து - ரை.) சுரி ஏர் நறுங்குழல் - கடைகுழன்ற அழகிய நறுமணம் பொருந்திய கூந்தல். மதர் - களிப்பு. சரி - வழி. வண்டல்-மகளிர் விளையாட்டு. தண்டலை - சோலை. க0

இடமணித் தென்றல்

*[என்னூர், நின்னூர்க்கு அருகில் இருக்கிறதெனத் தலைவன் தலைவிக்குக் கூறல்]*

**16.** குன்றம் அழைக்கக் குயிலழை யாநிற்பர் கூடியெதிர்
நின்று மழைக்குழல் நேரிழை யாய்நின்னை யான்பிரிவல்
என்று மழைக்கண் இரும்பனி கூர்வ தெவன்கொனம்மூர்
மன்றன் மலர்ப்பொழி லும்மலைச் சாரலும் வாழ்பவரே.

(து - ரை.) குன்றம் அழைத்தல் - எதிரொலி கேட்டு மகிழும் பொருட்டு வரையெதிர் கூவுதலாகிய ஒருவிளையாட்டு: இஃது குறிஞ்சிநில மகளிர்க்குரியது. குயில் அழைத்தல் - குயிலொடு கூவல் என்னும் ஒரு விளையாட்டு; இது மருதநில மகளிர்க்குரியது. மழைக்குழல் - மழைபோன்ற கரிய கூந்தல். மழைக்கண் இரும்பனி கூர்வது எவன் - குளிர்ந்த கண்களில் பெரிய நீர்த்துளிகளை மிகுப்பது என்கருதி. மன்றல் - நறுமணம். பொழில் - சோலை. பொழிலில் வாழ்பவர் தலைவனூர் மகளிரையும், சாரலில் வாழ்பவர்

தலைவியின் ஊர் மகளிரையும் குறிக்கும். நேரிழையாய்! வாழ்பவர் அழைக்க அழையா நிற்பர் (அங்ஙனமிருக்க) பனி கூர்வது எவன்? எனக் கூட்டுக. இடம் அணித்து என்றதனால் அடிக்கடி வருதற்கு அருமையின்று என்றவாறாயிற்று. ௧௧

நலம் தெரிந்து உரைத்தல்

*[தலைவன் தம் அன்பு இனியென்றும் நீங்காது எனத் தெரிந்து தலைவிக்கு உரைத்தல்; நலம்—அன்பு]*

**17.** கரும்புண்ட ரீக மனையகண் ணீர்வரக் காமருதேன்
சுரும்புண் டெழுநன் மலரிற் றொலைநலஞ் சூதொடுகோங்
கரும்புண்ட மென்முலை யாயுலை வாய்வெவ் வழல்குளித்த
இரும்புண்ட நீரல்ல வோநீயும் நானு மியைந்தவன்பே.

(து - ரை.) புண்டரீகம் - தாமரை. 'கரும்புண்டரீகம் அனைய கண்' என்றது இல்பொருளுவமை. காமருதேன் - விரும்பப்படும் தேன். சுரும்பு - வண்டு. வண்டு தேனுண்ட மலர்போல நலம் தொலைந்து உலைவாய் எனக்கூட்டுக. 'வண்டுபோ கட்ட மலர்போல் மருண்மாலை, உண்டுபோ கட்ட உயிர்க்கு' - (நள, சுயம்வர. ௧௧௯.) தொலை என்னும் முதனிலை, வினையெச்சப் பொருளில் வந்தது; 'வரிப்புனைபந்து' என்பதிற்போல. நலம் - அழகு. சூது - சூதாடு கருவி. சூதும் கோங்கரும்பும் முலைக்குவமை. உண்ட: உவமவுருபு. உலைவாய் - வருந்துவாய். இரும்பு உண்ட நீர்போல் நம்மன்பும் பிரிக்க இயலாதாகலின் நீ வீணே நலந்தொலைந்து உலையற்க என்பது கருத்து. ௧௨

தீராத் தேற்றம்

*[பிரியேன் எனத் தலைவன் தலைவியைத் தேற்றுதல்; தீராமை—பிரியாமை]*

**18.** வரியேர் நெடுங்கண் வரும்பனி கூர மனந்தளர்வுற்று
எரியேர் தளிரன்ன நின்னெழில் வாட இசையளிசூழ்
புரியேர் நறுங்குழல் பூவையன் னாயிமைப் போதுநின்னைப்
பிரியேன் மறந்தும் பிரிவுறின் மாய்கவென் பேரிசையே.

(து - ரை.) வரி - செவ்வரி. ஏர் - அழகு. பனிகூர - நீர் மிக. எரி ஏர் தளிர் - நெருப்பையொத்த தளிர்; ஏர் உவமவுருபு.

அளி - வண்டு. புரி ஏர் நறுங்குழல் - கடை சுருண்ட நறுமணம் பொருந்திய கூந்தல். பூவை - நாகணவாய்ப்புள்; இக்காலத்தார் 'மைனு' எனக் கூறுவர். பூவையன்னாய்! கண் பனிகூர, எழில் வாட, மறந்தும் பிரியேன்; பிரிவுறின் என் இசை மாய்க எனக் கூட்டுக. என்பேர் இசை மாய்க - எனது பெரும்புகழ் அழிவதாக; இது சூளுறவு கூறல். கரு

நெஞ்சு வலியுறுத்தல்

**[தலைவன் பிரிந்துசெல்லத் தன்னெஞ்சைத் திண்ணி தாக்கிக் கொள்ளல்]**

**19.** நினையாமல் நல்வினை தந்தவிக் கூடலை நீடிலன்னம்
அனையார் வரிநெடுங் கட்புல னுமெனி னுமகலில்
சுனையார் மலர்க்கண்ணி சோருமென் ருவி துளங்குநமக்கு
இனையா உகுமுளம் அஞ்சிநெஞ் சேயிங் கிரங்கல்நின்றே.

(து - ரை.) கூடலை - தலைவியுடன் கூடி இருத்தலை. நீடில் - நீட்டித்தால். அன்னம் அனையார் - தலைவியின் பாங்கியர். கூடல் கட்புலனும் என்க. கண்ணி - தலைவி. துளங்கும் - கலங்கும். இனையா - இனைந்து; வருந்தி. உகும் - சிந்தும். நமக்கு ஆவி துளங்கும் என்றும், உளம் அஞ்சி இனையா உகும் என்றும் முடிக்க; ஆதலின் நெஞ்சே இங்கு நின்று இரங்கலென்க. இரங்கல் - வருந்தற்க; அல் ஈற்று எதிர்மறை வியங்கோள் வினைமுற்று. கச

(வே - ம்.) நெஞ்சுறு வலியுறுத்தல்.

உயிரெனக் கூறல்

**[பிரிந்து செல்லும் தலைவியை நோக்கித் தலைவன் தன்னுயிர் போகின்றதெனச் சிறப்பித்துக் கூறுதல்]**

**20.** வடக்குங் குமக்கொங்கை வம்பற வேவிம்ம மல்குமைநீர்
அடக்குங் கயலும் அடங்கா வெயர்வு மியாவும்பின்னே
கிடக்குங் கடைக்கண்ணுஞ் சோருங் கலாபமுங் கேசமுமாய்
நடக்கின் றதுமெல்ல மெல்லவென் னுருயிர் நன்னெஞ்சமே.

(து - ரை.) வடம் - மாலை. வம்பு அற - கச்சுக் கிழியுமாறு. மை நீர் - கண்ணிற்குத் தீட்டியுள்ள மையொடு கலந்த நீர். கயல் என்றது ஈண்டுக் கண்ணினை. மற்றைய கயல்கள் நீரில் அடங்கிக் கிடப்பன; இக்கயல் நீரை அடக்கிக்கொண்டிருப்பது என்னும் நயம்

தோன்றுதல் காண்க. பின்னே கிடக்கும் கடைக்கண் என்றது தலைவனைப் பார்த்துக்கொண்டே செல்லுதலை. கொங்கை விம்மலும், வெயர்வும் கூட்டத்தினாலும்; நீர் அடக்கல் பிரிவாற்றாமையாலும் முறையானே தோன்றுவனவாயின. கலாபம் - இடையணி; பதினாறு கோவையை உடையது; இதனை 'பண்கொள் கலாபம் பதினாறு' என்பதனால் அறிக. கேசம் - கூந்தல். நெஞ்சமே! என்னுருயிர் மெல்ல மெல்ல நடக்கின்றது எனக் கூட்டுக. "அகிலேந்து கூந்தல் ஒருகையிலேந்தி அசைந்து ஒருகை, துகிலேந்தி ஏந்தும் துணைச் சிலம்பு ஆர்ப்ப......,.......,நகில் ஏந்து பூங்கொடிபோல் செல்லுமால் நெஞ்சம் நம்முயிரே." (தஞ்சைவாணன் கோவை.) கடு

எய்தல் அருமை உரைத்தல்

**[பிரிந்து சென்ற தலைமகளை ஆயவெள்ளம் வழிபடக்கண்டு இத்தகைய சிறப்புடையாளை இனியெய்துதல் அருமையுடைத்தாகும் என்று தலைமகன் தன்நெஞ்சிற்குக் கூறுதல்]**

**21.** உய்யா மடநெஞ்ச மேவரு மேயிரு தோள்வளைச்செங்
கையாய வெள்ளங் கடந்தொரு வாறு கனவெனவே
பொய்யாய நுண்ணிடை புல்லிய காதற் புணர்ச்சியெல்லாம்
மெய்யாக வுந்தரு மோதெரி யாது விதிவசமே.

(கு - ரை.) உய்யா - பிழைக்கும் வகையறியாத. மடம் - அறியாமை. செங்கை ஆய வெள்ளம் - சிவந்த கையையுடைய பாங்கியர் கூட்டம். வருமே - மீண்டும் தலைவி நம்பால் வருவளோ; ஏகாரம் ஐயப்பொருட்டு. கடந்து வருமே என்றும், கனவெனவே புல்லிய புணர்ச்சி என்றும் கூட்டுக. அருமைப்பாட்டால் முன்பு தலைவியைப் புல்லியும் அதனைக் கனவாக ஐயுற்றான், "நெஞ்சே யிவர் வானமதி, போல்ஆய வெள்ளக் கடல்புகுந் தார்நம்மைப் புல்லியது, மேல் ஆயும் போது கனவே நனவன்று மெய்யுமன்றே." (திருவாரூர்க் கோவை) கக

ஆங்கவன் காதற் பாங்கியை அறிதல்

**[தலைவியின் உயிர்ப்பாங்கியைத் தலைவன் உணர்தல்]**

**22.** புல்லத் தருவதும் பொற்குழை யோடப் பொருநெடுங்கண்
செல்லத் தருவதுந் தேமென் குமுதந் திறந்தினிய
சொல்லத் தருவதுஞ் சூழ்கின்ற யாழ்மொழித் தோகைக்குழாத்
தல்லொத்த பூங்குழல் பாங்கது போலு மணங்கினுக்கே.

(கு - ரை.) புல்லத்தகுவது - தலைவியால் தழுவத் தக்கவள். கண் செல்லத்தக்கது - கண்ணோட்டம் செய்யத் தக்கவள். தே மெல் குமுதம் - தேன்பொருந்திய மென்மையான செவ்வல்லி; உவமவாகு பெயராய் வாயை உணர்த்திற்று. தோகைக்குழாம் - பாங்கியர் கூட்டம். அல் ஒத்த பூங்குழல் பாங்கு அதுபோலும்-இருளையொத்த பூவையணிந்த கூந்தலையுடைய பாங்கியாகிய அவள்போலும். அணங்கினுக்கு - தலைவிக்கு. அணங்கினுக்குத் தோகைக் குழாத்துப் புல்லத் தகுவதும், செல்லத் தகுவதும், சொல்லத் தகுவதுமாகிய பாங்கு அதுபோலும் எனக் கூட்டுக. 'பாங்கு' பொருளால் உயர் திணையாயினும் சொல்லால் அஃறிணையாயிருத்தலின் தகுவது என்றும், அது என்றும் கூறினர். கஎ

பண்பு பாராட்டல்

*[தலைவியின் அழகைத் தலைவன் பாராட்டல்; பண்பு—அழகு]*

**23.** திருந்திய திண்பொருப் பால்திருப் பாற்கடல் முன்கடைந்து
வருந்திய நாள்வந்த நஞ்சும் அமுது மலர்க்கமலம்
பொருந்திய தன்முகத் தேகொண்டு போந்தனள் போலுமென்னில்
அருந்திய வாறெங்ங னேயெம்பி ரானும் அமரருமே.

(கு - ரை.) பொருப்பு-மந்தரமலை. கமலம் பொருந்திய முகம்-தாமரை மலரையொத்த முகம்; பொருந்திய: உவமவுருபு. நஞ்சையும் அமுதையும் முகத்தே கொண்டு போந்தனள் என்றது பொது நோக்கினையும் சிறப்பு நோக்கினையும் கொண்ட கண்களைப் பெற்றிருப்பதாலென்க. இந்நூல் ௬ - ஆம் பாடல் பார்க்க. எம்பிரான் - சிவபெருமான். எம்பிரானும், அமரரும் நஞ்சும் அமுதும் அருந்திய வாறு எங்ஙனெனக் கூட்டுக; நிரனிறை. கஅ

பயந்தோர்ப் பழிச்சல்

*[தலைவியின் தாய்தந்தையர்களைத் தலைவன் வாழ்த்தல்; பயந்தோர்—பெற்றோர்]*

**24.** தூயசெந் தாமரைப் பொன்னையென் ஆவித் துணையைத்தந்த
தாயரும் தந்தையுந் தாரணி மேலுந்தி தந்தஅண்ணல்
ஆயுவுந் தந்தை அருளும் புராரி அழகெறிக்குந்
தேயுவும் இந்திரன் செல்வமுங் தேடிச் சிறக்க நின்றே.

(கு - ரை.) பொன்னை - திருமகள் போன்ற தலைவியை. தந்த-பெற்ற. தாரணி - உலகம். உந்தி தந்த அண்ணல் ஆயு - நான்முகனுடைய வாழ்நாள். தந்தையென்றது திருமாலை. புராரி - சிவபெருமான். தேயு - ஒளி. தாயரும் தந்தையும் ஆயு முதலியவற்றைப் பெற்றுத் தாரணியில் நின்று சிறக்கவெனக் கூட்டுக. ௧௧

(வே - ம்.) சிறக்க இன்றே. இ-வி. ௧௨௧.

கண்படை பெறாது கங்குல் நோதல்

***[தலைவியைப் பிரிந்த தலைவன் இரவில் துயில் வரப்பெறாது வருந்திக் கூறல்; கண்படை—துயில்]***

**25.** **மயில்போல் இனியமென் சாயல்நல் லாருடன் வல்வினையேன்**
**துயில்போன தின்னமுந் தோன்றவுங் காண்கிலன் சோலையிளங்**
**குயில்போல் மொழியவர் தங்குழல் போலிருள் கூர்ந்துகொற்ற**
**அயில்போல் மறஞ்செய்கண் போலற நீளும் அருங்கங்குலே.**

(கு - ரை.) சாயல் நல்லார் என்றதும் குயில்போல் மொழியவர் என்றதும் தலைவியை. 'குழல்போல் இருள்' என்றது எதிர்நிலையணி; தொன்றுதொட்டுவரும் உவமையைப் பொருளாக்கியும் பொருளை உவமையாக்கியும் மொழிதல் இதன் இலக்கணமாகும். கொற்ற அயில் - வெற்றிதரும் வேல். மறம் - கொலை. அற - மிக. கங்குல் - இரவு. தலைவியையே நினைந்து துயில்பெறாதிருத்தலின் அஃது அவளுடன் போனதாகக் கூறுகின்றானென்க. துயில் போனது; இன்னமும் காண்கிலன்; கங்குல் கூர்ந்து நீளும் எனக் கூட்டுக. ௨௦

இயற்கைப் புணர்ச்சி முற்றும்.

## ங. இடந் தலைப்பாடு

*[இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்த இடத்தைத் தலைவன் அடைதல்]*

தலைவி இறைவனை நினைத்தல்

26. புறவார் நறுமுல்லை போல்நகை யார்பொய்தல் ஆடுஞ்சிற்றில்
நறவாடு சந்தனம் நாறுதண் சாரல் நயந்த வின்பம்
மறவாத நெஞ்சும் வனமுலை தோயும் மணிப்புயமும்
உறவாடி நிற்பர்கொல் லோவென்னை ஆளும் ஒருவர்வந்தே.

(கு - ரை.) புறவு - முல்லை நிலம். நகையார் - பெண்கள்; நகை - பல். பொய்தல் - மகளிர் விளையாட்டு. நறவு ஆடு - தேன் பொருந்திய சிற்றிலையுடைய சாரலெனக் கூட்டுக. தண் சாரல் - குளிர்ந்த மலைச்சாரல். நயந்த இன்பம் - விரும்பிப்பெற்ற கலவியின் பம். வனம் முலை - அழகிய முலை. மணிப்புயம் - அழகிய தோள். உறவாடி - உறவு கொண்டாடி. ஒருவர் - ஒப்பற்ற தலைவர். நெஞ்சும், புயமும் கொண்ட ஒருவர் உறவாடிச் சாரலின்கண் வந்து நிற்பரோவெனக் கூட்டிமுடிக்க. கொல்லோ: கொல்: அசை. க

(வே - ம்.) உறவாட. இ - வி. கரு.

தலைவன் தலைவியை நினைத்தல்

*[முன்பு இன்புற வாய்த்த செவ்வி இன்னுங் கூடுமோ என எண்ணல்]*

27. நீடுங்கொல் லோகொண்ட நேயமென் ஆயத் தவர்நிலையில் [னுங்
தேடுங்கொல் லோவந்து செல்லுங்கொல் லோஅந்தச் செவ்வியின்
கூடுங்கொல் லோவிதி கூட்டுங்கொல் லோஎன்று கொம்பினுள்ளம்
வாடுங்கொல் லோஅறி யேன்மலைச் சாரலில் வந்துநின்றே.

(கு - ரை.) நேயம் நீடுங் கொல்லோ எனக் கூட்டுக. நேயம் - அன்பு. ஆயத்தவர் நிலையில் - தோழியர் கூட்டம் இருக்கும் இடத்தில். அந்தச் செவ்வி - முன்பு கூடியதுபோன்ற காலம். கொம்பு - பூங்கொம்பை யொத்த தலைவி. கொல் ஆறும் அசை. 'நீடுங் கொல்லோ............கூட்டுங் கொல்லோ' என்பது வரையில் தலைவியின் எண்ணத்தைத் தலைவன் எடுத்து மொழிந்தானென அறிக. உ

(வே - ம்.) ஆயத்தவரிடையில்; வந்த செவ்வி. இ-வி. கருக.

### தந்த தெய்வம் தருமெனச் சேறல்

*[தலைவியை முன்பு அளித்த ஊழ்வினை இன்னும் தருமென்று தலைவன் தலைவியின் இடத்திற்குச் செல்லுதல்]*

**28.** குருந்தம் நரந்தங் குராமர மாமகிழ் கோங்குபுன்னை
செருந்தி பொருந்துஞ் செழுமலர்க் காவிடைச் சென்றவின்னோர்
அருந்தும் மருந்தன்ன அன்னமன் னாரை அளித்த தெய்வம்
இருந்தது காண்நமக் கின்னம்என் னோநெஞ் சிளைக்கின்றதே.

(கு - ரை.) குருந்தம் முதலியன மரவகை. மா - மாமரம். மகிழ் - மகிழமரம். காஇடை - சோலையில். மருந்து - அமிழ்தம். தெய்வம் - ஊழ்வினை. இருந்தது - இராநின்றது. காண்: முன்னிலையசை. தெய்வம் நமக்கு இன்னம் இருந்தது என்றும், நெஞ்சு இளைக்கின்றது என்னோ என்றும் கூட்டுக. ந

### பொழில் கண்டு வியத்தல்

*[தலைவன் தலைவியைக் கூடிய பொழிலைக் கண்டு அதனைத் தலைவியாகவே கருதி வியந்து கூறல்]*

**29.** கரிதாகி மென்குழல் போனிழல் போல்கலந் தால்விடுதற்கு
அரிதாய் உறவில் அறவினி தாயர வல்குலினிற்
பெரிதாய் விரும்பின வெல்லாம் நுகரப் பெறுவதற்கே
உரிதாய் அளியுடைத் தாயவர் போலும் உயர்பொழிலே.

(கு - ரை.) உறவில் அற இனிதாய் - அப்பொழிலைச் சார்ந்த காலையில் மிகவும் இன்பம் தரவல்லதாய். உறவு, நட்பென்னும் பொருளும் தந்துநின்றது. அரவு அல்குல் - பாம்பின் படம்போன்ற அல்குல்; அல்குலைப் பெரிதெனக் கூறுதல் மரபு; 'ஆசையல்குற் பெரியாரை' என்று பிறர் கூறியிருத்தலையும் காண்க. உரித்தாய் என நிற்றற்பாலது எதுகை நோக்கித் தொகுத்தல் விகாரம் பெற்று 'உரிதாய்' என நின்றது. அளி: சோலைக்காகும்போது வண்டென்றும், தலைவிக்காகும்போது அன்பென்றும், தலையில் அணிந்திருக்கும் மலரிலுள்ள வண்டு என்றும் பொருள்படும். அவர் - தலைவி. பொழில்- சோலை. கருமை முதலியவற்றால் பொழில் அவர்போலும் என்க. ச

### தலைவன் தலைவியைக் காண்டல்

***[தலைவியைத் தலைவன் விழைந்து நேர்தல்]***

**30.** **இடமாஞ் சிறுகுடில் இன்னுயிர் ஆயம் இகந்துவந்தித்**
**தடமாம் பொதும்பர் தனிநின்ற வாதறு கண்சிறுகண்**
**கடமாம் பிடிபுணர் வேரலஞ் சாரல் கலைபிரிந்த**
**மடமான் பிணையன்ன வேமருங் கோட மழைக்கண்களே.**

(து - ரை.) குடில் - வீடு. ஆயம்-பாங்கியர் கூட்டம். இகந்து-நீங்கி. தடம் ஆம் பொதும்பர் - மலைச்சாரலில் பொருந்திய சோலை. தறுகண் - அஞ்சாமை. கடம் மா பிடி புணர் வேரல் அம் சாரல் - மதம் பொருந்திய ஆண்யானை பெண்யானையைக் கூடுதற்கிடமாகிய மூங்கிலையுடைய அழகிய மலைச்சாரல்; அச்சாரலின் கண்ணுள்ள கலையெனக் கூட்டுக. கலை - ஆண் மான். மான்பிணை - பெண்மான். பிணையன்ன மழைக்கண் என்க. மழை - குளிர்ச்சி. தலைவன் வரவைக் கருதிக் கண்கள் மருங்கோடின என்க. மருங்கு ஓட - நாற்புறமும் பார்வை செல்ல. 'மாப்பிடி' எனற்பாலது எதுகைநோக்கி மெலிந்துநின்றது. இச்செய்யுட்குத் தலைவி என்னும் எழுவாயை வருவித்துத் 'தலைவி மழைக்கண்கள் மருங்கோடப் பொதும்பரின் கண் தனிநின்றவா' எனத் தலைவன் வியந்து கூறியதாகப் பொருளுரைக்க. ௫

### மருங்கு அணைதல்

***[நாணத்தால் ஒதுங்கிநின்ற தலைவியின் கூந்தலில் மொய்த்துள்ள வண்டுகளை ஓட்டுவான்போலத் தலைவன் தலைவியை நெருங்குதல்; இத்துறை 'வண்டோச்சி மருங்கணைதல்' எனவும் கூறப்பெறும்]***

**31.** **அறுகால் படஇருள் ஐம்பால் இருக்கில் அளியினங்காள்**
**மறுகால் வருக்க மருங்குலுண் டோமணி முத்தணிகொண்டு**
**உறுகால் வருந்தன பாரம் பொருதுயங் கித்தயங்குஞ்**
**சிறுகால் அசைய ஓசியுமென் சாயல் திருந்திழைக்கே.**

(து - ரை.) அறுகால் பட - ஆறு கால்களும் படும்படியாக. இருள் ஐம்பால் - இருளையொத்த கூந்தலின்கண்; முடி, கொண்டை, குழல், பனிச்சை, சுருள் என்னும் ஐந்து பகுதியாக முடிக்கப்படுதலின் கூந்தற்கு ஐம்பாலெனப் பெயர் வந்தது. அளி இனம் - வண்டின் கூட்டம். மறுகால் வருக்க - மறுமுறை செய்து இணைக்க. மருங்குல் உண்டோ - வேறு இடையுண்டோ; இல்லை என்றபடி.

ஓ: எதிர்மறை யுணர்த்தி நின்றது. கால் வரும் தனம் - அடிபரந்த முலை. உயங்கித் தயங்கும் - வருந்தித் தளரும். தயங்கும் திருந் திழை என்க. சிறுகால் அசைய ஒசியும் - இளந்தென்றல் வீசினும் துவளும். அளி இனங்காள், (நீவிர்) அறுகால்பட (இத்தலைவியின்) ஐம்பா(லி)ல் இருக்கில் (இவள் இடை ஒடிந்துபோம்; அவ்வாறு ஒடி யின் இத்) திருந்திழைக்கு மறுகால் வருக்க மருங்குல் உண்டோ எனக் கூட்டுக. ௬

மெய்தொட்டுப் பயிறல்

*[தலைவியின் மெய்யைத் தீண்டித் தலைவன் நெருங்குதல்]*

**32.** அளகந் திருத்தி மதிநுதல் நீவி அளியகற்றிப்
புளகஞ்செய் தோளில் புரிவளை ஏற்றிப் புதியதென்றற்கு
இளகுங் கொழுந்தளிர் மெல்லடி தைவந்த இன்பமுறக்
களபஞ் செறிதனத் தாய்பெற்ற வாவென் கரதலமே.

(கு - ரை.) அளகம் - கூந்தல். மதி நுதல் நீவி - பிறைத் திங் களையொத்த நெற்றியைத் தடவி. அளி அகற்றி - வண்டுகளை யோட்டி. புளகம் - மயிர் சிலிர்த்தல். புரி வளை ஏற்றி - முறுக்கு அமைந்த வளையலை (தோள்வளை எனினுமாம்) மேலேறச் செறித்து; புரி - முறுக்கு. இளகுதல் - உருகுதல்; ஈண்டு மென்மையை உணர்த்திற்று. தைவந்த - தடவிய. களபம் - கலவைச் சேறு. கரதலம் - கை. பெற்றவா - தான் பெற்ற பேற்றை வியந்தவாறு; ஆ: வியப்புக் குறிப்பு. எ

(வே - ம்.) அணியகற்றி.இ-வி. கஉ௩.

போய் பாராட்டல்

*[தலைவியினிடத்துத் தலைவன் இல்லதும் உள்ளதுங் கொண்டாடிக் கூறுதல். இல்லது கூறுவோன் உள்ளதை விடானுதலின் இங்ஙனங் கொள்க]*

**33.** ஒருதனி யேநின் றிரவும் பகலும் உறுவெயிலும்
வருபனி யோடு மழையுமெண் ணாது வரையினுமா
வெருவரு கானினும் மெய்த்தவஞ் செய்வது வேய்களெல்லாம்
திருவளை யார்தடந் தோள்செற்ற நீள்பகை தீரவென்றே.

(கு - ரை.) உறு வெயில் - மிக்க வெயில். வரை - மலை. மா வெருவரு கான் - விலங்குகளும் அஞ்சற்குரிய காடு; மாவும் எனத்

தரும் உயர்வு சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. வேய் - மூங்கில். திரு அனையார் - தலைவி. செற்ற - ஒப்பாகாய் என்று வெகுண்ட. மலைகளிலும், காடுகளிலும் இயல்பாக வளரும் வேய்களைத் தோள் செற்ற பகைதீரத் தவஞ் செய்வதாகப் பொய்கூறிப் பாராட்டுதலால் இத்துறை அப்பெயர்த்தாயிற்று. அணிநூலார் இதனைத் 'தற்குறிப் பேற்றவணி' என்பர். வேய்களெல்லாம் எண்ணாது நின்று வரையி னும் கானினும் தவம் செய்வது தீரஎன்றே எனக் கூட்டுக. அ

இடம்பெற்றுத் தழாஅல்

*[தகுந்த இடத்தைப் பெற்றுத் தழுவுதலைத் தலைவன் விரும்பிக் கூறுதல்; தழாஅல் - தழுவுதல்]*

**34.** இளவேய் பொரும்இரு தோளுஞ்செவ் வாயும் இளமுலையுங்
களவே செயும்அரிக் கண்ணும் பதமுங் கலைமதியின்
பிளவே அனைய திருநுதல் வேர்வும் பிறக்குநல்ல
அளவே இனியிந்த மானென்தன் ஆவிக் கருள்செய்யவே.

(து - ரை.) இளவேய் பொரும் - இளமூங்கிலை யொக்கும்; தனக்கு ஒப்பாகமாட்டாதென்று மூங்கிலொடு போர்செய்யும் எனலு மாம். அரிக்கண் - செவ்வரி பொருந்திய கண். பதம் - கால். மதி யின் பிளவு - எட்டாம்நாள் திங்கள். மான் - தலைவி. அருள் செய்தல் - புணர்ச்சிக்கு உடன்படல். தோளாலும், செவ்வாயாலும், இளமுலையாலும், கண்களாலும், பதத்தாலும் என்றன் ஆவிக்கு அருள்செய்யத் திருநுதல் வேர்வும் பிறக்கும். (இது) நல்ல அளவே எனக் கூட்டுக. க

கோடியிடம் புகுதல்

*[தலைவன் சொல்லைக்கேட்டு நாணிய தலைவி ஒரு பூங்கொடியை யடைந்து மறைந்து கொள்ளல்]*

**35.** வழிகின்ற தெள்ள ருவிமலைச் சாரலில் வண்டருந்தப்
பொழிகின்ற தேன்கமழ் பூங்கொடி யேபுதி யாரொருவர்
மொழிகின்ற காதலின் முன்னமென் ஆவி முடியுமென்று
கழிகின்ற நாணமும் நெஞ்சமும் நானும்உன் கையடையே.

(து - ரை.) புதியார் என்றது தலைவனை. முடியும் என்று - முடியுமென்று கூறும்படியாக; முடிதல் - அழிதல். ஆவிமுடிதல் நாணத்தின் மிகுதியால் என்க. கழிகின்ற - மிகுகின்ற. கையடை-

அடைக்கலம். இத்துறை 'வழிபாடு மறுத்தல்' என்றும் வழங்கப்பெறும். கO

கண்புதைத்தல்

*[மேன்மேலும் நாணம் மிகுதலின் தலைவி, தன் கண்களை மறைத்துக்கொள்ள அதனைக்கண்ட தலைவன் கூறுதல்]*

**36.** தோளுந் தொடியுந் துடிசேர் இடையுந் துணைமுலையும்
வேளுந் திறையிடும் மென்மயில் சாயலும் மேவியென்னை
ஆளும் புதிய அழகும்எல் லாம்நல் லமுதம்அன்னீர்
வாளுங் கணையும் மறலியும் போலும் மலர்க்கண்களே.

(து - ரை.) தொடி - வளையல். துடிசேர் இடை - துடியையொத்த இடை; துடி - உடுக்கை. வேள் - வேட்கையை உண்டாக்கும் கடவுள்; மன்மதன்; வேட்கை - காதல். வேள் திறையிடல்-சாயலுக்குத் தோற்றல். திறை - கப்பம். அமுதம் அன்னீர் - அமுதத்தை ஒத்துள்ளீர். தோள் முதலியவற்றால் அமுதமன்னீர் எனக்கூட்டுக; அவை தனக்கு இன்பஞ் செய்தலின் அவ்வாறு கூறினான். கணை - அம்பு. மறலி - கூற்றுவன். கண்கள் மட்டும் தன்னை வருத்துதலின் வாளும் கணையும் மறலியும் போலும் என்றான்; இவற்றை மறைத்ததும் ஒருவகையில் நலனாயிற்றென்பது கருத்து. இத்துறை 'நாணிக் கண் புதைத்தல்' என்றும் வழங்கப்பெறும். கக

நீடுநினைந்து இரங்கல்

*[தலைவியின் செய்கையால் காலம் நீட்டித்தலை யெண்ணித் தலைவன் வருந்துதல்; நீடு-நீட்டித்தல்]*

**37.** காதல் மடந்தையர் கையகல் காலையும் மெய்யகலா
மேதகு நாணும் மெலியஎன் றோவிழ் போலுநெய்தற்
போதவிழ் மென்மலர்ப் புன்னையங் கானல் பொருந்துமிந்த
மாதவி பெற்ற மணிமே கலைநம்மை வாழ்விப்பதே.

(து - ரை.) காதல் மடந்தையர் - பாங்கியர். கையகல் காலையும்-நீங்கியபோதும். மெய் அகலா - உடம்பைவிட்டு நீங்காத. நாணும்; உம்மை: உயர்வு சிறப்பின்கண் வந்தது. மெலிய - நீங்க. என்றோ - எக்காலமோ. போது - மலரும் பருவத்து அரும்பு. அவிழ்தல் - மலர்தல். கானல்-கடற்கரைச்சோலை. மாதவி-குருக்கத்திக்கொடி. மணிமேகலை - இடையணி: எழு கோவைகளைக்கொண்டது; ஈண்டு

அதனை அணிந்த தலைவியை உணர்த்திற்று. மாதவி மகளாகிய மணிமேகலை என்னும் நயந்தோன்றலும் காண்க. நாண் மெலிய மணிமேகலை நம்மை வாழ்விப்பது என்றோ எனக் கூட்டுக. ௬௨

நனிநாண் விடுத்தல்

**[தலைவி தன்னுடைய மிக்க நாணத்தை விடுத்தல்; இத்துறை 'மறுத்தெதிர் கோடல்' எனவும் சொல்லப்பெறும்]**

**38.** வெங்கோல் நடாத்திய வேந்தன் திருவினும் மேதகைய
செங்கோல் அரசன் பகையினுந் தேய்ந்த திரைமுழங்கச்
சங்கோ லிடும்புனல் தண்ணந் துறைவன்வண் ணங்கவர்ந்த
எங்கோன் அறிவின்அன் றோமட நாணம் எனக்கினியே.

(கு - ரை.) கொடுங்கோல் மன்னன் செல்வமும், நீதிமன்னன் பகையும் நிலைத்திராவாகலின் தலைவியின் மடமும் நாணமும் அழிந்தமைக்கு அவற்றை உவமையாக்கினர். ஒலிடும் - ஒலிக்கும். வண்ணம் - தலைவியினழகு. எம்கோன் - எமது தலைவன். துறைவனாகிய எமது தலைவனென்க. வேட்கை மிகுதியால் தலைவனும் உணர்வழிந்திருத்தலின் 'எங்கோன் அறிவின்' என்றாள்; அறிவின் - அறிவைப்போல். திருவும், பகையும் தேய்வனபோல எனக்கு இனி மடமும் நாணமும் எங்கோன் அறிவின் தேய்ந்த அன்றோ எனக் கூட்டுக. ௬௩

வறிதுநகை தோற்றல்

**[தலைவி புன்னகை புரிதல். வறிது-சிறிது]**

**39.** பூணுந் தரள நிரைஅவிர் தோற்றமும் பூந்தளவின்
சேணுங் கமழும் முகையின் தகையுஞ் செழுஞ்சிலம்பில்
காணுங் கலாப மயில்நெடும் பீலியின் காலுஞ்சிந்தை
நாணுங் கெடவறி தேநகைத் தாள்மதி நன்னுதலே.

(கு - ரை.) தாளம் நிரை - முத்துவரிசை. அவிர்தல்-விளங்குதல். தளவு - முல்லை. சேணும் - நெடுந்தூரத்திலும். தகை-அழகு. சிலம்பு - மலை. கலாபம் - தோகை. பீலியின் கால் - மயிலிறகின் அடி. வறிது - சிறிது. மதி நல்நுதல் - பிறைத்திங்களையொத்த நல்ல நெற்றியையுடைய தலைவி. தோற்றமும், தகையும், காலும் பல்லுக்கு ஒப்பாகாது கெட்டதென்றும், நாண் கெட்டதால் நகை தோன்றிற்றென்றும் கருத்தாகக் கொள்க. இச்செய்யுளில் முத்தின்

தோற்றம் முதலியவற்றின் கெடுதல் வினையோடு நாணின் கெடுதலை யும் உடன்சேர்த்துக் கற்றோர் மகிழக் கூறியிருத்தலின் இஃது உடனிகழ்ச்சியணியாம். கச

முறுவற் குறிப்புணர்தல்

*[தலைவியின் புன்னகையாற் பெற்ற உடன்பாட்டுக் குறிப்பினைத் தலைவன் அறிதல்; முறுவல்-புன்னகை]*

**40.** மிகலே யொழியக் குறைவின்றி நீடிய வெந்துயர்க்கோர்
புகலேதும் இன்றிப் புலம்பல்நெஞ் சேபொருந் தார்வருந்த
இகலே செயுமயி லன்னகண் ணார்முகத் தெல்லியன்றிப்
பகலே நிலவும் பவளத்துள் ளேவந்து பாரித்ததே.

(கு - ரை.) மிகலே ஒழிய - மேன்மேலும் மிகுதலேயன்றி. புகல் - அடைக்கலம். புலம்பல் - வருந்தற்க. பொருந்தார் - பகைவர். இகல் - போர். அயில் - வேல். எல்லி - இரவு. நிலவு - நகையொளி. பவளத்துள் - பவளத்தையொத்த வாய்க்குள். பாரித்தது - பரந்தது. நெஞ்சே! புலம்பல்; நிலவு பகலே வந்து பாரித்தது எனக் கூட்டுக. கரு

முயங்குதல் உறுத்தல்

*[குறிப்பா லுணர்ந்து கூட நினைத்தல்]*

**41.** சுரிகுழல் வண்டுஞ் சுரும்பொடு தேனும் விரும்புநெஞ்சும்
அரிபொருங் கண்ணும் அலமரு கின்றன அன்றிவண்ணம்
எரிபுரை மாவின் இளந்தளிர் ஈன்றன போன்றதினி
முரிபுரு வச்சிலை யார்முலை ஆர முயங்குதுமே.

(கு - ரை.) சுரி குழல்-நுனி சுருண்ட கூந்தலிலுள்ள. சுரும்பு, தேன்: வண்டின்வகை. விரும்பு நெஞ்சு - கலவியை விரும்பும் தலைவியின் நெஞ்சு. அரி பொரும் கண் - வண்டையொத்த கண். அலமருகின்றன - சுழல்கின்றன. தலைவியின் நெஞ்சு, கண் இவற்றின் அலமரலைக் கூறக் கருதியவன் 'உடனிகழ்ச்சியணி' தோன்ற வண்டு முதலியவற்றின் அலமரலையும் உடனியைத்துக் கூறினான் என்க வண்ணம் - தலைவியின் நிறம். எரிபுரை - தீயை யொத்த. முரி புருவச் சிலையார் - வளைந்த வில்லை யொத்த புருவத்தாள்; தலைவி. முயங்குதும் - தழுவுவேம். கண் அலமரல் முதலியன புணர்ச்சிக் குறிப்பை உணர்த்துவன என அறிக. வண்டு முதலியவை அலமரு

கின்றன: வண்ணம் போன்றது: (ஆதலின்) இனி முயங்குதும் எனக் கூட்டுக. ௪௬

புணர்ச்சியின் மகிழ்தல்

*[கூடுதலுற்று இன்பக் குணங்கண்டு மகிழ்தல்]*

**42.** சுரும்பெழு கூந்தலுஞ் செவ்வாய் மழலையுஞ் சோதிநுதல்
அரும்பிய வேர்வும் அலமரு நோக்கும் அசைந்தொசியுங்
கரும்புரு வச்சி லையுநிலை சோருங் கலையுங்கண்டு
விரும்பின மேமன மேகளி கூரின்ப வெள்ளத்திலே.

(கு - ரை.) சுரும்பு - வண்டு. நுதல் அரும்பிய - நெற்றியில் தோன்றிய. அலமரும் - சுழலும். ஒசியும் - வளையும். புருவம் சிலை - புருவமாகிய வில்; உருவகவணி. கலை - சேலை; மேகலையுமாம். களிகூர் - களிப்பு மிக்க. சுரும்பெழல் முதலியன புணர்ச்சிக் காலத்தில் நிகழ்வனவென அறிக. மனமே! கூந்தல் முதலியவற்றைக் கண்டு இன்ப வெள்ளத்தை விரும்பினம் எனக் கூட்டுக. ௪௭

புகழ்தல்

*[தலைவியின் நலத்தைத் தலைவன் புகழ்தல்]*

**43.** கனமே கருங்குழல் கங்குலன் றேகண் கருங்கயலின்
இனமே குவளையும் நெய்தலும் அல்ல இவட்கிடையென்
மனமே வளரிளம் வஞ்சியன் றேவஞ்ச மாரன்வைத்த
தனமே தனங்கன கத்தட மேருச் சயிலம்அன்றே.

(கு - ரை.) கனம் - முகில் (=மேகம்). கங்குல் - இருள். மனம் கட்புலனுகாமைபோல இடையும் கட்புலனுகா நுட்பம்வாய்ந்ததென்பது கருத்து. வஞ்சி - வஞ்சிக்கொடி. மாரன் - காமவேள். தனம்-பொருட்குவை. இரண்டாவது தனம்: முலை. கனகம் தட மேருசயிலம் - பொன்னிறமான பெரிய மேருமலை. பகலிலும் விளங்கித் தோன்றலின் கங்குலன்று என்றும், பிறழ்ச்சி உண்மையின் குவளையும் நெய்தலும் அல்ல என்றும், உருவமின்மையின் வஞ்சியன்று என்றும், மென்மை வாய்ந்து இன்பம் பயத்தலின் மேரு அன்று என்றும் கூறினனென்க. இச்செய்யுள் ஏதுவிலக்கணியாம். ௪௮

(வே-ம்)இவற்கிடை. இ - வி. கங்க.

### ஆயத்து உய்த்தல்

*[பாங்கியர் கூட்டத்தை யடையும்படி தலைவன் தலைவியை விடுத்தல்: ஆயம்-பாங்கியர் கூட்டம். உய்த்தல்-செல்லவிடுதல்]*

**44.** விலையாக்கி வேளை விழிக்கடை யால்நல மிக்ககொங்கை
மலையாக்கி என்னை மருங்காக்கி வைத்தனிர் வங்கமுந்நீர்
அலையாக் கியவமு தன்னநல் லீரினி யம்பவளக்
குலையாக் கியதண் டலைவண்டல் ஆயங் குறுகுகவே.

(கு - ரை.) வேள் - காமவேள். விழிக்கடை - கடைக்கண். விலையாக்கலாவது - அழகால் வேளை வெல்லல். மலைபோன்ற கொங்கையையுடையார் என்றபடி; கொங்கை - முலை. மருங்கு ஆக்கல் - பக்கத்தே இருக்கச் செய்தல்; அன்றி மருங்கென்பதற்கு இடையெனப் பொருள்கொண்டு இடை இளைத்திருக்குமாறு போல என்னையும் இளைக்கச்செய்தனிர் என்று பொருள் கூறலுமாம். வங்கம் முந்நீர் - கப்பலையுடைய கடல். அம் - அழகு. பவளக்குலையென்றது பவளம்போன்ற நிறமுடைய பாக்கின் குலை முதலியவற்றை. தண்டலை - சோலையின்கணுள்ள. வண்டல் ஆயம் குறுகுக - விளையாடுதலையுடைய தோழியரைச் சென்று சார்க. நல்லீர்! ஆக்கி, ஆக்கி, ஆக்கிவைத்தனிர்; இனிக் குறுகுக எனக் கூட்டுக. கக

இடந்தலைப்பாடு முற்றும்.

## ௪. பாங்கற் கூட்டம்

*[பாங்கனுடைய உதவியால் தலைவன் தலைவியைக்கூடும் கூட்டம்]*

### பாங்கனை நினைத்தல்

*[தலைவன் பாங்கனை நினைந்து மனந்தேறுதல்;
பாங்கன்-உயிர்த்தோழன்.]*

**45.** அணங்குந் தெரிவையும் இன்னரு ளால்முன் அளித்தசெவ்வி
மணங்கொண் டுளமகிழ் தூங்கும் பரிசினி வாய்ப்பதென்றென்று
உணங்குந் தனிநெஞ்ச மேயஞ்சல் நீநம் உயிர்மருந்தாய்
இணங்குந் துணைவன் இருபிறப் பாளன் இருந்தனனே.

(து - ரை.) கண்டோரைத் தன் அழகால் வருத்துதலின் 'அணங்கும் தெரிவை' என்றான்; அணங்கும் - வருத்தும். தெரிவை யென்னுஞ்சொல் ஈண்டுப் பருவம் குறிக்காது பெண்ணென்னும் பொதுப்பெயராய்நின்று தலைவியை உணர்த்திற்று. இனி, 'தெய்வந் தன்னின் எய்தவும் கிழத்தியின், எய்தவும் படூஉம் இயற்கைப் புணர்ச்சி' என்பது அகப்பொருள் இலக்கணமாதலின், 'அணங்கும் ......செவ்விமணம்' என்பதற்குத் தெய்வமும், தெரிவையும் அருளால் அளித்த செவ்வி மணம் எனப் பொருள்கோடலும் சிறக்கும். இப் பொருட்கு 'அணங்கு' என்னும் சொல் தெய்வம் அல்லது ஊழ்வினை எனப் பொருள்படும் என்க. செவ்வி மணம் - அழகிய கூட்டம். மகிழ் தூங்கும் பரிசு - மகிழ்ச்சியைப் பொருந்தும் தன்மை. என்று என்று-எக்காலத்தென்று. உணங்கும்-வாடும். அஞ்சல் - அஞ்சாதே; அல்லீற்று எதிர்மறை வியங்கோள் வினைமுற்று. இணங்கும் - பொருந்தும். இரு பிறப்பாளன்-பார்ப்பனப் பாங்கன். நெஞ்சமே! துணைவனாகிய இருபிறப்பாளன் இருந்தனன் (ஆதலின்) இனிப் பரிசு வாய்ப்பது என்றென்று அஞ்சல் எனக் கூட்டுக. க

### பாங்கன் வினாதல்

*[தலைவன்மேனி வாடியிருத்தலைக்கண்ட பாங்கன்
இவ்வாட்டத்திற்குக் காரணம் என்னெனத் தலைவனை வினவல்]*

**46.** தென்செய்த பண்ணின் திறந்தெரிந் தோதெய்வப் பாவலர்தாம்
முன்செய்த நூலின் முறைதெரிந் தோசெம் முகங்கருகிப்
பொன்செய்த மேனியும் புல்லென்று வாடிப் புலம்பவென்னே
என்செய்த தோஅறி யேன்திரு மேனி இறைவனுக்கே.

(கு - ரை.) தென் செய்த பண் - தென்னாட்டுப் புலவர் பெரு மக்கள் தோற்றுவித்த பண்; தென் அழகுமாம். பண்-இசை, திறம்-வகை. தெய்வப் பாவலர் என்பதை முன்னுங்கூட்டித் தாப்பிசை யாகப் பொருள் கொள்க. தெரிந்தோ - ஆராய்ந்தோ? பொன்செய்த மேனி - பொன்போன்ற நிறம். புல்லென்று - பொலிவிழந்து. என்னோ: இரக்கத்தின்கட் குறிப்பு. இறைவனுக்கு - தலைவனாகிய உனக்கு; முன்னிலையில் படர்க்கைவந்தது. இறைவனுக்குக் கருகி வாடிப் புலம்ப என்னோ! திறந்தெரிந்தோ முறைதெரிந்தோ திரு மேனி என்செய்ததோ அறியேன் எனக் கூட்டுக. 'கூடலின் ஆய்ந்த ஒண் தீந்தமிழின், துறைவாய் நுழைந்தனையோ அன்றி ஏழிசைச் சூழல்புக்கோ, இறைவா தடவரைத் தோட்குஎன் கொலாம்புகுந்து எய்தியதே' என்று திருக்கோவையார் கூறுதலுங் காண்க. உ

தலைவன் உற்றது உரைத்தல்

*[உற்றது-உற்ற துன்பத்தை]*

**47. சொல்லேன் உனக்கும் எனஇருந் தேனெங்ஙன் சொல்லுகைக்கும்**
**வல்லேன் வருந்தவு மாட்டுகில் லேன்வரி வேட்டையிற்சென்று**
**அல்லேர் குழலோர் அணங்கெதிர்ப் பட்டனன் ஆவியன்னாய்**
**செல்லேன் அறியில் அதுதடஞ் சாரல் திரிவதுவே.**

(கு - ரை.) எங்ஙன் - அக்கருத்து முற்றவில்லை என்றபடி. வல்லேன் - வலிமை பெற்றிலேன். சொல்லாது துன்பத்தைப் பொறுத்துக்கொள்ளலாமென்னில் அதுவும் முடியவில்லை யென்று னென்க. வரிவேட்டை - அழகிய வேட்டை; புலிவேட்டையுமாம்; இப்பொருட்கு வரி என்பதைக் கொடுவரி என்பதன் முதற்குறையா கக் கொள்க (உசஉ). அல் ஏர் குழல் ஓர் அணங்கு-இருளையொத்த கூந்தலையுடைய ஒப்பற்ற கடவுட்பெண்டு; என்றது தலைவியை. ஆவி அன்னாய்: பாங்கனைக் குறித்த விளி. 'அறியில் செல்லேன்' என மொழி மாற்றுக. அது - அவ்வணங்கு. தடம் சாரல் - பெரிய மலைச்சாரலில். ஆவியன்னாய்! எதிர்ப்பட்டனன்; அது திரிவது; அறியில் செல்லேன்; இருந்தேன்; வல்லேன்; மாட்டுகில்லேன்; (ஆதலிற் சொன்னேன்) எனச் சிலசொல் வருவித்துக் கூட்டி முடிக்க. ந

(வே-ம்) திருவதுவே.

### பாங்கன் கழறல்

*[கழறல்-இடித்துரைத்தல்]*

48. முன்னே அறிஞர் மொழியுங் கலைகள் முழுதுணர்ந்தும்
மின்னே அனைய நலம்பொருட் டாகமெய் வேட்கையுற்றுக்
கொன்னே அறிவுங் குறையா நிறைவுங் குலைந்துநின்றாய்
என்னே தருவன வோவெம் பிரானுக் கிவையுமின்றே.

(கு - ரை.) *மின்னே அனைய நலம்-மின்னலையொத்து விரைவி லழியும் பெண்ணின்பம். மெய் வேட்கை உற்று-மெய்யுறு புணர்ச்சி யில் விருப்பம்கொண்டு. கொன்னே-வீணாக. குறையா-குறைந்து; செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம். நிறைவு - மனத்தைப் புலன்களிற் செல்லாது நிறுத்தும் குணம். எம்பிரானுக்கு-எமது தலை வனாகிய நினக்கு; இவை தருவனவோ எனக் கூட்டுக. உணர்ந்து உற்றுக் குறையாக் குலைந்துநின்றாய் இவை தருவனவோ? என இயைக்க.* ௪

### கழற்றெதிர் மறுத்தல்

*[பாங்கன் இடித்து உரைத்ததைத் தலைவன் மறுத்து உரைத்தல்]*

49. என்போல் மலரம்பில் ஏவுண்ட நாளில் எனக்கினிய
நின்போல் ஒருவரும் நின்றில ரேவெண்ணி லாவெறிக்கும்
மின்போ லொளிர்கொன்றை வேணிப்பி ரானுக்கு மெய்த்துணையாய்த்
தன்போ லரிய தவங்குலை யாவகை சாற்றுதற்கே.

(கு - ரை.) *மலர் அம்பில் - காமனம்பால். ஏவுண்டநாள் - எய்யப்பெற்றநாள், அது தவஞ்செய்த காலம். ஒளிர்தல் - விளங்குதல். கொன்றை வேணிப்பிரான் - சிவபெருமான்; வேணி - சடை. மெய் துணையாய் - உண்மையுள்ள நண்பனாய். தன்போல் - நின்னைப்போல். முன்னிற்கும் நண்பனைத் 'தன்போல்' எனப் படர்க்கையாகக் கூறியதூஉம் ஓரிகழ்ச்சிக் குறிப்பு. தன்போல் அரியதவம் என்பதற் குத் தனக்குத்தானே ஒப்பாகிய தவம் என்று உரைத்தலுமாம். சிவன் தன்னையேபோன்ற எனினுமாம். வேணிப்பிரான் என்போல் ஏவுண்டநாளில் (அப்பெருமான் செய்த) தவங்குலையாவகை தன் போல் சாற்றுதற்கு நின்போல் ஒருவரும் நின்றிலரேயெனக் கூட்டுக. நின்போலொருவர் இல்லாக்குறையேயன்றி இருந்திருப்பாராயின் தவம் குலைந்திராதெனத் தலைவன் பாங்கனை நகைத்துரைத்தவாறு காண்க.* ௫

### பாங்கன் கிழவோற் பழித்தல்

***[கிழவோற் பழித்தல்—கிழவோனைப் பழித்தல்: கிழவோன்—தலைவன்]***

**50.** இளங்கொம் பொருதனி நின்றிருஞ் சாரலில் என்னையிங்ஙன்
உளங்கொண் டுறுதுயர் செய்ததென் றாய்மின் னொளிர்வதுபோல்
விளங்குங் கதிர்வடி வேலண்ண லேதென்றல் மீதசையத்
துளங்குஞ் சிறுகொடிக் கோமத வேழந் துவக்குண்பதே.

(கு - ரை.) கொம்பு - பூங்கொம்பு; தலைவிக்கு உவமவாகு பெயர். உளங்கொண்டு - என் உள்ளத்தைக் கைக்கொண்டு. உறு துயர் - மிக்க துன்பம். வடிவேல் அண்ணலே - கூரிய வேலையுடைய தலைவனே. அசைய - வீச. துளங்கும் - அசையும். வேழம் - யானை. துவக்கு உண்பது - கட்டுப்படுவது. கொடி தலைவியையும், வேழம் தலைவனையும் உணர்த்திநின்றன. ‘துளங்குஞ் சிறுகொடிக் கோமத வேழம் துவக்குண்பதே’ என்பது பிறிதினவிற்சியணி. அண்ணலே! ‘கொம்பு நின்றுகொண்டு செய்தது’ என்றாய். வேழம் கொடிக்கோ துவக்குண்பது! எனக்கூட்டுக. சு

### கிழவோன் வேட்கை தாங்கற்கருமை சாற்றல்

***[தலைவன், தலைவியின்பால் தனக்குள்ள விருப்பத்தைத் தன்னால் தாங்கமுடியாமையைக் கூறுதல்]***

**51.** சுழிக்கே அழுந்து நதிக்கொரு வான்புணை தோன்றிலந்நீர்
வழிக்கே யொழுகி வருந்துவ ரோவருந் தாஅமுதின்
விழிக்கே அகப்பட் டழிந்தழி யாவுயிர் மீண்டும்உன்றன்
மொழிக்கே படிலென்செய் வேன்முன்செய் பாவ முடியநின்றே.

(கு - ரை.) சுழிக்கு - சுழியின்கண்; வேற்றுமை மயக்கம். அழுந்தும் -(எப்பொருளும்) அழுந்துதலையுடைய. நதிக்கு - ஆற்றைக் கடத்தற்கு. வான்புணை - சிறந்த தெப்பம். அந்நீர்வழிக்கே ஒழுகி - அந்நீர் செல்லும் வழியே அடித்துக்கொண்டு போகப்பட்டு. அருந்தா அமுது - தலைவி; விலக்குருவகவணி. அழிந்து அழியா உயிர் - பெரிதும் அழிந்து சிறிதே அழியா உயிர் என்க. மொழிக்கேபடில்- நின் சொல்லால் அழியுமானால். முடியநின்று - முற்றும் துணையாய் நின்று. முடிய நின்று உயிர் மொழிக்கே படில்என்செய்வேன் எனக் கூட்டுக. நின்று என்பதை நிற்கவெனத் திரிக்க. ‘சுழிக்கே........

வருந்துவரோ' என்றது நீயும் அவ்வாறே யான் காதல்வெள்ளம் கடத்தற்குரிய புணையாதல் வேண்டுமென்னும் கருத்திற்று. எ

### பாங்கன் தன்மனத்தழுங்கல்

**[அழுங்கல்—வருந்தல்]**

52. யானும் அறிவு கொளுத்துகிற் பேனிங்ஙன் ஏறனையான்
தானும் அறிவு தளர்ந்துநிற் பான்செந் தளவரும்புந்
தேனும் இனிய குதலைச்செவ் வாயிளஞ் செவ்விநவ்வி
மானும் இவனை மயங்கவிவ் வாறு வருத்துவதே.

(கு - ரை.) அறிவுகொளுத்தல் - அறிவுறுத்தல். ஏறனையான்- தலைவன்; ஏறு - அரியேறு. தளவு அரும்பு - முல்லைமுகை; பல்லுக்கு உவமை. செவ்விநவ்விமான் - அழகிய மான்; தலைவி; நவ்விமான் என்பது இருபெயரொட்டுப் பண்புத்தொகை. இவனை யென்றது தலைவனை. யானும், தானும், மானும் என்பவற்றிலுள்ள 'ஆம்' என்பன முறையே தனது சிறுமை யையும், தலைவனது பெருமை யையும், தலைவியினுடைய எளிமையையும் உணர்த்திநின்ற இடைச் சொற்கள். அ

### தலைவனொடு அழுங்கல்

**[அழுங்கல்—பாங்கன் வருந்திக்கூறல்]**

53. நீருக வேலை நெருப்பெழுங் காலையு நீர்மைசற்றும்
மாறு உணர்வும் மதியுங் கலங்கி மழைவள்ளலே
தேறுத விங்குனைத் தேற்றுவ தொன்றுந் திருவுளத்தில்
ஏறு தொழிவதென் னோவென்ன மாய மெதிர்ப்பட்டதே.

(கு - ரை.) நீறு - சாம்பல். வேலை - கடல். காலையும் என்பதில் உம்மை எதிர்மறைப்பொருள் தந்து அவ்வாறு நெருப்பெழாமையை விளக்கிநின்றது; ஆகவே தலைவனுடைய உணர்வும், மதியும் அத்தன்மையனவே என்பதும் பெற்றும். இனி, 'நீருகவேலை நெருப்பெழுங்காலை' என்பதற்கு ஊழிக்காலம் எனினுமாம். நீர்மை - தன்மை. திருஉளத்தில் - நின்மனத்தில். வள்ளலே! கலங்கித் தேருத உனைத் தேற்றுவது ஏறுது ஒழிவது என்னோ? என்ன மாயம் எதிர்ப்பட்டது? எனக்கூட்டுக. க

பாங்கன் எவ்விடத்து எவ்வியற்றென்றல்

*[பாங்கன் தலைவனைநோக்கி, நீ கண்ட உருவம் எவ்விடத்தில் உள்ளது; எவ்வியல்பினையுடையது என்று கேட்டல்]*

**54.** பேரோத ஞாலம் பெயரினும் ஒற்றைப் பெருந்திகிரித்
தேரோன் உதிக்குந் திசைதடு மாறினுஞ் செய்யகொன்றைத்
தாரோன் வரிசிலை சாயினுஞ் சாயாத் தறுகணினை
யாரோ வணக்கினர் எங்கே யவர்வந் தெதிர்ப்பட்டதே.

(து - ரை.) பேரோத ஞாலம் - பெரிய கடலாற் சூழப்பட்ட உலகம். திகிரி - சக்கரம். தேரோன் - கதிரவன். கொன்றைத் தாரோன் - சிவபெருமான். வரிசிலை - கட்டமைந்த வில்; என்றது மேருமலையை. சிவபெருமான் மேருவை வில்லாகக்கொண்டுள்ளார் என்பது புராணக்கூற்று. சாயாத்தறுகண்ணினை - கெடாத அஞ்சாமையையுடைய நின்னை. வணக்கினர் - சாய்த்தனர். அவர் - வணக்கினவர்; தலைவி. உம்மைகள் அவ்வாறு நிகழாமையை உணர்த்தி நின்றன. யாரோ: ஓ, வியப்புக்குறித்து நின்றது. பெயரினும், தடுமாறினும், சாயினும் சாயாநினை யார் வணக்கினர்? அவர் எதிர்ப்பட்டது எங்கே? எனக்கூட்டுக. ௧௦

அவன் அஃது இவ்விடத்து இவ்வியற்றென்றல்

*[தலைவன், நான் கண்ட உருவம் இன்ன இடத்து உள்ளது; இத்தன்மையது என்று கூறல்]*

**55.** தோற்றந் திருவென்று சொல்லத் தகினுந் துணைமுலைகள்
கூற்றங் கொடிய கொலைவிட மேகண் கொடியிடையும்
ஊற்றம் பிறிதொன்றும் இன்றியென் போனின் றுயங்குமென்றே
மாற்றங் கடலமு தேமலை வாணர் மடமகட்கே.

(து - ரை.) தோற்றம் - அழகு. திரு - திருமகள். கூற்றம் - கூற்றுவன்; உடம்பையும் உயிரையும் கூறுபடுத்தலின் அப்பெயர் பெற்றது என்க. ஊற்றம் - பற்றுக்கோடு. உயங்கும் - வருந்தும். மாற்றம் - சொல். உயங்கும் இடை கொடியெனக் கூட்டுக. மடமகட்கு முலைகள் கூற்றம்; கண்விடம்; இடைகொடி; மாற்றம் அமுது எனத் தலைமகளின் இலக்கணம் கூறினனென அறிக. ௧௧

இறைவனைத் தேற்றல்

*[பாங்கன் தலைவனை ஆற்றுவித்தல்]*

**56.** திருவே அனைய உருவமுஞ் செவ்வித் திருநகையும்
பொருவே லனைய விழிகளுங் கொண்டுன் புலனழிய
அருவே தனைசெய்த ஆவியன் னாரை அறிந்துவல்லே
வருவேன் வருந்துணை யும்வருந் தேலென் மழைவள்ளலே.

(கு - ரை.) திரு - திருமகள். செவ்வி - அழகு. புலன் - அறிவு. ஆவி அன்னாரை - உன் உயிரையொத்த தலைவியை. வல்லே - விரைவாக. மழைவள்ளல் - மழைபோல் வரையறையின்றிக் கொடுப்பவன். வள்ளலே! உருவம் முதலியவற்றைக்கொண்டு அழியச்செய்த ஆவியன்னாரை அறிந்துவருவேன்; வருந்தேல் எனக்கூட்டுக. ௧௨

பாங்கன் குறிவழிச்சேறல்

*[தலைவன் குறித்த இடத்திற்குப் பாங்கன் செல்லுதல்]*

**57.** சிலைக்கே பயிலுந் திருநெடுந் தோளண்ணல் செப்பியஅந்
நிலைக்கே தனிவந்து நிற்குங்கொல் லோவெங்கை நீள்களிற்றின்
கொலைக்கே புரிந்தவெங் கோடுங் குரும்பையும் போனெருங்கு
முலைக்கே பழிவைத் தழியுநுண் ணேரிடை மொய்க்குழலே.

(கு - ரை.) சிலைக்கே பயிலும் - வில்லொடு பழகும்; மூன்றாவ தன்கண் நான்காவது வந்த வேற்றுமை மயக்கம். அண்ணல் - தலைவன். நிலைக்கு - நிலையில்; வேற்றுமை மயக்கம்; நிலை - இடம். வெம்கை - வெவ்விய துதிக்கை. களிறு - ஆண் யானை. கொலைக்கு - கொலைசெய்தற்கு. புரிந்த - விரும்பிய. கோடு - யானைக்கொம்பு. குரும்பை - தென்னை, பனை இவற்றின் இளங்காய். கோடும் குரும்பையும் முலைக்குவமை. முலைப்பாரந்தாங்காது இடையழிந்ததென்று பலரும் தூற்றுவராதலின் முலைக்கே பழிவைத்து என்றார். நுண்ணிய இடையையும், நெருங்கிய கூந்தலையுமுடைய தலைவி நிலைக்கே தனிவந்து நிற்குங்கொல்லோ எனக்கூட்டுக. கொல் : அசை. ௧௩

தலைவன் பாங்கற்கிரங்கல்

*[குறியிடஞ்சென்ற பாங்கனை நினைத்துத் தலைவன் இரங்கிக் கூறுதல்]*

**58.** பாடுங் குலம்இன வண்டுக ளாகப் பளிக்கரங்கில்
ஆடுங் கலாப மயிலன்ன சாயலென் ஆரணங்கைத்
தேடுங்கொல் தேடித் திசையறி யாமல் திகைத்துநின்று
வாடுங்கொல் காணில் மதிக்குங்கொ லோவென்னை மன்னுயிரே.

(கு - ரை.) குலம், இனம் - கூட்டம். இனவண்டுகள் பாடும் இனமாக என மொழிமாற்றுக. பாடுதல் - மயிலின் ஆடலுக்கேற்பப் பாடுதலென்க. கலாபம் - தோகை. சாயல் - மென்மை; அழகுமாம். ஆரணங்கு - தலைவி. மதித்தலாவது : தலைவன் இவளைக் காதலித்தது தகுதியேயென்று கருதுதல். மன்னுயிர் - பாங்கன். மன்னுயிர் தேடுங்கொல்! வாடுங்கொல்! காணில், என்னை மதிக்குங்கொல்! எனக்கூட்டுக. ஓ : அசை. கொல் மூன்றும் ஐயப்பொருளன. கஅ

எய்திய பாங்கன் தெய்வம் வியத்தல்

*[குறியிடஞ்சென்ற பாங்கன் தனித்துநின்ற தலைவியைக்கண்டு, அவ்வாறு அவளை நிற்கச்செய்த ஊழ்வினையைப் புகழ்தல்]*

59. வைவைத்த வேலண்ணல் உள்நிறை வாரி மயலளித்த
நெய்வைத்த கூந்தல் நிரைவளை மானை நெடுங்கடல்போல்
கைவைத்த ஆயங் கடந்திங்ங னேவரக் காட்டியஅத்
தெய்வத்தை அல்லது வேறில்லை யேயென்றுஞ் சிந்திப்பதே.

(கு - ரை.) வை - கூர்மை. நிறை - மனத்தை நிறுத்தும் குணம். வாரி - அள்ளி. மயல் - காமமயக்கம். வளை - வளையல். மானை - மான்போன்ற தலைவியை. கைவைத்த ஆயம் - வரிசையாக உள்ள பாங்கியர் கூட்டம். தெய்வம் - ஊழ்வினை. சிந்திப்பது - நினைப்பது, தியானிப்பது. இதனுள் தலைவி இழிந்த மயலைக்கொடுத்து உயர்ந்த நிறையைக் கொண்டதாகக் கூறுவது மாற்றுநிலையணியாம். வாரி அளித்த மானை வரக்காட்டிய தெய்வத்தை அல்லது சிந்திப்பது வேறில்லை எனக்கூட்டுக. கரு

குறிவழிக்காண்டல்

*[பாங்கன் குறியிடத்துத் தலைவியைக் காணுதல்]*

60. நவரேகை அன்ன மருங்குலுஞ் செவ்வி நகைநிலவுங்
கவரே செயும்அரிக் கண்களுங் கொண்டவன் கல்விசெற்றார்
எவரே யெனநின் றிடைநெஞ்ச மேயெம்பி ரான்மொழிந்த
அவரே இவரும் அவையே இவையும் அவயவமே.

(கு - ரை.) நவம் ரேகை அன்னமருங்குல் - புதிய கீற்றை யொத்த நுண்ணிய இடை. செவ்விநகை நிலவும் - அழகிய பல்லின் ஒளியும். கவரே செய்யும் - கவர்த்த நோக்கங்களைச் செய்யும். அவை

யாவன :—பொதுநோக்கும் சிறப்புநோக்குமென வறிக. அரி - செவ்வரி. அவன் - தலைவன். செற்றார் - அழித்த தலைவி. இடை - வருந்தும். அவரே - அத்தலைவியே. அவையே - அவன் கூறிய அடையாளங்களே. கசு

பாங்கன் தலைவியை வியத்தல்

*[வியத்தல்—வியந்துகூறல்]*

61. முன்நாள் வருந்தி முழங்கும் பரவை வழங்கவந்த
பொன்ஆர் கமலமென் பூந்திரு வேயிவர் போந்திருந்த
இன்னுக வெற்பின் எதிர்ப்பட்ட காலையில் என்னுயிரை
அன்னு னிவருக்கு மாலாவ தும்மினி ஐயமின்றே.

(து - ரை.) பரவை - கடல். வழங்க - தர. பொன்ஆர் - அழகு நிறைந்த. திருவே : ஏகாரம் தேற்றப் பொருள் தந்தது. போந்திருந்த - வந்திருந்த. நாகவெற்பு : ஒருபொருட் பன்மொழி : மலையென்னும் பொருளன; திருமாலுக்குரிய வேங்கடமலையையும் குறிப்பால் உணர்த்திநின்றது. அன்னுன் - தலைவன். இவருக்கு - தலைவிக்கு. மாலாவதும் - காதல்கொள்வதும், திருமாலாவதும். தலைவி பூந்திருவாதலின் தலைவன் மாலாவதில் ஐயமின்று என நயம்படக் கூறினன். இஃது இரட்டுறமொழிதல் என்னும் அணி. 'இன்னுக' என்பதில் எதுகைநோக்கி றன்னகரம் இட்டு எழுதப்பெற்றது. கஎ

பாங்கன் இறைவனை வியத்தல்

62. மகரஞ் செறியும் மறிகடல் நீந்தி வடமலையின்
சிகரங் கடந்து வரியரி தாவுஞ் செறியிருள்கூர்
தகரஞ் செறிவனந் தள்ளியென் ஆவி தனிவந்தவா
பகருந் தகைமைய தோபெரி யோர்தம் பரிசுகளே.

(து - ரை.) மகரம் - மீன். மறிகடல் - அலைமடங்குங்கடல்; என்றது கண்களை. வடம் மலை - மாலையணியப்பெற்ற மலைபோன்ற முலை; மேருமலையென்னும் பொருளும் தோன்றுகிறது. வரிஅரி - வரிகளையுடைய வண்டு; கொடுவரி, சிங்கம் என்னும் பொருள்களும் தோன்றின; கொடுவரி - புலி; முதற்குறை. தகரம் செறிவனம் - மயிர்ச்சாந்து பூசப்பட்ட கூந்தலாகிய காடு என்றும், தகர மரங்கள் நெருங்கிய காடு என்றும் பொருள்படும்; தகரம் - மயிர்ச்சாந்து, தகர

மரம். தள்ளி - தாண்டி. ஆவியென்றது தலைவனை. பரிசு - உயர்ந்த பண்பு. தனிவந்தவா - நீரரண், மலையரண், காட்டரண் என்னும் மூன்றையும் கடந்து தலைவியைப்பிரிந்து தனித்துவந்தது மிகவும் அருமையுடைத் தென்றவாறு. என் ஆவி நீந்தி, கடந்து, தள்ளி, தனி வந்தவா எனக்கூட்டுக. 'பகரும்........பரிசுகளே' என்னும் பொதுப் பொருளால் தலைவன் தனித்துவருதலாகிய சிறப்புப்பொருளை முடித்தமையால் இது வேற்றுப்பொருள் வைப்பணி. பாவையன்னார், கூடுங் குவிமுலைக் குன்றும்கண் வேலையும் கூந்தல்நெடுங், காடும் கடந்துவந் தான்மிக வீரன்நங் காவலனே. (வெங்கைக்கோவை, ௫௭.)

### இகழ்ந்ததற் கிரங்கல்

*[தலைவியின் பேரழகைக்கண்ட பாங்கன், முன்பு தலைவனைத் தான் அறிவின்றி இகழ்ந்ததற்கு வருந்துதல்]*

**63.** பண்ணார் பணிமொழி வண்ணமுந் தண்நறும் பைங்குவளைக்
கண்ணால் அருள்செய்த காதலுங் காமக் கனல்கொளுந்திப்
புண்ணான நெஞ்சமுந் தஞ்சமில் லாதவன் வன்பொறையும்
எண்ணா தருவினை யேனிகழ்ந் தேனென் னிறைவனையே.

(கு - ரை.) பண்ஆர் பணிமொழி - இசைபோன்ற பணிவான சொல்லையுடைய தலைவி. வண்ணம் - அழகு. தண் - குளிர்ச்சி. தஞ்சம் இல்லாதவன் - பற்றுக்கோடில்லாத தலைவன். வன்பொறை - தலைவியைப் பிரிந்து ஆற்றியிருக்கும் அரியபொறுமை. (தலைவியின்) வண்ணமும், காதலும் (அரிதிற் பிரிந்துவந்த தலைவனுடைய) நெஞ்சமும், பொறையும் எண்ணாது இறைவனை இகழ்ந்தேன் எனக் கூட்டுக. ௬௩

(வே - ம்.) பனிமொழி; கொளுத்தி. இ - வி. ௧௫௫.

### தலைவன் தனக்குத் தலைவிநிலை கூறல்

*[தலைவி தனித்துநிற்றலைத் தலைவனுக்குப் பாங்கன் கூறுதல்]*

**64.** வாவிகண் டேன்மலர்ச் சோலைகண் டேன்மருங் கேமருங்கில்
பாவிகண் டேன்முலைப் பாரங்கண் டேன்பனி நீரரும்புங்
காவிகண் டேன்கண்ட நின்வழி யேதன் கருத்துவைத்த
ஆவிகண் டேன்கண்டி லேன்அண்ண லேநின் அறிவின்மையே.

(கு - ரை.) வாவி - குளம். மருங்கே - பக்கத்தே. மருங்குஇல்- இடையில்லாத. பாவியென்றான் தலைவியை; தலைவனை வருத்தினமை கருதி. காவி - கருங்குவளைபோன்ற கண். ஆவி - உயிர். அண்ணல்- பெருமையிற் சிறந்த தலைவன். 'நின் அறிவின்மை கண்டிலேன்' என்றது தலைவியைக் காணுமுன்பு தலைவனைத் தான் அவ்வாறு இழித் துரைத்ததை யெண்ணியென்க. (சஎ, சகூ.) ௨௦

## அவயவம் தோற்றல்

*[தலைவியின் உறுப்புக்கள் தலைவனுக்கு உருவெளித்தோற்றமாகக் காணப்படல்]*

**65.** வெயிலே விடுகுழை மேற்சென் றடரும் விழியிணைகள்
அயிலே மடமென் நடையன்ன மேயமு தூறுமின்சொற்
குயிலே தருநிறங் கோமள மேகுழற் சாமளமே
மயிலே மருங்குல்மின் னேமதி யேயவர் வாண்முகமே.

(கு - ரை.) வெயிலே விடுகுழை - ஒளிவிடுங்காதணி. அடரும்- நெருங்கும். விழியிணைகள் அயிலே, நடை அன்னமே, இன்சொல் குயிலே, நிறம் கோமளமே, குழல் சாமளமே, சாயல் மயிலே, மருங்குல் மின்னே, முகம் மதியே என்க. அயில் - வேல். அமுதூறும் - இனிமைமிகும். கோமளம் - அழகு. சாமளம் - நீலநிறம். சாயலால் மயிலேயென வருவித்துரைக்க. மருங்குல் - இடை. மதி - திங்கள். வாள் - ஒளிபொருந்திய. ௨௧

(வே - ம்.) மயிற் சாமளமே; பழம்பதிப்பு.

## தலைவன் குறிவழிச்சேறல்

*[பாங்கன் கூறிய குறியிடத்திற்குத் தலைவன் செல்லுதல்]*

**66.** ஊனொன் றியஇன் உயிரனை யாயுற்று நீவினவ
யானின் றுனக்கிங் கியம்பிய வண்ணம் இமையவர்கள்
வானின்று வந்த வரைநின்ற தோர்தெய்வ மென்ன அஞ்சித்
தானின்ற தோதனி யேயினி யான்சென்று சார்குவனே.

(கு - ரை.) ஊன் ஒன்றிய - உடம்போடியைந்த; ஊன் : கருவி யாகுபெயர். அனையாய் : பாங்கனைக் குறித்தவிளி. உற்று - என்னை வந்தடைந்து. இமையவர் - விண்ணவர். வான்நின்று - வானுலகத்தி லிருந்து; வான் : இடவாகுபெயர். வந்த தெய்வம் என இயைக்க.

வரைநின்றது ஓர் தெய்வம் என்ன - மலையிடத்தே நிற்கின்ற தெய்வ மகள் என்று சொல்லும்படியாக. வஞ்சி - தலைவி : உவமவாகுபெயர். உயிரனையாய் ! யான் இயம்பியவண்ணம் வஞ்சி தனியே நின்றதோ? (அங்ஙனமாயின்) இனி யான் சார்குவன் எனக்கூட்டுக. உஉ

தலைவன் குறிவழிக் காண்டல்

67. மறக்கும் பரிசறி யாவண்டல் ஆய மறந்துவந்து
சிறக்குங் கமலத் திருநின்ற வாசெங்கண் முத்தரும்ப
நிறக்கும் பசலையும் மேனியு மாய்நெஞ்சு நீடுயிர்ப்பும்
பிறக்கும் பெருநல மும்மட நாணும் பிறங்கவிட்டே.

(கு - ரை.) பரிசு - தன்மை. வண்டல் - மகளிர் விளையாட்டு. ஆயம் - தோழியர் கூட்டம். வண்டலையும் ஆயத்தையும் மறந்தென்க. நின்றவா : நின்றது அருமையுடைத்தென்றபடி. முத்து அரும்ப - முத்தையொத்த நீர்த்துளிதோன்ற. நிறக்கும் பசலை - நிறம் மிக்குத் தோன்றும் பசப்பு. 'பசலையும் மேனியுமாய்' என்றது 'நோயும் உடம்புமாய் இருக்கின்றான்' என்பதுபோன்ற ஒருலகவழக்கென உணர்க. பசலைபொருந்திய மேனி என்பது கருத்து. முத்தரும்பலும், பசலைதோன்றலும் தலைவனைப் பிரிந்த துன்பத்தால் நிகழ்ந்தன வென அறிக. நெஞ்சு நீடு உயிர்ப்பு - அகத்தே பொருந்திய பெரு மூச்சு. நலம் - அழகு. பிறங்கவிட்டு - தோன்றுமாறுசெய்து. திரு மறந்துவந்து பசலையும் மேனியுமாய் உயிர்ப்பும் நலமும் நாணும் பிறங்கவிட்டு நின்றவா எனக்கூட்டுக. உங

(வே-ம்.) நெஞ்சில்; நலனும்; பிணங்கவிட்டே. இ - வி. கஙங.

குறிப்பறிந்து கூறல்

*[தலைவன் தலைவியின் புணர்ச்சிக் குறிப்பை யறிந்து கூறுதல்]*

68. வண்டலை யும்பொன் மணியூ சலையும் மறந்துநறுந்
தண்டலை நீழல் தமியள்நின் றுளிடந் தாமரையோ
விண்டலை யோமலை யோவிசும் போஇன்றென் வேட்கைவெள்ளங்
கொண்டலை அன்னமென் பூங்குழல் மான்விழிக் கொத்ததுவே.

(கு - ரை.) வண்டல் - மகளிர் விளையாட்டு. பொன்மணி ஊசல் - பொன்னால் செய்யப்பட்ட அழகிய ஊஞ்சல். தண்டலை - சோலை. தமியள் - தனியளாக. நின்றாள் என்றது தலைவியை. விண்டு அலை - முகில் நீர் முகத்தலையுடைய கடல்; விண்டு - முகில்; அலை

சினையாகுபெயராய்க் கடலையுணர்த்திற்று. விசும்பு - வானம். தாமரை முதலியவற்றை இடமாகக்குறித்தது முறையே திருமகளோ, நீரர மகளோ, மலையரமகளோ, வானவமகளோ எனப் புகழ்ந்தபடி. வேட்கை - புணர்ச்சிவேட்கை. அன்னம் - தலைவி : உவமவாகுபெயர். மான்விழி - மான்போன்ற விழியையுடைய தலைவி : உவமைத் தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. அன்னமாகிய மான் விழியென்க. தமியள் நின்றுளாகிய மான்விழிக்கு ஒத்ததாகிய இடம் தாமரையோ, அலையோ, மலையோ, விசும்போ எனக்கூட்டுக. தலைவியை 'என் வேட்கை வெள்ளம் கொண்டு அலை அன்னம்' என்று தலைவன் கூறினுதலின், இது குறிப்பறிந்து கூறலாயிற்று.

### முகம்புகு கிளவி

[புணர்ச்சிக் குறிப்பினனுய்த் தலைவியின் முகத்தெதிர்புகும் தலைவன் கூறும் சொல்; கிளவி - சொல்; 'புகுமுகம் புரிதல்' என்ப தற்கு இளம்பூரணர் கூறும் உரையைநோக்குக. (தொல். பொ. 257)]

69. தேரோ திருவல்குல் மேனகை யோமலர்ச் செந்திருவோ
யாரோ இவரிங் கறியப் பெறுகிலம் ஆடகப்பொன்
வாரோ டிகலி வளர்கின்ற பார வனமுலைக்கு
நேரோ மருங்குலும் நெஞ்சமும் நாணும் நிறையுமின்றே.

(த - ரை.) தேரோ திருஅல்குல் மேனகையோ - தேர்த்தட்டினை யொத்த அழகிய அல்குலையுடைய மேனகையோ; தேர் அதன் தட்டிற் கானது முதலாகுபெயர்; ஓ, அசை; அல்குல் - ஒடுங்கிய இடைக்குக் கீழுள்ள அகன்ற உறுப்பு; பெண்குறியுமாம். ஆடகம்பொன் - ஒருவகைச் சிறந்தபொன். வாரோடு இகலி - கச்சோடு மாறுபட்டு. 'நேரோ மருங்குல்' என்றது இடை முலைப்பாரத்தைத் தாங்கவல்லதோ என்றபடி. 'நெஞ்சமும் நாணும் நிறையும் இன்றே' என்றது காதல் மிகுதியால் அவற்றை இழந்துநின்றமை கண்டென்க; நிறை - மனத் தைப் புலன்களின்வழி ஓடாது நிறுத்துங் குணம். உ௫

### புணர்ச்சியின் மகிழ்தல்

70. மெய்வாய்கண் மூக்குச் செவியென்னு நாமங்கள் மேவப்பெற்ற
ஐவா யினுநின் றருந்தின ரோஅருந் தானவர்முன்
உய்வான் மலைகொண் டொலிநீர்க் கடல்கடைந் தும்பரென்போல்
மைவா ரளக மடந்தைநின் போலு மருந்தினையே.

(து - ரை.) மேவப்பெற்ற - பொருந்தப்பெற்ற. ஐவாயினும் - ஐம்புலவழியாலும்; வாய் - வழி. அருந்தினரோ - நுகர்ந்தாரோ; இல்லையென்றபடி : ஓ : எதிர்மறை. தானவர்முன் - அவுணரின் முன்னிலையில். உய்வான் - உயிர்வாழும்பொருட்டு; வானீற்று வினையெச்சம். உம்பர் - வானவர். மைவார் அளகம் மடந்தை - கரிய நீண்ட கூந்தலையுடைய தலைவி; அண்மைவிளி. மருந்து - அமிழ்து. வானவர் தாமருந்திய மருந்தால் நாவின்பம் ஒன்றே யெய்தினர்; யான் நின்பால் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புல இன்பமும் அடைந்தேனென மகிழ்ந்தானென்க. மடந்தை! நின்போலும் மருந்தினை உம்பர் என்போல் ஐவாயினும் அருந்தினரோ எனக்கூட்டுக.

(வே - ம்.) ஒலிநீர்க்கடைந்த அன்றும்பர் என்போல். இ - வி. கஙங.

## பாங்கியோடு வருகெனப் பகர்தல்

*[தலைவன் தலைவியைநோக்கி 'இனி நீ யிங்கு வருங்கால் நின் உயிர்ப் பாங்கியொடு வருக' என்று கூறுதல்]*

71. முன்ஆவி வந்த முருகன்வை வேற்கண் முனைகவர்ந்த
என்ஆவி நல்கும் இதுநினை யேலின்று போலிவிய
நன்னாவி வாச நறுங்குழ லாய்வரில் நாளையிங்கு
நின்ஆவி யன்னவள் முன்னாக அன்றி நிலையலையே.

(து - ரை.) முன் ஆவிவந்த - முற்காலத்தில் சரவணப்பொய்கையில் தோன்றிய; ஆவி - குளம். முருகன் : வேலுக்கடை. வை - கூர்மை. என் ஆவி நல்கும் - என் உயிரைத் தாங்கும். இது நினையேல் - இவ்வாறு தனித்து வந்து நிற்றலை எண்ணற்க. நாவி வாசம் - கத்தூரிக்குழம்பின் மணம். ஆவி அன்னவள் - உயிர்ப்பாங்கி. முன்னாக அன்றி - தோழி முன்னே வர அவள் பின் நீ வருதலையன்றி. நிலையலை - தனித்துவந்து நில்லலற்க; எதிர்மறையில் வந்த முன்னிலை யொருமை வினைமுற்று. இன்றுபோல் இது நினையேல் என்றும், நறுங்குழலாய் நாளை இங்குவரில் ஆவியன்னவள் முன்னாக அன்றி நிலையலை என்றும் கூட்டுக. உள

(வே - ம்.) இதுநினைவேல்; நினையலையே.

### ஆயத்துய்த்தல்

*[தலைவன், தலைவியைத் தோழியர் கூட்டத்திற் செலுத்தல்]*

**72.** முற்றும் பழுதற்ற மொய்ம்முலை யாக முயங்கும்இன்பம்
பெற்றும் பெருத பெருநலந் தந்தனிர் பேரளிகள்
சுற்றும் பரிமளச் சோலையில் ஆயந் தொழவருவி
எற்றும் பனிவரைச் சீறூர் நலம்பெற எய்துகவே.

(கு - ரை.) மொய் - நெருங்கிய. ஆகம் - மார்பை. முயங்கும் - தழுவும். 'பெற்றும் பெருத பெருநலம்' என்றது தலைவி இப்பொழுது பிரிந்துவிடுதலைக்கருதி. தந்தனிர் - தந்தவராகிய நீர். பேரளிகள் - பெரிய வண்டுகள். ஆயம் - தோழியர்கூட்டம். எற்றும் பனிவரை - மோதிக்கொண்டுவிழும் குளிர்ந்த மலையின்கணுள்ள. எய்துக - சென்று சார்க. (நீர்) நலம்தந்தனிர்; (இனி) ஆயம்தொழச் சீறூர் எய்துக எனக்கூட்டுக. உஅ

### நீங்கற்கருமை சாற்றல்

*[தலைவன், தலைவியைப் பிரிதலின் அருமைப்பாட்டைக் கூறுதல்]*

**73.** நடைபோல் குறுகும் நலிவா ரிடைச்செல்லு நாண்நயனக்
கடைபோல் நெடுகுங் கழிபடர் கூர்தருங் காமர்வஞ்சி
இடைபோல் மெலிய இருவினை யேனையிங் கீடழித்துப்
புடைபோய் வளர்கள பத்தன மாகப் பொருப்பிடமே.

(கு - ரை.) முதல் இரண்டடி தனத்திற்கும் பொருப்பிடத்திற்கும் இரட்டுறமொழிதல். நடைபோல் குறுகும் - தலைவியின் குறுநடைபோல் பற்பல சிறு குன்றுகள் நெருங்கிக்கிடக்கும்; (முலைகள் இரண்டும் தம்முள் நெருங்கியிருக்கும்.) நலிவு ஆரிடைசெல்லும் - துன்பம்தரும் அரிய வழிகளைப் பொருந்தியிருக்கும்; (நலி வார் இடைச் செல்லும் - முலையின் கதிப்பை நலிவிக்கும் கச்சினைப் பெற்றிருக்கும். நலிவிக்கும் - அடக்கும்; வார் - கச்சு.) நாண் நயனக் கடைபோல் நெடுகும் - நாணத்தை வெளிப்படுத்தும் கண்ணின் கடைபோல் முலையும் பொருப்பிடமும் உயர்ந்திருக்கும். கழிபடர் கூர்தரும் - இரண்டும் மிக்க துன்பத்தை விளைவிக்கும்; படர் - துன்பம். காமர் வஞ்சி - அழகிய வஞ்சிக்கொடிபோன்ற தலைவியின்; கொடி போன்ற இடையெனினுமாம். இருவினையேனை - பெரிய தீவினையையுடைய என்னை. ஈடு - பெருமை. புடைபோய் - அடிபரந்து. களபம்

தனம் - கலவைச்சாந்து பூசப்பட்டமுலை. பொருப்பு இடம் - மலையிடம். தனம் துன்பம் செய்வதுபோன்று பொருப்பிடமும் வினையேனை மெலிய ஈடழித்துக்குறுகும்; செல்லும்; நெடுகும்; கூர்தரும் எனக்கூட்டுக. உகூ

(வே - ம்.) களிர்ப்டர்; பழையபதிப்பு.

பாங்கற் புகழ்தல்

*[தலைவியைக் கூட்டிவைத்த பாங்கனைத் தலைவன் புகழ்தல்]*

74. வாளா நமக்கு வழங்கிய தன்றிநம் வாட்டமுயிர்க்
கேளாகி வந்துபின் கேட்டது வோகண்டு கேட்டபின்னுந்
தாளால் வருந்தியும் நெஞ்சால் அழுங்கியுந் தாமுயன்று
கோளாக இன்நலங் கூட்டிய தோநங் குலதெய்வமே.

(து - ரை.) வாளா - நாம் எண்ணுத முன்னமே. வழங்கியது- தலைவியைத் தந்தது. வாட்டம் - நம் பிரிவுத்துன்பத்தை. கேள் - நண்பன். பின் - வழங்கியபின். வாட்டம் கேட்டது : சுடு. வருந்தியு மென்றது பாங்கன் குறியிடத்திற்கு நடந்துசென்றமையை, (நசு.) அழுங்குதல் - வருந்துதல்; அது தன்மனத்தழுங்கல், தலைவனோடழுங்கல் முதலியன; (நக, நஉ.) முயன்றுகோள் - முயற்சிசெய்தல்; இன்நலம் - இனிய கலவியின்பம். குலதெய்வம் - சிறந்த ஊழ்வினை. என்றது பாங்கனை; நன்றிபாராட்டுதலின் இவ்வாறு கூறினன். குலதெய்வம் வழங்கியதன்றிக் கேளாகிவந்து கேட்டதுவோ கூட்டியதோ எனக்கூட்டுக. ௩௦

பாங்கற்கூட்டம் முற்றும்.

## ரு. பாங்கி மதியுடன்பாடு

[பாங்கி, தலைவன் தலைவியர்க்குள்ள தொடர்பையறிந்து அதற்கு உடன்படுதல்.]

### அவ்வகை ஏழிலும் ஐயமுற்று ஓர்தல்

[(நாற்றம், தோற்றம், ஒழுக்கம், உண்டி, செய்வினை மறைப்பு, செலவு, பயில்வு) என்னும் அந்த ஏழுவகையினாலும் தலைவியை ஐய முற்றுப் பாங்கி ஆராய்தல்; ஓர்தல்-ஆராய்தல். நாற்றம்: தான் (பாங்கி) பண்டு பயின்றறியாததோர் நாற்றம். தோற்றம் : கூட்டத்தாற் பிறந்ததோரழகு. ஒழுக்கம்: தெய்வம் தொழாமை முதலியன. உண்டி : பண்டையிற் குறைந்த உண்டி. செய்வினை மறைத்தல் : தலைமகள் தான்செய்யும் தொழிலைப் பாங்கிக்கு மறைத்தல். செலவு: ஆயத்தை நீங்கித் தனியே பெயர்தல். பயில்வு : எப்பொழுதும் ஓரிடத்தே நிற்றல். நம்பி, கஙூ உரை.]

**75.** பூங்கேச மன்றல் புனையா எழில்வெண் புதுமதிகண்டு
ஆங்கே இகழ்தல் அருகிய வுண்டி யருஞ்செலவு
தீங்கேதங் காத்தல் ஒருவயி னேசென்று சென்றுநிற்றல்
தாங்கே வலமல்ல வந்ததென் னேவிந்தத் தையலுக்கே.

(கு - ரை.) கேசம் மன்றல் - கூந்தலின் நறுமணம்: நாற்றம். புனையா எழில் - கைசெய்யா இயற்கையழகின் மிகுதி: தோற்றம். புதுமதி - மூன்றும் பிறைத்திங்கள். மணமாகாப் பெண்கள் பிறையைத் தொழுதல் மரபு. இகழ்தல் - தொழாமை: ஒழுக்கம். அருகிய உண்டி - குறைந்த உணவு உண்ணல்: உண்டி. அருஞ்செலவு-ஆயத்தையும் விளையாட்டையும் மறந்து தனியே செல்லுதல்: செலவு. தீங்கு ஏதம் காத்தல் - தலைவி தான்செய்யும் தீமையைத்தரும் குற்றம் பொருந்திய செயல்களைப் பாங்கிக்குத் தெரியாது மறைத்தல்; ஏதம் - குற்றம்: செய்வினை மறைப்பு. ஒருவயினே - ஓரிடத்திலேயே. சென்று சென்று என்னும் அடுக்கு, பன்மை குறித்தது. நிற்றலென்றது பயில்வினை. நாற்றம் முதலிய ஏழும் இச்செய்யுளில் வந்தவாறு காண்க. கேவலம் அல்ல - பராமுகம் செய்யத்தக்கவை

யல்ல, கலப்பற்றதன்மையுடையனவல்ல எனலுமாம். எனவே இவள் பால் ஏதோ மாறுபாடுளது என்றாராயிற்று. கேவலம் - கலப்பற்ற தன்மை. தையல் - தலைவி. மன்றல் முதலியவை கேவலமல்ல, (ஆகவே) தையலுக்கு வந்தது என் ? எனக் கூட்டுக. இத்துறையின் பெயர் அச்சிட்ட இருபதிப்புக்களிலும் 'அவ்வகை எழிலும்' என்றே காணப்படுகிறது. இஃது எடெழுதுவோரால் நேர்ந்த பிழையை உண்மைப்பாடம் எனக்கருதி அச்சிட்டனர்போலும். இலக்கண விளக்கத்துள் நாற்றம் முதலிய எழானும் ஐயமுற்றோர்தலுக்கு இச் செய்யுளை மேற்கோளாக ஆண்டிருப்பதனாலும், 'இவ்வகை யேழினும் ஐயமுற்றோர்தலும்' என்று அகப்பொருள் விளக்கத்துள் (க௱௯) வருதலானும், இச்செய்யுளில் அவ்வேழும் முறையே கூறியிருத்தலானும் யாம் 'எழிலும்' என்றே பாடங்கொண்டாம். க

(வே - ம்.) அவ்வகை எழிலும்; தீங்கேகரத்தல் ஒருவயினே என்றும் சென்று.

ஐயம் கரந்து தையலை வினுதல்

*[பாங்கி தன் ஐயத்தை மறைத்து நின் வேறுபாட்டிற்குக் காரணம் யாதெனத் தலைவியைக் கேட்டல்]*

**76.** தழங்கும் அருவியுந் தாம்பணி ஊசலுங் கந்துகமுங்
கழங்கும் பெரிதுநின் றுடினை யோகளி மாமயில்கள்
வழங்குங் கரிய வரிக்குயி லோடு வரவழைத்தோ
பழங்கண் பசலை புரிந்துபைங் கோதை பரிவுற்றதே.

(து - ரை.) தழங்கும் - ஒலிக்கும். தாம்பு அணி - கயிற்றால் கட்டப்பட்ட. கந்துகம் - பந்து. கழங்கு - கழங்காடல் என்னும் மகளிர் விளையாட்டினொன்று. மயில்களைக் குயில்களோடு வரவழைத்தோ என்க. வரிக்குயில் - இசைபாடுங்குயில்; வரி - இசை. பழங்கண் பசலை புரிந்து - துன்பந்தரும் பசப்புநோய் மிக்கு; பழங்கண் - துன்பம்; பசலை - பிரிவுத்துன்பத்தால் நேர்ந்த நிறவேறுபாடு. பைங் கோதை - பசுமையான மாலையையணிந்த தலைவியே! அண்மைவிளி. பரிவுற்றது - (நீ) துன்புற்றதற்குக்காரணம். பைங்கோதை! (நீ) பசலைபுரிந்து பரிவுற்றது ஆடினையோ? வரவழைத்தோ? எனக் கூட்டுக. உ

### கரந்துறைகிளவி

*[தலைவி, ஐயுற்று வினவிய பாங்கிக்கு உண்மையை மறைத்துப் பொய்க்காரணம் கூறுதல்; கரந்துறைகிளவி - மறைத்துரைத்தல்]*

**77.** கோடிய தண்பிறை தோய்குன்ற மீதுபைங் கொண்டலன்ன
நீடிய பைங்குழல் நேரிழை யாய்நென்னல் நின்னையொழிந்து
ஆடிய பூஞ்சுனை வாயினி தாக வழித்தவண்ணம்
வாடிய தன்றி வருந்திய காரணம் மற்றில்லையே.

(கு - ரை.) கோடிய தண்பிறை - வளைந்த குளிர்ச்சிபொருந்திய பிறை. பைங்கொண்டல் - கருமுகில். நேரிழை - தலைவி : விளி. நென்னல் - நேற்று. ஆடிய - குளித்த. வழித்தவண்ணம் - செய்யப்பட்ட அழகு. வாடியது அன்றி - கலைந்தது; அதனால் வருந்தியது போல் காணப்படுகிறதன்றி. அழித்தவண்ணம் எனப்பிரித்து அழிக்கப்பட்டவண்ணத்தால் வாடியதன்றிப் பிறகாரணம் இல்லையெனப் பொருளுரைப்பினும் அமையும். இத்துறை சுனைநயப்புரைத்தல் என்றுங் கூறப்படும். ௩

(வே - ம்.) கோடுயர்; கொன்றையென்ன; பூங்குழல்; உன்னை; அளிமூசி அளித்தவண்ணம். இ - வி. கஉ௩.

### ஆடிய சுனையின் அணிநலம் வியத்தல்

*[தலைவி நீராடிய சுனையின் அழகிய நலத்தைப் பாங்கி வியந்து கூறல்]*

**78.** நீலம் பவளம் படரப் பவள நிறந்தரளக்
கோலம் புனைய நுதற்குறு வேர்வெழக் கோமளமே
போலுந் திருநிறம் பொன்னிற மாகஇப் பூஞ்சுனைநீர்
ஏலங் கமழ்குழ லாய்கிடை யாதுகொல் எங்களுக்கே.

(கு - ரை.) நீலம்-நீல மலரையொத்த கண். பவளம் படர - செந்நிறமடைய. பவளநிறம் - வாயிதழின் செந்நிறம். தரளம் கோலம் புனைய - முத்தின் வெண்ணிற அழகைப் பொருந்த. நுதல் குறுவேர்வு எழ - நெற்றியின்கண் சிறிய வியர்வைத் துளிகள் தோன்ற. கோமளமே போலும் திருநிறம் - அழகிய செந்நிறம். பொன்னிறமாதல் - பிரிவுத் துன்பத்தால் பசந்து நிற்றல். கருங்கண் சிவத்தலும், செவ்வாய் விளர்த்தலும், வியர்வையெழலும் புணர்தல் நீராடல் இரண்டாலும் ஒப்பநிகழ்வன. பொன்னிறமாதல்; பிரிவாலும், நீராடலாலும் தோன்றுவது. ஏலம் - மயிர்ச்சாந்து. குழலாய்! எங்களுக்கு இப்பூஞ்சுனைநீர் கிடையாது கொல் எனக்கூட்டுக. ௪

பிறைதொழ கென்றல்

*[பிறையைக் கைகூப்பி வணங்குகவென்று பாங்கி தலைவிக்குக் கூறுதல்]*

79. மருமாந் தளிர்புரை வண்ணமுஞ் செவ்வி வடிவுங்கண்டு
திருமான் பணிமலர்ச் சீறடி யாய்தொழு செங்கண்நவ்வி
ஒருமான் கரத்தும் ஒருமான் புடையும் உடையஎங்கள்
பெருமான் சடையொக்கு மேசெக்கர் வானும் பிறையும் இன்றே.

(கு - ரை.) மரு - வாசனை. தளிர் புரை வண்ணம் - தளிரை யொத்த நிறம். செவ்வி - அழகு. திருமான் - திருமகளாகிய மான் போன்றவள்; அவள் பணிதல் தலைவியின் அழகுக்குத் தோற்று. சீறடி - சிறிய அடி. தொழு - வணங்குவாயாக; ஆய்விகுதி குறைந்த ஏவல்வினை முற்று. ஒரு நவ்விமான் என மொழிமாற்றுக; இருபெய ரொட்டுப் பண்புத்தொகை. ஒருமான் என்றது உமையவளை. புடை - இடப்பக்கம். பெருமான் - சிவபெருமான். செக்கர்வான் - செவ் வானம். செஞ்சடை செவ்வானத்திற்கும், அதிலுள்ள பிறை வானத் தில் தோன்றிய பிறைக்கும் உவமையாமென்க. கணவனை மணந்த கற்புடைமங்கை அவனையன்றிப் பிற கடவுளரை வணங்காளாதலின், தலைவி தோழியின் கூற்றுக்கிணங்காது பிறையை வணங்காளாம். ஆகவே தோழி தலைவிக்குக் கூட்டமுண்மையை உணர்வாளென்க. இச்செய்யுளில் 'மான்' என்னுஞ்சொல் பலவிடத்தும் வந்திருத்த லின் இது சொற்பின் வருநிலையணியாம். சீறடியாய்! வானும் பிறை யும் சடை யொக்கும் (ஆதலின் அப்பிறையைத்) தொழு எனக் கூட்டுக. கு

தகையணங் குறுத்தல்

*[தோழி தலைவியின் அழகின் மிகுதியால் அவளைக் கடவுட் பெண்டென வலியுறுத்திக் கூறல்; தகை—அழகு; அணங்கு—கடவுட்பெண்டு]*

80. கைவால் வளைகறங் கக்கழங் காடியென் காதல்வஞ்சி
மைவாவி அந்தண் மலர்கொய்யச் சென்றனள் வண்பவளச்
செவ்வாய் வெளுப்புங் கருங்கட் சிவப்பு நுதல்வியர்ப்பும்
ஒவ்வா தொழிந்தவெல் லாம்அணங் கேநின்னை ஒக்குமின்றே.

(கு - ரை.) கை வால் வளை கறங்க - கையிலணிந்துள்ள வெள் ளிய வளையல்கள் ஒலிக்க. கழங்காடல் - மகளிர் விளையாட்டி

ஞென்று; அஃது எழங்காய் ஆடல் என இக்காலத்து வழங்கப்படும். வஞ்சி - தலைவி: உவமவாகு பெயர். மை வாவி—கரிய குளம்; நீர் முகத்தற்காக மேகம் படிந்துள்ள குளம் எனலுமாம். அம் தண்மலர் - அழகிய குளிர்ந்தபூ. வண்மை - அழகு. நுதல்-நெற்றி. நின்னிடம் காணப்படும் வெளுப்பும் சிவப்பும் வியர்ப்புமே ஒவ்வா; பிற இலக்கணங்களெல்லாம் ஒத்திருக்கின்றன வென்றாள் தோழி; இவை தலைவிக்குக் கூட்டத்தாற் பிறந்த குறியாதலின். ஒவ்வாது: ஒருமைப் பன்மை மயக்கம். தோழி, தன்னைக் கடவுட்பெண்டாக வைத்து இவ்வாறு கூறுதலைக் கேட்ட தலைவி நாணுவாளாம்; அதனைக் கண்ட தோழி அவளுடைய கூட்டமுண்மையை அறிவாளென்க. ‘குவளை சிவத்துக் குமுதம் வெளுத்த குறையல்லவேல், அவளை மறைத்துன்னைக் காட்டலுமாம்.........இவளை வரக்கண்டு நீய ணங்கே பின் எழுந்தருளே’ தஞ்சை. கூஎ, எஎ, எஅ-எகூ ஆம் செய் யுட்கள் நாண நாட்டம் ஆகும். (நாண நாட்டம் - தலைவி நாணுமாறு தோழி பொய்ம்மொழி புகன்று ஆராய்தல்.) கூ

## நடுங்க நாட்டம்

*[தோழி, தலைவனுக்கு இக்கட்டு நேர்ந்ததாகப் பொய்கூறி, அதனால் தலைவி நடுங்குதலைக் கண்டு கூட்டமுண் மையை ஆராய்தல்]*

**81.** மருவிய செங்கதிர் ஒன்றினை வாங்கி வகிர்ந்துமுகஞ்
செருகிய திண்கிரி செல்வது போலுந் தினையிருவிக்
குருவி யினங்கண் மகளிர்பந் தாடிய கொள்கையொப்ப
வெருவி யெழுந்து விழுங்குளிர் சாரலில் வேழமொன்றே.

(த - ரை.) செங்கதிர் - ஞாயிறு; கதிரென்னும் படையுமாம். வாங்கி - கைப்பற்றி. வகிர்ந்து - இரண்டாகப்பிளந்து. தினை இருவி- தினைத்தாளின்கண். வெருவி - அஞ்சி. வேழம் - யானை. யானைக்கு மலையும், அதனுடைய வளைந்து சிவந்த கோட்டிற்குச் செங்கதிரின் வகிரும் உவமையெனக்கொள்க. சாரலில் (செல்லும்) வேழமொன்று திண்கிரி செல்வதுபோலும் எனக்கூட்டுக. இவ்வாறு தோழி கூறுதலைக்கேட்ட தலைவி, ‘இச்சாரலின்கண் அடிக்கடி வருவான் நந்தலைவனேயன்றோ; அவனைக் குத்தியே இவ்யானையின்கோடு சிவந்தனவாங்கொல்’ என்றெண்ணி நடுங்குவாளாம். அந்நடுக்கத்தைக் கண்ட தோழி கூட்டமுண்மையை அறிவாளென்க. எ

### பிரிவுழிக் கலங்கல்

*[தலைவன், தலைவி பிரிந்தவிடத்துக் கலங்குதல்]*

**82.** தனியே யிடந்தலைப் பட்டும்என் ஆருயிர் தந்தஅந்தண்
பனியேர் நறுமலர்ப் பாவையை மேவிநம் பாரநெஞ்சே
இனியேது சென்றெய்தும் ஆறென்று நீநின் றிரங்கலென்னே
கனியே யிதழ்வஞ்சி கண்சொன்ன வாருயிர் கண்டுவந்தே.

(து - ரை.) இடம் தலைப்பட்டும் - இயற்கைப்புணர்ச்சி நிகழ்ந்த இடத்திற் கூடியும். அம் தண்பனி ஏர் நறுமலர்-அழகினையும், மிக்க குளிர்ச்சியையும், எழிலையுமுடைய நறுமணமிக்க தாமரைமலர்; அதன் கட்பாவை என்றது திருமகளை; ஈண்டு உவமவாகுபெயராய்த் தலைவியை உணர்த்திற்று. அவளையே நினைந்து நிற்றலின் நெஞ்சு பாரமாயிற்று. கனியேய் இதழ்வஞ்சி - கொவ்வைக் கனியையொத்த இதழையுடைய தலைவி. அவள் பார்வைக்குறிப்பால் உணர்ந்தமையின் 'வஞ்சி கண்சொன்ன' என்றான். இதனை, ௨௧-ஆம் செய்யுளால் உணர்க. வாயின் தொழிலாகிய சொல்லுதலைக் கண்ணிற் கேற்றியது இலக்கணை. 'பகைமையும் கேண்மையும் கண் உரைக்கும்' -குறள், என்பதிற்போல. ஆருயிர் - அரிய உயிர்ப்பாங்கி. நெஞ்சே, ஆருயிர் கண்டு உவந்தும் பாவையை எய்துமாறு ஏது என்று நீ இரங்கல் என்னோ எனக்கூட்டுக. உவந்தே - உவந்தும் : உம்மை தொக்கு ஏகாரம் விரிந்தது. அ

### பாங்கியை இரவு வலியுறுத்தல்

*[தலைவன் பாங்கியைக் குறையிரக்கத் துணிதல்; இரவு—இரத்தல்]*

**83.** குளிக்குஞ் சுனையினுங் கொய்மலர்க் காவினுங் குன்றுநின்று
விளிக்குஞ் சிலம்பினும் வெண்மணற் சோற்றினும் வேரியந்தேன்
துளிக்கும் பனிமலர்க் கொம்பைவி டாதஅத் தோகையைஇன்று
அளிக்குந் தனிநெஞ்ச மேயினி நாம்சென் றடைகுவமே.

(து - ரை.) கா - சோலை. குன்று நின்று விளிக்கும் சிலம்பினும் - ஒரு குன்றில் நின்று எதிரிலுள்ள மற்றொரு மலையை யழைக்கும் விளையாட்டினும்; இது 'வரையெதிர் கூவல்' என்னும் குறிஞ்சி நிலப்பெண்கள் விளையாட்டு; 'குன்றம் அழைக்கக் குயிலழையா நிற்பர்'—கடு. என முன்னர் வந்திருத்தலையும் காண்க. 'விளிக்கும் சிலம்பினும்' என்பதைச் 'சிலம்பை விளித்தலினும்' என மொழி

மாற்றுக. சோற்றினும் என்றது, மணற்சோறு சமைத்து விளையாடும் விளையாட்டிடத்தும் என்றபடி. வேரி - மணம்பொருந்திய. பனி - குளிர்ச்சி. கொம்பு - தலைவி. தோகை யென்றது தோழியை. மலர்க் கொம்பை விடாத மயிலென்னும் பொருளுந்தோன்றி நயம் விளைத்தல் காண்க. அளிக்கும் தனிநெஞ்சமே - அன்பு செய்யத்தகும் ஒப்பற்ற என் நெஞ்சமே! இன்று நாம் சென்று தோகையை அடைகுவம் எனக்கூட்டுக. கூ

புனங்கண்டு மகிழ்தல்

*[தலைவி காக்கின்ற தினைப்புனத்தினைக்கண்டு தலைவன் மகிழ்தல்]*

84. உவரும் புலவும் ஒழிக்குங் கழிப்புன்னை ஒண்மலர்த்தாது
இவருந் துறையன்ன மென்னடை யாரித ணேறமுல்லைப்
பவருங் கறியும் படர்கொழுஞ் சாரல் பசுந்தினையைக்
கவருங் கிளியினுக் கின்றுகை மாறென்றுங் கண்டிலமே.

(கு - ரை.) உவர் - உப்பு. புலவு - புலால் நாற்றம் (மீன் முதலியவற்றின் நாற்றம்). தாது இவரும் - பூந்துகள் பரந்த. துறை அன்னம் மெல்நடையார் - நீர்த்துறையின்கணுள்ள அன்னநடை போன்ற மெல்லிய நடையினையுடைய தலைவி. இதண் - பரண்; இது புனங்காப்போர் மேலிடத்திருந்து காத்தற்காக இடப்படுவது. பவர் - கொடி. கறி - மிளகுக்கொடி. கைமாறு - பதிலுதவி. கிளி தினை கவர்தலில்லையாயின் தலைவி புனங்காத்தலும், தலைவன் குறையிரத்தலும் நேராதாகலின் இவ்வாறு கூறினான் என்க. நடையார் ஏறக் கவரும் கிளியினுக்குக் கைம்மாறு கண்டிலம் எனக்கூட்டுக. கo

(வே - ம்.) பவரும் கொடியும். இ - வி. கஙடு.

ஊரும் பெயரும் தாரையும் வினுதல்

*[தாரை—வழி]*

85. உரைக்கும் பெயரும் உறையும் பதியும்எம் ஊர்க்கும்உங்கள்
வரைக்குப் பெயரும் வழியுஞ்சொல் லீர்மணி வாய்திறக்கில்
விரைக்குங் குமுத மலரிற்செந் தேனை விரும்பிவண்டு
நிரைக்குஞ் சுரிகுழ லீருரு மோரமணி நித்திலமே.

(கு - ரை.) பெயர் - பாங்கியின் பெயர். பதி - ஊர். பெயரும் - செல்லும். விரைக்கும் குமுதமலர் - மணம்வீசும் அல்லிமலர். இம் மலர் கூந்தலின்கண் உள்ளவை. நிரைக்கும் - வரிசையாகப் பொருந்

தும். சுரிகுழலீர் - நுனிசுருண்ட கூந்தலையுடையவரே. உகுமோ- சிந்துமோ. மணிநித்திலம் - அழகிய முத்து; மணியும் முத்தும் எனலுமாம். 'வாய் திறந்தால் வாய்முத்துச் சிந்திவிடுமோ' என்பது உலகவழக்கு. 'சரதம் உடையர் மணிவாய்திறக்கில் சலக்கென்பவே' என்பது திருக்கோவையார்—௫௭. விரைக்கும், நிரைக்கும் என்பன விரை, நிரை என்னும் பெயர்ப்பகுதியின் அடியாகப்பிறந்த பெயரெச்சவினை. குழலீர்! பெயரும், பதியும், வழியும் சொல்லீர் (என்றவன் அவள் வாய்திறவாமை கண்டு) திறக்கில் மணிநித்திலம் உகுமோ ? என்றானென்க. ௧௧

### மான்கேடு வினுதல்

*[தலைவன், தன்வேட்டையில் தப்பிய மான் அங்கு வந்ததோ என்று பாங்கியை வினுதல்; கேடு—தப்பிப்போதல்]*

**86.** விண்போய் வளரின வேங்கையுங் காந்தளும் பூங்குவளைத்
தண்போ துடன்கமழ் தண்ணறுஞ் சாரலில் தங்குமுங்கள்
கண்போல் பிணையுங் கலையுமிங் கேவரக் கண்டதுண்டோ
பண்போன் மொழிகொண்டு பைங்கிளி யோடு பகைத்தவரே.

(து - ரை.) விண்போய் - விண்ணளவும் உயர்ந்து. வேங்கை- வேங்கைமரம். தண்போது - குளிர்ந்தபோது; போது என்றது மலரும் பருவத்துமுகையை. உடன்கமழ் - சேர மணக்கின்ற. நறுஞ் சாரல் - நன்மணமிக்க மலைச்சாரல். பிணை - பெண்மான். கலை - ஆண் மான். பண் - இசை. பைங்கிளி - பச்சைக்கிளி. கிளியோடு பகைத் தல் குரலொடு மாறுகொண்டென்க. பகைத்தவரே! பிணையும் கலையும் சாரலில் வரக்கண்டதுண்டோ ? எனக்கூட்டுக. 'கண்போல் பிணையும் கலையும்' என்றது விபரீதவுவமை. 'அம்பு முகம்கிழித்த வெம் புண்வாய, கலைமான் போந்தன வுளவோநும், மடமான் நோக்கம் மரீஇயின் படர்ந்தே' களவியல்—௯௦. மேற்கோள். ௧௨

### யாரே இவர்மனத்தேண்ணம் யாதேனத் தேர்தல்

*[பாங்கி, தலைவனை இவர் யார்? இவர் மனக்கருத்து யாது? எனத் தனக்குள் ஆராய்தல்]*

**87.** ஈங்கா ரிவர்நினை வேதென் றறிந்திலம் எப்படியுந்
தாங்கா ரியமுள்ள தன்மையர் போல்வர் தனையவிழும்
பூங்கார் அனைய புரிகுழல் காவற் புனத்தைவிட்டு
நீங்கார் அணுகல்செய் யார்நின்று நோவர் நெடிதுயிர்த்தே.

(கு - ரை.) தாம் என்றது தலைவனை. தளை அவிழும் பூ - முறுக்கவிழ்ந்த பூவையணிந்த; கார்அனைய-முகிலையொத்த; புரிகுழல்-பின்னிய கூந்தலையுடைய தலைவியால் காக்கப்படும்; காவல்புனத்தை-காவலையுடைய இத்தினைப் புனத்தை. நெடிது உயிர்த்து-பெருமூச்சு விட்டு. இவர் ஆர்? ஏது? என்று அறிந்திலம்; போல்வர்; நீங்கார்; செய்யார்; உயிர்த்துநோவர் எனக்கூட்டுக. ௧௫

### எண்ணம் தேர்தல்

*[பாங்கி, தலைவன் எண்ணம் யாதென மேலும் தனக்குள் ஆராய்தல்]*

**88.** கடமலை என்பர் கலைஎன்பர் மானென்பர் கன்னிகொங்கை
வடமலை தாங்க மருங்குலெங் கேயென்பர் வாளருவித்
தடமலை மேலுங்கள் சீறூர் எதுவென்பர் தாரையென்பர்
அடமலை வேலவர் எண்ணமென் னேவிங் கறிகிலமே.

(கு - ரை.) கடமலை என்பர் - தலைவர், 'கடமலை வந்ததோ' என வினவுவர்; பிறவற்றிற்கும் இவ்வாறே பொருள் கொள்க. கடம் மலை-மதம்பொருந்திய மலையாகிய யானை. கலை - மான்வகையுளொன்று. கொங்கையாகிய வடமலையென்க. வடமலை - மேருமலை; வடமணியப் பெற்ற மலையெனலுமாம்; வடம் - மாலை. மருங்குல் - இடை; நுட்பத்தால் இடை கட்புலனாகாமையின் 'எங்கே' என்றான். வாள் - வெண்மை. தடம் - பெரிய. தாரை - வழி. அடமலை வேலவர் - (பகைவரைக்) கொல்லும்பொருட்டுப் பொருகின்ற வேலையுடைய தலைவர். பிறமலைகட்கில்லாத கடத்தையும், வடத்தையும் இம்மலைகட்கேற்றிக் கடமலை, வடமலை என்றது சிறப்புருவகமாகும். 'வரையாது நும்பதி யாதுநும் பேர்என்பர் வார்துளிக்கார், புரையானை அம்பொடு போந்ததுண் டோஎன்பர் பூங்கொடியீர், உரையாத தென் என்ப ரால்என் கொலோஇவர் உட்கொண்டதே'—தஞ்சை: ௭௪.

### இதுவுமது

**89.** புனத்தே வருவர்நல் லோர்குறை போலப் புகலவென்று
மனத்தே யெழும்சொல்ல மாட்டார் வருந்துவர் வண்டமைகொண்டு
இனத்தே பிரிந்த கலைவின வாநிற்பர் ஈங்கிவர்தாம்
நினைத்தே யுழல்கின்ற தென்னறி யேனென்று நேரிழையே.

(கு - ரை.) புனம் - தினைப்புனம். நல்லோர் தங்குறையைப் பிறர்க்குக் கூறவும் நாணுவாராகலின் 'நல்லோர் குறைபோல......

வருந்துவர்' என்றாள். 'என்பாய் உகினும் இயல்பிலார் பின்சென்று, தம்பா டுரைப்பரோ தம்முடையார்'—நாலடியார்: உ௬உ. 'தளர்வொடு மெலிந்தும் வையம் தனிக்குடை நிழற்றும் பைம்பொன், கிளரொளிப் பூணன் வீமன் பாவையைக்கேட்டல் செய்யான், அளியென உயிரை உண்மை யறத்தினை யறவிட்டாலும், இளிவென எண்ணி மானம் பூண்டவர் இரப்பர் கொல்லோ'—நைடதம், அன்னத்தைக் கண்ணுற்ற படலம்: கஅ. என்னும் செய்யுட்களும் இக்கருத்தை வலியுறுத்தல் காண்க. வண்தழை - தலைவிக்கு அளிக்கும்பொருட்டுக் கொண்டுபோந்த வளவிய பூந்தழையுடை. இனத்தே பிரிந்த கலை வினவாநிற்பர் - தன் இனத்தினின்றும் பிரிந்துவந்த கலைமான் ஈண்டுப்போந்ததோ எனக்கேட்பர். உழல்கின்றது - அலைந்து திரிகின்றது. நேரிழையே : பாங்கி தலைவியை விளித்தவிளி. நேரிழையே! வருவர்; வினவாநிற்பர்; சொல்லமாட்டாராய் வருந்துவர் (ஆதலின்) இவர் உழல்கின்றது ஒன்றும் அறியேன் எனக்கூட்டுக. க௫

## தெளிதல்

**[தலைவியை அடையும்பொருட்டே தலைவன் இவ்வாறு உழல்கின்றான் என்று பாங்கி தெளிதல்]**

**90.** **தேருங் கருங்கலை பொய்யுழை பொய்மழைச் செங்குருதி**
**வாருங் கடமலை பொய்வழி பொய்நம் வளமலையில்**
**சாரும் புதியவர் வேட்டையெல் லாமித் தளிரியலார்**
**பேரும் பதியும் மருங்குலும் ஆனது பின்புவந்தே.**

(து - ரை.) தேரும் - தேடும். கலை, உழை : மானின் வகைகள். மழைச்செங்குருதி வாரும் கடம்மலை - மழைபோலச் செந்நீர் ஒழுகப் பெற்ற மதம்பொருந்திய மலைபோன்ற யானை. புதியவர் - தலைவர். தளிர் இயலார் - தளிர்போன்ற மென்மைத் தன்மைவாய்ந்த தலைவி. மருங்குல் - இடை. தலைவன், முதலில் யானை முதலியவற்றை வேட்டையாடிவந்ததாகக்கூறிப் பின் பேரையும் பதியையும் மருங்குலையும் வினவினமையால் இவன் எண்ணம் தலைவியின்கண்ணதே யெனப் பாங்கி தெளிந்தாளென்க. 'ஆழமன் னோவுடைத் திவ்வையர் வார்த்தை......வேழமுன் னைக்கலை யாய்ப்பிற வாய்ப்பின்னும் மென்றழையாய், மாழைமென் னோக்கி யிடையாய்க் கழிந்தது வந்துவந்தே. திருக்கோவையார் : ௬௧. க௬

### கையுறை ஏந்திவந் தவ்வகை வினாதல்

*[தலைவன் தழையுடன்வந்து முன்போன்று 'யானைவந்ததோ' என வினவல்; கையுறை—கையின்கணுள்ள தழை]*

**91.** சாந்தகிற் போதுந் தழையுந் தருகுவன் சாற்றும்வென்றி
வீந்ததுப் போடொரு வேழங் கணைபட்டு வெண்தரளஞ்
சேந்ததுப் போதுமென் செவ்வாய் முறுவல் திருந்திழையீர்
போந்ததிப் போதிங்கு வந்ததுண் டோநும் புனத்திடையே.

(கு - ரை.) சாந்து - சந்தனமரம். போது - மலரும் பருவத்து முகை. சாந்தின்போதும் தழையும், அகிலின்போதும் தழையும் ஆகிய இவற்றைத் தருகுவன் என்றான் என்க; அன்றிச் சாந்தும், அகிலும், போதும், தழையும் தருகுவன் என்றான் எனலுமாம். சாற்றும்-சொல்லும்; முன்னிலை ஏவல் பன்மை வினைமுற்று. துப்பு வீந்த தோடு என உருபு பிரித்துக்கூட்டுக. வென்றி துப்பு வீந்ததோடு ஒரு வேழம் - வெற்றியும் வலிமையும் இழந்ததாகிய ஒரு யானை. கணை - அம்பு. கணை பட்டமையால் அவற்றை இழந்து நின்றது. 'வெண் தரளம்சேந்த துப்பு ஓது மென்செவ்வாய் முறுவல்' என்றது எதிர் நிரனிறை: தரளம் ஓது முறுவல் (முத்தென்று சொல்லத்தக்க பல்; தரளம் - முத்து; முறுவல் - பல்.) என்றும், துப்பு ஓது செவ்வாய் (பவழமென்று சொல்லத்தக்க சிவந்த வாய்; துப்பு - பவழம்.) என்றும் இயையும். சேந்த - சிவந்த. திருந்திழையீர் - திருத்தமான அணிகலன்களையுடையீர். முறுவலையுடைய திருந்திழையீர் என்க. போந்தது - வந்தது. திருந்திழையீர், தருகுவன்; வேழம் கணைபட்டு இப்போது போந்தது இங்கு நும்புனத்திடையே வந்ததுண்டோ? சாற்றும் எனக்கூட்டுக. கள

### எதிர்மொழி கொடுத்தல்

*[தலைவன் வினவியவற்றிற்குப் பாங்கி விடையளித்தல்]*

**92.** உடுக்குங் கலையன்றி ஈங்கொரு நாளும் ஒருவர்வந்து
கெடுக்குங் கலைகண் டறிகிலம் யாங்கிளர் வானுலகை
அடுக்குங் கலைமதி துஞ்சும்அஞ் சாரல் அருவிவெற்பா
தொடுக்குங் கலையிலி வேறுமுண் டாயினுஞ் சொல்லுகவே.

(கு - ரை.) உடுக்கும் கலை - ஆடை. கெடுக்கும் கலை - தப்பியோடிய கலைமான். அடுக்கும் - பொருந்தும். கலைமதி - பதினாறு

கலைகளையுடைய முழுமதி; கலையென்றது ஈண்டுத் திங்களின் பங்கினை. துஞ்சும் - தங்கும். வெற்பா - வெற்பையுடைய தலைவனே; வெற்பு - மலை. அடுக்கும், துஞ்சும் வெற்பு; சாரலையும் அருவியையுமுடைய வெற்பு எனக்கூட்டுக. தொடுக்கும் கலை - தொடுத்துக் கூறும் சொற்கலை; என்றது இல்லாதனவற்றைக் கட்டிக்கூறும் கட்டுரையை. நீ கற்ற கல்வியை யெல்லாம் இன்னமும் உண்டேல் எம்மிடம் காட்டுக என்றாள்; அவன் கூறுவன பொய்யென் றறிந்தமையின். வெற்பா! அன்றி அறிகிலம்; சொல்லுக எனக்கூட்டுக. இச்செய்யுளில் 'கலை' என்னும் சொல் பொருள் வேறுபட்டுப் பன்முறை வந்திருத்தலின் இது சொற்பின் வருநிலையணியாம். கஅ

(வே - ம்.) அருகு வெற்பா. இ - வி. கஙு.

இறைவனை நகுதல்

*[பாங்கி தலைவனை நகைத்து உரைத்தல்]*

**93.** மின்னே தழைகொண்டு வேழம்எய் தாரந்த வேழம்வந்து
பின்னே பிணைபிரி யுங்கலை யானது பேசிலின்னங்
கொன்னே புகழுங் குறுமுய லாகவுங் கூடுங்கொல்லோ
என்னே உலகில் இவரையொப் பாரில்லை ஏவினுக்கே.

(து - ரை.) மின்னே : பாங்கி தலைவியை விளித்தது. தழைகொண்டு வேழம் எய்தார் என்றது குறிப்புமொழி; அது கூடாதென்றபடி; வேழம் - யானை. எல்லோரும் அம்புகொண்டெய்ய இவர் தழைகொண்டெய்த வியப்பிருந்தபடி என்னே! என எள்ளியவாறு. வந்து: உரையசை. பிணை பிரியும் கலை - பெண்மானைப் பிரிந்த ஆண் மான். கொன்னே - வீணுக. கொல்லோ என்பதில் கொல் : அசை. ஓ, ஐயப்பொருட்டு. என்னே : வியப்பிடைச்சொல். ஏவினுக்கு - அம்பெய்யும் தொழிலுக்கு; ஏ - அம்பு. யானை யொன்றையே வினவாது மானையும் உடன் வினவினமையால், 'வேழம் கலையானது; இன்னம் முயலாகவும் கூடுமோ' என்றும், கையில் தழைகொண்டே வேழமெய்ததாக விளம்பினமையின் 'ஏவினுக்கு இவரையொப்பார் இல்லை' என்றும் பாங்கி தலைவனை எள்ளிநகையாடியவாறு காண்க. 'மைவாள் இலங்குகண் மங்கைநல் லாய்தஞ்சை வாணன்வெற்பில், இவ்வாளி மொய்ம்பர்இன் றெய்தமெய்ம் மான்இள மாந்தளிரின், செவ்வாளி யுங்கொண்டு சேண்சென்ற தால்அன்று சீதைகொண்கன்,

கைவா ளியுங்கொண்டு போனபொய்ம் மானினும் கள்ளத்ததே'—தஞ்சை: எக. கக

(வே - ம்.) இணைபிரியும் பிணையானது; உகளுங்குறுமுயல்.

மதியின் அவரவர் மனக்கருத்து உணர்தல்

*[தலைவன் தலைவியரின் மனக்கருத்துக்களைப் பாங்கி தன் ஆராய்ச்சி யறிவால் அறிந்துகொள்ளுதல்]*

**94.** உள்ளங் களிப்ப விழியிணை யாலொரு வர்க்கொருவர்
கொள்ளுங் குறையொரு கோடிசொல் லாநிற்பர் கூர்வளைவாய்ப்
புள்ளின் றவமுடி யப்புன மேயிவள் காத்ததுவுந்
துள்ளுங் கருங்கலை யேயவர் நாடத் துணிந்ததுமே.

(கு - ரை.) விழி இணையால் - இருகண்களாலும். 'விழியிணையால் சொல்லாநிற்பர்' என்றாள், கண்ணொடு கண்ணிணை நோக்கு ஒக்கின் வாய்ச்சொற்கள், என்ன பயனும் இல'—குறள்: கக00. என்பவாகலின். கூர்வளைவாய்ப் புள் - கிளி; 'புள்' என்னும் பறவைப் பொதுப்பெயர் 'கூர்வளைவாய்' என்னும் அடைமொழியால் கிளி என்னும் சிறப்புப்பொருளை உணர்த்திற்று. புள் (வாராவண்ணம்) இன்று முடிய (இன்றுமுடிய - இன்றைப்பகல் முற்றும்) இவள் காத்ததுவும் புனமே அவர் நாடத்துணிந்ததும் கலையே (அல்ல; இவ்விரண்டும்) அவம் எனக்கூட்டுக. கலை - மான். நாட - தேட. புனமே, கலையே என்பனவற்றிலுள்ள ஏகாரங்கள் எதிர்மறையை யுணர்த்தின; இவளும் புனங்காத்தாளல்லள்; அவரும் கலை நாடினரல்லர் என்பது கருத்து. அவம் - (அவ்வாறு இவர்கள் கூறுவன) வெற்றுரையென்றபடி. இனி, 'புள்ளின் தவம் முடிய' எனப்பிரித்து 'இவள் காத்ததாக வாயளவில் கூறுவதும் புனமே; அவர் துணிந்ததாக அவ்வாறு உரைப்பதும் கலையே எனினும் உண்மையில் இவர்கள் மேற்கொண்டுள்ளது விழியிணையால் ஒருவர்க்கொருவர் குறை சொல்லா நிற்றலே' என்றும் பொருள் கூறலாம். இவ்வுரைக்கு ஏகாரம் இரண்டும் தேற்றப்பொருளன. புள்ளின் தவம் முடிதலாவது :—தலைவியின் நாட்டம் தலைவனை நாடியிருத்தலின் புள் இடையூறின்றிப் புனத்தின்கட்புகுந்து வயிறுரத் தினைக்கதிரை யுண்ணுதலாம். முடிதல் : முற்றுதல், பயன்தருதல். உ0

(வே - ம்.) துணிந்ததுவே.

பாங்கி மதியுடன்பாடு முற்றும்.

# கூ. பாங்கியிற் கூட்டம்

[தலைவன், தலைவியைப் பாங்கியாற்கூடும் கூட்டம்]

### முன்னிலை யாக்கல்

***[தலைவன், தலைவியையும், பாங்கியையும் முன்னிலையாக்கிக் கூறுதல்;
முன்னிலையாக்கல்—விளித்துரைத்தல்]***

**95.** தழைக்கின்ற சந்தனத் தண்ணறுஞ் சாரல் தவழுங்கொண்டல்
மழைக்குன்ற வாணர் மடவிய ரேநும் மழைக்கண்களால்
உழைக்கன் றையுமொழி யாலொரு கோடிபைங் கிள்ளையையும்
அழைக்கின்ற உங்களை யோபுனங் காவல ராக்குவதே.

(கு - ரை.) *சந்தனம்-சந்தனமரம். சாரல்-சாரலில். கொண்டல் மழை குன்றம் வாணர் - முகில் மழைபெய்தலையுடைய குன்றத்தின் கண் வாழ்வாராகிய குறவர்; வாழ்நர் எனற்பாலது வாணரென மருவிற்று. அவருடைய 'மடவியரே' என்றது தலைவியையும், பாங்கியையும். மழைக்கண் - குளிர்ந்த கண். உழைக்கன்று - மான்கன்று. மொழியால் - சொல்லால். பைங்கிள்ளை - பச்சைக்கிளி. மானையும் கிளியையும் அழைத்தலாவது கண்ணின் மருட்சியாலும், மொழியின் இன்னொலியாலும் அவை தம் இனமெனக்கருதி நெருங்குதலாம். அவை புனத்தை அழித்துவிடுமன்றே, அங்ஙனமாதற்கோ நும்மைக் காவலராக்கினர்? இது தகாது என்றானென்க.* க

(வே - ம்.) மலர்க்கண்களால்; காவலும். இ - வி. கடு.

### அவற்றுத் தோழி கூறல்

***[மானும் கிளியுமன்றி யானையும் உண்டென்று
பாங்கி தலைவனுக்குக் கூறுதல்]***

**96.** ஆக்குஞ் செயலலென் அழியிலென் னேனல் அரியபகல்
காக்குந் தொழிலெம்மைக் கற்பித்தல் காணவர் கங்குலுநாண்
வீக்குஞ் சிலையில் இருங்கணை கோத்து வெகுண்டுமனந்
தூக்குங் களிறு துரப்பரென் னீரினிச் சொல்வதுவே.

(கு - ரை.) *'ஆக்கும் செயல் என்' என்றது, முந்திய பாட்டில் 'உங்களையோ புனம் காவலர் ஆக்குவதே' என்று தலைவன் கூறியதைப் பழித்தென்க. 'ஏனல் அழியிலென்' என்றது, குறவர் தாமே காக்க*

வல்லவர், ஆயினும் எம்மைக் கற்பித்தல்வேண்டிப் பகற்காலத்தில் காவலராக்கினர் என்பதாம். ஏனல் - தினை. காண் : முன்னிலையசை. அவர் - அக்குறவர். கங்குலும் - இராப்பொழுதிலும். நாண் வீக்கும் சிலையில் - நாணேற்றிய வில்லில். கணை - அம்பு. தூக்கும் களிறு - உயர்ச்சிபொருந்தும் யானை; தூக்கு - உயர்ச்சி. தூங்கும் என்பது தூக்கும் என வலித்தல் விகாரம் பெற்றதாகக்கொண்டு அசையுங்களிறு எனப் பொருளுரைக்கினும் பொருந்தும்; தூங்குதல்- அசைதல். துரப்பர் - வெருட்டியோட்டுவர். குறவர் கருத்துணராது கூறுகின்றீர் எனத் தலைவன் கூறியதைத் தோழி இகழ்ந்தவாறு. உ

### உட்கோள் சாற்றல்

***[தலைவன் தன் உள்ளத்திற்கொண்ட காதலைத் தோழிக்குச் சொல்லுதல்; உட்கோள்—உள்ளத்திற்கொண்ட காதல்]***

**97.** பொருகுன் றனைய புணர்முலை யீர்நும் புனங்குறித்து
வருகுஞ் சரங்கெட வெஞ்சரங் கோத்தெய்வன் மானும்உச்சி
திருகுங் கவைநெடுந் திண்கோட் டிரலையுஞ் செந்தினையின்
அருகுஞ் செறியவொட் டேன்அணு காம லகலநின்றே.

(து - ரை.) பொருகுன்று - இணைந்த குன்று. புணர்முலை - நெருங்கிய முலை. குஞ்சரம் - யானை. வெம்சரம் - வெவ்விய அம்பை. உச்சிதிருகும் கவை நெடு திண்கோடு இரலையும் - தலை உச்சியின்கண் முறுக்குண்டு கிளைகளாகப்பொருந்திய நீண்ட திண்ணிய கொம்பையுடைய இரலைமானும்; இரலை - கலைமான்; மான்வகையுளொன்று. அருகும் செறிய ஒட்டேன் - பக்கத்திலும் நெருங்க விடேன். அணுகாமல் அகலநின்று - உங்களை அணுகாமல் தூரநின்று. யான் (உங்களை) அணுகாமல் அகலநின்று குஞ்சரம் கெட எய்வன்; மானையும் இரலையையும் செறியவொட்டேன்; (ஆதலின் என்னை உங்கள் குற்றேவல்செய்ய ஏற்றுக்கொள்ளுங்கள்) எனத் தலைவன் தன் உள்ளக்காதலை உணர்த்தினனென்க. ௩

### தோழிக்குத் தலைவன் கூறல்

**98.** இருளும் புயலும் முயலுந் தவமிய லாதழுங்கச்
சுருளுங் கருங்குழல் தோகையன் னீர்சொரி தேன்பருகி
மருளுஞ் சுரும்பொடு வண்டறை பூந்தழை கொண்டுவந்தேற்கு
அருளுங்கள் நெஞ்சிற் பிறப்பதென் னாளின் றறிகிலனே.

(து - ரை.) இருளும் புயலும் முயலும் தவம் இயலாது அழுங்க- கரியமுகிலானது தான் முயன்று செய்யும் தவத்தாலும் (கூந்தலின் கருமையைப்பெற) முடியாது வருந்துதற்குரிய அத்தகைய கருமை பொருந்திய, நுனிசுருண்ட கூந்தலையுடைய தோகையன்னீர் என இயைக்க. புயலும் : உம்மை உயர்வு சிறப்பும்மை; புயல் - முகில். அழுங்க - வருந்த. குழல் - கூந்தல். தோகை - மயில்; தலைவிக்கு உவமை. சொரிதேன் - தலைவன் கையிலுள்ள பூந்தழை சொரிந்த தேன். மருள் - மயக்கம்; தேனைப் பருகினமையால் ஏற்பட்டது. சுரும்பு - வண்டின் வகையுள் ஒன்று. அறை-ஒலிக்கின்ற. வந்தேற்கு- வந்த எனக்கு. நெஞ்சில் அருள் பிறப்பது எந்நாள்? என இயைக்க.

### தலமுறை கிளத்தல்

*[தலைவன் குலத்தின் மேன்மையையும், தங்கள் குலத்தின் கீழ்மையை யும் பாங்கி தலைவனுக்குக் கூறுதல்]*

**99.** தாரூர் குழலிக்கு மாமலை நாடு தனித்திகிரித்
தேரூர் சிலம்பில் சிறுகுடி யூர்நின் திருநகர்நன்
னீரூர் கழனியும் நெல்லுங் கரும்பும் நெருங்குமந்தண்
பேரூர் பெரும்புனல் நாடுநின் னாடெம் பெருந்தகையே.

(து - ரை.) தார் ஊர் குழலிக்கு - மாலையையணிந்த கூந்தலை யுடைய தலைவிக்கு. தனித்திகிரித்தேர் ஊர்சிலம்பில் - ஒற்றைச் சக்கரத்தையுடைய (கதிரவனது) தேர் தவழ்ந்து செல்லுகின்ற (வானளவும் உயர்ந்தோங்கிய) மலையில் (உள்ள) சிறுகுடி என இயைக்க. நீர் ஊர் - நீர் பரந்த. அம் தண் பேரூர் - அழகிய குளிர்ந்த பெரிய ஊர். புனல்நாடு - நீர்வளம்பொருந்திய மருத நிலமிக்க நாடு. தலைவியின் நாடு மலைநாடு; ஊர் சிறுகுடி (சிற்றூர்); நின் திருநகர் பேரூர்; நாடு புனல்நாடு; இவ்வாறு பெருமைமிக்க மருதநிலத்து ஊரையுடைய நீ மலைக்குறவர் மகளிராகிய எங்களுக்குக் குற்றேவல் செய்தல் கூடாதெனப் பாங்கி, தலைவன் கூறியதை (கூள) மறுத் துரைத்தாளென்க. ௫

### தலைவன் தலைவியை வியத்தல்

*[வியத்தல்—புகழ்ந்துகூறல்]*

**100.** வானக முற்ற வரையக நாடன் மடந்தையென்றே
பானகை மென்மொழிப் பாவைசொன் னய்பணி வெண்டரளத்
தூநகை யின்னகைத் தோகையன் னாளைச் சுரருலகின்
மேனகை யென்றுகொண் டேநினை யாநிற்கு மென்னெஞ்சமே.

(து - ரை.) வானகம் உற்ற வரையகம் நாடன் மடந்தை - விண்ணை முட்டும் மலைநாட்டையுடைய குறவன் மகள். பால் நகை - வெள்ளிய பல். பாவையென்றது பாங்கியை; பாவை : அண்மைவிளி. பணி வெண்தரளம் தூநகை இன்னகை தோகை அன்னாளை - சங்கீன்ற வெண்முத்தையொத்த தூய பல்லையும், இனிய சிரிப்பையும் உடைய மயில்போன்ற தலைவியை; பணி - சங்கு. நகை : முன்னது பல்; பின்னது சிரிப்பு. சுரர் உலகின் - விண்ணவர் உலகத்திலுள்ள. பாவை! தோகையன்னாளை வரையகநாடன் மடந்தையென்றே சொன்னாய்; என் நெஞ்சம் (அவளை) மேனகையென்றே நினையாநிற்கும் எனக்கூட்டுக. சு

## பாங்கி அறியாள்போன்று வினாதல்

***[தலைவன் விரும்பிய மங்கையை இன்னாளென்று அறியாள்போன்று பாங்கி அவனை வினாதல்]***

**101.** **வளையார் முளரி வருந்தமைக் காவியை வாவிகொய்துஞ்**
**சுனையார் பலவிருஞ் சோலையி லாடியுந் தோகையினம்**
**விளையாடல் கண்டும் விருந்தய ராநின்ற வேல்நெடுங்கண்**
**இளையார் இவரிடை யார்கண்ண தோகண் இறைவனுக்கே.**

(து - ரை.) வளை ஆர் முளரி வருந்த - வளையலை அணியப் பெற்ற தாமரைமலராகிய கைகள் வருந்த. வாவி மைக்காவியை - குளத்திலுள்ள கருங்குவளை மலரை. வளையார் முளரியென்றது சிறப்புருவகம். பலவு இரு சோலை - பலாமரங்களையுடைய பெரிய சோலை. ஆடியும் - விளையாடியும். தோகை இனம் - மயிற்கூட்டம். விருந்து அயர்தல் - விருந்துசெய்தல். செல்விருந்தோம்பி வருவிருந்து பார்க்கும் வளமனைத்தக்காராதற்குச் சிறுவீடுகட்டி விளையாடும் பருவத்திலிருந்தே பழகுகின்றாரென்க. இளையார் இவரிடை - இளமகளிராகிய இவர்களில். இறைவனுக்குக்கண் யார்கண்ணது - தலைவனாகிய நினக்கு நாட்டம் யாரிடத்துச் சென்றுள்ளது? கூறுக; யான் அறிந்திலேன். கண் - நாட்டம், கருத்து. எ

## அறியக்கூறல்

**102.** **பண்ணார் மொழிமென் பவளச்செவ் வாய்முலை பைங்குரும்பை**
**விண்ணார் மதிமுகம் வேயிரு தோள்விரி நீருலகில்**
**பெண்ணார் அமுதன்ன பெய்வளை மொய்குழல் பேதைக்குநீ**
**கண்ணா குவைநினக் கங்குயி ராவள் கனங்குழையே.**

(கு - ரை.) பண் ஆர் மொழி - இசையையொத்த சொல்; ஆர் : உவமவுருபு. பைங்குரும்பை - பசுமையான தென்னையின் இளங் காய். விண் ஆர் - வானத்தின்கண் பொருந்திய. வேய் - மூங்கில். விரிநீர் உலகில் - பரந்த நீரையுடைய கடலாற் சூழப்பட்ட உலகத் தில்; விரிநீர் - கடல். பெண் ஆர் அமுது அன்ன - பெண்களுக்குள் அரிய அமுதம்போன்றவளான. பெய்வளை மொய்குழல் பேதைக்கு- இடப்பட்ட வளையலையும், நெருங்கிய கூந்தலையுமுடைய தலைவிக்கு. கனங்குழை - கனமான குண்டலத்தையணிந்த தலைவி. பேதைக்குப் பண் மொழி; பவளம் வாய்; குரும்பை முலை; மதி முகம்; வேய் தோள்; (இவையேயன்றி அவட்கு) நீ கண்ணுகுவை; அக்கனங்குழை நினக்கு உயிராவள் என்று தலைவியை அறியக் கூறினனென்க. அ

இறைவி தன்மை இயம்பல்

*[தலைவனால் அறியக் கூறப்பட்ட தலைவியின் அருமைத்தன்மையைப் பாங்கி தலைவற்கு உரைத்தல்; இறைவி—தலைவி]*

**103.** சீறுங் களிற்றினந் தேறலுந் தேறலுஞ் சிந்தையுநீ
மாறும் படிமெய் வருந்திய தாயினும் மாமழைவந்து
ஏறுங் குலவெற்ப யாரும் பிறரும் எதிர்நின்றன்ன
கூறுந் தகைமைய தோகுன்ற வாணர் குலதெய்வமே.

(கு - ரை.) சீறும் களிறு இனம் - சீற்றமிக்க யானையினத்தை. தேறலும் - நம்புதலும். நீ சிந்தையும் தேறலும் - (என்னால் தலைவி யைப் பெறலாகுமென்று) நீ மனம் தெளிதலும் (ஆகிய இரண்டும் ஒருதன்மையனவே) என முடிக்குஞ்சொல் வருவித்துரைக்க. சிந்தையும்; உம் : இறந்தது தழீஇய எச்சவும்மை. 'யானை அறிந் தறிந்தும் பாகனையே கொல்வ' (நாலடி: உகரு.) தாகலின், அதனை நம்பினோர் விரைவில் அந்நம்பிக்கையை இழத்தல்போல என்னால் தலைவியை எய்தலாகுமென்று நீ கொண்ட மனத்தெளிவையும் விரைவில் இழக்கக்கடவை என்பது கருத்து. மாறும்படி - அடை யாளம் மாறுபடும்படி இளைத்து. மெய் - உடம்பு. மாமழை - கரிய முகில். குலம் வெற்ப - சிறந்த மலையையுடைய தலைவனே. பிறரும் - மற்ற பாங்கியரும். எதிர்நின்று - தலைவியின் எதிர்நின்று. அன்ன - நீ உரைக்கும் சொற்கள். குன்ற வாணர் : கூடு ஆம் பாட்டின் குறிப் புரையைப் பார்க்க. குலதெய்வம் என்றது தலைவியை; இதனால் அவள் அருமைப்பாட்டை விளக்கினளாயிற்று. நீ மாறும்படி மெய்

வருந்தியதாயினும் குன்றவாணருடைய குலதெய்வத்தின் எதிர்நின்று அன்ன கூறும் தகைமையதோ எனக்கூட்டுக. 'அன்ன தகைமையதோ' என்பது ஒருமைப் பன்மை மயக்கம். கூ

இன்றியமையாமை கூறல்

*[தலைவன், தலைவியின் துணையின்றித் தான் உயிர்வாழ முடியாத் தன்மையைக் கூறுதல்]*

**104.** சினத்துறை வாங்கிய திண்பிறை அம்பிற் சிலைக்குறவர்
இனத்துறை பூங்கொடி என்றல்ல வேயிசை ஏழுமந்தண்
புனத்துறை கிள்ளையும் பூவையும் போன்மொழிப் பொற்றொடியென்
மனத்துறை தெய்வமென் றேயென தாருயிர் வாழ்கின்றதே.

(கு - ரை.) சினத்து உறை வாங்கிய - கோபத்தினாலே உறையினின்றும் எடுத்த, திண் பிறை அம்பு - பிறைவடிவமாகச் செய்யப்பட்ட வலிய பிறைவாயம்பு. உறை - அம்பறாத்தூணி. சிலைக் குறவர் இனத்து உறை பூங்கொடி - வில்லையுடைய குறவர் இனத்தில் வசிக்கின்ற பூங்கொடிபோன்ற பெண். இசை ஏழாவன: குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன. கிள்ளை - கிளி. பூவை - நாகணவாய்ப்புள்; இக்காலத்தார் 'மைனு' என வழங்குவர். மொழிக்கு இசையையும், கிளியையும், பூவையையும் உவமை கூறியது பலபொருளுவமையணி. பொற்றொடி - பொன்னாலாகிய வளையலையணிந்த தலைவி. தெய்வம் என்று - தெய்வம் என்று நினைப்பதனால். பொற்றொடியைப் பூங்கொடி என்றல்ல தெய்வமென்றே எனதாருயிர் வாழ்கின்றதெனக் கூட்டுக. இனிப் பொற்றொடி என்பதைத் தலைவன் பாங்கியை விளித்ததாகக்கொண்டு 'தலைவியை' என்னும் ஒரு சொல்லை வருவித்துப் பொருளுரைத்தலுமாகும். கO

நின்குறை நீயே கூறென்றல்

*[பாங்கி தலைவனை நோக்கி, 'நின் காரியத்தை நீயே தலைவியிடம் சென்று கூறுக' என்றல்]*

**105.** மின்குறை கூற மெலியுநுண் ணேரிடை மெல்லியலுக்கு
என்குறை கூறவும் யானஞ்சு வேலிகல் மாமதனன்
தன்குறை தீர்த்தருள் உன்திரு மேனி தளாநின்ற
நின்குறை கூறுக நீயே அலங்கல் நெடுந்தகையே.

(கு - ரை.) இடையின் நுண்மையையும் ஒளியையும் கண்டோர்க்கு மின்னல் அத்துணைச் சிறந்து தோன்றாமையின் அது குறை கூறப்பட்டதென்க; குறை - குற்றம். நுண் ஏர் இடை - நுட்பமான அழகிய இடை. மெல்லியலுக்கு - தலைவிக்கு. குறை - காரியம். 'இடிக்கும் கேளிர் நும்குறையாக' என்னும் குறுந்தொகை (ருஉ)யினும் இச்சொல் இப்பொருளில் வந்திருத்தல் காண்க. இகல் மா மதனன் - வன்மைமிக்க சிறந்த மன்மதன்; அவன்தன் குறை யாவது: வடிவமின்மை; அதனைத் தீர்த்தலாவது: இத்தலைவனுடைய அழகைக் கண்டோர் அனைவரும் வடிவுகொண்ட காமனேயென்று மயங்கியுரைத்தலாம். அலங்கல் - மாலையணிந்த. நெடுந்தகையே! மெல்லியலுக்கு என்குறை கூறவும் யான் அஞ்சுவேன்; (ஆதலின்) நின்குறை(யை) நீயே கூறுக எனக் கூட்டியுரைக்க. கக

பாங்கியைத் தலைவன் பழித்தல்

***[தோழியைத் தலைவன் உன் கருத்து நன்றன்றெனப் பழித்துரைத்தல்]***

**106.** பொற்பிணை யாமடப் பூவைமென் பாவை புருவமென்னும்
விற்பிணை யார்விழி மெல்லியல் ஆகம் விரும்பியுன்தன்
சொற்பிணை யாகத் துயர்க்கடல் நீந்தத் துணிந்ததுவன்
கற்புணை யாகமுந் நீர்கடப் பார்தங் கருத்தொக்குமே.

(கு - ரை.) பொன் பிணையாம் மடப்பூவை - அழகிய பெண் மானையொத்த இளமைபொருந்திய பூவை. பூவை: கoசு-ஆம் செய்யுட்குறிப்புரையைப் பார்க்க. பாவை - பதுமை. பிணை ஆர்விழி - மான்போன்ற கண். புருவவில் - புருவமாகிய வில்: உருவகம். புருவவில்லையும், பிணைவிழியையும் உடைய மெல்லியல்; பூவையும் பாவையும் போன்ற மெல்லியலாகிய தலைவியென்க. ஆகம் விரும்பி - மெய்யைத் தழுவ விரும்பி. புணை - தெப்பம். வன் கல் புணையாக - வலிய கனமிக்க கல்லைத் தெப்பமாகக்கொண்டு. முந்நீர் - கடல். கடப்பார் - கடக்கக் கருதுவார். விரும்பி நீந்தத் துணிந்த கருத்தொக்குமென்க. 'விளையாப் பயிருக் கெருப்போட்டு நீர்விட்டு வேலிகட்டித், தளையாக்கி நொந்தவர் தன்மையன்றோ........வளையால் சிறந்தகை யாய்உனை யான்நம்பி வந்ததுவே?' ஆரூர்க் கோவை: 108. கஉ

## பாங்கி பேதைமை ஊட்டல்

*[பாங்கி, தலைவியின்மேல் அறியாமையை ஏற்றித் தலைவனுக்குக் கூறுதல்]*

**107.** செறியா தவருறு சிந்தையெண் ணாள்சிந்தை யிற்சிறிதும்
அறியாள் எனுமதற் கையமுண் டோஅடுங் கூற்றையென் றுங்
குறியா விலங்கு துலங்கயில் வாளி குறியிற்பட்டு
மறியா விழவளைக் குஞ்சிலை வாணர் மடமகளே.

(து - ரை.) செறியாதவர் உறசிந்தை -(தன்னுடன்) நெருங்கிப் பழகாதவர் உற்ற துன்பத்தை. சிந்தையில் - மனத்தில்; சிந்தையில் சிறிதும் எண்ணாளென்க. அறியாள்எனும் - (பிறருற்ற வேட்கை நோயை) அறியாதவள் என்று சொல்லும். அடும் கூற்றை - கொல்லும் கூற்றுவனை. குறியா - அழையா: செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம். கூற்றைக் குறித்தலாவது: தானே இறப்பைத் தேடிக்கொள்ளல்; 'கூற்றத்தைக் கையால் விளித்தற்றால்' குறள்: ௮௯௪. என்றதூஉங் காண்க. துலங்கு அயில் வாளி - ஒளி செய்யும் கூரிய அம்பு. மறியா விழ - மடங்கி (இறந்து) விழும்படியாக. சிலைவாணர்-விற்றொழிலையே வாழ்க்கையாகக் கொண்ட குறவர். விலங்கு குறியா பட்டு விழ வளைக்கும் வாணருடைய மடமகள் எண்ணாள்; (மேலும் அவளை) அறியாள் எனும் அதற்கும் ஐயமுண்டோ எனக் கூட்டுக.

## தலைவன் முதறிவுடைமை மொழிதல்

*[தலைவி முதிர்ந்த அறிவுடையளாதலைத் தலைவன் பாங்கிக்கு உரைத்தல்]*

**108.** தன்னால் வருந்திய நெஞ்சமும் நாணுமோர் தஞ்சமற்ற
இன்னா அரும்பிணிக் கின்மருந் தாக இணைவிழியால்
அந்நாளில் உன்னை அறிவித்த மானுக் கறிவின்மைநீ
சொன்னால் இயையுங்கொல் லோதுடி நேரிடைத் தூமொழியே.

(து - ரை.) தன்னால் - தலைவியால். தஞ்சம் அற்ற - பற்றுக்கோடற்ற. இன்னா அரும்பிணிக்கு - துன்பம்தரும் அரிய காம நோயைப் போக்கிக்கொள்வதற்கு. நெஞ்சமும் நாணும் உற்ற அரும்பிணிக்கென்க. மானுக்கு - தலைவிக்கு. தலைவி அறிவித்தமையை - ௨௨ ஆம் செய்யுளிற் காண்க. அறிவின்மை - பேதைமை

உண்டென்று கூறினல். இயையும் கொல்லோ - தகுமோ; கொல்: அசை. துடி நேர் இடை தூ மொழியே - உடுக்கையையொத்த இடுப்பையும், தூய சொல்லையுமுடைய பாங்கியே! மானுக்கு நீ அறிவின்மை சொன்னல் இயையுமோ? எனக் கூட்டுக. ௧௪

### பாங்கி முன்னுறு புணர்ச்சிமுறையுறக் கூறல்

*[தோழி தலைவனை நோக்கி, 'முன்பு நீ கூடியவாறு பின்னும் கூடுக' என்று கூறுதல்]*

**109.** உறுந்தாரை என்னெடு சாற்றுவ தென்கொலின் றுன்னைமுன்னே
அறிந்தாரை எய்தற் கருமையுண் டோஅடை யார்மடியச்
செறுந்தாரை வேல்வல்ல சேயனை யாய்செப்பின் நீயறிய
நறுந்தாரை வார்குழல் சூடினுஞ் சால நடுங்கிடையே.

(கு-ரை.) உறும் தாரை - (தலைவியை) அடைவதற்குரிய வழியை. அறிந்தாரை-அறிந்த தலைவியை. அடையார் மடிய-பகைவர் மாய, செறும் தாரை வேல்வல்ல -அழிக்கும் கூரிய வேற்படையில் வல்ல, சேய் அனையாய் - முருகப்பெருமானையொத்த தலைவனே. வார்குழல் - நீண்ட கூந்தலின்கண், நறு தாரை சூடினும் - நறுமணம் பொருந்திய பூமாலையைச் சூடினும், சாலநடுங்கு இடை - (அப்பாரம் தாங்காது) மிகவும் நடுங்குகின்ற இடையையுடைய தலைவியை; ஐ உருபு இறுதிக்கட் டொக்கது; 'ஐயும் கண்ணும் அல்லாப் பொருள் வயின், மெய்யுருபு தொகாஅ இறுதி யான'. (தொல். சொல். ௧௦௫.) என்பது இலக்கணமாதலின். (தலைவியின் இயல்பை) நீ அறியச் செப்பில் என்க. சேயனையாய்! உன்னை முன்னே அறிந்தாரை எய்தற்கு அருமையுண்டோ? (அங்ஙனமிருக்க) இன்று நடுங் கிடை(யை) உறும் தாரை என்னெடு சாற்றுவது என்? எனக் கூட்டுக. 'நடுங்கிடையை உறுந்தாரை' என இச்செய்யுளின் இறுதியும் முதலும் பொருள் இயைந்து நிற்றலின் இது பூட்டுவிற் பொருள்கோளாம். ௧௫

### தன்னிலை தலைவன் சாற்றல்

*[தலைவன், தான்வருந்துகின்ற நிலைமையைப் பாங்கிக்குக் கூறுதல்]*

**110.** கணையொன் றியஇரு கண்வலைக் கேளன் கலைமுழுதும்
பணையொன்று தோளிதன் பார்வையில் பட்டுப் பரிசழிந்து
துணையின்றி நின்று வருந்துறு வேற்கிவை சொல்லிநில்லாய்
புணையின்றி யார்கடப் பார்கடற் பாய்புனற் பொன்னியையே.

(கு - ரை.) கணை ஒன்றிய - அம்பையொத்த. கலை - கல்வியறிவு, மான். பணை ஒன்று தோளி-மூங்கிலையொத்த தோளையுடைய தலைவி. பரிசு அழிந்து - தன்மை கெட்டு. என் கலைமுழுதும் பார்வையில் பட்டு கண்வலைக்கே பரிசழிந்து வருந்துறவேற்கென இயைக்க. வருந்துறுவேற்கு - வருந்தும் எனக்கு. இவையென்றது: ' அறிந்தாரை எய்தற்கு அருமையுண்டோ ' என்றும், ' உறந்தாரை என்னொடு சாற்றுவதென்கொல்' என்றும் முன்செய்யுளில் பாங்கி கூறியவற்றை. நில்லாய் - (யான் தலைவியைப் பெறுதற்கு உதவியாக) நிற்கமாட்டாய். புணை - தெப்பம். கடல் பாய் புனல் - கடலின் கண்ணே சென்று விழுகின்ற மிக்க நீரையுடைய. பொன்னி - காவிரியாறு. கசு

பாங்கி உலகியல் உரைத்தல்

**[ஒருவன் ஒருத்தியைக் காதலித்தானாயின், அவளை அவன் மணஞ்செய்துகோடலே உலகத்தியல்பெனப் பாங்கி தலைவனுக்குக் கூறுதல்]**

**111.** தன்னிற் கடவுளர் இல்லாத தன்மை தரித்தகங்கைச்
சென்னிக் கடவுள் செயலனை யாய்வெஞ் சிலைக்குறவர்
கன்னிக் கடவு ளனையாளன் ஆவியைக் காந்தள்பற்றி
வன்னிக் கடவுள் வலம்வந்து கோடன் மரபியலே.

(கு - ரை.) தன்னின் - தன்னினும் உயர்ந்த தன்மையைப் பிறர் உணரும்பொருட்டுத் தரிக்கப்பட்ட கங்கையையுடைய சென்னிக்கடவுளென்க. சென்னி - தலை; கடவுள் - சிவபெருமான். உலகத்தையே அழிக்குமாறு தோன்றிய வான்கங்கையைத் தன்சடை முடியின்கண் அடக்கிநின்ற பெருமையால் இவ்வாறு கூறினர். செயல் அனையாய் - (கடவுளையொத்த மேன்மைபொருந்திய) செய்கையையுடைய தலைவனே. சிலை - வில். கன்னிக்கடவுள் - பெண்கடவுள். ஆவி : தலைவி. 'குன்றவாணர் குலதெய்வமே' (கoரு) என முன்பும் வந்திருத்தல் காண்க. காந்தள் பற்றி - காந்தள் மலரையொத்த கையைப் பிடித்து. வன்னிக்கடவுள் - (வேள்வித்) தீயை. கோடல் - (மணம்செய்து) கொள்ளுதல். திருமணக் காலங்களில் மணமகன் மணமகள் கையைப் பிடித்துக்கொண்டு வேள்வித்தீயை வலம்வரும் வழக்கம் இன்றும் உளதாதல் காண்க. கடவுட் செயலையுடைய நீ களவொழுக்கத்தை மேற்கொள்ளல் தகாது என்பது கருத்தாகலின் இது கருத்துடையடைகொளியணியாம். அனையாய் ! ஆவியைப் பற்றி வந்து கோடல் மரபியல் எனக் கூட்டுக. கஎ

### தலைமகன் மறுத்தல்

112. சிலைமேல் முகிலன்ன நன்னுதல் மீது செறிகுழலாள்
முலைமேல் முயங்குவன் நீ சொன்ன வாறு முழுமணியின்
கலைமேல் அணிதழை அல்குனல் லாய்முன் கவிகொணர்ந்த
மலைமேல் மருந்துவந் தோதலை மேல்விட மாற்றுவதே.

(து - ரை.) சிலைமேல் முகில் அன்ன - வான வில்லின்மீது படிந்த முகிலையொத்த. நுதல் - நெற்றி. செறிகுழலாள் - நெருங்கிய கூந்தலையுடைய தலைவி. வில் நெற்றிக்கும், அதன்மீது படிந்த முகில் நெற்றியின்மீது செறிந்த கூந்தலுக்கும் உவமையென உணர்க. 'வன்னிக்கடவுளை வலம்வந்து கோடல் மரபியல்' (௧௧௧) என நீ சொன்னவாறென்க. முழுமணியின் கலை - மாணிக்கம் இழைக்கப் பெற்ற மேகலை என்னும் அணிகலம். கலைமேல் அணிதழை அல்குல் நல்லாய் - மேகலையானது மேலே அணியப்பெற்ற தழை உடையையும் அல்குலையும் உடைய நற்குணம் வாய்ந்த பாங்கியே; அல்குல்: ௩௩-ஆம் செய்யுட் குறிப்பைப் பார்க்க. சேலையின்மீது மேகலையணிவது வழக்கமாதலின் இவ்வாறு பொருள் கூறப்பட்டது. கவி-குரங்கு: ஈண்டு அனுமனை உணர்த்திற்று. அவன் கொணர்ந்த மலையாவது சஞ்சீவிமலை; அதன்கண் மருந்தென்றது இறந்தோரை உயிர்ப்பிக்கும் மருந்தை. நஞ்சு தலைக்கு ஏறியோர் உடனே இறத்தலல்லது மலைமருந்து வரும் துணையும் பிழைத்திராமைபோலக் காதல் கைம்மிக்க யானும் தலைவியை உடனே கூடினாலன்றி மணஞ்செய்து கொள்ளுமளவும் உயிர் வாழேன் என்பது கருத்து. இவ்வாறு கூறியது பிறிதுமொழிதலணியாம்; தாமக்குழலை வரைந்துகொண்டேவெங்கைத் தாணுவெற்பில், காமக் கனலைத் தணிப்பாயென்றோதிய காரிகைநீ, நாமக் கிணறகழ்ந் தந்நீர் கொடுநன் னகரில்பற்றி, வேம்அக் கனலை அவிப்பாயென் பார்களின் வேறல்லையே - திருவெங்கை: ௩௮.

௧௮

### பாங்கி அஞ்சி அச்சுறுத்தல்

*[பாங்கி தானும் அஞ்சித் தலைவனையும் அச்சுறுத்திப் புனத்தைவிட்டு அகலுமாறு செய்தல்]*

113. புதியார் வருமிடம் அன்றிது குன்றில் புனக்குறவர்
மதியார் எவரையும் வாரலெஞ் சாரலில் வந்துநின்னைத்
துதியா ரறுமுகன் தோற்றமுண் டாயினுந் தோகையில்லை
நுதியார் கதிர்வடி வேலில்லை ஆகத்து நூலில்லையே.

(கு - ரை.) புனம் குறவர் - தினைப் புனத்திற்கு உரிய குறவர். வாரல் - வாராதே. தோகை - மயிலூர்தி. நுதி ஆர் கதிர் வடிவேல் இல்லை - நுனிபொருந்திய ஒளிமிக்க கூரிய வேலில்லை. ஆகத்து - மார்பில். நூல் - பூணூல். குறவர், தம் சாரலில் முருகனையன்றி மற்றைய புதியரைக் காணின் ஏதம் செய்வராகலின் 'வாரல்' என்றாள். தோகை முதலியன இருப்பின் முருகனாகவே எண்ணித் துதிப்பரென்பது கருத்து. 'சேயனையாய்' - ௬0௯ என்று பாங்கி முன்பும் விளித்தமை காண்க. ௧௧௩

(வே - ம்.) புனைக்குறவர்.

கையுறை புகழ்தல்

*[தலைவன் தான்கொண்டுவந்த கையுறையைப் புகழ்ந்து கூறுதல் : கையுறை : தழை முதலியன]*

**114.** முலைக்கா மணிவடம் முத்திவை கோத்தணி மொய்த்தழைநின்
கலைக்கா மலர்திரு அல்குலுக் காமிக் கருங்குவளைச்
சிலைக்காம வேள்கொடி சேர்குழைக் காமழை சென்றுதங்குந்
தலைக்கார் மயிலனை யாய்குழற் காமித் தழையுமின்றே.

(கு - ரை.) கோத்துஅணி மணிவடம், முத்துவடம் எனக் கூட்டுக; வடம் - மாலை. இவை யிரண்டும் முலைக்கு அணிதற்கு ஆகும். கோத்து அணிந்த நெருங்கிய தழை நின் கலைக்கு ஆகும்; என்றது கலையாக அணிதற்காகும் என்றவாறும்; கலை - ஆடை; 'கோத்து' என்பது இருபுறத்தும் இயைந்து பொருள் தந்து நிற்ற லின் இது தாப்பிசைப் பொருள்கோள். மலர், அல்குலின்மீது அணிதற்கு ஆகும்; அல்குல் : ௧௧௨ - ஆம் கவியின் குறிப்புரையைப் பார்க்க. சிலைக் காமவேள் கொடி - வில்லையுடைய மன்மதன் கொடி யாகிய மீன்; ஈண்டு அதனையொத்த கண்ணை உணர்த்திற்று. சேர் குழை என்றது அக்கண் சென்று பாய்தலையுடைய குழையென்ற வாறு; (௨௨) குழை - காதணி; ஈண்டு அது தானியாகுபெயராய்க் காதை உணர்த்திற்று. குவளை குழைக்கு ஆம் - குவளைமலர் காதின் மீது அணிதற்கு ஆகும்; குவளை குழையாக அணிதற்காம் எனலு மாம். மழை - முகில். தலைக்கார் என்றது கார்காலத்தின் தொடக் கம்; அக்காலத்தின் தொடக்கத்திலேயே வெளிப்பட்டு நிற்கும் மயிலை யொத்த பாங்கியே, மணிமுத்துவடங்கள் முலைக்காம்; தழை கலைக்

காம்; மலர் அல்குலுக்காம்; குவளை குழைக்காம்; இப்பூந்தழையும் குழலில் அணிதற்கு ஆகும் என்க. தழை: இலையை இடையிட்டுக் கட்டிய பூமாலை. ஆதலின் இதனை ஏற்றுக்கொள்க என்பது கருத்து.

### உண்டெனை மறுத்தல்

*[பாங்கி, தம்மூரில் முத்து மிகுதியும் உண்டெனக் கூறித் தலைவன் கொணர்ந்த முத்தை வேண்டாவென மறுத்தல்]*

**115.** ஆடுங் கழங்கும் அடுஞ்சிறு சோறும் அகன்கழனிக்
கோடுங் குளிர்புனல் ஆற்றுக் குரம்புங் கரும்புஞ்செந்நெல்
காடுந் துணிந்திட்ட கைவினை யாளர் கவருங்கொற்று
நீடுந் தடந்துறை வாவெம தூரில்வெண் ணித்திலமே.

(கு - ரை.) அடும் - சமைக்கப்படும். கோடு - வரம்பு. புனல் - நீர். குரம்பு - கரை. காடு: கரும்பு செந்நெல் இவற்றின் மிகுதியை யுணர்த்திற்று. துணிந்து இட்ட - (நன்றாக விளையுமென்று) துணிந்து பயிர்செய்த. துணிந்திட்ட - அரிந்த, வெட்டிய எனலு மாம். கைவினையாளர் - பயிர்த்தொழில் செய்யும் மள்ளர். கவரும் - வாரிக்கொண்டு செல்லும். கொற்றும் - கூலியும்; கொற்று - கூலி; திசைச்சொல். இஃது இக்காலத்துக் கொத்தென வழங்குகின்றது. நீடும் தடந்துறைவா - நீண்ட பெரிய நீர்த்துறையையுடைய தலைவனே. நித்திலம் - முத்து. துறைவா! எமது ஊரில் கழங்கும், சோறும், கோடும், குரம்பும், கரும்பும், செந்நெல்லும், அவற்றைத் துணிந்திட்ட கைவினையாளர் கவரும் கொற்றும் நித்திலமேயாகும். ஆதலின் நின் முத்துவடம் (கககச) வேண்டா என்றாளென்க. உக

### இல்லெனை மறுத்தல்

*[தலைவன் கொண்டுவந்த தழை முதலியன தந்நாட்டில் இல்லையென்று கூறிப் பாங்கி அவற்றை மறுத்தல்]*

**116.** பூங்கற்ப வண்தழை கொண்டுவந் தாலும் புனக்குறவர்
வேங்கைத் தழையன்றி வேறறி யார்வெய்ய சேடனுச்சி
தாங்கத் தகுமணி யுந்திரு மால்செங்கைச் சங்கின்முத்தும்
வாங்கக் கிடைப்பதன் றேஇடை வேறில்லை வாள்நுதற்கே.

(கு - ரை.) பூங் கற்ப வண் தழை - பூக்களையுடைய கற்பக மரத்தின் வளவிய தழையால் தொடுக்கப்பட்ட உடை. சேடன் -

ஆதிசேடன் என்னும் பாம்பரசன்; அவன் உச்சி தாங்கும் மணி என்றது மாணிக்கத்தை. அன்றோ என்பதிலுள்ள ஓ: அசை. மற்றைய மணியும் முத்துமாயின் வாங்கக் கிடைக்கும்; இவை சேடன் உச்சி மணியும், திருமால் சங்கின் முத்துமாகலின் வாங்கக் கிடைப்பனவல்ல; இவ்வாறு கிடைத்தற்கரிய மணியையும் முத்தையும், இந்நாட்டிற் குரித்தல்லாத கற்பகத்தழையையும் தலைவியணியின், இவை இவட்கு எவ்வாறு கிடைத்தனவென்று கண்டோர் ஐயுறுவ ராதலின் இவை வேண்டா என்பது கருத்து. 'அன்று' என்பதை மணியுடனும் முத்துடனும் தனித்தனிக் கூட்டி முடிக்க. வாள் நுதற்கு - ஒளிபொருந்திய நெற்றியையுடைய தலைவிக்கு, இடை வேறில்லை என்றது இவளுடைய இடை மிகவும் நுண்ணிதாகலின், இயல்பாக அமைந்த முலைப்பாரத்தின்மேலும் தழை, மணி, முத்துக் களையும் அணியின் அவற்றைத் தாங்கலாற்றாது இடையொடியும்; ஒடியவே அதற்குப் பதிலாக வைத்தற்கு வேறு இடை இன்றென்றா னென்க. 'அறுகால் பட இருள் ஐம்பால் இருக்கின் அளியினங்காள், மறுகால் வருக்க மருங்கில்உண்டோ'-௩௧. என முன்பு வந்திருத் தலும் காண்க. 'மடைகாட்டும் பொன்னி வலம்புரி ஈன்ற மணி தொடுத்த, தொடைகாட்டி னும் தொடேம்இறை வா........ மின்னாட்கு, இடைகாட்டி னலது வேமணி ஈந்ததின் எண்மடங்கே'-திருவாரூர்க்கோவை - ௧௧௯. ௨௨

## ஆற்ற நெஞ்சினோடு அவன் புலத்தல்

*[பாங்கி மறுத்ததைப் பொறாத நெஞ்சையுடையவனாகித் தலைவன் வெறுத்துரைத்தல்]*

**117.** மாவையும் இன்சொல் குயிலையும் வண்புனல் வாவியையுங்
காவையும் அங்ஙன் கலக்கிய பாவங் கவிரிதழுங் [சென்ற
கோவையும் அன்னசெவ் வாய்நவ்வி பாற்கொண்டு கொண்டு
யாவையு முள்ளது மில்லது மாய்விட்ட தென்செயலே.

(து - ரை.) மா - மாமரம். வண் புனல் வாவி - நிறைந்த நீரையுடைய குளம். கா - சோலை. இவற்றைக் கலக்கலாவது: தழை மலர்முதலியவற்றைக் கொய்தலால் உண்டாவது. பாவம் - தீவினையால். கவிர்இதழ் - முருக்கமலர். கோவை - கோவைப்பழம். இவ்விரண்டும் செவ்வாய்க்குவமை. செவ்வாயையுடைய நவ்வி யென்க. நவ்வி - மான்போன்ற தலைவி. அடுக்கு பன்மைபற்றி

வந்தது. யாவையும் - தழை முத்து மணி எல்லாம். உள்ளது: தலைவியின் ஊரில் இருப்பது. இல்லது: அவள் நாட்டிலேயே அகப்படாமை. இவ்விரண்டும் முறையே - ௧௧௫, ௧௧௬-ஆம் செய்யுட்களால் விளங்கும். 'யாவையும் ஆய்விட்டது' என்றது ஒருமைப் பன்மை மயக்கம். செயல் என் - இனியான் செய்யத்தக்கது யாது? எனத் தலைவன் வருந்தினனென்க. பாவத்தால் யாவையும் ஆய் விட்டது; செயல் என்? எனக்கூட்டுக. ௨௫

## ஆற்றுவித்து அகற்றல்

*[பாங்கி, தலைவன் துன்பத்தைத் தணிவித்து அவனைப் போகச் செய்தல்]*

**118.** வென்றே புகழ்புனை வேலண்ண லேயிந்த வெற்பினுள்ளது
அன்றே யெனினும் அரிவையை யானடி வீழ்ந் திறைஞ்சி
இன்றே திருத்தி இருந்தழை வாங்குவன் இற்றைக்குநீ
சென்றே வருக சிறுகால் முடியுநின் சிந்தனையே.

(து - ரை.) அண்ணலே - பெருமை பொருந்திய தலைவனே. வெற்பு - மலை. இந்த வெற்பினுள்ளதன்று என்பதை - ௧௧௬-ஆம் செய்யுளாலறிக. அரிவையை - தலைவியை; அரிவை: பருவம் குறியாது நின்றது. இறைஞ்சி - வணங்கி, அவள் ஏற்குமாறு மனத்தைத் திருத்தியென்க. சிறுகாலை எனற்பாலது சிறுகால் எனத் தொகுத்தல் விகாரம் பெற்றது; சிறுகாலை - விடியற்காலை. சிறுகால் என்பதற்குச் சிறிதுநேரம் என்று பொருளுரைத்தல் பொருந்தாதாம்; மறுநாட் காலையில் வா என்றலே மரபாகலின். 'காலையில் வந்தும்மைக் காண்பது நான்' ௧௨௧. என்று தலைவன் முன்னர்க் கூறுதலையும் காண்க. சிந்தனை - கருத்து. 'என்னீர் மயல்கொள்வ தெம்பெரு மாட்டியை யான் இறைஞ்சி, நும்நீர்மை யாவும் நுவன்றருள் கொண்டபின் நும்கையுறை,............ஆர்ந்துகொள்வேன், முந்நீர் கதிரெழ எய்துதிர் நும்மிடம் முன்னி இன்றே'—கழுக்குன்றக்கோவை - ௧௧௧.

## மடலே பொருளென மதித்தல்

*[தலைவன், இனித் தலைவியைப் பெறுதற்கு மடலேறுதலே செய்யத் தக்கது என நினைத்தல்]*

**119.** தலையாய நண்புடை யார்தளர்ந் தாருயிர் தாங்குதற்கோர்
நிலையாக வைத்துமுன் னின்றில ரேல்வெய்ய நீணெடுங்கண்
வலையால் வளைப்புண்டு வார்குழற் கண்ணியில் வந்துபட்ட
கலையார் விடுக்கவல் லார்விடு வாரெவர் கைப்பட்டதே.

(து - ரை.) தலையாய நண்புடையார் என்றது பனைமரத்தை; தலைநட்புக்குப் பனையை உவமை கூறுதல் வழக்காதலின்; 'கடையா யார் நட்பிற் கமுகனையர் ஏனை, இடையாயார் தெங்கின் அனையர் - தலையாயார், எண்ணரும் பெண்ணைபோன் றிட்டஞான் றிட்டதே, தொன்மை உடையார் தொடர்பு' - நாலடி - உகசு. 'உத்தமர்தாம்...... ஒங்குபனை போல்வரே' - நீதிவெண்பா; என்பனவற்றில் அவ்வழக் குண்மையைக் கண்டுகொள்க. தனக்குதவுதல்பற்றி 'நண்புடையார்' என ஆர்விகுதி கொடுத்து உயர்த்திக் கூறினான். 'தளர்ந்தார்' எனத் தன்னைப் பிறர்போல் கூறினான்; காமத்தால் தளர்ந்தார் அனைவரை யும் பொதுப்படக் கூறினான் எனலுமாம். வைத்து - மடலைத் தன் னிடத்தே கொண்டு. வார் குழல் கண்ணி - நீண்ட கூந்தலாகிய கண்ணி; கண்ணி - ஒருவகை வலை. கலை - கலைநிறைந்த உள்ளம்; கலை - கல்வியறிவு; தானியாகுபெயர்; மான் என்னும் பொருளும் தோன்ற நின்றது. 'கணையொன்றிய இருகண்வலைக் கேஎன் கலை முழுதும், பணையொன்று தோளிதன் பார்வையில் பட்டுப் பரிசழிந்து, துணையின்றி நின்று வருந்துறு வேற்கு'-ககo. என்று முன்பு கூறிய தூஉங் காண்க. விடுவித்தற்கு உரிய பாங்கி அதனைச் செய்யாமை யின் 'விடுக்க வல்லார் யார்' என்றும், தலைவியும் வாளா இருத்தலின் 'கையின்க ணகப்பட்டதைத் தாமாக விட்டுவிடுவார் எவர்' என்றும் கூறினான். மடலேறுதலே தலைவியைப் பெறுதற்கு வழி என்பது கருத்து. உ௫

உலகியன்மேல் வைத்துரைத்தல்

*[தாம் காதலித்த தலைவியரைப் பெற இயலாதவர் மடலேறிப் பெறுவது உலக வழக்கமென்று தலைவன் பாங்கிக்கு உரைத்தல்]*

**120.** கொம்மைப் பணைமுலை கூட்டும் பரிசு கொடியிடையார்
தம்மைப் பெறுதவர் தாலப் புரவியும் மாலையென்பும்
வெம்மைச் சுடலையில் நீறுமொன் பூளையும் வெள்ளெருக்கும்
இம்மைக்கு நாடி மறுமைக்கும் ஆனதென் றெண்ணுவதே.

(து - ரை.) கொம்மை - திரட்சி. பணை - பருமை. திரண்ட பருத்த முலையையுடைய தலைவியைக் கூட்டிவைக்கும் தன்மை வாய்ந்த பாங்கியரைத் துணையாகப் பெறாத தலைவர் என்க. தாலப் புரவி - பனைமடலாற் செய்த குதிரை; தாலம் - பனை. மாலை என்பு- எலும்புமாலை. சுடலையின் நீறு - சுடுகாட்டி லுள்ள சாம்பல். இம்

மைக்கு நாடி - இப்பிறப்பில் தலைவியைப் பெறுதற்கு இவற்றைத் தேடிக் கைக்கொள்வதோடு. என்புமாலை முதலியன சிவபெருமானுக்கு உரியனவாகலின் அவற்றை அணிவோர் மறுமையின்பமும் எய்துவர் என்று கருதினனாகலின் 'மறுமைக்கும் ஆனதென்று எண்ணுவதே' என்றான். பெருதவர் எண்ணுவதையே செய்வர் என முடிக்கும்சொல் வருவித்து உரைக்க. மறுமை - மறுபிறப்பு. எருக்கு முதலியவை சிவபெருமானுக்கு உரிய என்பதையும், மடலேறுவோர் இவற்றைக் கைக்கொள்வர் என்பதையும் வரும் இக் கோவையுள்ளும், பிறவற்றுள்ளும் செய்யுட்களாலும் அறிக. 'விடமுண்ட நாதர் விளங்கியபொன், மாலையும் வண்ணக் கிழியும்வெண் ணீறும் மடலுங்கொண்டே' அம்பி—௧௨௧. 'ஈசனசாந்தும் எருக்கும் அணிந்தலர் கிழிபிடித்துப், பாய்சின மாஎன ஏறுவர் சீறூர்ப் பனை மடலே' திருக்கோவை : ௭௪. 'மங்கையர்தம் கண்ணால் மயங்கினர் வெள்ளெலும்பும், துங்க எருக்கும் தொடுத்தணிக் - தங்கமெலாம், வெந்தேறு சாம்பல் மிகஅணிந்து வீதிதொறும், வந்தேறி ஊர்வர் மடல்'—கிளவித்தெளிவு. ௨௬

தன்மேல் வைத்துரைத்தல்

*[அம்மடலேறுதலைத் தான் செய்வதாகத் தலைவன் தோழிக்கு உரைத்தல்]*

**121.** **சோலையில் வந்தபைந் தோகைநல் லீர்மன்று சூழ்மறுகில்**
**காலையில் வந்தும்மைக் காண்பது நான்கரி யோன்கடைந்த**
**வேலையில் வந்த விடமுண்ட நாதர் விளங்கியபொன்**
**மாலையும் வண்ணக் கிழியும்வெண் ணீறும் மடலுங்கொண்டே.**

(கு - ரை.) தோகை நல்லீர் - மயிலையொத்த நல்லீர் ; என்றது பாங்கியை. மன்று - பலருங்கூடும் பொதுவிடம்; இஃது ஊர்நடுவே இருக்குமாதலின் 'மன்றுசூழ் மறுகில்' என்றான். மறுகு - தெரு. 'தன்னூர் மன்றத் தென்னன் கொல்லோ' குறுந் - ௩௩. கரியோன் - திருமால். வேலை - கடல். நாதர் - சிவபெருமானுக்கு உரிய. பொன் மாலை - பொன்போன்ற நிறமுடைய கொன்றைமாலை. வண்ணக்கிழி- (தலைவியின் உருவமெழுதிய) அழகிய படம். மடல் - பனைமடலாற் செய்த குதிரை. நல்லீர் ; காலையில் நான் மறுகில்வந்து உம்மைக் காண்பது (தழைகொண்டன்று) மாலையும், கிழியும், நீறும் மடலும் கொண்டெனக் கூட்டுக. 'காசியின் மேன்மைக் கலைசைத் தியாகர்

மெய்க் காட்சியைப்போல், பூசிவெண் ணீ(று) எருக் கம்பூ அணிந் தென்புபூண்டுநல்லாய், பாசிழை யார்வடி வார்படம் காட்டிப் பனைமட லாம், வாசியை நாளையுன் ஊர்வயின் ஊர்ந்து வருகுவனே'— கலைசை—கக௬. உஎ

மடல் விலக்கு

*[மடலேறுவோர் தலைவியின் உருவினைத் தாமே எழுதவேண்டுமாகலின், அது நின்னால் ஆகாது ; ஆகவே மடலேறலும் நினக்கியலாது எனப் பாங்கி கூறுதல்]*

122. பேணுங் குலனும் புலனுங்குன் றுத பெருந்தகையாம்
பூணும் புகழும் பழியுங் கிடக்கப் புதுநலனும்
நாணும் பணிமொழி யும்நவ்வி நோக்கும் நடையுமிங்ஙன்
காணும் படியெழு திக்கொண்டு வாருமிக் கன்னியையே.

(கு - ரை.) பேணும் - விரும்பப்படும். புலன் - அறிவு. பெருந் தகை: விளி. ஒருவன் மடலேறுதலைக் காணின், இவள்பொருட்டு இவன் இவ்வாறு துன்புறுகின்றான் என்று இகழ்ந்தோ புகழ்ந்தோ உலகத்தார் கூறுவராகலின், பாங்கி, 'யாம்பூணும் புகழும் பழியும் கிடக்க' என்றாள். 'இன்னள் செய்தது இதுஎன முன் நின்று, இவள்பழி நுவலும் இவ்வூர்' குறுந்தொகை—௩௪. புதுநலன் - புதிய அழகு. பணிமொழி - பணிவைப் புலப்படுத்தும் சொல். நவ்வி நோக்கு - மானையொத்த மருண்ட பார்வை. பண்புந் தொழிலுமாகிய இவற்றைக் கட்புலனாகுமாறு தீட்டல் கூடாமையின் 'காணும்படி எழுதி' என்றாள். கன்னி - தலைவி. 'ஞாலம் அன்னாள், வண்ணம் ஒருவா றெழுதினும் மாமணி வார்ந்தனைய, தண்ணென் கருங்குழல் நாற்றமும் மற்றவள் தன்நடையும், பண்ணென் மொழியும் எழுத உளவே படிச்சந்தமே' பாண்டிக்கோவை—அ௪. உஅ

(வே - ம்.) பனிமொழி.

தான்கற்ற புகழ்தல்

*[ஓவியம் வரைவதில் தனக்குள்ள திறமையைப் புகழ்ந்து தலைவன் பாங்கிக்குக் கூறுதல்]*

123. மிகுத்தேன் ஒருகிளி வேட்கையில் சால விசாலத்துள்ளே
தொகுத்தேன் நிதம்பமுந் தோளுந் தனங்களுஞ் சூதவடு
பகுத்தே பதித்த தெனஎன்னை வாழ்வித்த பாதகக்கண்
வகுத்தேன் வகுத்தவற் கும்முடி யாதிந்த வல்லவமே.

(து - ரை.) மிகுத்தேன் - மேம்பட எழுதினேன். கிளியை எழுதியது பணிமொழி (கஉஉ)யைக் காட்டுதற்கு. வேட்கையில் - (தலைவியைப் பெறவேண்டுமென்னும்) விருப்பத்தால். கிளி என்பதற்குத் தலைவியெனப் பொருள்கொண்டு கிளி வேட்கையில் மிகுந்தவனாகிய யான் எனலுமாம். சால விசாலத்துள்ளே - மிகவும் பரந்த இடத்தில். தொகுத்தேன் - ஒழுங்குபட எழுதினேன்; தொகுத்தல்-ஒழுங்குபடுத்தல். நிதம்பம் - அல்குல். நிதம்பமுதலியவற்றின் பெருமையைக் கருதி அவற்றை விசாலத்துள்ளே தொகுத்தானென்க. சூதவடு - மாம்பிஞ்சு; கண்ணிற்குவமை. வாழ்வித்த என்றது குறிப்புமொழி; துன்புறச் செய்த என்றபடி. வகுத்தேன் - எழுதினேன். வகுத்தவற்கும் - (உலகங்களையெல்லாம் படைத்த) நான்முகனுக்கும். வல்லவம் - (எழுதும்) வல்லமை. வேட்கையில் கிளி மிகுத்தேன்; நிதம்பமும், தோளும், தனங்களும் தொகுத்தேன்; கண் வகுத்தேன்; இந்த வல்லவம் வகுத்தவற்கும் முடியாது எனக் கூட்டுக. உக

## பாங்கி அருளியல் கிளத்தல்

*[மடலின்பொருட்டுப் பனையை நீ வெட்டுவாயானால் அதன்மீதுள்ள அன்றில் துன்புறுமாதலின், அருளுடைய நினக்கு அச்செயல் தகாதெனல்]*

**124.** மகிழ்ந்தாவி யொன்றி மணந்தக லாத மடஅன்றில்வாய்
நெகிழ்ந்தால் உறுதுயர் நீரறி வீரிந் நெறியுமக்குத்
தகுந்தா ரையுமன்று தண்ணளிக் கும்பிழை சாலுமன்பு
மிகுந்தாலு மின்னசெய் யார்பெரி யோரிவ் விருநிலத்தே.

(து - ரை.) மணந்து - கூடி. அன்றில்: ஆணும் பெண்ணும் எப்பொழுதும் சேர்ந்தே வாழும் ஒருவகைப் பறவை; இது பனை மரத்தில் கூடுகட்டி வாழும். வாய்நெகிழ்ந்தால் - அவற்றின் கூட்டம் கலைந்தால், உறு துயர் - (அவ்வன்றிற்பறவைகள்) அடையும் துன்பத்தை. தகும் தாரை - தகுந்த நெறி. தண் அளிக்கும் - (நீ உயிர்களிடத்துச் செய்யும்) குளிர்ந்த அருளுக்கும். பிழை சாலும் - குற்றம் அமையும். தலைவியின்பால் எத்துணை அன்பு மிகுந்தாலும் என்க. இரு - பெரிய. 'வெள்ளாங் குருகின் பிள்ளையும் பலவே, அவையினும் பலவே சிறுகருங் காக்கை, அவையினும் அவையினும் பலவே குவிமடல், ஓங்கிரும் பெண்ணை மீமிசைத் தொடுத்த, தூக்

கணங் குரீஇக் கூட்டுள சினையே'—இறையனாரகப்பொருள்—கூ. மேற்கோள், ந0

### பாங்கி கொண்டுநிலை கூறல்

*[தலைவன் உயிரைத் தாங்கிக்கொண்டு நிற்கும் நிலைமையையுடைய மொழியைப் பாங்கி கூறல்]*

**125.** என்னால் உளது வணங்கியும் வாழ்த்தியும் ஏற்கும்வண்ணஞ்
சொன்னால் மறுத்தெதிர் சொல்லத் தகாளிருந் தோகைமயில்
அன்னாள் நிலைசென் றறிந்துநின் பால்வரு மவ்வளவும்
மன்னா வருந்தல் பொருந்திய வாறுசெய் வந்தபின்னே.

(து - ரை.) உளது - செய்ய இயல்வது: அது தலைவியை வணங்கியும் வாழ்த்தியும் சொல்லுதல்; அவ்வாறு சொன்னாலென்க. சொல்லத் தகாள் - சொல்லமாட்டாள். அன்னாள் : தலைவி. மன்னா - தலைவனே. வருந்தல் - வருந்தற்க; அல்லீற்று எதிர்மறை வியங்கோள் வினைமுற்று. அச்சிட்ட இருபதிப்புகளிலும் 'ஏற்குவண்ணம்' என்றே இருக்கின்றது. அப்பாடம் பிழைபட்டதாகலானும், இப்பிழை ஏடெழுதுவோரால் மிக எளிதாக நேர்ந்திருக்கலாம் ஆதலானும் யாம் 'ஏற்கும்வண்ணம்' எனத் திருத்தினோம். கலை வல்லோர் உண்மைகண் டுரைப்பராயின் நன்றியறிதலுடன் ஏற்றுக் கொள்ளுதும். 'ஏற்றவண்ணம்' எனக்கொள்ளினும் இழுக்காது. நக

### பாங்கி இள்மைத்தன்மை கூறல்

**126.** வினைவருஞ் செங்கதிர் வேலண்ண லேகழை வில்குறவர்
மனைவரு வஞ்சி விழியுங் குழலும் வனமுலையும்
அனைவரு நாடும் மருங்குந் தவமும் அளிபொருந்துஞ்
சினைவரு நாண்மல ருங்கலர் தேடிய செல்வமுமே.

(து - ரை.) வினைவரும் - போர்த்தொழில் கைவரப்பெற்ற. அண்ணலே - பெருமையிற் சிறந்த தலைவனே. கழை வில் - மூங்கிலாற் செய்யப்பட்ட வில். மனைவரு வஞ்சி - வீட்டிற் பிறந்த வஞ்சிக் கொடிபோன்ற தலைவியினுடைய. குழலும் - கூந்தலும். வனம் - அழகிய. மருங்கு - இடை; இதனை நாடுதல் ஏற்றுக்கோவெனில், அது நுட்பத்தால் யாவர்க்கும் கட்புலனாகாமையினென்க. விழியும் தவமும், குழலும் தவமும், முலையும் மலரும், மருங்கும் செல்வமும்

ஒக்குமென முறை நிரல்நிறையாகப் பொருள்கொள்க. தவம் குழலுக்கு ஒப்பாகும்போது காடென்னும் பொருள்படும்; தவம் - காடு. இனி அவை ஒத்தல் வருமாறு: உயிர்க்குறுகண் செய்யாமையாகிய தவம்போல, ஆடவர்க்குத் துன்பம் பயவா இவள் விழிகள் எனவும், திருத்தியமைக்கப்பெறாத தவம் (காடு)போலத், திருத்தியமைக்கப்பெறாதது இவள் குழலெனவும், நீண்டுயர்ந்த மரத்தின் மேற்கிளைகளிலிருக்கும் மலர், கீழிருப்பார்க்கு நன்கு தோன்றாமைபோல மறைந்து நிற்பன இவள் முலைகளெனவும், கலர், தீயவழியில் தேடிய செல்வம், தொடக்கத்தில் ஆவதுபோற் றோன்றிப் பின் தேய்தலையொப்ப முலை வராத இதுபோது மகிழ்ந்திலகினும் இனிமேல் தேய்ந்து துன்புறுந்தகையது இவள் மருங்கெனவும் உவமையை விரித்துரைத்துக்கொள்க. இலைக்குள் மறைந்து உயரத்தில் இருக்கும் கோட்டுப்பூவே உவமையாகக் கொள்ளப்பட்டதென்பார் "அளிபொருந்தும் சினைநாண்மலர்" என்றார். "முலையும் வாரா முதுக்குறைந் தனளே" என்பதை நினைப்பூட்டுகின்றது இது. இங்ஙனம் கூறியவாற்றால் இவள் மிக இளையள் என்பது பெறப்படும். தீயவழியில் தேடிய பொருள் தேய்தலை 'அழக்கொண்ட எல்லாம் அழப்போம்'—குறள் ௬௫௯. 'இடை தெரிந்து அஞ்சுறுத்து வஞ்சித்து எளியார், உடைமைகொண்டு ஏமாப்பார் செல்வம் - மடநல்லார்,..........நுண்ணிடைபோல் தேய்ந்துவிடும்' - நீதிநெறி விளக்கம். ௬௨. என்பனவற்றாலறிக. அளி - வண்டு. சினை - மரக்கிளை. நாள்மலர் - அன்றலர்ந்த மலர். கலர்—கீழ்மக்கள். ௩௨

## தலைவன் தலைவி வருந்தியவண்ண முரைத்தல்

***[வருத்தியவண்ணம்—பார்வை முதலியவற்றால் தன்னை வருத்திய விதம்; இதனால் தலைவி மங்கைப்பருவம் உடையாள் என்றாயிற்று]***

**127.** அளைதா ழரவும் அரியும்வெந் தீயும் அரசுமெங்ஙன்
இளைதா யினுங்கொல்லும் என்பது நீவந் திருஞ்சுரும்பின்
கிளைதாழ் குழல்வஞ்சி கேட்டிலை யோயிளங் கிள்ளையின்சொல்
முளைவாள் நகைப்பெண் அரசல்ல வோஇந்த மொய்குழலே.

(கு - ரை.) அளைதாழ் - வளையில் தங்கிய. அரி - விலங்கரசு. எங்ஙன் - எவ்வளவு. வந்து: உரையசை; ௯௩-ஆம் செய்யுளைப் பார்க்க. சுரும்பின் கிளை (பறந்து)வந்து தாழ் எனலுமாம். சுரும்பின் கிளை - வண்டினம்; அவை பறந்து வந்து தாழ்கின்ற தாழ்

வஞ்சியென்க. வஞ்சி: பாங்கி; அண்மைவிளி. கிள்ளை இன்சொல்-கிளியையொத்த இனிய சொல். முளை வாள் நகை - நாணல் முளை போன்ற வெண்மையான பல்; 'கிளையரில் நாணற் கிழங்கு மணற் கீன்ற, முளையோ ரன்ன முள்எயிற்றுத் துவர்வாய்'—(அகநானூறு-௨௧௨) சொல்லையும், நகையையுமுடைய பெண்ணரசென்க. அரவு முதலியன இளையவையாயினும் கொல்லுமென்பதை 'அளையுறை பாம்பும் அரசும் நெருப்பும், முழையுறை சீயமும் என்றிவை நான்கும், இளைய எளிய பயின்றனஎன் றெண்ணி, இகழின் இழுக்கம் தரும்'—(ஆசாரக்கோவை: ௮௬) என்னும் செய்யுளானும் அறிக. மொய்குழல்: தலைவி. இத்தலைவியும் பெண்ணரசாகலின் இளையளாயிருந்தே என்னை வருத்தினாள் என்பது கருத்து. ௩௩

(வே - ம்.) கிள்ளைமென்சொல். இ - வி. ௧௩௭.

### சேட்படைகூறத் தானல கூறல்

*[தலைவியைவிட்டு நீங்கி இருக்குமாறு பாங்கி தலைவனுக்குக் கூற, அவன் அது முடியாது என்று கூறுதல்;*
*சேட்படை—அகன்றிருத்தல்]*

**128.** புனையுந் தரள வடமுந் தடமென் புணர்முலையும்
வளையுஞ் சுரிகுழ லும்மட நாணு மகரமுடன்
முனையுங் கயலு முகமதி வேர்வு முறுவல்முத்து
நினையுந் தொறும்வினை யேன்கவி கூரமு னிற்கின்றதே.

(து - ரை.) புனையும் தரளவடமும் - அணியப்பட்ட முத்து மாலையும். தடம் - பெரிய. புணர் - நெருங்கிய. வளையும் சுரி குழலும் - பின்னப்பட்ட கடைகுழன்ற கூந்தலும். மகரம் - சுரு மீன் வடிவாகச் செய்யப்பட்ட காதணி; மகரகுண்டலமென்பர் வடநூலார்; இதன் தமிழ்ப்பெயர் சுறவுக்குழை என்பது. முனைதல்-பொருதல்; என்றது கண் காதளவும் சென்று பாய்தலை. பெருமீனாகிய மகரத்துடன் பொருகின்ற கயல் என நயம்படக் கூறினான்; கயல் என்றது கண்ணை. முறுவல் - பல். முன்நிற்பது உருவெளித் தோற்றமாகும். நினையும்தொறும் முன்வந்து நிற்றலின், யான் நீங்கியிருத்தல் எங்ஙனம் இயலும் என்பது கருத்து. நிற்கின்ற தென்பதை வடம் முதலிய ஒவ்வொன்றனோடும் தனித்தனி கூட்டி முடிக்க. பன்மை யொருமை மயக்கமுமாம். ௩௪

### பாங்கி தலைவி செவ்வியருமை செப்பல்

**[தலைவியைப் பார்த்தற்குரிய காலம் பெறுதற்கரியதென்பதைப் பாங்கி தலைவனுக்குக் கூறுதல்]**

**129.** துறைவாய் மணற்சிற்றி லும்சிற்றில் வாயடும் சோறும்துற்ற
நறைவாய் மலர்ப்பண்ணை நன்மணி யூசலும் நந்தலைக்கும்
குறைவாய் நறுமலர் கொய்துபந் தாடலும் கூடவிற்றைக்
கிறைவா மறந்துநின் ருட்கென்கொ லோசொல் லியம்புவதே.

(து - ரை.) *துறைவாய் - நீர்த்துறையின் அருகே. மணல் சிற்றில் - மணலில் செய்து விளையாடும் சிறு வீடு. அடும்-சமைக்கும். துற்ற - நிறைந்த. நறைவாய் - தேன்பொருந்திய மலரையுடைய பண்ணையென்க; பண்ணை - தோட்டம்; அதன்கண் கட்டப்பட்டுள்ள ஊஞ்சல். மணி - அழகிய. நந்து அலைக்கும் குறைவாய் - சங்குகளை அலைத்து ஒதுக்கும் ஆற்றிடைக்குறையின்கண்ணே. குறை: ஆற்றிடைக்குறை என்பதன் விகாரம்; ஆற்றிடைக்குறை - கழிமுகம். சிற்றில் இழைத்தல், சிறுசோறடுதல் முதலிய விளையாட்டையும் மறந்துநின்ற தலைவிக்கு யான் நின்குறையை எங்ஙனம் இயம்புவேன் என்றானென்க.* ௩௫

### தலைவன் செவ்வியெளிமைசெப்பல்

**[தலைவன், தலைவியைப் பார்த்தற்குரிய காலத்தின் எளிமையைப் பாங்கிக்குக் கூறுதல்]**

**130.** திரைவார் கருங்கடற் கண்டலந் தண்டுறை சிற்றில்முத்தத்து
இரையார் குருகி னினம்விளை யாட இளையவஞ்சி
விரையார் மணிவண்டல் மாறிய காரணம் வேறென்றல்ல
வுரையா யினிமயி லேசென்று நீயென்ற னுண்மெலிவே.

(து - ரை.) *வார் -நீண்ட. கண்டல்அம் தண்துறை - தாழை சூழ்ந்த அழகிய குளிர்ந்த துறையின் அருகே இழைக்கப்பட்ட. சிற்றில் முத்தத்து - சிறுவீட்டிலுள்ள முத்தின்மேல். இரை ஆர் குருகின் இனம் - இரையுண்ணுகின்ற நாரையின் கூட்டம். வஞ்சி: தலைவி. விரைஆர் மணிவண்டல் - மணம் நிறைந்த அழகிய விளையாட்டை; வண்டல் - மகளிர் விளையாட்டு. கண்டலந் தண்டுறை வண்டலாதலின் 'விரையார்' என்னும் அடை தந்தான் என்க. வஞ்சி மாறினமையால் குருகினம் விளையாடிற்றென்க. மாறிய - மறந்து*

நின்ற. வேறென்றல்ல என்றது என்பால் உள்ள காதலே அதற்குக் காரணம் என்றாயிற்று. ஆதலின், என் உள்மெலிவை உரையாய் என்க. மயிலே: தலைவன் பாங்கியை விளித்தது. ௩௬

என்னை மறைப்பதேன்னென நகுதல்

[தலைவியிடம் நினக்குள்ள நட்பை எனக்கேன் மறைக்கின்றாய்? அவ்வாறு செய்யின் நின்கருத்து முற்றாதெனப் பாங்கி தலைவனை நகைத்துரைத்தல்]

131. கருந்தா மரையன்ன கண்ணியர் வண்ணக் கவிமயிலின்
திருந்தாடல் கண்டு சிலம்பெதிர் கூய்ச்சிறு சோறருந்தி
விருந்தாடுஞ் சோலையில் மேவிநின் றுவியின் வேட்கைசிந்தை
வருந்தா வகைமுடிப் பார்மறை யாரென்னை மன்னவனே.

(து - ரை.) கருந்தாமரை அன்ன கண்ணியர் என்றது இல்பொருளுவமை. வண்ணம் - அழகு. சிலம்பெதிர் கூய் - எதிரொலி கேட்டு மகிழும்பொருட்டு மலைக்கு எதிர்கூவுதலாகிய ஒரு விளையாட்டை ஆடி; 'குன்றம் அழைக்க' (௩௬) என்றும், 'குன்று நின்று விளிக்கும் சிலம்பினும்' (அ௩) என்றும் முன்பு வந்திருத்தல் காண்க. வேட்கை - காதல்; இஃது உயிர்க்குணமாதலின் ஆவியின் வேட்கை யெனப்பட்டது. ஆவி - உயிர். இனிப் பெயரெச்சத்து அகரம் தொக்கதாகக்கொண்டு 'நின்ற ஆவி' எனப்பிரித்துப் பாங்கியின் உயிரையொத்த தலைவி எனப் பொருளுரைக்கினுமாம்; 'நினக்கு அங்கு உயிராவள் கனங்குழையே' (௧0௨) என்றும், 'கன்னிக் கடவுளனைய என் ஆவியை' (௧௧௧) என்றும் முன்பு வந்திருத்தலும், எனக்காவி நின்னை வருத்திய மான்அவ் விளங்கிழையாள், தனக்காவி நானும்' (௧௩௩) என்று மேல்வருதலும் காண்க. ஆவியின் வேட்கை-தலைவியின்மேற்கொண்ட காதலை. சிந்தை - மனம். முடிப்பார் - உன்போல் முடிக்கக் கருதுவார். என்னை - தலைவிக்கு இன்றியமையாத என்னை. என்னை மறையார் - எனக்கு மறையார்; உருபு மயக்கம். நீயும் மறையற்க என்பது கருத்து. மன்னவனே! கண்ணியர் கண்டு கூய் அருந்தி ஆடும் சோலையில் நின்று முடிப்பார் என்னை மறையார் எனக் கூட்டுக. ௩௭

### அந்நகை ஆற்றமை

*[பாங்கி நகைத்துரைத்த அதனைத் தலைவன் பொருது கூறுதல்]*

**132.** புகையாட நெஞ்சம் புரையழல் மூழ்கிப் பொலிவழிந்து
தகையாட லாய்நின்ற தன்மைகண் டாலுயிர் தாங்கலன்றி
நகையாடல் சாலநன் றேநட மாடு நயனநல்லீர்
பகையார டவருஞ்செய் யார்தைய லார்செய்யும் பாதகமே.

(கு - ரை.) புரையழல் - மிக்க நெருப்பு; இது துன்பக்கனல். பொலிவு - விளக்கம். தகைஆடலாய் நின்ற - குணங்கள் கலங்கி நின்ற; தகை - குணம். தாங்கல் - காப்பாற்றுதல். சால - மிக. நன்றே: குறிப்புமொழி; தீதென்றபடி; 'கற்கறிந்து நன்கட்டாய்' (நன்னூல்: ௨௯௮ மயிலைநாதர் உரை மேற்கோள்) என்பதுபோல. பகையையுடைய ஆண்களும் செய்யாரெனவே, நட்பும் பெண்மையு முடையவராயிருந்தே நீவிர் பெரும்பாதகம் செய்கின்றீர் எனக் குறித்தானாயிற்று. 'தையலார்' எனப் பாங்கியைப் பிறர்போல் கூறி னான்; தனக்குப் பாதகம் செய்தல்பற்றி. ந - அ

### தேற்றல்

*[பாங்கி தலைவனைத் தேற்றல்]*

**133.** எனக்காவி நின்னை வருத்திய மானவ் விளங்கிழைமான்
தனக்காவி நானுந் தடமலை நாட தழையவிழ்பூஞ்
சினைக்காவி லீகொய்த தேமென் றழையுஞ் சிலம்பிலந்தண்
சுனைக்காவி யுங்கரு கத்துவ ளேலிறை சோரநின்றே.

(கு - ரை.) மான்: தலைவி. தளை அவிழ் பூஞ்சினைக் காவில் முறுக்கவிழ்ந்த பூக்கள் பொருந்திய கிளைகளையுடைய சோலையில். தேம் மென் தழை - இனிய மெல்லிய தழையுடை. சிலம்பில் அம் தண் சுனை காவி - மலையிலுள்ள அழகிய குளிர்ந்த சுனையிற் பூத்த நீல மலர். துவளேல் - தளரற்க. இறை சோர - தலைமைப்பண்பு அழிய; இறைமை - தலைமை. நாட! இறை சோர நின்று (நீ கொணர்ந்த) தழையும் காவியும் கருகத் துவளேல் எனக் கூட்டி யுரைக்க. 'தன்கண் அனைய தன் பாங்கிய ருள்ளும் தனக்குயிராம், என்கண் அருள்பெரி தெம்பெரு மாட்டிக்கு..................அவளால், புன்கண் அடையலை நீயினி வாடல் புரவலனே' (தஞ்சை: ௧௧௪)

(வே - ம்.) விளங்கிழையாள்; காவியுமங் கருத்துவளே இறை இ. வி. கருஎ. ௩௯

### கிழவோன் ஆற்றல்

*[தலைவன் மனந்தேறி இருத்தல்]*

**134.** மொய்ம்மால் வரையன்ன விம்மா வெழுவெம் முகிழ்முலைக்கு
நம்மால் வரையினை நாடொறுஞ் சொல்லி நலஞ்சிறக்க
வெம்மா லொருபய னில்லா தருந்தழை யேற்றசெங்கை
மைம்மான் விழிக்கொரு கைம்மாறு கண்டிலம் வையகத்தே.

(த - ரை.) மொய் மால்வரை அன்ன - நெருங்கிய பெரிய மலையையொத்த, முலையென இயைக்க. விம்மா - விம்மி; பருத்து. வெம்முகிழ் முலைக்கு - விருப்பத்தைத் தரும் கோங்கமுகைபோன்ற முலையையுடைய பாங்கிக்கு. அன்றியே, தலைவியின் முகிழ் முலையைப் பெறுதற்கு நாம் கொண்டுள்ள மால் வரையினை எனலு மாம். நம் மால்வரையினை - நம்முடைய ஆசைப்பெருக்கத்தின் அளவினை. நலம் சிறக்க - காதல் நலத்தில் மிகுந்து சிறக்க; (அதனைக் கண்டு) இல்லாது - இல்லாதிருந்தும். மை மான்விழிக்கு - மை தீட்டப்பட்ட மான்போன்ற விழியையுடைய பாங்கிக்கு. கைம்மாறு - பதிலுதவி. வையகத்து - உலகத்தில். செங்கையையுடைய மைம் மான் விழிக்கு என இயைக்க. முலைக்குச் சொல்லிச் சிறக்க (அத னைக் கண்டு) ஏற்ற விழிக்குக் கைம்மாறு கண்டிலம் எனக் கூட்டுக.

(வே - ம்.) வரையென்ன, எழுமென். இ. வி. கருஎ. ௪0

### பாங்கி கையுறை ஏற்றல்

*[கையுறை—தலைவன் கையின்கண் உறுதலையுடைய தழையுடை முதலியன.]*

**135.** மேலிங் கொருபடி போயடி யேன்செய்த மெய்த்தவத்தால்
ஏலங் கமழ்குழ லாளிசைந் தாளெறி நீருலகில்
ஆலுங் கலவ மடமயி லூர்தி யடன்முருகன்
போலுந் திருவுரு வாதரு வாயிளிப் பூந்தழையே.

(த - ரை.) இங்கு ஒருபடி மேல் போய் எனக் கூட்டுக. இங்கு - இவ்வுலகத்தில். படி - அளவு, தலைவி தன் சொல்லை மறாது இசைந்தாளாதலின், தவஞ்செய்தலில் மற்றவரைக் காட்டி

லும் தான் ஒருபடி மேல்போனதாகப் பாங்கி கருதினுளென்க. தவஞ்செய்வார்க்கு எக்கருத்தும் முற்றுமென்பது, 'வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம், ஈண்டு முயலப் படும்'—(உ சுரு) என்னும் தமிழ்மறையால் உணர்க. ஏலம் - மயிர்ச்சாந்து. எறிநீர் உலகில் - அலை வீசுகின்ற கடலாற் சூழப்பட்ட உலகத்தில். ஆலும் கலவம் - அசைகின்ற தோகையையுடைய. ஊர்தி - வாகனம். அடல்-வெற்றி. திருவுருவா : பாங்கி தலைவனை விளித்த விளி. சக

### இறைவன் தனக்குக் குறைநேர் பாங்கி இறைவிக்கு அவன்குறை உணர்த்தல்.

*[இறைவன் தனக்கு—தலைவனுக்கு. குறைநேர்—குறையை முடிப்பதாக உடன்பட்ட, பாங்கி - தோழி. அவன் குறை உணர்த்தல்: தலைவன் தன்பால் வந்து பன்முறை தன் குறைகூறி வருந்திச் சென்ற நிலையைத் தலைவி உளங்கொள்ளுமாறு ஏற்ப அறிவுறுத்துத் தெளிவித்தல். இறைவிக்கு - தலைவிக்கு]*

136. கையுந் தழையுங் கருகிய மேனியுங் கட்டுரையும்
பொய்யும் புதியர் பழையரும் போல்வர் புனமகலார்
வையங் கடந்த மலரடி யார்தம் மகனுக்கொப்பார்
செய்யுந் திறமென் கொலோதிரு வேயவன் சிந்தனைக்கே.

(து-ரை.) கட்டுரை-தொடுத்துக் கூறுஞ்சொல். பொய்யும் புதியர் என்றது இதற்குமுன் பொய் புகன்று அறியாதவர் என்று குறித்த படி. வையம் கடந்த மலரடியார் - உலகளந்த திருநெடுமால்; அவர் தம் மகன் என்றது மன்மதனை. 'புதியர், போல்வர், அகலார், ஒப்பார்' என முதலிற் பன்மையாகக் கூறிப்பின், 'அவன்' என ஒருமையிற் கூறியது பன்மையொருமை மயக்கம்; அன்றி இவ்வா றுயர்ந்தோனுயினும், யாம் அவனுடன் வேற்றுமையின்றிக் கலந்து பழகுதற்குரிய எளிமையுடையோனே என்பதுபட 'அவன்' என்று ளெனினுமாம். சிந்தனைக்கு - அவன் எண்ணத்தை அறிந்துள்ள நாம் அதற்கு, செய்யும் திறம் என்? எனக் கூட்டுக. கொல், ஓ: அசை. "தன்குறைஈ தென்னுன் தழைகொணரும் தண் சிலம்பன், நின்குறை யென்னும் நினைப்பினுய்ப்-பொன்குறையும், நாள்வேங்கை நீழலும் நண்ணுன் எவன்கொலோ, கோள்வேங்கை யன்னுன் குறிப்பு."—திணைமாலை நூற்றைம்பது : ருக. சஉ

### நாணோடு நீங்கல்

*[தலைவி நாணத்தால் வேறொன்றைக் கூறிக்கொண்டே அவ்விடத்தைவிட்டு நீங்கல்]*

**137.** குருவி பசுங்கிளி கொள்ளைகொண் டேனற் குரல்முழுதும்
இருவி படும்புன மித்தனை போதிது போதுங்குன்றத்
தருவி யிரும்புன லாடவும் பெற்றில மாவியன்னுய்
பருவிய நுண்மணற் பாவையுந் தேடிப் பரிந்தெழுமே.

(கு - ரை.) கொண்டு - கொள்ள; காரணப் பொருளில் வந்த செயவெனெச்சம் திரிந்து நின்றது. ஏனல் குரல் - தினைக்கதிர். குருவியும் கிளியும் கொள்ளை கொள்ளுதலால் இருவிபடும் என்றாள்; இருவி - கதிர் கொய்யப்பட்ட தினைத்தாள். படும் - பட்டிருக்கும். இத்தனைபோது - இவ்வளவு நேரமாக. புனம் இத்தனைபோது இருவிபடும் என்க. ஆட-குளிக்க. ஆவியன்னுயென்றது பாங்கியை. பருவிய பாவை, நுண்மணற் பாவை எனக் கூட்டுக. பருவிய - பெரிய. மணற்பாவை: மணலாற் செய்யப்பட்ட பாவை என்றே னும், மணலின்கட் கிடத்திய பாவை என்றேனும் பொருள் கொள்க. பாவை-விளையாட்டுப் பாவை—'தாதிற் செய்த தண்பனிப் பாவை'— எனக் குறுந்தொகையுள் (சஅ) வருதலுங் காண்க. பரிந்து-வருந்தி. பாவையும் தேடிப் பரிந்தெழுமென்றது செய்யாததைச் செய்தது போல் கூறிய ஒரு மரபு வழுவமைதி. 'பனியேர் நறுமலர்ப் பாயலிற் கண்வளர் பாவையொரு, தனியே கிடந்தழூம்' (கருஞ) என மேல் வருதலுங் காண்க. 'தேடி' என்றதற்கேற்ப 'எழும்' என்றலே சரி யான பாடமாகும்; 'அழும்' எனத் திருத்தல் பொருத்தமன்றென அறிக. புனம் இருவிபடும், புனல் ஆடவும் பெற்றிலம், பாவையும் பரிந்து தேடி எழா நிற்கும் ஆதலின், யான் போதல் வேண்டுமென்று பாங்கியை அகன்றாள் என அறிக. சரு

### இறைவி அறியாள்போன்று குறியாள் கூறல்

*[தலைவி, தனது நாணத்தால் தலைவனை இதற்கு முன்பு அறியாதவள்போன்று, பாங்கி கூறியவற்றை மனத்திற்கொள்ளாது அவனை நோக்கி வேறு ஒரு செய்தியைக் கூறுதல்]*

**138.** அருவியுஞ் சாரலு மேனலுந் தோரையு மைவனமுங்
குருவியுங் கிள்ளையுங் கொள்ளைமென் பூவையுங் கோகிலமும்
வெருவியிங் கேவந்த மென்பிணை மானும் விடாதவெற்பை
மருவியும் போவிர்கொல் லோமஞ்சு காள்விஞ்சு வானகத்தே.

(நு - ரை.) ஏனல் - தினை. தோரை - மூங்கிலரிசி. ஐவனம்- மலைநெல். கிள்ளை - கிளி. கொள்ளை - மிகுதியான. பூவை : 40கூ-ஆம் செய்யுட் குறிப்புரையைப் பார்க்க. கோகிலம் - குயில். வெருவி - அஞ்சி. பிணைமான் - பெண்மான். விடாத வெற்பை - அருவி முதலியவைவிட்டுப் பிரியாத மலையை. மருவியும் - பொருந்தியும். மஞ்சுகாள் - முகில்களே. விஞ்சு வானகத்தே - உலகத்துப் பொருளெல்லாம் அழிந்த காலத்தும் அழியாது எஞ்சி நிற்கும் வானத்தின் கண்ணே. கொல்லோ என்பதில் கொல் : அசை. மலையினின்றும் மேலெழுந்து செல்லும் முகிலை நோக்கித் தலைவி இவ்வாறு கூறினளென்க. சஅ

பாங்கி இறையோற் கண்டமை பகர்தல்

*[ தலைவியின்பொருட்டு வந்த தலைவனைத் தான் கண்டமையைப் பாங்கி அத்தலைவிக்குக் கூறுதல் ]*

139. உருவது மன்னுங் குமாரனு மாரனு மொத்தவள்ளல்
தருவது கண்ணியுந் தண்ணந் தழையுந் தடக்கைவெற்பும்
பொருவது மன்புடன் போவது மீளப் புனத்தயலே
வருவது நிற்பது நின்பொருட் டேகொல் மதிநுதலே.

(நு.- ரை.) உருவது - உருவம்; அது : எழுவாயுருபு. மன்னும் ஒத்த வள்ளல் என்க. மன்னும் - மிகுதியும். குமாரன் - முருகப்பெருமான். மாரன் - மன்மதன். வள்ளல் - வரையறையின்றிக் கொடுப்போன்; தலைவன். தடக்கை வெற்பும் பொருவது - அவ்வள்ளலின் பெரிய கை மலையையும் ஒப்பதாகும்; ஈண்டுக் கையென்றது தோளைக் குறித்து நின்றது. வெற்பும் : உம்மை உயர்வு சிறப்பின்கண் வந்தது. பொருவதும் என்பதிலுள்ள உம்மையைத் 'தருவது' என்பதனோடுங் கூட்டுக. கண்ணி - பூமாலை. மதிநுதலே - பிறைமதிபோன்ற நெற்றியையுடைய தலைவியே. வள்ளல் உரு, குமாரனையும் மாரனையும் ஒப்பது; கை, வெற்பும் பொருவது; அவன் கண்ணியும் தழையும் தருவதும், போவதும், வருவதும், நிற்பதும் நின்பொருட்டேகொல் மதிநுதலே எனக் கூட்டுக. கொல் : அசை. சகு

### பாங்கியைத் தலைவி மறைத்தல்

*[தலைவி, பாங்கிக்கு உண்மையைக் கூறாது தன் களவொழுக்கத்தை மறைத்தல்]*

**140.** **இல்லா தியம்பவு மேலா துரைக்கவும் யானென்றிங்கு**
**வல்லாது சொல்லவும் வல்லைகொல் லோவண்ட லாடிடத்தும்**
**கல்லார வாவி யினும்கடி காவினும் நீயருகு**
**நில்லாத போதுமுண் டோவென்சொ னையின்சொ னேரிழையே.**

(து - ரை.) நேரிழையே! இயம்பவும், உரைக்கவும், சொல்லவும் வல்லைகொல்லோ? வண்டலாடிடத்தும், வாவியினும், காவினும், நீ நில்லாதபோதுமுண்டோ? என் சொனாய் எனக் கூட்டுக. இல்லாதது, ஏலாதது, வல்லாதது என்ற இருக்கற்பாலன தொகுத்தல் விகாரம் பெற்றன. ஏலாதது—பொருந்தாத சொல். வல்லாதது - என்னால் செய்யமுடியாதது. வண்டல் ஆடு இடத்தும் - மகளிர் விளையாடுமிடத்தினும். கல்லாரம் வாவியினும் - குவளைமலர் பொருந்திய குளத்தினும். கடி காவினும் - மணம் பொருந்திய சோலையினும்; கடி - காவலுமாம். போது - பொழுது. இல்லாத பழியை ஏற்றிக் கூறினாய் என்னும் கருத்தால் 'என்சொனாய்' என்றாள். ௪௬

### என்னை மறைப்ப தென்னெனத் தழாஅல்

*[என்னை மறைப்பது—எனக்குத் தெரியாமல் மறைப்பது. தழாஅல்—தழுவிக் கூறுதல்]*

**141.** **மஞ்சறி யாமினும் வானறி யாத மருந்துமற்றுன்**
**நெஞ்சறி யாத நினைவுமுண் டோநெடு நீருலகில்**
**நஞ்சறி யாவன்பி னல்லவ ரூட்டினும் நாணியசெம்**
**பஞ்சறி யாத பனிமலர்ச் சீறடிப் பைந்தொடியே.**

(து - ரை.) மஞ்சு அறியா மினும் - முகிலறியாத மின்னலும், வான் அறியாத மருந்தும் - வானவர் உணராத அமிழ்தும், வான்: இடவாகு பெயராய் அவ்விடத்துள்ளாரை உணர்த்திற்று. நெடுநீர் - கடல். நஞ்சு - நைந்து, போலி: 'நஞ்சிலள் நாணிலள்' (கம்ப. அயோத்தி: ௨௦௪.) என்பதுபோல. நஞ்சறியா - குறையாத. நட்டோரீந்தது நஞ்சேயாயினும், அதனையும் அறியாதுண்ணற் கேதுவாகிய பேரன்பினையுடைய நல்லவர் எனலுமாம். 'பெயக்கண்டு நஞ்சுண்டமைவர் நயத்தக்க-நாகரிகம் வேண்டு பவர்' (குறள்: ௫௮௦) என்ற

தூஉங் காண்க. நல்லவர் - பாங்கியர். ஊட்டினும் - பஞ்சை யப்பினும். நாணிய - கூசிய: தம் மென்மையால் கால்கள், பஞ்சூட்டினும் கூசுகின்றன வென்க. 'அரக்கார்ந்த, பஞ்சிகொண் டூட்டினும் பையெனப் பையெனவென், றஞ்சிப்பின் வாங்கும் அடி' (நாலடி : ௩௯௬) பனிமலர் - குளிர்ந்த தாமரை மலரையொத்த. பைந்தொடியே - பசும்பொன்னால் செய்த வளையலை யணிந்த தலைவியே. பைந்தொடியே! மஞ்சறியா மின்னும் வானறியா மருந்தும் இல்லாமைபோல உன் நெஞ்சறியாத நினைவும் இல்லையாதலின், நீ என்னை மறைத்தல் என்னோவெனத் தழுவி உரைத்தவாறு காண்க.

(வே - ம்.) மஞ்சறியாயினும்; மற்று. இ, வி. க௩௭. ௪௭

பாங்கி கையுறை புகழ்தல்

*[தலைவனிடம் பெற்ற கையுறையைப் பாங்கி தலைவியிடம் புகழ்ந்து கூறல்]*

**142.** வில்லும் பிறையுந் திறையிடு வாணுதன் மெல்லியலா
யெல்லுங் குமுத மலருங்கண் டாயிரு கோங்கரும்பும்
வல்லும் பொருத வனமுலைக் கான மணியிதுபேர்
சொல்லும் பொழுது பிரமனு மாலுந் தொழத்தகுமே.

(து - ரை.) திறையிடல், நுதற்குத் தோற்று; திறை - கப்பம். மெல்லியலாய் : தலைவியே. எல்லும் - இப்பகற் பொழுதினும். குமுதம் - அல்லி; இஃது இரவில் மலர்வதாகலின் எல்லும் மலர்தலை வியந்து கூறினாள். கண்டாய் : முன்னிலையசை. வல் - சூதாடு கருவி. பொருத - ஒத்த. நீவிர் எமக்கொவ்வீர் எனப் போர்செய்த எனலுமாம். பேர் - மணியின் பேர். பிரமனும் மாலும் தொழுதல் அதன் சிறப்பைக் கருதி. மெல்லியலாய்! குமுதம் எல்லும் மலரும்; முலைக்கான மணி இது; (இதன்) பேர் சொல்லின் தொழத்தகும் எனக் கூட்டுக. இக்கையுறையை ஏற்க என்பது குறிப்பு. ௪௮

வலிதாகச் சொல்லிக் குறை நயப்பித்தல்

*[பாங்கி, தலைமகன் பெரிதும் வருந்திச் சென்றான் என்று வன்மொழி கூறித் தலைவி குறையை ஏற்குமாறுசெய்தல்]*

**143.** சாயா வறிவுந் தளர்ந்துசென் றார்சென்ற தன்மைகண்டு
மாயா வெனக்குள்ள வன்கண்மை யேமயி லேபயிலும்
வேயார் சிலம்பிற் களிறும் பிடியும் விழைந்தருவி
தோயா வனைநிழ லிற்றுயில் கூருந் தொடர்வுகண்டே.

(கு - ரை.) சாயா அறிவும் தளர்ந்து - கெடாத அறிவும் கெட்டு. எனக்கு உள்ள வன்கண்மை - என்னிடம் அமைந்துள்ள கொடுமைகள், மாயா என்க. மாயா - அழியா. தலைவியின்மாட்டமைந்த வன்கண்மையைத் தன்மாட்டுள்ளதாகக் கூறினாள், அவள் தன் சொல்லை ஏலாமைபற்றி. வேய்ஆர் - மூங்கில் நிறைந்த. சிலம்பில் - மலையில் உள்ள. களிறு - ஆண் யானை. பிடி - பெண் யானை. விழைந்து - விரும்பி. தோயா - தோய்ந்து; படிந்து. வளை நிழலில்-கவிந்த நிழலில். தொடர்வு - (அவ்யானைகளின்) அன்பை. தொடர்வு கண்டு தளர்ந்து சென்றார்; சென்ற தன்மை கண்டும் வன்கண்மை மாயா எனக் கூட்டுக. 'வளையும் குழல்வஞ்சி வாணன்தென் மாறை வரைக்களிறு, திளையும் தழையும் பிடியொடு மேய்ந்து தெளிந்தஇன்னீர், சுனையுண் டசோக நிழல்சோகம் நீங்கித் துயில்வதுகண், டெனையும் கடைக்கணி யாஇனை யாநிற்பர் ஏதிலரே' தஞ்சை. ௧௨௩. ௪௩

### மெலிதாகச் சொல்லிக் குறை நயப்பித்தல்

*['தலைவனைக் கண்ட மரப்பாவையும் மனம் நெகிழும்; நீ இரங்காதது என்னோ?' என மென்மொழிகூறிப் பாங்கி தலைவியைக் குறை நயக்குமாறு செய்தல்]*

144. இரப்பா ரொருவர்க் கிருநிதி வைத்தங் கிருந்துமுள்ளங்
கரப்பா ருரைசெயுங் கள்ளமெல் லாமுன்னங் கட்டுரைத்தேன்
பரப்பாரு மல்குல்மின் னேயினி நானென் பகர்வதென்றே
மரப்பாவை யுங்கண்ட போதுரு காதல்ல வள்ளலையே.

(கு - ரை.) இருநிதி-பெரிய செல்வம். கரப்பார்-உண்மையை ஒளிப்பார். கள்ளம்-வஞ்சகச் சொல். கட்டுரைத்தேன்-தொடுத்துக் கூறினேன். இரப்பார்க்குக் கரப்பார் உரைசெயும் கள்ளமெல்லாம் கட்டுரைத்தேன் என இயைக்க. பரப்பு ஆரும்-பரந்த. பகர்வதற்கு வேறுகள்ளம் இன்மையின் 'நான் என் பகர்வது?' என்றாள். 'கட்டுரைத்த பொய்யும் தொலைந்தன'-தஞ்சை-௧௨௪. என்னோ: இரக்கத்தின்கட் குறிப்பு. உருகாதல்ல-உருகும். வள்ளலை - தலைவனை. வள்ளலைக் கண்டபோது உயிரற்ற மரப்பாவையும் உருகுமென்றால், நீ இரங்காதது என்னோ? என்று குறிப்பித்தவாறு. ௫௦

தலைவன் குறிப்பு வேறாக நெறிப்படக் கூறல்

*[தோழி, தலைவன் குறிப்பு வேறாக இருத்தலைத் தலைவிக்கு ஒழுங்குபடக் கூறுதல்]*

**145.** தருக்குங் களிறு முழையுமுன் றேடித் தழைகைக்கொண்டு
மருக்குங் குமமுலை யாய்வழி கேட்டவர் வந்துமஞ்ஞை
செருக்கும் பனிவரைச் சீறூரி லுங்கள் தெருவுமன்றும்
இருக்கும் படிறனென் னறி யேனவ ரெண்ணியதே.

(கு - ரை.) தருக்குங் களிறு-மதத்தால் செருக்குதலையுடைய யானை. உழை-மான். மரு குங்குமம் முலையாய்-நறுமணம் பொருந்திய குங்குமக்குழம்பினை யணியப்பெற்ற முலையையுடைய தலைவியே. மஞ்ஞை செருக்கும் பனிவரை சீறூரில்-மயில்கள் களிப்புறுதற் கிடமாகிய குளிர்ந்த மலையிலுள்ள உமது சிற்றூரில். தெருவும் மன்றும்-தெருவிலும், அது சூழ்ந்த மன்றிலும்; 'மன்று சூழ் மறுகில்' (கஉக.) என முன்பு வந்திருத்தலுங் காண்க. இருக்கும்-இருத்தற்குரிய. படிறன்-பொய்யன்; 'படிறன் இன்னோர்க்குப் பகரார் நூலே'-நன்னூல்-நஅ. அவர் எண்ணியது அறியேன் என்றது மடலேறுவர் போல்வர் என்று குறித்தபடி. தழை கைக்கொண்டு தேடிவந்து வழிகேட்டவர் என்றார்; அறியேன் எனக் கூட்டுக. 'காய்தந் திடும்பனை மீதேறின் நல்ல கனிதருமென், றாய்தந்த கோற்றொடி யாங்கிசைத் தார்அன்பர் அன்னவர்தம், வாய்தந்த சொல்லி தறியேன் அவர்தம் மனக்கருத்தே'-கோடீச்சுரக்கோவை-கஙச.

(வே - ம்.) இருக்கும்படி என்னென்றார். ருக

பாங்கி தலைவியை முனிதல்

*[முனிதல்-சினந்து உரைத்தல்]*

**146.** சாந்தந் தருமித் தழைக்குக் குறையிபஞ் சாய்த்ததனு
வேந்துங் கரத்தி லிருந்தது வோவிங் கெழுதரிய
மாந்தண் டளிர்நிறத் தாய்வினை யேன்கையில் வந்ததுவோ
பூந்தண் புரிகுழ லாரிடை யாமுன் புகலெனக்கே.

(கு - ரை.) சாந்தம் - சந்தனமரம். குறை - குற்றம். இபம் சாய்த்த தனு ஏந்தும் கரம்-யானையைக்கொன்ற வில்லைத்தாங்கிய கை; என்றது தலைவன் கையை. நிறத்தாய்: தலைவியைப் பாங்கிவிளித்தது. வினையேன் என்றாள் தான் கொடுத்தும் வாங்காமைபற்றி. குழலார்:

மற்றைப் பாங்கியர். இடையாமுன்-நெருங்கிச் சூழாமுன். நிறத் தாய்; இத்தழைக்குக் குறை இருந்ததுவோ? வந்ததுவோ? (இரண் டிடத்தும் குற்றியலுகரம் பொதுவிதி பெற்று முடிந்தது.) இடையா முன் எனக்குப் புகல் எனக் கூட்டி உரைக்க.

(வே - ம்.) இங்கெழுந்தரிய. ௫உ

### தலைவி பாங்கியை முனிதல்

147. வாளாது நின்றென்னை வந்தன சொல்லி மணிவரைவேய்த்
தோளாய் புலந்து துயர்வதென் னேதொன்று தொட்டுவந்திந்
நாளாக வொன்றி நயந்தநங் கேண்மையி னாளுமுன்சொற்
கேளா தனவுமுண் டோவென்கொ லினியிக் கேட்கின்றதே.

(து - ரை.) வாளாது-ஒருகுற்றமும் செய்யாது. 'நின்ற' என் பதில் பெயரெச்ச அகரம் தொக்கது. வந்தன-வாயில் வந்த சொற் களை, வினையாலணையும் பெயர்; 'ஐய! நின்தன் வாய்தந்தன கூற தியோ'-கம்பர். அயோத்தி:சஙு. 'வாய்க்கு வந்த மட்டும் பேசினன்' என்னும் உலகவழக் குண்மையும் காண்க. மணிவரைவேய் தோளாய்-அழகிய கணுக்களையுடைய மூங்கில்போன்ற தோளை யுடைய பாங்கியே; வரை-கணு; மலையுமாம். புலந்து-சினந்து. இந் நாளாக-இந்நாள்வரையில். ஒன்றி-சேர்ந்து. நயந்த நம் கேண்மை யில்-விரும்பிய நம் நட்பில். நாளும்-ஒருநாளேனும். இனி-இப் பொழுது. அயலாரைக் கேட்பதுபோல் கேட்கின்றது என்? என்க. கொல்: அசை. அவ்வாறு கேட்டலை-கஙுசு, கஙுக ஆம் செய்யுட் கள் முதலியவற்றால் அறிக. தோளாய்! இந்நாளாகக் கேண்மையில் நாளும் கேளாதனவும் உண்டோ? (அங்ஙனமிருக்க) சொல்லித் துயர்வதும், கேட்கின்றதும் என்? எனக் கூட்டுக.

(வே - ம்.) வந்தெனை; வந்தனஞ் சொல்லி; நயந்தருங்கேண்மை. இ-வி. கஙுஎ. ௫ங

### தலைவி கையுறை ஏற்றல்

*[ தலைவன் கையுறையைத் தலைவிபாங்கியிடமிருந்து ஏற்றுக்கொள்ளல் ]*

148. தீதாகி லென்னன்றி நன்றாகி லென்னின் சிலம்பர்தந்த
போதார் தழையும் புதுநறுங் கண்ணியும் பூங்குவளைத்
தாதார் மலர்க்குழற் றையனல் லாய்வையஞ் சாற்றுவன
யாதாகி லென்வந்து நின்கைய தானதின் றென்கையதே.

(கு - ரை.) சிலம்பர்-தலைவர். நின் சிலம்பர் என்றாள் அவனுக்காக அவள்பரிந்துநின்றமை கருதி. போது ஆர்-பூக்கள் நிறைந்த. கண்ணி-பூமாலை. தாது ஆர்-பூந்துகள் நிறைந்த. தையல்-பெண், தையல் நல்லாய்: இருபெயரொட்டுப் பண்புத்தொகை. தையல்: அழகுமாம். நல்லாயென்றது பாங்கியை. வையம்-உலகத்தார்: இடவாகுபெயர். நல்லாய்! சிலம்பர் தந்த, நின்கையதாகிய தழையும் கண்ணியும் இன்று என் கையது ஆகும். (அதனால்) தீதாகில் என்? நன்றாகில் என்? (வேறு) யாதாகிலென்? என இயைக்க. கையது-கையின்கண் உள்ளது: குறிப்புவினைமுற்று. 'நின்கையதானது என்கையதே' என்றது, நீ வாங்கியது யாதாகிலும் அதனை யான் வாங்கிக்கொள்வேன் என்றபடி.

(வே - ம்.) யாதாயிலென். இ - வி. கஅஎ. ௫௪

தழை நயப்புரைத்தல்

*[தலைவி கையுறையை விரும்பி ஏற்றுக்கொண்டமையைப் பாங்கி தலைவனுக்கு உரைத்தல்]*

**149.** வெல்லப் பிறந்த விழிமட வாரெழின் மேனியென்றுஞ்
சொல்லப் பிறந்த தரும்பிவர் பூந்தழை தோன்றியங்கை
செல்லப் பிறந்து சிறந்தநல் லாடன் றிருமுலைமேற்
புல்லப் பிறந்தது சொல்லவொண் ணாதெம் புரவலனே.

(கு - ரை.) வேலும், கருவிளையும், மென்மானும், காவியும், சேலும், வடுவகிரும், செஞ்சரமு (தண்டி-௩௨. மேற்கோள்) மாகிய இவற்றை வெல்லப் பிறந்த விழியையுடைய மடவார் என்க. மடவார் - பெண்கள். எழில்-அழகு. மேனி என்றும் சொல்லல், நிற ஒற்றுமையால் என்க. 'மெய்யானும் ஒப்பெனலாம் தரித்தா லிந்த மென்தழையே'-ஆரூர்க்கோவை-கசஎ. அரும்பு இவர் பூந்தழை-முகையுடன் கூடியபூந்தழை. அம்கை - தலைவியின் அழகிய கையில். நல்லாள்: தலைவி. புல்ல-பொருந்த. தழையின் பெருமையைச் சொல்லவொண்ணாதென்க; ஒண்ணாது - முடியாது. புரவலனே-தலைவனே. புரவலனே! மேனி என்றும் சொல்லும்படி பிறந்ததாகிய தழை அங்கை செல்லப்பிறந்தது; பின்முலைமேல் புல்லப் பிறந்தது; அதன் பெருமையைச் சொல்ல ஒண்ணாதெனக் கூட்டுக. 'அன்பால், சாயாத கொங்கையின்மேல் அணைத்தாள்'-கஉகூ என்பது தஞ்சைவாணன் கோவை. ௫௫

### பகற்குறி நேர்தல்

*[தலைவன் தலைவியைப் பகற்காலத்தில் கூடுதற்குரிய இடத்தைக் கூறப் பாங்கி உடன்படல்]*

**150.** கல்லுங் கழையுந் தழுவுமிக் கானவர் தாம்விரும்பும்
இல்லும் பெரிது மிகழ்ச்சிய தாயினும் யாரொருவர்
ஒல்லுந் துணையு மொருபகற் றங்கி வரும்பகற் றஞ்
செல்லுந் திறநினை வார்சிலம் பாதங்கள் சேணகர்க்கே.

(கு - ரை.) கழை - மூங்கில். தழுவும் - பொருந்திய. கானவர் - காட்டின்கணுள்ள தலைவியின் இனத்தாராய வேடுவர். இல் - வீடு; இல்லும் என்பதிலுள்ள உம்மை, கானவரேயன்றி யவர் உறையும் இல்லும் இகழ்ச்சியதென இறந்தது தழீஇ நின்றது. இகழ்ச்சியது ஆயினும் - சிறப்புடையதன்றாயினும். ஒல்லும் துணையும் - இயன்ற வரை (முயற்சி செய்யினும்). அக்கானவர் ஊரில் தங்கி என்க. வரும் பகல் - மறுநாள். சிலம்பா - தலைவனே. சேண் நகர்க்கு - தூரத்திலுள்ள தங்கள் நகரத்திற்கு. யார் ஒருவர் என்றது ஒருவரும் இல்லையென்றபடி. கானவர், தம் ஊரில் அயலார் ஒருவரையும் இரவில் தங்கவிடார் என்பது கருத்து. ஆதலின், ஊர்க்கு வெளியே உள்ள சோலையில் பகற்காலத்தில் தலைவியைக் கூடலாகும் என்று குறிப்பித்தாளாயிற்று. சிலம்பா! இகழ்ச்சியதாயினும் யார் ஒருவர் ஒல்லும் துணையும் (முயன்றேனும் அவர் ஊரில்) ஒருபகல் தங்கி வரும் பகல் தங்கள் நகர்க்குச் செல்லும் திறம் நினைவார்? எனக் கூட்டியுரைக்க.

(வே - ம்.) எல்லுந் துணிவும் நி. சு

### பகற்குறியிடங் கூறல்

*[துறைப்பொருள் வெளிப்படை]*

**151.** கோடையுங் கொண்டலுங் கண்டறி யாத குளிர்பொழிற்கண்
வாடையுந் தென்றலு மேவரு மேவரிற் காண்பதன்னப்
பேடையுஞ் சேவலுஞ் சேலும் வராலும் பிறங்குநன்னீர்
ஓடையுஞ் சங்கமுஞ் சங்குமி ழாநின்ற வொண்முத்துமே.

(கு - ரை.) கோடை - வெயில். கொண்டல் - மழை; வினைமுதலாகு பெயர். இவற்றை யறியாத பொழில் என்றது தழைத் தடர்ந்த பொழில் என்றபடி. 'வெயில்நுழை பறியாக் குயில்நுழை

பொதும்பர்' - மணிமேகலை : ச-ரு. என்றதூஉங் காண்க. பொழில்-சோலை. வாடை - வாடைக்காற்று. மேவரில் - உள்ளே சென்றால். பேடை - பெண் அன்னம். பிறங்கு - மிகுந்த. ஓடை முதலியவற்றைக் கூறியது குளிர்ந்த பொழில் என்பதற்காக. உமிழ்தல் - ஈனுதல். அப்பொழிற்கண் வருக என்பது கருத்து. அறியாத பொழிற்கண் வரும் ; (அதனால்) மேவரில் காண்பது பேடை முதலியனவே எனக் கூட்டுக. நரு

### குறியிடங் கொண்டு சேறல்

*[பாங்கி, தலைவியைக் குறியிடத்திற்கு அழைத்துக்கொண்டு செல்லுதல்]*

**152.** பேதா யறிவின் பிறந்தக மேமடப் பெண்ணமுதே
போதா யருவிப் புனன்மலைச் சாரலின் பூண்முலைக்கு
வாதாய குன்றை மறுமொழி கேட்கவு மைக்கண்களால்
நீதான் வெறுத்த குவளையம் போது நெரிக்கவுமே.

(து - ரை.) பேதாய் என்றது பருவம் குறியாது இளமை குறித்து நின்றது. அறிவின் பிறந்தகமே என்றது தலைவி யிளையளாயினும் பேரறிவினள் என்றபடி. போதாய் - என்னுடன் வருவாயாக. வாது ஆதல் - முலையை வெல்லக் கருதி யென்க. குன்றை மறுமொழி கேட்டல் - வரையெதிர் கூவல் என்னும் விளையாட்டு (கஙக). நெரித்தல் - அலர்வித்தல் ; இரட்டுற மொழிதலால் நசுக்கல் என்னும் பொருளுங் கொள்க ; வெறுத்தாளாதலின் நசுக்கினளென்க. பேதாய் ! பிறந்தகமே ! அமுதே ! கேட்கவும், நெரிக்கவும் சாரற்குப் போதாய் எனக் கூட்டுக. நஅ

### குறியிடத்துய்த்து நீங்கல்

*[உய்த்து—தலைவியை அனுப்பிவிட்டு, நீங்கல்—மலர் கொய்து வருவேன் என்று சொல்லிப் பாங்கி நீங்குதல்]*

**153.** உகையார் முகிலி னொலிவெள் ளருவி யுருமென்றஞ்சித்
திகையாது நில்லிச் செயலைய வீழலின் செங்கைகளு
நகையார் முறுவலுங் கண்டல ராது நடுங்கியந்தண்
முகையாக வுந்தரு மோசெய்ய காந்தளு முல்லையுமே.

(து - ரை.) உகையார் - செல்லுதலையுடைய. உரும் - இடி. முகிலின் உருமெனக் கூட்டுக. அருவி யொலியை உருமென்

றஞ்சி என்க. திகையாது நில் - மயங்காது நிற்பாயாக. செயல் அயல் நீழல் - அசோகின் பக்கத்தேயுள்ள நிழலில். நகை ஆர் முறுவல் - ஒளிபொருந்திய பல். அலராது - மலராமல். தருமோ - தருதலுங் கூடும்; ஓ: ஐயப்பொருட்டு. செய்ய - சிவந்த. 'முல்லையும் காந்தளும் நின் முறுவலையும் கைகளையுங் கண்டு நடுங்கி அலராது முகை யாகவும் தரக்கூடும்; ஆதலால் நீ அஞ்சித் திகையாது இந்நீழலின் கண் நில்' எனத் தலைவியைக் குறியிடத்தில் நிறுத்திப் பாங்கி அவ் விடம் விட்டகன்றாளென்க. ௫௩

நீங்கும் தோழி தலைவனுக்கு உணர்த்தல்

*[தலைவியைக் குறியிடத் துய்த்துச் செல்லுகின்ற தோழி, தலைவன்பால் தலைவி குறியிடத்தில் தனித்திருப்பதை உணர்த்தல்]*

154. பனியேர் நறுமலர்ப் பாயலிற் கண்வளர் பாவையொரு
தனியே கிடந்தழுந் தாயுமங் கில்லைத் தடஞ்சிலம்பா
முனியேல் விடைகொள்வன் முற்றுநின் காவன் முகிழ்நகைசெங்
கனியே பினியசெவ் வாய்நவ்வி மான்விழிக் காரிகையே.

(த - ரை.) பனி ஏர் - குளிர்ச்சியும் அழகுமுடைய. பாயலில் - படுக்கையில். கண்வளர் - தூங்குகின்ற. பாவை: கரு௭-ஆம் செய்யுட் குறிப்புரையைப் பார்க்க. தாய் என்றது தலைவியை. அங்கில்லை என்றது இங்குக் குறியிடத்தில் வந்திருக்கின்றாள் என்று குறித்த படி. தடஞ்சிலம்பா - பெரிய மலைக்குரிய தலைவனே. முனியேல் - சினவற்க. முகிழ் நகை - முல்லை முகையையொத்த பல். செங்கனி - கோவைக்கனி. நவ்வி: மான்வகையுளொன்று; நவ்வியாகிய மான் என இருபெயரொட்டுப் பண்புத்தொகை. காரிகை - தலைவி. நகை யையும், வாயையும், விழியையுமுடைய காரிகை என்க. சிலம்பா! பாவை அழும்; தாயும் இல்லை; (ஆதலின், யான்) விடை கொள்வன்; முனியேல்; காரிகை நின்காவல் எனக் கூட்டுக. காவல் - அடைக் கலம். 'நெய்தல் பரப்பிற் பாவை கிடப்பி, நின்குறி வந்தனென் இயல்தேர்க் கொண்க, செல்கம் செலவியங் கொண்மோ' - குறுந் - ககசு. ௫௰

(வே - ம்.) தாயுமிங்கில்லை. இ. வி. கரு௭.

### இறைவி இறையோனிடத்து எதிர்ப்படுதல்

*[தலைவி, தலைவன் முன்னிலையை எய்த, அவன் அவளைக் கண்டு புகழ்ந்து கூறல்]*

155. நீயோ திருமக ளின்னைமுன் னுள்வர நேர்ந்துபெற்ற
தாயோ வமுதந் தருந்திருப் பாற்கடல் கார்க்கடல்போல்
தீயோ டழல்விழிச் சேக்கையின் மேற்றிருக் கண்வளர்ந்த
மாயோ னெனநினைந் தோவென்னை வாழ்விக்க வந்ததுவே.

(கு - ரை.) நேர்ந்து - (நின்னைப் பெறுதற்குரிய நல்வினைப் பேற்றை) அடைந்து. அப்பாற்கடலில் சேக்கையின்மேல் கார்க் கடல்போல் கண்வளர்ந்த மாயோன் என இயைக்க. தீயோடு அழல் விழிச்சேக்கை - நஞ்சாகிய தீயோடு கூடி அழலுகின்ற கண்ணை யுடைய ஆதிசேடன் என்னும் பாம்பாகிய படுக்கை. அழலுதல் - கொதித்தல். சேக்கை - படுக்கை. கண்வளர்ந்த - தூங்கிய. மாயோன் - திருமால். கார்க்கடல் மாயோனுக்கு உவமை. பாற்கடலில் பாம்புப் படுக்கையின்மீது மாயோன் கண்வளர்கின்றான் என்பது புராண வரலாறு. நீயோ திருமகள்; நின்னைப் பெற்ற தாயோ பாற்கடல்; அங்ஙனமிருந்தும் இங்கென்னை வாழ்விக்க வந்தது (என்னை) மாயோன் என நினைந்தோ? எனக் கூட்டுக. கூக

### புணர்ச்சியின் மகிழ்தல்

*[தலைவன் புணர்ச்சியினால் மகிழ்ந்து கூறுதல்]*

156. பங்கே ருகமலர்ப் பாதம் பணிந்து பரிமளப்பூங்
கொங்கே ரலங்கற் குழல்மணங் கொண்டு குவிமுலையுஞ்
சங்கேர் கழுத்துந் தடம்பணைத் தோளுந் தழுவியிங்ஙன்
எங்கே யெவருக் கிவருமிக் காதலு மெய்தியதே.

(கு - ரை.) பங்கேருகமலர் பாதம் - தாமரைமலரையொத்த தலைவியின் காலை. பரிமளம் - நறுமணம். கொங்கு - பூந்துகள். ஏர் - அழகு; இவை யாவும் குழலுக்கு அடை; அலங்கலுக்கு ஆக்கினும் அமையும்; அலங்கல் - மாலை. குழல் மணங்கொண்டு - குழலை மோந்து. சங்கு ஏர் - சங்கையொத்த; ஏர்: உவமவுருபு; அழகு மாம். தடம்பணை - பெரிய மூங்கில்போன்ற. தழுவி இன்புற என ஒருசொல் வருவிக்க. இங்ஙன் - எனக்குக் கிடைத்தமைபோல.

இவரும் - இத்தலைவியைப்போன்ற தலைவியும்: இவரும் இக்காதல் - பொருந்திய இக்காதலெனலுமாம். இக்காதலும் - எனக்கமைந்ததை யொத்த அன்பும். இவரும் இக்காதலும் எய்தியதே எனத் திணை விரவி அஃறிணை முடிபு ஏற்றது. பணிந்து மணங்கொண்டு தழுவி (என்போல் இன்புற) இங்ஙன் இவரும், இக்காதலும் எங்கே எவருக்கு எய்தியதென முடிக்க. ஒருவருக்கும் எய்தியதில்லை என்பது கருத்து. 'யார் உம்பர் தம்பதம் என்போல எய்தினர் இம்பர்' - தஞ்சை. ௫௧. ௬௨

தலைவியை விடுத்தல்

*[தலைவன், தலைவியைப் பாங்கியினிடம் அனுப்புதல்]*

**157.** **நலமார் கலவி நயந்தென்னை வாழ்வித்து நாணிறைந்த**
**குலமா மடக்கொடி யேயடி யேன்விடை கொண்டுநிற்கப்**
**பொலமால் வரைவழிக் குத்துணை யாவுடன் போந்தநெஞ்சை**
**மலர்மாளி கையள வுங்கொண்டு போகி வரவிடுமே.**

(து - ரை.) நலம் ஆர் கலவி - இன்பம் நிறைந்த புணர்ச்சியை, நயந்து - விரும்பி வந்து. தலைமேல் விடம் ஏறியதை (௧௧௨) யொத்த காமத்துன்பத்தைத் தலைவி தன் கலவியால் போக்கினளாதலின் 'வாழ்வித்து' என்றான். உயிரினும் கற்புடைப் பெண்கட்கு நாண் சிறந்ததாகலின், நாணத்தின் தன்மை அவள்பாற் கண்டுணர்ந்து பெருவியப்புற்ற தலைவன், தலைவியை, 'நாண் நிறைந்தகுலமா மடக் கொடி' என்று பாராட்டினன். 'என்னை வாழ்விக்க வந்ததுவே' (௧௫௫). பொலம் மால்வரை வழிக்கு - அழகுபொருந்திய பெரிய மலையின் மேலுள்ள வழிக்கு. உடன்போந்த நெஞ்சை - உன்னுடன் வந்த எனது நெஞ்சை; என்றது தலைவி வீடு செல்லும் அளவும் தன் நெஞ்சு அவளையே நினைத்துக்கொண்டிருத்தலை உடன்போந்ததாகக் கூறினன். 'என் உள்ளம் பின்னும் தன் உழையதுவே' (குறுந்: ௧௬௨) 'அந்தீங் கிளவிக் குறுமகள், மென்தோள் பெறல்நசைஇச் சென்றஎன் நெஞ்சே (அகம்: ௯) தலைவியைத் திருமகளாகக் கருதினன் (௧௫௫) ஆதலின், அவள் வீட்டினை 'மலர் மாளிகை' என்றான். 'வாழ்வித்து' என்னும் எச்சம் 'நிறைந்த' என்பதனோடு இயையும். கொடியே! (யான்) விடைகொண்டு நிற்க(வும்) போந்த நெஞ்சை வரவிடும் எனக் கூட்டுக. ௬௩

நெஞ்ச மிக்கது வாய்சோர்தல்

[தலைவி நெஞ்சத்தின்கண் மிக்க துன்பத்தை வாயாற் கூறி வருந்துதல்]

158. பொன்றுத காதற் பொறையாரு மாவி புலம்பிநைய
இன்றுரு மின்றி யிருந்தென்னை யாளிக் குருந்திவிடை
துன்றுத வன்பொடு கூடியும் வாடியுங் கோலங்கொண்டு
சென்றுர் மணிநெடுந் தேரொடு போனதென் சிந்தையுமே.

(கு - ரை.) பொன்றுத - குறையாத. காதல்பொறை ஆரும் ஆவி - காதலாகிய பாரம் நிறைந்த உயிர். 'சிறுகோட்டுப் பெரும் பழந் தூங்கி யாங்கிவள், உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே' (குறுந்: கஅ) புலம்பி நைய - தனித்து வருந்த. இன்று-இன்றைக்கு. ஆள் - ஆள்வதற்கு இடமாக இருந்த. குருந்து - குருந்த மரம். பிரிந்து செல்லுதலைக் கருதி வருந்தினுதலின் 'வாடியும்' என்றுள். கோலம் - அழகு. பிரிவுத் துன்பத்தால் இழந்த அழகைத் தலைவன் கொண்டு சென்றதாகக் கூறினள். சென்றுர்: தலைவருடைய. மணி- அழகிய. ஆவி புலம்பி நையக் கோலங்கொண்டு சென்றுர் தேரொடு என் சிந்தையும் போனது எனக் கூட்டுக. கூஅ

புனத்தை நோக்கிக் கூறல்

[தலைவி கூற்று]

159. மேகந் தழுவும் வியன்மலைச் சாரலில் வெவ்வினையே
ஆகந் தழுவியு மன்பமை யாவென் னசையறிந்தும்
பாகன் பரிவிடப் பின்புமுன் பார்த்தின்று பையப்பையப்
போகின்ற தேரின்ன மும்வரு மோவிப் புனத்திடையே.

(கு - ரை.) வியன் - பெரிய. ஆகம் - உடம்பை. அன்பு அடங்கா - ஆசை யடங்காத. நசை - புணர்ச்சி வேட்கையை. பாகன்- தேர்ப்பாகன். பரி - குதிரை. போகின்ற என்னும் எச்சத்தைத், தலைவர் என்னும் சொல் வருவித்து முடிக்க. தழுவியும் அறிந்தும் பார்த்துப் போகின்ற தலைவருடைய தேர் இன்னமும் இப்புனத் திடையே வருமோ? எனக் கூட்டுக. கூகு

### பாங்கி கையுறை காட்டல்

*[பாங்கி, தான் பறித்துவந்த பூ முதலியவற்றைத் தலைவிக்குக் காட்டிக் கூறல்]*

**160.** பனியேர் நறுமலர்ப் பாவைகண் டாலும் பணிந்திறைஞ்ச
நனியே நெறிக்கு நறுநுத லாய்கன்னி நாகநிழல்
தனியே புனைநிறுத் திச்சென்று நீடிய தன்மைகொண்டு
முனியே லுவையுவை நின்முகைக் காந்தளு முல்லையுமே.

(து - ரை.) பனிஏர் நறுமலர் பாவை - குளிர்ந்த அழகிய நல்ல தாமரை மலரின்கண் உள்ள பாவைபோன்ற திருமகள். பணிந்து இறைஞ்ச - தாழ்ந்து வணங்க. நனியே நெறிக்கும் - மிகவும் நன்றாக விளங்கும்; நெறித்தல் - சீர்பெற நிற்றல். கன்னி நாகம் - இளைய புன்னைமரம். நீடிய தன்மைகொண்டு - காலம் நீட்டித்தமைக்காக. முனியேல் - வெகுளற்க. உவை உவை - இவை இவை. நின் - நினக்காகப் பறித்துவந்த. முகைக்காந்தள் - காந்தள் முகை. நுதலாய்! தன்மைகொண்டு முனியேல்; காந்தள்முகை, முல்லை முகை உவை உவை; (ஏற்றருள்க) என ஒருசொல் வருவித்து முடிக்க. கூகூ

### தலைவியைப் பாங்கிற் கூட்டல்

*[பாங்கில்—மற்றைப் பாங்கியர் கூட்டத்தில், சேர்த்தல்]*

**161.** பாடின மேதகு பஞ்சுரஞ் செஞ்சிறைப் பாணினங்கள்
வாடின மேனியும் வண்ணமுந் தோளு மலர்க்கழுநீர்
சூடின மேயொண் சுனையுங் கழங்குந் துளங்குபந்தும்
ஆடின மேயினி நாம்வண்ட லாய மடைகுவமே.

(து - ரை.) மேதகு பஞ்சுரம் - மேன்மை பொருந்திய பாலைப் பண்ணை. பாண் இனம் - வண்டின் கூட்டம்; பாட்டை உணர்த்தும் 'பாண்' என்னும் சொல் 'செஞ்சிறை' என்னும் அடையால், பாட்டினைப் பாடுகின்ற வண்டை உணர்த்திற்று. இனங்கள் பாடின வென்க. மேனி - நிறம். வண்ணம் - அழகு. கழுநீர் மலர்-அல்லிப் பூவை. நாம் இருவரும் சூடினம். துளங்கு பந்து - திரட்சியால் அசைகின்ற பந்து. வண்டல் ஆயம் - விளையாடுகின்ற பாங்கியர் கூட்டத்தை. நாம் சூடினம்; ஆடினம்; பாணினம் பாடின (அதனைக் கேட்டனம்); நின்மேனியும், வண்ணமும், தோளும் வாடின; ஆதலின், இனி ஆயம் அடைகுவம் எனக் கூட்டுக. கூஎ

நீங்கும் தலைவற்கு ஓம்படை சாற்றல்

***[தலைவியை எப்பொழுதும் பாதுகாக்கவேண்டுமென்று, பிரிந்துசெல்லும் தலைவனுக்குப் பாங்கி கூறுதல்; ஓம்படை—பாதுகாப்பு]***

**162.** பெடைநின்று காண வுடனின்ற தோகை பெருநடஞ்செய்
புடைநின்ற சோலைப் பொதியில்வெற் பாபொற் குழைதொடருங்
கடைநின் றுகுபுனற் கண்ணிக்கு நின்புகழ்க் காதலுக்கு
இடைநின்ற பாவிக்கு மேதமு றுவண்ண மெண்ணுகவே.

(கு - ரை.) பெடை - பெண் மயில். உடன் - பெடையுடன். தோகை - ஆண்மயில். நடம் - கூத்து. புடைநின்ற - பக்கங்களில் வளர்ந்துநின்ற. பொதியில் வெற்பா - பொதிகைமலைக்குரிய தலைவனே. குழைதொடரும் கடை: கூடு, கஉஅ-ஆம் செய்யுட்களைப் பார்க்க. கடை - கண்ணின் கடை. உகுபுனல் கண்ணி - சிந்துகின்ற நீரோடுங்கூடிய கண்ணையுடைய தலைவி; புனல் உகுவது பிரிவுத் துன்பத்தால். இடைநின்ற - இடையே நின்று நம்மைக் கூட்டிவைத்த. தன்னைப் பாவி என்றுள், தலைவன் பிரிவால் தலைவிக்குண்டான துயரத்தைத் தன்னால் மாற்ற இயலாமைபற்றி. ஏதம் - குற்றம். ஏதமுறுவண்ணம் எண்ணலாவது, தலைவியைக் கைவிடாமையாம். 'கானக நாட மறவல் வயங்கிழைக், கியானிடை நின்ற புணை' (ஐந்திணையெழுபது: க.) "பெடை..................வெற்பா!" என்றது கருத்துடை யடைகோளி யணி. நின்னாட்டுத் தோகையும் பெடையைப் பிரியாது இன்புறத்துதல்போல, நீயும் இத்தலைவியைப் பிரியாது மணந்து வாழ்தல்வேண்டுமென்னுங் குறிப்பிற்று. வெற்பா! கண்ணிக்கும், காதலுக்கும், பாவிக்கும் ஏதமுறுவண்ணம் எண்ணுக எனக் கூட்டுக.

(வே - ம்.) புகழ்க் காவலுக்கும்; நின்புவி காவலுக்கும். இ. வி கஙஎ. சாஅ

விருந்து விலக்கல்

***[செல்வேனென்ற தலைவனை நோக்கி, 'விருந்துண்டு செல்க' என்று சொல்லிப் பாங்கி விலக்கல்]***

**163.** தினைமாவு மால்வரைத் தேனுங் குழைத்துச் சிறிதருந்திச்
சுனைமா நறுமல ரோடைநன் னீருண்டு சோலையினன்
னனைமா தவிநிழ லண்பகற் போது நயந்திருந்து
மனைமா லையினடந் தால்வரு மேதமென் வள்ளலுக்கே.

(கு - ரை.) மால்வரைத்தேன் - பெரிய மலையிற் கிடைக்கும் மலைத்தேன். சுனைநீரையும், ஓடைநீரையும் உண்டெனக் கூட்டுக. மனை மாதவி நிழல் - முகைகளையுடைய குருக்கத்திக்கொடியின் நிழலில். மனை - நின் வீட்டிற்கு. ஏதம் - குற்றம். வள்ளலுக்கு - தலைவனாகிய உனக்கு; முன்னிலையிற் படர்க்கை வந்தது. அருந்தி உண்டு இருந்து நடந்தால் வள்ளலுக்கு வரும் ஏதம் என்? எனக் கூட்டுக. சுசு

## விருந்திறை விரும்பல்

*[தலைவன் அவ்விருந்தை ஏற்றுக்கொண்டு அங்குத் தங்க விரும்புதல்]*

164. சூதார் வனமுலைத் தோகைநல் லீருங்கள் செங்கைதொட்ட
தேதா யினுமெனக் கின்னமு தாமெல்லி சாயுமெல்லை
தாதார் மலர்ப்பொழி றங்கலு மாமிங்ங னுங்கள்வெற்புக்
காதார் நறுங்குழைக் கானவ ரானவர் காவலின்றே.

(கு - ரை.) சூது ஆர் வனம் முலை - சூதாடு கருவியை யொத்த அழகிய முலையையுடைய. எல்லி - கதிரவன். சாயும் எல்லை - மறையும் வரையில். தாது ஆர் - பூந்துகள் நிறைந்த. பொழில் - சோலை. இங்ஙன் - இவ்விடத்தில். வெற்பு - மலை. காது ஆர் நறுங்குழை கானவரானவர் - காதின்கண் குண்டலத்தை யணிந்த வேட்டுவர்; ஆனவர் : எழுவாயுருபு. இன்றே - இல்லையல்லவா? நல்லீர்! அமுதாம்; காவல் இன்றே? (ஆதலின்) சாயுமெல்லை இங்ஙன் தங்கலுமாம் எனக் கூட்டுக. 'ஏனது சுவைப்பினும் நீகை தொட்டது, வானோர் அமிழ்தம் புரையுமால் எமக்கென' (தொல். பொருள் : கசச.) 'வேம்பின் பைங்காயென் தோழி தரினே, தேம்பூங் கட்டி யென்றனிர்' (குறுந். கசுசு)

(வே - ம்.) தோகை யன்னீர்; கானவர் வானவர். இ. வி. கருஎ
எ0

## பாங்கியிற் கூட்டம் முற்றும்

## எ. ஒருசார் பகற்குறி

*[பகற்குறியில் ஒருவகை; அஃதாவது பகற்குறியிடத்துத் தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் கூடாமல் வருந்துதல்]*

### கிழவோன் பிரிந்துழி கிழத்தி மாலையம்பொழுது கண்டிரங்கல்

*[தலைவன் பிரியத் தலைவி, மாலைப்பொழுது வரக்கண்டு மனம் வருந்தல்]*

**165.** கூற்றங் கரந்து கொடியபுன் மாலை வடிவுகொண்டு
தோற்றுஞ் சிறுபிறை யேயெயி றாகத் துறையிருந்து
தேற்றந் தரும்பெடை யன்னமுஞ் சேவலுஞ் சேக்கைபுகும்
ஆற்றுந் திறமறி யேனவ ரோசென் றகன்றனரே.

(கு - ரை.) *கூற்றம் - கூற்றுவன். கரந்து - தன் உருவத்தை மறைத்து. எயிறு ஆக - பல்லாகக் கொண்டு. தேற்றம் - தெளிவு. சேக்கை - பள்ளியிடம். அவரோ அகன்று சென்றனர் என விகுதி பிரித்துக் கூட்டுக. அவர் - தலைவர். கூற்றம் கரந்து, பிறை எயிறாக மாலைவடிவு கொண்டு தோற்றும்; அன்னமும் சேவலும் புகும்; அவரோ சென்றனர்; அறியேன் எனக் கூட்டுக. தலைவனில்லாத மாலைப்பொழுது தனக்குத் துன்பந் தருதலின் அதனைக் கூற்றமாகக் கூறினாள். இஃது உருவகஅணி.* க

### பாங்கி புலம்பல்

**166.** பொன்னார் நறுமலர்ப் புன்னையங் கானற் புளினந்தங்கி
யன்னாண் மணந்து தணந்தவர் போல வருக்கன்சென்ற
பின்னாவ தன்முன்ன மேசெக்கர் மாலை பிறந்ததினி
யென்னாகு மென்றறி யேன்வளங் கோதை யிளங்கொடிக்கே.

(கு - ரை.) *பொன்ஆர் - பொன்போன்ற நிறமுடைய பூந்துகள் நிறைந்த. கானல் - கடற்கரைச் சோலையிலுள்ள. புளினம் - மணற் குன்றில். தணந்தவர் - பிரிந்து சென்ற தலைவர். அருக்கன் - கதிரவன். பின் ஆவதன் முன்னமே என்றது, அருக்கன் சென்றவுடனே என்றபடி; இது மிகையுயர்வு நவிற்சியணி. செக்கர்மாலை - சிவந்த மாலைப்பொழுது. வளம் கோதை இளங்கொடிக்கு - வளவிய கூந்தலை*

யுடைய இளங்கொடி போன்ற தலைவிக்கு. தலைவனைப் பிரிந்த மகளிர்க்கு மாலைப்பொழுது துன்பம் தருமாகலின் 'என் ஆகும் என்று அறியேன்' என்றாள். தலைவர் சென்றதுபோல அருக்கனும் சென்றான்; உடனே மாலை பிறந்தது; இனிக் கொடிக்கு என் ஆகு மென்று அறியேன் எனக் கூட்டுக. உ

(வே - ம்.) மறந்தவர்போல. இ - வி. கசக.

தலைவனிடத் தலைவி வருந்தல்

*[நீட—விரைந்து வராது காலந் தாழ்க்க]*

**167.** கூவிக் குயிலை யழைக்கவுங் காவி குறைவினிறை
யாவிப் புனலு மருவியு மாடவு மாயவெள்ள
மேவித் தனிநின்று நெஞ்சமு நானு மிரங்கவின்னுங்
காவிற் சிறைவண்டு காளவ ரோவரக் காண்கிலமே.

(து - ரை.) குயிலைக் கூவி அழைத்தல் : மகளிர் விளையாட்டு ளொன்று (கசு). காவி குறைவு இல் நிறை ஆவி - செங்குவளை மலர் குறைவின்றி நிறைந்திருக்கின்ற குளம்; காவி - செங்குவளை; ஆவி - குளம். ஆயவெள்ளம் - பாங்கியர் கூட்டம். தனி மேவி நின்று - தனியே பொருந்தி நின்று. இரங்க - வருந்த. காவில் - சோலையிலுள்ள. அவர் - தலைவர். வண்டுகாள்! ஆயவெள்ளம் அழைக்கவும் ஆடவும் (செய்யா நிற்க), நானும் நெஞ்சமும் இரங்கு கின்றோம்; அவரோ இன்னம் வரக்காண்கிலம் எனக் கூட்டி முடிக்க.

(வே - ம்.) குறையினிறை. ரு

தலைவியைப் பாங்கி கழறல்

*[கழறல்—இவ்வாறு வருந்தலாகாதென இடித்துரைத்தல்]*

**168.** அவ்வாறு புல்லி யளித்தஞ்ச லென்றவர் கஞ்சமின்னும்
ஒவ்வாத நின்னை யொழிந்துறை வாரல்ல ரோடரிக்கண்
மைவார் குவளையும் வம்பார் தடமுலை யும்பசந்திங்
கிவ்வா றிருக்குமென் முல்லென்சொ லாருனை யேதிலரே.

(து - ரை.) புல்லி - தழுவி. அளித்து - அன்புசெய்து. அஞ்சல் என்றவர் - 'பிரியேன்; அஞ்சாதே'யென்று கூறிய தலைவர். கஞ்சமின் - திருமகள். ஒழிந்து - பிரிந்து. ஓடுஅரி பரந்த செவ் வரியையுடைய. மைவார் குவளை - கருங்குவளை. கண்ணுகிய

குவளையென்க; உருவகம். வம்புஆர் - கச்சணிந்த. பசந்து-பசப்புக் கொண்டு; பசப்பு : பிரிவுத் துன்பத்தால் உண்டாகும் நிற வேறுபாடு. ஏதிலர் - அயலார். 'என் சொலார்' என்றது பழிச்சொல் கூறுவர் என்றபடி. குவளையும் முலையும் பசந்து இவ்வாறு இருக்குமென்றால், ஏதிலர் உனைத் தூற்றுவர்; அஞ்சல் என்றவர் உறைவாரல்லர்; ஊதலின் வருந்தற்க என முடிக்க. சு

தலைவன் தாழ்த்து வந்துழிக் கூறல்

*[பாங்கி தலைவிக்குக் கூறுதல். தாழ்த்து—காலந்தாழ்த்து]*

**169.** சேணார் கொடிநெடுந் தேர்மணி யோசை செவிப்படுமிவ்
வாணாக மேல்வரு கின்றனர் போலவர் வந்துநம்மைக்
காணா தலமரு துன்பமுங் காதலுங் காணவிங்ங
னீணாக நீழன் மறைகுவம் போது நிரைவளையே.

(கு - ரை.) சேண்ஆர் - உயரத்தில் பொருந்திய. வாள்நாகம் - மதத்தால் கொடிய யானை. ஆண் நாகம் எனப் பிரிப்பின் மோனையின்றாம். மணியோசை யானைக்கே சிறப்பாக உரியதாகலின் 'நாகமேல் வருகின்றனர்போல் தேர் மணியோசை செவிப்படும்' என்றாள். 'யானை வரும் பின்னே; மணியோசை வரும் முன்னே' என்னும் உலக வழக்கையும், 'மணியிலாக் குஞ்சரம் வேந்தூர்தல் இன்னா' (இன்னா நாற்பது: கசு) என்னும் செய்யுள் வழக்கையும் காண்க. அவர் : தலைவர். அலமரும் - கலங்குகின்ற. இங்ஙன் - இவ்விடத்துள்ள. நாகநீழல் - நாகமரத்தின் நிழலில். போது - வருவாயாக. நிரைவளையே - வரிசையான வளையல்களை யணிந்த தலைவியே. நிரைவளையே ! அவர் வருகின்றனர்போல் செவிப்படும்; (நாம் அவருடைய) துன்பமும் காதலும் காண மறைகுவம், போதும் எனக் கூட்டுக. ரு

(வே - ம்.) போலுவர். இ - வி. கசக.

முன்னிலைப் புறமொழி மொழிதல்

*[தலைவி, பாங்கிமேலுள்ள வெறுப்பால் அவளை நோக்கிக் கூறுது பிறரிடம் கூறுவாள்போல் அவள் கேட்கும்படி கூறுதல்]*

**170.** செல்லத் தருவிறல் வேள்வரக் கண்டுறை சிந்துகண்ணும்
புல்லத் துடித்த புணர்மென் முலைகளும் பொன்பசந்து
மல்லற் பதித்தவன் வன்கண்மை கூறி மறந்தவென்னை
யல்லற் படுத்துமென் குடலென்செய் வேனிவ் வருவினைக்கே.

(து - ரை.) செல் அத் தகு விறல் வேள் - பிரிந்து சென்ற அந்தத் தகுதியும் வெற்றியும் பொருந்திய முருகவேளையொத்த தலைவன். வரக்கண்டு - வருதலை எதிர்பார்த்து. உறை - நீர்த்துளி. புல்ல - தழுவ. பொன் பசந்து - பொன்போலப் பசந்து (கசுஅ). மல்லல் பதித்தவன் - தன் வல்லமையை இவ்வுலகில் நிலைநாட்டிய தலைவனுடைய. வன்கண்மை - (எனக்கு அருள் செய்யாமையாகிய) கொடுமையை. மறந்த - மறந்துள்ள. அல்லல்படுத்தும் - துன்புறுத்தும். அருவினை - தீவினை. (வன்கண்மையை) மறந்த என்னை, கண்ணும் முலைகளும் பசந்து (அதனைக்) கூறி, படுத்தும் என்றால் இவ்வினைக்கு என் செய்வேன்? எனக் கூட்டுக.

> ‘ தணந்தமை சால அறிவிப்ப போலும்
> மணந்தநாள் வீங்கிய தோள்.’
>
> ‘ கொடியார் கொடுமை உரைக்கும் தொடியொடு,
> தொல்கவின் வாடிய தோள்.’ (குறள்: கஉங௫, ௬)

என வரூஉம் திருக்குறட் செம்மொழியில் கூறுதவற்றைக் கூறுவன போல் கூறிய மரபு வழுவமைதி காண்க. ௬

### பாங்கியோடு பகர்தல்

*[ தலைவி கூற்று ]*

171. ஐயோ மருங்கு லறநொந்த தோவென்ப ராரமுலை
மெய்யோ டணைத்து விடநினை யார்வினை யேலிருசெங்
கையோ திருநெடுங் கண்ணில்வை யாநிற்பர் கற்றதெல்லாம்
பொய்யோ முடிய நெடியதண் சாரற் பொருப்பரின்றே.

(து - ரை.) மருங்குல் - தலைவியின் இடை. அற - மிக, என்பர் - (புணர்ச்சியில் தலைவர்) கூறுவர். ஆரம் - முத்துமாலை; சந்தனக் குழம்புமாம். அணைத்து விட நினையார் - அணைத்துக் கொண்டு பின்நெகிழவிட நினையார். கையோ : ஓகாரம் ஒழியிசைப் பொருளில் வந்தது; இவை மட்டுமா வேறு பலவும் செய்வர் என்பது அப்பொருள். கண் : தலைவனுடைய கண். பொய்யோ என்றது, தலைவன் வாராமையால். ‘பன்மாயக் கள்வன்’ (குறள்: கஉருஅ) முடிய - முழுதும். என்பர், நினையார், வையா நிற்பர், பொருப்பர் கற்றதெல்லாம் முடிய இன்று பொய்யோ? எனக் கூட்டுக. பொருப்பர் - தலைவர். எ

### பாங்கி அச்சுறுத்தல்

*[அச்சுறுத்தல்—தலைவியை அச்சமுறச் செய்தல்]*

**172.** மனங்கா வலருழை வைத்துமென் கூர்வளை வாய்ப்பசும்புள்
இனங்காவன் மாற்றிய வேனல்கண் டாலன்னை யெப்படியுங்
கனங்காவல் கொண்ட கழையிருஞ் சாரற் கனங்குழைநின்
புனங்காவன் மாறு மதன்பினிற் காவலும் பூணும்வந்தே.

(கு - ரை.) காவலர் உழை - தலைவரிடத்தில். காவலருழை மனம் வைத்தென இயைக்க. பசும்புள் - பச்சைக்கிளி. காவல் மாற்றிய - காவல் செய்வதில் மனஞ்செலுத்தாத. ஏனல் - தினைப் புனம்; தானியாகு பெயர், தினைக்கதிருமாம். கனம் - முகில்; அது காவல் கொள்ளலாவது எப்போதும் நீங்காதிருத்தல். கழை - மூங்கில். சாரற்புனம் என இயைக்க. கனங்குழை : தலைவி, விளி. மாறும் - நீங்கும். இல் காவலும் வந்து பூணும்-வீட்டில் அடைத்து வைத்தலாகிய காவலும் வந்து பொருந்தும். ஒரு காவல் மாறும்; மற்றொரு காவல் பூணும் என முரண்படக் கூறிய நயம் போற்றத் தக்கது. கனங்குழை! (நின்னால் காக்கப்படும்) ஏனலை அன்னை கண்டால் புனங்காவல் மாறும்; இற்காவலும் பூணும் எனக் கூட்டுக.
அ

(வே - ம்.) மாற்றும். இ. வி. கசக.

### நீங்கற் கருமை தலைவி நினைந்திரங்கல்

*[தலைவனைவிட்டுப் பிரிந்திருப்பதற்கு முடியாமையைத் தலைவி நினைந்து வருந்துதல்]*

**173.** வாவியொன் றாத மடவன்ன மேமுன்ன மேவகுத்த
பாவியொன் றாகப் படைத்தில னேகண் பகழியல்ல
காவியென் றாரெம்மைக் காயமென் றார்தம்மைக் காயத்துற்ற
ஆவியென் றாரென்ற போதஞ்சி னேனவ ரன்பினுக்கே.

(கு - ரை.) வாவி ஒன்றாத - குளத்தைப் பொருந்தாத. 'அன்னமே' என்றது பாங்கியை. வகுத்த பாவி - எங்களைப் படைத்த நான்முகன். பகழி - அம்பு. காவி - கருங்குவளை மலர். பிற அம்பு பட்டக்கால் உயிர்பிழைத்தலுங் கூடும்; மன்மதன் அம்பாகிய நீலம் படில் பிழைத்தல் அரிது ஆகலின், அதனை உவமை

கூறினமையானும், உயிர் உடம்போடு ஒன்றி இருத்தற்கு உரியது; அங்ஙனமிருக்க அதனை ஒப்பேனெனக் கூறிய தலைவர் இத்துணை காறும் வராதிருத்தலானும் தலைவி அஞ்சவேண்டியதாயிற்று. காயம் - உடம்பு. 'இறைவற்கும் நன்றியிலேற்குமுன் நான்முகத்தோன், ஒன்றா விதித்தில னேஉயிர்போல உடம்பையுமே' தஞ்சை: ௧௭௯. ௯

தலைவிக்கு அவன் வரவு பாங்கி சாற்றல்

*[அவன் வரவு சாற்றல்—தலைவன் வருதலைத் தெரிவித்தல்]*

**174.** தீட்டிய தொய்யிற் றிருமுலை யாயன்பர் தேர்வரவு
கேட்டிய மன்றற் கிளைவளர் சாரலிற் கேகயங்கள்
ஓட்டி யகன்ற வுழைமுல்லை போய்விழ வூர்பரிதி
வாட்டிய முல்லையுங் கொண்டலு நாற வருகின்றதே.

(து - ரை.) தீட்டிய-எழுதப்பட்ட. தொய்யில் - மகளிர் மார்பில் சந்தனக் குழம்பால் எழுதப்படும் முலைக்கோலம். வரவு-வருதலின் ஒலியை. கேட்டிய-கேட்பாயாக; வியங்கோள் வினைமுற்று. மன்றல்-மணம். கிளைக்கு மணம், மலருடைமையால் என்க. கேகயங்கள்-மயில்களை. அகன்ற உழை முல்லை போய்விழ - அஞ்சியகன்ற பெண்மான் முல்லைப்புதரில் போய் விழும்படியாக. ஊர் பரிதி - ஊர்ந்து வந்த தேர்ச்சக்கரங்கள். வாட்டிய முல்லையும் - வருத்திய முல்லைமலரின் மணமும். வாட்டல் என்றது அதன்மேல் ஊர்ந்து வருதலை. கொண்டல் - முகில். கீழ் காற்றெனல் அத்துணைச் சிறப்பின்றாம். முல்லை கார்காலத்து மலர்வதாகலின் அக்காலத்திற்குரிய முகில் என்றலே சிறப்புடைத்தென அறிக. நாற : முல்லைக்கேற்ப 'மணம் வீச' என்றும், கொண்டலுக்கேற்பத் 'தோன்ற' என்றும் பொருள் உரைத்துக்கொள்க; இரட்டுற மொழிதல். ஓட்டியும், விழவும் ஊர்ந்து வருகின்ற பரிதியானது நாற வருகின்றது; அவ்வரவின் ஒலியைத் திருமுலையாய்! கேட்டிய எனக் கூட்டுக. ௧௦

தலைவன் நாட்டம் தலைவி புதைத்தல்

*[நாட்டம்—கண்; புதைத்ததைத் தலைவன் கூறுதல்]*

**175.** மின்கண் புதைக்கு மருங்குல்நொந் தேவிம்ம விம்முகொங்கை
தன்கண் புதைக்கத் தரும்புறஞ் சார்ந்துமென் சாயலொளித்
தென்கண் புதைத்தகை யிம்மலர்க் காவி லெதிர்ப்பட்டநாள்
நின்கண் புதைத்தகை யோவறி யேன்கோ லிரைவளையே.

(கு - ரை.) மின் - மின்னல்: அது கண் புதைத்தல்: மருங் குலுக் கொப்பாகாமையின் நாணி என்க. மருங்குல் - இடை. விம்ம-விம்மியழ. விம்முதல் - பருத்தல். கொங்கைதன்கண் - முலைக்கண். புதைக்க - தலைவன் முதுகில் அழுந்தும்படியாக. புறம் - முதுகில். சாயல் ஒளித்து - உருவச்சாயலை ஒளித்து. மலர்க்கா - பூஞ்சோலை. எதிர்ப்பட்ட நாள் - இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்த அன்று எதிர்ப் பட்டமையை. நின்கண் புதைத்த என்றது நாணிக் கண் புதைத் தமையை. நிரைவளையே - வரிசையான வளையல்களை யணிந்த தலைவியே. நிரைவளையே! விம்ம விம்மு கொங்கைக்கண் புதைக் கச் சார்ந்து ஒளித்துப் புதைத்த கை, எதிர்ப்பட்ட நாள் புதைத்த உனது கையோ? அறியேன் எனக் கூட்டுக. கக

## சிறைப்புறமாகச் செறிப்பறிவுறுத்தல்

***[தலைவன் வேலியின்புறத்தே வந்து நிற்கத், தலைவி புறம்போகாது வீட்டின்கண்ணே அடைக்கப்பட்டிருத்தலைத் தானே சொல்லிக்கொள்வாள்போலத் தலைவனுக்கு அறிவுறுத்தல்; சிறைப்புறம்—வேலிப்புறம்; செறிப்பு—அடைப்பு]***

**176.** இயலுங் கலவ மயிலுமென் மானு மினக்கிளியும்
முயலுந் தவங்கண் முடிவது போலு முதுமறலிச்
செயலுங் கமலமுஞ் செங்கழு நீருஞ் செழியர்வெற்றிக்
கயலும் பொருங்கணல் லாயின்று நாளை கடிபுனத்தே.

(கு - ரை.) இயலும் - உலாவுகின்ற. கலவம் - தோகை. தலைவி புனத்தைவிட்டு அகன்றால் மயிலும், மானும், கிளியும் சாயல், கண்ணின் பிறழ்ச்சி, மொழி இவற்றைக் கற்றுக்கொள்ள இயலா தாகையால் 'தவம் முடிவதுபோலும்' என்றாள். தவம் - தவத்தின் பயன்: கருவியாகு பெயர். மறலி - கூற்றுவன்; அவன் செயல்: கொலை. மறலியைச் செயலால் பொருமென்க. பொருதல் - ஒத்தல். செங்கழுநீர் - செங்குவளை.| செழியர் - பாண்டியர்; அவர் கொடியில் விளங்குவது மீனாகலின் செழியர் கயல் எனப்பட்டது. நல்லாய் - தலைவியே. இன்று நாளை - இன்று அல்லது நாளையுடன். புனத்தே- புனத்திலுள்ள. நல்லாய்! புனத்து மயில் முதலியவை முயலும் தவங்கள் இன்று நாளை முடிவதுபோலும் எனக் கூட்டுக. தவங்கள் முடிவது : ஒருமைப் பன்மை மயக்கம். கஉ

தலைமக ளாற்றமை கூறல்

*[ஆற்றாமை-பிரிவுத்துன்பம் பொறாமை; தோழி கூறுதல்]*

**177.** **என்னுவி யன்னவர்க் கேறும் பழியென்க ணில்லையெனப்**
**பொன்னுர் தொடியுண்டு பூந்துகி லுண்டுமென் பூவணைமேற்**
**பன்னு ளிரவினும் பாயல்கொள் ளாள்பொன் பசந்தொளிருங்**
**கன்னு பரணம் பொரும்விழிக் கேயொன்றுங் காண்கிலமே.**

(கு - ரை.) அன்னவர்: தலைவர். என - என்று தலைவி சொல் லும்படியாக. பழி - பழிக்குரிய காரணம். தொடி - வளையல். பூந் துகில் - அழகிய ஆடை. தொடி கழன்று துகில் நெகிழுமேல் தலைவற்குப் பழியேறுமென்க. 'தொடியொடு தோள்நெகிழ நோவல் அவரைக், கொடியர் எனக்கூறல் நொந்து' (குறள்: ௧௨௩௬.) பூ அணை - பூவாலாகிய படுக்கை. பாயல் கொள்ளாள் - தூங்காள்; விழிபசந் தொளிருமென்க. பொன்பசந்து: (௧௭0). ஒளிரும்-விளங் கும். கன்ன ஆபரணம் - காதணி: குழை. அதனுடன் விழி பொரு தலை ௨௨, ௬௫-ஆம் செய்யுட்களால் உணர்க. விழிப்பசப்பொன்றே பழிக்காரணமாக உள்ளது; அதனை மறைக்கும் திறமொன்றும் காண்கிலேம் என்று தோழி கூறினாளென்க. பழி இல்லையெனத் தொடியுண்டு; துகிலுண்டு; பாயல் கொள்ளாள்; அதனால் உண்டான விழிப்பசப்பொன்றேயுண்டு; காண்கிலம் எனக் கூட்டுக. ௧௩

(வே - ம்.) பொன்னுர்கொடி; என்றும்.

தலைமகளை நோக்கிக் கூறல்

*[தோழி கூற்று]*

**178.** **மல்லற் பணில மணிமுத் தலைகடல் வாணர்தங்கள்**
**இல்லைப் பொருது மிருங்கழிச் சேர்ப்ப னிருஞ்சுரும்பின்**
**வில்லைப் பொருநுத லிரென்சொ லிருங்கண் மேனியென்று**
**சொல்லப் பழிவரு மோவொரு நாவித் துறையில்வந்தே.**

(கு - ரை.) மல்லல் பணிலம் மணி முத்து - வளப்பமிக்க சங்குகளீன்ற அழகிய முத்துக்களையுடைய. பொருதும் - மோதும். சேர்ப்பன் - நெய்தல்நிலத் தலைவன். இருஞ்சுரும்பின் வில்-பெரிய வண்டுகள் மொய்த்தலையுடைய பூவில்; அன்றிச் சுருப்புநாண் கொண்ட கருப்புவில் எனினுமாம். பொரு - ஒத்த. என்சொனீர்-

அன்பிலனாக என்னை யுட்கொண்டு என்னசொல் கூறினீர். உங்கள் மேனி - இவள் மேனி உங்கள் மேனிபோலக் காப்பாற்றத்தக்கது; யான் விரைந்து மணப்பல். மேனி - உடம்பு. என்று சொல்ல - என்று தலைவன் சொல்ல. நுதலீர்: இது தலைமகன் பாங்கியரை நோக்கி விளித்ததைத் தோழி எடுத்துக் கூறல். சேர்ப்பன் துறையில் வந்து, நுதலீர்! என்சொனீர்? மேனி என்று சொல்லப் பழி வருமோ எனக் கூட்டுக. முன் செய்யுளில் 'தலைவியின் கண்பசப் பொன்றே தலைவனுடைய பழியைக் காட்டுகின்றது. அதனை மறைக்கும் திறமொன்றும் காண்கிலேம்' என்று கூறிய தோழி இச்செய்யுளில் அத்திறம் தலைவன் ஒருநாள் இத்துறையில் வந்து, "நுதலீர்! என்சொனீர்; உங்கள் மேனி" என்று வினவுதலே என்று குறித்தாளென்க. தலைவன் அவ்வாறு கேட்பதனாலேயே தலைவியின் கண் பசப்பு நீங்குமென்பது அவள் கருத்து. ௧௪

(வே - ம்.) சேர்ப்ப.

### முன்னின் றுரைத்தல்

**[தோழி, தலைவன் முன்னின்று தலைவி புனங்காத்தலைவிட்டு வீட்டிற்குச் செல்லுதலைச் சொல்லுதல்]**

179. கூனுங் கழைவிற் குறவர்கண் டாலுங் குமரனென்ன
மானுஞ் சிலம்பில் வருவிர்கொல் லோதொல்லை வல்வினையால்
யானுங் கரும்பு மிரும்புனங் காவல்விட் டேகுகின்றேந்
தேனுஞ் சுரும்புஞ் செறிகொடிச் சாரற் சிறுகுடிக்கே.

(கு - ரை.) கூனும் கழைவில் - வளைகின்ற மூங்கிலாற் செய்யப்பட்ட வில்லையுடைய. மானும் - ஒக்கும். சிலம்பில் - மலையில். தொல்லை - பழைய. கரும்பு: தலைவி. இரு - பெரிய. தேன் - தேன்வண்டு. சுரும்பு - வண்டின் வகையுளொன்று. சாரல் சிறுகுடிக்கு - சாரலின்கண் உள்ள சிற்றூர்க்கு. யானும் கரும்பும் வினையால் விட்டுச் சிறுகுடிக்கு ஏகுகின்றேம்; (நின்னைக்) குறவர் கண்டாலும் மானும்; (ஆதலின்) சிலம்பில் வருவிர்கொல்லோ? எனக் கூட்டுக. கொல்: அசை. ௧௫

### தாய்துறிப் புணர்த்தல்

**[தலைவி, நற்றாயின் குறிப்பை உணர்ந்து அதனைத் தோழிக்கு உரைத்தல்]**

**180.** **முறம்போற் றழைசெவி மும்மத வாரண முன்னஞ்செய்த**
**அறம்போல வந்தஞ்ச லஞ்சலென் றுற்கென் னறிவழிந்து**
**நிறம்போ னதுகண்டு நேர்பண்டு போனம்மை நெய்தல்கொய்யப்,**
**புறம்போமி னென்றன ளென்னைகொ லன்னைநம் பூங்கொடியே.**

(கு - ரை.) மும்மதம்: கன்னம், மத்தகம், குறி என்னும் மூன்றிடத்தும் தோன்றுவன. வாரணம் - யானை. முன்னம் செய்த அறமாவது: முருகன் வள்ளியைப் பெறுதற்கு மூத்த பிள்ளையார் யானையுருக்கொண்டு வந்து உதவியமை. அறம்போல - அறச் செய்கையைப்போல. வந்து - வர; எச்சத்திரிபு. அதனைக் கண்டு அஞ்சிய நம்மை அவ்யானையினின்றும் காத்த தலைவனுக்கு. நிறம் போனது - பசலையால் மாறுபட்டமையை. நேராகக் கண்டெனக. புறம்போமின் - வீட்டிற்கு வெளியேயுள்ள கழிப்புறம் போமின். பூங்கொடிபோன்ற நம் அன்னையென்க; பூங்கொடியே: தோழியை விளித்ததூஉமாம். வாரணம் வர என்றற்கு அழிந்துபோனது கண்டு நம் அன்னை நம்மைப் பண்டுபோல் போமின் என்றனள்; (இவ்வாறு கூறியதன் காரணம்) என்னைகொல்? எனக் கூட்டுக. 'புறம்போகல் என்றனள்' என்று பாடமிருப்பின் சிறந்து தோன்றும். ௧௯

### ஓம்படை சாற்றல்

**[தோழி, தம்மைப் பாதுகாக்குமாறு தலைவனுக்குக் கூறுதல்; ஓம்படை—பாதுகாப்பு]**

**181.** **ஆழுங் கனைகட லன்னநின் காதலு மாடன்மயில்**
**சூழும் புனமுந் தொலைந்தன வாயினுந் தூயமுதும்**
**யாழுங் குழலு மனையசொல் லாளின்னை யன்றியுயிர்**
**வாழுந் திறமல்ல ளேமற வேலெம்மை மன்னவனே.**

(கு - ரை.) கனைகடல் - ஒலிக்கின்ற கடல். காதலும் புனமும் தொலைந்தனவாயினும் என்றது, கூட்டமின்மையையும் தலைவி காவல் இன்மையையும் கருதியென்க. புனம் - புனங்காவல். தூய் அமுது - மேலான அமிழ்தம். யாழ் குழல் என்றது அவற்றின்

இசையை; கருவியாகுபெயர். சொல்லாள்: தலைவி. ஆழும்........ காதலும்: 'நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று, நீரினும் ஆரளவின்றே........நாடனொடு நட்பே' (குறுந்-ந.) மன்னவனே! தொலைந்தனவாயினும் சொல்லாள் திறமல்லள்; (ஆதலின்) எம்மை மறவேல் எனக் கூட்டுக. கள

## மேம்பட உரைத்தல்

*[தோழியின் கருத்து மேம்பாடுறத் தலைவன், 'தலைவியை மறவேன்' எனப் பதிலுரைத்தல்]*

182\. சுறவே குழையு மழைபொரு கூந்தலுஞ் சூர்வளைத்தோ
ளிறவே யழகு நெறியும் புருவமு நேரிடையு
மறவே வளர்தன பாரமு மல்கு லழகுஞ்செம்மை
மறவேல் விழியிணை யும்மற வேனொரு வைகலுமே.

(து - ரை.) சுறவுகுழை - சுறுமீன்வடிவாகச் செய்யப்பட்ட காதணி. மழைபொரு - முகிலையொத்த. வளை - தோளணி. வேய்-மூங்கில். நெறியும் - வளைந்திருக்கும். நேர்இடை - நுண்ணிய இடை. அற - மிக; இடை அற்றுப்போகும்படியாக எனலுமாம். செம்மை - சிவப்பு. மறம் - வீரம், கொலையுமாம். ஒரு வைகலும் - ஒருநாளும். கஅ

ஒருசார் பகற்குறி முற்றும்.

## அ. பகற்குறி இடையீடு

*[பகற்குறியில் கூடுதற்குச் சில தடைகள் உண்டாதல்: அவை விலக்கல், சேறல், கலக்கம் என்பனவாம்]*

### இறைவனைப் பாங்கி குறிவரல் விலக்கல்

*[இறைவன்-தலைவன்; குறிவரல்—குறியிடத்திற்கு வருதல்]*

183. உருமுங் கிரியு முடல்களி றாயிவ ளுண்மெலியப்
பொருமுங் களபப் புணர்முலை நோக்கிப் புனத்திலிறை
யருமுங் களகம் வலிதென்று போயின ளன்னையென்று
வருமென் றுணர்வரி தாலென்செய் வேமிவ் வரையிடத்தே.

(து - ரை.) உருமும் கிரியும் உடல்களிறாய் - இடியேற்றினையும், மலையையும் மாறுபடுகின்ற ஆண்யானைபோன்ற தலைவனே; உரும் - இடியேறு. இவள்: தலைவி. பொருமும் களபம் - விம்முகின்ற கலவைச் சாந்தையணிந்த. புணர்முலை நோக்கல், தலைவியின் மெலிவைக்கருதி. இறை - தங்குதலையுடைய. அகம் வலிது - மனம் கடினமுடையது. வலிது என்றது உள்மெலிவைத் தனக் குரைக்காமை கருதி. உணர்வரிது என்றமையின் அடிக்கடி வருவாள் என்றாளாயிற்று. களிறாய்! இவள் மெலிய நோக்கி வலிதென்று அன்னை போயினள்; என்று வருமென்று உணர்வரிது; ஆதலின், நீ இனி வாரற்க என்று தோழி தலைவனை விலக்கினமை காண்க. ‘அனமும் தொழுநடைபால் பலகால்வரும் அன்னையுமே’ (தஞ்சை: கருசு).

க

(வே - ம்.) புனத்திலின்றே.

### இறைவியைக் குறிவரல் விலக்கல்

*[இறைவி-தலைவி]*

184. காலையு நண்பக லுங்கதிர் போய்வரை காணுமந்தி
மாலையும் வந்துன் வனமுலை யேற்றமும் வண்டிமிர்பூஞ்
சோலையுந் தண்டுறை யுங்குறை யாவஞ் சுருதியையும்
பாலையு மன்னசொல் லாயென்னை யோவன்னை பார்க்கின்றதே.

(து - ரை.) நண்பகல்-நடுப்பகல். கதிர்-ஞாயிறு; சினையாகுபெயர். வரைகாணுமென்றது, மலையின்கண் மறைதலை. வனம்-

அழகிய. எற்றம்-விம்மி நிற்றல்; 'பொருமும் களபப் புணர்முலை'-கஅகூ. இமிர்-ஒலிக்கின்ற. தண்துறை-குளிர்ந்த நீர்த்துறை; விளையாடுமிடமுமாம். அம் சுருதி-அழகிய இசை. சொல்லாயென்றது தலைவியை. சொல்லாய்; அன்னை, முப்பொழுதின்கண்ணும் எற்றமும், சோலையும், துறையும் பார்க்கின்றது என்னையோ? ஆதலின் நீ அங்குச் செல்லற்க என விலக்கியவாறு காண்க. இவையிரண்டும், விலக்கல். உ

### இறைமகள் ஆடிடம் நோக்கி அழுங்கல்

*[தலைவி, தான் விளையாடிய இடங்களை நோக்கி வருந்திக் கூறல்]*

**185.** சினவெங் குறவர்பின் செல்லரும் பாவியைத் திண்சிலம்பர்
வினவும் பொழுதென் விளம்புங்கொல் லோவிளை யாடுநவ்வி
யினமும் புனமு மிதணுமஞ் சார லிருவியுமை
வனமுஞ் சுனையும் வளையுமந் தாரமு மவ்வலுமே.

(து - ரை.) அரும்பாவியை-அரிய பாவியாகிய என்னை. திண் சிலம்பர்-வலிய மலைக்குரிய தலைவர். நவ்வி இனம் - மானினம். புனம் - தினைக்கொல்லை. இதண் - பரண். இருவி - தினைத்தாள். ஐவனம் - மலைநெல். வளையும் மந்தாரம்-கிளைகள் தாழ்ந்து தழைத்துள்ள மந்தாரமென்னும் மரம்; மலையைச் சூழ்ந்துள்ள மப்புமாம். மவ்வல்-முல்லை. சிலம்பர் பாவியை வினவும்பொழுது நவ்வியினம் முதலியவை என் விளம்புங்கொல்லோ? எனக் கூட்டுக. கொல்: அசை. ங

### பாங்கி இறைவியை ஆடிடம் விடுத்துக் கொண்டகறல்

*[தோழி, தலைவியை விளையாடும் இடங்களைவிட்டு நீக்கி வீட்டிற்கு அழைத்துக்கொண்டு செல்லுதல்]*

**186.** கொய்கின்ற வேனலுங் கொய்யா நறுங்கு வளைச்சுனையுஞ்
செய்குன்று மூசலுஞ் சிற்றிலும் பார்த்துத் திகைத்துயிர்த்து
நைகின்ற வாவியுந் தாமுமென் னுவர்கோ னண்பர்கொண்டல்
பெய்கின்ற சாரலுஞ் சீறூ ரிதுவெனப் பெற்றிலமே.

(து - ரை.) கொய்கின்ற ஏனலும் - அறுக்கப்படுகின்ற தினையும். கொய்யா - பறிக்கப்படாத. சிற்றில் - சிறுவீடு. உயிர்த்து-பெருமூச்சுவிட்டு. நைகின்ற-வருந்துகின்ற. தாம் என்றது, தலை

வரை. என் ஆவர்: பெருந்துன்புறுவர் என்றபடி. கொல்: அசை. நண்பர்: தலைவர். கொண்டல்-முகில், "உம் சீறூர் இதுவெனப் பெற்றிலமே என்றது (தலைவி தன்னுடையவூரைத் தலைவனூராகப் பாராட்டி, யாம் தங்கியிருக்கின்ற) உங்கள் ஊர் இதோ இருக்கின் றது என்று சொல்லும் பேற்றைப் பெற்றிலமே" என்றவாறு.

தன் ஊரைத் தலைவன் ஊர் என்றாள் "புதல்வாரற் பொலிந்தான் உந்தை" என்புழிப்போல. தலைவி தனது ஊரைத் தலைவனுக்குத் தெரிவித்தலை மறந்ததற்கு இரங்குகின்றாளெனக. தினைப்புனமும், சுனையும், செய்குன்றும், ஊசலும், சிற்றிலும் பார்த்துத் திகைத்து உயிர்ப்பவன் நம் ஊரைப்பற்றித் தெரிந்திருந்தால் ஆங்கு வருதல் கூடும். நாம் அதனை அறிவிக்கப் பெற்றிலமே என்று இரங்கு கின்றாள்.

" வரியணர் வேங்கை வண்டுபடு கண்ணியன்
............ ..................................
கொய்தொழி புனமும் நோக்கி நெடிது நினைந்து
பைதலன் போகுவன் கொல்லோ வைதேய்
கயவெள் ளருவி சூடிய உயர்வரைக்
கூஉங்க ணஃதெம் மூரென
ஆங்கதை அறிவுறல் மறந்திசின் யானே. (அகம் : ௯அ)

என்பதூஉம் இக்கருத்துப்பற்றியதே.

நண்பர், தாமும் ஆவியும் என் ஆவர்? பெற்றிலமே எனக் கூட்டுக.

சேறிப்பட அவனூற்றிரங்கல்

*[தலைவி இற்செறிக்கப்பட்ட காலையில் தலைவனை நினைத்து வருந்தி அவனது உருவெளிப் பாட்டைக் கண்டு கூறல்]*

**187.** அழியு மிரும்புன மும்மழி யாமண லாழிதொட்ட
சுழியு மறிந்தவ் விதணமும் பார்த்துத் துணைவிழிநீர்
பொழிய விருந்து புலம்புமென் னுவியும் பாவியெம்மால்
வழியு மறிந்திங்ங னேவந்த வாவெம் மறைவள்ளலே.

(கு - ரை.) புனம் அழிவது, தினைகொய்யப் பெறுவதனால். ஆழி தொட்ட சுழி - தலைவி கூடலிழைத்த சுழியின் அடையாளம்; கூடலாவது, பிரிந்த தலைவன் எப்போது வருவான் என்று எண்ணித்

தலைவி கண்ணை மூடிக்கொண்டு தரையில் வட்டமாகக் கோடிழைப்பது. அவ்வாறிழைக்கையில் சுழியின் ஒரு முனையுடன் மற்றொரு முனை பொருந்துமாயின் தலைவன் வருவான் என்றும், பொருந்தாதாயின் வாரான் என்றும் தலைவி உணர்வாளென்க. இதணம் - தலைவியிருந்த காவற்பரண். ஆவியும் - உயிரையும். வந்தவா என்றது, இற்செறிக்கப்பெற்ற தலைவி தலைவனுடைய உருவெளிப்பாட்டைக் கண்டு (இ - வி : கசங.) கூறுகின்றாளென்க. மழைவள்ளல் - மழைபோல் வரையாதீயும் தலைவன். அறிந்து பார்த்து, ஆவியையும் வழியையும் அறிந்து மழைவள்ளல் வந்தவா ! எனக் கூட்டுக.

(வே - ம்.) அறிந்த இதணமும் ; பாவியெம்மால் ; என் மழை வள்ளலே. இ - வி. கசங. ரு

புனத்திடைச் சென்றான் மனத்திடைப் புலம்பல்

*[ தினைப்புனத்தின்கட் சென்ற தலைவன், தலைவியைக் காணாது தன்மனத்தின்கண் வருந்தல் ]*

188. கானே குழல்வல்லி காவற் புனமுன்பு கண்டறியா
மானே திரிய வருத்தது வேமழை வந்துறங்குந்
தேனே மலர்ப்பொழில் வந்தென்னை வாழ்வித்த தெய்வமின்று
தானே செயிலென்செய் வேனிடை யூறு தனிநெஞ்சமே.

(து - ரை.) கானே ! - காடே ! குழல்வல்லி - கூந்தலையுடைய வல்லிபோன்ற தலைவி. காவற்புனம் - காக்கின்ற தினைப்புனத்தை. முன்கண்டறியாமானே ! - அவளுடைய விழிக்குத் தோற்றுவிடுவோமென்று கருதி முன்னர் அவள் காக்கின்ற காலத்தில்வந்து பார்த்துணராத மானே! தேனே - தேன் கூடுகளே ! தனி நெஞ்சமே - (வேறு துணையின்றிய எனக்குத் துணையாகித்) தனித்த மனமே ! மழைவந்து உறங்கும் - மேகநிரை வந்து துயிலும். மலர்ப்பொழில்வந்து - பூஞ்சோலையில் வந்து. என்னை வாழ்வித்த தெய்வம் தானே - என்னை வாழச்செய்த ஊழ்வினைதானே தலைவியை என்னுடன் கூட்டுவித்தது. தெய்வம் - ஊழ்வினைக் கடவுள். (க0) இன்று திரிய வருத்தது - இன்றைக்கு என்னை அலையும்படி செய்தது. இடையூறு செயில் என் செய்வேன் - ஒரு காலத்தில் உதவி செய்த தெய்வமே இன்று இடையூறு செய்யின் யானதற்கு என்செயக் கடவேன் ?

கானே! மானே! தேனே! நெஞ்சமே! வாழ்வித்த தெய்வமே இன்று திரிய வருத்துறு செயில் என்செய்வேன்? எனக் கொள்க.

### வறுங்களன் நாடி மறுகல்

**[தலைவன், களத்தின்கண் அவளைத் தேடி வருந்துதல்]**

**189.** தேய்கின்ற திங்கள் திருநுத லாரொர் செயலின்றியே
வீய்கின்ற பாவிக்கு வேறென்சொ னாருங்கண் மெய்த்தவத்தால்
ஆய்கின்ற வேல னணிமயில் காளிங் கழியவிட்டுப்
போகின்ற போது வருகின்ற நீர்கண் பொருமநின்றே.

(து - ரை.) *தேய்கின்ற திங்கள் திருநுதலார்* - பிறைபோன்ற நெற்றியையுடைய தலைவி. *வீய்கின்ற பாவிக்கு* - அழிகின்ற எனக்கு. *உம்கண்* - உம்மிடத்தில். *மெய்த்தவம்* என்றது, போலித்தவத்தினர்க் கெட்டாதவன் என்று குறிப்பித்தபடி. *ஆய்கின்ற வேலன்* - ஆராயப் படுகின்ற முருகப்பெருமானுக்குரிய. *அழியவிட்டு* - என்னை இங்கு இவ்வாறு வருந்தும்படியாகவிடுத்து ; புனத்தை அழியவிட்டு எனலு மாம். *பொரும* - மிக. மயில்காள்! நுதலார் போகின்றபோது பொருமநின்று பாவிக்கு உங்கண் என்சொனார் எனக் கூட்டுக. எ

### துறுந்தொடி வாழும் ஊர்நோக்கி மதிமயங்கல்

**[தலைவி ஊரை நோக்கித் தலைவன் அறிவு மயங்கிக் கூறுதல்]**

**190.** மாறூர் வளைய வளைக்குஞ் சிலைக்கை மலைக்குறவர்
சீறூ ரதுசென்ற தேனுமெங்கே செய லேதினிவன்
பாறூர் கடலைப் பருகுசெந் தீயெனப் பற்றிவெந்து
நீறூர மேனியென் னெஞ்சூரு மன்பி னிலையிதுவே.

(து - ரை.) *மாறு ஊர் வளைய* - பகைவர் ஊரின்கண் உள்ளார் வணங்கும்படியாக ; *மாறு* - பகை ; பண்பாகு பெயர். *சிலை* - வில். *தேன்*: தலைவி. *இனிச் செயல் ஏது* என்றது, தலைவியைக் காணாத யான் வருந்துவதென்றபடி. *வன் பாறு ஊர் கடலை* - வலிய மரக்கலங் கள் செல்லுகின்ற கடல்நீரை. *செந்தீ* - வடவைத்தீ. *நீறு ஊர* - நீறு பரக்க. *நெஞ்சு ஊரும்* - உள்ளத்தின்கண் மிகும். தேனும் எங்கே என் அன்பு, தீயெனப்பற்றி வெந்து மேனி நீறூர நெஞ்சு ஊரும் ; (அதன்) நிலை இதுவே ; இனிச்செயலேது எனக் கூட்டுக. அ

### பகற்குறி இடையீடு முற்றும்

# ௰. இரவுக்குறி

***[தலைவன் தலைவியை இரவின்கண் கூடுதற்குக் குறிக்கப்பட்ட இடம்]***

## இறையோன் இருட்குறி வேண்டல்

***[இறையோன்—தலைவன்]***

**191.** அரியா மதகரி வேட்டையி னீடி யசைந்தனம்யாஞ்
சரியா வருவரை சார்ந்தது பானுவுஞ் சாரலெங்கும்
பிரியா மழைமுகிற் கூண்டிருள் மூண்ட தியங்கவினித்
தெரியாது மங்கைநல் லீருங்கள் மால்வரைச் சேணெறியே.

(கு-ரை.) *அரி - விலங்கரசு (சிங்கம்). ஆம் மதகரி - மேன்மேற் பெருகுகின்ற மதத்தையுடைய யானை. நீடி-காலம் நீட்டித்து. அசைந்தனம் - தளர்ச்சி யடைந்தேன்; பன்மைத் தலைமை குறித்து நின்றது. வரை - மேல்பான்மலை. பானு - ஞாயிறு. கூண்டு - கவிந்து. இயங்க - செல்ல. மால்வரைச் சேண் நெறி - பெரிய மலையின்கணுள்ள நீண்ட வழி. நல்லீர்! யாம் அசைந்தனம்; பானுவும் சார்ந்தது; இருள் மூண்டது; இனி இயங்க நெறி தெரியாது; ஆதலின் இங்குத் தங்குதற்கு இடம் தருக என்பது கருத்து.* க

## பாங்கி நெறியினது அருமை சாற்றல்

***[நெறியினது அருமை—வழிவருதற்கு அரிதாயிருத்தலை]***

**192.** முரியுஞ் சிலைநுதல் வல்லிமுத் தேந்தி முறுகிவம்பு
வரியுங் களப வனமுலை வேட்டு மயங்கிவருங்
கரியுங் கொடுவரி யுங்கானி யாறுங் கடந்துவெய்ய
அரியு மரவுமென் னுதைய நீவர லஞ்சுவதே.

(கு - ரை.) *முரியும் சிலைநுதல் வல்லி - வளைந்த வில்லையொத்த நெற்றியையுடைய பூங்கொடி போன்ற தலைவியது. முறுகி-முதிர்ந்து. வம்பு வரியும் - கச்சால் இறுக்கிக் கட்டப்பட்ட. களபம் வனம் முலை வேட்டு - கலவைச் சாந்தணிந்த அழகிய முலையை விரும்பி. மயங்கி வரல்; மதத்தாலென்க. கரி - யானை. மயங்கிவரலைக் கொடுவரியோடு கூட்டினும் அமையும். கொடுவரி - புலி. கான் யாறு - காட்டாறு. வெய்ய - கொடிய. அரி - (மலைவழியிற் கிடக்கும்) பருக்கைக் கல். அரவு - பாம்பு. அஞ்சுவது - அஞ்சத்தக்கது. ஐய! நீ வல்லியது வனமுலை வேட்டு, கடந்து எண்ணுது வரல் அஞ்சத்தக்கதெனக் கூட்டுக.* உ

### இறையோன் நெறியினது எளிமை கூறல்

193. வரவிங் கரிதன்று நும்மலைச் சாரல் வழியெமக்குக்
குரவஞ் செறிகுழற் கொம்பனை யாய்வெங் கொடுவரியும்
இரவுந் தனியு மிகலுரு மேறு மிறைஞ்சுமெண்கும்
அரவுங் களிறுமஞ் சேனஞ்சு வேனுங்க ளன்பினுக்கே.

(து - ரை.) குரவம் செறி குழல் கொம்பு அனையாய் - குரவம் பூவை நெருங்க அணிந்த கூந்தலையுடைய பூங்கொம்பு போன்ற தோழியே! வெம் கொடுவரி - கொடிய புலி. தனியும் என்றது, கூறப்பட்ட கொடுவரி முதலியவையன்றி மக்களொருவரும் நடமாடுதலற்ற இரவு என்றபடி. இகல் உரும் ஏறு - வலிமை மிக்க இடியேறு. இறைஞ்சும் எண்கு - வளைந்த அடியினையுடைய கரடி. களிறு - ஆண் யானை. அன்பினுக்கு அஞ்சுவேனென்றது, பிரிவின் நோய் செய்தலைக் கருதி யென்க. "நீங்கில் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்" - குறள் - ௧௧௧௪. கொம்பனையாய்! கொடுவரி முதலியவற்றை அஞ்சேன்; அன்பினுக்கு அஞ்சுவேன்; (ஆதலின்) வழிவர எமக்கு அரிதன்று எனக் கூட்டுக. ௫

### பாங்கி அவன் நாட்டு அணியியல் வினாதல்

*[தலைவனது நாட்டிலுள்ள மகளிர் அணியும் அணிகலங்களும் பிற இயல்புகளும் எத்தகையனவென்று பாங்கி அவனை வினாதல்]*

194. கொன்னூர் விழிதுயில் கூர்ங்கொடுங் கங்குற் குறிவிரும்பு
மின்னூர் வடிநெடு வேலண்ண லேசொல் விலையறியாப்
பொன்னூர் வனமுலை பூசுந்தண் சாந்தமும் பூந்தொடையும்
நின்னூர் வரையிளை யார்விளை யாடுநன் னீழலுமே.

(து - ரை.) கொன் ஊர் - பெருமை பொருந்திய ஊர். கூர் - மிக்க. கங்குல் குறி - இரவுக்குறி. மின் ஊர் - ஒளிபரந்த. வடி - கூர்மை. அண்ணலே - பெருமையிற் சிறந்த தலைவனே. பொன் ஊர் - பொன் போன்ற தேமல். பரந்த. சாந்தம் - சந்தனக்குழம்பு. விலையறியாச் சாந்தமென இயைக்க. பூந்தொடை - பூமாலை. வரை - மலை. இளையார் - இளம்பெண்கள். நீழல் என்றது, எம்மரத்தின் நீழல் என்றபடி. அண்ணலே! நின்னூர் வரையின்கண் விளையாடும் இளையார் பூசும் சாந்தமும் தொடையும் நீழலும் எவை என்பதை எனக்குச் சொல் எனப் பாங்கி வினவினளென்க. ௬

### தன் நாட்டு அணியியல் பாங்கி சாற்றல்

**195.** நிரையார் மலர்க்குழல் வல்லியெம் மூரணி நிற்கநம்மூர்
வரையா ரணிபவு மன்னுநன் னீழலு மற்றிங்கென்னை
யுரையா யெனிலின் றுயர்மலை நாட வுரைசெய்வல்யான்
விரையா ரமுமென் குவளையுங் காந்தளும் வேங்கையுமே.

(கு - ரை.) *நிரைஆர் - வரிசையாகப் பொருந்திய. வல்லி - பூங்கொடி போன்ற பாங்கியே. வரையார் - மலையின்கண் வாழும் மகளிர்; வரை - எல்லையுமாம். வரையூரார் என விகுதி பிரித்துக் கூட்டி, மலையூரின்கண் வாழும் மகளிர் எனலுமாம். அணிபவும் - அணிகின்ற நகைகளும். மன்னும் - பொருந்தும். உரை செய்வல் - சொல்வேன். விரை ஆரம் - மணம்பொருந்திய சந்தனக்குழம்பு. குவளை முதலியன மலர் வகைகள். இத்துறை, பிறகோவைகளில் 'தலைவன் அவள் நாட்டணியியல் வினுதல், பாங்கி தன் நாட்டணியியல் சாற்றல்' என்னும் இருதுறைகளாகப் பிரித்து வழங்கப்பெறும். 'வல்லி! நிற்க; என்னை இன்று உரையாய்' எனில், நாட! யான் உரைசெய்வல் (அவை) ஆரம் முதலியனவே எனக் கூட்டுக.* ௫

### இறைவிக்கு இறையோன் குறையறிவுறுத்தல்

***[தலைவன் குறையைப் பாங்கி தலைவிக்கு உரைத்தல்; குறை: இரவுக்குறி வேண்டல்]***

**196.** செஞ்சே லனைய விழிமட வாய்தெண் டிரைநுகர்ந்து
மஞ்சே தவழு மணிவரைச் சாரலில் வாளரவு
நஞ்சே யுமிழினும் வெஞ்சூ ரணங்கினு நள்ளிருளில்
அஞ்சேன் வருவனென் றாரென்செய் வேனவ ரன்பினுக்கே.

(கு - ரை.) *மடவாய் - தலைவியே. தெண் திரை - தெளிந்த அலைகளையுடைய கடல்; சினையாகு பெயர். நுகர்ந்து - நீரைப் பருகி. மஞ்சு - முகில். வாள் அரவு - கொடிய பாம்பு. வெம்சூர் அணங்கினும் - வெவ்விய வரையர மகளிர் வருத்தினும். நள்இருள் - செறிந்த இருள்; நடுஇரவுமாம். என் செய்வேன் என்றது, அன்பின் காரணமாக வருவன் என்றலின் அதனைத் தடுக்க என்னால் இயலவில்லை என்று குறிப்பித்தபடி. மடவாய்! சாரலில் இருளில் உமிழினும் அணங்கினும் வருவன் என்றார்; அவர் அன்பினுக்கு என்செய்வேன் எனக் கூட்டுக.* ௬

## தலைவி நொந்து நெஞ்சோடு கிளத்தல்

***[தலைவி அதற்கு வருந்தித் தன் மனத்தொடு சொல்லிக் கொள்ளுதல்]***

**197.** **பொருமாறு கொண்டு புகர்முக மாவும் புலியுமச்சந்**
**தருமா றுருமுறுந் தானங் கடந்து தமியள்முன்னே**
**யுருமாறி வந்துவெஞ் சூரர மாத ருலவுங்கங்குல்**
**வருமா றிசைந்தன மோமன மேயந்த வள்ளலையே.**

(கு - ரை.) புகர் முகம் மா - செம்புள்ளிகள் பொருந்திய முகத்தையுடைய யானை. மாறு கொண்டு - பகைமை கொண்டு. மாவும் புலியும் பொரும் என்க. உரும் உறும் - இடியிடிக்கும். தானம் - (இத்தகைய) இடத்தை. தமியள் : தலைவி. சூர்அரமாதர் - அச்சம் தரும் கடவுட்பெண்டிர். கங்குல் - இரவிலே. வள்ளல் : தலைவன். மனமே : வள்ளலைக் கங்குலில் தானம் கடந்து தமியள் முன்னே வருமாறு இசைந்தனமோ எனக் கூட்டுக. உருமாறி வருதல், சூரரமகளிர் தொழில். இசைந்தனமோ என்பதில் ஓகாரம், வருத்தமுணர்த்தி நின்றது.

(வே - ம்.) தலைவி நோாது நெஞ்சொடு கிளத்தல்; தமியன் முன்னே. எ

## இரவுக்குறி ஏற்பித்தல்

***[தோழி, தலைவியை இரவுக்குறிக்கு உடன்படுமாறு செய்தல்]***

**198.** **தளவந் தருநகை யாய்நதி வாய்ந்தவத் தண்டுறைவர்**
**இளவண்டன் மேவு மிருங்கழிக் கான லினம்பெடையைக்**
**களவனம் புல்லி யொளித்துற வாடுங் களவுகண்டார்**
**அளவின் றியதுயர் கூர்ந்தகன் றூர்நெஞ் சறிகிலமே.**

(கு - ரை,) தளவம் தருநகையாய் - முல்லைமுகையையொத்த பல்லையுடைய தலைவியே; தரு : உவமவுருபு. துறைவர் : தலைவர். கானல் - கடற்கரைச் சோலையின் கண்ணே. பெடையை - பெண் நண்டை. களவன் அம்புல்லி - ஆண் நண்டு அழகாகத் தழுவி; இனி, 'களவு அ(ன்)னம் புல்லி எனப் பிரித்து, ஆண் அன்னம் பெடையைக் களவில் புணர்ந்து எனப் பொருள் கொள்ளலுமாம். 'அன்னம் துணையோடு ஆடக் கண்டு, நென்னல் நோக்கி நின்றார் ஒருவர், நென்னல் நோக்கி நின்றா ரவர்நம், பொன்னேர் சுணங்கில்

போவா ரல்லர் : சிலப் - கானல் வரி. களவொழுக்கமாதலின் ஒளித்துறவாடிற்றென்க. களவு கண்டார் - களவுப்புணர்ச்சியைக் கண்டாராய் ; வினைமுற்று வினையெச்சமாயிற்று. அளவு இன்றிய - அளவில்லாத. கூர்ந்து - மிகுந்து. அகன்றார் - நீங்கிச் சென்றார். நெஞ்சு - கருத்தினை. புணர்ச்சிக்குறிப்பு உடையார்போலும் என்பது கருத்து. நகையாய் ! துறைவர் கண்டாராய் அகன்றார் ; அறிகிலம் எனக் கூட்டுக.

(வே - ம்.) இரவிற்குறி ஏற்பித்தல், அ

தலைவி இரவுக்குறி நேர்தல்

*[நேர்தல்—உடன்படுதல்]*

**199.** குருகைக் கறிக்கப் பறிக்குநங் கோடெனக் கோளரிகண்
டொருகைக் களிறஞ்சி யொல்குந்தண் சார லுயிரனையா
யிருகைக் களிறு தனிநெறி யேநள் ளிரவுநம்பால்
வருகைக் கிசைந்தனை யோவினி நாளென் மறுப்பதுவே.

(கு - ரை.) குருகை - யானையின் மூளையை ; ஈண்டுக் கொம்பின் அடிப்பாகமாகிய வேரினை உணர்த்திற்று. கறிக்க - உண்ண. கோள் அரி - வலிமைமிக்க சிங்கத்தைக் கண்டு. ஒருகை களிறு - துதிக்கையையுடைய ஆண்யானை. ஒல்கும் - தளரும். சிங்கம், யானையின் கொம்பைப் பறித்து அதன் வேரினை உண்ணுதலை 'வெங்கைக் களிற்றின் மருப்பைப் பறித்ததன் வேரருந்தும், சிங்கத் தடஅருவிச் சிலம்பார்' - உஎக. என்னும் செய்யுளானும் அறிக. உயிர் அனையாய் - உயிரையொத்த பாங்கியே. இருகைக் களிறு என்றது, தலைவனை ; சிறப்புருவகம், நள் - நடு. உயிரனையாய் ! ஒருகைக் களிறு கோளரியைக் கண்டு, குருகைக் கறிக்க நங்கோட்டைப் பறிக்குமென அஞ்சி ஒல்கும் சாரலில், இரவில், இருகைக்களிறு தனிநெறியேவர இசைந்தனையோ ? இனி மறுப்பது என் ? எனக் கூட்டுக. கூ

நேர்ந்தமை பாங்கி நெடுந்தகைக்கு உரைத்தல்

*[தலைவி உடன்பட்டமையைப் பாங்கி தலைவனுக்கு உரைத்தல்]*

**200.** திருந்திய வாறு திருமுகன் வள்ளி திருமுகம்பெற்
றருந்திய வாறனக் கன்புடன் கூட வருவினையேன்
வருந்திய வாறும் வருந்திய வென்சொல் மருதுவஞ்சி
பொருந்திய வாறும் புகல வொணுநம் புரவலனே.

(கு - ரை.) திருமுகம் பெறுதலாவது, உடன்பாட்டைப் பெறல். அருந்தியவாறு - இன்பம் நுகர்ந்ததுபோல. வஞ்சி பொருந்தியவாறும் - தலைவி உடன்பட்ட வகையும். புகல ஒணு - சொல்லுதற்கு இயலா; பெருமுயற்சி செய்தேன் என்பது கருத்து. புரவலனே - தலைவனே. ‘பரவாத வண்ணம் பரவியும் பாதம் பணிந்தும் நெஞ்சம், கரவாத பொன்னையின் காரணமாக...... வெற்பா, இரவாத வண்ணமெல்லாம் இரந்தேன் இவ்விரவிடையே’. - தஞ்சை - ௧௭௨. ௧௦

### குறியிடை நிறீஇத் தாய்துயில் அறிதல்

***[தோழி, தலைவனைக் குறியிடத்து நிறுத்தித் தாயினது தூக்கத்தை ஆய்ந்து அறிதல்]***

**201.** சீதஞ்செய் திங்கள் திருமுகத் தாய்நஞ் செழுஞ்சிலம்பின்
மாதங்க மொன்று மழைமதம் பட்டுநம் மல்லிகைவண்
போதொன்று பந்தருங் கற்பக வூசலும் பொற்பழித்துச்
சூதஞ் சுரபுன்னை சூழ்நறுங் காவுந் தொலைக்கின்றதே.

(கு - ரை.) சீதம் செய் - குளிர்ச்சி பொருந்திய. திருமுகத் தாய் : தோழி தலைவியை விளித்தது. சிலம்பில் - மலையில். மாதங்கம் - யானை. மழை மதம்பட்டு - மழைபோற் சொரிதலையுடைய மிக்க மதத்தைப் பொருந்தி. ஒன்று - பொருந்திய. கற்பக ஊசல் - கற்பகம் போன்ற சிறந்த மரத்தில் கட்டப்பட்ட ஊசல். பொற்பு - அழகினை. சூதம் - மாமரம். கா - சோலை. ‘இலங்கையில் காவை அனுமான் அலைத்ததென........அங்கையின் நீள்விழி மானே நம் சோலையை ஈடழித்த, திலங்கையில் போகவும் செய்திட்ட தானையொன் றின்று வந்தே’ - கோடீச் - ௧௮௨. ௧௧

### குறி எதிர் கோடல்

***[குறியிடத்திற்கு வரும் தலைவனைத் தலைவி எதிர்கொள்ள நினைத்துக் கூறுதல்]***

**202.** வீழ்கின்ற தண்புனல் வெள்ளத்து நள்ளிருள் மேவிமங்குல்
சூழ்கின்ற குன்றச் சுரம்வர வாய்த்துங்கண் துஞ்சமறந்
தாழ்கின்ற துன்ப மருந்துயராக வருவினையேன்
வாழ்கின்ற இல்ல மறிந்ததெவ் வாறென் மழைவள்ளலே.

(கு - ரை.) தண்புனல் - தண்ணீர். மங்குல் - முகில். குன்றச் சுரம் - குன்றத்தின் வழியாக. வரவாய்த்தும் - (தலைவன்) வரப்பெற்

றேம். துன்பம் துயராக என்றது, துன்பம் மேன்மேல் வளர என்ற படி. இல்லம் - வீட்டினை. வள்ளல், வெள்ளத்து இருள் மேவிச் சுரம்வர வாய்த்தும்; (அவ்வாறு வருதற்கு) வினையேன் இல்லம் அறிந்தது எவ்வாறு எனக் கூட்டுக. தலைவி, தலைவனை எதிர் கொள்வதாக நினைத்து இவ்வாறு கூறினாளென்க. கஉ

### தலைமகன் வரவு அறிவுறுத்தல்

**[தலைவன் குறியிடத்தில் வந்திருத்தலைத் தோழி தலைவிக்கு அறிவித்தல்**

**203.** கொன்னே யரவு முருமுந் தருமிருள் கூர்கங்குல்வாய்
மின்னே சுடர்வடி வேல்விளக் காகநம் வேட்கையினால்
என்னே தமியர்வந் தெய்தினர் போலு மெழுதரிய
பொன்னே திருமனை யின்புறஞ் சார்புள் புலம்பினவே.

(கு - ரை.) கொன்னே - பயனில்லாமல். உரும் - இடி. தரும் - பொருந்திய. கூர் - மிகுந்த. கங்குல்வாய் - இருளில். மின் சுடர் வடிவேல் - மின்னலையொத்த ஒளிபொருந்திய கூரிய வேலின் ஒளியே. வேட்கையினால் - காதலால். தமியர் - தனித்தவராய். பொன்னே - திருமகள்போன்ற தலைவியே. புள் புலம்பின - பறவைகள் ஒலித்தன; அவை யொலித்தல், தலைவன் வந்த அரவம் கேட்டுத் துயில் கலைந்தமையாலென்க. கொன்னே! புலம்பின; (ஆதலின்) எய்தினர் போலும் எனக் கூட்டுக. 'மின்னாய் அயிலொடு மின் விளக்கா வந்த வெற்பரை' - தஞ்சை - களரு. கந

### குறியிடம் கோண்டு சேறல்

**[தோழி தலைவியைக் குறியிடத்திற்குக் கொண்டு செல்லுதல்]**

**204.** வல்லிக் கொடியிடை வாட்டிய மேரு வரையிரண்டு
புல்லிப் பொருந்தின பூண்முலை யாயுடன் போதுதியோ
அல்லிக் குவளை யகன்சுனை நீரி லரும்பவிழ்த்துக்
கொல்லிச் சுரும்பறை மல்லிகை நாண்மலர் கொய்வதற்கே.

(கு - ரை.) வல்லிக்கொடி: இருபெயரொட்டுப் பண்புத் தொகை; இடைக்கு உவமை. வரை - மலை. மேருவரை இரண்டினை முலைக்கு உவமை கூறியது இல்பொருளுவமை. பூண்முலையாய் - அணிகலங்களையணிந்த முலையையுடைய தலைவியே. உடன்போதுதி-

என்னுடன் வருவாயாக; ஓ: அசை; வினாவுமாம். அல்லிக்குவளை-அகவிதழையுடைய குவளைமலர். கொல்லிச் சுரும்பு அறை - கொல்லிமலையிலிருந்து வந்த வண்டுகள் ஒலிக்கின்ற. கொல்லிச் சுரும்பு என்பதற்குக் கொல்லிப் பண்போன்று முரலுதலுடைய சுரும்பு என்றும் கொள்ளலாம். கொல்லி - ஒரு பண். கொய்வதற்கு - பறிப்பதற்கு. முலையாய் ! அவிழ்த்துக் கொய்வதற்குப் போதுதியோ எனக் கூட்டுக. க௪

(வே - ம்.) போதுதியே.

தறியிடத்து உய்த்து நீங்கல்

205. கொத்தார் நறுமலர் கொய்துவல் லேவரு மெல்லையினில்
இத்தா ருவினிழ லெம்பெரு மாட்டி யெழுந்தருள
மைத்தார் பொழிலின வண்டொரு கோடி மழைக்குழலில்
மொய்த்தா லரிய மருங்குலெங் கேயிம் முலைமலைக்கே.

(து - ரை.) வல்லே - விரைவாக. வரும் எல்லையினில் - யான் வருமளவும். தாரு - மரம். எம்பெருமாட்டி - தலைவி ; அண்மை விளி. எழுந்தருள - தங்கியிருப்பாயாக ; அகரவீற்று வியங்கோள். மைத்துஆர் பொழிலின - கருநிறங்கொண்டு பொருந்தின சோலையின் கண் உள்ளனவாகிய. மழை குழலில் - முகில்போன்ற கரிய கூந்தலில். அரிய மருங்குல் எங்கே - நுட்பமான இடை எவ்வாறு வலிவுடைத்தாகும். மலைக்கு - மலையைத் தாங்குதற்கு. பெருமாட்டி ! எல்லையினில் நிழல் எழுந்தருள (அங்ஙனமின்றி என்னுடன் வருவாயாயின்) வண்டு (மொய்க்கும்) மொய்த்தால் மலைக்கு மருங்குல் எங்கே? எனக் கூட்டுக. வண்டின் பாரத்தால் இடையொடியும் ; அவ்வாறொடிந்தால் பின் மலையைத் தாங்குதற்கு வேறிடையின்றாய் முடியும் என்பது கருத்து. 'இடை வேறில்லை வாணுதற்கே' (கக௫) என முன்பும் வந்திருத்தல் காண்க. க௫

இறைவி இறையோனிடத்து எதிர்ப்படுதல்

*[தலைவி தலைவனை எதிர்ப்படுதல்]*

206. வரவிந்த மன்ன வளர்தன பாரமு மவ்வவுடன்
குரவந் தயங்கிருட் கொந்தள பாரமுங் கொண்டிங்ஙனே
இரவந்த மால்வரை வந்தென்னை யாளு மிதுநினைந்தோ
அரவிந்த மாளிகை நீர்பக லேவிட் டகன்றதுவே.

(த - ரை.) வரம் விந்தம் அன்ன - சிறந்த விந்தியமலையையொத்த. மவ்வல்-முல்லைமலர். குரவம் - குராமலர். தயங்கு - விளங்குகின்ற. இருள் கொந்தளபாரம் - இருளையொத்த கூந்தல் பாரம். மால்வரை - பெரிய மலையின்கண்ணே. ‘அந்த’ என்பது உலகறி சுட்டு ; ‘அந்தம்’ எனப் பிரித்து ‘அழகிய’ எனப் பொருள் கோடலுமாம். ஆளும் இது-ஆளுதலாகிய இச்செய்கையை. அரவிந்த மாளிகை-தாமரைமலராகிய வீடு ; தலைவியைத் திருமகளாக நினைந்தானாகலின், அவள் இருப்பிடமாகிய தாமரை இரவில் குவிந்துவிடுதலைக் கருதி ‘பகலே விட்டகன்றதுவே’ என்றானென்க. இரவுவரை யிங்ஙனே வந்து இதுநினைந்தோ அகன்றது ? எனக் கூட்டுக. அந்த மால்வரை வந்து (பகற்குறியில்) என்னை ஆளும் நீர் இரவு இங்ஙனே இது நினைந்தோ அரவிந்த மாளிகை பகலே விட்டகன்றது என்று கூட்டியும் உரைக்கலாம். ‘மெய்த்திருவே இருட்போது வந்தாய் அந்த வெங்கதிரோன், அத் திரிமேல் நின்றிதழாயிரமும் அடைத்துவண்டாம், முத்திரை இட்டதன்றோ என்றும் நீவைகும் முண்டகமே’ - திருவாரூர்க்கோவை - ௨௦௭.

க௬

## பெருமகள் ஆற்றின தருமைநினைந் திரங்கல்

*[தலைவி, தலைவன் வரும் வழியருமையை நினைந்து வருந்துதல்]*

**207.** **கன்னாக மீது கணமழை தூங்கிருங் கங்குலுன்றன்**
**மின்னாக வெங்கதிர் வேல்வல னேந்தி விடஞ்சொரியும்**
**பன்னாக மும்மதம் பாய்நாக மும்பயி லுஞ்சுரத்தில்**
**என்னாக மென்செய்ய வோவிறை வாவின்றிங் கெய்தியதே.**

(த - ரை.) கல் நாகம் - கல் பொருந்திய மலை. கணம் மழை-முகிற்கூட்டம். தூங்கு - தங்குதலையுடைய. இருங்கங்குல்-பெரிய இரவில். மின் ஆக - மின்னலைப்போல் ஒளிவீசும்படியாக. வலன் ஏந்தி - வலப்பக்கத்தே தாங்கி. பல்நாகம் - பல்லையுடைய பாம்பு. மூன்றாமடியில் இரண்டாவது நாகம் - யானை. பயிலும் - தங்கும். சுரத்தில் - வழியில். என் ஆகம் - எனது உடல். என் செய்யவோ என்றது, நினக்கோரேதம் நேரின் என் உயிர் நீங்கும் ; நீங்கின் உடம்பு அழிந்துபோம் என்று குறிப்பித்தபடி. இனி நாகம் எனப் பிரித்து யானையெனப் பொருள் கொண்டு நாகம்போன்ற இறைவா என இசைத்து உரைத்தலுமாம். இறைவா ! உன்றன் வேல் மின்னாக ஏந்திக் கங்குல் சுரத்தில் எய்தியது என் செய்யவோ ? எனக்

கூட்டுக. இச்செய்யுளில் திரிபணியும், சொற்பின் வருநிலையணியும் காண்க. கஎ

புரவலன் தேற்றல்

**[தலைவன் தலைவியைத் தேற்றுதல்]**

**208.** மேகஞ் சிறந்த குழனிழ லோடிய வேனெடுங்கண்
மாகஞ் சிறந்த மதிநுத லாய்மல்கு மல்குலுக்கும்
ஆகஞ் சிறந்த முலைக்குமுன் றேற்ற அடலெயிற்று
நாகங்க ளென்னை நலிவுசெய் யாவுங்கள் நண்பனென்றே.

(கு - ரை.) மேகம் சிறந்த குழல் - முகில்போற் சிறந்த கூந்தல். நிழல் ஓடிய - ஒளிபரந்த. மாகம் - வானத்தின்கண் உள்ள. மதி நுதலாய் - பிறைத்திங்களையொத்த நெற்றியையுடைய தலைவியே. மல்கும் - (அழகு) மிகும். (அல்குல் கசுசு.) ஆகம் - மார்பிலுள்ள. அடல் எயிற்று நாகங்கள் என்பதற்கு, கொல்லுதலையுடைய நச்சுப் பற்களையுடைய பாம்பென்றும், வலிமை மிக்க கோட்டினையுடைய யானை என்றும் பொருள் கொள்க. அல்குலுக்குப் பாம்பும், முலைக்கு யானையும் தோற்றனவென அறிக. நலிவு செய்யா - துன்பஞ் செய்யா. குழலையும் கண்ணையுமுடைய நுதலாய்! உங்கள் நண்பனென்று நாகங்கள் என்னை நலிவு செய்யா எனக் கூட்டுக. கஅ

(வே - ம்.) நலிவு செய்யாது - (பழம்பதிப்பு முதலியன.)

புணர்ச்சியின் மகிழ்தல்

**209.** அரியார் மதர்விழி யாலமன் னீர்சொல் லமுதமன்னீர்
புரியார் தளையவிழ் பூமலர்க் காவிற் புணர்ந்திங்ஙனே
தரியாத வன்புந் தயங்குந் தகையிர வும்பகலும்
பிரியாம லிங்கெவற் குந்தெரி யாவிஞ்சை பெற்றிலமே.

(கு - ரை.) அரி ஆர் மதர்விழி - செவ்வரி பொருந்திய செழிப்புற்ற விழி. ஆலம் - நஞ்சு. ஆலமன்ன விழியீர், அமுதமன்ன சொல்லீர் என விகுதி பிரித்துக் கூட்டுக. புரி ஆர் தளை - முறுக்குண்ட கட்டு. கா - சோலை. இங்ஙனே - இவ்வாறே; இவ்விடத்திலேயே என்றுமாம். தரியாத - (உள்ளத்தின்கண்ணே மறைந்து) தங்காத. தயங்கும் தகை - விளங்கும்படி. பிரியாமல் என்பதன் பின் இருத்தற்குரிய என்னுஞ்சொல் வருவித்துரைக்க. விஞ்சை - வித்தை.

(வே. ம்.) அன்பு தயங்க முயங்கும் தகை பகலும். இ - வி. கசஙு. கக

இறைவியை இல்வயின் விடுதல்

*[தலைவன், தலைவியை அவள் வீட்டிற்குச் செல்லுமாறு அனுப்புதல்]*

210. பங்கே ருகமலர்ப் பாயலை நோக்கியப் பாற்கடலின்
னெங்கே திருவென் றிரங்குமுன் னேயிசை வண்டினஞ்சூழ் [குற்
கொங்கேர் மலர்க்குழற் கொவ்வைச்செவ் வாய்மென் கொடிமருங்
செங்கேழ் விழியன்ன மேதிரு மாளிகை சேர்ந்தருளே.

(கு - ரை.) *பங்கேருகமலர்ப் பாயல் - தாமரை மலராகிய படுக்கை. பாற்கடல் என்றது, தலைவியின் தாயை. இசை - ஒலிக்கின்ற; இராகமுமாம். கொங்கு ஏர் - பூந்துகளையும், அழகையுமுடைய. மருங்குல் - இடை. கேழ் - நிறம். குழலையும், வாயையும், மருங்குலையும், விழியையுமுடைய அன்னமே! கடல் பாயலை நோக்கித் திரு எங்கேயென்று இரங்கு முன்னே மாளிகை சேர்ந்தருள் எனக் கூட்டுக. 'நின் மாளிகையாம், தொல்லையம் போருகம் தேடவும் கூடும்'-தஞ்சை. கஅரு.* உo

களவு மகிழ்ந்துரைத்தல்

*[களவில் தனக்கு இன்பந்தரும் தலைவியை மகிழ்ந்து தலைவன் உரைத்தல்]*

211. அரவந் தருமணி நூபுரத் தாமரை யன்னங்கற்ற
கரவிங் கெவருழைக் கண்டறி வோங்கள்வ ருந்துயில்கூர்
இரவும் பகலு மெமக்குந் தமக்கு மிசையநலம்
பரவும் பனிமதி யின்பண்பை யார்முகப் பங்கயமே.

(கு - ரை.) *அரவந்தரும் மணி - ஒலிக்கின்ற பரலையுடைய. நூபுரம் தாமரை - சிலம்பை யணிந்த தாமரைபோன்ற அடிகளையுடைய. அன்னம்: தலைவி. கரவு - கள்ளம். உழை - இடம். தமக்கு என்றது தலைவியை. இசைய - பொருந்த. நலம் பரவும் - இன்பத்தை மிகுதியாகச் செய்யும். பனி - குளிர்ச்சி. மதியின் பண்பாவன: தண்மை ஒண்மை வட்டம் முதலியன. ஆர் - பொருந்திய. முகப் பங்கயம் - முகமாகிய தாமரை. பங்கயத்தையும் தாமரையையுமுடைய அன்னம், இரவும் பகலும் இசைய நலம் பரவும்; (ஆதலின், அவள்) கற்ற கரவை எவருழைக் கண்டறிவோம்? எனக்*

கூட்டுக. இவள் வல்லமை இருந்தபடி என்னே என்று வியந்துரைத்தவாறு. உக

## பாங்கி கையுறை காட்டல்

[பாங்கி தான் பறித்து வந்த குவளை, முல்லை முதலிய மலர்களைத் தலைவிக்குக் காட்டல்]

**212.** செஞ்சேல் பொருகுழை சேர்க்குங் குவளையுந் தேனிரங்கு
மஞ்சேர் குழற்கணி மவ்வலுங் கொய்திவண் வந்தனன்முன்
அஞ்சே லரிவையஞ் சேலடி யேன்விட் டகன்றதற்கு
நெஞ்சேது பட்டது நீயேது பின்னை நினைந்தனையே.

(கு - ரை.) சேல் - சேல்மீன்போன்ற கண்; உவமவாகுபெயர். குழை: அதனை அணிதற்கிடமாகிய காதை உணர்த்திற்று; தானியாகு பெயர். சேர்க்கும் - அணிதற்குரிய. பெண்கள் காதில் குவளை யணிந்துகொள்வது அக்கால வழக்கம். (உகரு) தேன் இரங்கும்-வண்டுகள் ஒலிக்கின்ற. மஞ்சு ஏர்குழற்கு - முகிலையொத்த கரிய கூந்தலுக்கு. மவ்வல் - முல்லைமுகை. இவண் - இங்கு. அரிவை: தலைவி; அண்மைவிளி. நெஞ்சு ஏதுபட்டது - நின்மனம் என்ன துன்புற்றதோ ? அரிவை! அகன்றதற்கு ஏதுபட்டது ? நினைந்தனை ? குவளையும் முல்லையும் கொய்து வந்தனன்; (இனி) அஞ்சேல் எனக் கூட்டுக. உஉ

## இற்கொண்டேகல்

[தோழி, தலைவியை விட்டிற்கு அழைத்துக்கொண்டு செல்லுதல்]

**213.** புழற்கா லனகுவ ளைச்செவிப் போதும் புயலைவென்ற
குழற்கான மவ்வலுங் கொய்தனம் யாமிற் கொடியவன்னை
யழற்கால் விழித்துயி லித்துண ராமுன் னடைகுவம்யாங்
கழற்கான் மதன்கணை போல்விழி யாய்நங் கடிமனைக்கே.

(கு-ரை.) புழல் கால்-உட்டுளை பொருந்திய தண்டையுடைய. செவிப்போது - செவிக்கு அணிதற்குரிய பூ. புயல்-மேகம். மவ்வல்-முல்லை. இல் - வீட்டில் உள்ள. அழல் கால் விழி - சினத்தால் தீயை வெளிப்படுத்துங் கண். துயில் நீத்து உணராமுன் - தூக்கத்தினின்றும் விழித்தெழாமுன்; உணராமுன் - யாம் அங்கில்லாமையை அறியாமுன் என்றுமாம். கழல்கால் மதன்கணை-கழலணிந்த காலையுடைய மன்மதன் அம்பு; கழல் - வீரர் அணிதற்குரிய காலணி.

கடிமனை - காவலையுடைய வீடு. விழியாய்! யாம் கொய்தனம்; இல்(லின்கண்உள்ள) அன்னை உணராமுன் யாம் மனைக்கு அடைகுவம் எனக் கூட்டுக.

(வே-ம்.) புழற்கா லனகுவளை; கொய்தனமாயிற்; விழியார் தம் இ. வி. கசரு. உ௩

இரவுநீடப் பருவரல் கூறல்

*[தலைவனைப் பிரிந்த தலைவிக்கு இரவுப்பொழுது நீண்டுதோன்றித் துன்பம் மிகுவித்ததைக் கூறுதல்]*

**214.** விரியுங் கடலுல கெல்லா முறங்க விழியடையா
தெரியுஞ் சுடர்துணை யாயிருந் தாளுக் கிடித்திடித்துச்
சொரியும் புயலுந் துளங்கிய மின்னொடு தூங்கிருளுந்
திரியுங் குறுந்துளி சிந்தின வாடையுஞ் சீரிதன்றே.

(கு - ரை.) சுடர் - விளக்கு. இருந்தாளுக்கு - இருந்த தலைவிக்கு. சுடர் துணையா யிருந்தாளுக்கு என்றதன் கருத்து, அவ்விரவில் தலைவி யொருத்தியே துயிலின்றித் தனித்திருந்தாள் என்பதாம். 'மன்னுயி ரெல்லாம் துயிற்றி அளித்திரா, என்னல்ல தில்லை துணை'- குறள்-கககூஅ. துளங்கிய - அசைகின்ற. தூங்கு இருள் - மிக்க இருள். திரியும் - மாறுபடும். மின்னொளிக்குப் பின் இருள்மிக்குத் தோன்றலின் 'மின்னொடுதிரியும்' என்றார். வாடை - பனிக்காற்று. சீரிது அன்று - தலைவிக்கு நன்மைசெய்வன அல்ல. சீரிது என்பதைப் புயல் முதலியவற்றொடு தனித்தனிக் கூட்டுக; அன்றிப் பன்மை யொருமை மயக்கமுமாம். இருந்தாளுக்குச் சொரியும்; திரியும்; சிந்தின (ஆதலின்) சீரிதன்று எனக்கூட்டுக. உ௪

இறைவனை வரவு விலக்கல்

*[தோழி, தலைவனை இரவில் வரவேண்டாவென்று விலக்கல்]*

**215.** கலவஞ் செறிமயி லன்னவென் காரிகை காரணமா
இலகுஞ் சுடர்வடி வேலிறை நீவரி னிவ்விரவு
சிலபைங் கழைமுத்த முந்துத்தி நாகச் சிகாமணியும்
நிலவும் வெயிலு மெறிக்குமென் சார னெடுவரையே.

(கு - ரை.) கலவம் - தோகை. காரிகை: தலைவி. இலகும் - விளங்குகின்ற. சுடர் - ஒளிபொருந்திய. வடி - கூர்மை. இறை- தலைவ; அண்மைவிளி. கழைமுத்தம் - மூங்கிலிற் பிறந்த முத்து.

துத்தி - படப்புள்ளி. முத்து நிலவையும், நாகமணி வெயிலையும் எறிக்கும் என்க. சாரல் நெடுவரை - சாரலையுடைய நெடியமலை. இறை! நீ காரிகை காரணமாய் இரவு நெடுவரை வரின் எறிக்கும் எனக் கூட்டுக. பாம்புகள் வாழும் வழியாதலாலும், ஒளியில் வந்தால் மற்றவர் நின்வருகையை அறிவர் ஆதலாலும் வாரற்க என்பது கருத்து.

(வே-ம்.) காரணமா விலகும். உ௧

## கூகையை நோக்கிக் கூறல்

[தலைவி கூற்று]

216. கூருகிர்ப் பைங்கண் வளைவாய்க் குருகிளங் கூகையங்கன்
ஊருயிர்க் குந்துயர் பாலு விரவி னெருதனியேன்
ஆருயிர்க் கேள்வர்க் ககன்றன வாய்ச்சொல்லு மாங்கசனி
நேருயிர்க் குங்குரல் காட்டவெஞ் சூட்டெலி நேர்குவனே.

(கு - ரை.) உகிர் - நகம். குருகு இளங்கூகையங்கன் - மிக்க இளமையையுடைய கூகைக் குழாத்துள்; குருகு - இளமை; குருகிளமை என்றது ஒருபொருட் பன்மொழி. ஊர் உயிர்க்கும்-ஊரார் யாவரும் உறங்கும்; உயிர்த்தல், ஈண்டு மூச்சுவிட்டு உறங்குதலை உணர்த்திற்று. பால்நாள் இரவு - நள்ளிரவு. 'கொன்னூர் துஞ்சினும் யாம்துஞ் சலமே'—குறுந் - கஅ. கேள்வர்க்கு - தலைவர் வருகையைக் குறிப்பிடுதற்கு, உரிய வாய்ச்சொல்லும் அகன்றன என்க. அசனி நேர் உயிர்க்கும் - இடியையொத்து ஒலிக்கும். காட்ட - (தலைவன் வரவைக்) காட்டுமாயின். வெம் சூட்டு எலி - விருப்பந்தரும் சூட்டையுடைய எலியாகிய உணவை. நேர்குவன் - ஈவேன். ஆளரவங்கேட்டுக் கூகை கத்துதல் இயல்பாதலின் அதன் குரல் தலைவன் வரவையும், குரலின்மை அவன் வாராமையையும் உணர்தற்கு ஏது வாயின என்க. பானாள் இரவின் கூகையங்கன் வாய்ச்சொல்லும் அகன்றன; காட்ட நேர்குவன் எனக்கூட்டுக. 'மறுவில் தூவிச் சிறு கருங்காக்கை, அன்புடை மரபினின் கிளையோ டாரப், பச்சூன் பெய்த பைந்நிண வல்சி, பொலம்புனை கலத்திற் றருகுவன் மாதோ, வெஞ்சின விறல்வேல் காளையொ, டஞ்சில் ஓதியை வரக்கரைந் தீமே'-ஐங்-நகக. 'வலிமுந்து கூகை, மையூன் தெரிந்த நெய்வெண் புழுக்கல், எலிவான் சூட்டொடு மலியப் பேணுதும்'-நற்றிணை-அங.

### பெருமகன் மயங்கல்

*[தோழியால் வரவு விலக்கப்பட்ட தலைவன் வருந்திக் கூறுதல்; பெருமகன்-தலைவன்]*

**217.** முதுவான் மதியை மழவுகை காட்டி மொழிந்திரங்கும்
அதுவா நினையி லனையவென் காத லளியினஞ்சூழ்
மதுவார் மலர்மென் குழல்வல்லி நீசொன்ன மாற்றங்கெட்டேன்
இதுவா மெனிலவ் வனையெது வாமிங் கியம்புவதே.

(கு - ரை.) முதுவான் மதியை - பழமையான சிறந்த திங்களை. மழவு - குழந்தை. மொழிந்து - கூப்பிட்டு. அனைய - அப்படிப் பட்ட, என்றது காதலின் சிறப்பை உணர்த்தி நின்றது. மதியைப் பெற எண்ணும் மழவின் காதல் முற்றுறாது இரங்கற் கேதுவா யினமைபோலத் தலைவியைப் பெற எண்ணும் எனது காதலும் இரங் கற் கேதுவாயிற்று என்பதாம். அளி இனம்-வண்டின் கூட் டம். மதுவார் - தேனொழுகுகின்ற. வல்லி: தோழி; அண்மைவிளி. மாற்றம் - சொல். அ அனை - தாய்போன்ற அத்தலைவி. இயம்புவது எதுவாம் - சொல்வது யாதோ? அவளும் நின்கருத்தையே உடன் படலன்றி மாறுபடக் கூறும் வன்மையிலள் என்பது கருத்து. கெட் டேன்: இரக்கத்தின்கட் குறிப்பு. வல்லி! நீ சொன்ன மாற்றம் இதுவாமெனில் அனை இயம்புவது எதுவாம்? (ஆதலின்) என்காதல் மழவு இரங்கும் அதுவாம் எனக் கூட்டுக. 'இதுவாம்' என்றது, உகரு-ஆம் பாட்டில் கூறிய 'வரவு விலக்கலை' என்க.

"வானுந்து மாமதி வேண்டி யழுமழப் போலுமன்னே
கானுந் தளர்ந்தனன் நீயுந் தளர்ந்தனை நன்னெஞ்சமே."
(திருக்கோவையார்-147)

### நின்பதி அடைந்தமை நீ நிகழ்த்தென்றல்

*[நீ நின் ஊர்க்கட் சென்று சார்ந்தமையை யாம் அறியும் வண்ணம் குறிசெய் என்று தோழி தலைவனுக்குக் கூறுதல்]*

**218.** இடிக்கொத் துறுமு மிலங்கெயிற் றுளி யிபங்கரும்பை
யொடிக் கத்திரியு முழுவையஞ் சாரலி லோர்தனியே
வடிக்கட் சுடர்வடி வேன்மன்ன நீசெல் வழிக்கிரங்குங்
கொடிக்குப் படர்கொம்பு கூடுநின் சாரற் குறித்தகொம்பே.

(த - ரை.) இலங்கு எயிறு ஆளி - ஒளிபொருந்திய பற்களை யுடைய யாளி. இபம் மருப்பை - யானையின் கொம்பினை. உழுவை - புலி; சாரற்கு அடை. ‘குருகை......சாரல்’- (கசுக). வடிக்கண் சுடர் வடிவேல் மன்ன-வடிக்கப்பட்டு ஒளிவிடுகின்ற கூரிய வேலையுடைய தலைவ. வழிக்கு இரங்கும் - வழியின் இன்னாமையை நினைந்து வருந்தும். கொடி-தலைவி, பூங்கொடி; இரட்டுற மொழிதல். படர், கொம்பு - கொழுகொம்பாகும். கூடுதல்-தலைவன் தன் சாரலை யடைதல். குறித்த கொம்பு - தலைவன் சென்றமையை அறிவித்தற்கு அடையாளமாக ஊதப்பட்ட கொம்பு. மன்ன; ஆளி திரியும் சாரலில் நீ தனியே செல்வழிக்கு இரங்கும் கொடிக்குக் குறித்த கொம்பு, படர்கொம்பாம் எனக் கூட்டுக. ‘குரவம் செறியும் தொடையாய் உன் ஊரில் குறித்த கொம்பின், அரவம் பெறினல்ல வோதமியேன் மயில் ஆலிப்பதே’ - ஆரூர்க்-உஉ0. இ. வி. கசரு-மேற்கோள்.

(வே-ம்.) இடிக்கொத் தொளிறும்; இபங்கரும்பை. இ. வி. கசரு. உஅ

தலைமகள் ஆங்கு நினைந்து இரங்கல்

**[தலைவன் செல்லும் வழியின்னாமையை நினைந்து தலைவி இல்லின்கண் வருந்தல்]**

**219.** பறியிடை யென்பைப் புயற்றுளி தூங்கப் படிப்புறத்துச்
செறியிடை யாமத் தொருதனி வேல்கொண்டு தீவினையேன்
குறியிடை வந்தகன் றோர்கோலை வேழக் குழாந்திரியும்
நெறியிடை யூறின்றி யேசெலு வார்தம் நெடுநகர்க்கே.

(த - ரை.) பறியிடை என்பை - உடம்பினுள் இருக்கும் எலும்பையும். புயல் துளி தூங்க - மழைத்துளி படிந்து நனைக்கவும். படிப்புறத்து-உலகெங்கணும்; படி - உலகம். செறி இடையாமத்து - மிக்க நள்ளிருளில். அகன்றோர் - சென்ற தலைவர். வேழக்குழாம் - யானைக்கூட்டம். நெறி - வழியில். இடையூறு-துன்பம். செலுவார் - செல்லுவாரோ? அறிகிலேன் என்று இரங்கினாளென்க. உகூ

இரவுக்குறி முற்றும்

## ௧௦. இரவுக்குறி இடையீடு

*[இரவுக் குறியின்கண் நிகழும் தடைகளை எடுத்தியம்பல்]*

இறைவிக்கு இதனை இறைவரவு உணர்த்தல்

*[தலைவிக்குத் தோழி தலைவன் வந்தமையை உணர்த்துதல்; இருளை—தோழி]*

220. நீருங் கனலு நிமிர்கடுங் காலு நெடுவிசும்பும்
பாருந் துயில்கொண்ட பானா ளிரவும் பரவையம்பும்
வாரும் புலவுறு நாற்றமு மாற்ற மலர்ந்தபுன்னை
சேருங் குருகினஞ் சேக்கைகொள் ளாது சிலம்பினவே.

(கு - ரை.) கனல் - தீ. நிமிர் கடுங்கான் - ஓங்கி வளர்ந்த கொடிய காடு. 'நிமிர் கடுங்காலும்' என்றிருப்பின் சிறந்த பாடமாதலோடு ஐம்பெரும் பூதங்களையும் கூறியதாகவும் அமையும்; கால் - காற்று. விசும்பு - வானம். பார் - உலகம். துயில்கொண்ட - தூங்கிய. பால் நாள் இரவு - நள்ளிரவு. பரவை அம்பு - கடல்நீர். வாரும் புலவு உறு நாற்றம் - அலைகள் வாரிக்கொண்டு வரும் மீன் முதலியவற்றின் நாற்றம். மாற்ற - நீக்கும்பொருட்டு. கடல் நீரிலும் கரையிலுமுள்ள புலால் நாற்றம் நீங்குமாறு புன்னை மலர்கின்றன என்க. குருகு இனம் - பறவைக் கூட்டம். சேக்கை கொள்ளாது - தூங்காது. சிலம்பின - ஒலித்தன. நீர் முதலியவை துயில்கொள்ளலாவது ஒலியின்றி அடங்கி நிற்றல்; அன்றி அவற்றின்கண் வாழும் உயிர்த்தொகுதிகள் துயில்கொண்ட எனலுமாம். கனலிலும் நுண்ணுயிர்கள் உண்டென்பதைத் தற்கால அறிவுநூலால் அறியலாகும். குருகினம் இரவினும் சிலம்பின ஆதலின் தலைவன் வந்துள்ளான் என அவன் வரவினை அறிவித்தவாறு காண்க. இரவுக்குறியின்கண் வரும் தலைவன் தன் வருகையை அறிவித்தற்குப் புள்ளெழுப்பல், நீரில் கல் வீழ்த்தல் முதலிய குறிகளை நிகழ்த்துவானாதலின் தோழி இவ்வாறு கூறினாள். ௧

தான் தறி மருண்டமை தலைவி அவட்கு உரைத்தல்

*[தலைவன் செய்யாத வேறொன்றை அவன் செய்த குறியாக நினைந்து மயங்கினமையைத் தலைவி தோழிக்கு உரைத்தல்]*

221. புள்ளும் புனலும் புலம்பிய வோசை புணர்குறியென்
றுள்ளம் பொதிந்த வுவகையு நானு மொலியடங்கி
நள்ளென்ற கங்கு னறுமலர்ச் சோலையி னண்ணிநிற்பக்
கள்வஞ் சிறிதுள வோகலந் தார்வரக் காண்கிலமே.

(கு - ரை.) புள் - பறவை. புனல் - நீர். புலம்பிய - ஒலித்த. புணர் குறி என்று - கூட்டத்தைக் கருதித் தலைவன் செய்த குறி யென்று நினைத்து. பொதிந்த - நிறைந்த. நள்ளென்ற கங்குல் - நள் ளிரவில். நண்ணி - சென்று, காணாமையால், 'கள்ளம் சிறிது உளவோ?' என்று தோழியைக் கேட்கின்றாளென்க. கலந்தார் - தலைவர். ஓசையைக் குறியென்று உவகையும் நானும் சோலையில் நண்ணி நிற்பக் காண்கிலம்; உளவோ? எனக் கூட்டுக. 'உவகை யும் நானும்' என்று பிரித்தோதியது அதன் மிகுதியை உணர்த்தற் கென்க. மேற்செய்யுளில் 'நெஞ்சும் வினையேனும்' என்றதும் நெஞ்சின் வருத்த மிகுதியை உணர்த்தும்பொருட்டே யென்க. உ

### குறி பிழைத்து அழுங்கல்

***[தலைவி, தான் கேட்ட குறியெல்லாம் தவறுற்றுத் தலைவன் வாராமையால் வருந்துதல்]***

**222.** குழிவந்த பைங்கண்வெங் கூர்வாய்க் குடிஞை கொடுங்குற்றகின்
றழிவந்த நெஞ்சு மருவினை யேனு மலர்க்குறியின்
வழிவந்து நின்று மயங்கிருள் வாயுற்ற மம்மரெல்லாங்
கழிவந் தனநெய்தல் காள்கைதை காள்சொல்லுங் காதலர்க்கே.

(கு - ரை.) குழிவந்த - ஆழ்ந்த. குடிஞை - கூகை; (உகசு.) கண்ணையும், வாயையுமுடைய குடிஞை என்க. அழிவந்த - வருந்திய. 'வினையேன்' என்றாள், குறி பிழைத்தமைபற்றி. அலர்க்குறியின்வழி- மலர்களையுடைய குறியிடம். மம்மர் - மயக்கம். கழி வந்தன - கழியில் தோன்றிய. நெய்தல்: ஒருவகை நீர்க்கொடி. கைதைகாள் - தாழை களே. நெய்தல்காள்! கைதைகாள்! நெஞ்சும் அருவினையேனும் இன்று வழி நின்று உற்ற மம்மரெல்லாம் காதலர்க்குச் சொல்லும் எனக் கூட்டுக. ஙு

(வே - ம்.) கொடுங்குற்றதின்று.

### பாங்கி தலைவன் தீங்கெடுத்து இயம்பல்

***[தலைவன் தீங்காவது: தலைவி தெளிவாக அறிந்துகொள்ள முடியாத ஒன்றை அவன் குறியாகச் செய்தமை]***

**223.** ஆடும் படவர வல்குல்மின் னேயவ ரன்புதுன்ப
நீடும் பரிசு நிகழ்ந்தது வேநெஞ்சு நீடுயிர்த்து
வாடுங் குறியின்றி மன்றலஞ் சோலையில் வந்துநம்மைக்
கூடுங் குறியல்ல வேகுறித் தாரின்று கொற்றவரே.

(**கு - ரை.**) அரவின் படம் அல்குலுக்கு உவமை. அல்குல்: (கசச.) மின்: தலைவி. நீடும்பரிசு-மிகும்படி. அன்பு (நமக்குத் துன்பம் மிகும்படி) நிகழ்ந்ததென்க. நீடு உயிர்த்து - பெருமூச்செறிந்து. வாடும் குறியின்றி - வாடுதற்கு உரிய குறியேயன்றி. மன்றல் - நறுமணம். அம் - அழகு; சாரியையுமாம். குறித்தார் - செய்தார். கொற்றவர் - தலைவர். மின்னே! கொற்றவர் இன்று நெஞ்சு வாடும் குறி குறித்தார் இன்றிக் கூடுங்குறியல்ல; (ஆதலின்) அவர் அன்பு நிகழ்ந்ததென்க. 'நின்கைத், தொடியோட மென்பணைத் தோளிணை வாடும் தொழில் புரிந்த, கொடியோர் துணிந்துசெய்தார் குறியாத குறி நமக்கே?—தஞ்சை ககஉ.

### புலந்து அவன் போதல்

***[தலைவன், குறியிடத்தில் நெடுநேரம் நின்றும் தலைவி அங்கு வராமையால் வருந்திச் செல்லுதல்]***

**224.** நம்போ லெளியவ ரில்லைநெஞ் சேயிந்த நானிலத்து
வம்போட வென்ற வனமுலை மாதர்க்கு மாளிகையின்
றம்போ ருகமென் றறிந்தும்வம் பேயென்னை நீயலைத்து
வெம்போ தகந்திரி கங்குலென் னேவிங்கு மேவியதே.

(**கு - ரை.**) எளியவர் - அறிவில் கீழ்ப்பட்டவர். நானிலத்து - உலகத்தில். வம்பு ஓட வெல்லலாவது: தம்கதிப்பால் வம்பு புடை பெயருமாறு செய்தல்; வம்பு - கச்சு. வனமுலை மாதர்க்கு - அழகிய முலையையுடைய தலைவிக்கு. அம்போருகம் - தாமரைமலர். வம்பே- வீணாக. அலைத்து - வருத்தி. வெம்போதகம் திரி - கொடிய யானைகள் திரிகின்ற. கங்குல் - இரவு. மேவியது - பொருந்தியது. நெஞ்சே! நீ அறிந்தும் இங்கு மேவியது என்? எனக் கூட்டுக. அறிந்தும் மேவியதால் எளியவர் இல்லை என்றான். தலைவன், தலைவியைத் திருமகளாக நினைத்து அவளிருப்பிடத்தைத் தாமரையாகக் கூறுதலை உ0சு-ஆம் பாட்டிலும் காண்க.

(வே - ம்.) நானிலத்தில்.

### புலர்ந்தபின் வறுங்களம் தலைவி கண்டு இரங்கல்

**[பொழுது விடிந்தபின், தலைவனில்லாத இடத்தைத் தலைவி கண்டு வருந்துதல்]**

**225.** யாமம் புணர்குறி வந்துநின் றேனினு மிங்கிவர்தந்
தாமம் புனையத் தவஞ்செய்த வாபைந் தடஞ்சுனையிற்
றேமென் குவளையுங் கோடலு நாறுஞ் செழுஞ்சிலம்பிற்
பூமென் குரவு சுரபுன்னை சூழும் புனக்கன்னியே.

(கு - ரை.) யாமம் - நடு இரவில். புணர்குறி - புணர்தற்குக் குறிக்கப்பட்ட இரவுக்குறியிடம். நின்றேனிலும் - நின்ற என்னினும். இவர்: தலைவர். தாமம் - மாலை; இஃது, அல்ல குறிப்பட்ட தலைவன், தான் வந்து போனமைக் கடையாளமாக அங்கு நின்றதோர் செடிக்குச் சூட்டியதென அறிக. செய்தவா: வியப்பு உணர்த்திற்று. தடஞ்சுனை - பெரிய சுனை. தேமென்குவளை - தேன் பொருந்திய மெல்லிய குவளைமலர். கோடல் - காந்தள். சிலம்பு - மலை. குரவு - குராமரம். புனக்கன்னி - புனத்திலுள்ள கற்றாழை; பெண் என்னும் பொருளும் தந்து நின்றது. புனக்கன்னி, தலைவன் மாலைசூடப் பெற்றமையால், என்னினும் தவஞ்செய்தவள் என்பது கருத்து. சு

### தலைவி தன் துணைக்கு உரைத்தல்

**[துணை—பாங்கி]**

**226.** வரலரி கரிய மயங்கிருள் யாமத்துள் வந்தினவேய்
நரலுஞ் சிலம்பர் நவமணி யாழி நறவுண்வண்டு
முரலுந் தளையவிழ் மொய்ம்மலர்க் காந்தளஞ் செம்மலர்க்கை
விரலென்று கொல்செறித் தார்நெறித் தாழ்குழன் மெல்லியலே.

(கு - ரை. இங்கு வரல் அரிய என்க; வரல் அரிய - வருதற்கரிய. யாமத்துள் - இரவுப்பொழுதில். வேய் நரலும் சிலம்பர்—மூங்கில்கள் ஒலிக்கின்ற மலைக்குரிய தலைவர். ஆழி - மோதிரம். நறவு - தேன். முரலும் - ஒலிக்கின்ற. தளை அவிழ் - கட்டவிழ்ந்த. மொய் - நெருங்கிய. செம்மலர் கைவிரல் என்று கொல் - செங்காந்தள் மலரைக் கைவிரலென்று நினைத்தோ. செறித்தார் - அணிந்தார். நெறி - நெறிப்பு. மெல்லியல்: தோழி. சிலம்பர் யாமத்துள் வந்து செம்மலர் கைவிரல் என்று கொல் மணியாழி செறித்தார் எனக் கூட்டுக.

தஞ்சைவாணன் கோவை உரையாசிரியர் இச்செய்யுளை இத் துறைக்கு மேற்கோளாக எடுத்தாண்டுள்ளார்.

(வே - ம்.) யாமத்து வந்தனர் வேய் ; செம்முகைக்கை. இ - வி. கசஎ. எ

தலைமகள் அவலம் பாங்கி தணித்தல்

*[அவலம்—துன்பத்தை]*

**227.** அடுங்கால வேலை யனையகண் ணீர்வர ஆவிநைந்து
நடுங்கா தொழிமதி நன்னுத லாய்புன்னை நாறுசினைப்
படுங்கா யுதிரப் பழனக் குருகு பதிகலங்கக்
கொடுங்கா லெறிந்தது நங்கா தலர்தங் குறியல்லவே.

(து - ரை.) அடுங் கால வேலை அனைய - உலகத்தை யெல்லாம் அழிக்கும் காலத்துப் பொங்கி எழுகின்ற கடலையொத்த, நீர் என்க ; கொல்லும் கூற்றுவனது வேலையொத்த கண் எனலுமாம். நைந்து - வருந்தி. நடுங்காது ஒழிமதி - நடுங்கற்க ; மதி : முன்னிலையசை. நல் நுதலாய் - நல்லநெற்றியையுடைய தலைவியே. சினைப்படும் - கிளையில் பொருந்திய. பழனக் குருகு - வயல்களிலுள்ள அன்னப்பறவை. பதி கலங்க - தம்மிடத்திருந்து கலக்கங்கொள்ள. கொடுங்கால் எறிந்தது - கடிய காற்று வீசிற்று. நுதலாய்! காய் உதிரவும், குருகு கலங்கவும் கால் எறிந்தது ; குறியல்ல ; (ஆதலின், அவற்றை நம் காதலர் செய்தனவாகக்கொண்டு) நீர்வர நைந்து நடுங்காதொழி எனக் கூட்டுக. அ

இறைவன்மேல் பாங்கி குறி பிழைப்பு ஏற்றல்

*[குறி தவறிய குற்றத்தைத் தோழி தலைவன்மீது ஏற்றிக் கூறுதல்]*

**228.** உழிபார்த் துடனுறை புள்ளினம் போமெல்லை யொன்றுஞ்சொல்
கழிபார்த் திரங்கு கருங்கடற் சேர்ப்ப கருத்துனக்கு [லாக்
வழிபார்த் திருந்து வருந்துமெங் கானல் வரலொழிந்தீர்
பழிபார்த் துடனுறை பக்கமெங் கேசொல்லும் பாவியர்க்கே.

(து - ரை.) உடன் உறை புள் இனம் உழிபார்த்துப் போம் எல்லை - சேர்ந்து தங்கிய பறவைக் கூட்டங்கள் தத்தமக்குரிய இடத்தை நோக்கிப் போகும் மாலைக்காலத்தில். இரங்கு - ஒலிக்கின்ற. சேர்ப்ப - தலைவ. உனக்கு - உனக்காக. வழி பார்த்து

இருந்து - நீவரும் வழியைப் பார்த்துக் குறியிடத்திருந்து. கருத்து வருந்துமென இயைக்க. கானல் - கடற்கரைச் சோலையின்கண். பழி பார்த்து - பெண்பழி அடாதென்பது நோக்கி. உறை பக்கம் - நீ வசிக்கும் ஊர். உடன் சொல்லும் - விரைந்து சொல்வாயாக. பாவியர்க்கு - பாவிகளாகிய எமக்கு. சேர்ப்ப! எல்லை கானல் வரலொழிந்தீர்; (ஆதலின் யாங்களேனும் வருதற்கு) பழி பார்த்து எங்கே சொல்லும் எனக் கூட்டுக. 'விம்மூர் துயர்க்கடல் வெள்ளத்துள்ளே யெம்மை வீழ்வித்து நீர், எம் ஊரகத்து வரலொழிந்தீர்... ........உம்ஊர் வரத்துணிந்தோம் அன்பர் கூறும் அவ்வூர் எமக்கே' தஞ்சை - ககூள. கூ

இறைவன் துறிபிழைப்பு இறைவிமேல் ஏற்றல்

229. கடவா ரணந்திரி கங்குலின் யானவர் தங்குறியை
விடவாள் விழிவஞ்சி துஞ்சிய வாறென் விளங்குமணிப்
படவா ரரவல்குற் பைந்தொடி யேயிப் படியகத்து
மடவா ரினுமுண்டு கொல்பண்டு போலன்றி வன்னெஞ்சரே.

(கு - ரை.) கடவாரணம் திரி கங்குலின் - மதயானைகள் உலாவும் இரவில். அவர் என்றது தலைவியை. விட - குறிதவறும்படியாக; விடவாள் - நஞ்சு பூசப்பட்ட வாளுமாம்; இவ்வுரைக்கு 'மறந்து' என்னும் ஒருசொல்லை வருவித்து 'குறியை மறந்து துஞ்சியவாறென்?' என்றுரைத்துக் கொள்க. வாள் - வாட்படை; ஒளியுமாம். வஞ்சி - தலைவி. துஞ்சியவாறு என் - உறங்கியதற்குக் காரணம் யாது? படவாள் அரவு அல்குல் - பாம்பின்படம்போன்ற ஒளி பொருந்திய அல்குலையும்; (உஉ௩) பைந்தொடியே - பசும்பொன்னால் செய்த வளையல்களையுமுடைய தோழியே; படியகத்து - உலகத்தில். மடவார் - பெண்கள்; ஈண்டுத் தலைவியைக் குறித்து நின்றது; அறிவிலார் என்னும் பொருளும் தோன்றுகின்றது. பண்டு - பழைமை; பண்டுபோலன்றி என்றது, தலைவிக்கு வன்னெஞ்சம் பண்டில்லை; இன்றே தோன்றி யுள்ளது என்று குறிப்பித்தபடி. பைந்தொடியே! யான் அவர் குறியைவிட வஞ்சி துஞ்சியவாறு என்? (இவ்வாறு துஞ்சியதால்) படியகத்து மடவாரினும் வன் நெஞ்சர் உண்டுகொல்? எனக் கூட்டுக. கo

### அவள் குறிமருண்டமை அவள் அவற்கு இயம்பல்

**(தலைவி, வேறொரு குறியைத் தலைவன்செய்த குறியாக மயங்கினமையைத் தோழி தலைவனுக்குக் கூறுதல்]**

**230.** கடுங்கா லெறியக் கடத்துகு மாவின் கனியையெல்லாம்
ஓடுங்கா வரவல்கு லுன்குறி யாக வுளமகிழ்ந்து
நடுங்கா ரிருள்வந்து நாண்மலர்ச் சோலையி னண்ணியபின்
அடுங்காய் களிற்றண்ண லேயெண்ணு மாறு ளவில்லையே.

(து - ரை.) கடுங்கால் எறிய - பெருங்காற்று வீசுதலால். கடத்து உகு - காட்டகத்தே உதிர்ந்த. ஒடுங்கா - பரந்த. அரவு அல்குல்: தலைவி; அன்மொழித் தொகை. நடுங்கு ஆர் இருள்-நடுக்கந் தரும் நிறைந்த இருட்பொழுதில். நாள் மலர் - அன்றலர்ந்த மலர்களையுடைய. அடும் காய் களிற்று அண்ணலே - கொல்லுகின்ற சினமிக்க யானைகளையுடைய தலைவனே. குறி நிகழ்ந்தமையானும், தலைவனைக் காணாமையானும் இவற்றிற்குக் காரணம் யாதாயிருக்கலா மெனப் பலவாறு எண்ணினளென்க. அண்ணலே! அல்குல் எல்லாம் குறியாக மகிழ்ந்து வந்து நண்ணியபின் (அங்கு நின்னைக் காணாமையின்) எண்ணுமாறு அளவில்லை எனக் கூட்டுக.

(வே - ம்.) கடத்துய்க்கு மாவின். இ. வி. ௧௬௭. ௧௧

### தலைவன் மாற்றம் தலைவிக்கு உணர்த்தல்

*[மாற்றம்-சொல்லை]*

**231.** வருமந்த வெல்லையில் வல்லியென் றேவந்து வைகிருண்மாந்
துருமந் தருங்கனி யெல்லாந் தொலைத்துத் துணைபிரியா
அருமந்த வன்னங்கள் சேக்கைகொள் ளாம லழுங்குவித்துத்
தெருமந்து நின்றுவிட் டேனென்ப ரலன்பர் சேயிழையே.

(து - ரை.) வரும் அந்த எல்லையில் - தலைவன் தன்பதியினின்றும் குறியிடத்திற்கு வரும் அந்நேரத்தில். வல்லி என்றே - தலைவியைப் பெறவேண்டு மென்னும் எண்ணத்துடனேயே. வைகு இருள்-நிலைபெற்ற இருட்பொழுதில். மாந்துருமம் - மாமரம். தொலைத்து-வீழ்த்தி. அருமந்த: அருமருந்தன்ன என்பதன் மரூஉ. சேக்கை கொள்ளாமல் - துயில்கொள்ளாதபடி. அழுங்குவித்து - கலங்குவித்து. தெருமந்து - கலங்கி; தலைவி வாராமையால் தெருமந்து

நின்றானென்க. சேயிழையே - தலைவியே. சேயிழையே! அன்பர் வந்து தொலைத்து அழுங்குவித்து நின்றுவிட்டேன் என்பர் எனக் கூட்டுக.

(வே - ம்.) வல்லையின்றே. இ. வி. கசஎ. கஉ

### தாழ்த்தற்குக் காரணம் கூறல்

*[தோழி, தலைவன் காலந்தாழ்த்து வந்ததற்குரிய காரணத்தைத் தலைவிக்குக் கூறல்.]*

**232.** கடற்பாற் றரளஞ் சொரிபுன்னை நீழற் கருமணற்சோ
றடப்பார்த் திருந்தவர் சொல்லலுற் றாரமை யாதவின்னல்
விடப்பார்த் திருந்து வெருவும்பைங் கானலில் வெண்ணிலவு
படப்பார்த் திருந்தல் லானிற்ப ரோசொல்லு பைந்தொடியே.

(கு - ரை.) தரளம் - முத்தையொத்த புன்னை முகைகளை. அட - (தலைவி) சமைக்க. பார்த்திருந்தவர்: தலைவர். அமையாத - அடங்காத. இன்னல் - பிரிவுத்துன்பம்! விடப்பார்த்து - நீங்குதற்குரிய இரவுப்பொழுது எப்போது வருமென்று எதிர்பார்த்து. வெருவும் - அஞ்சத்தகும். கானலில் - கடற்கரைச் சோலையில். பட - மறைதலை. பார்த்து இருந்தது அல்லால் - பார்த்திருந்ததால் காலந் தாழ்த்ததன்றி, வேறின்று என்று சோறு அடப்பார்த்திருந்தவர் சொல்லலுற்றார் என இயைக்க. தலைவர் சொன்ன காரணமின்றி தாமெண்ணியபடி வாராமலே நிற்பரோ என்க. பைந்தொடியே: தலைவியே. பைந்தொடியே! இருந்தவர் இருந்தது (தான்காரணம் என்று) சொல்லலுற்றார்; (அஃது) அல்லால் நிற்பரோ சொல்லு எனக் கூட்டுக. கங

### மதியை நோக்கிக் கூறல்

*[தலைவி, தலைவன் வருதற்குத் தடையாக நின்ற திங்களை நோக்கிப் பழித்துக் கூறுதல்]*

**233.** அளியாற் பெருகி யமுதஞ் சிதறி யனைத்துயிர்க்குங்
களியாக் கியதன் கலைமதி யேகயற் கண்ணுமையும்
ஒளியாப் பசலைதந் தாருடன்கூடு மிடங்கண்முற்றும்
வெளியாக்கி யெம்மை வெம்விட மாய்விட வேண்டியதே.

(கு - ரை.) அளி - அருள். அமுதம் என்றது, ஈண்டு அதனையுடைய நிலவொளியை; நிலவொளியில் அமுதமுண்டென்பது

அறிஞர் துணிபு. களி ஆக்கிய-களிப்பைத் தருகின்ற. தண்-குளிர்ச்சி. கண்ணும் என்பதில் உம்மை இறந்தது தழுவிய எச்சத்தின்கண் வந்தது; பிறவுறுப்புக்களிலன்றிக் கண்ணிலும் என்பது கருத்து. மையும் - மையாலும்; உம்மை: உயர்வு சிறப்பு. ஒளியாப் பசலை - மறைக்க முடியாத பசப்பு; (களப) தந்தார்: தலைவர். கூடும் - கூடுதற்குரிய. வெளி ஆக்கி - ஒளியால் யாவர்க்கும் தெரியும்படி வெள்ளிடையாக்கி. இனி, 'கண்ணும்..........வெளியாக்கி' என்பதற்கு, கண்ணும், மையும், கூடும் இடங்கள் முற்றும் வெளியாக்கி என்று கூட்டி நிலவு எப்பொழுது மறையுமென்று நோக்கி நோக்கிக் கண் வெளிறிற்று என்றும் (நிலவின் ஒளி கண்ணிற் படுதலால் வெளிறிற்றென்க). கண்ணிற் றீட்டிய மையினுள் திங்களின் எதிரொளி தோன்றுமாதலின் மையினை வெளியாக்கிற்றென்றும், குறியிடம், நிலவு காய்தலால் வெளிச் சென்றாகுமாதலால் கூடுமிடம் வெளியாயிற்று என்றும் பொருள் கொள்ளலாம். விடமாய்விட - துன்பந் தரும் பொருளாய் மாற. வேண்டியதே - விரும்பியது ஏனோ? யாவர்க்கும் இன்பம் தருகின்ற நீ எம் களவிற்கு இடையூறாய் எமக்குமட்டும் துன்பந் தருவது ஏனோ என்று தலைவி வெறுத்துக் கூறியவாறு காண்க. தண்கலைமதியே எமக்குக் களியாக்காமல் வெளியாக்கி விட்டது; அதுவுமன்றி எம்மளவில் நஞ்சாயிருக்கவும் விரும்பியது; இச் செய்கைகள் அதனது தண்மைக்கும், கலைமைக்கும் அளிமைக்கும் பொருந்துவன அல்லவே. மதியே பொருந்தாச் செயல் செய்யத் துணிந்து விட்டதே என்கின்றாள் என்க. 'எல்லி வருநர் களவிற்கு, நல்லை யல்லை நெடுவெண் நிலவே' குறுந்தொகை-௪௭. ௧௪

என் பிழைப்பு அன்றென்று இறைவி நோதல்

*[தலைவன் அல்லகுறிப்பட்டதற்குக் காரணம் என்தவறு அன்று என்று தலைவி வருந்தல்]*

234. வடம்பரிக் குந்தன வல்லியன் னாய்வளை யேறியுழு
தடம்பரிக் குந்துறை யாழ்கடற் சேர்ப்பர்தம் அல்குறியின்
கடம்பரிக் குங்குறி யேகரி யாகக் கருத்துவைத்தாங்
குடம்பிருக் குஞ்சிறை யொன்றுமுன் னாதென் னுரைத்தனரே.

(கு - ரை.) வடம் பரிக்கும் தனவல்லி அன்னாய் - மாலைகளைத் தாங்குகின்ற நகிலினையுடைய பூங்கொடிபோன்ற தலைவியே. வளை - சங்கு. அடம்பு அரிக்கும் - அடம்பங் கொடிகளை அறுக்கின்ற. சேர்ப்

பர் - தலைவர். அல் குறியின் - தலைவன் அல்லகுறிப்பட்டமைக்கு; அஃதாவது, அவன்வந்து சென்றான் என்பதற்கு. கடம் பரிக்கும் குறியே - காட்டிலுள்ள காந்தள் தாங்கி நிற்கும் மோதிரமாகிய குறியே; கடம் - காடு; இடவாகு பெயராய்க் காட்டிலுள்ள காந்தளை உணர்த்திற்று; பரித்தல் - தாங்குதல். (உஉகூ.) கரியாக - சான்றாக. உடம்பு இருக்கும் சிறை - தலைவியின் உடம்பு இற்செறிக்கப்பெற் றிருத்தலை. உள்ளாது - எண்ணாது. அன்னாய்! சேர்ப்பர் தம் அல் குறியின் குறியே கரியாக உள்ளாது உரைத்தனரே எனக் கூட்டுக. கஙு

விருந்தென வந்த பெருந்தகை தளர்நிலை

[விருந்தாக வந்த தலைவனைத் தலைவி பேணாமையால், அவன் வருந்திச் சென்றமையைத் தோழிக்கு உரைத்தல்]

235. கனையிருள் வந்து குறிபிழைத் தார்சிறு காலையினம்
மனையிடை வந்து வருந்தின னென்ன விருந்தென்றென்னைப்
புனையிழை நீசென்று போற்றுகென் றாளன்னை போற்றுதற்குன்
னினைவறி யாதுநின் றேனகன் றாரவர் நீடுயிர்த்தே.

(கு - ரை.) கனை இருள் - செறிந்த இருட்பொழுதில். குறி பிழைத்தார் - அல்லகுறிப்பட்ட தலைவர். சிறுகாலையில் - விடியற் காலையில். என்ன - என்று தலைவர் சொல்ல. புனையிழை: தலை வியை அன்னை விளித்தது; தலைவி பாங்கியை விளித்ததூஉமாம். போற்றுக-பேணுக. நினைவு: 'இவன் தலைவியின் காரணமாக வந்தா னல்லன்; யாரோ வழிச்செல் விருந்தினன்' என்று அன்னை எண் ணிய எண்ணம். அவர்: தலைவர். நீடு உயிர்த்து-நெடுமூச் செறிந்து. பிழைத்தார் வந்து என்ன, அன்னை விருந்தென்று என்னை போற்று கென்றாள்; விருந்தினர் வரின், அவரைக்கண்டு முகமன் உரைத்துப் பேணுதல் மரபாகலான், 'அன்னை என்னை அவரைப் பேணுமாறு சொற்றாள்' என்றாள் என்க. (யான்) நின்றேன்; அவர் உயிர்த்து அகன்றார் எனக்கூட்டுக.

(வே - ம்.) விருந்தென்றன்னை; போற்றுதற்குன் நினைவறி யாது சென்றேன். இ. வி. கசஎ. கசு

### வருந்தொழிற்த அருமை சாற்றல்

*[தலைவன் இரவுக்குறிக்கண் வருதற்குரிய அருமையைக் கூறல்]*

**236.** ஒருகா லழுமன்னை கண்ணுறங் காள்பின் னுறங்கிலன்பர்
வருகால ஞாளி மருளுமன் னேமரு ளாதொழியில்
இருகா லொருசிகை வாரண மேங்கு மிரவுமுற்று
முருகார் விழவின் முழவுந்துஞ் சாதிம் முதுநகரே.

(கு - ரை.) வருகாலம் - வருதற்குரிய சமயத்தில். ஞாளி மருளும் - நாய் மருண்டு குரைக்கும். மன்னே - பெரும்பாலும்; அன்னே எனப்பிரித்துத் தலைவி தோழியை விளித்ததாக்கினும் அமையும். இருகால் ஒருசிகை வாரணம் - இரண்டு கால்களையும் ஓர் உச்சிக்கொண்டையினையும் உடைய கோழி. ஏங்கும் - கூவும். முருகு ஆர்விழவின் - முருகப் பெருமானுக்குச் செய்யும் திருவிழாவில் அடிக்கப்படும். முழவு-மத்தளம். துஞ்சாது - ஒலியடங்காது. உறங்காள்; மருளும்; ஏங்கும்; இவையெல்லாம் ஒழியினும் முதுநகர்க்கண் முழவு துஞ்சாது எனக் கூட்டுக. இச்செய்யுளிற் கூறப்பட்ட தாய்துஞ்சாமை, நாய்துஞ்சாமை, கோழி குரல் காட்டுதல், ஊர்துஞ்சாமை என்னும் இவற்றைப் பிறகோவைகளில் தனித்தனித் துறைகளாகக் கூறுவர். கஎ

### இதுவும் அது

**237.** ஒருவரு மேவலர் காவல ராலொற்றை நீண்மரத்தில்
வெருவர நின்று குழறுங் குடிஞையும் வெம்பகல்போல்
அருவரை யெங்கு நிலவெறி யாநிற்கு மன்பர்பின்னை
யிருவரை போன்முலை யாயெங்ங னேயிங்ங னெய்துவதே.

(கு - ரை.) மேவலர் - ஓரிடத்தே பொருந்தியிரார்; சுற்றித் திரிந்து காவல் புரிகின்றனர் என்பது கருத்து; துயில் பொருந்தலர் எனினுமாம். வெருவர - அஞ்ச. குழறும் - கத்தும். குடிஞை - கூகை. வரை - மலை. இருவரைபோல் - இரண்டு மலைகளைப் போன்ற. எங்ஙன் - எவ்வாறு. இங்ஙன் - இவ்விடம். முலையாய்! காவலர் மேவலர்; குடிஞையும் குழறும்; எறியாநிற்கும்; (ஆதலால்) அன்பர் எய்துவது எங்ஙன்? எனக் கூட்டுக. இதில்; காவலர் கடுகுதல், கூகை குழறுதல், நிலவுவெளிப்படுதல் என்னும் மூன்று துறைகள் அடங்கியுள்ளன. கஅ

### இரவுக்குறி இடையீடு முற்றும்

## கக. வரைதல் வேட்கை

*[தலைவன் தன்னை மணந்துகொள்ள வேண்டுமென்று தலைவி விரும்புதல்]*

### தலைமகளைப் பாங்கி பருவரல் வினவல்

*[பாங்கி தலைமகளை 'நின் துன்பத்திற்குக் காரணம் என்?' என வினவுதல்; பருவரல்-துன்பம்]*

**238.** மீனறி யாத விரிகடல் போலும் விழிபசந்து
தூநெறி யார்குழற் போதுந் துறந்தனை துங்கமலி
வானறி யாத மதிமுகந் தாயிற்றை வைகனின்ற
யானறி யாத வருத்தமென் னேவுனக் கெய்தியதே.

(கு - ரை.) மீன் அறியாத கடல் என்றது: இல் பொருளுவமை; வான் அறியாத மதி என்றது மதி. தூ நெறி ஆர் குழல் போதும் துறந்தனை - தூய நெறிப்புக்கொண்ட கூந்தலின்கண் பூவணிதலையும் ஒழிந்தாய். துங்கம் மலி - உயர்ச்சி மிக்க. வைகல் - நாள். முகத்தாய்! இற்றைவைகல் பசந்து துறந்தனை; (இவ்வாறு துன்புறுதற்கு) உனக்கு எய்தியதாகிய வருத்தம் என்னே? எனக் கூட்டுக. க

### பாங்கிக்கு இறைவி அருமறை செப்பல்

*[அருமறை—பிறர் அறிதற்கரிய களவொழுக்கம்; மறை—மறைத்துச் செய்யும் வினை]*

**239.** உண்ணின்ற வேட்கை யுணர்ந்தனள் போலனை யூர்துயின்றும்
பண்ணொன்று சொல்லிதன் பாயல்கொள் ளாளெனப் பைந்தொடி
தண்ணந் துறைவனை யுந்திரு மார்பையுஞ் சாரலுற்றூர் [யாய்
கண்ணுந் துயில்கொண்ட காலமுண் டோபண்டு கண்டதுவே.

(கு - ரை.) வேட்கை - காதலை. அனை - அன்னை. பண் ஒன்று சொல்லி - இசை பொருந்திய சொல்லையுடைய தலைவி. பாயல் கொள்ளாள் - தூங்காள். என - என்று அன்னை சொல்லும் படியாக. 'துயிலாமையன்றி' என்னுஞ்சொல் வருவிக்க. பைந்தொடியாய் - பசும்பொன்னாலாகிய வளையலை அணிந்த தோழியே. துறைவன் - தலைவன். சாரலுற்றூர் - சாரலுற்ற தலைவியர். துயில் கொண்ட - தூங்கிய. பண்டு - முன்னே. பைந்தொடியாய்! அன்னை உணர்ந்தனள்போல் எனச் சாரலுற்றூர் (துயில் கொள்ளாமையன்றிக்)

கொண்ட காலம் பண்டு கண்டதுண்டோ? எனக் கூட்டுக. சார லூற்றூர் எனப் பொதுப்படக் கூறினும், யான் தலைவனைச் சார்ந்த மையால் உண்டான துயிலா வேட்கையை என் அன்னை உணர்ந் தாள் என்பது கருத்து. உ

அருமறை செவிலி அறிந்தமை கூறல்

*[செவிலித்தாய் தன் களவொழுக்கத்தை அறிந்தமையைத் தலைவி தோழிக்குக் கூறல்]*

**240.** கொந்தார் மலர்க்குழல் வல்லிநம் மன்னை குரிசில்வந்த
செந்தா மரையடி கண்டனள் போலுமித் திண்சிலம்பில்
வந்தா ரெவரென வந்தார் சிலரிலர் மற்றிங்கென்றே
னுந்தா ணொடிதுயிர்த் தாள்கொடி தாயென்னை நோக்கினளே.

(கு - ரை.) கொந்து ஆர் - கொத்தாகப் பொருந்திய. வல்லி: தோழி; அண்மைவிளி. குரிசில் - தலைவன். அடி - அடிச்சுவடு. சிலம்பின் - மலையிடத்து. எவர் என - எவரென்று என்னைக் கேட்க. சிலர் இலர் என்றது, ஒருவருமில்லை என்றபடி. நொந்தாள் - நொந்து கொண்டாள். வல்லி! அன்னை எவரென இலர் என்றேன்; (அதற் காக) நொந்தாள்; உயிர்த்தாள்; நோக்கினள்; (ஆதலின்) கண்டனள் போலும் எனக் கூட்டுக. மற்று: அசை. ௩

தலைமகள் வருந்தொழிற்த அருமை சாற்றல்

*[தலைவி, தலைவன் வருவதற்குள்ள அருமைப்பாட்டைத் தோழிக்குக் கூறுதல்]*

**241.** அன்னையு முரு மலைவாய் ஞமலியு மம்புலியுங்
கொன்னகர்க் காவற் றுடியுங் குடிஞையுங் கோழியுமென்
றின்னவை நங்கள விற்கிடை யூறிதற் கேற்பவந்த
மன்னவர் தாம்வரு நாளொரு நாளில்லை வாணுதலே.

(கு - ரை.) அலைவாய் ஞமலி - அலைந்து திரிதலையுடைய நாய். அம்புலி - திங்கள். கொன் - அச்சம். துடி - உடுக்கை. குடிஞை - கூகை. களவு - களவொழுக்கத்திற்கு. ஒருநாள் - (இவ்விடையூ றெல்லாம் அற்ற) ஒருநாளில், மன்னவர் வருதலில்லை என்க. மன்ன வர் - தலைவர். வாள்நுதலே - ஒளிபொருந்திய நெற்றியையுடைய தோழியே. (உ௩சு, உ௩எ.) 'இரும்பிழி மகார்இவ் வழுங்கல்

மூதூர், விழவின் றுயினும் துஞ்சா தாகும், மல்லல் ஆவணம் மறுகுடன் மடியின், வல்லுரைக் கடுஞ்சொல் அன்னை துஞ்சாள், பிணிகொள் அருஞ்சிறை அன்னை துஞ்சில், துஞ்சாக் கண்ணர் காவலர் கடுகுவர், இலங்குவேல் இளையர் துஞ்சின் வைஎயிற்று, வலஞ்சுரித்தோகை ஞாளி மகிழும், அரவவாய் ஞமலி குரையாது மடியில், பகலுரு உறழ நிலவுகான்று விசும்பின், அகல்வாய் மண்டிலம் நின்று விரியும்மே, திங்கள் கல்சேர்பு கனையிருள் மறையின், இல்லெலி வல்சி வல்வாய்க் கூகை, கழுதுவழங்கு யாமத்து அழிதகக் குழறும், வளைக்கட் சேவல் வாளாது மடியில், மனைச்செறி கோழி மாண்குரல் இயம்பும், எல்லா மடிந்த காலை யொருநாள், நில்லா நெஞ்சத்து அவர்வா ரலரே' - அகம். கஉக. ௪

தலைமகன் ஊர்க்குச் செல ஒருப்படுதல்

*[தலைவி, தலைமகன் ஊர்க்குப் போக மனந்துணிதல்]*

**242.** மைக்கார் தவழ மலையக நாடர் வளநகர்க்கின்
றிக்கார் மொழிவஞ்சி யேகுது மோஎறி நீருலகின்
மிக்கா ரறிவு நிறையு நயந்து வியந்துரைக்கத்
தக்கார் தகவிது வோவென்று நாஞ்சென்று சாற்றுதற்கே.

(கு - ரை.) மை கார் - கரியமுகில். இக்கு ஆர் மொழி வஞ்சி - கரும்பின் சாற்றையொத்த இனிய சொல்லையுடைய வஞ்சிக்கொடி போன்ற தோழியே. எறிநீர் - அலைவீசுகின்ற கடல் சூழ்ந்த. நிறை - மனத்தை நிறுத்துங் குணம். தக்கார் என்றது, தலைவனை. தக்கார் தகவு இதுவோ - தக்காராகிய உமது தகுதி, வந்து அருள் செய்யாமையாகிய இதுவோ. சாற்றுதற்கு - பழித்து உரைத்தற்கு. வஞ்சி ! சாற்றுதற்கு நகர்க்கு ஏகுதுமோ ? எனக் கூட்டுக. ௫

எதிர்மறை

*[தலைமகன் ஊர்க்குச் செல்வோமெனக் கூறிய தலைவி அதனை எதிர்மறுத்துக் கூறுதல்]*

**243.** உரிதோ ரரவு முருமுறு மெண்கு முலாநெறிக்கண்
வரிதோ ளுடன்பொரு வெகிருள் யாமத்து வண்சிலைக்கை
யெரிதோய் விழியெமர் காவலு நீந்தியிங் கேகுவதற்
கரிதோ அரிதென்னு மாறறி வாரில்லை யத்தனையே.

(கு - ரை.) தோல் உரி அரவும் - தோலை உரித்துக்கொள்ளு தலையுடைய பாம்பும். உரும் உறும் - இடியையொத்த குரலையுடைய. எண்கும் - கரடியும். உலா நெறிக்கண் - திரிகின்ற வழியில். வரி தோலுடன் பொரு - புலி யானையுடன் போர் செய்கின்ற; வரி: கொடுவரி என்பதன் முதற்குறை; கொடுவரி - புலி; தோல்-யானை. அன்றி வரி என்பதற்கு நிறம் எனப் பொருள் கொண்டு, கருநிற மிக்க யானைகள் தமக்குள் ஒன்றுடனொன்று போர் புரிகின்ற என்று கூறலுமாம். வைகு இருள் - நிலைபெற்ற இருளையுடைய. வண்சிலை-சிறந்த வில்லைத் தாங்கிய. எரிதோய் - சினத்தீ பொருந்திய. எமர் - எம்மவராகிய வேடர். கையையும் விழியையுமுடைய எமரென்க. இங்கு ஏகுதற்கு - இவ்விடத்தினின்றும் புறப்பட்டுத் தலைவனூர்க்குச் செல்லுதற்கு. அரிதோ என்றது, அரிதாயினும் நம்மால் செல்லலாகும் என்று குறிப்பித்தபடி. பின், செல்லாமைக்குக் காரணமென்னையெனின், அவ்வருமைப்பாட்டை அறிந்து அருள்செய்வாரில்லாமையாகிய அத்தனையே காரணமென்றுளென்க. யாமத்து நெறிக்கண் நீந்தி ஏகுதற்கு அரிதோ! எனக் கூட்டுக. ௬

பாங்கி தலைவன் இயல் பழித்தல் ✓

**[தோழியானவள், தலைவனுக்குரிய இயற்கைத் தன்மையைப் பழித்துத் தலைவியிடம் சொல்லுதல்]**

244. சுறவார் கனங்குழைத் தூநகை யாய்தந் துணைவருடன்
இறவார் குருகினந் தங்குபைங் காவினி லின்னளிசூழ்
நறவார் மலர்ப்புன்னை நன்னிழல் வாய்முன் னயந்தசெவ்வி
மறவார் நமைமறந் தாரவர் போலில்லை வன்னெஞ்சரே.

(கு - ரை.) சுறவு ஆர் கனம் குழை - சுறாமீன் வடிவாகச் செய்யப்பட்ட கனமுள்ள காதணியையும். தூநகையாய் - தூயபற்களையுமுடைய தலைவியே. இறவு ஆர் குருகு இனம் - இறால் மீனைத் தின்கின்ற பறவைக் கூட்டம். காவினில் - சோலையில். இன் அளி-இனிய வண்டு. நறவு ஆர் - தேன் பொருந்திய. நயந்த செவ்வி - விரும்பிக் கூடிய அக்கால நிகழ்ச்சியை. அவர்: தலைவர். நகையாய்! காவினில் துணைவருடன் நயந்த செவ்வி மறந்தார்; (ஆதலின்) அவர்போல் வன்னெஞ்சர் இல்லை எனக் கூட்டுக.

(வே-ம்.) தம் துணைவருடன்; மறவார்நமை. இ. வி. ௯௪௬. எ

தலைமகள் இயற்பட மொழிதல்

*[தலைவி, தலைவன் நற்குணமுடையவனென்பது தோன்றப் பாங்கிக்குக் கூறுதல்]*

**245.** ஆமைதன் பார்ப்பை யிகந்துயிர் காக்கு மருந்துறைவன்
தீமைநம் பாற்செயல் சிந்திக்கு மோசிந்தை போயழுந்த
மாமையும் பார்த்தவர் வாய்மையும் பார்த்து வருந்தல்மன்றற்
பூமணம் பார்த்தளி புல்லுமல் லார்குழற் பூங்கொடியே.

(த - ரை.) பார்ப்பு - ஆமையின் இளையது. இகந்து - நீங்கி. துறைவன் : தலைவன். ஆமையானது தன்பார்ப்பை இகப்பினும் அதனைக் காத்தல்போலத் தலைவனும் நம்மை நீங்கியிருப்பினும் நம் முயிர் போகாவண்ணம் காப்பானென்பது குறிப்பு. 'தீம்பெரும் பொய்கை யாமை இளம்பார்ப்புத், தாய்முகம் நோக்கி வளர்ந்திசி னாஅங்கு, அதுவே ஐயநின் மார்பே' - ஐங். சசு. சிந்தைபோய் அழுந்த - மனம் துன்பத்தில் சென்றழுந்த. மாமை - அழகு ; அதனைப் பார்த்து வருந்தல்: பிரிவுத் துன்பத்தால் அஃதழிதலைக் கருதி. அவர் : தலைவர். வாய்மை - 'நினையோம் மறந்தும் பிரியப்பிரிய நினையினும் இத், தனையோ பொழுதும் தரிக்ககிலேன்' (கசு) என்பது முதலாகக் கூறிய (கஎ, கஅ.) மெய்யுரை. அதனைப் பார்த்து வருந்துதல் எற்றுக் கெனின், தலைவன் வந்து அருளாமையால் அம்மெய்யுரை பொய்த்து விடுமே என்று கருதியென்க. வருந்தல் - வருந்தற்க ; அல்லீற்று எதிர் மறைவியங்கோள் வினைமுற்று. மன்றல் - நறுமணம். அளிபுல்லும் - வண்டுகள் மொய்க்கும். அல் ஆர் - இருள் நிறைந்த. பூங்கொடியே : பாங்கியே. பூங்கொடியே ! துறைவன் சிந்திக்குமோ ? பார்த்து அழுந்த வருந்தல் எனக் கூட்டுக. சிந்திக்குமோ என்பதில் ஓ : எதிர்மறைப்பொருட்டு. சிந்தியான் என்பது கருத்து.

(வே - ம்.) பாங்கி இயற்பட மொழிதல் ; யாமைதன் ; இருந் துறைவன் ;·செவ்வி போயொழிந்த. இ - வி. கசக. அ

கவின் அழிவு உரைத்தல்

*[பசப்பூர்தலால் தன் அழகு அழிதலைத் தலைவி தோழிக்குக் கூறுதல்]*

**246.** மின்னே யவர்தந்த வேட்கையை மீட்கும் விரகறிய
முன்னே தவங்கள் முயன்றில மேமுன்செய் வல்வினையால்
என்னே யருங்கவி னெல்லா மெனக்கு மவர்க்குமின்றிக்
கொன்னே பசலை திருந்தஇவ் வாறு குறைகின்றதே.

(கு - ரை.) மின்னே : தோழியே. அவர் : தலைவர். வேட்கையை - காதலை. விரகு - சூழ்ச்சி. வல்வினை - தீவினை. கவின் - அழகு. அவர்க்கும் - தலைவர்க்கும். கொன்னே - வீணுக. பசலை திருந்த - பசலை மிகாநிற்க (கஎ0). மின்னே ! முயன்றிலம் ; (ஆதலின்) வல்வினையால் பசலை திருந்த கவினெல்லாம் இவ்வாறு குறைகின்றது ; (இஃது) என்னே ! எனக் கூட்டுக. 'கன்றும் உண்ணுது கலத்தினும் படாது, நல்லான் தீம்பால் நிலத்துஉக் காங்கு, எனக்கும் ஆகாது என்னைக்கும் உதவாது, பசலை உணீஇயர் வேண்டும், திதலை அல்குலென் மாமைக் கவினே' - குறுந் - உஎ.

(வே-ம்.) கனவு நலிபுரைத்தல்; பசலை பசந்த ; குறுகின்றதே. பழம்பதிப்பில் உசசு, உசஎ-ஆம் செய்யுட்கள் முன்பின்னுகமாறி இருக்கின்றன; துறைப்பெயர்மட்டும் மாறவில்லை. இ-வி. கசகூ மேற்.

### கனவு நலிபு உரைத்தல்

*[கனவு, தலைவனைக் காட்டி வருத்துதலைத் தலைவி தோழிக்குக் கூறுதல்]*

**247.** பெறுதற் கரிய துயிலொரு கால்வரப் பெற்றதன்மேல்
உறுதற் கரியவ ரொன்றவும் பெற்றுள்ள நள்ளிரவிற்
செறுதற் கரியநற் செல்வங்கொண் டாடியச் செற்றமுற்றும்
இறுதற் கரிய நலங்கல வாம லிழந்தனமே.

(கு - ரை.) துயில் - தூக்கம். உறுதற்கு அரியவர் - சேர்தற்கு அரிய தலைவர். ஒன்றவும் - பொருந்தவும். செறுதற்கு அரிய - அழிக்க முடியாத. செல்வம் : தலைவனைப் பெற்றதனுலுண்டான மகிழ்ச்சிச் செல்வம். அச் செற்றம் - அவன் அருளாமையால் உண்டான சினம். இறுதற்கு - அழியும்பொருட்டு. அரிய நலம் - அடைதற்கரிய கலவியின்பம். விழித்துக்கொண்டமையால் 'இழந்தனம்' என்ருளென்க. 'ஓராற்ருன் என்கண் இமைபொருந்த அந்நிலையே, கூரார்வேல் மாறனென் கைப்பற்ற - வாரா, நனவென் றெழுந்திருந் தேன் நல்வினையொன் றில்லேன், கனவும் இழந்திருந்த வாறு' - முத்தொள்ளாயிரம்.

(வே - ம்.) கனவினழிபுரைத்தல் ; கொண்டாடிய செற்றம் இழந்தனவே. கO

### சிறைப்புறமாகத் தலைவி இரங்கல்

*[தலைவி வேலியின் புறத்து நின்று திங்களை நோக்கி இரங்கிக் கூறல்]*

**248.** உரவெங் கடலொலி யும்முறங் காநின்ற கண்களுநள்
ளிரவுந் தனியு மிருவினை யேனு மிரங்குநெஞ்சும்
அரவந் தருந்துடி யுங்கொடி யார்தந்த வன்புமன்றிப்
பரவும் பனிமதி யேயில்லை யோவிப் பதிதனக்கே.

(து - ரை.) உரம் - வலிமை. உறங்காநின்ற - உறங்காது விழித்துக்கொண்டுள்ள; தொகுத்தல் விகாரம். இரு - பெரிய. அரவம் தரும் - ஒலிக்கின்ற. துடி - காவலர் கைப்பறை. அருளாமைபற்றித் தலைவரைக் கொடியார் என்றாள். அன்பு - காதல். பரவும் பனி மதியே - மிக்க குளிர்ச்சியையுடைய திங்களே. பதி - ஊர். அங்கிருப்பனவெல்லாம் தனக்குத் துன்பம் செய்தலின் இவையன்றி இன்பந்தரும் தலைவன் முதலியோர் இல்லையோ என்றாளென்க. கக

### தன்துயர் தலைவற்கு உணர்த்தல் வேண்டல்

*[தலைவி, தனது துன்பத்தைத் தலைவனுக்குத் தெரிவிக்குமாறு தோழியை வேண்டுதல்]*

**249.** அறைவா ரொருவரை யாழ்கடற் சேர்ப்ப ரறியவந்தண்
பிறைவா ணுதல்வல்லி பெற்றில மேபிர சந்ததும்ப
நறைவாய் விடுநெய்தல் நாண்மல ரோதி நயந்துநின்னை
யிறைவா விறைவளை போயின ளாயின ளென்னநின்றே.

(து - ரை.) அறைவார் ஒருவரை - (தலைவனுக்கு நம் குறைகளைச்) சொல்லத்தக்கவர் ஒருவரை. சேர்ப்பர் - நெய்தல் நிலத் தலைவர். அம் தண் பிறை வாள் நுதல் வல்லி - அழகிய குளிர்ந்த பிறைத் திங்களையொத்த ஒளிபொருந்திய நெற்றியையுடைய பூங்கொடி போன்ற பாங்கியே; வல்லி - பூங்கொடி. பிரசம் - தேன். நறைவாய் விடு - நறுமணத்தை வெளிப்படுத்துகின்ற. நாள்மலர் ஓதி - அன்றலர்ந்த பூக்களையணிந்த கூந்தலையுடைய தலைவி. நயந்து - விரும்பி. இறைவா - தலைவனே. இறைவளை - முன்கையிலணிந்துள்ள வளையல். போயினள் ஆயினள் - கழன்றவளாக ஆய்விட்டாள்; உடைமையின்வினை உடையாள்மேல் ஏற்றிக் கூறப்பட்டது. வளை போதல், உடல் மெலிந்தமையாலென்க. வல்லி! சேர்ப்பர் அறிய

(அவர்முன்) நின்று 'இறைவா! ஓதி நின்னை நயந்து வளைபோயின ளாயினள்' என்ன அறைவாரொருவரைப் பெற்றிலமே எனக் கூட்டுக. நீயேனும் சென்று அறைக என்பது குறிப்பு. ௧௨

### அலர் பார்த்துற்ற அச்சக்கிளவி

*[ஊரார் கூறும் பழிமொழியைக் கண்டஞ்சிய தன் அச்சத்தைத் தலைவி தோழிக்குக் கூறுதல்]*

250. இன்றலங் கார மிழந்தவென் கொங்கை யிலங்குபைம்பொன்
தென்றலஞ் சாரற் சிலம்பரெண் ணார்செஞ் சிறைவண்டுசூழ்
மன்றலங் காவினும் வாவிநன் னீரினு மற்றுமுற்றும்
ஒன்றினும் பூத்தறி யாவல ரானதிவ் வூரெங்குமே.

(கு - ரை.) அலங்காரம் - கைசெயல்: அதனை இழந்தது, தலைவனைக் கூடப்பெறுமையாலென்க. பைம்பொன் என்றது, பசலையை (௧௭௦). கொங்கை பசலை பூத்தமையைச் சிலம்பர் எண்ணாரென்க; சிலம்பர் - தலைவர். மன்றல் அம் கா - நறுமணம் பொருந்திய அழகிய சோலை. வாவி - குளம். அலர் - பழிச்சொல்; ஒன்றினும் பூத்து அறியா அலர் என்றது வெளிப்படை. சிலம்பர் எண்ணாமையால் ஊரெங்கும் அலரானதென்க. ௧௫

### நிலவின்மேல் வைத்துச் சொல்லியது

*[தலைவி தனக்குள்ள துன்பத்தை நிலவிற்கும் உள்ளதாக அதன்மீது ஏற்றிக் கூறுதல்]*

251. கங்குற் சிறந்து பகலொளி வாடநின் காதலரும்
எங்கட் கிசைந்த இறைவர்கொல் லோஇமை யோரெவருந்
துங்கக் கொடுமுடி மந்தர நாகந் தொடுத்துழல
வங்கப் புணரி கடைந்தவந் நாள்வந்த வான்மதியே.

(கு - ரை.) கங்குல் சிறந்த ஒளி - இரவில் மிக்குத் தோன்றும் சிறந்த நின் ஒளியானது. பகல் வாட - பகற்பொழுதில் வாடுதற்குக் காரணம். காதலரும் - நின் தலைவரும். எங்கட்கு இசைந்த இறைவர் கொல்லோ - எமக்குப் பொருந்திய தலைவரையொத்த தலைவரோ; கொல்: அசை; எங்கட்கு என்றது, தன்போன்று தலைவரைப் பிரிந்த மகளிரை உளப்படுத்தியென்க. இமையோர் - வானவர். துங்கம் கொடுமுடி - உயர்ந்த உச்சியையுடைய. மந்தரநாகம் - மந்தரமலையை. தொடுத்து - (மத்தாகப்) பிணித்து. உழல - சுழல. வங்கம் - மரக்கலங்

கள் செல்லுதற்குரிய. புணரி: ஈண்டுப் பாற்கடல். வானவர் அமிழ்து பெறும்பொருட்டுப் பாற்கடலைக் கடைந்த காலையில் திங்கள் அதில் தோன்றிற்று என்பது புராணக்கதை. மதியே! சிறந்த ஒளிவாட (நின்) காதலரும் இறைவரோ? எனக் கூட்டுக. 'மாலை மணந்து காலைப் பிரியும், காதலர் உடையையோ கறைநீங்கு மதியம், இரவே யாயின் நல்லை பகலே, மெல்லியல் கொடிச்சி நுதலினும், புல்லென் றனையால் நோகோ யானே' - களவியல். மேற் - கூo. கசு

ஆறு பார்த்துற்ற அச்சக்கிளவி

*[தலைவன் வரும்வழியின் அருமையையறிந்து தான் அடைந்த அச்சத்தைப் பாங்கி சொல்லுதல்]*

**252.** வேறிங் கொருதுணை யில்லைகொல் வேலொழிந் தின்றிவெற்ப
மாறுங் கொடிபொருட் டால்வர வேண்டிலம் வந்துழுவை
சீறும் களிற்றுத் திரளும்பன் மாவுஞ் சினவரவும்
ஆறுங் கராமு மியங்குதண் சார லருநெறியே.

(து -ரை) கொல்வேல் ஒழிந்து இன்றி - கொலைத்தொழிலைச் செய்யும் வேல் அன்றி; கொல்: அசை எனலுமாம். ஒழிந்தின்றி என்பது, ஒருபொருட் பன்மொழி; 'உயர்ந்தோங்கு பெருவரை' (மலைபடு. சுக.) 'குழிந்தாழ்ந்த கண்ணவாய்' (நாலடி. தூய். கூ.) என்பன போல. வெற்ப - தலைவ; அண்மைவிளி. மாறும் கொடி - இளைத்த லால் உருவம் வேறுபட்டுள்ள தலைவி; தலைவன் வரும் வழியின் ஏதம் குறித்து வருந்துதலின் தலைவி இளைத்தாளென்க. உழுவை - புலி. களிறு - யானை. பல் மா-பலவகையான கொடிய விலங்குகள். ஆறு: ஆற்று வெள்ளம்; இடவாகு பெயர். கராம் - முதலை. தண் - குளிர்ந்த. வெற்ப! (நினக்கு) வேலன்றி வேறு துணை இல்லை; (ஆதலின், நீ) கொடி பொருட்டால் சாரலின்கண் உள்ள அருநெறியில் வருதலை வேண்டிலம் எனக் கூட்டுக. கரு

நெறி விலக்குவித்தல்

*[அவ்வருநெறியில் தலைவனை வரவேண்டாவென்று விலக்கும்படி தலைவி பாங்கிக்குக் கூறுதல்]*

**253.** ஒருநாள் வரினு முறுபழி தூற்று முயர்கிலம்பில்
வருநாள் பலவுண்டு மாமலை நாட வரநினையும்
பெருநா ளொழிய வினிவரி லேதம் பிறக்குமென்று
குருநாண் மலர்க்குழ லாய்மொழி நீசென்று கொற்றவர்க்கே.

(து - ரை.) உறு - மிக்க. தூற்றும் - வெளிப்படுத்தும். சிலம்பில் - மலையில். தலைவன் வரும் நாள் என்க. 'மாமலை...........பிறக்கும்' என்பது வரையில், தோழி தலைவனுக்குக் கூறவேண்டியவற்றைத் தலைவி எடுத்து மொழிந்ததென உணர்க. நாட : தலைவ. ஒழிய-ஒழிவ தாக ; 'அ' விகுதிபெற்ற வியங்கோள் வினைமுற்று ; இனி வாரற்க என்பது கருத்து. களவுப் புணர்ச்சியைக் கைவிட்டு வரைந்துகொள்ளுதல் வேண்டுமென்பது குறிப்பு. ஏதம் - துன்பம். குரு - நிறம். குழலாய் - கூந்தலையுடைய பாங்கியே. கொற்றவர்க்கு - தலைவர்க்கு. குழலாய் ! உண்டு ; (ஆதலின்) நீ சென்று 'நாட ! ஒழிய ; பிறக்கும்;' என்று கொற்றவர்க்கு மொழி எனக் கூட்டுக. இனி, வர வினையும் பெருநாள் ஒழிய என்பதற்கு: வரைவொடு வரவினையும் திருமண நாள் தவிர எனப் பொருள் கொண்டு, திருமணநாளாகிய பெருநாளி லன்றிப் பிறநாளில் வருதல் வேண்டா என்று கூறி வரைதல் வேட்கை புலப்படுத்தியவாறாகவும் கோடலமையும். கக

(வே - ம்.) நாடர், இ - வி. கசக.

## குறி விலக்குவித்தல்

*[குறியிடத்துத் தலைவனை வரவேண்டாவென்று விலக்கும்படி தலைவி பாங்கிக்குக் கூறுதல்]*

**254.** இருவி மறுகுலை யீன்று விளைந்த விறைஞ்சுகுற்றங்
குருவி யினக்கிளி கொய்கின்ற தாலின்னங் கோல்வளையீர்
மருவி யடிப்புனங் காமினென் றுளன்னை வந்திழியும்
அருவி யடுக்கன் மலையக நாட ரறிந்திலரே.

(து - ரை.) இருவி - தினைத்தாள். மறுகுலை - ஒருமுறை அறுத்தபின் மீண்டும்தோற்றிய குலை. விளைந்த - முற்றின. இறைஞ்சு குற்று. வளைந்து. இறைஞ்சுகுற்று விளைந்த என மாறிக் கூட்டுக. அம் - அழகிய. இனம் - கூட்டமாகிய. கோல் வளையீர் - திரண்ட வளையலையணிந்த பெண்களே ; இஃது, அன்னை தலைவியையும் பாங்கியரையும் விளித்தது. அடிப்புனம் - மறுதாட்புனம்; முதலில் விளைந்த கதிர் கொய்தபின் மறுதாளில் கிளைத்து விளைந்த புனமாத லின் அடிப்புனம் என்று கூறப்பட்டது; அடி - மறுதாள்; அடிப் புனம் மருவி - புனத்தடியிற்பொருந்தி எனலுமாம். அடுக்கல் - பக்க மலை. காமின் - காவல் செய்யுங்கள். அன்னை, 'வளையீர் ! விளைந்த;

கொய்கின்றது ; (ஆதலின்) இன்னம் காமின்' என்றாள் ; (இதனை) நாடர் அறிந்திலர் எனக் கூட்டுக. அவர் அறியக் கூறி இங்கு வர வேண்டாவென்று விலக்குக என்பது கருத்து. 'செங்கண் கிளிகள் மறுதாள் விளைந்த தினைக்கதிரை, மங்கப் புகாதினம் காமின் என்றாள் ............மின்னே, சங்கைக் குறிக்கன்பர் சேராதவண்ணம் தடுத் தருளே' - ஆரூர் - உகூ0. கஎ

## வெறி விலக்குவித்தல்

**[தன் உடல் மெலிவின் காரணமாகத் தாய்மேற்கொண்ட வெறி யாடலைத் தவிர்க்கும்படி தலைவி பாங்கிக்குக் கூறுதல்; வெறியாவது, காதல் மிகுதியால் தலைவிக்குண்டான மெய்வேறுபாட்டைப் பேய் தீண்டியதால் ஏற்பட்ட தென எண்ணிய தாய், அதனைத் தணித்தற்கு வேலனைக்கொண்டு முருகப்பெருமானுக்கு வழிபாடு செய்வித்தலாகும் ; இதில் ஆடு வெட்டுதல் முதலியன நிகழும்]**

**255.** மணியார் வனமுலை மங்கைநல் லீர்தொல்லை மாமரபு
துணியா வெறிக்குந் துணிந்தன ளன்னை துணிவெறிக்கின்
றணியார் சிமயத் தமைசிலம் பாள ரளித்தமயல்
தணியா தெனினுந் தணியினுஞ் சாலத் தவறெமக்கே.

(து - ரை.) மணி ஆர் - நீலமணிபோன்ற முலைக்காம்பு பொருந்திய. வனம் - அழகிய. நல்லீர் : தலைவி பாங்கியை விளித்தது. தொல்லை - பழைய. மரபு துணியா - மரபுள்ளோர் செய்யத் துணி யாத. துணிவெறிக்கு - அவ்வாறு துணிந்து மேற்கொண்ட வெறிக்கு. சிமயத்து - கொடுமுடிகளையுடைய. சிலம்பாளர் - குறிஞ்சிநிலத் தலைவர் ; அவரால் உண்டானதாகலின், 'சிலம்பாளர் அளித்த மயல் என்றாள் ; மயல் - காதல் மயக்கம். சால - மிக. தணியாதேல் இவ் வேறுபாடு எற்றினானுயிற்றென ஐயுறுவர்; தணியுமேல் தலைவன் மீது அன்பிலளாம்; ஆகவே இருவழியும் தவறுதல் காண்க. ஆதலின் இதனை விலக்குக என்பது கருத்து. நல்லீர் ! அன்னை துணிந்தனள்; வெறிக்கு மயல் தணியாதெனினும் தணியினும் எமக்குத் தவறே எனக் கூட்டுக. 'வெறிகமழ் வெற்பனென் மெய்ந்நீர்மை கொண்ட, தறியாள்மற் றன்னோ அணங்கணங்கிற் றென்று, மறியீர்த் துதிரம் தூய் வேலற் றரீஇ, வெறியோ டலம்வரும் யாய்' - ஐங் - ஐம் - உ0.

### பிற விலக்குவித்தல்

*[பிறர் தன்னை மணக்கத் தமரிடம் வருவதை விலக்கும்படி தலைவி பாங்கிக்குக் கூறுதல்]*

**256.** வார்க்குன் றனமுலை வல்லியன் னாய்நம் மணிமறுகில்
ஆர்க்கின்ற வன்முர சார்க்கென் றறிகில மாடகப்பொன்
போர்க்கின்ற மென்முலை புல்லவெண் ணார்பொன் பொழியருவிக்
கார்க்குன் றெனஎதி ருங்கட வாரணங் காய்ந்தவரே.

(கு - ரை.) வார் - கச்சு. வல்லியன்னாய்: பாங்கியைத் தலைவி விளித்தது. மணி மறுகில் - அழகிய தெருவில். ஆர்க்கின்ற - ஒலிக்கின்ற. ஆர்க்கு என்று - யார் மணத்திற்காகவென்று. ஆடகப் பொன் - நால்வகைப் பொன்களில் ஒன்று; ஈண்டு அது பசலையை உணர்த்தி நின்றது (உ௫௦). புல்ல - தழுவ. எதிரும் கடவாரணம் - நம்மை எதிர்த்து வந்த மதயானையை. காய்ந்தவர் - சினந்து கொன்ற தலைவர் (உ௫௯). வல்லியன்னாய்! காய்ந்தவர் முலை புல்ல எண்ணார்; ஆர்க்கின்ற முரசம் ஆர்க்கு என்று அறிகிலம் எனக் கூட்டுக. கக

### செய்ந்நன்றி அறியாமை கூறல்

*[தலைவி செய்த நன்றியை அறிந்து அதற்கேற்ப நடந்து கொள்ளாமையைத் தோழி தலைவற் கெடுத்துக்கூறல்]*

**257.** கழுது முறங்கு பிறங்கிரு ளுள்கழிக் கானலிற்றைப்
பொழுது மருந்துயர் போக்கிய தோபொறி வண்டினங்கள்
கொழுது மலர்க்குழற் கொம்புநற் பைம்பொற் குழைபொருங்கண்
அழுது பசப்புற நீயைய னேயின் றகன்றதுவே.

(கு - ரை.) ஐயனே - பெருமானே! பொறிவண்டினங்கள்............கொம்பு - தலைவி; உவமவாகுபெயர். கொழுதும் - கிண்டுகின்ற; மலர்க்குழல் கொம்பு-மலரை யணிந்த கூந்தலையுடைய பூங்கொம்புபோன்ற தலைவியினது, கண் என இயைக்க. கழுதும் உறங்கு பிறங்கிருள் நாள் - பேயும் உறங்கும் பேரிருள் காலத்தில் (இருள் உவாக்காலத்தில்; இருள்உவா - அமாவாசை). கழிக் கானலில் - உப்பங்கழியின் பாங்கர் அடைந்த சோலையில். தைப் பொழுதும் - கடும்பனி பெய்கின்ற தைத்திங்கட்போதிலும். 'கானல் இற்றைப்பொழுதும்' எனப் பிரித்துக் கானலில் (இயற்கைப் புணர்ச்சி தொடங்கி) இந்நாள் காறும் அருந்துயர் போக்கியதாலோ

என்றுரைப்பினும் அமையும். அருந்துயர்போக்கியதோ - குறியிடத்திற்குவந்து நின்னொடு கூடி நினது நீக்கரிய வேட்கைத் துன்பத்தைப் போக்கியதாலோ என்றவாறு. அந்த நன்றியின் பொருட்டோ, பைம்பொற் குழை பொருங்கண் அழுது பசலையடையும்படி நீ இதுவரை வரைந்துகொள்ளாமல் அகன்றது என்று தோழி கூறுகின்ருள். குழை பொரும் - குண்டலத்தொடு பொருகின்ற. தைத்திங்கட்காலத்தில், பேயும் உறங்கும் உவா இருளில் கழிக்கானல் குறியிடத்தில் வந்து நினது நீக்கரிய வேட்கையை நீக்கிய நன்றியை மறந்து இன்றுவரை வரைந்து கொள்ளாது அகன்றனையே ஐயனே! இது நினக்குத் தகுவதோ ? என்று தோழி கூறுகின்ருள் என்க. போக்கியதோ - போக்கியதாலோ, போக்கிய செய்ந்நன்றிக்கோ என்க. அன்று செய்த நன்றிக்கு இன்று அகன்றது என்ன தன்மை என்கின்ருள். ''சொல்லல் வேண்டுமால் அலவ !.........கள்ளென் யாமத்து, நின்னுறு விழுமங் களைந்தோள், தன்னுறு விழுமம் நீந்துமோ எனவே'' என்று, அகம் கஎ0. நெய்தல் திணையில் வந்துள்ளமை காண்க; நெய்தல் திணையில் கூட்டம் நிகழ்ந்தவாறு குறிப்பிடப்பெற்றது. குறிஞ்சிக்கு உரிய கூதிர்க் காலமும் கழிந்து தைத்திங்கட் பனிக்காலமும் வரும்வரை களவுப் புணர்ச்சியை நீட்டித்த நன்றியைத் தலைவன் போற்றவில்லை என்பது குறிப்பித்தாள். திங்களிரண்டிற்குள் திருமணம் செய்துகொள்ளுதற்கு உரிய தலைவன் நான்கு திங்கட்கு மேலாகியும் அது செய்திலனே என்றபடி. உ0

ஏறுதழு வுரைத்தல்

*[முல்லைநிலத்துக் கோவலர் தம்மகளை மணஞ்செய்து கோடற்குரிய வீர இளைஞனைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு ஏற்றின் கோட்டினைக் கூரிதாக்கி அணிசெய்து விடல்]*

258. ஏற்று மருப்பு மிலங்கிழை யாகத் திபமருப்புங்
கூற்று மருப்பெழுங் கோலந்தந் தாட்கொரு கோடிசூழும்
பாற்று மருப்பொலி தாரன்ன லார்முன் னணிந்துவிட்டார்
காற்று நெருப்புங் கலந்ததென் னுவருங் காரிகைக்கே.

(து - ரை.) இலங்கு இழை ஆகத்து - விளங்குகின்ற அணிகலன்கள் அணியப்பெற்ற மார்பினிடத்தில் உள்ள. இப மருப்பும் - களிற்றுக் கோடு போன்ற கொங்கைகளும். கூற்று மருப்பு எழும் -

(கொம்பில்லாத) கூற்றுவனுக்குக் கொல்லுங் கொம்பாக நிமிருகின்ற. கோலம் தந்தாட்கு - அழகுக் கோலமாகிய காட்சியினைத் தந்த தலைவியின் திருமணத்தின் பொருட்டு. காரி ஏற்று மருப்பும் - கரியகொல்லேற்றின் கொம்புகளையும். கைக்கு - தழுவும்பொருட்டு. அண்ணலார் - கோவலர்கள். அணிந்து விட்டார் - கூர்மைசெய்து மாலைசூட்டி அழகுறுத்தி விடுத்தார். காற்றும் நெருப்பும் கலந்தது என்னுவரும் - அக்காரி எருதுதழுவச் செல்வோர் கைக்கு நேரே காற்றினைப்போன்ற விரைவும், தீயினைப்போன்ற சீற்றமும் (சினக் கனல்) உடையது என்று கூறும்படி விரைந்து வாராநின்றது என்றவாறு.

தலைவியின் அழகுக் கோலம் ஏற்றுமருப்பினையும் கூற்றின் மருப்பாக ஆக்கிற்று; அவள் ஆகத்திலுள்ள இபமருப்பினையும் கூற்றின் மருப்பாக ஆக்கிற்று என்க. இபமருப்பும் என்ற உம்மை ஏற்றின் மருப்பேயன்றி என்பதைத் தழுவி நின்றமையால், இஃது இறந்தது தழுவிய எச்ச உம்மை; இபமருப்பு: உவமவாகு பெயர். காட்சி, வேட்கை, மெலிதல், ஒருதலை உள்ளுதல், ஆக்கம் செப்பல், நாணுவரை யிறத்தல், நோக்குவவெல்லாம் அவையே போறல், மறத்தல், மயக்கம், சாக்காடு என்ற பத்துத் தளர் நிலையுந் தந்து கொல்லும் அழகு உள்ள கொங்கைகள் என்பதனை உணர்த்துவதற்குக் கூற்றின் மருப்பாக எழும் கோலம் என்றுன். அவளது அழகு ஏறு தழுவும்படியுந் தூண்டியது என்றவாறு. ஒரு கோடி...........அண்ணலார் - கோவலர்: கோடி என்பது பல என்ப தன் பொருட்டு; சுரும்பு ஆற்று மரு பொலி தார் அண்ணலார்-வண்டு களைச் சுமந்துள்ள மணமிக்க மாலையை யணிந்த கோவலராகிய பெரு மையிற் சிறந்தோர் என்றவாறு. கலந்தது என்னு - (காரி) கலக்கப் பெற்றது என்று கூறும்படி. காரிகையின் பொருட்டுக் காரி(யை) கைக்கு அணிந்துவிட்டார் அது கலந்தது என்னுவரும் என்றவாறு.

இக்கருத்து,

"பறையெழுந் திசைப்பப் பல்லவர் ஆர்ப்பக்
குறையா மைந்தர் கோளொதி ரெடுத்த
நறைவலஞ் செயவிடா இறுத்தன ஏறு."

(கலி, க0௪ : உக—௩க.)

எனக் கலித்தொகையிலும் வந்தமை காண்க.

### குரவரை வரைவெதிர்கொள்ளுவித்தல்

*[தலைமகனது வரைவை ஏற்றுக்கொள்ளும்படி குரவர்க்குச் சொல்லென்று தலைவி பாங்கிக்குக் கூறுதல்; வரைவு–திருமணம்; குரவர்–தாய், தந்தை, தமையன்மார் முதலியோர்]*

**259.** போற்றுந் தினைவினை யும்புனச் சாரற் புகர்முகத்துச்
சீற்றஞ் சிறந்த களிற்றுரு வாய்நம்மைத் தேடிவந்த
கூற்றங் கடிந்தநங் கோமான் வரைவெதிர் கொள்ளும்வண்ணஞ்
சாற்றுந் திறமென்கொ லோதைய லாய்நந் தமர்தமக்கே.

(தி - ரை.) போற்றும் - காவல் செய்யப்படும். புகர்முகத்து - புள்ளிகள் பொருந்திய முகமுடைய, களிறென்க. சீற்றம் சிறந்த - சினமிக்க. களிறு - யானை. கூற்றம் - இயமன். கடிந்த - நீக்கிய (உடுசு). கோமான் வரைவு - தலைவன் என்னை மணஞ்செய்துகொள்ளுதலை. எதிர்கொள்ளும் வண்ணம் - ஏற்கும்படி. தையலாய்: பாங்கியே. தமர் - தம்மவர். கொல், ஓ: அசைகள். ஏற்கும் வண்ணம் நீ இயம்புக என்பது கருத்து.

(வே - ம்.) புனற் சாரல்; தமர்களுக்கே. இ. வி. கசகூ. உஉ

வரைதல் வேட்கை முற்றும்.

## கஉ வரைவு கடாதல்

***[தோழி, தலைவியை மணஞ்செய்துகொள்ளும்படி தலைவனை வற்புறுத்தல்]***

### வினவிய செவிலிக்கு மறைத்தமை விளம்பல்

***[தலைவியின் வேறுபாட்டிற்குக் காரணம் என்னெனக் கேட்ட செவிலித்தாய்க்குத் தான்வேறுகாரணம் கூறி மறைத்த மையைத் தோழி தலைவனுக்குக் கூறுதல்]***

**260.** மைந்நிற வார்குழல் வல்லிநம் மன்னை வனமுலைகள்
இந்நிற மானதிங் கென்கொலென் முனிருங் கோங்கரும்பின்
செந்நிற நாண்மலர்ச் செப்பருந் தாதுகொண் டப்பியபின்
பொன்னிற மானதென் றேனன்ன தோவென்று போயினளே.

(து - ரை.) *மை - கருமை. வார் - நீண்ட. வல்லி: தோழியைச் செவிலி விளித்தது. அன்னை என்றது, தலைவியை. இந்நிற மென்றது, பசலை நிறத்தை. இரு - பெரிய. தாது - பூந்துகள். அப்பியபின் - அப்பியதால்; பின், வினையெச்ச விகுதி. அன்னதோ - அப்படியோ. 'வல்லி! முலைகள் ஆனது என் ?' என்றாள்; தாது அப்பியதால் ஆனது என்றேன்; போயினள் எனக் கூட்டுக. ஆதலின் விரைந்து மணந்துகொள்க என்பது கருத்து. பின் வருவனவற்றிற்கும் இவ்வாறே கொள்க.* க

### அருமறை எங்கும் அறிந்தமை கூறல்

***[அருமறை என்றது களவொழுக்கத்தை]***

**261.** கணைக்குங் கரும்புங் கழையுநன் னாகங்கதலியுடன்
அணைக்குங் கறங்கு மருவிவெற் பாநின் னருமறைபோ
யிணைக்குங் குரும்பையுஞ் செவ்விள நீரு மெனநெருங்கிப்
பணைக்கின்ற கொங்கைப் பசப்பினுஞ் சாலப் பரந்ததுவே.

(து - ரை.) *கணைக்கும் - திரண்டுள்ள. கழை - மூங்கில். நல்நாகம் - சுரபுன்னைமரம்; இதனை இப்பொழுது நாகலிங்கம் என்று வழங்குகின்றனர்; இஃது உள்ளே நாகம்போன்ற வளைவுடையதாகவும் இலிங்கம் போன்ற குறியுடையதாகவும் மிகவும் அழகாகப் பூக்கும்; மிகுந்த நறுமணமுடையது; இதனை 'வழை' என்றும், ஒரோவழி "நாகம்" என்றும், "நன்னாகம்" என்றும், "சுரபுன்னை" என்*

றும் ஆளுதல் இலக்கிய வழக்கு. கதலி - வாழை. அணைக்கும் - தன் அகத்தேகொண்டு நிற்கும். நாகம் கதலியுடன் கரும்பும் கழையும் அணைக்கும் வெற்பென இயைக்க. கறங்கும் - ஒலிக்கின்ற. இணைக்கும் - ஒன்றோடொன்று நெருங்கி இணைந்துள்ள. குரும்பை-பனையின் இளங்காய். பணைக்கின்ற கொங்கை - பருத்துள்ள தலைவியின் முலை. சால - மிகவும். வெற்பா! (தலைவியின்) கொங்கைப் பசப்பினும் நின் அருமறை சாலப்பரந்தது எனக் கூட்டுக. பரந்தது-வெளிப்பட்டுவிட்டது. ௨

தாயறிவு உணர்த்தல்

*[உங்கள் களவொழுக்கத்தைத் தாய்அறிந்துவிட்டாள் என்று தோழி தலைவனுக்கு உணர்த்துதல்]*

262\. சோகா னலஞ்சுட வெந்தொளி மாழ்குந் துணைமுலையில்
ஏகா வலியையு மென்னையு நோக்கி யினியகன்னற்
பாகார் மொழிவஞ்சி பண்டுநங் கையிற் பயின்றவண்டின்று
ஆகாத தென்கொலென் றுளறிந் தாள்கொனம் மன்னையுமே.

(கு - ரை.) சோக அனலம் - துன்பத்தீ. மாழ்கும் - கெடும். துணை முலையில் - தலைவியின் இருகொங்கைகளிலுமுள்ள. ஏக ஆவலி - ஒற்றையாக அமைந்துள்ள நகக்கீற்றுகள்; இவை தலைவன் புணர்ச்சியால் ஏற்பட்ட குறியாகும்; அன்றி, ஒற்றை மணிவடம் எனினுமாம். கன்னல் பாகு ஆர் - கரும்பின் பாகையொத்த. வஞ்சி: தோழியைத் தாய் விளித்தது. பண்டு - முன்னே. நம் கை என்றாள் தலைவியின் கையை; தலைவிக்கும் தமக்குமுள்ள ஒற்றுமை கருதி. வண்டு - வளையல். ஆகாமை: கை இளைத்தமையால் வளையல் கழன்றோடுதல். அன்னை நோக்கி, 'வஞ்சி! என்கொல்' என்றாள்; அறிந்தாள்கொல் எனக் கூட்டுக. கொல்: முன்னது அசை; பின்னது ஐயம்; பின்னதும் அசை எனலுமாம். ௩

வெறி அச்சுறுத்தல்

*[தலைவியின் தமர் வெறியாட்டெடுத்தலைக் கூறித் தோழி தலைவனை அச்சமடையச் செய்தல்]*

263\. முன்றிலு மன்னை மருங்கிலு மேயன்றி முன்னறியாக்
குன்றி லருங்குலக் கொம்பனை யாள்குல வானுதலின்
மன்ற லரிந்த மறியின் குருதியின் மண்ணுமன்னிச்
சென்றெருழ்வேலர்கை தீண்டவென் செய்தது தீவினையே.

(கு - ரை.) முன்றில் - வீட்டின் முன்னிடம். மருங்கில் - இடை. முன் அறியா - அப்பாலுள்ள இடங்களைக் கண்டறியாத. கொம்பு அனையாள் - பூங்கொம்புபோன்ற தலைவியினது. குலம் வாள் நுதலின் - சிறந்த ஒளிபொருந்திய நெற்றியில். மன்றல் - வெறியாடலாகிய விழவின்கண். மறியின் குருதியின் மண் - ஆட்டின் செந்நீர் தோய்ந்த மண். வேலர் - கையின்கண் வேலைப் பிடித்துக் கொண்டு வெறியாடுவோன். 'தீண்ட என் செய்தது' என்றது தீண்டும்படியாக என்ன தவற்றினைச் செய்துவிட்டது என்று இரங்கியபடி. வெறியாடலின் இயல்பை. உடுடு-ஆம் செய்யுளின் குறிப்புரையாலும் 'முருகயர்ந்து வந்த முதுவாய் வேல,.................... சிறுமறி கொன்றிவள் நறுநுதல் நீவி, வணங்கினை கொடுத்தியாயின்'- குறுந். ௩௬௨. என்னும் செய்யுளாலும் அறிக. தீவினை, அறியா அனையாள் நுதலின் தீண்ட என் செய்தது! எனக் கூட்டுக. ௯

### பிறர் வரைவு உணர்த்தல்

*[தலைவியை அயலார் மணஞ்செய்துகொள்ள முயல்கின்றார்க ளென்று தோழி தலைவனுக்குச் சொல்லுதல்]*

264. இதுமலர் செம்பொ னிதுமணி முத்த மிவையிவைநும்
மதுமலர் வல்லிக்கு வந்தன வென்று வரைபயந்த
நொதுமல ருக்கு நுடங்கிடை யாளில் லிடங்கிடையா
ததுமல ரங்கதிர் வேலண்ண லேயிங் கறிந்திலையே.

(கு - ரை.) இது மலர்; இது பொன்; இவை மணி முத்தமென இயைக்க. இரண்டாவது 'இவை' என்பதற்கு, மலர், பொன், மணி, முத்தம் முதலிய யாவும் என்றுரைக்க. மதுமலர் வல்லிக்கு - தேன் பொருந்திய பூக்களையுடைய கொடிபோன்ற தலைவிக்கு. வந்தன என்று - பரிசமாகக் கொண்டுவரப்பட்டன என்று கூறி. வரை பயந்த நொதுமலருக்கு - தலைவியின் மணப்பரிசமாகத் தந்த அயலார்க்கு; வரை - மணம்; ஈண்டு மணத்திற்குரிய பரிசப்பொருளை உணர்த்தி நின்றது. நுடங்கு இடையாள் இல் - அசைகின்ற இடையினையுடைய தலைவியின் வீட்டில்; வந்தோர் பலராதலின் இடம் கிடையாதென்றாள்; வீடு இடங்கொள்ளவில்லை என்பது கருத்து. அது - அயலார் தலைவியை மணம் பேச வந்திருத்தலை. மலர் அம் கதிர்வேல் அண்ணலே - பரந்த அழகிய கதிர்களையுடைய வேலை

புடைய தலைவனே. அண்ணலே! வல்லிக்கு மலர் முதலியன வந்தன என்று பயந்த நொதுமலருக்குக் கிடையாது; (நீ) அது அறிந்திலை எனக் கூட்டுக. இனியேனும் அறிந்து முந்துக என்பது கருத்து. ரு

வரைவு எதிர்வு உணர்த்தல்

*[நீ தலைவியை மணம்புரிந்துகோடற்கு வருவாயாயின் எம்மவர் நின்னை ஏற்றுக்கொள்வரெனத் தோழி தலைவனுக்குச் சொல்லுதல்]*

**265.** இனத்துக்கு மேய்ந்த வறிவுக்கும் வாய்ந்த இளங்கொடிபோல்
தனத்துக்கு மேற்பத் தரநினை வாரெமர் தாழருவிப்
புனத்துக் கலவ மயில்களி னாலும் பொருப்பஇன்றென்
மனத்துக் கவலையு மற்றென்குற் றேவலும் வாய்த்ததின்றே.

(கு - ரை.) இனம் - குலம். ஏய்ந்த - பொருந்திய. இளங்கொடி: தலைவி. தர - தலைவியை நினக்குக் கொடுக்க. எமர் - எமது சுற்றத்தார். கலவம் - தோகையையுடைய. ஆலும் - ஆடும். பொருப்ப - தலைவ; அண்மைவிளி. கவலை - தலைவியை நீ மணந்துகொள்ள வேண்டுமென்னும் கவலை. வாய்த்தது இன்று - பயன்பட்டன வில்லை; வாய்த்ததின்று என்பதைக் கவலை ஏவல் என்னும் இரண்டனோடும் தனித்தனிக் கூட்டி முடிக்க. பொருப்ப! எமர் தர நினைவார்; (நினைந்து என்பயன்? நீ மணம்பேசி வராமையால்) வாய்த்ததின்று எனக் கூட்டுக. விரைந்து மணம் பேசி வருக என்பது கருத்து. இனி, எமர் தர நினைந்தமையால் கவலையும் இன்று வாய்த்தது; ஏவலும் இன்றே வாய்த்தது எனலுமாம். இப்பொருட்கு வாய்த்தது என்பது தெளிவுபற்றி வந்த காலவழுவமைதியாம். சு

வரையும் நாள் உணர்த்தல்

*[மணம்புரிந்துகோடற்குரிய நன்னாள் இஃதென்று தோழி தலைவனுக்கு உரைத்தல்]*

**266.** களிதங்கு தோகைக் கணநட மாடக் கறங்கருவி
யளிதங்கு சோலை யருவரை நாட வணிபைங்கிள்ளை
விளிதங்கு தண்புன வேங்கையும் பூத்தது விண்ணிடைநின்
றொளிதங்கு திங்களு நீர்கொண்ட கேண்மையு மூர்கொண்டதே.

(கு - ரை.) களி - களிப்பு. தோகைக் கணம் - மயிற்கூட்டம். கறங்கு - ஒலிக்கின்ற. அளி - வண்டு. ஆடற்கேற்ப ஒலிக்கின்ற

அருவியையும் சோலையையுமுடைய வரையென்க. நாட: தலைவ; அண்மைவிளி. அணி பைங்கிள்ளை - அழகிய பச்சைக்கிளி. விளி- கூவுதல். திங்கள் ஊர்கொள்ளல் - பரிவேடம் சூழ்தல். கேண்மை ஊர்கொள்ளல் - தலைவனுக்கும் தலைவிக்குமுள்ள நட்பு ஊராரால் அறியப்பட்டு அலராதல். வேங்கை பூத்தலும், திங்கள் கலைநிறைந்து ஊர் கோடலுமாகிய இரண்டும் மணஞ்செய்து கோடற்குரிய காலத்தை அறிவிக்கும் குறியென்று குறிஞ்சிநில மக்கள் கருதினர் என்க. 'வெற்பா, பொன்னுண் மலர்கொண்ட வேங்கையெல்லாம் மதிபூத்துநின்ற, திங்நாள் எமர்க்கு வரைகின்ற காலம் இது தவிர்ந் தால், நன்னுள் வருகின்ற காலத்தல்லாது நடுவில்லையே' - ஆரூர்க்- உஎக. 'பைம்புதல் வேங்கையும் ஒள்ளிணர் விரிந்தன, நெடுவெண் திங்களும் ஊர்கொண் டன்றே' - அகம் - உ. எ

## அறிவு அறிவுறுத்தல்

*[தலைமகளுடைய பேரறிவைத் தோழி தலைவனுக்கு அறிவித்தல்]*

**267.** தன்னையுந் தோளையுந் தோளினில் லாவரிச் சங்கையுங்கண்டு
உன்னையிங் கோது முறுபழி நாணி யுளங்கிடந்தது
அன்னையுஞ் சேரியு மாயத்து ளாரு மயலுமின்றி
யென்னையுங் கூடவெற் பாமறைத் தாளென் னிளங்கொடியே.

(கு - ரை.) தன்னை என்றது, தலைவியை. வரிச்சங்கு - அழகிய வளையல். உன்னை : தலைவனை. உறுபழி - மிக்க பழி; இதுதலைவிக்கு அருள் செய்யாமையால் உண்டானதென்க. உளம் கிடந்தது-(தலைவன் அருளாமையால் தலைவியின் உள்ளத்தில்) கிடந்ததாகிய வருத்தம். அன்னை - நற்றாய். ஆயத்துளோர் - தோழிமார். என்னையும் - தன் உயிரினும் சிறந்த என்னையும். வெற்பா - தலைவா. இளங்கொடி - தலைவி. வெற்பா! இளங்கொடி கண்டு நாணி கிடந்தது மறைத்தாள் எனக் கூட்டுக. 'தன் எவ்வம்கூறினும் நீசெய்த அருளின்மை, என்னை யும் மறைத்தாள் என் தோழி அது கேட்டு, நின்னையான் பிறர் முன்னர்ப் பழிகூறல் தானுணி' - கலித்தொகை - சஃ.

(வே - ம்.) உளங்கிடந்த அன்னையும். இ - வி. கடுக. அ

### குறி பெயர்த்திடுதல்

*[தோழி குறியிடத்தை மாற்றுதல்]*

**268.** வாமா னுகளு மணிவரைச் சாரலில் யாம்வளர்த்த
பூமா தவியிது பூஞ்சிலம் பாபுல்ல நீதினையின்
தேமாலை மென்குழ லாள்செறி யாவருஞ் சேணெறிக்கண்
நீமாறி வேறொரு நீழலுண் டாகி னினைந்தருளே.

(கு - ரை.) வாம் மான் உகளும் - தாவுதலையுடைய மான்கள் துள்ளுகின்ற. மணிவரை - அழகிய மலையின். மாதவி - குருக்கத்திக் கொடி. பூஞ்சிலம்பா - பொலிவுபெற்ற மலையினையுடைய தலைவா. குழலார் : பாங்கியர். செறியா - அணுகாத. அருசேண் நெறிக்கண் - சிறிது தூரமான இடத்தில். நீழல் - நிழலுள்ள இடம். நினைந்தருள் - அதனைக் குறியிடமாகக் கொள்ளக் கருதுக. சிலம்பா ! இம்மாதவி யாம் வளர்த்ததாகலின் இதன் நிழலிற் புல்ல (நாணுகின்றேம்); ஆதலின் வேறொரு நிழலை நின்குறியிடமாகக் கொள்க என்று தோழி குறிபெயர்த்தமை காண்க. 'நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப, நும்மினும் சிறந்தது நுவ்வை யாகுமென்று, அன்னை கூறினள் புன்னையது சிறப்பே, அம்ம நாணுதும் நும்மொடு நகையே,........ துறைகெழு கொண்க நீநல்கின், நிறைபடு நீழல் பிறவுமாருளவே' - நற்றிணை. கஎஉ.

(வே - ம்.) குழலாள்; நீ மாற; நீழலுண்டாக. இ. வி. கருக.

### தாய்க்குத் தோழி கூறல்

*[தலைவி இரவில் மதிற்புறம் சென்றது என் ? எனக் கேட்ட தாய்க்குத் தோழி விடை பகர்தல்]*

**269.** அற்புறஞ் செல்ல விரிசுட ரெஞ்சினு மஞ்சும்வஞ்சி
யிற்புறஞ் சென்றன ளென்றறி யேனிரு கால்வளைந்த
விற்புறஞ் சூழெயில் மேவிவிட் டாளென்கை நீளருவிக்
கற்புறஞ் சூழணங் கோகன வேரவன்னை கண்டதுவே.

(கு - ரை.) அல்புறம் - இருட்டில். விரிசுடர் எஞ்சினும் - விளக்கொளி சிறிது குறையினும்; விரிசுடர் - ஞாயிறுமாம். எஞ்சினும் புறம் செல்ல அஞ்சும் வஞ்சி என இயைக்க. வஞ்சி: தலைவி. இல் புறம்-வீட்டிற்கு வெளியே. இருகால் வளைந்தவில் - இரு நுனிகளும் வளையும்படி நாணேற்றிய வில்லையுடைய வீரர் ; வில் : ஈண்டு அதனை

யுடையாரை உணர்த்தி நின்றது. அவர் எயிற்புறம் சூழ்தல், காவலின் பொருட்டென்க. எயில் - மதில். என்கை - என்று கூறுதல். கல் புறம் - மலையிடத்து. அணங்கோ - வரையர மகளோ. அன்னை! வஞ்சி சென்றனள் என்று (இதுவரை ஒருவரும் சொல்ல யான் கேட்டு) அறியேன்; (அங்ஙனமிருக்க இப்போது நீ) மேவிவிட்டாள் என்கை அணங்கோ? (அன்றி) நீ கண்டதாகிய கனவோ? எனக் கூட்டுக. ௬0

பகல் வருவானை இரவு வருகென்றல்

*[வருவானை—வருகின்ற தலைவனை; வருக என்று தோழி கூறுதல்]*

**270.** மதிகண் டலருங் குமுதத்தை நோக்கி வரிநெடுங்கண்
குதிகொண்ட நீரிற் கொழுங்கயல் போன்றன கூற்றமன்ன
நுதிகொண்ட வேற்படை யாயிடை யாகி நுடங்குமின்னிற்
பதிகொண்ட கச்சணி பச்சிள நீர்மென் பணிமொழிக்கே.

(து - ரை.) குமுதத்தை - அல்லியை. குமுதத்திற்கு மதியைத் தலைவனாகக் கூறுதல் நூல்மரபு; அது தன் தலைவனைக்கண்டு மலர்ந் தமைபோல நாமும் நந்தலைவனை இரவிற்கூடி மகிழ்தற்கில்லையே என்று தலைவி வருந்திக் கண்ணீர்விட்டாளென்க. வரி - செவ்வரி. நீரைச் சொரிகின்ற தலைவியின் கண்கள், மேலிருந்து குதித்தோடு கின்ற தண்ணீரில் தோன்றும் கயல்மீனைப் போன்றன என்க. நுதி - நுனி. படையாய்: தலைவனே. நுடங்கும் - அசையும்; அசைதல், கொங்கையைத் தாங்கலாற்றாமையாலென்க. இடைமின் என்றது, உருவகம். பதிகொண்ட - பதிந்துள்ள. கச்சு அணி பச்சிளநீர் - இரவிக்கையணிந்த இளநீரையொத்த கொங்கை. பணிமொழிக்கு - பணிவைப் புலப்படுத்தும் மொழியையுடைய தலைவிக்கு. பணி மொழிக்கு நோக்கிக் கண்போன்றன; ஆதலின் இரவில் வருக என் பதுகருத்து. ௬௬

(வே - ம்.) பனிமொழிக்கே.

இரவு வருவானைப் பகல் வருகென்றல்

**271.** பேணத் தகுந்தன் கொழுநனைப் பேணப் பெரும்பகலே
காணத் தவஞ்செய்த கஞ்சமென்றே யென்றுங் கையறவு
பூணத் தயங்கும் பொலங்குழை மாது புலம்பிநின்றுள்
யாணர்த் தடஞ்சிலம் பாவென்கொ லோவிதற் கெண்ணுவதே.

(கு - ரை.) கொழுநனை - கணவனை. கஞ்சம் - தாமரை; இதன் கொழுநன் ஞாயிறு. கொழுநனைப் பகலே பேணவும் காணவும் கஞ்சம் தவம் செய்தன என்றியைக்க. கையறவுபூண் - செயலற்ற நிலையை மேற்கொண்ட, மாது என்க. தயங்கும்-விளங்கும். பொலம் - பொன்னாற் செய்யப்பட்ட. மாது : தலைவி. யாணர் தட சிலம்பா - புதுவருவாயினையுடைய பெரிய மலைக்குரிய தலைவனே. சிலம்பா ! கஞ்சம் செய்த என்றே பூண் அம்மாது நின்றாள் : இதற்கு எண்ணுவது என் ? எனக் கூட்டுக. இனிப் பகற்பொழுதின்கண் வருதலே எண்ணற்பாற்று என்பது கருத்து. கொல், ஓ : அசைகள். கஉ

பகலினும் இரவினும் பயின்று வருகென்றல்

*[பயின்று—அடிக்கடி]*

272. கங்குற் றலைநின்ற திங்களுங் காலைக் கமலமுநின்
துங்கப் புயத்தை வெறுப்பவந் தாலென் சொரிமதத்து
வெங்கைக் களிற்றின் மருப்பைப் பறித்ததின் வேரருந்தும்
சிங்கத் தடவரு விச்சிலம் பாவின்று சேர்கின்றதே.

(கு - ரை.) இரவினும் பகலினும் தலைவனைப் பிரிந்திருக்குந் தலைவியின் முகம் வாட்டமடைந்திருக்கும் ; அதுபோழ்து, திங்களும், தாமரைமலரும் முகத்தை வென்றுவிட்டோமென்று மகிழ்ந்திருக்கும்; ஆனால் தலைவன் வந்துவிட்டால், அவளது முகம் மலர்ச்சியடைந்து திங்களையும் தாமரைமலரையும் வென்றுவிடும்; அக்காலையில் திங்களும் கமலமலரும் அவளது முகமலர்ச்சிக்குக் காரணமாகிய தலைவனது வரவினை வெறுக்கும் ; அவ்வாறு வெறுப்ப நீ பகலினும் இரவினும் இங்கே வந்தால் என்ன? என்கின்றாள். தலைவனது வரவு கண்டு மகிழ்ந்த தலைவியின் முகத்தோற்றத்தைப் பார்த்துவிட்டுப் பின்பு திங்களையும், தாமரைமலரையும் பார்த்தால் அவைகள் தலைவனது வரவினை வெறுத்தவை போன்று ஒளியிழந்து தோன்றும் என்பது கருத்து ; ஆதலால், தலைவி நினது இருபோது வரவினையும் விரும்புகின்றாள் என்பது கருத்து ; வெறுப்புற்றார் முகம் ஒளியிழந்து காணப்படும். சொரிமதத்து வெங்கைக் களிற்றின்......... அருவிச்சிலம்பா ! இன்று சேர்கின்றது - இப்பொழுது (வந்து) சேர்தல் (போல) திங்களும் கமலமும் நின்புயத்தை வெறுப்ப வந்தால் என் ? என்று கூட்டுக. "சேர்கின்றது" என்பது தொழிற்பெயர். இன்று வந்து சேர்கின்றதை (சேர்தலை)ப்போல இரவும் பகலும்

வந்து சேர்ந்தாலென் என்றவாறு. சொரிமதத்து வெங்கைக் களிற்றின்-மதம் சொரிகின்ற வெம்மையான நெடுங்கைக் களிற்று யானையின், மருப்பைப் பறித்து அதன்வேர் அருந்தும் - கோட்டினைப் பறித்து அவற்றின் அடிக் குருத்தினைத் தின்னுகின்ற, சிங்கத் தடஅருவிச்சிலம்பா - சிங்கத்தையும், பேரருவியினையும் உடைய மலைக்குத் தலைவனே! இன்று சேர்கின்றது - இன்றைக்கு நீ வருதலைப் போல, கங்குல் கலைநிறை திங்களும் - இரவின்கண் தோன்றுகின்ற கலைநிறைந்த நிலாவும், காலைக் கமலமும் - காலையில் மலரும் தாமரை மலரும், நின் துங்கம் புயத்தை - நினது வலியபுயத்தை, வெறுப்ப - (தலைவியின் முகமலர்ச்சிக்குக் காரணமாயின என்று) வெறுக்கும் படியாக, வந்தாலென் - வந்தால் கேடியாது? ஒரு கேடுமில்லை என்றவாறு. களிற்றுக்கும் சிங்கத்துக்கும் அஞ்சாத ஆண் தகையாகிய நினக்கு அஞ்ச வருவது யாதொன்றும் இல்லை என்கின்றாளாம். கஙு

பகலினும் இரவினும் அகலிவண் என்றல்

*[இவண் அகல்—இவ்விடத்தே வராது நீங்குக]*

**273.** இரவிற் பகல்பெரி தென்னுமன் னேயிவ் விரவுவந்து
விரவிற் பகலின் மிகநெடி தென்னும் வெகுண்டெழுந்த
அரவிற் படமன்ன வல்குலென் னுயிரன் னளுக்கெந்நாள்
உரவுக் களிற்றண்ண லேயிரு போதுமிங் கொப்பதுவே.

(கு - ரை.) மன்னே - மிகவும். விரவில் - தங்கினால். அல்குல் - அல்குலையுடைய (கசஈ); அன்னளுக்கு: தலைவிக்கு. உரவு களிற்று அண்ணலே - வலிமை மிக்க யானைகளையுடைய தலைவனே! ஒப்பது: ஒருபடித்தா யின்பம் செய்தல். அண்ணலே! பெரிதென்னும்; நெடிதென்னும்; அன்னளுக்கு ஒப்பது எந்நாள்? எனக் கூட்டுக. மணத்தின்பின்னரே இருபோதும் மகிழ்ச்சி அளிக்கும்; ஆகவே மணந்துகொள்ளவேண்டும் என்பது கருத்து. கஈ

தலைவன் மரபு கூறி வரைவு கடாதல்

*[உயர்ந்த குலத்திற் பிறந்த நின்பெருமைக்கு இக்களவொழுக்கம் தகாதாகையால், விரைவில் மணந்துகொண்டு இவள் துன்பத்தை நீக்குக என்று தோழி தலைவனுக்குக் கூறுதல்]*

**274.** உரவெங் களிற்றண்ண லொண்புன லுடுநல் லூருமுயர்
மரபும் புகழு மறையன்ன வாய்மையும் வையமெல்லாம்
பரவுங் குலனும் பழுது படாமலிப் பைந்தொடியாள்
அரவந் தருமல ருக்கழுங் காம லளித்தருளே.

(து - ரை.) உரம் வெம் களிற்று அண்ணல் - வலிய கொடிய யானைகளையுடைய தலைவ, நின்னுடைய. ஒண்புனல் - மிக்க நீர்வளம் பொருந்திய. மரபு - குடிப்பிறப்பு. மறை அன்ன வாய்மை - மறை மொழியை யொத்த உண்மை. வையம் - உலகத்தார். பரவும் - வணங் குதற் குரிய. பழுதுபடாமல்-பழியையெய்திக் கெட்டுப்போகாமலும். அரவம்தரும் அலருக்கு அழுங்காமல் - ஆரவாரமிக்க பழிச்சொல்லைக் கேட்டு வருந்தாமலும், தொடியாள்: தலைவி. அளித்தருள் - மணந் தருள்க. அண்ணல்! (நின்னுடைய) நாடு முதலியவை பழுதுபடா மலும், தொடியாள் அழுங்காமலும் அருள் எனக் கூட்டுக. கஙி

காவல் மிகவு உரைத்தல்

*[மிகவு—மிகுதியை]*

**275.** இலவுங் கவிரு மனையசெவ் வாய்வஞ்சி யென்செயுமின்
குலவுஞ் சுடர்வடி வேற்கொற்ற வாகொண்ட காதலென்ன
நிலவும் பகலன்ன நின்றெறி யாநிற்கு நீண்மறுகில்
உலவுங் கடுந்துடி யூர்கா வலரு முறங்கலரே.

(து - ரை.) இலவு - இலவமலர். கவிர் - முருக்கமலர். வஞ்சி: தலைவி. மின்குலவும் - மின்போல் விளங்குகின்ற. வடி - கூர்மை. கொற்றவா - வெற்றியையுடைய தலைவா. காதல் என்ன - காதல் போன்ற மிகுதியுடையது என்று சொல்லுமாறு. அன்ன - அன்ன வாய். மறுகில் - தெருவில். உலவும் காவலர், துடியையுடைய காவலர் என இயைக்க. கடுந்துடி - ஒலியால் கடிய உடுக்கை. கொற்றவா! நிலவும் எறியா நிற்கும்; காவலரும் உறங்கலர்; (ஆதலின்) வஞ்சி என் செயும்? எனக் கூட்டுக. வஞ்சி குறியிடத்திற்கு வர இயலா தென்பது கருத்து.

(வே - ம்.) காதலன்ன ; பகலென்ன. கரு

காம மிகவு உரைத்தல்

*[தலைவியின் வேட்கை மிகுதியைத் தோழி தலைவனுக்கு உரைத்தல்]*

**276.** உடனு கியநின் னுளமறி யாதல்ல வோலமுந்நீர்
விடநாண் சுடர்விடு வேலன்ன லேவெய்ய கால்புடைப்ப
மடநா ணிறுத்தநின்ற வங்கங் கவிழ்ந்து மலிந்தஅற்புக்
கடனுண் மலர்க்குழ லாளழுந் தாநின்ற கையறவே.

(கு - ரை.) உடன் ஆகிய - தலைவியின் உள்ளத்தோடு ஒன்றிய அறியாததல்ல என்பது, தொகுத்தல் விகாரம் பெற்றது. ஓலம் மூந்நீர்விடம் நாண் - ஓசை மிக்க கடலிற்றோன்றிய நஞ்சும் நாணத் தக்க, கொடுமைவாய்ந்த வேல் என இயைக்க. அண்ணலே-தலைவனே. வெய்ய கால் புடைப்ப - காமமாகிய கொடிய காற்றடித்தலால். மடம் நாண் நிதிநின்ற வங்கம் - மடமும் நாணமுமாகிய செல்வப் பொறையைத் தாங்கி நின்ற நிறையாகிய கப்பல் "காமக் கணிச்சி உடைக்கும் நிறைஎன்னும், நாணுத்தாழ் வீழ்த்த கதவு" (திருக்குறள்); வங்கம்-நிறையாகிய மரக்கலம். அன்புக்கடலில் ஓடுகின்ற நிறையாகிய மரக்கலத்தைக் காமமாகிய காற்று மோதி அலைக்க அது மடமும் நாணமுமாகிய நிதியுடன் அக்கடலில் மூழ்காநின்றது என்றவாறு. கவிழ்ந்து - கவிழப்பெற்று. மலிந்த அற்புக்கடல் - மிக்க அன்பாகிய கடலில். நாள்மலர்க்குழலாள் - அன்றலர்ந்த மலரையணிந்த கூந்தலையுடைய தலைவி. கையறவு - செயலற்றநிலை. அண்ணலே! புடைப்ப கவிழ்ந்து குழலாள் கடல் அழுந்தாநின்ற கையறவு நின் உளம் அறியாததல்ல எனக் கூட்டுக. மடம் முதலியவற்றை நிதி முதலியனவாக உருவகம் செய்தமையால் இச்செய்யுள் முற்றுருவக அணியாம்.

(வே - ம்.) விடணுண் ; மடணுண். கள

## கனவு நலிபு உரைத்தல்

*[ தலைவியைக் கனவு வருத்துதலைத் தோழி தலைவனுக்கு உரைத்தல் ]*

**277.** அரவுங் களிறு மணங்குங் குலாநெறி யன்புடனீர்
வரவுங் குறியிடை வந்தெதிர் புல்லவும் வல்லிநலம்
பரவும் பணிமொழி யுள்ளம் பகரவும் பாயலிடை
விரவுங் கனவை நனவென்று காவி விழித்தனளே.

(கு - ரை.) களிறு - யானை. அணங்கு - பேய்மகள். குலாம் நெறி - உலாவுகின்ற வழியில். புல்லவும்-தழுவவும். வல்லி : தலைவி. நலம் பரவும் பணிமொழி - நன்மை மிக்க பணிந்த மொழியால். உள்ளம் - தன் உள்ளக்கருத்தை ; அது தன்னை விரைந்து மணந்து கொள்ளவேண்டுமென்பது. வல்லி பகரவும் என இயைக்க. வல்லியாகிய பணிமொழி பகரவும் எனினுமாம். பாயலிடை விரவும் - படுக்கையில் பொருந்திய. காவி - கருங்குவளைபோன்ற கண். காவி

விழித்தனள் : சினைவினை முதல்மேல் நின்றது. நெறியின்கண் நீர் வரவும் புல்லவும், வல்லி பகரவும் விரவும் கனவை நனவென்று விழித்தனள் எனக் கூட்டுக.

(வே - ம்.) உலாவும் அருநெறி நீவரவும் ; உள்ளம் படுக்கவும்; பாவம் விழித்தனளே. இ. வி.க ௬க. கஅ

### கவின் அழிபு உரைத்தல்

*[தலைவியின் அழகு கெடுதலைத் தோழி தலைவனுக்கு உரைத்தல்]*

278. மருமந்த மாருதம் வண்டமிழ் நாறு மலையவெற்பா
தெருமந்த நெஞ்சிற் றிருவனை யாள்திரு மார்பகலம்
பொருமந்த மென்முலை புல்லப் பெருதுபொன் போர்த்ததுபோல்
அருமந்த வண்ணமெல் லாமவ மேயின் றழிகின்றதே.

(து - ரை.) மரு மந்த மாருதம் - மணம்பொருந்திய இளந்தென்றற்காற்று. தென்றல், தமிழ் முனிவனுகிய அகத்தியன் வாழும் பொதியமலையினின்றும் வருதலின் 'மாருதம் தமிழ்நாறும்' என்று கூறப்பட்டது; நாறும் - மணக்கும்; 'செந்தமிழின் பின்னுதித்த தென்றலே' - தென்றல்விடுதூது - ௪. மலைய வெற்பா - பொதிய மலைக்குரிய தலைவனே. தெருமந்த - கலங்கிய. அனையாள் : தலைவி. மார்பகலம்: ஒருபொருட் பன்மொழி. பொரும் - பொருந்தி நிற்கும். அருமந்த வண்ணம் - அருமருந்தன்ன அழகு. அவமே - வீணுக. பசலையால் அழிகின்றதென்க.

(வே - ம்.) வருமந்த ; வஞ்சித்திருவனையாள்; போர்க்க என்போல். இ - வி. கடுக. கரு

### தலைமகள் சிறைப்புறமாகத் தோழி சொல்லியது

*[தலைவி வேலியின் புறத்தே நிற்கத் தோழி தன் நெஞ்சிற்குக் கூறுவாள்போலத் தலைவி கேட்கும்படி கூறுதல்]*

279. பரவுங் குரிசில் பகல்வரி னூர்பழி தூற்றுங்கங்குல்
அரவுங் குயவரி யுந்திரி யாநிற்கு மாயிழையும்
விரவுங் கரையழி வேட்கை பொருதுயிர் வீயுமென்னில்
வரவுந் தவிரவும் நான்சொல்லு மாறென் மடநெஞ்சமே.

(கு - ரை.) பரவும் குரிசில் - வணங்கத்தக்க தலைவர். ஊர் - ஊரினர்: ஆகுபெயர். கங்குல் - இரவில் வரில். குயவரி - புலி. ஆயிழை - ஆராய்ந்த அணிகலங்களை அணிந்த தலைவி. விரவும் கரைஅழி வேட்கை - பொருந்திய எல்லையற்ற காதல் நோயை. வீயும் - இறத்தலையொத்த பெருந்துன்புறும். என்னில் - என்றால். நெஞ்சமே! குரிசில் பகல்வரில் தூற்றும்; கங்குல் (வரில்) திரியாநிற்கும்; ஆயிழையும் வீயும் என்னில், நான் (தலைவனை) வரவும் தவிரவும் சொல்லுமாறு என் எனக் கூட்டுக. 'தலைவியை விரைவில் மணந்துகொள்க' என்றலே என்னால் சொலத்தக்கது என்பது கருத்து. ௨0

வரைவு கடாதல் முற்றும்

## கங. ஒருவழித் தணத்தல்

*[தலைவன், ஒருவாறு தன் ஊர்க்குப் போய்வருகிறேன் என்று சொல்லிப் பிரிதல்]*

### தன்பதிக்கு அகற்சி தலைவன் சாற்றல்

*[தலைவன் தன்னூர்க்குச் சென்று வருவதாகப் பாங்கிக்குக் கூறுதல்]*

**280.** ஒடிக்குங் கரும்பி னுடுக்குலந் தோன்றுமெம் மூர்வயிற்போய்
முடிக்குங் குறையுண்டு நீயிசைந் தால்முழு முத்தணியுங்
கொடிக்குங் குமமுலை வல்லிக்கு நீயிது கூறுசென்று
வடிக்கின்ற வேல்விழி யாய்வரு வேனிற்றை வைகல்சென்றே.

(து - ரை.) உடுக்குலம் - வான்மீனையொத்த முத்துக்கள். முத்துப் பிறக்கும் இடங்களுள் கரும்பும் ஒன்றாகும். குறை உண்டு - காரியம் ஒன்றிருக்கின்றது. இசைந்தால் உண்டென்க; இசைதல் - உடன்படுதல். முத்து - முத்துமாலை. கொடி: குங்குமக் குழம்பால் எழுதியது; இதனைத் தொய்யில் என்பர். வல்லிக்கு: தலைவிக்கு. வடிக்கின்ற - கூர்மையாக்கப் பெற்ற. விழியாய்: பாங்கியே. இற்றை வைகல் - இந்நாள். விழியாய்! நீ இசைந்தால் போய் முடிக்கும் குறையுண்டு; (ஆதலின்) சென்று வருவேன்; நீ சென்று இதனை வல்லிக்குக் கூறு எனக் கூட்டுக.

(வே. ம்.) கூறவென்று; வருகேன். இ-வி. கருங. க

### பாங்கி விலக்கல்

*[செல்லவேண்டாவென்று தலைவனை விலக்குதல்]*

**281.** அறையுங் கடலன்ன வன்பினெம் மாவி யினும்பிரியக்
குறையிங் குமக்கு முடிப்பதுண் டேற்கொண்ட காதலுட
னுறையும் பதிக்க ணொருப்பட்ட போதுநி னுள்ளஞ்செல்ல
இறையுந் தவிர்க்ககில் லேனெம்பி ரானின் றெழுந்தருளே.

(து - ரை.) அறையும் - ஒலிக்கின்ற. அன்பின் - அன்பினையுடைய. எம் ஆவியினும் - எம் உயிரினையொத்த தலைவியினின்றும். (ககக). உறையும் பதிக்கண் - உறைதலையுடைய நின்னூர்க்கு. ஒருப்படல் - உடன்படல். இறையும் - சிறிதும். தவிர்க்ககில்லேன் -

தடுக்கமாட்டேன். எம்பிரான் - எமது தலைவனே; விளி. எம்பி ரான்! பிரிய உண்டேல் (அதற்காக) பதிக்கண் செல்ல ஒருப்பட்ட போது தவிர்க்ககில்லேன்; எழுந்தருள் எனக் கூட்டுக.

(வே - ம்.) இரிய; முடிப்பதுண்டே; போதின்றென் னுள்ளம். இ - வி. கஉ௬. உ

தலைவன் நீங்கல்வேண்டல்

282. உள்ளந் தடுப்ப வினையே யெனையிங் குறைபதிக்குத்
தள்ளும் பரிசு தலைக்கொண்ட தாற்றணந் தாலும்வந்து
வெள்ளஞ் சுரும்பு விரும்புபைங் கோதை விளங்கிழையாய்
நள்ளென் பகல்வரு வேன்நடுங் காமெய் நடுங்கலையே.

(கு - ரை.) தள்ளும் பரிசு தலைக்கொண்டது - போகும்படி யாகச் செய்துவிட்டது. 'நின் உள்ளஞ்செல்ல ஒருப்பட்டபோது இறையும் தவிர்க்ககில்லேன்' (உ௮௧) என்று கூறிய பாங்கிக்கு என் உள்ளம் ஒருப்படவில்லை; வினையே என்னைத் தலைக்கொண்டது என்று தலைவன் மறுமொழி கூறினான் என்க. தணந்தாலும் - பிரிந் தாலும். வெள்ளம் சுரும்பு - வெள்ளம்போன்ற வண்டுகள். கோதை- மாலையை அணிந்த. இழையாய்: பாங்கியே. நடுங்கலை - நடுங்கற்க. பாங்கியை 'நடுங்கற்க' என்றதனால் தலைவியையும் அவ்வாறே பார்த் துக்கொள்க என்றானாயிற்று. சுரும்பு வந்து விரும்பு இழையாய்! வினையே தலைக்கொண்டது; தணந்தாலும் வருவேன்; நடுங்கலை எனக் கூட்டுக.

(வே - ம்.) தலைக்கொண்டது; வருவேம்; ஒடுங்கா உள். இ-வி. கஉ௬. ௩

பாங்கி விடுத்தல்

*[பாங்கி தலைவனைச் செல்லுமாறு விடுத்தல்]*

283. உமையா டலைவனை யொன்றிய வாறிவ ளுன்னையன்றி
யமையா நிலைமை யறிந்தனை யேயய லேபுயலின்
சுமையார் தடம்பொழில் சூழும்வெற் பாநின் றுணிவையெய்தி
யெமையாள வெண்ணினை யேலின்று நாளை யெழுந்தருளே.

(கு - ரை.) தலைவனை-சிவபெருமானை. ஒன்றியவாறு-இணைந் திருப்பதேபோன்று. அமையா-தனித்திராத. அயலே - (பொழி

வின்) மேற்பக்கத்தே. புயல் - மேகம். ஆர் - பொருந்திய. தடம் பொழில் - பெரிய சோலே. வெற்பா - தலேவா. துணிவை எய்தி- செய்வதாகத் துணிந்த காரியத்தை முற்றி. இன்று அல்லது நாளேக்கே என்க. எழுந்தருள் - மீண்டுவருக. வெற்பா! இவள் நிலேமை அறிந்தனே; (ஆதலின்) எண்ணினேயேல் எய்தி எழுந்தருள் எனக் கூட்டுக.

(வே - ம்.) அறிந்தனேயேல்; சூடும். இ-வி. கஙு.

## புரவலன் பிரிவுநிலே உரைத்தல்

*[தலேவன் பிரிந்து செல்லும்போது, 'நீ இன்று மாலேயே வந்துவிடுக' என்று தோழி சொல்லுதல்]*

**284.** இருகாலு மில்லே வலவனுக் கேறு மெழுபரித்தேர்க்
கொருகா லொழிய இருகாலுமிங் கில்லே யொண்சிலம்பா
குருகாலும் வாரிதி யேழுமெண் குன்றமுஞ் சூழ்ந்திரவி
வருகால மென்றுகொ லன்றுகொ லியும் வருவதுவே.

(து - ரை.) வலவனுக்கு - தேர்ப்பாகனுகிய அருணனுக்கு; ஏறும் - சூரியன் ஏறுகின்ற. எழுபரித் தேர்க்கு - ஏழு குதிரைகளேப் பூட்டிய தேர்க்கு. கால் - தேருருள். ஞாயிற்றின் தேர்க்கு ஒரு ருளே உண்டென்பதும், அதில் ஏழு குதிரைகள் பூட்டப்பட்டிருக் கும் என்பதும், அவனுடைய வலவனுக்குக் காலில்லே என்பதும் புராணக்கொள்கை. ஒண் சிலம்பா - புகழ்பொருந்திய தலேவா. குருகு ஆலும்-பறவைகள் ஆரவாரிக்கின்ற. வாரிதி-கடல். சூழ்ந்து- சுற்றி. இரவி - ஞாயிறு. என்றுகொல் - எப்பொழுதோ. அன்று- அப்பொழுதே. கொல்: அசை. வருவது - வந்துவிடுக; வியங் கோட் பொருளில் வந்தது; இரவிவருகாலம் மாலேயாதலின் அதற் குள் வந்துவிடுக என்பது கருத்து. காலில்லா வலவனேயும் ஓராழித் தேரினேயும் கொண்டு ஞாயிறு, எழுகடல் எட்டுக்குலமலே ஆகியவற் றைச் சூழ் வருதற்குள் நீ நின் துணிவெய்தி வருதல் எளிதெனத் திறம்படக் கூறினுளாயிற்று. சிலம்பா! இரவிவருகாலம் என்று அன்று வருவது எனக் கூட்டுக. இரு எழு; ஒரு இரு; எழு எண் என்பன முரண். இச்செய்யுளின் துறைப்பெயர் 'புரவலன்........ உரைத்தல்' என்றிருப்பதைவிட இலக்கண விளக்க உரைகாரர் கூறிய

படி 'இரவுநிலை உணர்த்தல்' என்றிருப்பதே சாலச் சிறந்ததாகும். இ, வி. கடுரு. ரு

(வே - ம்.) வலவனுக்கேனும்; ஒருகாலும் இங்கில்லை.

பாங்கி தலைவிக்கு அவன்செலவு உணர்த்தல்

285. கருநாண் மலர்க்குழற் காரிகை யாயொரு காரணத்தால்
ஒருநா ளுனைவிட் டுறையவும் வேண்டின ரொன்றியநின்
பெருநாண் மடமை பிணிக்கப் பிணிப்புண்ட பேரறிவின்
மருநாண் மலர்த்தொங்கல் மன்னரென் னேதம் வயமொழிந்தே.

(து - ரை.) கருங்குழலெனக் கூட்டுக. நாள் மலர் - அன்றலர்ந்த மலரை யணிந்த, குழல். காரிகையாய் - அழகிய தலைவியே. ஒன்றிய - பொருந்திய. மடமை - மடம்; கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை என்பர் நச்சினார்க்கினியர். பிணிக்க-தலைவர் அறிவைப் பிணிக்க. அறிவின் - அறிவினையுடைய, மன்னர். மருமணம்பொருந்திய. தொங்கல் - மாலையை அணிந்த. மன்னர் - தலைவர். தம்வயமாவது, தலைவியைப் பிரியாதிருக்க எண்ணுதல். காரிகையாய்! மன்னர் தம்வயமொழிந்து வேண்டினர் எனக் கூட்டுக.

(வே - ம்.) நமைவிட்டு; வருநாள் மலர்; வசமொழிந்தே வயமொழிந்தே. இ - வி. கடுரு. சு

தலைவி ஆற்றாமை கூறல்

*[தலைவனைப் பிரிந்ததனால் உண்டான ஆற்றாமையைத் தலைவி பாங்கிக்குக் கூறுதல்]*

286. ஒருநாள் பிரிய நினைந்தவர் தம்மை யொழிந்தநம்மை
வருநாள் மறக்கவும் வல்லரென் றேமறப் பார்நினைவார்
செருநாண் மலர்க்கணைத் திண்சிலை வேள்வந்து சிந்துமெல்லை
அருநா ளுடனெங்க னுவியு நானுநின் முற்றுவதே.

(து - ரை.) நினைந்தவர் - நினைந்த தலைவர். தம்மை ஒழிந்த நம்மை-தலைவராகிய தம்மைப் பிரிந்திருக்கின்ற நம்மை. வருநாள் - மேல்வருகின்ற நாட்களிலும். மறப்பு நினைவார் ஆர்-ஒருபொருளை மறந்துள்ள நிலையில் அதனை நினைக்கத்தக்கவர் யார்; மறப்பும் நினைப்பும், இருளும் ஒளியும்போன்று ஒன்றுள்ள காலத்து மற்றொன்று

நிலைபெறுதாகலின் இவ்வாறு கூறினளென்க. செரு - போர்செய் தற் குரிய. மலர்க்கணை - பூவம்பினை. சிலை-வில்லையுடைய. வேள்- மன்மதன். ஆற்றுவது - பொறுத்திருப்பது. நினைந்தவர் வல்ல ரன்றே? நினைவார் யார்? (அவ்வாறு மறந்திருந்தால்) வேள் கணைசிந் தும் எல்லை ஆற்றுவது எங்ஙன் ? எனக் கூட்டுக.

(வே - ம்.) நம்மை ஒழிந்த எல்லை; நாமுமிங் காற்றுவதே. இ. வி. கடுந. எ

பாங்கி ஆற்றுவித்தல்

**287.** அருகுங் கலவி யளித்தகன் றூரரு வின்மையென்னி
யுருகுந் தனிநெஞ்சு முண்மகிழ் கூரவந் தொண்மதியைப்
பொருபைங் கதலியும் பூகமுங் கன்னலும் பூவுங்கொண்டு
வருகின்ற தாலவ ரூர்மலி நீருந்தி வாணுதலே.

(து - ரை.) அருகும் கலவி - சுருங்கிய புணர்ச்சி. அகன்றூர் - அகன்ற தலைவருடைய. கூர - மிகும்படியாக. பொரு - நீண்டுமாறு நீண்டு வளர்ந்த. கதலி-வாழை. பூகம் - பாக்குமரம். கன்னல் - கரும்பு. கொண்டு - அடித்துக்கொண்டு; அவர் ஊர் - தலைவருடைய ஊரின் கண் உள்ள. மலிநீர் உந்தி-மிகுந்த நீரையுடைய யாறு; உந்தி- யாறு. வாள்நுதலே - ஒளிபொருந்திய நெற்றியையுடைய தலைவியே. வாணுதலே! நெஞ்சு மகிழ்கூர அவர் ஊர்உந்தி கதலி முதலியவற் றைக் கொண்டுவருகின்றது; அதில் ஆடி மகிழ்வோம் வருக என் பது கருத்து. 'ஆடுகம்வாநம் அகன்றவர் ஊர் அகலாப்புது நீர்'- தஞ்சை. உ௫௫. அ

நெஞ்சில் நினைந்து இரங்கல்

[தலைவி இரங்கிக் கூறல்]

**288.** தேருத அன்பினர் சென்றுழிச் சென்றஎன் சிந்தைகண்டும்
மாருது கூட வரநின்ற தோஇங்கு வந்தென்னுள்ளம்
வேரு யதுகண்டு மீண்டது வோஅன்றி மாண்டதுவோ
ஆருத மையலுற் றேனறி யேன்வந் தடுத்ததுவே.

(து - ரை.) தேருத அன்பினர் - தெளியப்படாத அன்புடைய தலைவர்; பொய் அன்பினர் என்றபடி. சிந்தை - மனம். கண்டும் - தலைவரைக்கண்டும். மாருது - நீங்காது. வேருயது - பிரிவுத்துன் பத்தால் வேறுபட்டதை. ஆருத மையல் - தணியாத காம மயக்கம்.

மையலுற்றுளாதலின் சிந்தைக்கு அடுத்தது யாது என அறியேன் என்றுளென்க. சிந்தை (அன்பினர்)கூட வர நின்றதோ? மீண்டதோ? மாண்டதோ? உற்றேன் அடுத்தது அறியேன் எனக் கூட்டுக. க

காமமிக்க கழிபடர் கிளவி

[காமம் மிகுதலால் உண்டான பெருந்துன்பத்தை வெளிப்படுத்தும் சொல்லைத் தலைவி அன்னங்கட்குச் சொல்லல்]

289. செங்கால் மடநடை யோதிமங் காளுங்கள் சேவலிருந்
தெங்கா தலரையின் றென்சொல்லு மோவென்ன நீருமதன்
பங்கா யிருந்து பரிந்துசொல் லீரும் பாவியென்றே
தங்காது போவிர்கொல் லோதரி யாதென் தனிநெஞ்சமே.

(கு - ரை.) ஓதிமங்காள் - பெண் அன்னங்களே. இருந்து - எங்காதலர் முன்னே போயிருந்து. காதலரை - காதலர்க்கு. என் சொல்லுமோ என்ன-யாது கூறுமோ என்று யான் கேட்ப. அதன் - அச்சேவலொடு. பங்காய் - துணையாய். பரிந்து - என்மீது இரக்கங்கொண்டு. சொல்லீர் - என் துன்ப நிலையைச் சொல்கின்றிலீர். பாவி என்று - என்னைப் பாவி என்று எண்ணி. தரியாது-பொறுக்காது; துன்புறும் என்றபடி. துணையுடனிருந்து அளவளாவி விலகித் தன் பக்கமாக வந்த அன்னப் பேடைகளிடம் தலைவி வினவுகின்றாள்; ஓதிமங்காள்! (அன்னப் பறவைகளே!) உங்கள் சேவல் இருந்து எங்காதலர்க்கு யாது கூறுமோ என்று யான் உங்களிடம் கேட்க, அதற்கு நீவிரும் உங்கள் சேவலின் பங்காக இருந்து பெண்பாலாகிய எனக்கு இரங்காது இருந்தீர். இனி என்னைத் தலைவனைப் பிரியுந் தீவினை யுடையாளென்று கருதி விட்டுப் பிரிந்து போவிர் கொல்லோ! என்கின்றாள். ஓதிமங்காள்! என்ன, நீரும் சொல்லீர்; (ஒருகால் சொல்லாமலே) போவிர்கொல்லோ? (அவ்வாறுபோயின்) என் நெஞ்சம் தரியாது எனக் கூட்டுக. கO

தலைவி நெஞ்சோடு கிளத்தல்

[நெஞ்சொடு கிளத்தல்—தனக்குள்ளே சொல்லிக்கொள்ளுதல்]

290. பாயுங் கடலு மலைப்பதிவ் வூரிலிங் கென்னைவைத்துப்
போயங்கு நம்மை மறந்தவர் பாற்சென்று பூண்முலைமேல்
பாயுங் கணீரும் பசலையு மாய்நின்ற பாவிநெஞ்சே
நீயென் சொனுய்பின் னவரென் சொனுருன் நினைவறிந்தே.

(கு - ரை.) யாயும் - தாயும். அலைப்ப - வருத்த. மறந்தவர் - தலைவர். பூண் - அணிகலையுடைய. அவர்-தலைவர். 'உறுப்புடையதுபோல் உணர்வுடையதுபோல்' (தொல். பொருளியல். சூ: உ) என்னுஞ் சூத்திரவிதியால் கண்ணீரும் பசலையும் நெஞ்சிற்கேற்றி உணர்வுடையதுபோற் கூறப்பட்டதென்க. சென்று நின்ற நெஞ்சே! நீ என் சொன்னாய்? அறிந்து அவர் என் சொன்னர் எனக் கூட்டுக.

(வே - ம்.) ஏயும் கடலும் அலைபயிலூரிலும்; மன்னவரென் சொனர். இ. வி. கஙுரு. கக

## கடலோடு புலத்தல்

*[புலத்தல்-வெறுத்துக் கூறல்]*

291. அவிகொண்ட வெங்கன லம்புகொண் டேயுன்னை யன்றடர்புன்
கவிகொண்டு நின்னைக் கடந்தில ரென்றுகொல் கன்றினர்தம்
புவிகொண்டு வன்புகழ் போர்ப்பவர் தேர்வழி தூர்ப்பதுநீ
குவிகொண்ட லுண்டுமிழ் தெண்டிரை மோதுங் குரைகடலே.

(கு - ரை.) அவிகொண்ட - நெய்பூசப்பட்ட, அம்பு. கனலம்பு - தீக்கணை. அடர் - அடர்த்து; அடர்த்தல் - வருத்தல். முதல்நிலைப் பகுதியே வினையெச்சப் பொருளில் வந்தது 'வரிப்புனைபந்து' (முருகு) என்பதிற்போல. புன்கவி கொண்டு - புல்லிய குரக்குப் படைகளின் துணைக்கொண்டு. அடர்த்துக் கடந்தவன்: இராமன். அவ்வாறு செய்திருப்பின் அஞ்சித் தூராய் என்பது கருத்து. கன்றினர்தம் புவிகொண்டு - பகைத்தவருடைய நாட்டைக் கைப்பற்றி. புகழ் போர்ப்பவர்-புகழால் நிறைந்த தலைவருடைய. குவி கொண்டல்- கூட்டமான முகில்கள். குரை - ஒலிக்கின்ற. கடலே! நீ போர்ப்பவர் தேர் சென்ற வழியைத் தூர்ப்பது (இவரும்) உன்னை அடர்த்துக் கடந்திலரென்றுகொல்? எனக் கூட்டுக. 'ஆற்றொடு புலம்பல்' முதலிய பின்வருந் துறைகளை நோக்குங்கால், இலக்கண விளக்க உரைகாரர் கூறியபடி 'கடலொடு புலம்பல்' என்பதே இத்துறையின் பெயராய் இருத்தல் கூடுமெனத் தோன்றுகின்றது.

(வே - ம்.) அம்புகொண் டெய்தனர் அன்றியும் புன்; கடந்தனர். கஉ

### ஆற்றொடு புலம்பல்

*[தலைவன் ஊரிலிருந்து வருகின்ற ஆற்றை நோக்கிப் புலம்பல்]*

**292.** மறைவந்தென் மேனி மணந்துயிர் வாடத் தணந்தனனின்
இறைவன் கொடுமை யியம்புத னாணி யிரங்கிமெய்யை
நறையுந்து மாமலர்த் தூசான் மறைத்து நகர்ப்புறம்போம்
நிறையுந்தி! நீயென்செய் வாயிது வாயிலென் னீள்வினையே.

(து - ரை.) *மறைவந்து மணந்து - களவொழுக்கத்தாற் கூடி. தணந்தனன் - பிரிந்தவனாகிய, இறைவனது. கொடுமை : தனக்கு அருளாமை. இரங்கி - ஒலித்து; வருந்தி. நறை உந்து - தேனைச் சிந்துகின்ற. மலர்த் தூசால் - மலராகிய ஆடையால். நகர் புறம் போம் - நகரின் புறத்தே போகின்ற. நிறை உந்தி - நீர் நிறைந்த ஆறே. இதுவாயின்-இவ்வாறு துன்புறும்படியாக இருக்குமானால். வினை - தீவினை. ஆற்றை ஒருபெண்ணாக எண்ணிக் கூறினாள். நாணி இரங்கி மெய்யை மறைத்துப்போம் உந்தி! என்வினை இதுவாயின் நீ என் செய்வாய் எனக் கூட்டுக.*

“வையை என்ற பொய்யாக் குலக்கொடி
தையற்கு உறுவது தானறிந் தனள்போல்
புண்ணிய நறுமலர் ஆடை போர்த்துக்
கண்ணிறை நெடுநீர் கரந்தனள் அடக்கிப்
புனல்யா றன்றிது பூம்புனல் யாறென” (சிலப்,புறஞ், 170-174)

இவ்வடிகள் இச்செய்யுட் பொருளோ டொருவாறு ஒத்திருத்தல் காண்க.

கரு

### புள், ஓதிமத்தோடு புலம்பல்

*[அயலார் தன்னை அலர் கூறுதலைத் தலைவி பிறபறவைக ளோடும் அன்னத்தோடும் கூறிப் புலம்புதல்]*

**293.** எங்கா தலர்செல்ல வென்னையிவ் வாறுகொண் டேசுமவர்
தங்கா தலரைத் தணந்தறி யார்கொல் மணந்துறையுஞ்
செங்கான லோதிமங் காள்கருங் கானற் சிறையன்றில்காள்
உங்கா தலர்சொல்லி னீருடன் பேரமிக் குடம்பைவிட்டே.

(து - ரை.) *செல்ல - பிரிந்து செல்ல. ஏசுமவர் - பழிகூறும் பெண்கள். தணந்து-பிரிந்து. அறிந்திருப்பாராயின் ஏசாரென்பது*

கருத்து. மணந்து-ஆண் பறவைகளொடு கூடி. இதனை அன்றில்க ளொடுங் கூட்டி உரைக்க. செங் கானல் ஓதிமங்காள் - செழிப் பான கடற்கரைச் சோலையில் வாழும் அன்னங்களே. செங்கால் நல் ஓதிமம் எனப் பிரித்துரைத்தலுமாம். செங்கால் கருங்கால் என் பது முரண். அன்றில்-ஆணும் பெண்ணும் இணைபிரியாது வாழும் ஒருவகைப் பறவை; நெய்தல் நிலத்திற் குரியது. குடம்பை - கூடு. பிரிந்திருப்பின் உம்மையும் அலர்தூற்றுவர் என்பது கருத்து. செல்ல ஏசுமவர் அறியார்கொல்! ஓதிமங்காள்! அன்றில்காள்! செல்லின் விட்டுப்போம்; இன்றேல் உம்மையும் ஏசுவர் என்றபடி. சொன்ன என்னை; தணந்துறையும்; சிறையளிகாள்; சொல்லின் நீர்.

கச

## தருகோடு புலம்பல்

[குருகு—நாரை]

294. சோரு முழுமடற் கைதையு நெய்தலுஞ் சூழ்துறைவற்
கேரு துரைப்பினு மேற்குங்கொ லோஇற்றை வாணிலவின்
நீருமிவ் வஞ்சியு நெஞ்சுமென் ருலிந் நிலையவற்குக்
கூரு துறங்குவ திப்புறங் காவிற் குருகினமே.

(கு - ரை.) சோறு ஆம் முழுமடல் கைதை - சோறு பொருந் திய பெரிய மடல்களையுடைய தாழை. சோறு-தாழம்பூவின் நடுவே இருப்பது. வஞ்சிக்கொடிபோன்ற தலைவியும் அவள் மனமும் நில வொளியால் வெந்து நீருகும் என்று கூறினும் துறைவற்கு ஏற் குங் கொலோ? ஏருது; அதற்கேற்பக் குருகினமும் இந்நிலையை அவற்குக் கூருது உறங்குவதாகின்றதெனக் கூட்டுக. துறைவன்: தலைவன். வாள்-ஒளி பொருந்திய. நீறு - சாம்பல். வஞ்சி: தலைவி. அவற்கு - தலைவனுக்கு. புறங்காவில் - சோலைப்புறத்தில். கரு

## கையறு கிளவி

[தலைவி காமமிகுதியாற் செயலற்றுக் கூறும் சொல்]

295. நன்றே யினியவர் நண்பு நமக்கு மிவர்க்குமுயிர்
ஒன்றே நினைவு முரையுமொன் றேயுயர் வெண்மணற்றிண்
குன்றே குலவன்ன மேகுரு கேநங் கொடிநெடுந்தேர்
அன்றே வருவமென் ருரிருந் தேன்மெய் வருந்தியுமே.

(து - ரை.) நன்றே என்றது குறிப்புமொழி; தீமை தந்தது என்றபடி. அவர் என்றது தலைவரை. உயிரும், நினைவும், உரையும் ஒன்றேயென எண்ணினேன்; அது பொய்த்தது என்பது கருத்து. குன்றே குலவு-குன்றின்கண் விளங்குகின்ற. குருகே - நாரையே. தேர்-தேரொடு; தேரில் என்றுமாம். இருந்தேன்-துயர் ஆற்றியிருந் தேன். அன்னமே! குருகே! தேரொடு வருவம் என்றார்; (அதனால்) வருந்தியும் இருந்தேன்; (மேலும்) ஒன்றே (எனவும் எண்ணினேன்; அவர் வராமையின்) இனி நண்பு நன்றேயெனக் கூட்டுக. ௧௬

(வே - ம்.) வருவல். இ-வி. ௧௫௫.

## கூடல் இழைத்தல்

*[பிரிந்த தலைவன் மீண்டும் வருவனோ என்று அறியும் பொருட்டுத் தலைவி மணலின்கட் கூடல் இழைத்தல்; இதன்விவரம் ௧௮௭-ஆம் செய்யுட் குறிப்புரையிற் காண்க]*

**296.** முளைக்கும் பிறையை முனியுந் திருநுதல் முத்தரும்ப
விளைக்கும் பசலை விழியிணை காட்ட விடாதவண்டர்
கிளைக்குந் தெரிவருங் கேதகை நீழலின் கீழிருந்து
வளைக்குஞ் சுழிக்கு மழிக்குமொண் கூடல் வளைக்கைகொண்டே.

(து - ரை.) பிறையை முனிதல், ஒப்பாகாமை கருதி. நுதல் முத்து அரும்ப - நெற்றியில் முத்தையொத்த வியர்வைத் துளிகள் தோன்ற. விழியிணை பசலை காட்டலை - ௧௭௦, ௨௫௫. ஆம் செய்யுட்களாலும் அறிக. வண்டர்-வண்டு; ஈற்றுப் போலி. கிளைக்கும்-கிண்டுதலையுடைய கேதகை என்க. இனி, வண்டர் கிளை என்பதற்கு வண்டலாடும் தோழிச் சுற்றம் எனினுமாம். வண்டல்-மகளிர் விளையாட்டு; ஈண்டும் ஈற்றுப் போலியால் லகரம் ரகரமாயிற்றென்க. கிளை-சுற்றம். தெரிவு அரும்-அறிதற்கரிய; மறைவான என்றபடி. கேதகை - தாழையின். வளைக்கும் சுழிக்கும்: ஒருபொருட் பன்மொழி; வளைத்துச் சுழிக்கும் எனலுமாம். முதலில் இழைத்த கூடல் தலைவன் வருகையைக் காட்டுவதாக அமையாமையால், பின்னும் இழைக்கும்பொருட்டு அழிக்குமென்க. வளைக் கைகொண்டு-வளையலணிந்த தன் கையால்; கொண்டு: மூன்றாம் வேற்றுமைச் சொல்லுருபு. அரும்ப காட்ட இருந்து (தலைவி) கைகொண்டு கூடல் வளைக்கும்; சுழிக்கும்; அழிக்குமெனக் கூட்டுக. ௧௭

### கிளியை நோக்கிக் கூறல்

**297.** தீட்டாத கூர்மைநின் செவ்வாய் கவருந் தினைக்குரல்கண்
டோட்டா திருந்த வுதவிக் குதவி யுயர்விசும்பிற்
பூட்டாத நன்னுதற் பொற்றொடி யார்புனங் காவலென்ன
மாட்டாய்கொல் பைங்கிளி யேவல்லை யேசென்று மன்னவற்கே.

(கு - ரை.) தினைக்குரல் - தினைக்கதிர். உதவி - பதில் உதவியாக. விசும்பில் பூட்டாத (வில்) நல்நுதல் - வானவில்லையொத்த நல்ல நெற்றியையுடைய; 'பூட்டாத வின்னுதல்' என்று பாடமிருப்பின் சிறக்கும். 'பூட்டாத விற்குனித்து' (தண்டி-ருக.) என வருதல் காண்க. பொற்றொடியார் - தலைவியும் பாங்கியும். காவல் - காவல் புரிகின்றனர். வல்லை-விரைவாக. கிளியே! உதவிக்கு உதவியாக வல்லைசென்று மன்னவற்குக் காவலென்னமாட்டாய்கொல்? எனக் கூட்டுக. கஅ

### சூளுறவு பொய் என்றல்

*[தலைவன் கூறிய உறுதிமொழி பொய்த்தது என்று தலைவி கூறுதல்]*

**298.** புறந்தாழ் விரிசினைப் புன்னையங் கானல்மென் பூந்துறைவர்
சிறந்தாழ் கருங்கடல் தெய்வமுந் தீதுகொல் சிந்தைஎன்நாண்
துறந்தாவி சோர அவருற்ற நாளுற்ற·சூள்முழுதும்
மறந்தா ரிருக்க மறவாத நம்மை வருத்தியதே.

(கு - ரை.) புறம் தாழ் விரிசினை - நாற்புறத்தும் தாழ்ந்து விரிந்த கிளைகளையுடைய. கானல் - கடற்கரைச்சோலை. துறைவர்: தலைவர்; அவரது கடலின்கணுள்ள வருணனாகிய தெய்வமும் என்க; உம்மை: துறைவர் தீயவராதலேயன்றித் தெய்வமும் தீயதாயிற்று என்னும் பொருளுணர நின்றது. என் சிந்தையையும் நாணையும் துறந்து ஆவிசோரும்படி வருத்தியது என இயைக்க. அவர்: தலைவர். உற்றநாள்-இயற்கைப் புணர்ச்சியில் என்னைக் கூடிய முதற்கூட்டத்தன்று. உற்ற சூள் - 'இமைப்போதும் நின்னைப், பிரியேன் மறந்தும் பிரிவுறின் மாய்கஎன் பேரிசையே' (கஅ) என்று கூறிய உறுதிமொழி. மறந்தார் - மறந்தவராகிய தலைவர்; வினையாலணையும்பெயர். இருக்க-வருத்தமின்றி இருக்க. மறந்தாரிருக்க நம்மை வருத்தியதாகலின் தெய்வமும் தீதுகொல் என முடிக்க.

(வே - ம்.) மென்னுண். துறந்தாவி சோர்வதென் என்றற்றை காளுற்ற ; எம்மை. இ - வி. கடுந. கக

### மடமை கூறியது

*[தலைவனை நம்புதற்குக் காரணமாயிருந்த தன் அறியாமையைத் தலைவி கூறுதல்]*

**299.** விடவா யரவை மிதித்து மதித்த விலங்கன்றியே
நடவா இரவி னடந்தநங் காதலர் நம்மையினிக்
கடவா ரெனநினைந் தேனிங்ங னானதென் கண்ணுமெய்யும்
மடவா ரறிவதுண் டோவுர வோர்செயும் வன்கண்மையே.

(கு - ரை.) மதித்த விலங்கு - கொடுமையாலும் வலிமையாலும் மதிக்கத்தக்க புலி யானை முதலிய விலங்குகள். நடவா - மக்கள் நடத்தற்கியலாத. கடவார் - கைவிடார். 'இங்ஙன் ஆனது' என்றது, நீர் பாயுங் கண்ணும் பசலைகொண்ட மெய்யுமாக ஆயினமையை (உகo). மடவார் - அலர் தூற்றும் மகளிர், அறிவிலார். உரவோர் - தலைவர், அறிவுடையோர். வன்கண்மை - அருளாமையாகிய கொடுமை, வீரச்செயல். ஈற்றடி இரட்டுற மொழிதல். மிதித்து நடந்த காதலர் கடவாரென நினைந்தேன் (ஆதலின்) கண்ணும் மெய்யும் இங்ஙன் ஆனது ; (இவ்வாறு) உரவோர் செயும் வன்கண்மையை மடவார் அறிவதுண்டோ? எனக் கூட்டுக. 'ஆனது' என்பதனைக் கண்ணொடும், மெய்யொடும் தனித்தனிக் கூட்டுக. உo

(வே - ம்.) மிதித்துத் தவிர. இ - வி. கடுந.

### தலைவி தன்னுள்ளே சொல்லியது

**300.** மாயக் கலவி மணந்தகன் றார்திரு மார்பகலம்
தோயப் பெறாது சுடுகின்ற மேனி துறந்தவர்தாம்
ஆயத்து நின்று வருந்திய வென்னை யணைத்தணைமேல்
சாயக் குளிருமின் றேயவர் சாரல் தழைப்படுத்தே.

(கு - ரை,) மாயக்கலவி மணந்து - வஞ்சனையால் புணர்ச்சி பெற்று. தோய்தல் - தழுவல். சுடுதல், காமத்தீயால் என்க. அகன்றார், துறந்தவர் : தலைவர். ஆயத்து - பாங்கியரிடையில். அணைமேல் - படுக்கையின்மீது. சாய - சாய்ந்ததால். தழை படுத்து - தழையைப் பரப்பி.

அப்பரப்பப்பட்ட அணைமேல் துறந்தவர் என்னை அணைத்துச் சாயச் சுடுகின்ற மேனி இன்றே குளிரும் எனக் கூட்டி உரைக்க.

(வே - ம்.) துறந்தவர்தம், தேயத்து நின்று வரு நதி நீரில் திளைத்தனமேல்; தளைப்படுத்தே. இ - வி, கஙரு. உக

தலைவிக்கு அவன் வரவு பாங்கி சாற்றல்

*[அவன் வரவு—தலைவன் வந்தமையை]*

**301.** சந்தார் வனமுலை தங்கும் பசப்புந் தனிமையுநின்
சிந்தா குலமுஞ் சிதையும் படிசெஞ் சிறைவண்டுசூழ்
கொந்தா ரலங்கற் குழலணங் கேதங் குறைமுடித்து
வந்தார் விரைய மணிநெடுந் தேரில்நம் மன்னவரே.

(கு - ரை.) சந்து ஆர் வனமுலை - சந்தனக்குழம்பு பூசப்பட்ட அழகிய முலைமீது. தனிமை - தலைவனைப் பிரிந்திருந்தமை. சிந்தா குலம் - மனத்துன்பம். கொந்து ஆர் அலங்கல் - பூங்கொத்துகள் நிறைந்த மாலையை யணிந்த. குழல் அணங்கே - கூந்தலையுடைய கடவுட் பெண்ணையொத்த தலைவியே. குறை - காரியத்தை. (உஅ0, உஅக, உஅஉ) அணங்கே! நம் மன்னவர் சிதையும்படி முடித்துத் தேரில் விரைய வந்தார் எனக் கூட்டுக.

(வே - ம்.) அழியும்படி; சிறை வண்டினஞ்சேர். இ - வி. கஙரு.

வந்தவன் தன்னொடு நொந்து வினுதல்

*[பாங்கி கூற்று]*

**302.** இங்கென் னிளங்கொடி யிங்ஙனம் வாடிநின் றேங்கவுந்நீர்
தங்கவும் நெஞ்சந் தரித்தது வோதரி யாதநெறி
கங்குலும் நண்பக லுங்கட வாவருங் காதல்கொண்ட
மங்கையர் கண்ணுமுண் டோபெரி யோர்செய்யும் வன்கண்மையே.

(கு - ரை.) இளங்கொடி: தலைவி. தங்கவும் - பிரிந்திருக்கவும். தரித்ததுவோ - உடன்பட்டதோ. தரியாத நெறி - பொறுக்கவொண் ணாத முறைமையுடைய காதல். கங்குலும் - இரவினையும். கடவா - கடத்தற்கரிய, இயல்புடையதும் தரியாத நெறியுடையதுமாய அரிய காதல் என்க. மங்கையர் என்றது தலைவியை. வன்கண்மை - அரு ளாமையாகிய கொடுமை (உகக). உரு

### வளை கொடுத்துழிக் கூறியது

*[தலைவன் தந்த வளையலைத் தோழி தலைவியிடம் கொடுக்குங்கால் கூறியது]*

**303.** முச்சங்க வண்டமிழ் போல்மொழி யாய்நம்மை முன்னுறவாய்
அச்சங் கடிந்த வருங்கடற் சேர்ப்ப ரணியநல்கும்
இச்சங்க மன்னையர் கொண்டிடுந் தோறு மிராதிரங்கும்
கைச்சங்கம் போலல்ல வேகழ லாதொரு காலத்துமே.

(கு-ரை.) 'கூடலின் ஆய்ந்தஒண் தீந்தமிழ்' (திருக்கோவையார்) என்றும், 'தேருந்தொறும் இனி தாம் தமிழ்' (தஞ்சை. ருகூ.) என்றும் தமிழை இனிமையுடைய மொழியெனக்கூறியிருத்தலின் 'தமிழ்போல் மொழியாய்' என்றாள் தலைவியை. உறவுஆய் - நம்மாட்டு அன்புடையவனாய். அச்சம் கடிந்த சேர்ப்பர் : 'கார்க்குன்றென எதிரும் கடவாரணம் காய்ந்தவரே' உடுசூ. 'சீற்றம் சிறந்த களிற்றுருவாய் நம்மைத் தேடிவந்த, கூற்றம் கடிந்த நங்கோமான்' - உடுகூ, என்பனவற்றால் அச்சங் கடிந்தமை அறிக. கடிந்த-நீக்கிய. சேர்ப்பர் : தலைவர். அணிய-அணியும்பொருட்டு. சங்கம் - சங்கு வளையல். கொண்டு - விலைக்கு வாங்கி. இராது - கையில் தங்காமல் கழன்றோடுகின்ற. இரங்கும் - ஒலித்தலையுடைய. கைச்சங்கம்: அன்னையர் இட்ட வளையல். மொழியாய்! சேர்ப்பர் நல்கும் இச்சங்கம் ஒருகாலத்தும் கழலாது; (ஆதலின்) இடுந்தோறும் இராது (கழலும்) அன்னையர் (தந்த) கைச்சங்கம்போல் அல்ல எனக் கூட்டுக. தலைவன் வந்துவிட்டமையால் இனி உன் உடல் இளைக்காது என்பது கருத்து. உச

### ஒருவழித் தணத்தல் முற்றும்

## கச. வரைவு இடைவைத்துப் பொருள்வயிற் பிரிதல்

*[மணம் செய்துகொள்ளுதற்கு இடையே தலைவன் பொருள் தேடுதற்குப் பிரிதல்; வைத்து; ஒரு சொல்நடை. இடை வைத்து என்பதற்கு, இடையீடாக நீக்கிவைத்து என்பர்; தொல். களவு. சூ. உக, நச்.]*

என் பொருட்பிரிவு உணர்த்து ஏந்திழைக்கு என்றல்

*[யான்பொருள் காரணமாகப் பிரிதலைத் தலைவிக்கு உணர்த்து வாயாக என்று தலைவன் பாங்கிக்கு உரைத்தல்]*

304. திரைவான் முழக்கின் மணிமுர சார்ப்பத் திருந்திழையார்
விரைவான் மலர்சிந்த வெண்மணல் பந்தரில் வெந்தழன்முன்
வரைவான் விரும்பி யிருநிதிக் கேக வலித்தவண்ணம்
உரைவான் மலர்க்குழ லாள்வருந் தாவண்ண மொண்ணுதலே.

(கு - ரை.) *திரை வான் முழக்கின்* - கடலினது பெரிய ஒலியைப்போல. *மணி* - அழகிய. *ஆர்ப்ப* - ஒலிக்க. *திருந்திழையார்* - மகளிர். *விரை வான் மலர் சிந்த* - மணம்பொருந்திய சிறந்த பூக்களைத் தூவ. *தழல்* - வேள்வித்தீ. *வரைவான்* - மணஞ்செய்துகொள்ளும் பொருட்டு. *இருநிதிக்கு* - பெருஞ்செல்வம் தேடி வரற்கு. *வலித்த* - எண்ணிய. *உரை* - சொல்வாயாக. *வால்* - வெள்ளிய. *குழலாள்* : தலைவி. *ஒண்ணுதலே* - ஒளியார்ந்த நெற்றியையுடைய தோழியே. ஒண்ணுதலே! ஆர்ப்ப சிந்த விரும்பி வலித்த வண்ணத்தை குழலாள் வருந்தாவண்ணம் உரையெனக் கூட்டுக. மணச் சடங்குகளுள் மகளிர் மலர் சிந்தலும் ஒன்றாகும். க

நின் பொருட்பிரிவு உரை நீ அவட்கு என்றல்

*[தோழி, தலைவனை நின்பொருட் பிரிவைத் தலைவிக்கு நீயே கூறு என்று சொல்லுதல்]*

305. துஞ்சத் தகும்பிடி யென்றுதன் சாரல் துணைக்களிறு
மஞ்சைத் தழுவும் வளமலை நாட வரைவையுன்னி
நெஞ்சத் துயிரொத்த வாஞ்சையை நீத்து நிதிக்ககலும்
வெஞ்சொற் பகரும் விரகுவல் லாருள்ளில் வேறில்லையே.

(கு - ரை.) *துஞ்சத்தகும் பிடி என்று* - தூங்குகின்ற பெண் யானை யென்று எண்ணி. *துணைக்களிறு* - அதன் கணவனாகிய ஆண்

யானை. மஞ்சை - முகிலை. களிறு, மஞ்சைப் பிடியாக எண்ணித் தழுவும் என்றது மயக்க அணியாம். நாட: தலைவ. வரைவை உன்னி - மணம் புரிய எண்ணி. வாஞ்சையை நீத்து - அன்பைக் கைவிட்டு. வெஞ்சொல் - பிரிவாகிய கொடுஞ்சொல். விரகு - வல்லமை. உன்னில் - உன்னைக் காட்டிலும். ஆதலின் நீயே உரை என்பது கருத்து. நின் வரையிலுள்ள களிறும் பிரிவுத் துன்பத்தால் மஞ்சைப் பிடியென மயங்கும் நாடனுதலால் நீ தலைவியைப் பிரிதல் தகாது என்பது குறிப்பு. நாட! உன்னி நீத்து அகலும் சொல் பகரும் வல்லார் உன்னில் இல்லையெனக் கூட்டுக. உ

நீடேன் என்று அவன் நீங்கல்

*[காலந் தாழ்க்காது விரைவில் வருவேனென்று பாங்கியிடம் கூறித் தலைவன் பிரிதல்]*

**306.** மதிமுற் றியதன்ன வாண்முகத் தாளை வரையவல்லே
நிதிமுற்றி மீள்குவ னீடநில் லேனெய்த னீலவுண்கண்
நுதிமுற் றியகுழ லுண்ணிடை யாயெதிர் கொண்டுதுங்கள்
பதிமுற்றி மங்கலம் பாடிநின் றாடப் பரிசிலரே.

(கு - ரை.) மதி முற்றியது அன்ன - முழுமதியையொத்த. வாள் - ஒளிபொருந்திய. வரைய - மணக்க. வல்லே - விரைவாக, மீள்குவன். நிதிமுற்றி - பொருள் திரட்டி. நீட - காலம் நீட்டிக்கும் படியாக. நெய்தல் மலரையொத்த நீலநிறம் பொருந்திய கண் என்க. உண்கண் - மையுண்டகண். நுதி முற்றிய குழல் - நுனி சுருண்ட கூந்தல். கண்ணையும் குழலையுமுடைய, இடையாய் என்க; என்றது தோழியை. பதிமுற்றி - ஊரைச் சூழ்ந்து. பரிசிலர் - இரவலர். இடையாய்! நில்லேன்; வரைய நிதிமுற்றிப், பரிசிலர் எதிர்கொண்டு பதி முற்றிப் பாடி ஆட வல்லே மீள்குவன் எனக் கூட்டி உரைக்க. ௬

சூளினை நினைந்து உரைத்தல்

*['வல்லே மீள்குவன்; நீடநில்லேன்' (௩௦௬) என்று தலைவன் கூறிய உறுதிமொழியை எண்ணித் தோழி அவன் செலவுக்கு உடன்பட் டுரைத்தல்]*

**307.** வல்லே வருக பொருண்மேற் பிரிக வரைகவுள்ளேன்
நில்லே னெடிதென்று நீயிங் குரைத்த நிழல்வளைந்த
சொல்லே தவறிற் சுவறுமுந் நீர்மஞ்சு தூன்மறக்குங்
கல்லே வுதையங் கடலே யிலைநங் கதிரவற்கே.

(து - ரை.) வல்லே - விரைவாக. வரைக உள்ளேன் நில்லேன் நெடிது என்று - மணம்புரிய எண்ணியுள்ள யான் பிரிந்து நீட்டித்து நில்லேனென்று; 'வரையவல்லே, நிதிமுற்றி மீள்குவன் நீடநில் லேன்' - (௩0௬) நிழல் விளைந்த - அன்பு பொருந்திய. முந்நீர் சுவறும் - கடல் வற்றும். மஞ்சு சூல் மறக்கும் என்றது, மழை பெய்யாது என்றபடி; மஞ்சு - முகில்; சூல் - கருப்பம். கல் - மலை. ஈண்டுக் கல் மேற்கையும், கடல் கிழக்கையும் குறிப்பால் உணர்த்தினவென அறிக. கதிரவன் - ஞாயிறு. (தலைவ!) சொல் தவறில் சுவறும் - மறக்கும்; கதிரவன் மேற்கே தோன்றுவான்; (ஆதலின்) வருக; பிரிகவெனக் கூட்டுக. ௪

பாங்கி தலைவிக்கு அவன் செலவு உணர்த்தல்

308\. ஊரம் பலுமல ரும்முன்னை நாளு மொறுப்பதஞ்சி
ஆரம் பலவொன் றகன்மலை நாட ரவிர்மலர்த்தேன்
சோரும் புயலன்ன வார்குழ லாய்நின் துணைமுலைக்கு
நேரும் பரிசு நிதிக்ககன் றேகினர் நீள்சுரமே.

(து - ரை.) அம்பல் - மறைத்துக் கூறும் பழிச்சொல். அலர் - வெளிப்படக் கூறும் பழிச்சொல். 'அம்பலும் அலரும் களவு -' (இறையனார் அகப்பொருள் - உ௨.) என்னும் நூற்பா உரையைக் காண்க. ஒறுத்தற்கு அஞ்சி - நின்னை வருத்துதலைக் கண்டஞ்சி. ஆரம் பலவு ஒன்று - சந்தனமரங்களும் பலாமரங்களும் பொருந்திய; பலவகை மாலைகளை யணிந்த நாடர் எனலுமாம். அவிர் - விளங்கு கின்ற. புயல் - முகில். வார் - நீண்ட. பரிசு நேரும்நிதிக்கு - பரிச மாகக் கொடுத்தற்குரிய பொன்னைக் கொணர்தற்கு; பரிசு : பரிசம் என்பதன் கடைக்குறை; பெண்கொள்வோர் அவள் தமர்க்கீயும் வரிசையே பரிசம் எனப்பெறுவதென்க. சுரம் - நீரும் நிழலுமற்ற பாலைநிலவழி. குழலாய்! நாடர் நிதிக்குச் சுரம் ஏகினர் எனக் கூட்டுக. ரு

பிரிவு ஆற்றமை

*[தலைவி கூற்று]*

309\. வல்லார் களப முலைமேற் கலைவட முந்திருத்தி
அல்லார் சுரிகுழல் மோந்தளி யோட்டி யயாவுயிர்த்துப்
புல்லா நினைத்ததெல் லாமுகத் தாலெம் புரவலர்முன்
சொல்லா திருந்திலர் சொல்லா ததுவெஞ் சுரமொன்றுமே.

(கு - ரை.) வல் ஆர் களபம் முலை - சூதாடு கருவியையொத்த சந்தனக்குழம்பணிந்த முலை. கலை வடமும் - மேலாடையையும் மணிமாலைகளையும். திருத்தி - திருந்த அணிந்து. அல் ஆர் சுரிகுழல் - இருளையொத்த நுனிசுருண்ட கூந்தலை; குழலை மோத்தல் அதன் நறுமணம் கருதியென்க; 'அரிவை கூந்தலின், நறியவும் உளவோ நீயறியும் பூவே' (குறுந் - க.) அளி - வண்டுகளை. அயாவுயிர்த்து - பெருமூச்சுவிட்டு. புல்லா - தழுவி; செய்யா என்னும் வினையெச்சம். முகத்தால் - முகக்குறிப்பால்; முகத்தால் சொல்லலை 'அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் - கடுத்தது காட்டும் முகம்' - என்னும் பொதுமறை (எகசு)யால் அறிக. திருத்தி மோந்து ஓட்டி உயிர்த்துப் புல்லிய நினைப்பெல்லாம் பிரிவை முன்னிட்டே என்பதைக் குறிப்பால் அறிந்தே னென்பாள் 'சொல்லாதிருந்திலர்' என்றும், செல்லுமிடம் ஒன்றே அறிந்திலேன் என்பாள் 'சொல்லாதது வெஞ்சுரமொன்றுமே' என்றும் கூறினள். புரவலர் - தலைவர். சுரம் - பாலைநிலவழி. தலைவன் பிரிய எண்ணியதைத் தலைவி குறிப்பாலுணர்தலைக் கலித்தொகை - ச. எ. முதலிய பாடல்களில் விளக்கமாக அறிக. சு

தலைமகள் இரங்கல்

**310.** பாவி யெனக்குப் பரிசங் குறித்தநம் பல்கிளையோ
நீவி யதற்கென்னை நீத்தவ ரோஅவர் நீத்தபின்னும்
ஆவி தரித்துய்யு·மாசுடம் போவிங் கறிகிலமால்
யாவர் மடப்பிடி யேகொடி யாரிவ் விருநிலத்தே.

(கு - ரை.) பாவியாகிய எனக் கென்க. பரிசம்: மகட்கொள்வோர் மணமகட்கு ஈயும் ஆடை யணி அரும்பொன் முதலியன. (கூ0அ). கிளை: தாய் தந்தை தமையன் முதலியோர். அதற்கு என்னை நீவி என இயைக்க. அதற்கு-அப்பரிசப் பொருள் தேடும்பொருட்டு. நீவி - கைவிட்டு. நீத்தவரோ - பிரிந்த தலைவரோ. மாசு - அழுக்கு; பிரிவுத் துன்பத்தால் நீராடாமையின் மாசுபடிந்த தென்க. ஆசு எனப் பிரித்துக் குற்றம்பொருந்திய எனலுமாம். மடப்பிடியே - இளைய பெண் யானைபோன்ற தோழியே. இரு - பெரிய. மூவருங் கொடியரெனக் குறிப்பித்தபடி: உடம்பென்னும் அஃறிணை, திணை விரவி உயர்திணை முடிவு ஏற்றது. பிடியே ! இந்நிலத்தே கொடியார்

கிளையோ? நீத்தவரோ? உடம்போ? யாவர்? அறிகிலம் எனக் கூட்டுக. எ

பாங்கி வரவு அறிவுறுத்தல்

*[தலைவன் வருவானென்று பாங்கி தலைவிக்கு அறிவுறுத்தல்]*

311. கருந்தா மரையன்ன கண்கழு நீர்நிறங் காட்டஇங்ஙன்
வருந்தா தொழிமதி வஞ்சியன் னாய்நம் வளமனைக்கு
விருந்தாக நந்தமர் வேட்டெதிர் கொள்ளும் வினையுமுற்றி
இருந்தாரை வையங் கடாயின்று நாளைவந் தெய்துவரே.

(கு - ரை.) கருந்தாமரை அன்ன கண் என்றது இல்பொருளுவமை. தாமரையன்ன கருங்கண் என்று பண்பைப் பிரித்துக் கூட்டலுமாம். கழுநீர் - செங்குவளை; அதன் நிறங்காட்டலாவது, அழுதலால் கண் சிவத்தல். வருந்தாதொழி - வருந்தற்க. மதி: முன்னிலையசை. வஞ்சி அன்னாய் - வஞ்சிக்கொடிபோன்ற தலைவியே. நம்தமர் - நமது உறவினராகிய தலைவர். வேட்டு எதிர்கொள்ளும் - விரும்பி மேற்கொண்ட. முற்றி - செய்து முடித்து. இருந்தாரை வையம் கடாய் - பெரிய உருளைகளையுடைய தேரைச் செலுத்தி. தாரை-உருளை; வையம்-தேர். இன்றல்லது நாளையென்க. அன்னாய்! கண்காட்ட ஒழி; தமர் முற்றிக் கடாய் விருந்தாக எய்துவர் எனக் கூட்டுக. அ

வன்போறை எதிர்தல்

*[ஆற்றியிருந்த தலைவி அப்பொறுமை யிழந்து தோழியொடு மாறுபட்டுக் கூறுதல்; எதிர்தல்—மாறுபடுதல்]*

312. போனார் வருக இருநிதி தேடும் பொருளுமுற்றி
யானாத அன்பொடென் ஆவியும் நிற்க அவரகன்ற
கானா வதுவெங் கதிர்தெறும் பாலைக் கனல்கொளுந்தி
வானாளும் வற்றி மதியும்வெண் ணீறெழும் வன்சுரமே.

(கு - ரை.) போனார் - போன தலைவர். பொருள், ஈண்டுக் காரியமென்னும் பொருட்டு. முற்றி - செய்து முடித்து. போனார் முற்றி வருக என இயைக்க. ஆனாத - குறையாத. அவர்: தலைவர். கான் - காடு. வெங்கதிர் தெறும் - ஞாயிற்றின் வெவ்விய கதிர்கள் சுடுகின்ற. கனல் கொளுந்தி - தீப்பற்றுதலால். நீறு எழும் - சாம்ப

லாகின்ற. வெம்மையைத் தணித்தற்கு உரிய யாறும் மதியுமே வெதும்பி நீரூதற்குரிய கொடிய சுரமாகும் அவரகன்ற காடு; அதில் போனார் பொருள் முற்றி இடையூறின்றி வருவாராக; அது வரை என் ஆவியும் நிலைப்பதாக என்று, 'மனைக்கு.....எய்துவர்' (௩௧௧) என்று கூறிய தோழியொடு தலைவி மாறுபட்டுக் கூறி வருந்தி யமை காண்க. ௯

### வற்புறுத்தல்

*[தலைவன் மீண்டு வந்துவிடுவானென்று தோழி தலைவிக்கு வற்புறுத்திக் கூறுதல்]*

**313.** பண்ணார் பனிமொழிப் பைந்தொடி யாய்வெந்த பாலைவனம்
எண்ணா திருநிதிக் கேகினர் காண்ப ரெதிர்ந்தவலின்
கண்ணார் சிறுபுனல் மெய்யுறும் வேட்கை கரந்துகலை
யுண்ணா தருணத்தை யுண்டது போலநின் றூட்டுவதே.

(து - ரை.) பண்ஆர் பனிமொழி - இசைபொருந்திய குளிர்ந்த சொல்லையுடைய. பைந்தொடியாய் - பசும்பொன்னாலாகிய வளையலை யணிந்த தலைவியே: வனம் - வனத்தின் கொடுமையை. ஏகினர் - சென்றவராகிய தலைவர்; வினையாலணையும் பெயர். எதிர்ந்து காண்ப ரென்க. எதிர்ந்து - எதிர்ப்பட்டு. அவலின்கண் ஆர் - பள்ளத்தில் பொருந்திய. புனல் - நீரை. வேட்கை - நீர் வேட்கையை. கரந்து - மறைத்து. கலை - ஆண்மான். அருணத்தை - பெண்மானை. பைந் தொடியாய்! ஏகினர்; கலை கரந்து புனல் உண்ணாது போல நின்று அருணத்தை ஊட்டுவதைக் காண்பர் எனக் கூட்டுக. கலை உண்ணா தாயின் அருணமும் உண்ணாதாகலானும், இரண்டும் உண்ணற்குப் புனல் போதாமையானும் கலை, வேட்கையுற்றும் அதனைக் கரந்து தான் உண்பதுபோலநின்று அருணத்தை ஊட்டிற்றென்க. இக்கலை யின் அன்பைக் கண்ட தலைவனும் நின்மேலன்புற்று இடைச்சுரத்தி னின்றும் மீள்வான்; வருந்தற்க என்று பாங்கி வற்புறுத்தவாறு காண்க. 'சுனைவாய்ச் சிறுநீரை எய்தாதென் றெண்ணிப், பிணைமான் இனிதுண்ண வேண்டிக் - கலைமாத்தன், கள்ளத்தின் ஊச்சுஞ் சுர மென்பர் காதலர், உள்ளம் படர்ந்த நெறி.'—ஐந்திணையைம் பது-௩௮.

### பருவம் கண்டு பெருமகள் புலம்பல்

*[தலைவன் மீண்டு வருவேனென்று குறிப்பிட்ட கார்காலம் வந்தமை கண்டு தலைவி வருந்துதல்]*

314. தார்கால மன்றலங் கொன்றையங் கானல் தடஞ்சிறைவன்
கூர்கால நாரை யுடன்குரு காலக் கொழுங்கயற்கண்
நீர்கால ஆடகம் என்னிறங் காலப் பிறங்குமழைக்
கார்காலம் வந்தது வாரார்கொ லின்னமுங் காதலரே.

(து - ரை.) கொன்றை மன்றல் அம் தார் கால - கொன்றை மரங்கள் மணம்பொருந்திய அழகிய மாலைபோன்ற பூக்களை மலர. கானல் - கடற்கரைச் சோலையில். தட - பெரிய. வன் கூர் கால - வலிய கூரிய கால்களையுடைய. குருகு ஆல - பிற பறவைகளும் ஒலிக்க. நீர் கால - நீரைச் சிந்த. என் நிறம் ஆடகம் கால - என்மேனி பசலை பூத்துப் பொன்நிறங்காட்ட; ஆடகம் - பொன் (௧௪௦.) பிறங்கு மழை - மிக்க மழை பெய்தலையுடைய காதலர் வரமாட்டாரோ என இயைக்க. கக

### பாங்கி புலம்பல்

315. குணங்கெட வற்றிய கொம்புகள் யாவுங் குழைத்தமழைக்கு
உணங்குவ தின்றொ ஒருகொம்பு மேயொரு கொம்புவெம்பேய்க்
கணங்கடி கொண்டுல வுங்கங்குல் வாடைக் கனல்கொளுந்தி
யணங்கிடில் வஞ்சியன் னீரென்சொல் வேன்மன்ன ரானவர்க்கே.

(து - ரை.) குணம் கெட - தம் பசுமைக் குணம் கெடும்படியாக. கொம்புகள் - பூங்கொம்புகள். குழைத்த - தழைத்தன. உணங்குவது - வாடுவது. ஒரு கொம்புமே - பூங்கொம்பையொத்த ஒரு தலைவியே. ஒருகொம்பு - பூங்கொம்பையொத்த அத்தலைவி. பேய்க் கணம் கடிகொண்டு உலவும் கங்குல் - பேய்க் கூட்டங்கள் காவல் கொண்டனபோல் திரிகின்ற இரவுப்பொழுதில். வாடைக்கனல் கொளுந்தி - வாடைக் காற்றாகிய நெருப்பில் தீய்ந்து. அணங்கிடில் - துன்புற்றால். மன்னர் ஆனவர்க்கு - தலைவர்க்கு. ஆனவர்: முதல் வேற்றுமைச் சொல்லுருபு. அன்னீர்! மழைக்கு யாவும் குழைத்த; ஒருகொம்புமே உணங்குவது; அக்கொம்பு கங்குலில் கொளுந்தி அணங்கிடில் மன்னர்க்கு என் சொல்வேன் எனக் கூட்டுக. கஉ

### இருளை வம்பு என்றல்

*[தோழி, தலைவியை நோக்கி, 'இவை காலமல்லாக் காலத்தில் தோன்றியவை; தலைவர் குறிப்பிட்ட காலமன்று; நீ வருந்தற்க' என்று கூறி ஆற்றுவித்தல்; இருளை—தோழி; வம்பு—காலமல்லாக் காலத்தில் தோன்றுவன]*

316. வழங்குங் கொடுவரி கண்டெதிர் வேழ மணிவரையின்
முழங்குங் குரலை முகிலென்று கேட்டு மொழிதளரா
அழுங்குங் குயில்கள் மயில்களினின் ருலு மரும்புமுல்லை
பழங்கண் பசலை பரந்தளுர் கூரல் பனிமொழியே.

(கு - ரை.) வழங்கும் கொடுவரி - திரிகின்ற புலியை. எதிர் - எதிர்க்கின்ற. வேழம் - யானை. மணிவரையில் - அழகிய மலையினிடத்தே. முழங்கும் குரலை - பிளிறுகின்ற ஒலியை. முகில் என்று - முகிலோசை யென்று. தளரா - தளர்ந்து. அழுங்கும் - வாயடங்கும். ஆலும் - ஆடும். பழங்கண் பசலை: உம்மைத்தொகை. பழங்கண் - துன்பம். அளுர் கூரல் - வருத்தமிகாதே. பனிமொழியே - குளிர்ந்த சொல்லையுடைய தலைவியே. கார்காலத்தே குயில் அடங்கலும், மயில் ஆலலும் இயல்பு; இதனை 'சோலை பயிலும் குயில் மழலை சோர்ந் தடங்க, ஆலு மயிலினங்கள் ஆர்த்தெழுந்த - ஞாலம், குளிர்ந்த முகில் கறுத்த' (தண்டி - அஉ.) என்பதனாலும் அறிக. பனிமொழியே! குரலைக் கேட்டு முகிலென்று குயில்கள் அழுங்கும்; மயில்கள் ஆலும்; முல்லை அரும்பும் (இவை வம்பு; இவற்றை உண்மையெனக்கொண்டு) அளுர் கூரல் எனக் கூட்டுக. கரு

### இறைமகள் மறுத்தல்

*[தோழி கூறியதை தலைவி மறுத்துக் கூறுதல்]*

317. மருவந் தனத்து மணிமுத்த மாலை வகைவிடுத்துப்
புருவந் திருத்தி மதிநுதல் நீவிப் பொருள்வயிற்போய்ப்
பருவங் குறித்து வருதுமென் ருர்சொற் பழுதென்னவோ
தெருவந் தொறும்நறும் பூவிலை மாதர் திரிகின்றதே.

(கு - ரை.) அம் தனத்து மருவு - அழகிய முலைமீது அணியப்பட்ட. மணிமாலை, முத்தமாலை யென்க. வகைவிடுத்து - ஒன்றுட

ஞென்று பின்னிக்கொண்டிருந்தவற்றை வகைப்படுத்தி. நுதல் நீவி - நெற்றியைத் தடவி ; ‘என், ஒண்ணுதல் நீவுவர் காதலர்’ - கலித்தொகை. (‘மருவம்......போய்’ ௩௦௯.) பருவம் குறித்து - தான் வருதற்குரிய காலத்தைக் குறிப்பிட்டு. என்றூர் : தலைவர். பழுது என்னவோ - பொய்த்தது என்று புகலும்பொருட்டோ. தெருவம் தொறும் - தெருக்கள்தோறும் ; அம் : சாரியை. பூ - கார்காலத்திற் பூத்தற்குரிய முல்லை முதலியன. பூவிலை மாதர் திரிகின்றது என்றது, மகளிர் பூ விற்பதால் கார்காலம் வந்துவிட்டது உண்மை; நீ வம்பெனக் கூறுதல் பொருந்தாது; அதற்குக் கார்காலத்திற்குரிய பூக்கள் விற்கப் படுவதே சான்றாகும் எனத் தோழியை மறுத்தவாறு காண்க. மாதர் தெருவந்தொறும் திரிகின்றது பழுது என்னவோ? எனக் கூட்டுக.

அவர் தூதாகி வந்தடைந்தது இப்பொழுதேனத் துணைவி சாற்றல்

*[இம்முகில் தலைவர் வருகையை முன் உணர்த்தும்பொருட்டு வந்ததெனத் தோழி தலைவிக்குக் கூறுதல்]*

**318.** பருவ மடுத்தது வந்திலர் காதல ரென்றுபைம்பொன்
உருவ மடப்பிடி யேயுயங் கேலுயங் காதவண்ணம்
பொருபகை செற்றபொற் றேரேறி வேந்தர் பொருண்முடித்து
வருவ துரைப்பமுன் னேவந்த தாலிம் மழைமுகிலே.

(கு - ரை.) பருவம் - தலைவர் வருவதாகக் குறித்த கார்ப்பருவம். பைம்பொன் உருவம் மடப்பிடியே-பசும்பொன்னையொத்த அழகினையும், இளம் பெண்யானைபோன்ற நடையினையுமுடைய தலைவியே. உயங்கேல்-வருந்தற்க. உயங்காத வண்ணம்-நீ வருந்தாதபடி. செற்ற-அழிந்த. வேந்தர்: தலைவர். முகில் - மேகம். பிடியே! அடுத்தது; வந்திலர் என்று உயங்கேல்; செற்ற வேந்தர், முடித்து ஏறி வண்ணம் வருவதை உரைப்ப இம்முகில் (அவர்க்கு) முன்னே வந்தது எனக் கூட்டுக. ௧௫

(வே - ம்.) என்றும் பைம்பொன்; தேர் வெற்றி. இ-வி. ௧௫௫.

தலைமகள் ஆற்றல்

**319.** கருங்கால வெண்குரு குங்கண்டல் வாய்விட அஞ்சுங்கொண்டல்
பொருங்கா லழிந்து புலம்பனெஞ் சேதண் புறவமயில்
ஒருங்கால மேக மிடித்துறை கால ஒலிகழலார்
வருங்காலம் வந்தது போங்கால மில்லைநம் மன்னுயிர்க்கே.

(து - ரை.) கால - கால்களையுடைய. குருகு - நாரை; 'கூர்கால நாரையுடன் குருகால' - நகந. கண்டல் வாய்விட - தாழை மலர; அதனைக் கண்டு குருகு அஞ்சுமென்க. கொண்டல் பொருங்கால் - கீழ்காற்று வீசுங்கால். புலம்பல் - புலம்பாதே. புறவம் - முல்லைநிலத்தி லுள்ள. ஒருங்கு ஆல - பல ஒன்று கூடி ஆட. உறை கால - நீரைப் பொழிய. கழலார் - வீரக்கழலையணிந்த தலைவர். வரும் - வருவதாகக் குறிப்பிட்ட. மன் உயிர் - நிலைபெற்ற உயிர்: அதற்குப் போங்காலம் இல்லையென்றது, இறவாது நிற்கும் என்றபடி. நெஞ்சே! குருகும் அஞ்சும்; (அதுவேயன்றி) ஆல கால (இவ்விதமாக) காலம் வந்தது; உயிர்க்கு (இனி) போங்காலம் இல்லை; (ஆதலின்) புலம்பல் எனக் கூட்டுக.

(வே - ம்.) புலம்பு நெஞ்சே; அறை கழலார்; உறைகாலம்; வந்ததும். இ - வி. கடுடு. கசு

தலைவன் புலம்பல்

*[பிரிந்து சென்ற தலைவன் பொருள் முற்றியபின் தலைவியை நினைந்து வருந்தல்]*

**320.** விழிகுழி யும்படி தேர்வழி பார்த்தனை வீழ்ந்துவண்டு
கொழுதிமி ருங்குழல் சோரக் கிடந்து குடங்கையின்மேல்
ஒழுகிய அஞ்சன வெள்ளத் துணங்கு மணங்கைமுன்சென்று
எழுகெனும் நெஞ்சமென் னேயவ ரோவெனி லென்சொல்லுமே.

(து - ரை.) தேர்வழி - தலைவனுடைய தேர்வரும் வழியை. அணை - படுக்கையில். கொழுது - குடைந்து. இமிரும் - ஒலிக்கின்ற. குடங்கை - உள்ளங்கை. அஞ்சனம் - மை: உணங்கும் - வாடும். வெள்ளத்து உணங்கும் என்றது நயமுடையது. அணங்கை - தலைவியை. பார்த்து வீழ்ந்து சோரக்கிடந்து உணங்கும் அணங்கை என் நெஞ்சம் எழுக எனும்; அவ்வாறெழுப்புங்கால், என்னை எழுப்புவது யார்? தலைவரோ? என்று கேட்டால் இந்நெஞ்சு என்ன பதில் சொல்லும் என்று தன் நெஞ்சு தலைவியை நினைத்துக்கொண்டு வருந்துதலைத் தலைவன் இவ்வாறு கூறினனென்க. இச்செய்யுளைத் தஞ்சைவாணன் கோவை உரையாசிரியரும், நம்பியகப்பொருள் (கஎ0) உரையாசிரியரும் எடுத்தாண்டுள்ளனர்.

(வே - ம்.) அவர் யாரெனில். இ - வி. கடுடு. கஎ

### பாகற்கு உரைத்தல்

*[பொருள்வயிற் பிரிந்த தலைவன் மீண்டு வரும்போது தேர்ப்பாகனுக்குச் சொல்லுதல்]*

**321.** மொய்யா டகமுடித் தேர்வல வாமுன் மொழிந்தவெல்லாம்
பொய்யான தென்று புலந்துரை யாடப் பொருள்விரும்பி
மையார் குழலியை வாழ்வித்த பாவி மனத்தையின்றுன்
கையாக வும்பரிக் காலா கவுமயன் கண்டிலனே.

(கு - ரை.) மொய் ஆடகம் முடி - அணுக்கள் செறிந்த பொன்னாற்செய்த தேரின்முடி. வலவா - தேர்ப்பாகனே. முன் மொழிந்த என்றது, பிரியேன் என்றது முதலாயின (கஅ, ௩0சு.) புலந்து உரை ஆட - வெறுத்துக் கூற. மையார் குழலியை - முகில்போன்ற கூந்தலையுடைய தலைவியை. வாழ்வித்த என்றது குறிப்புமொழி; துன்புறுத்தினேன் என்பது கருத்து. பாவியாகிய எனது மனத்தை யென்க. பரி - தேரிற்பூட்டிய குதிரை. அயன் - நான்முகன். கண்டிலன் - படைக்கவில்லை. மனம் மிக்க விரைவுடையதாகலின், அம்மனமே பாகன் கையாகவும் பரியின் காலாகவும் அமைந்திருப்பின், கைதூண்டக் கால் கடிதோடித் தலைவியை அடைவிக்கும் என்பது கருத்து. இதைக் கேட்ட பாகன் விரைந்தூர்தல் பயன். வலவா! ஆட வாழ்வித்த பாவியின் மனத்தைக் கையாகவும் காலாகவும் அயன் கண்டிலனே யெனக் கூட்டுக.

(வே - ம்.) புலந்துரையாடல். இ - வி. கடுநி. கஅ

### முல்லையை நோக்கிக் கூறல்

*[தலைவன் கூற்று]*

**322.** தேரிணங் குந்திரு வல்குனல் லாள்சிந்தை சேர்வதற்குக்
காரணங் கொண்டல் கறுத்ததன் றேமுன் சிவந்தநெற்றி
வாரணங் கால்கொண்டு மால்கொண்ட பேடைக்கு மண்கிளைத்துப்
பாரணங் காட்டி விடநின்று காணும் பசும்புறவே.

(கு - ரை.) தேர் இணங்கும் - தேர்த்தட்டையொத்த. திரு அல்குல் நல்லாள் - அழகிய அல்குலையுடைய தலைவி (கசசு.) சிந்தை - வருத்தம். கொண்டல் - முகில். சிவந்த நெற்றி வாரணம் - சிவந்த உச்சிக்கொண்டையையுடைய சேவல். கால்கொண்டு - காலால். மால் கொண்ட - தன்மீது காதல்கொண்ட. பேடைக்கு

பெட்டைக்கோழிக்கு. கிளைத்து - கிளறி. பாரணம் - உண்ணுதற் குரிய தீனி. பசும்புறவு - பசியமுல்லை நிலத்தின்கண்; ஏழாவது இறுதிக்கண் தொக்கது. நல்லாள் சிந்தை சேர்வதற்குக் காரணம் கறுத்ததன்று; புறவில் வாரணம் கால்கொண்டு கிளைத்துப் பேடைக் குக் காட்டிவிட (அதனை நல்லாள்) காணும்; அக்காட்சியே காரண மென்பதாம். சேவல் பேடைமீது கொண்ட அன்புதானும் தலைவன் நம்மாட்டுக் கொள்ளாது பிரிந்தனனே என்று தலைவி கருதியதாகத் தலைவன் எண்ணினனென்க. இரண்டாமடியில் பொருண் முரண் வந்திருத்தல் காண்க.

(வே - ம்.) சோர்வதற்கு. கக

மேகத்தோடு சொல்லல்

*[தலைவன் கூற்று]*

**323.** கிளைத்துக் கிளைத்தென்னைக் கேட்குந் தொறுங்கலுழ் கெண்டையு
வளைத்துக் கிடந்த வரிமணற் கூடலும் வண்ணமெல்லாம் [முன்
விளைத்துக் கிடந்த பசலையு மாயுள்ளம் விம்மிவிம்மி
இளைத்துக் கிடந்தவட் கென்சொல்ல மேகங்கள் முன்செல்வதே.

(து - ரை.) கிளைத்துக்கிளைத்தென்றது, பன்முறை கேட்டலைக் குறிப்பித்தபடி. என்னை என்றது, தலைவனை. கலுழ்கெண்டையும் - கலங்குகின்ற கெண்டை மீனையொத்த கண்களும். வளைத்தல் - சுழித்தல். வரிமணல் - அழகிய மணலின்கணுள்ள. கூடல் : கஅஎ, உகரு. வண்ணமெல்லாம் - மேனியின் அழகு முழுவதும் (கெடும்படி). கிடந்தவட்கு - தலைவிக்கு. வினைமுற்றி மீளுந் தலைவன் தனது தேரின்முன்னே செல்லுகின்ற முகிலை நோக்கி இவ்வாறு கூறுகின் றானென்க. தலைவி கெண்டையும், கூடலும், பசலையுமாய் விம்மி இளைத்துக் கிடக்கின்றா ளென்பது தலைவன் கருத்து.

(வே - ம்.) கிளைத்துக் கிடந்தென்னை ; இளைத்துக் கிடந்தவர்க்கு இ - வி. கடுடு. உo

தலைமகன் வரவு அறிவுறுத்தல்

*[தலைவன் வருகின்ற தேரொலியைக் கேட்ட தோழி தலைவிக்கு அவன் வரவினை அறிவுறுத்தல்]*

**324.** மருண்முற் றியகளி வண்டமர் காந்தள் மலர்ந்ததுகண்டு
இருண்முற் றியகுழ லேந்திழை யாயினி யேலிளையேல்
பொருண்முற் றிவந்து புகுந்தனர் போறுநம் பொன்னகர்வாய்
அருண்முற் றியமனத் தன்பர்தந் தேர்மணி யார்க்கின்றதே.

(கு - ரை.) மருள் முற்றிய - தேனுண்டலால் மயக்கம் மிகுந்த. களி வண்டு அமர் - களிப்பையுடைய வண்டுகள் பொருந்திய. காந்தள் மலர்தல் கார்காலத்திலாதலின், அதனைக் கண்டு தலைவன் குறித்த பருவம் வந்தும் அவன் இன்னும் வரவில்லையேயென்று இளைக்காதே என்றுளென்க. இருள் முற்றிய குழல் ஏந்திழையாய்- இருள் சூழ்ந்ததையொத்த கூந்தலையுடைய தலைவியே. அருள் முற்றிய - அருள் முதிர்ந்த. அன்பர் : தலைவர். ஆர்க்கின்றது - ஒலிக்கின்றது. ஏந்திழையாய் ! கண்டு இளையேல்; அன்பர் தேர்மணி ஆர்க்கின்றது ; (ஆதலின்) முற்றிப் புகுந்தனர் எனக் கூட்டுக. போலும் : அசை. உக

நினைத்தமை வினுதல்

*[பிரிந்து சென்ற இடத்தில் தலைவியை நினைத்ததுண்டோ என்று பாங்கி தலைவனை வினுதல்]*

325. கடந்தந்த வெங்கைக் களிற்றுவெங் கானங் கடந்துசென்ற
தடந்தந்த தாமரைத் தண்புன னாட்டுத் தடங்கடலின்
விடந்தந் தமுதந் தருமட நோக்கிவள் மேவமனத்து
இடந்தந் தறிவதுண் டோவொரு நாளெம் மிறையவனே.

(கு - ரை.) கடம் தந்த வெம்கை களிற்று வெம்கானம் - மதஞ் சொரிகின்ற வெவ்விய துதிக்கையையுடைய யானைகளையுடைய கொடிய காட்டை. தடம் தந்த - குளங்களில் பொருந்திய. தண் - குளிர்ந்த. விடம்.........நோக்கு : டு, உ௩. இவள் மனத்து மேவ - தலைவி நின் மனத்தின்கண்ணே வந்து தங்க. மனத்து இடந்தராவது, நினைத்தல். இறையவனே : தலைவனே. இறையவனே ! சென்ற நாட்டின்கண் இவள் (நின்) மனத்து மேவ ஒருநாளாவது இடந்தந்தது உண்டோ ? எனக் கூட்டுக. உஉ

(வே - ம்.) தடங்கடல் நீர் ; ஒருநாள் நம். இ. வி. கடுடு.

தோழிக்கு உற்றது உரைத்தல்

*[தலைவன், தான் தலைவியை நினைந்தமையைத் தோழிக்குச் சொல்லுதல்]*

326. கோவையை வென்றசெவ் வாய்க்கொடி யேபொருள் கூட்டவென்
தேவையை மேற்கொண்டு தீவினை யேன்சென்ற சென்றவிடம் [மு
யாவையு முங்க ணிளமரக் காவு மிறைத்தகுன்றும்
பாவையு நீயும் பரிமளச் சோலையும் பண்ணையுமே.

(கு - ரை.) கோவையை - கோவைப்பழத்தை. கொடியே: தோழியே. தேவையை - செய்யவேண்டுவதாய தொழிலை. அடுக்கு, தலைவன் சென்ற இடத்தின் பன்மையை உணர்த்திற்று. இள மரக்கா - இளமரங்கள் பொருந்திய சோலை. இழைத்த குன்று - செய்குன்று. பாவை: தலைவி. நீ என்றது தோழியை. பண்ணை - மகளிர் விளையாட்டிடம். தலைவியை நினைத்த துண்டோ என்று கேட்ட தோழிக்குத் தலைவன், தலைவிமட்டு மன்று; என் நினைவின் மிகுதியால் யான் சென்ற இடங்களெல்லாம் உங்கள் கா முதலியன வாகவே காட்சி யளித்தன என்றானென்க. உரு

(வே - ம்.) கூட்ட வென்னும். இ-வி. கஙுரு.

தலைவியோடு கூறல்

*[தலைவன் தான் சென்ற இடத்துக் கண்ட பொருளெல்லாம் தலைவியை நினைவூட்டியமையைக் கூறுதல்]*

**327.** விழிகாட்டு நவ்வி மயிலியல் காட்டு மிழற்றுங்கிள்ளை
மொழிகாட்டு முல்லை முகிழ்நகை காட்டு முதுநதியின்
சுழிகாட்டு முந்தி துணைமுலை காட்டும் பிணையிளநீர்
கழிகாட்டி னுந்தண் கழனிநன் னாட்டினுங் காரிகையே.

(கு - ரை.) நவ்வி-மான். இயல்-சாயல். மிழற்றும் கிள்ளை- பேசுகின்ற கிளி. முல்லை முகிழ் - முல்லை யரும்பு. நகை - பல். உந்தி - கொப்பூழ். பிணை - ஒன்றோடொன்று இணைந்துள்ள. கழி- தலைவன் சென்ற. காரிகையே - அழகிய தலைவியே! யான் சென்ற காட்டினும் நாட்டினு முள்ள நவ்வி முதலியவை நின் விழி முதலிய வற்றைக் காட்டி நினைவூட்டின என்றானென்க. நவ்வி முதலியவை காட்டிற்கும், இளநீர் நாட்டிற்கும், நதி ஈரிடத்திற்கும் உரியன வென உணர்க. உசு

(வே - ம்.) தன் கழனி.

ஆற்றுவித்திருந்தமை தலைவன் வினுதல்

*[யான் வருந்துணையும் தலைவியை எவ்வாறு வருத்தந் தணி வித்து வைத்திருந்தாயென்று தலைவன் தோழியை வினவல்]*

**328.** சிமையார் தடவரைச் சேணெறிச் சென்றருஞ் செம்பொருளுக்கு
உமையா னெழிந்தங் குறைந்தஅந் நாளி னுடனிருந்தும்
இமையா விழிக்கின்ற இத்துணைப் போதினும் என்னையன்றி
அமையா அணங்கினை யெவ்வாறு நீதனி யாற்றினையே.

(கு - ரை.) சிமை ஆர் தடவரை சேண் நெறி - கொடுமுடிகள் பொருந்திய பெரிய மலைகளையுடைய நீண்ட வழியிலே. இமையா - இமைத்து; செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம். இத்துணைப்போதென்றது, கண்ணிமைக்கும் நேரத்தை. என்னை அன்றி அமையா - என்னைப் பிரிந்திருக்க ஆற்றாத. அணங்கினை - தலைவியை. நீ என்றது, தோழியை. உடனிருக்கும் காலத்திலேயே ஓரிமைநேரம் பிரியினும் பொறாத தலைவியை அந்நாளெல்லாம் நீ எவ்வாறு ஆற்றுவித்தாயென்று தலைவன் பாங்கியை வியந்தானென்க. ஆற்றினை - ஆற்றுவித்தனை; விவ்விகுதி தொக்கிற்று.

(வே - ம்.) ஆற்றிவைத் திருந்தமை; நாளிங்குடனிருந்து; அணங்கின ணங்கையெவ் வாறிருந்தாற்றினையே. இ-வி. கடுகு. உடு

ஆற்றுவித்திருந்தமை பாங்கி கூறல்

329. மதிகாட் டியநுதல் வல்லிசிந் தாகுல மாற்றியதுன்
பதிகாட் டியுமுன் பனிவரை காட்டியும் பாய்திரைநீர்
நதிகாட் டியும்புது நல்விருந் தாகி நடந்ததிண்டேர்க்
கதிகாட் டியுமுன் கலந்தசந் தாடவி காட்டியுமே.

(கு - ரை.) மதி காட்டிய நுதல் வல்லி - பிறைத்திங்களையொத்த நெற்றியையுடைய தலைவியினுடைய. சிந்தாகுலம் - மனத்துன்பத்தை. பதி - ஊர். பனிவரை - குளிர்ந்த மலை. விருந்தாகி - விருந்தாக வந்திருந்து. நடந்த - மீண்டு சென்ற; என்றது தலைவன் பொருட் பிரிவுக்குமுன் வந்து சென்றமையைக் குறிப்பிட்டாளென்க. தேர்க்கதி - தேரூர்ந்த சுவடு. கலந்த - கூடிய. சந்தாடவி - சந்தனமரக்காடு. பதி முதலியவற்றைக் காட்டியே வல்லியின் ஆகுலம் மாற்றியதெனக் கூட்டுக.

(வே - ம்.) ஆற்றிவைத் திருந்தமை. உசு

வரைவு இடைவைத்துப் பொருள்வயிற் பிரிதல் முற்றும்.

## ௧௫. வரைவு மலிவு

*[மணநிகழ்ச்சியைப்பற்றிய செய்திகளின் மிகுதி]*

வரைவு மறுத்தல்

*[தலைவியின் பெற்றோர் தலைவியை மணஞ்செய்து கொடுக்க மறுத்தல்]*

330. உருவுந் திருவுங் குலனுமொப் பீருயர் வீறொழிய
மருவும் புணர்வு மறுக்கும் பழுதில்லை வாணுதலும்
பருவம் பெதும்பை நிறைந்திலள் பண்பிற் பசுங்கிள்ளையும்
பொருவும் புணர்வரி தோரையு நாளும் பொருந்தினுமே.

(கு-ரை.) உரு - அழகு. திரு-செல்வம். ‘வீறு ஒழிய.........இல்லை’ என்றது, மணஞ்செய்தற் கேற்ற ஆண்மைப் பருவம் நிரம்பாமையாகிய குறையே யன்றி வேறு மறுக்கத்தக்க குற்றமொன்றும் இன்றென்றபடி; வீறு - ஆண்மை. வாணுதலும்: தலைவியும். பெதும்பைப் பருவமாவது, எட்டு முதல் பதினொரு வயதிற்குட்பட்ட பருவம்; மிக இளையள் என்றபடி. பண்பின் பசுங்கிள்ளையும்-இத்தகைய இளம்பண்பினையுடைய கிளிபோன்ற தலைவியும். பொருவும் புணர்வு அரிது - மருவுதற்குரிய புணர்ச்சிக்குப் பொருத்தமின்று. ஓரை-மணஞ்செய்தற் குரிய நன்முழுத்தம். நாள்-நன்னாள். (௨௬௬) ஒப்பீர்! வீறு ஒழியப் பழுது இல்லை; வாணுதலும் நிறைந்திலள்; (ஆதலின்) பொருந்தினும் கிள்ளையும் புணர்வு அரிது எனக் கூட்டுக. ௧

மறுத்துழி இரங்கல்

*[தலைவியின் தமர் மணம்நேர மறுத்தவிடத்துத் தலைவி தோழியிடம் கூறி வருந்தல்]*

331. சான்றோர் வரவு மிருநிதி யாவுந் தரவுநம்மை
ஈன்றோர் மறுத்தன ரென்பது கேட்கி லெமக்கியையுந்
தேன்றோய் மலர்த்தழை தந்துகொல் யானைச் சினமுஞ்செற்ற
வான்றோய் வளமலை நாடரென் னுவர்கொல் வாணுதலே.

(கு-ரை.) சான்றோர் - தலைவனால் மணம்பேச விடுக்கப்பட்டோர். இருநிதி - பரிசப்பொருள். ஈன்றோர் - தலைவியின் பெற்றோர். மறுத்தனர் - தலைவியை ஈதற்கு மறுத்தனர். இயையும் -

பொருந்திய. தழை தந்து: கசஎ. கொல்யானை-தலைவியைக் கொல்லு தற்கு வந்த யானையினுடைய. செற்ற - அழித்த. தலைவன் யானை யினிடமிருந்து தலைவியைக் காப்பாற்றியமையை - உ௫சு, உ௫௬, ௩௫அ-ஆம் செய்யுட்களால் அறிக. நாடர்: தலைவர். என் ஆவர் என்றது, பெரிதும் வருந்துவரே என்று குறிப்பித்தபடி. வாணுதலே - தோழியே! தந்து செற்ற நாடர் கேட்கில் என் ஆவர் எனக் கூட்டுக. உ

## காதலன் முலைவிலை கொடுத்தமை பாங்கி காதலிக்கு உணர்த்தல்

*[முலைவிலை-பரிசம்]*

**332.** உடுக்குந் தழைகொண்டு வந்தொரு நாளும்மை யொண்புனத்திற்
கெடுக்குங் கருங்கலை கேட்டவர் தாங்கிளி யேவெளியே
அடுக்குந் தமருநம் அன்னையு மூரு மறியஇன்றே
கொடுக்கும் பரிசமெல் லாங்கொடுத் தார்நின் குவிமுலைக்கே.

(து - ரை.) கெடுக்கும் கருங்கலை கேட்டவர் தாம்-தப்பி ஓடிய கரியமானைக் கேட்ட தலைவர்; அசு. கிளியே: தலைவியே. வெளியே அடுக்கும் தமர் என்றது, ஓரில்லினரன்றி அயலே வாழும் உறவினர்: தமர் - தம்மவர். கிளியே! கலைகேட்டவர் அறிய முலைக்குப் பரிசம் கொடுத்தாரெனக் கூட்டுக. ௬

## பாங்கி தமர் வரைவு எதிர்ந்தமை தலைவிக்கு உணர்த்தல்

*[தலைவியின் தமர் மணப்பரிசத்தை ஏற்றுக்கொண்டமையைப் பாங்கி தலைவிக்கு உணர்த்தல்]*

**333.** யாழிற் பொலிதரு மின்சொன னல் லாயெவ ரேசெயினும்
ஊழிற் பெருவலி யென்றுமின் னுலிரு கோட்டொருகைச்
சூழிக் களிறு தொலைத்தவர்க் கேநின் முலைத்துணைக்கே
ஆழிப் புவன மறியநங் கேளி ரடுத்தனரே.

(கு - ரை.) யாழின் பொலிதரும் - யாழிசையைப்போல் சிறப் புற்று விளங்கும். நல்லாய்: தலைவியே. 'ஊழின் பெருவலி - ஊழ் வினையைக் காட்டிலும் மிக்க வலியை உடையது. 'ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று, சூழினும் தான்முந் துறும்' - குறள்-௩அ0. கை- துதிக்கையை யுடைய. சூழிக் களிறு - முகபடாம் அணிந்த யானை.

தொலைத்தவர்: தலைவர்; ௩௩௧. மூலைத்துணைக்கு என்றது, மூலைத் துணையை அளித்தற்கு என்றபடி. ஆழிப் புவனம் - கடல் சூழ்ந்த உலகத்து மக்கள். அடுத்தனர்-உடன்பட்டனர். நல்லாய்! தொலைத்த வர்க்கே கேளிர் அறிய அடுத்தனர்; (ஆதலின்) ஊழிற் பெருவலி என்றும் இன்று எனக் கூட்டுக. ௪

தலைமகள் உவகை ஆற்றது உளத்தொடு கிளத்தல்

*[தலைவி தன் மகிழ்ச்சியை அடக்கமுடியாது தன் நெஞ்சிற்குச் சொல்லுதல்]*

**334.** இன்னா நெறியுங் குறியிடை யீடு மிலங்கிழையார்
பின்னு மிழைக்கும் பெருவெறி யாட்டும் பிறர்வரைவும்
நின்னா குலமுந் தவிரநெஞ் சேயின்று நின்னுயிரை
அன்னார் மணமுர சார்க்கின்ற தால்நம் அகநகர்க்கே.

(து - ரை.) இன்னா நெறி - துன்ப மிக்கவழி; ௨௦௭, ௨௫௨. குறி இடையீடு-பகற்குறி யிடையீடு, இரவுக்குறி யிடையீடு என் பன. இலங்கிழையார் - தாய்மார். இழைக்கும்-செய்கின்ற. வெறி யாட்டு: ௨௫௯, ௨௬௩. பிறர் வரைவு - தலைவியை அயலார் மணம் பேச வருதல்; ௨௯௪. நின் என்றது நெஞ்சினை. ஆகுலம் தவிர- துன்பம் நீங்க. அன்னார்: தலைவர். ஆர்க்கின்றது - ஒலிக்கின்றது. அக நகர்க்கு - உள் நகரத்தின்கண்; வேற்றுமை மயக்கம். நெஞ்சே! நெறியின்னாமை முதலியவை தவிர நின் உயிரை யன்னார் மணமுரசு அக நகரில் ஆர்க்கின்றது எனக் கூட்டுக.

(வே - ம்.) இழைத்த; இனி நின்னுயிரை; மணி முரசு. இ-வி. ௧௫௯. ௫

தலைவனைப் பாங்கி வாழ்த்தல்

**335.** கொண்டல் வெளுக்குங் கருங்குழ லாள்மனக் கோட்டமுநின்
வண்டணி பைந்தழை வாட்டமுங் கண்டகண் மாலுமந்த
விண்டலர் தாமரைத் தேவியும் போலிங்கு மேவியது
கண்டன மேயிறை வாஇது வோஇன்னங் காண்பதுவே.

(து - ரை.) கொண்டல் - நீர்கொண்ட கருமுகில். அது வெளுக்கு மென்றது, குழலின் கருமையைக் கண்ட கண்களுக்கு முகில் வெளுத்ததுபோல் தோன்றும் என்றபடி. குழலாள்: தலைவி. கோட்டம் - துன்பம். அணி - மொய்க்கின்ற. மாலும்-திருமாலும்.

விண்டு அலர் தாமரைத் தேவியும் - முறுக்குடைந்து மலர்கின்ற தாமரையிலுள்ள திருமகளும். இங்கு மேவியது - களவில் ஒன்றியிருந்ததை. இதுவோ என்றது, மணந்துகொண்டு இல்லறம் புரிதலை. இறைவா! கோட்டமும் வாட்டமும் கண்ட கண்(ணால்) மாலும் தேவியும்போல் இங்கு மேவியது கண்டனம்; இன்னம் காண்பது இதுவோ? என மகிழ்ந்து கூறினானென்க.

(வே . ம்.) போலிங்ஙன். இ-வி. கடுகூ. கூ

தலைவி மணம்பொருட்டாக அணங்கைப் பராநிலை காட்டல்

*[தலைவி தலைவனை மணக்கும்பொருட்டுக் கடவுளை வணங்குதலைப் பாங்கி தலைவனுக்குக் காட்டுதல்]*

**336.** அணங்கர வல்கு லரிவைய ராரத் தனமருப்புச்
சுணங்கலர் வேங்கைத் துணர்மலை நாட துளங்குமின்போல்
வணங்கிடை மாதுன் மணம்பொருட் டாக வளையவிழ்பூங்
கணங்கமழ் சார லணங்கைப் பராநிலை கண்டருளே.

(கு - ரை.) அணங்கு அரவு அல்குல் அரிவையர் - அச்சந்தரும் பாம்பின் படம்போன்ற அல்குலையுடைய பெண்களது; உருபு. ஆரம் - மாலையணிந்த, மருப்பையொத்த தனமென்க; மருப்பு - யானைக்கோடு. தனத்திலுள்ள சுணங்கைப்போல் அலர்கின்ற எனவியைக்க. சுணங்கு அலர் வேங்கை துணர்-தேமலின் நிறம்போல் மலர்கின்ற வேங்கையினது பூங்கொத்துக்களையுடைய. நாட: தலைவ. துளங்கு - அசைகின்ற. வணங்கு இடை மாது - முலைப்பாரந் தாங்காது வளைகின்ற இடையினையுடைய தலைவி. வளை - கொத்துடன் வளைந்துள்ள, பூ என்க. கணம்-திரள். அணங்கைப் பராநிலை - கடவுளை வணங்குதலை. நாட ! மாது மணம்பொருட்டாகப் பராநிலை கண்டருள் எனக் கூட்டுக.

(வே - ம்.) தொடைமலை, இ-வி. கடுகூ. எ

கண்டோன் மகிழ்ச்சி

*[தலைவியின் பராநிலையைக் கண்டு மகிழ்ந்த தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறுதல்]*

**337.** பாணுர் சுரும்பும் விரும்புதன் சாரற் பனியருவிச்
சேணுர் சிலம்பி லுறையுங் கடவுளைத் தேமலர்தூஉய்
வாணுடு கண்ணி மணம்பொருட் டாக வழுத்துமன்பு
காணுய் மடநெஞ்ச மேவஞ்ச மோஅவள் காதன்மையே.

(கு - ரை.) பாண் ஆர் சுரும்பு - இசைபாடும் வண்டு. தண், பனி - குளிர்ச்சியான. சேண் ஆர் சிலம்பில் - உயர்ச்சி பொருந்திய மலையில். கடவுள் - கொற்றவை என்னும் கடவுள். தூஉய்-தூவி. வாள்நாடு கண்ணி - வாள்போன்ற கண்ணையுடைய தலைவி. வழுத்தும் - போற்றுகின்ற. வஞ்சமோ; ஓ: எதிர்மறை; வஞ்சமற்ற தன்மைவாய்ந்தது அவள் காதல் என்றபடி. காதன்மை - காதற்றன்மை. நெஞ்சமே! கண்ணி மணம்பொருட்டாக மலர் தூஉய்க் கடவுளை வழுத்தும் அன்பு காணாய்; காதன்மை வஞ்சமோ எனக் கூட்டுக.

(வே - ம்-) சுரும்பு; சிலம்பின்; வருந்துமன்பு; நங்கள் காதன்மையே. இ-வி. கடுகூ. அ

வரைவு மலிவு முற்றும்

## கசா. அறத்தொடு நிற்றல்

*[அறத்தொடு நிற்றல்-உண்மை கூறுதல்; உண்மை கூறுதலே அறமாதலின் இஃது இப்பெயர் பெற்றது. 'அறமென்பது தக்கது; தக்கதனைச் சொல்லிநிற்றல்......... அல்லதூஉம் பெண்டிர்க்கு அறமென்பது கற்பு; கற்பின்றலை நிற்றலென்பதூஉமாம்' என்பர் இறையனாரகப் பொருள் (சூ. உக.) உரையாசிரியர்]*

### கையறு தோழி கண்ணீர் துடைத்தல்

*[தலைவியின் துன்பத்தை ஆற்றிச் செயலற்ற தோழி அவள் கண்ணீரைத் துடைத்தல்; கை-செயல்]*

**338.** வாரண மாவின் மருப்பும் பொருப்பு மலைந்தகொங்கை
பூரண மாகும் பொலன்கொடி யேபொற்பு நீயழியுங்
காரண மாஒன்றுங் கண்டில மால்கண் கலுழ்வதென்னே
தோரண மாமறு கிற்பலர் கூண்டலர் தூற்றுதற்கே.

(து - ரை.) வாரணமாவின் மருப்பு - யானைக்கொம்பு; பொருப்பு-மலை. இவ்விரண்டுடன் மலைதல், தோற்றத்தால் தோல்வியுறுவிக்க என்க. பூரணமாதல் - வளர்ந்து நிறைதல். பொலன்கொடியே - பொற்கொடிபோன்ற தலைவியே. பொற்பு - அழகு. கலுழ்வது - கலங்குவது. மறுகில் - தெருவில். கூண்டு - கூடி. கூண்டுதல்-கூடுதல்; 'கூண்டவெட்டா நாள்,(அழகிய நம்பியுலா-கூO.). அலர் - தலைவியின் களவொழுக்கத்தை அறிந்து ஊரார் கூறும் பழிச்சொல்: உருO. கொடியே! கண்டிலம்; (அங்ஙனமிருக்க) தூற்றுதற்குக் கலுழ்வது என்? எனக் கூட்டுக.

(வே - ம்.) பொலங்கொடியே; காரணமா லொன்றும்; கண்டலர். இ-வி. கசுக. க

### தலைமகள் கலுழ்தற் காரணம் கூறல்

*[கலுழ்தல்—கண்கலங்கி அழுதற்கு]*

**339.** பண்டு தமக்குப் பரிந்துமை யூட்டிய பங்கயக்கை
ஒண்டொடி சோர உயங்குத ளேக்கி யுயங்குமது
தண்டலை தன்னில் தலைப்பட்ட நாளில் தலைவனைநாம்
கண்டது கொண்டல்ல வோஎன்று போலுங் கலுழ்கின்றதே.

(து - ரை.) பண்டு - முன்பு. தமக்கு - கண்களுக்கு. பரிந்து - அன்புகொண்டு. பங்கயக் கை - தாமரைமலர்போன்ற கைகளானவை. ஒண் தொடி சோர - ஒளிபொருந்திய வளையல்கள் நெகிழ்ந்துவிழும் படியாக. உயங்குதல் - மெலிந்து வருந்துதலை. உயங்கும் அது - இக் கைகள் இவ்வாறு வருந்துதற்குக் காரணம். தண்டலை - சோலை. தலைப்பட்ட நாளில் - இயற்கைப் புணர்ச்சியில் தலைவனைக் கூடிய நாளில். கண்டதுகொண்டு - கண்டதால்; கொண்டு: மூன்றாம் வேற்றுமைச் சொல்லுருபு. என்று-என்று நினைத்து. போலும்: ஐயப் பொருட்டு; அசைநிலையுமாம். கலுழ்தல் - அழுதல். கண்கள் தமக்கு மையூட்டிய கை உயங்குதலை நோக்கி (இவை இவ்வாறு) உயங்குதற்குக் காரணம் நாம் தலைவனைத் தண்டலையிற் கண்டதால் அல்லவோ என்று கருதிக் கலுழ்கின்றன எனக் கூட்டுக. கண்கள்: தோன்றா எழுவாய். கலுழ்கின்றது: துவ்விகுதி பெற்ற காலங்காட்டும் தொழிற்பெயர். கண் தலைவனைக் காணாதிருப்பின், கைகள் அவன் பிரிவால் உயங்காவாகலின் அக்குற்றமுணர்ந்து கண்கள் கலுழ்கின்றனவென்க. 'கண்தாம் கலுழ்வ தெவன்கொலோ தண்டாநோய், தாம்காட்ட யாம்கண் டது' - குறள். ககஎக.

(வே - ம்.) நமக்கு; தயங்குமுது; இன்று போலும். இ - வி, உ-கசுக.

தலைவன் தெய்வம் காட்டித் தெளிப்பத் தெளிந்தமை கூறல்

*[தெளிப்ப—சூளுறவு செய்து 'நின்னைவிட்டுப் பிரியேன்' என்று தெளிவிக்க; கூறல்—தலைவி பாங்கிக்குக் கூறுதல்]*

**340.** கழியார் கருங்கடல் தெய்வமுன் காட்டிக் கலந்தஅன்று
மொழியா தனவில்லை முன்னுற வாய்முன் மொழிந்தவண்ணம்
ஒழியார் நமையொரு நாளுமென் றேகொண்ட துள்ளமுமென்
விழியா னதுகலுழ் வானறி யேனின்று மெல்லியலே.

(து - ரை.) கடல் தெய்வம் - வருணன்: உகூஅ. கலந்த அன்று- இயற்கைப் புணர்ச்சியிற் கூடிய அன்று. மொழியாதன - சொல்லப் படாத சூளுறவு. உறவாய் - கேளாக. நமை ஒழியார் - நம்மை விட்டுப் பிரியார். கொண்டது - கருதிற்று. கலுழ்வான் - அழுதற்குக் காரணம். மெல்லியலே: பாங்கியே, (தலைவர்) அன்று காட்டி

மொழியாதன இல்லை; உள்ளமும் நமையொழியாரென்று கொண்டது; இன்று விழி கலுழ்வான் அறியேன் எனக் கூட்டுக.

(வே - ம்.) தெய்வமும்; விழியான துந்துயிலா மெலிவேன். (இ - வி.) ௧௧௯௧. ௩

### இறைவி தலைவன் இகந்தமை இயம்பல்

*[தலைவன் பிரிந்து சென்றமையைத் தலைவி தோழிக்குக் கூறுதல்]*

**341.** என்னாவி யன்னவர் சொல்லிய வார்த்தைக் கிடையினின்றது
அந்நா ளவர்நெஞ்சு மென்னெஞ்சு மேயன்றி வேறுமந்தண்
பொன்னார் நறுமலர்ப் புன்னையங் கானற் புளினமுண்டு
நன்னா அதற்கில்லை யேசொல்லு மாறு நடுவணின்றே.

(து - ரை.) ஆவி அன்னவர்: தலைவர். வார்த்தை - 'பிரியேன்' என்று கூறிய உறுதிமொழி. இடையில் நின்றது - எனக்கும் அவர்க்கும் இடையே சான்றாக நின்றது. அம் தண் - அழகிய குளிர்ந்த, கானல் என்க. பொன் ஆர் - பொன்போன்ற பூந்துகள் பொருந்திய. கானல் - கடற்கரைச் சோலை. புளினம் - மணற்குன்று. நா - நாக்கு. அதற்கு - அப்புளினத்திற்கு. நடுவண் நின்று - ஒருபாற் கோடாது நின்று. வார்த்தைக்கு நின்றது அன்றிப் புளினமும் உண்டு; (ஆனால்) அதற்கு நின்று சொல்லுமாறு நா இல்லையே எனக் கூட்டுக. ௪

### தலைவி இயற்பட மொழிதல்

*[தலைவன் நற்குணமுடையவனென்பது தோன்றத் தலைவி பாங்கிக்குக் கூறுதல்]*

**342.** மைக்கண் குவளை மலரின்முன் னேநிற்பர் வந்தரும்பிற்
புக்கென் றனிநெஞ்சும் புல்லிவி டார்பொறி வாளரவின்
பைக்கொன் றியஅல்கு லாயின்று யான்செய்த பாவமென்னோ
கைக்கும் தனத்துக்கு மேஅதி தூரத்தர் காதலரே.

(து - ரை.) கண் குவளை - கண்ணாகிய குவளை மலர்: உருவகம். மலரின் - கண் திறந்திருப்பின்; என்றது நனவில் என்றபடி. 'நிற்பர்' என்றது, உருவெளித் தோற்றங் காண்டலை. வந்து: உரையசை; ௯௩. அரும்பில் - இமை மூடிக்கொள்ளின்; என்றது தூங்கும்போது கனவின்கணென்றவாறு. 'துஞ்சுங்கால் தோள்

மேல ராகி விழிக்குங்கால் - நெஞ்சத்த ராவர் விரைந்து' - குறள். கஉஉஅ. பொறி வாள் அரவின் பைக்கு ஒன்றிய அல்குலாய் - புள்ளிகளையும் ஒளியையுமுடைய பாம்பின்படம்போன்ற அல்குலையுடைய பாங்கியே; உஉங. வாள் - ஒளி; பை - படம். தனம் - கொங்கை. அல்குலாய்! காதலர் திற்பர்; விடார்; (ஆயினும்) தூரத்தர்; என்னே? எனக் கூட்டுக.

(வே - ம்.) கைக்கும் துகிலுக்கும். ௯

பாங்கி இயல்பழித்து உரைத்தல்

*[தலைவன் இயல்பினைப் பாங்கி பழித்துக் கூறுதல்]*

343. கையாற் றழுவின தல்லாற் புணர்ந்து கலந்தவின்பம்
மையாற் சிறந்த மதர்விழி யாய்மன மேநுகர
மெய்யாற் றலைவரு மேவிவிட் டாரந்த வேட்கைநெஞ்சில்
உய்யாப் பெருவிழு மங்கொண்டு நீயென் உயங்குவதே.

(து - ரை.) மையால் - மை இடுவதால். மதர் விழியாய் - களிப்புக்கொண்ட விழியையுடைய தலைவியே. நுகர - அநுபவிக்க; தலைவன் வாராமையால் அவன் கலந்த இன்பத்தை மனத்தால் எண்ணிப் பார்த்து நுகரவேண்டியதாயிற்றென்க. மெய்யால் - உண்மையாகவே. மேவிவிட்டார் - வேற்றிடஞ் சென்று அமைந்து விட்டார்; தலைவியின் மனத்தே மேவிவிட்டார் என்றலுமாம்; இனி, மெய்யால் மேவிவிட்டார் என்பதற்கு, முற்காலத்தில் மெய்யுறு புணர்ச்சியும் தந்தார் எனலுமாம். அந்த வேட்கை - 'கலந்த இன்பத்தைப் பெற எண்ணும் காதலால். உய்யாப் பெருவிழுமம் - பிழைத்தற் கியலாத பெருந்துன்பத்தை. உயங்குவது - வாடுவது. விழியாய்! இன்பம் மனமே நுகர மேவிவிட்டார்; நீ நெஞ்சில் விழுமங்கொண்டு உயங்குவது என்? எனக் கூட்டுக. ௬

தெய்வம் பொறைகொளச் செல்தவம் என்றல்

*[தலைவன் சூள் பொய்த்தமையால் அதற்காக அவனை ஒறுக்காவண்ணம் பொறுக்குமாறு கடவுளை வேண்டிக்கொள்ளுதற்குச் செல்வோமென்று தலைவி பாங்கிக்குக் கூறுதல்]*

344. மணங்கே தகைதரும் வண்டலந் தண்டுறை வந்தென்தன்னை
உணங்கே லுயிரென் றுரைத்தவர் தாமொரு நாளுமென்கண்
குணங்கே வலமலர் தெய்வந் தொழறற்குக் குறுகுதுமென்
அணங்கே யணங்க லணங்கிலென் னுவி யணங்குறுமே.

(த - ரை.) கேதகை மணம் தரும் வண்டல் அம் தண்துறை - தாழையின் மணம்பொருந்திய மகளிர் விளையாடுகின்ற அழகிய குளிர்ந்த துறையின்கண்ணே. என்தன்னை - என்னை. உணங்கேல் - வருந்தாதே. உயிர் - நீ என் உயிர்போல்வாய். உரைத்தவர் : தலைவர். என்கண் குணம் கேவலம் அ(ல்)லர் - என்னிடத்துக் கேவலமாக நடந்துகொள்ளும் குணமுடையாரல்லர்; கேவலம் - இழிவு. அணங்கே : தோழியே; கடவுளை விளித்ததாகக்கொண்டு அதற்கேற்ப உரைத்தலுமாகும். அணங்கல் - தலைவனை வருத்தாதே. அணங்கில் - வருத்தினல். ஆவி அணங்குறும் - என் உயிர் வருந்தும். அணங்கே! 'உரைத்தவர் கேவலமலர்; அணங்கல்; அணங்குறும்' (என்று கூறி) தொழற்குக் குறுகுதும்(வா) எனக் கூட்டுக. எ

இல்வயிற் செறித்தமை இயம்பல்

*[வெளியே போகாதபடி வீட்டின்கண் தன்னைத் தாய் சிறை செய்தமையைத் தலைவி தோழிக்குக் கூறுதல்]*

**345.** கொன்னே வெகுண்டு மணிவண்ட லாடக் கொடிமருங்குற்
பொன்னே யினிப்புறம் போகலென் றுளன்னை பூந்தொடிக்கை
மின்னே பசந்தவென் மேனியும் பார்த்துள்ளம் வெய்துயிர்த்தாள்
என்னே விளைந்ததென் னேயறி யாரன்ப ரீங்கொன்றுமே.

(த - ரை.) கொன்னே வெகுண்டு - வீணாக என்மீது அன்னை சினங்கொண்டு. மணிவண்டலாட - அழகிய விளையாட்டையாட. கொடி மருங்குல் பொன்னே - கொடிபோன்ற இடையினையுடைய என்மகளே; இஃது அன்னை தலைவியை விளித்தது. புறம்போகல் - வெளியே போகாதே. பூந்தொடி கை மின்னே - அழகிய வளையலை யணிந்த கையினையுடைய தோழியே; இது தலைவி தோழியை விளித்தது. வெய்து உயிர்த்தாள் - வெவ்விதாப் பெருமூச்செறிந் தாள். விளைந்தது : இற்செறித்தமை. என்னே இரண்டும் இரக்கம் உணர்த்தி நின்றன. மின்னே! அன்னை வெகுண்டு 'பொன்னே! ஆடப்போகல்' என்றாள்; (அஃதேயன்றி) பார்த்து உயிர்த்தாள்; இங்கு விளைந்ததொன்றும் அன்பர் அறியார்; என்னே! என்னே! எனக் கூட்டுக.

(வே - ம்.) ஈங்கொன்றுமே. இ - வி. கசுக. அ

### செவிலி கனையிருள் அவன்வரக் கண்டமை கூறல்

*[செறிந்த இருளில் தலைவன் வருவதைச் செவிலி கண்டதாகத் தலைவி பாங்கிக்குக் கூறுதல்]*

**346.** ஆயின் றெனக்கு மணிமுன்றில் வாய்நென்ன லல்லிஅல்லி
வாயொன்று தேனுமிழ் மாதவிப் பந்தரில் வார்கழற்காற்
சேயொன்றி நின்ற திறமறி யாமற் செறியிருட்கண்
பேயொன்று கண்டஞ்சி னேனென்று கூறினள் பெய்வளையே.

(கு - ரை.) ஆய் - செவிலித்தாய். மணிமுன்றில்வாய்-அழகிய முற்றத்தின்கண். நென்னல் அல்லி - நேற்று இரவில். அல்லிவாய் ஒன்று தேன் உமிழ் - அகவிதழின்கண்ணே பொருந்திய தேனைச் சிந்துகின்ற. மாதவி - குருக்கத்திக்கொடி படர்ந்த. வார் கழல் கால் சேய்-நீண்ட வீரக்கழலையணிந்த முருகனையொத்த தலைவன். செறி - திணிந்த. பெய்வளையே-இடப்பட்ட வளையல்களையுடைய பாங்கியே! ஆய், முன்றில்வாய்ப் பந்தரில் சேய் நின்ற திறமறியாமல் பேய் கண்டு அஞ்சினேனென்று இன்று எனக்குக் கூறினள் எனக் கூட்டுக. கூ

(வே - ம்.) மனைமுன்றில் ; அல்லியெல்லி. இ. வி. கசுக.

### கட்டுவிச்சியை வினுதல்

*[தலைவியின் வேறுபாட்டைக் கண்ட செவிலி, இஃது எற்றினுன் ஆயிற்றென்று ஐயுற்றுக் கட்டுவிச்சியை அழைத்துக் குறிகேட்டல்; கட்டுவிச்சி-குறிகூறுங் குறத்தி; கட்டு-குறி]*

**347.** விழியுஞ் சிவந்து மொழியுந் தளர்வுற்று மெய்யுங்கைத்துக்
கழியும் படருறு கண்ணிக்கு வந்துமுன் கண்டறியாப்
பழிவந் தடுத்த தறிகின்றி லேனரும் பாவஞ்செய்தேன்
மொழியின்று நின்று குறத்தியம் மேநென் முறத்திலிட்டே.

(கு - ரை.) மெய்யும் கைத்து - உணவு முதலியவற்றையே யன்றித் தன் உடம்பையும் வெறுத்து. கழியும் படர் உறு கண்ணி - மிகுகின்ற துன்பத்தையுடைய தலைவிக்கு; அவள் துன்பமிகுதியைக் கண் வெளிப்படுத்தலின் 'படருறு கண்ணி' என்ருளென்க; படர் - துன்பம்; கழியும் படர் என்பதற்கு உயிர் கழிவதுபோன்ற துன்பம் எனினுமாம். குறத்தி நெல்லை முறத்திலிட்டுப் பார்த்துக் குறிகூறு

தல் வழக்காதலின் 'நெல் முறத்திலிட்டே' என்றாளென்க. யான் பாவஞ் செய்தவளாதலின் கண்ணிக்கு முன்வந்து கண்டறியாப் பழி வந் தடுத்தது; அதன் (காரணத்தை) அறிகின்றிலேன்; (ஆதலின்) குறத்தியம்மே! இன்று முறத்தில் நெல் இட்டு நின்று மொழி எனக் கூட்டுக. கoʻ

கட்டுரை கூறல்

*[குறத்தி குறிபார்த்துக் கூறுதல்]*

**348.** பண்பட்ட சொல்லி பணைபட்ட பன்னிரு கைபடைத்தோன்
கண்பட்ட தின்றென் கழங்கினும் பட்டது கைம்முறத்தில்
எண்பட்ட நெல்லுழி யும்இது வேபட்ட திங்கினிநீ
புண்பட்ட நெஞ்சுடை யன்னையிவ் வாறு புலம்பல்நின்றே.

(கு - ரை.) பண்பட்ட சொல்லி - இசை பொருந்திய சொல்லை யுடைய தலைவிக்கு. பணைபட்ட - பருத்த. படைத்தோன் - முருகப் பெருமான். கண்பட்டதென்பது உலக வழக்கு; முருகு அணங்கிற்று என்பது கருத்து. கழங்கினும் பட்டது - அஃது என் கழங்கின் கண்ணும் வெளிப்பட்டது; கழங்கு - வெறியாடல்; உம்மை: எதிரது தழீஇயிற்று. எண்பட்ட நெல்லுழியும் - முறத்திட்ட நெல்லை ஒற்றை இரட்டைப்பட எண்ணியவிடத்தும். இதுவே பட்டது - முருகணங்கிற் றென்றே தோன்றுகிறது. நெல்லை எண்ணிக் குறி கூறலை, 'முறத்தில் ஒருபடி நெல்லை முன்னே வை அம்மே-இந்நாழி நெல்லையு முக் கூறுசெய்தோர் கூற்றை - இரட்டைபட எண்ணி னபோ தொற்றைபட்ட தம்மே' (மீனாட்சியம்மை குறம்-உகூ.) என் பதனாலும் அறிக. அன்னை - செவிலியே. புலம்பல் - வருந்தற்க. சொல்லி கண் பட்டது; அது இன்று என் கழங்கினும் பட்டது; அஃதன்றி நெல்லுழியும் பட்டது; அன்னை! நீ இனிப் புலம்பல் எனக் கூட்டுக. கக

(வே - ம்,) கண் பட்ட தன்றென்; புலம்ப நின்றே.

தோழி தலைவியை வினாதல்

*[தோழி, தலைவியின் வருத்தங்களை எடுத்துக் கூறி, அவற்றைத் தணித்தற்கு என்செய்வோ மென்று வினவுதல்]*

**349.** வரியுங் கரியும் வருநெறி யூரில் மணிநிதிகள்
சொரியும் பிறருந் துணிகுவ ராமஞ்சு சூழ்சிலம்பர்
புரியும் பொருளும் நமர்பொருந் தாருட் புலம்பலுற்ற
அரியங் குழலணங் கேயென்செய் வேனென்னு மன்னையுமே.

(கு - ரை.) வரி - புலி: உசஅ. கரி-யானை. நெறி ஊரில் - நெறியினையுடைய நமது ஊரில். துணிகுவராம் - நின்னை வரைந்து கொள்ளத் துணியவுங் கூடும். மஞ்சு - மப்பு. சிலம்பர் - தலைவர். புரியும் பொருள்-விரும்பி அனுப்பிய பரிசப்பொருள். நமர் பொருந் தார் - நம்மவர் ஏற்றுக்கொள்ளார். உள் புலம்பல் உற்ற-உள்ளம் வருந்துதலையுடைய. அரி அம் குழல் அணங்கே - வண்டுகள் பொருந்திய அழகிய கூந்தலையுடைய தலைவியே! ஊரில் துணிகுவ ராம்; பொருந்தார்; அன்னையும் என்னும்; இதற்கு யாம் செய்யத் தக்கது யாது? எனச் சில சொற்கள் வருவித்து முடிக்க.

தலைவி தோழியை வினுதல் கஉ

['வெறியாடலை நீ ஏன் விலக்கா திருக்கின்றாய்?' என்று தலைவி தோழியை வினவல்]

350. நோய்நாடி யானுற்ற நோய்முத லுடியந் நோய்தணிக்கும்
வாய்நாடி வாய்த்த மருந்துசெய் யாமலிம் மன்றிலன்னை
வேய்நாடு தோளியர் முன்வெறி யாடல் விரும்புமிது
நீநாடி யொன்றுசொல் லாதென்கொ லோஇன்சொ னேரிழையே.

(கு - ரை.) நோய் நாடி - இன்னநோய் என்றாராய்ந்து. முதல்- நோயின் காரணத்தை. வாய் - வழி. வாய்த்த - நோய்க்குத் தகுந்த. மன்றில் - பலர்க்கு இடையில். வேய்நாடு தோளியர் - மூங்கிலை யொத்த தோளையுடைய பிற மகளிர். வெறியாடல்: உகூ-ல் துறை விளக்கங் காண்க. ஒன்று சொல்லா(த)து-யாதொன்றும் கூறா திருப்பது; என்றது வெறியை விலக்கித் தனக்கும் தலைவனுக்கு முள்ள தொடர்பை எடுத்துக் கூறாதிருப்பது என் என்றபடி; சொல் லாது என்பதில் தகரம் தொகுத்தல் விகாரம். கொல், ஓ: அசை. நேரிழையே-தோழியே! 'நோய் நாடி நோய்முதல் நாடி அதுதணிக் கும்-வாய்நாடி வாய்ப்பச் செயல்'-கூசஅ. என்னுங் குறளை அடி யொற்றிய தாகும் இச் செய்யுள். கங

அறத்தோடு நிலை மறுத்தல்

[தோழி அறத்தொடு நிற்க உடன்படாமை; அறத்தொடு நிற்றல்-களவை வெளிப்படுத்தல்: செய்யுள், (௩௫௦)]

351. பூணென்று மென்முலைப் பொற்சுடி யாய்நிறம் போர்த்தபைம்
காணுந் தொறுங்கலு ழன்னைக்கு நின்னருங் கற்புடனே [பொன்
சேணின் றுயர்ந்த மரபுக் கடாத செயலையின்று
நாணின்றி நின்று மொழிவதின் மாய்கவென் னல்லுயிரே.

(கு - ரை.) பூண் ஒன்று-அணிகலம் அணியப்பெற்ற. பொன் தொடியாய்-பொன்னால் செய்த வளையலை யணிந்த தலைவியே. பைம் பொன் என்றது, பசலையை ௨௫௦. கலுழ் - வருந்துகின்ற. சேண்-மிகவும். மரபுக்கு - குலத்திற்கு. அடாத செயலென்றது, களவொழுக்கத்தைக் கூறுதலை. மொழிவதின் - சொல்லுவதைக் காட்டிலும். மாய்க - அழிவதாக. பொற்றொடியாய்! அன்னைக்குச் செயலை மொழிவதின் உயிர் மாய்க எனக் கூட்டுக. ௧௮

## அறத்தொடு நிலை உடன்படுத்தல்

*[தலைவி தோழியை அறத்தொடு நிற்க உடன்படுமாறு செய்தல்]*

352. வில்லார் நுதலும் விழியும் பசப்பும் வெறிக்குமுன்னே
சொல்லா தொழியினின் றன்னையும் நாடுந் துடிமருங்குல்
நல்லாய் குலனும் நலனுமெய்ந் நாணும் நயந்தகற்பும்
எல்லா மழியுமென் றேயினி மேலிதற் கென்செய்வதே.

(கு - ரை.) வில்ஆர் நுதலும் - வில்லையொத்த நெற்றியிலும், விழியிலும் தோன்றியுள்ள பசப்பின் காரணத்தை என்க. வெறிக்கு முன் - வெறி எடுத்தற்கு முன்; வெறி: ௩௬௦. அன்னை இன்று நாடும் என்றது, வெறியாடன்மூலம் பசப்பின் காரணத்தை ஆராய்வாள் என்றபடி. துடிமருங்குல் நல்லாய் - உடுக்கைபோன்ற இடையினையுடைய பாங்கியே. அழியும் - அழிவெய்தும். நல்லாய்! முன்னே சொல்லாது ஒழியின், அன்னை குலன் முதலிய எல்லாம் அழியுமென்று நாடும்; இதற்கு என் செய்வது எனக் கூட்டுக. காமே சொல்லிவிடுவது மேல் என்பது கருத்து.

(வே - ம்.) வில்லா நுதலும்; இழியும். ௧௫

## தலைவி தோழிக்கு அறத்தொடு நிற்றல்

*(அறத்தொடு நிற்றல்—தன் களவொழுக்கத்தை உணர்த்தல்]*

353. அன்னை யொறுப்பினும் நம்மய லார்நின் றொறுப்பினுமிங்
குன்னை மறைப்ப தொழிந் துரைசெய்வ லொருவர்வந்து
புன்னை யுகுத்தமென் பூக்கறி யாக்கும் புதுமணற்சோறு
என்னை யருத்த வருத்தமுற் றேனென் றியம்பினரே.

(கு - ரை.) அன்னை ஒறுத்தல் - தண்டித்தல். அயலார் ஒறுத்தல்-அலர் கூறல். உன்னை மறைப்பது ஒழிந்து - உனக்கு ஒளித்தலின்றி

உன்னை என்றது, தோழியை. ஒருவர்: தலைவர். உகுத்த - சிந்திய. பூக்கறி என்றது, சிறுவீடு கட்டி விளையாடும் மகளிர் பூவைக் கறியாகச் சமைத்தமையை. அருத்த - ஊட்ட. (தோழீ இ!) ஒறுப்பினும் உரை செய்வல்; (அஃது என்னெனின்) ஒருவர் இயம்பினர்; யானும் அவர்மீது காதல்கொண்டேன் என்பது கருத்து. கசு

பாங்கி வெறி விலக்கல்

*[வெறிகோளால் தலைவியின் விழுமந் தீராதெனத் தோழி அதனை விலக்குதல்]*

**354.** சேயவற் காறு முகங்கண்ட தல்லது சிந்தையென்னேய்
ஆயிழைக் காறு முகங்கண்டி லேனன்னை யேயறியிப்
பேயினுக் காறு மருந்தென்கொ லோவெண் பிறையெயிற்று
வாயினுக் கிங்கெய்து மோஇளம் பான்மறி வள்ளூரமே.

(கு - ரை.) சேயவற்கு ஆறுமுகம் கண்டது அல்லது ஆயிழைக்கு ஆறுமுகம் கண்டிலேன் என்றது இரட்டுற மொழிதல்; முருகப்பெருமானுக்கு ஆறுமுகங்களிருத்தலைக் கண்டேனேயன்றித் தலைவிக்கு அவ்வாறிருத்தலைக் காணவில்லை என்றும், தலைவன் தலைவியைப் பிரிந்தும் ஆறுதலோடு உள்ளானன்றித் தலைவி அங்ஙனமில்லை என்றும் பொருள்படும். சேயவன் - முருகப்பெருமான், சேய்மையிலுள்ள தலைவன்; சேய்மை - தூரம். ஆறுமுகம் - ஆறுமுகங்கள், ஆறுதற்கான வழி. சிந்தையின்கண் நோய்கொண்ட என் ஆயிழை யென இயைக்க; ஆயிழை: தலைவி. அன்னையே: தோழி செவிலியை விளித்தது. பேய் என்றது வேலனை. பேயினுக்கு ஆறும் மருந்து என் - பேய்போன்ற வேலனுடைய பசி தணித்தற்குரிய மருந்தாவது எவ்விதம். பிறை எயிற்று - பிறை போன்ற பல்லையுடைய. எய்துமோ - போதுமோ. பால் இளம் மறி - பாலுண்ணும் இளம் ஆட்டுக்குட்டி. மறி வள்ளூரம் - ஆட்டிறைச்சி. வேலன் வெறியாடுதல் மறியுண்ணற்கேயன்றித் தலைவியின் நோய் தணித்தற்கன்று; அதனைத் தணித்தற்குத் தலைவனொருவன் உள்ளான் என்று தலைவியின் களவொழுக்கினைக் குறிப்பாலறிவுறுத்தியவாறு. அன்னையே! அல்லது கண்டிலேன்; அறி; (நிற்க) வள்ளூரம் எய்துமோ? (அங்ஙனமிருக்க) மருந்து என்? எனக் கூட்டுக. கஎ

செவிலி பாங்கியை வினுதல்

*[பாங்கி வெறி விலக்கியது கண்டு ஐயுற்ற செவிலி, அவ்வாறு விலக்கியதற்குக் காரணம் என்னெனன வினவல்]*

355. மறியார் தடங்கண் மயிலனை யாயிந்த மானெவரும்
குறியா அருந்துயர் கொண்டதுங் கண்ட குறியுமன்னை
வெறியாட லெண்ணிய வேட்கையு நீவிலக் குந்திறனும்
அறியா தழுங்குகின் றேன்சொல்லு வாயிங் கறிந்ததுவே.

(கு - ரை.) மறியார் - மானையொத்த. மயிலனையாய்: பாங்கியே. இந்தமான்: தலைவி. குறியா - குறித்துணர இயலாத. குறியும் - குறிப்பும். அன்னை : நற்றாய். வேட்கை - விருப்பம். அழுங்குகின்றேன் - வருந்துகின்றேன். அனையாய்! கொண்டதும், அன்னை கொண்ட குறியும், வேட்கையும், திறனும் அறியாது அழுங்குகின்றேன்; நீ அறிந்ததைச் சொல்லுவாய் எனக் கூட்டுக. கஅ

பூத்தரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல்

*['தலைவி தன் இளம்பருவத்தே ஆயமகளிருடன் சோலையில் விளையாடுகையில், ஒரு தலைவன் கொண்டு சென்ற நீலமலரை விரும்பி ஏற்றாள் : அது குறித்து இன்று அவன்மீது காதல்கொண்டுள்ளாள்' என்று பாங்கி செவிலிக்கு உரைத்தல்]*

356. சோலைத் திருமுரு கன்னு னொருவன் தொடிமலர்க்கை
நீலத்தின் மேல்விழி நெய்தல்வைத் தாளந் நினைவறிந்து
கோலத் திருவனை யீர்வம்மி னீரது கொண்மினென்ன
மாலைக் கருங்குழல் வல்லிதன் பார்வைக்கு வாங்கினளே.

(கு - ரை.) சோலை - சோலையில். முருகு அன்னுன் - முருகப்பெருமானையொத்த தலைவன். தொடி மலர்க்கை நீலம் - வீரவளையணிந்த தாமரைமலர்போன்ற கையின்கணுள்ள நீலப்பூ. நெய்தல் விழி வைத்தாள் - நெய்தல் மலரையொத்த விழியால் விரும்பி நோக்கினுள். கோலம் - அழகிய. அது - அந்நீலப்பூவை. என்ன - என்று கூற. மாலை கருங்குழல் வல்லி - மாலையணிந்த கரிய கூந்தலையுடைய தலைவி. பாவை - வண்டலம்பாவை: கழுள. மலரினுள்ள நீலத்தின் மேல் நெய்தல் வைத்தாளென மலராகவே கூறியிருக்கும் நயங்காண்க. ஒருவன் நீலத்தின்மேல் வைத்தாள்; அறிந்து 'வம்மின்; கொண்மின்' என்ன வல்லி வாங்கினளெனக் கூட்டுக. கக

### புனல்தரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல்

*[தலைவி நீராடுகையில் வெள்ளம் அவளை ஈர்த்துச் சென்றதாக, அவ்வழியே வந்த தலைவனொருவன் அவளை எடுத்தணைத்துக் கரை சேர்த்தானென்று புனல் காரணமாகத் தலைவிக்குக் கூட்டம் நேர்ந்தமையைப் பாங்கி குறிப்பாக அறிவித்தல்]*

**357.** ஆடுந் துறையி லருவினை யேன்கை யகன்றரிவை
ஓடும் புனலி லொழுகிய நாளெம் அழுகுரற்கேட்டு
ஏடொன்று பூந்தொடை யேந்தல்முன் நீந்தி யெடுத்தணைத்து
நீடுந் தடங்கரை நில்லுமென் றானெம்மை நேரிழையே.

(கு - ரை.) ஆடும் துறை - நீராடுந் துறை. அருவினையேன் என்றது, தோழியை. கை அகன்று - என் பக்கலின்றும் நீங்கி. அரிவை - தலைவி. ஒழுகிய - அடித்துக்கொண்டு சென்ற. ஏடு ஒன்று பூந்தொடை ஏந்தல் - இதழ் பொருந்திய பூமாலையணிந்த தலைவன். என்றான் - என்று நிறுத்தினான். தலைவிக்கும் தனக்குமுள்ள ஒற்றுமை கருதி எம்மை என்றாள். நேரிழையே: செவிலியே! துறையில் அரிவை அகன்று ஒழுகிய நாள் ஏந்தல் கேட்டு எம்மை அணைத்து நில்லுமென்றான் எனக் கூட்டுக. ௨௦

### களிறுதரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல்

*[யானையைக் கண்டு அஞ்சிய தலைவியை ஒரு தலைவன் தழுவிக் காத்தானென்று களிற்றின் காரணமாகத் தலைவிக்குக் கலவி நிகழ்ந்தமையைப் பாங்கி குறிப்பாக அறிவித்தல்]*

**358.** மலைக்கோடி யின்மழை யின்மருங் கோடுவெண் மாமதியின்
கலைக்கோ டுழுத கழையிருஞ் சாரற் கனங்குழைதன்
முலைக்கோடு பின்னு முழக்கோ டெதிரு முதுகளிற்றின்
கொலைக்கோடு முன்னுங் குளிப்பநின் றானொரு கொற்றவனே.

(கு - ரை.) மலைக்கோடி - மலையின் உச்சி. மழையின் மருங்கு - முகிலினிடையே. மதியின் கலைக்கோடு - பிறைத்திங்களின் நுனி. உழுத - கீறிய, சாரலென்க. கழை இருசாரல் - மூங்கில்களையுடைய பெரிய சாரலில். கனங்குழை: தலைவி. முலைக்கோடு - முலையாகிய கொம்பு; உருவகம். முழக்கோடு எதிரும் - பிளிற்றொலியோடு

எதிர்த்து வருகின்ற. முதுகளிற்றின் - பெரிய யானையினுடைய. குளிப்ப - தைக்கும்படியாக. கொற்றவன் - தலைவன். தலைவிக்கும் யானைக்கும் இடையே நின்று அவளைக் கொல்ல வந்த யானையை எதிர்த்தானாகலின் 'பின்னும் முன்னும் குளிப்ப' என்றாள். சாரலில் ஒரு கொற்றவன் பின்னும் முன்னும் குளிப்ப நின்றானெனக் கூட்டுக.

" அன்னதொரு காலை அறுமா முகக்கடவுள்
முன்னொருசார் வந்து முதுகளிற்றின் கோடொற்றப்
பின்னொருசார் வந்து பிடியின் மருப்பூன்ற
இன்னடுவே நின்றான் எறுழ்வயிரத் தூணேபோல்."

(கந்தபுராணம்)

என்னுஞ் செய்யுள் இதனோடு ஒத்திருத்தல் காண்க. உக

தலைமகள் வேற்றுமை கண்டு நற்றாய் செவிலியை வினுதல்

*[நற்றாய்—தலைவியைப் பெற்ற தாய்]*

**359.** குணங்குற்ற மென்னுமிக் கூறறி யாத குதலைமென்சொல்
அணங்குற்ற மைய லறிந்தனை யோஅரும் பாமுலைகள்
சுணங்குற் றனவளை தோளுற்றனவில்லை சொற்றளரும்
திணங்குற்ற வேற்கண் ணிறம்பசப் பூரும் நிரைவளைக்கே.

(கு - ரை.) குதலை - இளஞ்சொல்லாகிய. அணங்கு: தலைவி. மையல் - மயக்கத்தின் காரணத்தை. அரும்பா - நன்கு வெளிப் படாத: மிக இளைய என்றபடி; அரும்பாம் எனப்பிரித்து, தாமரை கோங்கு இவற்றின் அரும்பினையொத்த எனலுமாம். சுணங்கு, ஈண்டுப் பசலையை உணர்த்திற்று; மெலிவுமாம். வளை - வளையல். தோள் - முன்கை. வளை உறாமை, தோள் மெலிவாலென்க. நிணம் குற்ற வேல் கண் - நிணத்தில் தைத்த வேல்போன்ற கண்களில். கண்ணில் பசப்பூர்தலை, கஎ0; உ௩௩-ஆம் செய்யுட்களிலும் காண்க. நிரைவளைக்கு வரிசையான வளையல்களை அணிந்த தலைவிக்கு. நிரைவளைக்கு உற்றன; இல்லை; தளரும்; ஊரும் (ஆதலின்) அவ் வணங்கு உற்ற மையல் அறிந்தனையோ? எனக் கூட்டுக. அறிந் தனையேற் கூறுக என்பது கருத்து.

(வே - ம்.) அரும்பார்; பசப்பூர. இ - வி. கசுக. உஉ

நற்றயக்குச் செவிலி அறத்தொடு நிற்றல்

*[ தலைவியின் களவொழுக்கத்தைச் செவிலி தலைவியின் தாய்க்கு உணர்த்தல் ]*

**360.** திருந்தா மொழியுந் திரளா முலையுந் தரளமென்னும்
முருந்தாகு மென்னகை மூரலுந் துய்ய முருகவிழ்பூங்
கருந்தாழ் குழலுமென் கைவந்த தில்லை கனங்குழையாய்
அருந்தா அமுதமன் னாளறி வாலின்னை யன்னளின்றே.

(கு - ரை.) திருந்தா மொழி - இளஞ்சொல். திரளா முலை - இளமுலை. தரளம் - முத்து. முருந்து - மயிலிறகின் அடி. மூரலும் மெல்நகை - பல்லும் உறுதிபெறாத இளம்பல். துய்ய - மென்மை யான, பூ. முருகவிழ் பூ-மணத்தொடு மலர்கின்ற பூவையணிந்த. குழல் கைவந்தது இல்லை என்றது, இன்னும் நீண்டு வளராமையால் என் கைப்படத் தீண்டி முடித்ததில்லை என்று குறிப்பித்தபடி: கஉ௬. குழையாய்: செவிலி நற்றாயை விளித்தது. அன்னாள்: தலைவி. நின்னை அன்னள் என்றது, இத்துணை இளையளாயிருந்தே நின்போல் இல்லறம் நிகழ்த்தும் நல்லறிவு பெற்றாளென்றபடி; இனி மணஞ்செய்தல் வேண்டுமென்பது குறிப்பு. குழையாய் ! மொழி திருந்தா ; முலை திரளா; மூரலும் மென்னகை ; குழலும் வந்ததில்லை ; (ஆயினும்) அன்னாள் இன்று அன்னள் எனக் கூட்டுக.

(வே - ம்.) நின்னையன்ன நின்றே. உ௬

நற்றய் தமருக்கு அறத்தொடு நிற்றல்

*[ தமர்—தந்தையும் தமையன்மாரும் ]*

**361.** கலைமதிக் கும்புல மிக்கோ ரையுமுங்கள் கங்கையன்னீர்
நிலைமதிக் குங்குல நீர்மையும் பார்த்தின்று நேரிலல்லால்
அலைமதிக் குந்தெள் ளமுதமன் னாளரும் பாமுலைகள்
விலைமதிக் குந்தர மோவேலை ஞாலமு மேருவுமே.

(கு - ரை.) கலை மதிக்கும் புலம் மிக்கோர் - கல்வியால் மதிக்கத் தக்க அறிவு மிக்க சான்றோர் ; இவர் மணம் பேசற்குத் தலைவனால் அனுப்பப்பட்டோர். கங்கை, குலத்தின் தூய்மைக்கு உவமை. அன்னீர் : நற்றாய் தமரை விளித்தது. உங்கள் குலநீர்மை - உங்கள் குலத்தொடு தலைவனது குலமும் ஒத்திருக்குந் தன்மை. நேரில்

அல்லால்-தலைவியைத் தர உடன்படுதலன்றி. அலைமதிக்கும்-கடலைக் கடைந்தெடுத்த; அலை - பாற்கடல்; சினையாகு பெயர்; மதித்தல் - கடைதல். அன்னாள்: தலைவி. அரும்பா முலைகள்: நடுகூ. வேலை ஞாலம் - கடல் சூழ்ந்த உலகம். அன்னீர்! மிக்கோரையும்; நீர்மையும் பார்த்து நேரில் அல்லால், அன்னாளுடைய முலைகட்கு விலையாக ஞாலமும் மேருவும் தரமோ? எனக் கூட்டுக. தரமாகா என்றபடி; ஓ: எதிர்மறை. உச

வரைவு மறுத்தல்

*[தலைவியை மணஞ்செய்து தரற்குத் தமர் மறுத்தலைப் பாங்கி தலைவனுக்கு உரைத்தல்]*

362. முலைமுற் றியமென் முகிணகை மானுக்கு மூதறிவும்
கலைமுற் றியகுல னுங்கல னுகக் கருதுமென்று
மலைமுற் றியபுயத் தாயன்னை கூறமற் றென்னையர்வான்
சிலைமுற் றியவெங் கணைதெரிந் தார்கண் சிவந்துறுத்தே.

(து - ரை.) முலை முகிழ் முற்றிய மெல் நகை மானுக்கு-முல்லை முகையையொத்த மெல்லிய பற்களையுடைய மான் போன்ற தலைவியை மணஞ்செய்து கொடுத்தற்கு; முலை - முல்லை; தொகுத்தல் விகாரம்; கொங்கையுமாம். மூதறிவு என்றது, அவள் மணஞ் செய்து தருதற்குரிய தகுதியுற்றுளென்றபடி. கலை முற்றிய குலன் - தலைவியின் மூதறிவுக்கேற்ற தலைவனது கல்வி மிக்க குலத்தின் மேன்மை. கலன்- மணப்பரிசம். கருதும் - கருதிக் கொடுப்பீராக. மலை முற்றிய புயத்தாய்-மலைபோன்ற தோளையுடைய தலைவனே. அன்னை - நற்றாய். என்னையர் - தந்தையும், தன்னையரு முதலியோர். வான்சிலை முற்றிய - பெரிய வில்லை வளைக்கும் பொருட்டு. வெங்கணை தெரிந்தார் - கொடிய அம்புகளை ஆராய்ந்தார்; என்றது மணஞ் செய்து தர இணங்காது போர் செய்யப் புறப்பட்டனர் என்றபடி. புயத்தாய்! அன்னை அறிவும் குலனும் கருதுமென்று கூற என்னையர் சிவந்துறுத்துத் தெரிந்தார் எனக் கூட்டுக. உரு

அறத்தொடு நிற்றல் முற்றும்

## கஎ. உடன் போக்கு

*[தமரைப் பிரிந்து தலைவி தலைவனுடன் போதல்]*

### பாங்கி தலைவற்கு உடன்போக்கு உணர்த்தல்

*[தலைவியை மணஞ்செய்து தருதற்குத் தமர் உடன்படாமையின், நீ இவளை உடன்கொண்டு செல்கவென்று பாங்கி தலைவனுக்கு உரைத்தல்]*

**363.** வரிநீல மன்ன மதர்விழி மாதின் வனமுலைக்கு
விரிநீ ருலகு விலைபொருந் தாரெமர் வெள்ளருவி
சொரிநீல வெற்பநின் தோளன்றி வேறு துணையுமில்லைப்
புரிநீ யிவள்புனை யும்பழி நீங்கிப் புகழெய்தவே.

(கு - ரை.) வரி - செவ்வரி; அழகுமாம். மதர் - களிப்பு. மாது: தலைவி. விரிநீர் உலகு - கடல் சூழ்ந்த உலகத்தையே கொடுப்பினும். எமர் விலை பொருந்தார் - எம்மவர் விலையாக ஏற்றுக்கொள்ள உடன்படார். (364) வெற்ப: தலைவ. இவள்: தலைவி. புனையும் பழி - அலரால் எய்தும் பழி; பிறர் வரைவால் நேரும் பழியுமாம். புகழ் எய்தப் புரி என்றது உடன்கொண்டு செல்க என்றபடி. வெற்ப! எமர் பொருந்தார்; இல்லை; (ஆதலின்) இவள் நீங்கி எய்தப் புரியெனக் கூட்டுக. க

### தலைவன் உடன்போக்கு மறுத்தல்

*[தலைவியின் மென்மைத் தன்மையைக் கூறித் தலைவன் அவளை உடன்கொண்டு செல்ல மறுத்துப் பாங்கியிடம் கூறல்]*

**364.** இலனென்னு நாவினர்க் கில்லென்னு நாவினு மின்சொல்இலாப்
புலனென்னும் நாவிற் புகையெழுங் கானகம் போதுகைக்கு
மலர்மன்னு பாயலில் வைக்கினுங் கைக்கு மலரடிகள்
கலன்மன்னு கொங்கைநல் லாய்வல்ல வோநின் கனங்குழைக்கே.

(கு - ரை.) இலன் என்னும் நாவினர்க்கு இல் என்னும் நாவினும் - இல்லையென்று கூறி இரக்கும் நாவினையுடைய வறியவர்க்கு இல்லையென்று கூறி ஈயாத இவறன்மை (உலோபம்)யுடையோர் நாவினும். புலன் என்னும் - ஐம்புலன்களில் ஒன்றென்று கூறப்படும். இரப்போர்க்கு இல்லை என்னும் நாவும், இன்சொல் கூறாத நாவும் மிகக்கொடியன என்பது கருத்து. நாவின் - நாவினும்

மிகுதியாக. போதுகைக்கு - செல்வதற்கு. மன்னுபாயலில் - மிக்க படுக்கையில். கைக்கும் - வருந்தும். கலன்மன்னு - அணிகலன்கள் பொருந்திய. நல்லாய் - தோழியே. கனங்குழை : தலைவி. நல்லாய். போதுகைக்குக் கனங்குழைக்கு அடிகள் வல்லவோ ? எனக் கூட்டுக: ‘அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர், அடிக்கு நெருஞ்சிப் பழம்’ - குறள் - ககஉ0. உ

### பாங்கி தலைவனை உடன்படுத்தல்

*[உடன்படுத்தல்—உடன்படச்செய்தல்]*

365. வல்லினும் நல்ல வனமுலை யாள்மண் ணெலாமுறங்கும்
அல்லினும் வாணெடுங் கண்ணடை யாம லருந்தனிகூர்
இல்லினு மெல்லிய லீரென்செய் தீரென் றிரங்குமன்னை
சொல்லினும் வெய்யதன் றேசொன்ன நாவும் சுடுசுரமே.

(து - ரை.) வல் - சூதாடு கருவி; முலைக்குவமை. வனம் - அழகிய. முலையாள் : தலைவி. மண் எலாம் - மண்ணுலகத்துள்ள உயிரெல்லாம்; இடவாகு பெயர். அல் - இரவு. வாள் - ஒளி பொருந்திய. வாள்போன்ற எனலுமாம். கண்ணடையாமல் - துயிலாமல். தனிகூர் - பிரிவுத்துன்பம் மிகுகின்ற. மெல்லியலீர் - நற்றாய் பாங்கியையும் தலைவியையும் விளித்தது. வெய்யது - வெப்பமுடையது. சுரம் - பாலைவனம். நாவும் சுடுமென்றது, அதன் வெம்மை மிகுதியை உணர்த்தி நின்றது : ‘அதன் பேருரைத்தால் ! வாயும் சுடும் என் மனமும் சுடும்’ - கோடீச் - ஙகசு. முலையாள் கண்ணடையாமல் தனிகூர் (தற்கிடமாகிய) இல்லினும் சுரம் வெய்யது அன்று எனக் கூட்டுக. ங

### தலைவன் போக்கு உடன்படுதல்

*[போக்கு—தலைவியை உடன் அழைத்துப் போதற்கு]*

366. இன்னாத கானு மினிதென்று நீரிங் கியைந்தஅன்பும்
அந்நா ளளித்த அணங்குமுண் டேயென்ற னுவியன்ன
மின்னார் திருந்திழை மெய்வருந் தாவகை மெல்லமெல்லப்
பன்னாள் படவு முடன்கொண்டு சேறு பணிமொழியே.

(து - ரை.) இன்னாத கான் - துன்பந்தரும் பாலைவனம். இயைந்த - பொருந்திய. அணங்கு : தலைவி. மின் ஆர் திருந்திழை —

ஒளிபொருந்திய திருத்தமான அணிகளையணிந்த தலைவி. பல் நாள் படவும் - பலநாள் ஆகுமாயினும். சேறு - செல்வேன், பணி மொழியே - பணிந்த மொழியினையுடைய தோழியே. அன்பும் அணங்கும் (எனக்குத் துணை) உண்டு; (ஆதலின்) படவும் மெல்ல மெல்ல உடன்கொண்டு சேறு எனக் கூட்டுக.

(வே. ம்.) அன்னாள் அளித்த; எனதாவி; ஆவி அன்னார்; சேறும் பனிமொழியே. இ - வி. ௧௬௪. ௪

பாங்கி தலைவிக்கு உடன்போக்கு உணர்த்தல்

**367.** குறுந்தாள் மலர்க்குர வும்நெடுந் தாள்மலர்க் கோங்கமுநின்
நறுந்தார் குழலுக்கு நல்குவர் நாளை நணுகலரைச்
செறுந்தாரை வேல்வல்ல சேயனை யார்தம் திருமெய்நொந்து
பெறுந்தா யுனைவளர்க் கப்பெற்ற தாயுடன் பேதுறவே.

(கு - ரை.) குறுந்தாள் குரவுமலர் - சிறிய காம்பினையுடைய குராமலர். நெடுந்தாள் கோங்கமலர் - நீண்ட காம்பினையுடைய கோங்கமலர். ஈரிடத்தும் 'தாள்' என்பதற்கு அடிமரம் எனலுமாம். நறுந்தார் - நல்ல மாலையை யணிந்த. நணுகலரைச் செறும் - பகைவர்களை அழித்தற்குரிய. தாரை - கூரிய. சேய் அனையார் - முருகப் பெருமானையொத்த தலைவர். பெறுந்தாய் - நற்றாய். வளர்க்கப்பெற்ற தாய் - செவிலித்தாய். பேதுற - துன்புற. (தலைவியே!) நாளைத் தாயுடன் பெறுந்தாய் பேதுறச் சேயனையார் குரவு கோங்க மலர்களை நின்குழற்கு நல்குவர் எனக் கூட்டுக. பேதுற நல்குவர் என்றதனால் உடன்கொண்டு செல்ல எண்ணியுள்ளார் என்பது கருத்து. ௫

தலைவி நாண் அழிவு இரங்கல்

[தலைவனுடன் சென்றால் தன்னுடைய நாணம் அழிந்துவிடுமேயென்று தலைவி வருந்துதல்; நாண் அழிவு—நாண் அழிதற்கு]

**368.** போகின்ற வானப் புயல்வழி மாறிப் புனலின்றியே
சாகின்ற வேழமுங் கன்றும் பிடியுந் தழலின்றியே
வேகின்ற கானத்து வெற்பர்பின் போக விரும்புநெஞ்சில்
ஆகின்ற அன்புக் கருமந்த நாண மழிகின்றதே.

(கு - ரை.) புயல் - முகில். வழி மாறல், கானத்தின் வெப்பம் தாங்காமையாலென்க. மாறி, மாறவெனத் திரிக்க; எச்சத்திரிபு.

புனல் - நீர். வேழம் - ஆண் யானை. பிடி - பெண் யானை. தழலின்றியே வேகின்ற என்றதனால், கானத்தின் வெம்மை விளங்கும். கானத்து - பாலைவனத்து வழியில். வெற்பர் - தலைவர். ஆகின்ற - வளர்கின்ற. அன்புக்கு - அன்பின் காரணமாக. அருமந்த-அருமருந்தன்ன; மரூஉவழக்கு. மாற இன்றிச் சாகின்ற வேழம் முதலியவை வேகின்ற கானத்துப் போக ஆகின்ற அன்புக்கு அழிகின்றது எனக் கூட்டுக. 'அளிதோ தானே நாணே நம்மொடு - நனிநீடு உழந்தன்று மன்னே இனியே......காமம் நெறிதரக் கைநில்லாதே' - குறுந்.கசகூ.

## தலைவி ஒருப்பட்டு எழுதல்

*[தலைவனுடன் செல்லுதற்குத் தலைவி உடன்பட்டெழுதல்]*

**369.** கடனாக நிற்பது கற்பொன்று மேயென்றுங் கன்னியர்க்கு
மடனாஞ் வருவது போவதன் றேபல வம்பலர்தம்
இடனா மிருப்பதி லெய்துவம் பாலையி லேகுமன்பர்
உடனாகப் போக ஒருப்படு நீயென் உளமகிழ்ந்தே.

(தூ - ரை.) கடனாக நிற்பது - மகளிர் எக்காலத்தும் விடாது தம் கடமையாகக் கைக்கொண்டு நிற்க வேண்டுவது. வருவது போவதாவது: கற்போடு மாறுபடாத காலத்துக் கொண்டும், மாறுபட்டுழி விடுதலுமாம். வம்பலர்தம் இடனும் இருப்பதில் எய்துவம் - புதியவர் வாழும் இடமாகிய இருப்பிடத்தைச் சேர்வோம். அன்பர்: தலைவர். ஒருப்படு - உடன்படுவாயாக. உளம் - நெஞ்சே; அண்மைவிளி. உளம்! கன்னியர்க்கு நிற்பது ஒன்றுமே; நாண் வருவது போவதே; (ஆதலின்) பாலையில் இருப்பதில் எய்துவம் உடன்போக மகிழ்ந்து ஒருப்படு எனக் கூட்டுக. 'உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்-செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று' - தொல் - களவு. உஉ. எ

## வரைவு மாட்சி

*[மணத்தின் மாண்பினை எண்ணித் தலைவி உடன்போக்கிற்கு உடன்பட்டமையைப் பாங்கி தலைவனுக்கு உணர்த்தல்]*

**370.** மின்னே மருங்குல் விளங்குபைங் கோதை விளங்கிழைநின்
பின்னே வருதல் கருதிய போதுமென் பின்னைகின்னை
அன்னே மகவன்பும் அற்றனை யோஎன் றரற்றஅன்பின்
கொன்னே யருமந்த கொங்கைகண் ணீரிற் குளித்தனவே.

(கு - ரை.) மின்னே மருங்குல் - கண்டோர் 'இது மின்னலே' என்று சொல்லத்தக்க இடையினையும். கோதை - மாலையையு முடைய. விளங்கிழை : தலைவி. நின் என்றது தலைவனை. பிள்ளைக் கிள்ளை - இளங்கிளி. அன்னே : கிளி தலைவியை விளித்தது. கிளி தன்னை மகவு என்று கூறிக்கொண்டது ; தலைவி அவ்வாறு வளர்த்த மையால் ; மகவு - குழந்தை. என்று அரற்ற - என்று கூறி யழ. அன்பின் -அன்பால். கொன் ஏய் - பெருமை பொருந்திய, கொங்கை. அருமந்த : ந-சு-அ. (தலைவ!) விளங்கிழை கருதியபோது கிள்ளை 'அன்னே...... அற்றனையோ' என்று அரற்ற அன்பின் கொங்கை குளித்தன எனக் கூட்டுக. அ

பாங்கி கையடை கொடுத்தல்

*[பாங்கி, தலைவியைத் தலைவனிடம் அடைக்கலமாகக் கொடுத்துக் கூறல்]*

371. வடமால் வரைநிலை சாயினும் வார்புயல் வாரிபுகும்
கடனு கியநெறி கைவிட்டு நீங்கினும் கந்தலைக்கும்
மடமாக் களிற்றன்ப நின்னையன் னூர்பின்னை யென்னையன்னூர்
உடனுகு கேண்மை யொழிந்தறி யாரிவ் வுலகத்திலே.

(கு - ரை.) வட மால்வரை நிலைசாயினும் - மேருமலை தன்நிலை குலையினும்; மேருமலை போன்ற தலைவியின் கொங்கை முதுமையால் தளரினும் என்னும் பொருளும் தோன்றிற்று. வார் புயல் - நீண்ட முகில். வாரி - கடல், நீரை முகத்தற்கு. கடன் - கடமை. 'வார் புயல்......நீங்கினும்' என்பது, புயலையொத்த தலைவியின் கரிய கூந்தல், வாரி புகாத நீரற்ற முகில்போல் வெளுப்பினும் என்னும் பொருளும் தந்து நின்றது. கந்து அலைக்கும் - கட்டுத்தறியை அசைக்கின்ற. அடம் மா களிறு அன்ப - பிடிவாதம் பொருந்திய பெரிய ஆண் யானைகளையுடைய தலைவ. பின்னை - ஒருவருடன் உறவு கொண்ட பிறகு. என்னை அன்னூர் என்றது, தலைவியை. ஆகு கேண்மை - கொண்ட உறவினை. அன்ப! இவ்வுலகத்தில் சாயினும் நீங்கினும் கேண்மையைப் பின்னை ஒழிந்தறியார் எனக் கூட்டுக. 'அண்ணாந் தேந்திய வனமுலை தளரினும், பொன்னேர் மேனி மணியிற் றாழ்ந்த, நன்னெடுங் கூந்தல் நரைபொடு முடிப்பினும்' நீத்தல் ஓம்புமதி பூக்கே ழூர' - நற்றிணை - ௧0. கூ

### பாங்கி வைகிருள் விடுத்தல்

***[பாங்கி, நள்ளிருளில் தலைவியைத் தலைவனுடன் அனுப்புதல்; வைகிருள்—தங்கிய இருள்]***

**372.** **ஊருங் கலிகெழு சேரியுந் தாயரு முட்புலம்பத்**
**தேரும் பழிபுக ழாக்கிவந் தெய்துவை சேயனையாய்**
**வாரும் மணிவடம் வம்பும் பொருமுலை வல்லியுடன்**
**யாரும் துயில்கொள்ளு நள்ளிருள் யாமத் தெழுந்தருளே.**

(து - ரை.) கலி கெழு - ஆரவாரம் பொருந்திய. தாயர்: ந-சூஎ. உள் புலம்ப - மனம் வருந்த. தேரும் பழி - தலைவியின் களவொழுக்கத்தை ஆய்ந்து கூறும் அலர்மொழி; அதனைப் புகழாக்கலாவது: அவ்வலர் மறையும்படி தலைவியை மணந்து வாழ்தல். சேய் அனையாய் - முருகப்பெருமானையொத்த தலைவனே. வார்மணி வடமும் என உம்மையைப் பிரித்துக் கூட்டுக; நீண்ட மணிமாலையும் என்பது பொருள். வம்பு - கச்சு. வல்லி: தலைவி. சேயனையாய்! புலம்ப வல்லியுடன் எழுந்தருள்; (பின்) புகழாக்கி எய்துவை எனக் கூட்டுக.

(வே - ம்.) கலிகெழும்; எய்துவல்; பருமணி வம்பும். இ-வி. கசூச. க௦

### தலைமகளைத் தலைமகன் சுரத்து உய்த்தல்

***[தலைவன் தலைவியைப் பாலைநிலத்து வழியில் அழைத்துக் கொண்டு செல்லல்]***

**373.** **செல்லுஞ் சுரமனல் தீந்திலை மாறிய திண்புறவம்**
**கல்லுங் குலவுமென் றஞ்சல்மின் னேயருங் கான்துறையும்**
**அல்லும் பகலும் அரிவரி தாவும் அகன்பொழிலும்**
**நெல்லுங் கரும்புஞ் சுரும்பமர் காவியும் நீழலுமே.**

(து - ரை.) சுரம் - பாலைநில வழியானது. அனல் தீந்து இலை மாறிய - தீச் சுடுதலால் இலைகள் எல்லாம் எரிந்தொழிந்த. திண் புறவம் - வலிய காடாகும். குலவும் - கிடக்கும். அஞ்சல்-அஞ்சாதே. மின்னே: தலைவியே. கான் துறையும்-காட்டு வழியாயினும். அல்-இரவு. அரி வரி - அழகிய வண்டுகள். பொழில் - சோலை. சுரும்பு அமர் காவி - வண்டுகள் பொருந்திய நீலமலர். நீழல் - நிழலுள்ள இடம். மின்னே! 'சுரம் புறவமாகும்; (மேலும்) கல்லும் குலவு மென்று அஞ்சல்: கான்துறையும் பொழில் முதலியன (போலவே நமக்கின்பம் தரும்) (அமைந்திருக்கும்) எனக் கூட்டுக. கக

### தலைமகன் தலைமகள் அசைவறிந்து இருத்தல்

*[அசைவு—தளர்ச்சியை: இருத்தல்—இளைப்பாற இடைவழியில் தங்கல்]*

**374.** திருந்திய பஞ்சென வஞ்சுநின் கஞ்சமென் சீறடிகள்
வருந்திய செந்தளிர் வண்ணமும் வாடின மாதவியுங்
குருந்தமு மந்தண் குராவு மராவுமென் கோங்கமுடன்
பொருந்திய சோலை யிருந்தசை வாறுதும் பொற்கொடியே.

(து - ரை.) பஞ்சென - பஞ்சைப்போல. கஞ்சம் மெல் சீறடிகள் வருந்திய - தாமரைமலர்போன்ற மெல்லிய சிறிய அடிகள் வருந்தின: ௩௯௮. வண்ணம் - நிறம். மாதவி - குருக்கத்திக்கொடி. குருந்தம் முதலியன மரவகை. அம் தண் - அழகிய குளிர்ந்த. அசைவு - இளைப்பு. ஆறுதும் - ஆறுவோம். பொற்கொடியே: தலைவியே! அடிகள் வருந்திய; வண்ணமும் வாடின; (ஆதலின்) சோலையிலிருந்து அசைவு ஆறுதும் எனக் கூட்டுக. ௧௨

### உவந்தலர் சூட்டி உள்மகிழ்ந்து உரைத்தல்

*[தலைவன் தலைவிக்கு மலர்பறித்துச் சூட்டி மனமகிழ்ந்து உரைத்தல்]*

**375.** விண்ணுங் கருகுங் கொடுஞ்சுரம் போந்து வெயிலெறிப்ப
வண்ணங் கருகிய வல்லிபொற் றோளும் வனமுலையுந்
தண்ணங் குரவ மணநாறுங் கோதையந் தண்ணளியுங்
கண்ணுங்கண் டேவெளி யேகளி கூருநங் கண்ணிணையே.

(து - ரை.) விண்ணையும் தன் வெம்மையால் கருகச் செய்யும் சுரம் என்க; சுரம் - பாலைநிலம். வல்லி - தலைவியினுடைய. வனம்- அழகிய. தண் அம் குரவ மணம் - குளிர்ந்த அழகிய குராமலரின் மணம். கோதை - கூந்தல். அளி - அன்பு. வெளியே - வெளிப்படையாக. போந்து கருகிய வல்லியின் தோள் முதலியவற்றை வெளியே கண்டே நம் கண்ணிணை களிகூரும் எனக் கூட்டுக. ௧௩

### தலைவன் மகிழ்ச்சி

*[தலைவன் தன் மகிழ்ச்சியால் தலைவியைப் புகழ்ந்துரைத்தல்]*

**376.** தொகத்தா மரைவெஞ் சுரத்துவெண் பாடலஞ் சோலையிலென்
னகத்தா மரையின் றலர்த்திய வாவிவ் வலங்கல்சூற்று
னகத்தா மரையுங் கழுநீர் மலரன்ன நாட்டமுநன்
முகத்தா மரையரும் புங்குறு வேர்வு முறுவலுமே.

(கு - ரை.) தாம் மரை தொகு அப் பாடலம் சோலை - தாவும் மானினங்கள் சேர்தற்கு இடமாகிய அந்தப் பாதிரிச் சோலையில். வெஞ்சுரத்து - வெவ்விய பாலைநிலத்து, சோலை. அகம் தாமரை - மனமாகிய தாமரையை. அலர்த்தியவா - மகிழ்வித்த அருமை இருந்த படி என்னே அலங்கல் - மாலை. உன் என்றது தலைவியை. நகம் தாமரை - நகக்குறி பொருந்திய தாமரை முகைபோன்ற கொங்கை; நகம் - மலை எனப் பொருள் கொண்டு மலையும், தாமரை முகையும் போன்ற கொங்கை எனலுமாம்; விரல் நகங்களைக் கொண்ட தாமரைபோன்ற கையுமாம். நாட்டம் - கண். அரும்பும் - தோன்றுகின்ற. முறுவல் - பல். நகத்தாமரை முதலியன என் அகத்தாமரையை அலர்வித்தவா! எனக் கூட்டுக. கசு

கண்புதை நாண மீதூரல்

*[தலைவன் தன்னைப் புகழ்தலைக் கேட்ட தலைவி நாணம் மிகுதலால் தன் கண்களைப் புதைத்துக்கொள்ளல்; இச்செய்யுள் கவிக்கூற்று]*

**377.** நெய்யொன்று நீள்சுடர் வேற்கடுங் காளை நிரைவளைநீர்
கொய்யுங் குரவு மராவுந் தொடுத்துக் குழலணியச்
செய்யுந் தவமற்றி யாவர்செய் தாரெனச் செங்குழைதோய்
மையுண் குவளையின் மேல்வளைக் காந்தள் மலர்ந்தனவே.

(கு - ரை.) நெய் ஒன்று - நெய் பூசிய, வேல். தலைவன் கையிற் கொண்ட வேற்படைக்கு அடைமொழி. இத்தொடர் "நீரேந்தி நெய்மிதந்து நிணம் வாய்ப் பில்கி அழல்விம்மிப், போரேந்திப் பூ அணிந்து புலவுநாறும் புகழ் வேலான்." என்னும் சிந்தாமணிக் கருத்துக்கு ஏற்ப அமைந்திருத்தல் காண்க. காளை - தலைவன். நிரைவளை - தலைவியே; அண்மைவிளி. குரவு - குராமலர்: நடசுஎ. மரா - வெண்கடப்பமலர். என - என்று சொல்ல. குழை தோய் - குழையைச் சென்று பொருந்துகின்ற: சுரு. குவளை - குவளை போன்ற கண். வளை - வளையலணிந்த. காந்தள் - செங்காந்தளை யொத்த கை; இது சிறப்புருவகம். கண்களைக் கையால் மூடிக் கொண்டமையைக் 'குவளையின்மேல் காந்தள் மலர்ந்தன' என்று நயம்படக் கூறினார். காளை, 'நிரைவளை! தொடுத்து அணிய (என்னைப்போல்) யாவர் தவம் செய்தார்?' என மலர்ந்தன எனக் கூட்டுக. கடு

### கண்டோர் அயிர்த்தல்

*[தலைவனையும் தலைவியையும் இடைச்சுரத்துக் கண்டோர் 'இவர் யாவர்' என ஐயுற்றுக் கூறல்]*

**378.** கருவார் புயலென்றுங் கண்டறி யாதஇக் கானகத்தே
வருவார் சிலரிவர் மற்றிவர் யாவர்கொல் வாரிதந்த
திருவா மெனிலிவள் செங்கையிற் பங்கய மில்லைசெல்வன்
மருவார் துளவணி மாலெனில் மார்பின் மறுவில்லையே.

(து - ரை.) கருவார் புயல் - கருக்கொண்ட நீண்ட முகில்; கண்டறியாத கானகம் என்றமையின், அதன் வெம்மை விளங்கும். நசுஅ. வருவாராகிய இவரென்க. வாரி தந்த - பாற்கடல் பெற்ற. திரு - திருமகள். பங்கயம் - தாமரைமலர். செல்வன் என்றது தலைவனை. மரு ஆர் துளவு - மணம்பொருந்திய துளசிமாலையை. மால்- திருமால். மறு - மச்சம் என்னும் மறு. கானகத்தே சிலர் வருவார்: (இவருள்) இவள் திருவாமெனில் பங்கயமில்லை; செல்வன் மாலெனில் மறுவில்லை; (ஆதலின்) இவர் யாவர் எனக் கூட்டுக. மற்று, கொல்: அசைகள்.

(வே - ம்.) புயலொன்றும்; சிலரிலர். இ - வி. கசகூ. கரு

### கண்டோர் மகிழ்ச்சி

*[பாலைநிலத்தைக் கடந்து வந்த தலைவன் தலைவியரைக் கண்டோர் மகிழ்ந்து கூறுதல்]*

**379.** முன்செல்ல நாணும் முகிழ்நகை வல்லி முருகனிவன்
பின்செல்ல எண்ணும் பிடிநடை காணஇப் பேருலகில்
புன்செல்வர் தேடும் பொருள்போ லிறுகப் பொதிந்தவண்ணம்
என்சொல்லி யெங்ஙன் தொலைந்ததிவ் வாறிவ் விருஞ்சுரமே.

(து - ரை.) முன் - தலைவனுக்கு முன்னே. முகிழ் நகை வல்லி- முல்லை முகைபோன்ற பற்களையுடைய தலைவி. முருகனையொத்த இத்தலைவன் என்க. பின் - தலைவியின் பின்னே. பிடிநடை - பெண் யானையின் நடைபோன்ற, தலைவி நடக்கும் நடை. இறுகப் பொதிந்த வண்ணம் தேடும் பொருள்போல் எனக் கூட்டுக; இறுகப் பொதிந்த வண்ணம் - கெட்டியாகப் பிடித்த தன்மையோடு. புன்செல்வர், தாம் தேடிய பொருளைக் கெட்டியாகப் பற்றினும் அது நிலைபெறுமையின்

இங்ஙனம் கூறினர்; 'கலர் தேடிய செல்வம்' - கஉகூ. வல்லி முன் செல்ல நாணும்; இவன் நடை காணப் பின் செல்ல எண்ணும்; இவ்வாறு சுரம், பொருள்போல் தொலைந்ததை என் சொல்லி எங்ஙன் (கூறுகேன்) என ஒரு சொல் வருவித்து முடிக்க.

(வே - ம்.) பின் செல்ல நாணும் : பொதிந்த வன்பை துலைந்தது. இ - வி. கசுஅ. கஎ

வனத்திடைப் பெண்டிர் நினைத்தமை கூறல்

*[சுரத்தின் இடைவழியில் உள்ள பெண்கள் இவர்களைக் கண்டு நிகழ்த்திய செயலைக் கூறல்; கவிக்கூற்று]*

**380.** அன்போ டுருகிய வார்கழைக் கானிடை ஆர்கழலோன்
பின்போ மிளங்கொடி பெண்ணலங் கண்டு பெருந்தடங்கண்
மின்போல் மகளிர்தம் மேவுங் கொழுநரை வேட்கையுடன்
என்போ டுறப்புல்லி யேகவொட் டார்தம் இயல்கடந்தே.

(கு - ரை.) ஆர் கழைக் கான் - நிறைந்த மூங்கிலையுடைய காடு. ஆர் கழலான் - ஒலிக்கின்ற வீரக்கழலை யணிந்த தலைவனது உருகிய இளங்கொடியென இயைக்க. இளங்கொடி பெண்ணலம் - இளங்கொடி போன்ற தலைவியின் பெண்மையழகை. கொழுநர் - கணவர். என்பு - எலும்பு. புல்லி - தழுவி. ஏக ஒட்டார் - பிரிந்து செல்ல விடார். இயல் கடந்து-தம் கருத்திற்கு மாறுபட்டு. கானிடை போம் கொடி நலம் கண்டு மகளிர் கொழுநரைப் புல்லிக் கடந்து ஏக ஒட்டார் எனக் கூட்டுக. கஅ

கண்டோர் இரங்கல்

*[இடைவழியில் தலைவியைக் கண்டோர், அவள் நற்றாயின் துயரை எண்ணி வருந்திக் கூறல்]*

**381.** பேதைப் பருவங் கழிந்திலள் இன்னமும் பேணியதன்
காதற் கொழுநன் விழுமிய கேண்மையைக் காதலித்துப்
போதற் கரிய எரியழற் கானகம் போந்தஇந்த
மாதைப் பயந்த மடந்தையெவ் வாறுயிர் வாழ்ந்தனளே.

(கு - ரை.) பேதைப் பருவம்: ஏழுவயதிற் குட்பட்டது. பேணிய - விரும்பப்பட்ட. கொழுநன் - கணவன். விழுமிய கேண்மையை - சிறந்த உறவை. போந்த - வந்த. மாதைப் பயந்த - தலைவியைப் பெற்ற. மடந்தை : நற்றாய்.

(வே - ம்.) எரியனற் கானகம். இ - வி. கசுஏ. கக

### கண்டோர் காதலின் விலக்கல்

*['தலைவி வருந்தினள்; பொழுது போயிற்று; இருளில் நீவிர் இவ்வழியே செல்லுதல் தகாது; ஆதலின் இன்றிரவு எம் இல்லில் தங்கிச் செல்க' என்று வழியிற் கண்டோர் அன்பால் தடுத்தல்]*

**382.** மையோ டரிக்கண்ணி வண்ணங் கருகி வருந்தினளிவ்
வெய்யோனும் வெற்பில் விழுமன வாயினன் வெம்புலியும்
எய்யோ டிகலும் இருள்துஞ்சும் அல்லிலெம் மில்லில்தங்கி
நெய்யோ டிலங்கிலை வேலைய நீசெல்லு நீணகர்க்கே.

(கு - ரை.) அரி ஓடு - செவ்வரி பரந்த. கண்ணி: தலைவி. வண்ணம் - நிறம். வெய்யோன் - கதிரவன். வெற்பு - மறைமலை; அத்தகிரி என்பர் வடநூலார். எய்யோடு இகலும் - முள்ளம் பன்றியோடு போர் செய்யும். துஞ்சும் - தங்கிய. அல்லில் - இரவில். இலங்கு இலை வேல் ஐய - விளங்குகின்ற இலை வடிவமான வேலைத் தாங்கிய தலைவ. ஐய! வருந்தினள்; ஆயினள்; (ஆதலின்) தங்கி நகர்க்குச் செல் எனக் கூட்டுக. ௨௦

### தலைவன் தன்பதி அணிமை சாற்றல்

*[தன் ஊர் அருகில் இருக்கிறதென்பதைத் தலைவன் தலைவிக்குக் கூறுதல்]*

**383.** மாவிடை கொள்ள மலர்ந்தகண் ணாயினி வன்சுரமோர்
ஏவிடை போது மிதுகடந் தால்முன் இரும்பழனப்
பூவிடை வண்டுக் கினியமந் தாரப் புதுநறவைக்
காவிடை வண்டு விருந்திடும் ஊருங் கழனியுமே.

(கு - ரை.) மா - மாவடு; கண்ணிற்கு ஒப்பாகாமையின் ஓட எண்ணி விடை கெர்ள்கின்றதென்க. மலர்ந்த - பரந்த. கண்ணாய்: தலைவியே. எ இடை போதும் - அம்பு விழுந் தூரந்தான் போக வேண்டும்; போதும் - போவோம். இரு பழனம் பூ - பெரிய வயல்களிலுள்ள பூ. நறவு - தேன். காவிடை - சோலையிலுள்ள. கண்ணாய்! சுரம் கடந்தால் பூவிடை வண்டுக்குக் காவிடை வண்டு நறவை விருந்திடும் ஊரும் கழனியுமே எனக் கூட்டுக.

(வே - ம்.) கண்டோர் தன்பதி அணிமை சாற்றல். ௨௧

தலைவன் தன்பதி அடைந்தமை தலைவிக்கு உணர்த்தல்

**384.** பாவையர் கொய்யும் பனிமலர்க் காவிது பாவையர்தம்
ஆவியன் னருட னுடுந் துறைய தரும்பவிழ்பூங்
காவி களைந்து கடைசிய ரார்க்குங் கழனியுடன்
ஓவிய மாளிகைச் சூழ்விது காண்நம் உறைபதியே.

(கு - ரை.) பாவையர் : மகளிர். பனி - குளிர்ந்த. கா - சோலை. ஆவியன்னார் - கணவர். ஆடும் - நீராடும். அவிழ் - மலர்கின்ற. காவி - குவளையை. களைந்து - களையெடுத்து. கடைசியர் ஆர்க்கும் - உழவர் மகளிர் ஆரவாரிக்கும். ஓவியந் தீட்டப்பட்ட மாளிகை யென்க. சூழ்வு - இடம். பதி - ஊர். இது கா; அது துறை; இது மாளிகைச் சூழ்வு; (இவை யாவும் பொருந்திய) நம் பதியைக் காண் எனக் கூட்டுக. உ௨

தலைவன் தலைவியோடு தன்மனை சார்தல்

**385.** சங்க முழங்க மணிமுர சார்ப்பத் தமரெதிர்கொள்
அங்க ணலந்திக ழாவணம் போயகன் மாளிகையில்
பொங்கிலை வேலனும் பூவையு மேவினர் புண்டரிகச்
செங்கண் மலர்த்திகி ரித்திரு மாலுந் திருவுமொத்தே.

(கு - ரை.) மணி - அழகிய. ஆர்ப்ப - ஒலிக்க. தமர் - தம் உறவினர். ஆவணம் போய் - கடைத் தெருவைக் கடந்து. இலை வேலன் - இலைவடிவமாகச் செய்த வேலை ஏந்திய தலைவன். பூவை : தலைவி : க௦௬. புண்டரிகம் - தாமரைமலர்போன்ற. திகிரி - சக்கரப் படை. கண்மலரையும் திகிரியையும் உடைய திருமால் என்க. மாலும் திருவும் ஒத்தல் : ௩௭அ. வேலனும் பூவையும், மாலும் திருவு மொத்து முழங்க ஆர்ப்ப எதிர்கொள்(ள) [பெயரெச்ச அகரம் தொக்கது] ஆவணம் போய் மாளிகையில் மேவினர் எனக் கூட்டுக. எதிர்கொள் மாளிகையெனக் கூட்டி, எதிர்கொள்ளப்படும் மாளிகை யில் மேவினர் எனப் பொருளுரைக்கினும் பொருந்தும்.

(வே - ம்.) தன்மனை சாரல்; (துறை). செங்கை வலந்திகிரி. இ. வி. க௬௬. உ௩

உடன்போக்கு முற்றும்

## ௧௮. கற்பொடு புணர்ந்த களவை

*[தலைவி தன் கற்பைக் காக்கும்பொருட்டுத் தலைவனுடன் கூடிச் சென்றமையைப் பலரும் அறிதல் ; களவை—பலர் அறிசொல்]*

### செவிலி பாங்கியை வினவுதல்

*[செவிலித்தாய் பாங்கியை நோக்கி, 'தலைவி எங்கே போயினள்' எனக் கேட்டல்]*

**386.** மானுங் கிளியு மயிலும் பயில வளர்த்தெடுத்த
யானும் பரிவுற ஈன்றநற் றாயு மிரங்கிநையத்
தேனுங் குயிலு மனையசொல் லாள்சுரஞ் சென்றதுநீ
தானு மறிந்திலை யோமுன்செய் பாவந் தளிரியலே.

(து - ரை.) *மான் முதலியவை தலைவியால் வளர்க்கப்பட்டவை. பயில - நெருங்க. பரிவுற - அன்பு பொருந்த. நைய - வருந்த. சொல்லாள் : தலைவி. சுரம் - பாலைநிலவழி. தளிரியலே : தோழியே! மானும், கிளியும், மயிலும், யானும் தாயும் நையச், சொல்லாள் சென்றதனை அறிந்திலையோ? (இதற்குக் காரணம் நாம்) முன் செய் பாவம் (போலும்) எனக் கூட்டுக.* ௧

### பாங்கி செவிலிக்கு உணர்த்தல்

*[தலைவியின் மணத்திற்குத் தமர் உடன்படாமையால் அவள் தலைவனுடன் போயினளெனப் பாங்கி செவிலித்தாய்க்குக் கூறுதல்]*

**387.** கூர்ந்த சினக்களி றன்றுவென் றாரினுங் கொள்ளைநிதி
ஈந்த வருக்கென் இளமுலை யாக இருங்குரவர்
நேர்ந்தன ரென்றஞ்சி நென்னலென் னோக்கி நெடிதுயிர்த்தாள்
வார்ந்த கருங்குழல் வல்லிபின் னேக வலித்துள்ளமே.

(து - ரை.) *கூர்ந்த சினக் களிறு - மிக்க சினத்தையுடைய யானையை, வென்றார் : நடுஅ. வென்றாரினும் - வென்ற தலைவர் தரும் பரிசத்தினும். கொள்ளை நிதி - மிக்க மணப் பரிசம். ஈந்தவர் - கொடுத்த அயலார். ஆக - உரிமையாக. இருங்குரவர் நேர்ந்தனர் - பெருமையுடைய தந்தையும் தன்னையரும் உடன்பட்டனர். நென்னல்-நேற்று. என் - என்னை. நெடிது உயிர்த்தாள்-நீண்ட பெருமூச்செறிந்தாள். வார்ந்த-நீண்ட. குழல் வல்லி - கூந்தலையுடைய தலைவி. பின் ஏக வலித்து - தலைவன் பின் செல்லத் துணிந்து. வல்லி,*

சேர்ந்தனரென்று அஞ்சி ஏக உள்ளம் வலித்து நோக்கி உயிர்த்தாளெனக் கூட்டுக. உ

### செவிலி தன் அறிவின்மை சாற்றல்

*[தலைவனுடன் போதலைத் தலைவி குறிப்பால் அறிவித்தும் அதனை அறிந்துகொள்ளாத தன் அறிவின்மையைச் செவிலி கூறிக்கொள்ளல்]*

**388.** மறியுங் கயலு மனையகண் ணுள்வரிப் பந்துதந்துஞ்
செறியும் பசுங்கிளி செங்கையிற் றந்துஞ் செழுந்திவலை
எறியுந் திரையென் றிறுகஎற் புல்லியு மின்னுமின்ன
அறியுங் குறிகள்செய் தாளவ மேயென் னறிவின்மையே.

(கு - ரை.) மறி - மான். கண்ணாள் : தலைவி. வரி - அழகிய. பந்து, கிளிகளைத் தரல்: தான் உடன்போதலால் செவிலியிடம் ஒப்படைக்கின்றாளென்க. செறியும் - தன்னுடன் பழகிய. திரை திவலை எறியுமென்று இறுகப் புல்லி - அலையானது நீர்த்திவலைகளை வீசுவதால் குளிர்கின்றதென்று செவிலியை நெருங்கத் தழுவி; இது போலிக் காரணம். மீண்டுவர எத்துணைநாள் ஆகுமோ என்று கருதித் தழுவினாளென்க. அவம் - வீணாகச் செய்தது. கண்ணாள் தந்தும் புல்லியும் செய்தாள் ; அறிவின்மை அவம் எனக் கூட்டுக. ௩

"..........கருங்கண்ணி குறிப்பறியேன்.
பூவைதந் தாள்பொன்னம் பந்துதந்
தாள்என்னைப் புல்லிக்கொண்டு
பாவைதந் தாள்பைங் கிளியளித்
தாள் இன்றென் பைந்தொடியே."

(திருக்கோவையார்)

### செவிலி தேற்றுவோர்க்கு எதிரழிந்து மொழிதல்

*[செவிலி தனக்கு ஆறுதல் கூறுவோர்க்கு எதிரே மனம் வருந்திக் கூறல்]*

**389.** தோற்றந் திருவனை யார்சுரம் போன துணிவுகண்டீர்
ஆற்றுந் தெரிவைய ராற்றல்கண் டீரின் னமுதருந்திப்
போற்றுங் கிளியுமென் பாவையும் பூவையும் போற்றசெஞ்சொல்
மாற்றம் பொறுக்கவற் றேதெரி வீர்நம் மடநெஞ்சமே.

(கு - ரை.) தோற்றம் திரு அனையார் - வடிவால் திருமகளை யொத்த தலைவி. ஆற்றும் தெரிவையர் ஆற்றல் - ஆறுதல் கூறுகின்ற மகளிரின் மனவலிமை. அமுது - பால். போற்றும் - தன் உயிரைப் பாதுகாத்துக்கொள்ளும். பாவை - விளையாட்டுப் பாவை: நடுசு. பூவை - நாகணவாய்ப் புள்: நஅறி. செஞ்சொல் மாற்றமாவது, தலைவி எங்கேயென்று கேட்டல்; ஒரு பொருட் பன்மொழி. தெரிவீர் - அறிவீராக. சொல்லாத பாவையையும் சொல்லியதாகக் கூறியது மரபு வழுவமைதி: கடஎ. துணிவு கண்டீர்; ஆற்றல் கண்டீர்; நெஞ்சம் பொறுக்கவற்றோ? தெரிவீர் எனக் கூட்டுக. ௪

தெய்வம் வாழ்த்தல்

*[விரைவில் தலைவி மீண்டு வருமாறு செய்யவேண்டுமென்று செவிலி கடவுளை வாழ்த்தல்]*

**390.** வேமாறு செல்லஎம் மெல்லிய லாளை விதித்தனைநீ
ஆமாறு செய்தனை யாரணங் கேஇதற் கருளொழிந்தால்
ஏமாறு வண்ண மிதற்கொன்று மில்லையொ ரேதிலன்பின்
போமாறு செய்தனை நீவரு மாறு புரிந்தருளே.

(கு - ரை.) வேம் ஆறு - வேகின்ற பாலை வழியில். மெல்லியலாள்: தலைவி. ஆம் ஆறு - ஆகவேண்டியதையே; என்றது தலைவியின் கற்பழியாமையை. ஆர் அணங்கே - அரிய கடவுளே. ஏம் மாறு வண்ணம் இதற்கு - கலக்கம் நீங்கும் வழியாகிய இதற்கு. ஏதிலன்- அயலான்; என்றது தலைவனை. அணங்கே! நீ விதித்தனை; செய்தனை; இதற்கு அருளொழிந்தால் (வேறு துணை) ஒன்றும் இல்லை; (ஆதலின்) செய்தனை; புரிந்தருள் எனக் கூட்டுக.

(வே - ம்.) வேமாறு செய்ய என்; விடுத்தனைநீ; யாமாறு வண்ணம்; செய்வித்த நீவருமாறும் புரந்தருளே. இ-வி. கசுசு. ஞ

செவிலி நற்றயக்கு உரைத்தல்

*[தலைவி தலைவனுடன் சென்றமையை உரைத்தல்]*

**391.** தொடுப்பார் தொடுத்தலர் தூற்றும் படிவந்து சூழ்விதியைத்
தடுப்பா ரெவரினிச் சாற்றுவ தென்கொல் தடத்தில்முன்வீழ்ந்
தெடுப்பா ரொருவ ரிருப்பநின் முர்தம் மிருநிதிக்குக்
கொடுப்பா ரிசைந்தன மென்றுசொன் னுன்நங் குலக்கொடியே.

(கு - ரை.) தொடுப்பார் - பழிச்சொற்களைத் தொடுத்துக் கூறுவார். அலர் - பழிச்சொல். தடத்தில்-சுனையில். வீழ்ந்து - பாய்ந்து. எடுப்பான் : தலைவன் : நடுவே. இருப்ப - மணக்க இருக்க. நின்றூர்: அயலார். இருநிதி - பரிசம். கொடுப்பான் - கொடுக்க. கொடி: தலைவியை. எடுப்பான் இருப்ப, நின்றூர் நிதிக்கு நம் கொடியைக் கொடுப்பான் இசைந்தனம் என்று சொன்னால், விதியைத் தடுப்பார் எவர்? சாற்றுவது என்? எனக் கூட்டுக.

(வே - ம்.) தூற்றும் பழி; சொன்னணம். இ - வி. கசுசு. · சு

நற்றாய் இரங்கல்

392. பூவையுண் டோபுனக் கிள்ளையுண் டோவெண் புதியமணற்
பாவையுண் டோபெற்ற பாவியுண் டோகுன்று பார்த்தழைக்கும்
தேவையுண் டோகற்ற சிற்றிலுண் டோமற்றென் குற்றமுண்டோ
யாவையுண் டோமக ளேசொல்லு நீயவ் வருஞ்சுரத்தே.

(கு - ரை.) பூவை - நாகணவாய்ப்புள். கிள்ளை - கிளி. மணற் பாவை - மணலால் செய்த வண்டலம் பாவை. தன்னைப் 'பாவி' என்று சொல்லிக்கொண்டாள், வருத்தம் நோக்கி. குன்று......... தேவை - வரையெதிர் கூவல் என்னும் விளையாட்டு: அநு. கற்ற - விளையாடக் கற்ற. சிற்றில் - சிறுவீடு. யாவை - எவையேனும். சுரம் - பாலைவழி. யானொரு குற்றமும் செய்யாதிருந்தும் பூவை முதலியவற்றை விட்டு எவ்வாறு ஏகினாய் என்பது கருத்து. மகளே! சுரத்தே பூவை முதலியனவுண்டோ? (அன்றி) யான் செய்த குற்றமுண்டோ? யாவை உண்டோ? நீ சொல்லு எனக் கூட்டுக.

(வே - ம்.) என்புதிய மன்றற் பாவை; சுற்றமுண்டோ? செல்லு நீ இவ்விருஞ் சுரத்தே; சுரமே. இ-வி. கசுசு. எ

நற்றாய் பாங்கி தன்னொடு புலம்பல்

*[பாங்கி—தலைவியின் உயிர்த் தோழி]*

393. தாயென்செய் தாளென்று தள்ளியென் பாவைதன் பான்மயங்க
மாயஞ்செய் தானொரு வள்ளல்பின் னேயழல் வன்சுரத்துப்
போயென்செய் தாளென் றறிகில னென்றும் பொறியிலியேன்
நீயென்செய் தாய்மக ளேகண்க ணீர்மல்க நின்றுநின்றே.

(கு - ரை.) 'தாய்' என்று தன்னையே படர்க்கையாகக் கூறினு ளென அறிக. என் செய்தாள் - என்ன குற்றம் செய்தாள்; 'என் குற்றமுண்டோ' - ௩கூக. தள்ளி - தாயை நீக்கிவிட்டு. பாவை: தலைவி. தன் என்றது தலைவனை. செய்தான் - செய்தவனாகிய, வள்ளல்: தலைவன். என் செய்தாள்: என்ன துன்புற்றாளோ என்ற படி. பொறியிலியேன் - நல்வினை இல்லாதவளாகிய யான். நீ : நற்றாய் பாங்கியை நோக்கிக் கூறியது. மல்க - நிறைய. பாவை தள்ளி வள்ளல் பின்னே போய் என் செய்தாளென்று பொறியிலி யேன் ஒன்றும் அறிகிலேன்; மகளே! மல்க நின்றே நீ என் செய் தாய்? எனக் கூட்டுக. 'நீ என் செய்தாய்' என்றது, நீ ஏன் வீணாகக் கண்ணீர் விட்டு வருந்துகின்றாய் என்றபடி.

(வே - ம்.) வெஞ்சுரத்து ; பொறியிலியை ; நீயென் செய்வாய். இ - வி. கரு௬. அ

பாங்கி அயலோடு புலம்பல்

*[அயல்—அயல் மகளிர்]*

**394.** புறந்தாழ் புரிகுழற் பூவைதன் பாவை புனையலங்கற்
சிறந்தா னொருவள்ளல் செங்கைய தாமெனத் தெய்வந்தொழாள்
அறந்தா னிலைபெற் றரும்பழி காக்கு மறிவுநெஞ்சிற்
பிறந்தா ளருஞ்சுரம் பின்செல்ல வேண்டுங்கொல் பேதையரே.

(கு - ரை.) புறம் தாழ் புரிகுழல் பூவை - முதுகின்புறத்தே தாழ்ந்த பின்னிய கூந்தலையுடைய தலைவி. பாவை - விளையாட்டுப் பாவை. புனை அலங்கல் - அணிந்துள்ள மாலை. சிறந்தானாகிய வள்ளல் என்க. வள்ளல்: தலைவனுடைய. செங்கையது - செங்கை தந்தது; ஆல்: அசை. அலங்கல் செங்கையது என இயைக்க; இது பூத்தரு புணர்ச்சியைக் குறித்தது: ௩டுரு. தெய்வம் தொழாமை: கற்புடை மகளிர்க்குக் கணவனையன்றிப் பிறகடவுளரின்மையால். 'தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள் - பெய்யெனப் பெய்யும் மழை' - குறள். ருரு. அறம் - கற்பு. பழிகாத்தல் - அலர் பிறவாது காத்தல். பிறந்தாள்: தலைவி. பேதையரே - அயற் பெண்டிரே! பூவை, செங்கையதாமென நிலைபெற்றுத் தொழாள்; பிறந்தாள்; (இங்ஙனமாயவள்) செல்லவேண்டுங்கொல்? எனக் கூட்டுக.

(வே - ம்.) என்பாவை ; செய்கையதாம் ; செங்கையதால். இ - வி, ௧௯௯. ௯

நற்றாய் அயலோடு புலம்பல்

*[அயலொடு—அயல் மகளிரொடு]*

395. என்போல நீரு மினியருங் காதல்கொண் டேதிலன்றன்
பின்போ மகவைப் பெருதொழி வீர்பெற்ற பாவிமலர்ப்
பொன்போ லரியஎன் பூவையை வெஞ்சுரம் போக்கியிங்ஙன்
அன்போ டழுங்குகின் றேனயல் வாழு மரிவையரே.

(கு - ரை.) இனி அரு - இனிய அரிய. எதிலன் : தலைவன். மகவு - பெண். பாவி - பாவியாகிய யான். மலர்ப்பொன் - திருமகள். பூவை : தலைவி. அழுங்குகின்றேன் - வருந்துகின்றேன். அரிவையரே - பெண்டிரே ! பாவி பூவையைப் போக்கி அழுங்குகின்றேன் ; (ஆதலின்) நீரும் என்போல மகவைப் பெருதொழிவீர் எனக் கூட்டுக. ௧௦

நற்றாய் தலைமகள் பயிலிடத்தோடு புலம்பல்

*[பயிலிடம்—விளையாடுமிடம்]*

396. நன்றே யுமக்கவர் நல்லதெல் லாஞ்சொல்ல நவ்வியிளங்
கன்றே யசூமணிக் கந்துக மேகண் கலந்தழைக்கும்
குன்றே குவளையங் கொய்தட மேயெதிர் கூங்குயிலே
என்றேகொ லும்மையு மென்னையுங் காணவந் தெய்துவதே.

(கு - ரை.) உமக்கு என்றது, பின் வரும் நவ்விக் கன்று முதலியவற்றை. அவர் : தலைவி. நவ்வி - மான். மணிக் கந்துகம்- அழகிய பந்து. கண் கலந்து - பார்த்து. அழைத்தல் - வரை எதிர் கூவல். குவளை கொய் அம் தடமே - குவளைமலரைக் கொய்தற்குரிய அழகிய சுனையே. கூங்குயிலே - குயிலொடு கூவல் என்னும் விளையாட்டு : ௧௯. 'குயிலொடு மாறு கூவுதுமென்றும்' - இறையனாரகப் பொருள் உரை. கன்றே ! கந்துகமே ! குன்றே ! தடமே! குயிலே! உமக்குச் சொல்ல, உம்மையும் என்னையும் காண அவர் எய்துவது என்று ? எனக் கூட்டுக. 'என்றே' என்பதிலுள்ள ஏகாரம் இரக்கங் குறித்து நின்றது. இச்செய்யுள் கேளாதனவற்றைக் கேட்பனவாகக் கூறும் மரபு வழுவமைதி.

(வே - ம்.) குவலேபங் கொய்தடமே; கூர்ங்குயிலே. இ - வி. கக

கக௬௬.

நிமித்தம் போற்றல்

*[தலைவி, தலைவனுடன் மீண்டு வருமாறு கரைவாயாயின் நினக்குச் சிறந்த உணவினைத் தருவேனென்று நற்றாய் நற்குறியை விரும்பிக் காக்கையை நோக்கிக் கூறல்; நிமித்தம்—நற்குறி]*

397. மெய்யோ டரிக்கண்ணி வள்ளலுந் தானும் வரக்கரைந்தால்
நெய்யோ டளைந்த நிணப்பலி நல்குவ னெல்லுணங்கும்
செய்யோடு கெண்டையுஞ் சேலுந் தருகுவன் சேரஎட்டுக்
கையோன் வலத்திருக் கண்பெற்ற காதலன் கார்க்கொடியே.

(து - ரை.) மையோடரிக்கண்ணி: ந௨௨. வள்ளல்: தலைவன். கண்ணியாகிய தானும். கரைந்தால் - கத்தினால். அளைந்த - கலந்த. நிணப்பலி - இறைச்சிஉணவு. நல்குவன் - தருவேன். நெல் உணங்கும் செய் ஓடு - நெற்கதிர்கள் அசைகின்ற வயலில் ஓடும்; 'உணங்கும்' காய்தலுமாம். எட்டுக்கையோன் - சிவபெருமான். (அவனது) வலக்கண் - சூரியன்; சிவபெருமானுடைய முக்கண்களையும் முச்சுடர் என்றல் நூல்மரபு. கண்பெற்ற காதலன் - சனி; இவன் சூரியனுடைய புதல்வனாவன். கார்க்கொடி - கரிய காக்கை; இது சனிக்கு ஊர்தியாதலின், காதலன் கொடியே என்றார். கொடியே! கண்ணியானவள், வள்ளலும் தானுமாய் வரக் கரைந்தால் பலி நல்குவன்; (அதனுடன்) சேரக் கெண்டையும் சேலும் தருகுவன் எனக் கூட்டுக. 'மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை - அன்புடை மரபினின் கிளையோ டாரப் - பச்சூன் பெய்த பைந்நிண வல்சி, பொலம்புனை கலத்தில் தருகுவன் மாதோ - வெஞ்சின விறல் வேற் காளையொடு - அஞ்சில் ஓதியை வரக்கரைந் தீமே'-ஐங். ந௯௧.

(வே - ம்.) வலந்திருக்கண். க௨

சுரம் தணிவித்தல்

*[தலைவி சென்ற சுரம் வெம்மை நீங்குவதாகவென்று நற்றாய் கடவுளை வேண்டல்]*

398. வானஞ் சொரிக மழைகதி ரோனை மறைக்கமஞ்சு
கானந் தழைக்க கனமயி லாலுக காவிடைநல்
தேனுஞ் சுரும்புஞ் செறிகதண் ணீர்வளஞ் செல்கதென்னன்
மீனஞ்சு கண்ணி விடலையின் போகிய வெஞ்சுரமே.

(கு - ரை.) வானம் மழை சொரிக என மாறுக; வானம் - முகில். கதிரோன் - சூரியன். மஞ்சு - முகில். கனம் - பெரிய. ஆலுக - ஆடுக. காவிடை - சோலையில். சுரும்பு - வண்டு. செறிக - மிகுக. செல்க - மிகுக. தென்னன் மீன் - பாண்டியரின் கொடியாக அமைந்த மீன். கண்ணி: தலைவி. விடலை: தலைவன். சுரம் - பாலை நிலத்தில். கண்ணி போகிய சுரத்தில் சொரிக; மறைக்க; தழைக்க; ஆலுக; செறிக; செல்க எனக் கூட்டுக. கங

தன் மகள் மென்மைத்தன்மைக்கு இரங்கல்

*[மெல்லிய தன்மை வாய்ந்த தன்மகள் பாலைநிலத்தில் எவ்வாறு வருந்தினளோ என்றெண்ணி நற்றாய் வருந்தல்]*

399. பஞ்சென வஞ்சும் பதயுகங் காந்தளைப் பாந்தளென்று
அஞ்சு மனம்தனம் ஆகஞ் செறிந்தில யாளிதங்கும்
வெஞ்சுர மின்று விடலையின் போக விரும்பியவா
வஞ்சி மருங்குனல் லீர்வினை யேன்பெற்ற வாணுதலே.

(கு - ரை.) பஞ்சுஎன - பஞ்சென்று கூறினும் அதனை மிதிக்க. பதயுகம் - இரண்டு அடிகளும். பதயுகம் பஞ்சென அஞ்சும் என இயைக்க. பாந்தள்-பாம்பு. ஆகம் செறிந்தில-மார்பில் நெருங்கி வளர வில்லை; என்றது தலைவியின் இளமையை எண்ணி இரங்கியவாறு. விடலை: தலைவன். விரும்பியவா - விரும்பிய தன்மை மிகவும் இரங்கத் தக்கதென்றபடி. வஞ்சி மருங்குல் நல்லீர் - வஞ்சிக்கொடி போன்ற மெல்லிய இடையினையுடைய பெண்களே. வாணுதல்: தலைவி. நல்லீர்! பதயுகம் அஞ்சும்; மனம் அஞ்சும்; தனம் செறிந்தில; (இத்தன்மையளாய) வாணுதல் இன்று சுரம் போக விரும்பியவா எனக் கூட்டுக. பதயுகம் அஞ்சும், மனம் அஞ்சும், தனம் செறிந்தில என்பவைகள். 'மென்மை' 'அச்சம்' 'இளமை'களுக்கு இரங்கல். இம்மூத்துறைகளையும் பிற கோவையாசிரியர் தனித்தனி மூன்று செய்யுட்களில் அமைத்துக் கூறுவர். கச

செவிலி ஆற்றத் தாயைத் தேற்றல்

*[தலைவி பிரிவுக்கு வருந்தும் நற்றாயைச் செவிலி தேற்றுதல்]*

400. அருகாத அன்புட னின்புற மேல்வந் தடுகளிற்றைப்
பொருகாளை பின்சுரம் போயின ளென்று புலம்பினையேல்
குருகார் கமலக் கொடிதங்கு தேயங் குறுகியவர்
ஒருகாலி னுக்கு மொருகையின் நீருக்கு முட்பட்டதே.

(கு - ரை.) அருகாத - குறையாத. உற - பொருந்த. மேல் வந்து அடுகளிற்றை - தலைவிமேல் எதிர்த்து வந்து கொல்ல எண்ணிய யானையை. பொரு காளை - பொருதழித்த தலைவன். புலம்பி நையேல்-அழுது வருந்தாதே. குருகு ஆர் - வண்டுகள் பொருந்திய. கமலக் கொடி - தாமரை மலரிலுள்ள திருமகளையொத்த தலைவி. தங்கு தேயம் - தங்கியுள்ள இடம். குறுகியவர் - குறள்வடிவங்கொண்ட திருமாலும், அகத்தியருமாவர். 'ஒருகாலினுக்கும்......உட்பட்டது' என்றது, திருமால் பேருருக்கொண்டு தன் ஓரடியால் அளந்தபோது அதனுள் அடங்கி நின்றதும், அகத்திய முனிவர் பருகும்பொருட்டு உழுந்தளவாக்கித் தன் ஒருகையிற் கொண்ட கடல்நீரால் சூழப்பட்டதுமாகிய இந்நிலவுலகத்தை. திருமால் உலகளந்ததும், அகத்தியர் கடல் குடித்ததும் பட்டாங்கு. காளைபின் அன்புடன் இன்புறப் போயினளென்று நையேல்; கொடி தங்கு தேயம், காலினுக்கும் நீருக்கும் உட்பட்டதே எனக் கூட்டுக. தலைவி இவ்வுலகப் பரப்பினுள் எங்குற்றாளோ என்று எண்ணி ஏங்கிய நற்றாயை நோக்கிச் செவிலி 'நீ வருந்தற்க; ஒருகைநீரால் சூழப்பட்டதும் ஒருகாலடிக்குள் அடங்கியதுமான நிலத்திற்குட்பட்டதே தலைவியிருக்கும் இடமாதலின் யான் தேடிக்கொணர்வல்' என எளிமை தோன்றுமாறு திறம்படக்கூறினாளென்க. கூ

முக்கோற் பகவரை வினாதல்

*[தலைவியைத் தேடிச் சென்ற செவிலி, தன் எதிரே வந்த மூன்று கோலையுடைய முனிவரை நோக்கி, 'என்மகளொருத்தியும் பிறள் மகன் ஒருவனும் இவ்வழியே செல்லக் கண்டிரோ?' என்று கேட்டல்]*

**401.** **உறித்தாழ் கரகமு மூன்றுமுக் கோலு முடுத்தசெவ்வான்**
**எறித்தா லனைய இருந்துவ ராடையு மிந்திரவி**
**மறித்தா லனைய குடையுங்கொண் டேவரு விரொருவன்**
**நெறித்தாழ் குழல்வல்லி முன்செல்லு மோஇந் நெடுஞ்சுரத்தே.**

(கு - ரை.) உறி தாழ் கரகமும்-உறியில் கட்டப்பட்டுத் தொங்குகின்ற நீர்க்குடமும்; கரகத்தைக் கமண்டலம் என்றும் கூறுவர் வடநூலார். முக்கோல் - மூன்று தலைகளையுடைய தண்டு. உடுத்த-உடுக்கப்பட்ட, ஆடை. செவ்வான் எறித்தால் அனைய - செவ்வானம்

ஒளி வீசினுலொத்த, இருந்தவர் ஆடை-பெரிய காவியுடை. இந்து இரவி மறித்தால் அனைய - திங்கள் கதிரவனைத் தடுத்தது போன்ற, குடை. இல்பொருளுவமையணி. ஒருவன் : தலைவன். நெறி தாழ் குழல் வல்லி - நெறிப்புடன் தாழ்ந்த கூந்தலையுடைய தலைவிக்கு. கரகமும், கோலும், ஆடையும், குடையும் கொண்டே வருவீர்! இச் சுரத்தே ஒருவன் வல்லி முன் செல்லுமோ? எனக் கூட்டுக. கசு

மிக்கோர் ஏதுக் காட்டல்

*['பெண்ணாகப் பிறந்த யாவரும் பிறருக்கு உரிமைப்பட வேண்டியவரே ஆதலின் நீ ஏன் வருந்துகின்றாய்' என்று அம்முனிவர் காரணங் காட்டிக் கூறல்]*

402. முற்று முகிழ்நகை வல்லியை மொய்குழல் முன்வருந்திப்
பெற்று யொழியப் பிறந்திலை யோபிற வாஅமரர்
வற்று உததி மருந்தைமுன் நாளுண்ட வாறறிந்தும்
கற்று வெனநின் றிரங்குதி யோகடுங் கானகத்தே.

(கு - ரை.) முற்று முகிழ் நகை வல்லியை - முல்லை முகை போன்ற இளம்பற்களையுடைய தலைவியை. மொய்குழல் - நெருங்கிய கூந்தலையுடைய செவிலியே. பெற்றாய் ஒழிய - வல்லியைப் பெற்ற தேயன்றி. பிறந்திலையோ - நீ ஒருத்திக்குப் பிறந்து மற்றொருவனுக்கு வாழ்க்கைப்பட்டதில்லையோ; நின் மகளும் அத்தன்மையளே என்பது கருத்து. பிறவா அமரர் - பிறப்பிறப்பற்ற வானவர். உததி மருந்தை - பாற்கடலில் தோன்றிய அமிழ்தினை. அமிழ்து கடலில் தோன்றியும் அதற்குப் பயன்படாது அமரர்க்குப் பயன்பட்டமை போல நின் மகளும் பிறனுக்குப் பயன்படத் தக்கவளே என்பது குறிப்பு. கற்று என - கன்றைப் பிரிந்த பசு வருந்துவதைப்போல. மொய்குழல்! வல்லியைப் பெற்றாய் ஒழியப் பிறந்திலையோ? அமரர் மருந்தை உண்டவாறு அறிந்தும் கானகத்தே இரங்குதியோ? எனக் கூட்டுக. கஎ

செவிலி எயிற்றியை வினுதல்

*['தலைவியைக் கண்டதுண்டோ?' என்று செவிலி பாலைநிலப்பெண்ணை வினுதல்; எயிற்றி—பாலைநிலப்பெண்]*

403. ஒன்றிக் கலந்தங் கொருவரைப் போது மிருவர்தம்மில்
இன்றிக் கடுஞ்சுரத் தேகின ரோஇழை கோத்தணிந்த
வென்றிக் கொடுவரிப் பற்பல பூந்தழை வேய்ந்தஅல்குல்
குன்றித் தனத்துப் புளினர்தங் கோலக் குலக்கொடியே.

(து - ரை.) தம்மில் ஒன்றி - தமக்குள் ஒன்ருகி. இவை டீழ நூலில். வென்றி - வெற்றி. கொடுவரிப் பல் - புலிப்பல்லை, கோத்தணிந்த குலக்கொடியென இயைக்க; 'புலிப்பல் கோத்த புலம்பு மணித் தாலி'—அகம் - எ. தழை வேய்ந்த அல்குல் - தழையுடை அணிந்த அல்குலையும். குன்றி தனத்து - குன்றிமணியைக் கோத்தணிந்த முலையினையும். புளினர் - வேடர். கோலம் - அழகிய. குலக்கொடியே - வேட்டுவக் குலப்பெண்ணே. அல்குலையும் தனத்தையும் உடைய, பல் அணிந்த கொடியே! கலந்து போலும் இருவர் இன்று இச்சுரத்தே ஏகினரோ? எனக் கூட்டுக. கஅ

செவிலி குரவோடு புலம்பல்

*[செவிலி குராமரத்தோடு கூறி வருந்தல்]*

**404.** இரும்பாவை பெற்றனை யின்குர வேயிங்கொ ரேதிலன்பின்
வரும்பாவை நில்லென்ன வாயிலை யோமழைக் கண்மணியுட்
கரும்பாவை யன்னவென் கன்னியைக் கைவிடு மன்னையொத்த
அரும்பாவி நீயு மறிகுவன் பாவி யகன்புறவே.

(து - ரை.) இரும்பாவை என்றது, பெரிய குரவங்காயை; அது பாவைபோன் றிருத்தலின் குரவம்பாவை என்றல் மரபு; பெண்ணைப் பெற்ருய் என்ற பொருளும் தோன்றிற்று. இன்குரவே - இனிய குராமரமே. ஏதிலன்: தலைவன். வரும் பாவை-வருகின்ற தலைவியே! மழை - குளிர்ந்த. மணி உள் - கருவிழிக்குள் இருக்கின்ற. கன்னி: தலைவி. "கருமணியிற் பாவாய்"—குறள் - ககஉ௲. அன்னை - நற்ருய். அகன் புறவு - அகன்ற காட்டின்கண். குரவே! பெற்றனை; (பெற்றும் என்பயன்?) 'பாவை! நில்' என்ன வாயிலையோ? புறவில் நீயும் அன்னையொத்த பாவியே; (அதனை) பாவியாகிய யான் அறிகுவன் எனக் கூட்டுக. ககூ

சுவடு கண்டு இரங்கல்

*[தலைவன் தலைவியருடைய அடிச்சுவட்டைக் கண்டு செவிலி வருந்திக் கூறல்]*

**405.** பூவடி வாளி யெயினர்கண் ணிப்பிறை போந்தவுழை
தாவடி தீயுந் தழனெடும் பாலை தடக்கைவென்றி
மாவடி யாங்கவை பூங்கிவை மாவை மலைந்தவள்ளல்
சேவடி யீங்கிவை செங்கனி வாய்மங்கை சீறடியே.

(கு - ரை.) பூ வடி வாளி-கூர்மையாக வடிக்கப்பெற்ற அம்பினை யுடைய, எயினர் கண்ணி - வேடராது வலையினின்றும், பிழைபோந்த-தப்பிச்சென்ற, உழை தாவு அடி தீயும் தழல் - மானினது தாவிச் செல்லுகின்ற அடிகளும் தீயும்படியான வெம்மையையுடைய. பாலை-பாலைநிலத்தில். தடக்கை வென்றி மா அடி - பெரிய துதிக்கையையும் வெற்றியையுமுடைய யானையின் அடிச்சுவடு. மாவை-அவ்யானையை. மலைந்த வள்ளல் சேவடி - பொருது கொன்ற தலைவனுடைய சிவந்த அடிச்சுவடு. கனிவாய் மங்கை - கொவ்வைக்கனிபோன்ற வாயை யுடைய தலைவியினுடைய. உழை அடி தீயும் பாலையில் அவை மாவடி ; ஊங்கு இவை சேவடி ; ஈங்கிவை சீறடி எனக் கூட்டுக. உ0

செவிலி கலந்துடன் வருவோர்க் கண்டு கேட்டல்

*[காதலனும் காதலியுமாகத் தன்னெதிர் வருகின்ற இருவரைக் கண்டு 'உம்மைப்போன்றே கூடிச் சென்ற என் மகளையும் அவள் தலைவனையும் கண்டீரோ?' என்று செவிலி கேட்டல்]*

**406.** பைந்தார் விடலையும் நீயுந் தகஇப் பரிசெதிரே
வந்தார் சிலருள ரோமகளே வண்ட லாடுமந்தண்
சந்தார் தடமுலை யாயமுந் தாயருந் தான்வளர்த்த
செந்தார் மழலைக் கிளியுமென் போலின்று தேடவைத்தே.

(கு - ரை.) பைந்தார் விடலையும் - பசும்பூமாலையை யணிந்த நின் காதலனும். தக - ஒப்ப. இப்பரிசு என்றது, உங்களைப் போன்றே கூடி என்றபடி. சிலர் என்றது, தன் மகளையும் அவள் தலைவனையும். வண்டல் - விளையாட்டு. அம் தண் சந்து ஆர் - அழகிய குளிர்ந்த சந்தனம் பூசப்பட்ட. ஆயம் - தோழிக் கூட்டம். செந்தார் மழலைக்கிளி - சிவந்த கழுத்துக் கோட்டையும் இனிய சொல்லையுமுடைய கிளி. மகளே ! ஆயமும் தாயரும் கிளியுமாகிய இவர்கள் தம்மைத் தேடவைத்துச் சிலர் (நும்) எதிரே இப்பரிசு வந்தார் உளரோ? எனக் கூட்டுக.

(வே - ம்.) உளரோ சொல்லுவீர் ; என்போல் நின்று. இ. வி. கசுசு. உக

அவர் செலவுணர்த்திச் செவிலியை மீட்டல்

*[தலைவனும் தலைவியும் சுரங்கடந்து நாட்டை அடைவர் என்று கூறிக் கலந்துடன் வருவோர் செவிலியை மீண்டு போகுமாறு செய்தல்]*

**407.** மீளா தொழிவதெ னன்னைவெங் கானகம் பைங்குழைதோய்
வாளார் நயனியும் வள்ளலும் போய்வன் சுரத்திடையே
நாளார் மலர்ப்பொழில் நண்பகல் தங்கினர் பின்பகற்போய்த்
தாளார் நறுமலர்த் தண்புன னாட்டின்று சார்குவரே.

(கு - ரை.) ஒழிவது - செல்வது. அன்னை : கலந்துடன் வருவோர் செவிலியை விளித்தது. பைங்குழை தோய் வாள் ஆர் நயனி - பைம்பொன்னாற் செய்த குண்டலத்தைத் தொடுகின்ற வாள் போன்ற கண்ணையுடைய தலைவி : ௩௭௭. வள்ளல் : தலைவன். நாள் மலர் ஆர் பொழில் - அன்றலர்ந்த பூக்களையுடைய பாலைவனச்சோலை. நண்பகல் - உச்சிப்பொழுதில். சோலையில் தங்கலை. ௩௭௪-ஆம் செய்யுளில் காண்க. தாள் - காம்பு. புனல்நாடு - மருதநிலம். அன்னை ! நயனியும் வள்ளலும் போய் நண்பகல் பொழில் தங்கினர்; பின்பகல் போய்ச் சார்குவர் ; மீளாதொழிவது என் ? எனக் கூட்டுக. ௨௨

சேவிலி புதல்வியைக் காணாது கவலை கூர்தல்

*[கவலை கூர்தல்—துன்ப மிகுதல்]*

**408.** கல்லார் சுரத்தில் வருவா ரிருவரைக் கண்டவெல்லை
யெல்லா மவரவ ரென்றிருந் தேனவ ரெம்மிருவர்
அல்லா நிலைமை யருவினை யேனிங் கறிந்தபின்னும்
செல்லாது மீண்டொரு காலிரு காலுமென் சிந்தையுமே.

(கு - ரை.) கல்லார் சுரத்தில் - கற்கள் நிறைந்த பாலைவனத்தில். இருவரை - யாரேனும் ஆணும் பெண்ணுமாக வருகின்ற இருவரை. அவர் : தலைவியும் தலைவனும்; அடுக்கு நினைப்பின் பன்மையை உணர்த்தி நின்றது. அவர் : வருவார். எம் இருவர் - என் மகளும் தலைவனும். ஒருகால் - ஒருகாலத்தும். இருகாலும் - இரண்டு கால்களும்; ஒருகால் இருகால் என்றது சொல் முரண். இருந்தேன் ; நிலைமை அறிந்த பின்னும் இருகால்ும், சிந்தையும் ஒருகாலும் செல்லாது எனக் கூட்டுக. ௨௩

(வே - ம்) சுரத்து. இ. வி. ௧௬௬,

கற்பொடு புணர்ந்த கௌவை முற்றும்

## கசுல. மீட்சி

*[தலைவனும் தலைவியும் மீண்டு வருதல்]*

### தலைவி சேணகன்றமை செவிலி தாய்க்கு உணர்த்தல்

*[தலைவி தலைவனுடன் நீண்ட தூரத்திலுள்ள அவனூர்க்குச் சென்று சார்ந்தமையைச் செவிலி நற்றாய்க்கு உணர்த்தல்]*

**409.** ஏடார் மலர்க்குழல் வல்லியை யன்னையித் தீவினையேன்
நாடா விடமில்லை ஞாலத் தகல்வயி னன்கமலக்
காடார் பழனக் கழனிநன் னாடு கடந்துதன்னூர்
வாடா வளமனை கொண்டுசென் றானொரு வள்ளலின்றே.

(து - ரை.) ஏடு ஆர் - இதழ் பொருந்திய. வல்லியை-தலைவியை. அன்னை - நற்றாயே. தலைவியைக் காணாமைபற்றிச் செவிலி தன்னைத் 'தீவினையேன்' என்று கூறிக்கொண்டாள். நாடா - தேடாத. ஞாலத்து அகல்வயின் - இவ்வுலகப் பரப்பினுள். நாடா இடமில்லை என்க. கமலம் காடு ஆர் பழனம் - தாமரைத் தொகுதி பொருந்திய மருதநிலத்தின். வாடா வளம் - கெடாத செல்வம் பொருந்திய. வள்ளல்: தலைவன். அன்னை! தீவினையேன் வல்லியை நாடா இடமில்லை; (நாடி என் பயன்!) இன்று ஒருவள்ளல் கடந்து மனைக்குக் கொண்டு சென்றான் எனக் கூட்டுக.

(வே - ம்.) சேடார்; வெந்தீவினையேன்; நாடாவயின் - பழனத்தகவயின்; இ - வி. கசுஅ. க

### ஊர் வரைந்த நெடுந்தகை மீட்சி

*[தலைவியைத் தன்னூரின்கண்ணே மணந்துகொண்ட தலைவன் அத்தலைவியுடன் அவளூர்க்கு மீண்டு வருதல்]*

**410.** அனைத்தாய தன்னக ரான்றில்பொன் மாளிகைச் சான்றவர்முன்
எனைத்தாய பல்கிளை யேத்த மணம்புரிந் தின்புறுநாள்
மனைத்தாயர் தந்தைதன் னூர்வண்ட லாய மறந்ததெல்லாம்
நினைத்தாள் நிரைவளை மீண்டா னறிந்து நெடுந்தகையே.

(து - ரை.) அனைத்து ஆய - அத்தன்மைத்தாய, மாளிகை. நகர் ஆன்ற - நகரில் அமைந்த. எனைத்தாய - எவ்வகைப்பட்ட. கிளை - சுற்றத்தார். மனை - தலைவி, தன் வீட்டிலுள்ள; தன் என்பதை மனை

முதலியவற்றோடுங் கூட்டுக. வண்டல் - விளையாட்டு. ஆயம் - பாங்கியர் கூட்டம். நிரைவளை : தலைவி. நெடுந்தகை : தலைவன். மாளிகையில் முன் எத்த புரிந்து இன்புறுநாள், நிரைவளை மனைத் தாயர் முதலிய மறந்ததெல்லாம் நினைத்தாள்; நெடுந்தகை அறிந்து மீண்டான் எனக் கூட்டுக.

(வே - ம்.) தனைத்தாய தன்னகர் ஒன்றி. இ-வி. கரு. உஅ.

### மீள் நெறித்தன்மை வாணுதற்கு உரைத்தல்

*[முன்சென்ற வழியே மீண்டு வருகையில் தலைவன் அவ்வழியின் இயல்பைத் தலைவிக்குக் காட்டி உரைத்தல்]*

**411.** துப்போது சேயிதழ்த் தூநகை யாய்வெஞ் சுரத்திடைநாம்
அப்போ திருந்த வகன்பொழி லாமிது ஆரமுலைக்கு
ஒப்போ தியபொன் முகைக்கன்னி கார முதுஅதுநீ
எப்போதும் வைகு மிளமரக் காவு மிலஞ்சியுமே.

(கு - ரை.) துப்பு ஓது சேயிதழ் தூ நகையாய்-பவழம்போன்ற சிவந்த உதட்டினையும், தூய பற்களையுமுடைய தலைவியே. இருந்த- தங்கியிருந்த. பொழில் - பாலை நிலச்சோலை. (௩எச, சOஎ.) ஆரம்- முத்துமாலையை யணிந்த; சந்தனமுமாம். பொன்முகை - பொன் நிறம்பொருந்திய முகையினையுடைய. கன்னிகாரம் - கோங்கமரம். வைகும் - தங்குகின்ற. கா-சோலை. இலஞ்சி - குளம். நகையாய்! இது பொழிலாம்; உது கன்னிகாரமாம்; அது காவாம்; அஃது இலஞ்சியாம் என, 'அஃது' என்னும் சுட்டை இலஞ்சி யோடும் 'ஆம்' என்பதைப் பிறவற்றோடும் கூட்டி முடிக்க.

(வே - ம்.) பொழிலாயத் துன்ஞரமுலை; மென்முகைக் கன்னி காரமிம் முற்றத்து நீ. இ-வி. கருஅ. ௩

### தலைவி முன்செல்வோர் தம்மோடு தன்வரவு பாங்கியர்க்கு உணர்த்தல்

*[தான் தலைவனொடு வருதலைப் பாங்கியர்க்கு உரைக்குமாறு தலைவி சொல்லி யனுப்புதல்]*

**412.** ஒன்றே யுளங்கொண் டிருபிறப் பெய்தியு முத்தியுற்ற
நன்றே நவில்கின்ற நான்மறை யீர்தம்மை நானகன்ற
அன்றே தொடங்கி யலமரு மாயத் தரிவையர்க்குச்
சென்றே வருவ துரைமின்கள் யாமத் திருநகர்க்கே.

(து - ரை.) ஒன்றே உளம்கொண்டு - கடவுளாகிய ஒருபொருளையே கருதி. இரு பிறப்பு - பூணூல் அணிதற்கு முன்னும் பின்னும் உள்ளது; இஃது அந்தணர் அரசர் வணிகர் என்னும் மூவகையார்க்கும் உரித்தென்பர்; 'இரு பிறப்பாளன்' சுடு. முத்தியுற்ற - வீடுபேறுற்ற; உயிர், உடம்புடன் கூடி நின்றே வீடுபேறு அடைதலைச் 'சீவன்முத்தி' என்பர் வடநூலார். ஒரு பிறப்பு எய்தி நின்றே வீடடைதல் அரிதாயிருக்க நீவிர் இருபிறப் பெய்தியும் வீடுற்றது பெரிதும் வியத்தற்கு உரியதெனத் திறமை தோன்றக் கூறியவாறு. நவிலல் - பன்முறை ஓதல். மறையீர் - அந்தணரே. தம்மை: பாங்கியரை. அலமரும் - வருந்தும். ஆயத்து அரிவையர் - தோழிப் பெண்கள். சென்று - தலைவனுடன் சென்று. வருவது - மீண்டு வருதலை. கொண்டு எய்தியும் உற்ற நவில்கின்ற மறையீர்! நகர்க்கு யாம் வருவதை அரிவையர்க்கு உரைமின்கள் எனக் கூட்டுக. இதில் ஒன்றுமுதல் நான்கெண்கள் முறையே வருதல் காண்க.

(வே - ம்-) எய்தி முத்தீயு முய்த்து. இ - வி. கசுஅ. ச

## முன்சென்றோர் பாங்கியர்க்கு உணர்த்தல்

*[உணர்த்தல்—தலைவி தலைவனொடு மீண்டுவருதலை உணர்த்தல்]*

413. நண்போ டினியதொர் நல்விருந் தெய்துவிர் நாளையெல்லைத்
தண்போ தணிகுழற் றையனல் லீர்செய்ய தண்டமிழ்தோய்
பண்போ லினிய பணிமொழிச் செந்தளிர்ப் பைந்தொடிதன்
கண்போ லொருவற் கலந்துடன் மீள்வது கண்டனமே.

(து - ரை.) நண்பு-நண்பினையுடைய தலைவி; பண்பாகு பெயர். விருந்து என்றது தலைவனை. நாளை எல்லை - நாளைப்பொழுதில். தண்போது - குளிர்ந்த பூக்களை. தையல் நல்லீர் - அழகிய பெண்களே; இது முன் சென்றோர் தலைவியின் தோழியரை விளித்தது. தமிழ் தோய் பண் - தமிழிசை; தமிழ்-இனிமையுமாம். பணி மொழி- பணிவான சொல்லையுடைய. செந்தளிர்ப் பைந்தொடி - செந்தளிர் போன்ற நிறத்தையும் பசும்பொன் வளையலையுமுடைய தலைவியானவள். ஒருவன்: தலைவனை. கலந்து - சேர்ந்து. நல்லீர்! மொழியையும் தளிர்நிறத்தையுமுடைய பைந்தொடி, தன் கண்போலொருவற் கலந்து மீள்வது கண்டனம்; (ஆதலின்) நாளையெல்லை நண்போடு நல்விருந்தையும் எய்துவிர் எனக் கூட்டுக. ௫

(வே - ம்.) எய்துவர்; ஒருவர் கலந்து. இ-வி. கசுஅ.

பாங்கியர் கேட்டு நற்றாய்க்கு உணர்த்தல்

414. மேவியொன் னாரெம்மை மெய்த்துணை போக விடுத்திருந்த
பாவியென் னாவகை பாக்கியஞ் செய்தனம் பாயரிக்கண்
காவியன் னாளருங் கானகம் நீந்திநம் மாநகர்வாய்
ஆவியன் னாரொடு வந்தனள் காணென்ப ரந்தணரே.

(கு - ரை.) ஒன்னார் மேவி - பகைப் பெண்டிர் பொருந்தி. மெய்த்துணை - உண்மைத் துணைவியாகிய தலைவி. போக - தலைவனுடன்போக. இருந்த - உடன்பட்டிருந்த; விடுத்த எனப் பொருள் கொண்டு 'இரு' துணைவினை விகுதி எனலுமாம். பாக்கியம் - நல்வினை. அரி பாய் - செவ்வரி பரந்த. காவி-நீலமலர். அன்னாள்: தலைவி. ஆவி அன்னார்: தலைவர். அந்தணர், 'அன்னாள் அன்னாரொடு நீந்தி நம் நகர்வாய் வந்தனள்' என்பர்; (அதனால்) ஒன்னார் மேவி எம்மைப் பாவியென்னாவகை செய்தனம் எனக் கூட்டுக.

(வே - ம்.) ஒன்னாரென்ன. இ-வி. கசுஅ. சூ

வேலனை நற்றாய் வினாதல்

[தலைவன் கருத்தை உணரும்பொருட்டு நற்றாய் வேலனைக் குறிகேட்டல்; வேலன்-முருக பூசை பண்ணுவோன்]

415. கருமோ கரவரி வண்டுஞ் சுரும்புங் கலந்துதம்மிற்
பொருமோதி மின்னுடன் போந்தபுண் வேலர் புகன்றவெம்மில்
வருமோ விடலை!வரவொழிந் தாலுண் மகிழ்வதுவை
தருமோ நமக்கவ ளைத்தந்த தாயெண்ணிச் சாற்றுகவே.

(கு - ரை.) மோகரம் - மயக்கம். வரி - இசை. கருமையும் மோகரமும் வரியுமுடைய வண்டு. சுரும்பு - வண்டின் வகையுளொன்று. ஓதி - கூந்தல். மின்: தலைவி. வண்டும் சுரும்பும் பொருகின்ற ஓதியையுடைய மின் என்க. போந்த - வந்த. புண்வேலர்- பகைவரைப் புண்படச் செய்யும் வேலையுடைய தலைவர்; விடலை: தலைவன். உள் - மனம். வதுவை - மணஞ்செய்து காணும் காட்சியையேனும். அவள்: தலைவி. 'தாய்' என்று தன்னையே படர்க்கையாகக் கூறினள். (வேல!) வேலராகிய விடலை, தாயாகிய என்னை எண்ணி எம்மில் வருமோ? வரவொழிந்தால் நமக்கு வதுவையேனும் தருமோ? சாற்றுக எனக் கூட்டுக. எ

மீட்சி முற்றும்

## ௨௦. தன்மனை வரைதல்

*[தலைவன் தலைவியைத் தன் வீட்டில் மணஞ்செய்துகொள்ளுதல்]*

### தோழி நற்றாய்க்கு வரைந்தமை கூறல்

*[தலைவன் தலைவியைத் தன் வீட்டிலேயே மணந்துகொண்டமையைத் தோழி உரைத்தல்]*

416. அன்னே வதுவை யதுநம்மி லேவந் தயரவெண்ணின்
முன்னே வரைவு முடிந்தது போலு முகிழ்த்தகொங்கைப்
பொன்னே சுணங்கி னணங்கினை வெஞ்சுரம் போயகன்று
கொன்னே வளங்கெழு பொற்கொடி மாநகர் கொண்டுசென்றே.

(கு - ரை.) அன்னே - அன்னையே. வதுவையது - மணம்; அது : பகுதிப்பொருள் விகுதி. அயர - செய்ய. வரைவு - மணம். போலும்; அசை. முகிழ்த்த - அரும்பிய, கொங்கைமீது. பொன் சுணங்கின் - பொன்போன்ற தேமலையுடைய. அணங்கு: தலைவி. கொன்னே - பெருமையோடு. பொன் கொடி - அழகிய வெற்றிக் கொடி பறக்கின்ற. அன்னே! வதுவை நம்மில் அயர எண்ணின்; அகன்று அணங்கினை நகர்க்குக் கொண்டு சென்று முன்னே வரைவு முடிந்தது எனக் கூட்டுக. க

### தலைமகன் பாங்கிக்கு யான் வரைந்தமை நுமர்க்கு இயம்பு சென்று என்றல்

*[வரைந்தமை—தலைவியை மணந்துகொண்டமையை; நுமர்க்கு—உம்மவர்க்கு. சென்று இயம்பு—போய்ச் சொல்க]*

417. ஓங்கும் பலவுங் கதலியுஞ் சூழுமெம் ஊர்வயிற்போய்ப்
பாங்கொன் றியகுழல் வேள்விமுன் னாகப் பணிமொழியாம்
வாங்குஞ் சிலைநுதல் மங்கைக்கு மங்கல நாண்புனைந்து
ஈங்குன் பெருந்தமர் யாவர்க்கும் நீசென் றியம்புகவே.

(கு - ரை.) பலவு - பலாமரம். கதலி - வாழை. பாங்கு ஒன்றிய - முடி, கொண்டை, குழல், பனிச்சை, சுருள் என்னும் ஐந்து பகுதியாகப் பொருந்திய ; பாங்கு - பகுதி ; அழகுமாம். குழல்-கூந்தலையுடைய, பணிமொழியாய்: தோழியே. வேள்வி - ஓமத்தீ. வாங்கும் சிலை நுதல் மங்கைக்கு - வளைந்த வில்லையொத்த நெற்றியை

யுடைய தலைவிக்கு. மங்கலநாண் புனைந்தது - தாலிகட்டி யதை. தமர் - உறவினர். இயம்புக - சொல்க. குழலையும் பணிந்த மொழியையுமுடைய தோழியே ! ஊர்வயிற்போய் முன்னாக மங்கைக் குப் புனைந்ததை யாவர்க்கும் இயம்புக எனக் கூட்டுக.

(வே - ம்.) பாங்கொன்றிய செழும் பாவகன் முன்னர். இ - வி. கஎக. உ

பாங்கி தான் அது முன்னே சாற்றியது உரைத்தல்

*[அது—தலைவியை மணந்துகொண்ட செய்தியை]*

**418.** காயமுந் திண்ணமுங் கார்வரை போலுங் கடுங்களிறும்
சீயமும் போலுந் திறலண்ண லேசுரஞ் செல்லஉய்த்த
மாயமும் போயுன் வளநகர்க் கெய்தி வரைந்ததுவும்
ஆயமுஞ் சேரியு மூருமுன் னேயிங் கறிந்ததுவே.

(கு - ரை.) காயமும் திண்ணமும் - உடலாலும், திண்மை யாலும். கார்வரைபோலும் - கரியமலையையொக்கும், அண்ணலே. களிறு - யானை. வரையும் களிறும் சீயமும் அண்ணலுக்கு உவமை. சீயம் - சிங்கம். திறல் அண்ணலே - வலிமைமிக்க தலைவனே. சுரம் - பாலைநிலத்தில். உய்த்த - தலைவியைக் கொண்டு சென்ற. வரைந்தது - மணஞ்செய்துகொண்டது. ஆயம் - பாங்கியர் கூட்டம். சேரி - தெரு. வரைபோலும் காயமும் திண்ணமும், களிறும் சீயமும் போலும் திறலுமுடைய அண்ணலே ! உய்த்த மாயமும், போய் எய்தி வரைந்ததுவும் ஆயமும் சேரியும் ஊரும் அறிந்ததுவே எனக் கூட்டுக; திண்மைக்குக் களிற்றை உவமையாக்கினும் பொருந்தும். ங

தன்மனை வரைதல் முற்றும்

# ௨௧. உடன்போக்கு இடையீடு

*[தலைவனும் தலைவியும் செல்லுகையில் உண்டாகும் தடை]*

## நீங்கும் கிழத்தி பாங்கியர் தமக்குத் தன் செலவு உணர்த்தி விடுத்தல்

*[இல்லைவிட்டு நீங்கித் தலைவனொடு செல்லும் தலைவி தான் செல்கின்றமையைப் பாங்கியர்க்கு அறிவிக்குமாறு தன்னெதிர் வருவோரிடம் சொல்லி யனுப்புதல்]*

**419.** இன்னே யிரங்குமென் றாயத் தவருக்கு மீன்றெடுத்த
என்னே யெனவருந் தன்னைய ருக்குமிவ் வாண்டகைதன்
பின்னே வளங்கெழு தண்ணருங் கானம் பெயர்கின்றசொல்
சொன்னே னுமக்கெம தூர்செல்லு வீரிது சொல்லுமினே.

(கு - ரை.) இன்னே இரங்கும் - இப்பொழுதே வருந்திக் கொண்டிருக்கும். ஆயத்தவர் - தோழியர். என்னே என வருந்து ஈன்றெடுத்த அன்னையரென இயைக்க; என்னே : இரக்கத்தின்கட் குறிப்பு; அன்னையர் : நற்றாயும் செவிலித்தாயும். ஆண்டகை : தலைவன். தலைவன்பின் செல்லலின் கானம் தண்ணிதாயிற்று என்க. தண் - குளிர்ந்த. தண்மையரிய கானம் எனலுமாம்; இப்பொருட்கு அருமை இன்மைப் பொருளில் வந்ததாகக் கொள்க. பெயர்கின்ற சொல் - செல்லுகின்றேன் என்னும் சொல்லை. செல்லுவீர்! பின்னே பெயர்கின்ற சொல்லை உமக்குச் சொன்னேன்; இதை நீர் ஆயத் தவருக்கும் அன்னையருக்கும் சொல்லுமின் எனக் கூட்டுக.

(வே - ம்.) தஞ்செலவு; அன்னேயென; கானகம் பேர்கின்றவா; சொல்லுமின்றே. இ. வி. ௧௱௫. ௧

## நற்றாய்க்குக் கண்டோர் மொழிதல்

*[தலைவியால் சொல்லி அனுப்பப்பட்டோர், அவள் தலைவனுடன் செல்கின்றமையை நற்றாய்க்குக் கூறல்]*

**420.** அன்பே மருவி யருஞ்சிலை பூண்டகை யாண்டகைபின்
நின்பேதை சென்றனள் நீணிழற் கானிடை நீபுலம்புற்று
என்பே துறுவ திலங்கிழை யாயிங்ங னேகியமான்
தன்பே ரறிவுக் குயர்வட மீனுந் தகுவதன்றே.

(கு - ரை.) மருவி - பொருந்தி. சிலை பூண்ட - வில்லை ஏந்திய. ஆண்டகை ; தலைவன். பேதை : தலைவி. கான் இடை - காட்டில். புலம்பு உற்று - வருந்தி. பேது உறவது என் - மயங்குவது ஏன் ; வீண் என்றபடி. மான்தன் : தலைவியினது. உயர் வடமீனும் - கற்பில் உயர்ந்த அருந்ததியும். தகுவதன்று - ஒப்பதன்று. ஏகாரம் தேற்றப் பொருளது. இலங்கிழையாய்! கானிடை ஆண்டகைபின் அன்பு மருவிப் பேதை சென்றனள் ; (அதற்காக) நீ உற்று உறுவது என்? மான் அறிவுக்கு மீனும் தகுவதன்றே எனக் கூட்டி, 'ஆதலின் வருந்தற்க' என்பது அதனாற் போந்த பொருளாகக் கொள்க. உ

தமர் பின்சேறலைத் தலைவி கண்டு தலைவற்கு உணர்த்தல்

*[தன்னை வீட்டிற்கு அழைத்துக்கொண்டு செல்லும்பொருட்டுத் தன் உறவினர் தம்மைப் பின் தொடர்ந்து வருதலைத் தலைவிகண்டு அதனைத் தலைவனுக்கு அறிவித்தல்]*

421. கொம்மைய வென்றிக் கொடுஞ்சிலை வாங்கிக் கொடுஞ்சரங்கள்
செம்மைய வாகத் தெரிந்துகைக் கொண்டு செயிர்த்தெழுந்த
வெம்மைய ராகின ரோதம ரோவிறல் வேடர்கொல்லோ
எம்மைய ரோஅறி யேன்சிறி யேனிவ் விருஞ்சுரத்தே.

(கு - ரை.) கொம்மைய - வலிமை பொருந்திய, சிலை வாங்கி - வில்லை வளைத்து. சரம் - அம்பு. செம்மையவாக - சிறந்தனவாக. செயிர்த்து - சினந்து. வெம்மையர் ஆகினர் - கொடுமை மிக்கவராயினர் ; ஓ : அசை. தமரோ - உறவினரோ. விறல் - வலிமையுடைய. எம்மையரோ - என் தந்தை முதலியவரோ. சுரத்து - பாலையில். சுரத்து வாங்கித் தெரிந்துகொண்டு செயிர்த்து எழுந்த வெம்மையராகினர் (ஆகினர் : வினையாலணையும் பெயர்.) தமரோ வேடரோ? [கொல் : அசை.] எம்மையரோ? சிறியேன் அறியேன் எனக் கூட்டுக. ந

அவன் விடுத்து ஏகல்

*[பின் தொடர்ந்து வருவோர் தலைவியின் தமரென்று அறிந்த தலைவன் அவளை அவர்பால் விடுத்துத் தான் சென்று மறைதல்]*

422. போரே கருதி வரிலெவ ராயினும் போர்தொலைத்து
நேரே விசும்பை நிறைகுடி யேற்றுவ னின்னையரேல்
யாரே யிவரை யிகலிலெப் பாரிவ் விருநிலத்தில்
வாரேய் வனமுலை யாய்மற்ற கோஇவ் வனமருங்கே.

(து - ரை.) விசும்பை - வானுலகில். நின்னையரேல் - நின் உறவினராயின். இகலில் - போர் செய்தலில். தலைவியின் தமருடன் பொருதல் கூடாதெனக் கருதி இங்ஙனம் கூறினனென்க. வார் ஏய் வனமுலையாய் - கச்சணிந்த அழகிய கொங்கையையுடைய தலைவியே. மறைகோ - மறைந்து கொள்வேன்; ஓ: அசை; வினவுமாம். வனம் மருங்கு - காட்டில். முலையாய்! எவராயினும் போர் கருதி வரில் ஏற்றுவன்; நின்னையரேல் இந்நிலத்தில் ஒப்பார் யார்? (ஆதலின் யான்) வனமருங்கு மறைகு எனக் கூட்டுக. ௪

## அவன் புறங்கண்டு கவன்று உரையாடல்

*[தலைவன் புறங்காட்டிச் செல்லுதலைக் கண்டு தலைவி கவலையுற்றுக் கூறுதல்]*

**423.** என்னையர்க் கென்று மிவர்க்கென்று மேதங் கருதிலிந்த
மின்னயர் வுற்றுயிர் வீடுமிங் கென்றுமிவ் வெற்பிடையே
தன்னைய ருந்திறல் சாயக் கரந்த தலைவனுக்கென்
முன்னைய ருந்தவ மோஅறி வோவந்து முன்னின்றதே.

(துறை - ர.) என்னையர்க்கு என்றும் - என் தந்தை தன்னையர்க்கேனும்; இவற்கு என்றும் - தலைவற்கேனும்; என்று: ஈண்டு உறழ்ச்சிப் பொருள் தந்து நின்றது. ஏதம் கருதில் - (போரிடுகையில்) துன்பம்நேர்ந்ததாகத் (தலைவி) கருதில். மின் அயர்வுற்று உயிர் வீடும் - தலைவி வருந்தி உயிர்விடுவாள், என்று - என்று தலைவன் கருதி; உம்: இசை நிறை. வெற்பு - மலை. அருந்திறல் சாயத் தன்னைக் கரந்த - தனது அரிய போர்த்திறம் விளங்காதவாறு தன்னை மறைத்துக் கொண்ட. முன்னின்றது - காரணமாய் இருந்தது. 'மின் ஏதம் கருதில் வீடு'மென்று வெற்பிடையே கரந்த தலைவனுக்கு (அவன் அவ்வாறு செய்வதற்கு) முன் நின்றது தவமோ? அறிவோ? எனக் கூட்டுக. ௫

## கண்டோர் இரங்கல்

*[தலைவியின் சுற்றத்தார் தலைவனொடு போர் தொடுப்பரோ என்று அஞ்சிக் கண்டோர் வருந்திக் கூறல்].*

**424.** இருகுன் றனைய இளமுலை மாதுட னேகுமிவன்
வெருள்கின் றனனென நின்றனன் கூற்ற மடல்குறித்து
வருகின்ற வாறென வாட்டருஞ் செங்கைச் சினவர்கெட்டேம்
அருகொன்றி நின்றினி யார்தடுப் பாரென் றறிகிலமே.

(து - ரை.) மாது: தலைவி. இவன்: தலைவன். வெருள்கின்றனன் என - அஞ்சுகின்றவன்போல, நின்றனன் - இளைத்து நின்றான்; 'தன்னை யருந்திறல் சாயக் கரந்த தலைவனுக்கு' - ௨௨௩. கூற்றம் அடல் குறித்து - கூற்றுவன் போர் செய்யக் கருதி. வாடு அரும் - வாடுதலரிய; வாள் தரும் எனப் பிரித்து வாளைக்கொண்ட அல்லது, வாட்போரைத் தொடங்கும் எனலுமாம். வாட்டு அரும் என்றே பிரித்துப் பிறரால் வாட்டுதற்கரிய என்றுரைப்பினும் பொருந்தும்; இனி, சினவர் - சினமிக்க தலைவியின் தமர், வருகின்றார் என ஒரு சொல் வருவிக்க. கெட்டேம்: இரக்கக் குறிப்பு. ஒன்றி - பொருந்தி. நின்று சந்தாக - நின்று. இவன் நீற்றனன்; சினவர், கூற்றம் வருகின்றவாறென (வருகின்றனர்; இச்சினவரைத்) தடுப்பார் யாரென்று அறிகிலம்; கெட்டேம்! எனக் கூட்டுக.

(வே - ம்.) மானுடன்; ஒரு குன்றென நின்றுடலும் வெங்கூற்றம்; வருகின்ற வான்தொடர் வேங்கையைப் போலும், செங்கை மறவர்; அருகொன்ற. இ - வி. களடு. ௬

## கண்டோர் தமரைத் தெருட்டல்

*[கண்டோர், தலைவியின் தமர் சினந்தணிந்து தெளிவுறுமாறு செய்தல்]*

**425.** குலனும் நலனுங் குணமுங்குன் றாத குரிசிலிவன்
நலனொன் றியஇவள் கற்பினிற் பாள்பி னண்ணியநீர்
வலனும் பொருசிலை வண்மையுந் தொன்மை மரபுங்குன்றாப்
புலனும் பெரிதுடை யீரினி யாமென் புகல்வதுவே.

(து - ரை.) நலன் - அழகு. குரிசில் - ஆண்களிற் சிறந்தோன். இவன்: தலைவன். ஒன்றிய - பொருந்திய. இவள்: தலைவி. கற்பில் நிற்பாள் - கற்பொழுக்கத்தில் வழுவாது நிற்பவள். பின் நண்ணிய - பின் தொடர்ந்து வந்த, நீர் என்றது, தலைவியின் தமரைக் கண்டோர் கூறியது. வலன் - வெற்றி; வலிமையுமாம். சிலை வண்மை - வில்லாண்மை. தொன்மை மரபு - தொன்றுதொட்டு வரும் குடிப்பிறப்பு. குன்றாப் புலன் - பேரறிவு. புகல்வது - சொல்வது. இவன் குரிசில்; இவள் நிற்பாள்; நீர் வலன் முதலியவற்றைப் பெரிதுடையீர்; (அங்ஙனமிருக்க) யாம் புகல்வது என்? எனக் கூட்டுக. பொருதல் தகாதென்பதை நீரேயறிவீர் என்பது கருத்து. ௭

## சான்றோர் விலக்கு

*[பெரியோர் சிலர் தலைவியின் தமரை விலக்கி மீண்டு போகச் செய்தல்]*

**426.** விற்கொண்ட காளையர் மீளா அறிஞரின் மெய்புணர்ந்தோர்
சொற்கொண்டு மீண்டுதம் தொன்னகர் மேயினர் தோகையிவள்
கற்கொண்ட கானங் கடந்துபொற் சீறடி கன்றினளாம்
இற்கொண்ட போதிங் கிதுநின்ற ஊர்சுற்றம் யாங்கழுமே.

(து - ரை.) காளையர் - தலைவியைத் தேடி வந்த வீரர். மீளா அறிஞரின் - மாறுபடாத அறிஞரைப்போல. மேயினர் - சென்றனர். தோகை இவள் - மயில்போன்ற தலைவி. பொன் - அழகிய. கன்றினள் - கன்றும்படி தலைவனுடன் நடந்து சென்றாள். இல்கொண்ட போது - தலைவியின் தமர் வீடடைந்தபோது. இது - வீடு; பகுதிப் பொருள் விகுதியுமாம். ஊர் சுற்றம் - தலைவியின் ஊராரும் சுற்றத்தாரும். யாங்கு அழும் - எவ்வாறு அழுவர்; பெரிதும் வருந்துவர் என்றபடி. காளையர் சொற்கொண்டு அறிஞரின் மேயினர்; இவள் கடந்து கன்றினளாம்; (காளையர்) இற்கொண்டபோது ஊர் சுற்றம் யாங்கு அழும்? எனக் கூட்டுக.

(வே - ம்.) தன் தொன்னகர். அ

## பெயர்கவென உரைத்தல்

*[தலைவியின் தமர் தலைவியைத் தம் ஊர்க்குத் திரும்பி வருகவென்று அழைத்தல்]*

**427.** செழுங்கொண்ட லும்மதி யுந்தவழ் சாரல் திகழருவிக்
கொழுங்குன்ற வாணர் குலமக ளேபைங் குரைகடற்போல்
அழுங்குங் கிளையும்நம் அன்னையுந் தந்தையும் ஆயவெள்ளத்து
ஒழுங்கும் புகழப் பெயர்கஎம் மோடுன் உளமகிழ்ந்தே.

(து - ரை.) கொண்டல் - முகில். கொழுமை - செழிப்பு. குன்ற வாணர் - குன்றில் வாழ்வோருடைய. மகளே: தலைவியே. குரை - ஒலிக்கின்ற. அழுங்கும் கிளையும் - வருந்துகின்ற சுற்றத்தாரும். அழுங்கும் என்பதை அன்னை முதலியோர்க்கும் கூட்டுக. ஆய வெள்ளத்து ஒழுங்கு - தோழிக் கூட்டத்தின் வரிசை. பெயர்க - மீண்டு வருக. மகளே! கிளை முதலியோர் புகழ உன் உளம் மகிழ்ந்து எம்மோடு பெயர்கவெனக் கூட்டுக.

### தமர் பின் வந்துழி நிகழ்ந்தமை கூறல்

*[தமரின் பின்னே செல்லுகின்ற தலைவி, தலைவன் நிகழ்த்திய செயலை எண்ணி வருந்திக் கூறல்]*

**428.** ஊன்றோய் சுடர்வடி வேல்வல னேந்தி யுடன்றமரில்
ஏன்றோர் புரங்கவ ரென்னையர் தோன்றி லிருஞ்சுரத்து
வான்றோய் குலத்து மறலியன் னானை மறைத்தகுன்று
சான்றோ மொழியுமென் றோயென்ற னாருயிர் தாங்கரிதே.

(து - ரை.) ஊன் தோய் - பகைவருடலில் பாய்கின்ற. வடி - கூரிய. வலன் - வலப்பக்கத்தே. உடன்று - மாறுபட்டு. அமரில் - போரில். ஏன்றோர் - எதிர்த்த பகைவரது. புரம் கவர் - பட்டினங்களைக் கவர்கின்ற. என்னையர் தோன்றில் - என் தந்தை முதலியோரைக் கண்டால். வான் தோய் குலத்து - சிறந்த குலத்திற் பிறந்த. மறலி அன்னானை - கூற்றுவனையொத்த தலைவனை. சான்று மொழிதல்; தலைவனைக் காட்டிக் கொடுத்தல். ஓ: முன்னது அசை; பின்னது ஐயம். மறைத்த குன்று : 'மறைகோ இவ் வனமருங்கே -' ௪௨௨. ஏந்தி உடன்று கவர் என்னையர் தோன்றில் குன்று சான்று மொழியுமென்றோ என் உயிர் தாங்கரிது எனக் கூட்டுக. தாங்க அரிது - தாங்குதற்கு அரிதாயிருக்கின்றது.

(வே - ம்.) புரந்தவர் ; எந்தனாருயிர். ௧௦

### ஊரது நிலைமை தோழி உரைத்தல்

*[ஊரார் தலைவியைப்பற்றிக் கொண்டுள்ள கருத்தைத் தோழி தலைவிக்கு உரைத்தல்]*

**429.** சென்றாக நின்ற இடந்தொறுங் காதல் திகழ்ந்தவண்ணம்
ஒன்றாக நின்றலர் தூற்றிய வூருர வோனுடன்நீ
குன்றாக் கொடுநெறி சென்றனை யென்னக் கொடியஉயிர்
பொன்றா திருக்கினும் யாவினுஞ் சாலப் புலம்பியதே.

(து - ரை.) சென்று ஆக நின்ற - செல்லவேண்டிய அலர் தூற்றிய. ஊர் - உடன்போக்கிற்கு முன் பழிச்சொல் கூறிய ஊர். உரவோன் : தலைவன். குன்றா நெறி - நீண்ட வழியில். பொன்றாது - இறவாது. யாவினும் - எல்லாவற்றையும்விட. சாலப் புலம்பியது - மிகவும் வருந்திற்று. நீ உரவோனுடன் இடந்தொறும் ஒன்றாக

நின்று சென்றனை என்ன, (அதைக் கேட்ட) ஊர் இருக்கினும் புலம்பியது எனக் கூட்டுக.

(வே - ம்.) தின்றாக நின்ற. கக

தலைமகற்கு நற்றாய் கூறியது

[தலைவியின் மணக்கோலத்தை அவள் நற்றாய்க்குக் காட்டுமாறு தலைவனுக்கு அவள் நற்றாய் கூறியது]

430. பூணார் வனமுலைப் பூவையும் நீயும் புணர்ந்துடனே
சேணார் கொடுநெறி சென்றஅந் நான்முதற் சிந்தைநொந்து
காணா தலமரும் அன்னையும் நீசென்று காட்டுதிமின்
கோணாத கற்பினள் மங்கல நாணுமிக் கோலமுமே.

(த - ரை.) பூண் - அணிகலம். பூவை: தலைவி. சேண் ஆர் - தூரமாகப் பொருந்திய. அலமரும் - கலங்கும். அன்னை - தலைவியின் தாய். மின்: தலைவி. கோணாத - மாறுபடாத. மங்கல நாண் - தாலிக்கயிறு. கோலம் - மணக்கோலம். பூவையும் நீயும் சென்ற நாள் முதல் அன்னையும் (தலைவியைக்) காணாது நொந்து அலமரும்; (ஆதலின்) நீ சென்று கற்பினையுடைய மின்னினின் நாணும் கோலமும் காட்டுதியெனக் கூட்டுக. 'அறனன் றம்ம தானே நிறையழிந் - தாழ் துயர் அவலம் உழக்கும் - காதல் தாய்க்குக் காட்டினை வம்மே.' தமிழ் நெறிவிளக்கம் - கங.

(வே - ம்) கற்பினள். கஉ

உடன்போக்கு இடையீடுற்று வரைதல்

[உடன்போக்குத் தடைப்பட்டபின் தலைவன் தலைவியர்க்கு மணஞ்செய்தல்; இச்செய்யுள் கவிக்கூற்று]

431. மின்சென்ற வேற்கண்ணி யண்ணல்பின் போகிய வெஞ்சுரத்துப்
பின்சென்ற அன்னையர் பேதையர் மீண்டு பெரிதுவந்து
முன்சென்ற கேண்மை முறைவழு வாமல் முதுநகர்க்கே
மன்சென்று வேட்கை மணநயந் தார்கள்தம் வாழ்மனைக்கே.

(த - ரை.) மின் சென்ற - ஒளிபரந்த. கண்ணி: தலைவி. அண்ணல் - தலைவன். சுரத்து - பாலையில். அன்னையர் - செவிலித் தாயர். பேதையர் - பாங்கியர். சென்ற கேண்மை - தலைவனுடன்

செல்லுதற்குக் காரணமாக இருந்த காதல். மன் சென்று - தலைவனுடன் சென்று. வேட்கை - விரும்பத்தக்க. நயந்தார் - விரும்பிச் செய்தார். மனைக்கு - மனையில். கண்ணி போகிய சுரத்துப் பின் சென்ற அன்னையரும் பேதையரும் மீண்டு நகர்க்கு மன்னொடு சென்று கேண்மை வழுவாமல் உவந்து மனையில் மணம் நயந்தார் எனக் கூட்டுக. கரு

உடன்போக்கு இடையீடு முற்றும்

# ௨௨. வரைதல்

***[ தலைவன் தலைவியை மணத்தல் ]***

தலைமகன் வரைந்துழி மகிழ்ச்சி

***[ தலைவியை மணந்தவிடத்து உண்டான மகிழ்ச்சியைத் தலைவன் உரைத்தல் ]***

**432.** பன்னாள் முயன்று வரைந்துட னாகிய பாயலினும்
முன்னாள் தளர்ந்தது மெய்முயங் காமல் முயங்கினளின்று
என்னா ருயிரனை யாளுட னாக இயைந்தவின்பம்
அந்நா ளமுத மருந்திய வானவ ரானந்தமே.

(து - ரை.) *வரைந்து உடனாகிய - மணந்து தலைவியுடன் சேர்ந்துள்ள. பாயலினும் - படுக்கையைப் பெறுதற்கு முயன்றதனா லுண்டான தளர்ச்சியினும். முன்னாள் - களவுக் காலத்தில். மெய் தளர்தல், ஆறின்னாமை அல்லகுறி முதலியவற்றாலென்க. முயங் காமல் முயங்கினள் என்றது, அச்சத்தால் அமைதியொடு புல்ல வில்லை என்றபடி. அனையாள் : தலைவி. இயைந்த - கூடிய. அந் நாள் - பாற்கடல் கடைந்த காலத்தில். பாயலினும் முன்னாள் மெய் தளர்ந்தது ; முயங்காமல் முயங்கினள் ; இன்று இயைந்த இன்பம் வானவர் ஆநந்தமே எனக் கூட்டுக.* க

புணர்ச்சியின் மகிழ்தல்

**433.** அறந்தங்கு வானிலு மார்கலி சூழ்ந்த அவனியிலும்
பிறந்தென் பதமிங்ஙன் பெற்றவ ராரின்று பேரமளிப்
புறந்தங்கு மென்குழற் பூவைமெல் லாகத்தைப் புல்லுந்தொறும்
இறந்தும் பிறந்து மினியமென் போக மியைந்தனமே.

(து - ரை.) *அறம் தங்கு வான் - அறஞ்செய்தோர் தங்குதற்கு உரிய வானுலகம். ஆர்கலி - கடல். அவனி - நிலவுலகம். பதம் - இன்பம் ; பதவியுமாம். அமளிப்புறம் - படுக்கையில். பூவை : தலைவியினது. ஆகத்தை - உடம்பை. புல்லல் - தழுவல். இறந்தும் - உணர்ச்சி இறந்தும், (பின்)பிறந்தும். போகம்-கலவியின்பம். இயைந் தனம் - பெற்றோம். புல்லுந்தொறும் இயைந்தனம் ; (பிறர்) வானி லும் அவனியிலும் பிறந்து என் ? (எம்போல்) இங்ஙன் பதம் பெற்ற வர் ஆர்? (கடுகூ) எனக்கூட்டுக.* உ

வரைதல் முற்றும்

## உ௩. இல்வாழ்க்கை

*[தலைவனும் தலைவியும் இல்லறம் நடத்துதல்]*

### உழையர் வாழ்த்து

*[உழையர்—ஏவலாளர் ; அயலில் உள்ளாருமாம். இவர்கள் தலைவன் தலைவியரை வாழ்த்தல்]*

**434.** வேலுஞ் சிலையுமில் லாவிறல் வேளன்ன வேந்தனுமிச்
சேலுங் கயலு மனையகண் ணாளுந் திகிரியங்கை
மாலுந் திருவு மதிமுடி யோனு மலைமகளும்
போலுந் தகையின்று போலென்று நீவிர் புணர்ந்திருமே.

(து - ரை.) வேல் இல்லா வேள் - முருகப்பெருமான். சிலை இல்லா வேள் - மன்மதன் ; சிலை - கரும்பு வில். அன்ன - இவர்களை யொத்த. வேந்தன் - தலைவன். கண்ணாள் : தலைவி. திகிரி அங்கை மால் - சக்கரப்படை தரித்த திருமால். மதிமுடியோன் - திங்களைத் திருமுடியில் அணிந்த சிவபெருமான். மலைமகள் - இறைவி. தகை - தகுதியொடு. வேந்தனும் கண்ணாளுமாகிய நீவிர், மாலும் திருவும், மதிமுடியோனும் மலைமகளும்போலும் தகையிராய் இன்றுபோல் என்றும் இரும் எனக் கூட்டுக. க

### தோழி வாழ்த்து

*[தோழி தலைவனை வாழ்த்தல்]*

**435.** தேற்றிய வஞ்சினம் பொய்யா வகைநின் திருப்புயத்தில்
ஏற்றிய தொங்கல் நறுங்குழற் கேற்றி யிலங்கிழையார்
தூற்றிய பேரல ருந்தொலை யாஎன்கண் சோர்புனலும்
மாற்றிய எம்பெரு மான்வாழி வாழி வளஞ்சிறந்தே.

(து - ரை.) தேற்றிய வஞ்சினம் - தலைவியைத் தெளிவிக்கும் பொருட்டுக் கூறிய சூளுறவு ; கஅ. ஏற்றிய தொங்கல் - அணிந்துள்ள மாலையை. நறுங்குழற்கு ஏற்றி - தலைவிக்கு அணிந்து ; என்றது தலைவியை மணஞ்செய்து என்றபடி; திருமணத்தின்போது மாலை மாற்றிக்கொள்ளலும் ஒரு சடங்காகும். நறுங்குழல் : தலைவி; அன்மொழித்தொகை. இலங்கிழையார் - ஊரிலுள்ள மகளிர். அலர் - பழிச்சொல். தொலையா - தொலைத்து. புனல் - கண்ணீர். பெருமான் : தலைவன். புயத்தொங்கலைக் குழற்கு ஏற்றி, அலருந் தொலையாப், புனலும் மாற்றிய பெருமான் சிறந்து வாழியெனக் கூட்டுக.

(வே - ம்.) இவள் குழற்கேற்றி ; தூற்றிய போலவரும். இ - வி. கஅ0. உ

பாங்கியைப் புகழ்தல்

*[தலைவன் புகழ்தல்]*

436. அந்நாள் முதலின்று மின்றளவாய்வரு மப்படர்போய்ப்
பொன்னு ரமளி பொருந்தினம் யாம்பொருந் தாதவரின்
இன்னு அரும்பிணிக் கின்மருந் தாக இடைநின்றுநீ
முன்னுள் முயன்ற முயற்சியிவ் வாறு முடிந்ததுவே.

(கு - ரை.) அந்நாள்முதல் - தலைவியைக் கண்ட நாள் முதல். அப்படர் - தலைவியைக் கூடாமையால் வருந் துன்பம். அமளி-படுக்கையில். பொருந்தாதவரின் இன்னு - பகைவரைப்போல் துன்பம் தந்துவந்த. பிணிக்கு - காமநோய்க்கு. இன்மருந்து - இனிய மருந்து. இவ்வாறு - தலைவியை மணமுடித்து இல்வாழ்க்கை நடத்துமாறு. யாம் படர்போய்ப் பொருந்தினம் ; மருந்தாக நீ இடைநின்று முயன்ற முயற்சி இவ்வாறு முடிந்தது எனக் கூட்டுக.

(வே - ம்.) முதலின்றளவாய வரும்படர். இ - வி. கஅ0. ங

பாங்கி புகழ்தல்

*[பாங்கி, தலைவனைப் புகழ்தல்]*

437. பனிநின்ற சோலைப் பலவின் சுளைரசம் பாய்ந்துலவும்
கனிநின்று நீளுங் கனமலை நாட கழைக்கரும்பை
நுனிநின் றருந்திய தொக்குமன் றேமின் னுடங்கிடையாள்
துனிநின்ற நாணந் தடுக்கநின் னேடு தொடுத்தநண்பே.

(கு - ரை.) பனிநின்ற - குளிர்ச்சி பொருந்திய. பலவு - பலாப் பழம். நின்று நீளும் - மிகுதியாகத் தொங்கும். கனம் - பெரிய. நாட : தலைவ. கழை - திரண்ட. கரும்பை நுனியிலிருந்து அடி வரையில் தின்பார்க்குச் சுவை மேன்மேலும் மிகுந்து தோன்றுமாறு போலத் தலைவியின் நட்பும் வளர்ந்ததென்பது கருத்து. 'கருத் துணர்ந்து கற்றறிந்தார் கேண்மை எஞ்ஞான்றும் - குருத்திற் கரும்பு தின்றற்றே' - நாலடி. உகக. மின் நுடங்கு இடையாள் - மின்னலைப் போல் அசைகின்ற இடையினையுடைய தலைவி. துனி நின்ற நாணம் - ஊடலும், நிலைபெற்ற நாணமும். தொடுத்த - பூண்ட.

நாட! இடையாள், தடுக்கவும் தொடுத்த நண்பு கரும்பை நுனியி லிருந்து அருந்தியது ஒக்குமன்றே? எனக் கூட்டுக.

(வே - ம்.) பலவுச்சினை கலை பாய்ந்துகள; கணமலை; தொடுத்த அன்பே. இ - வி. ௧௮௦. ௪

## தலைமகற்குத் தோழி சொல்லியது

*[தலைவன் மணத்தல் வேண்டித் தாங்கள் கடவுளை வேண்டினமையைத் தோழி அவனுக்குக் கூறியது]*

**438.** இன்னிசை வண்டுறை தாரிறை வாமின் னிலங்குவெற்பர்
தன்னிசை வைத்துத் தவரு துனக்குத் தருகவென்றும்
மன்னிய கேண்மை மறவாமல் நீயும் வரைகவென்றுங்
கன்னியு நானுங் கடவுளை வேண்டினங் காதலித்தே.

(கு - ரை.) தார் இறைவா - மாலையணிந்த தலைவா. மின் இலங்கு - மின்னல் ஒளிர்கின்ற; மின்: தலைவியுமாம். வெற்பர் - தலைவியின் தமர். தன் இசை வைத்து - தன்புகழை நிலைபெற வைத்து; இச்சை, இசையெனத் தொக்கதாகக்கொண்டு 'விருப்பம் வைத்து' எனப் பொருளுரைக்கினுமாம். உனக்கு: தோழி தலைவனை நோக்கிக் கூறியது. மன்னிய கேண்மை - தலைவியிடம் நீ கொண்ட நிலைபெற்ற காதலை. வரைக - மணக்க. கன்னி: தலைவி. இறைவா! வெற்பர் தருக என்றும், நீயும் மறவாமல் வரைக என்றும் காதலித்துக் கன்னியும் நானும் வேண்டினம் (௩-௩-௬) எனக் கூட்டுக. 'வெற்பர் தன்னிசை' என்றது ஒருமைப் பன்மை மயக்கம். ௫

## ஆரா அன்பின் அவன் நிலை கூறல்

*[தலைவனது பெருங்காதலைக் கண்ட தோழி, 'முன்பெல்லாம் நீ எவ்வாறு ஆற்றியிருந்தாய்?' என்று கேட்டல்]*

**439.** முருக விழுங்குழல் மோந்திவ ளேந்து முலைபுளகித்து
உருக முயங்கி மயங்கியு நீருல வாதஇன்பம்
பெருகுவ தன்றிப் பிரிந்தறி யீர்பின்னை யானுமக்கிங்கு
அருகிய நாளென்செய் தீரைய னேயிந்த அன்புகொண்டே.

(கு - ரை.) முருகு அவிழும் - நறுமணம் பரவும். ஏந்து - உயர்ந்த. புளகித்து - மயிர் சிலிர்க்கப்பெற்ற. உருக - தலைவியின் உள்ளம் உருகுமாறு. முயங்கி - தழுவி. உலவாத - கெடாத. அருகிய

நாள் - தலைவியை அரியளாகச் செய்த களவுக் காலத்தில். ஐயனே- தலைவனே. இந்த - இத்தகைய, ஐயனே! மோந்து முயங்கி மயங்கியும் பெருகுவதன்றிப் பிரிந்தறியீர்; இந்த அன்புகொண்டு அருகிய நாள் என் செய்தீர்? எனக் கூட்டுக.

(வே - ம்.) மோந்தவந்து; உருகி மயங்கி முயங்கியும்; அலம் பிறவா பின்னை. இ - வி. கஅ௦. சு

### பூங்கொடி அன்பு பகர்தல்

*['தலைவன் நின்னை மணக்குமளவும் நீ எவ்வாறு ஆற்றி இருந்தாய்?' என்று பாங்கி தலைவியை வினவல்]*

440. தினைக்காவல் மாறி மலைக்கும் வெம்போர்வெஞ் சிலைக்குறவர்
மனைக்காவ லிற்றனி வைகிய நாளும் வரைவிடைவைத்து
உனைக்கா தலர்விட் டுறைந்தஅந் நாளு மொழிந்ததெங்கே
சுனைக்காவி யன்னகண் ணாய்தொலை யாநலந் துய்க்குமன்பே.

(கு - ரை.) மலைக்கும் - அஞ்சத்தகும். சிலை - வில்லையுடைய. குறவர்: தலைவியின் தமர். மனைக்காவல் - இற்செறிப்பு: கஎஉ. வைகிய - தங்கிய. வரைவிடை வைத்து உறைதலை, வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல் என்னும் பகுதியால் அறிக. காவி - நீலமலர். கண்ணாய்: தலைவியே. தொலையா நலம் துய்க்கும் - கெடாத புணர்ச்சி யின்பத்தை நுகரும். கண்ணாய்! மாறி வைகிய நாளும், காதலர் உனைவிட்டு உறைந்த அந்நாளும் அன்பு எங்கே ஒழிந்தது? எனக் கூட்டுக. இத்துணை யன்போடு எவ்வாறு ஆற்றி யிருந்தாய் என்பது கருத்து.

(வே - ம்.) உனைக் காவலாய்விட்டு, ஒளித்ததெங்கே. இ - வி. கஅ௦. எ

### ஆற்றினமை கூறல்

*[தலைவி தான் ஆற்றியிருந்தமைக்குக் காரணம் கூறுதல்]*

441. பாங்காய இன்பப் பனிமொழி யாயிப் பரிசுநெஞ்சில்
தாங்கா வருநலந் தாங்கரி தோதலை நாவளித்த
பூங்காவி யுண்டு புரவலர் தாம்வந் திரவுபகல்
நீங்காத நெஞ்சமுண் டென்தஞ்ச மாகிய நீயுமுண்டே.

(கு - ரை.) பாங்காய - நண்பாயமைந்த. பனிமொழியாய் - குளிர்ந்த சொல்லையுடைய தோழியே. இப்பரிசு - இம்முறையில்.

நலம் - காதல். தலைநாள் - முன்னாளில். பூங்காவி - தலைவன் அளித்த குவளைமலர் : நடுகூ. புரவலர் : தலைவர். நீங்காத - அன்பு நீங்காத. தஞ்சம் - பற்றுக்கோடு. பனிமொழியாய்! காவியுண்டு; நெஞ்சம் உண்டு; நீயும் உண்டு. இப்பரிசு நலம் தாங்கல் அரிதோ எனக் கூட்டுக. ஓ: எதிர்மறை.

(வே - ம்.) வீணைப் பணிமொழியாய்; தஞ்சமாகிய நெஞ்சு முண்டே. இ - வி. கஅ0. அ

தலைவி ஒழுக்கம் தலைவனுக்கு உரைத்தல்

*[ஒழுக்கம்—ஒழுக்கத்தைப் பாங்கி உரைத்தல்]*

**442-** கண்டா லெழுந் தொழுநில் லாமலுங் கண்முன்சொல்வது
உண்டாயி னென்று பலவுக் குரைத்தலு மொண்கமலத்
தண்டா மரையவர் சான்றோ ரருள்பெறுந் தன்மையுமுட்
கொண்டா ளுரையன்றி யேகுறிப் பாள்நம் குலக்கொடியே.

(து - ரை.) கண்டால் எழல் - தலைவனையும் பெரியோரையும் கண்டால் எழுந்திருத்தல். பிற ஆடவர் கண்முன் நில்லாமலும் என்க. சொல்வது - சொல்லவேண்டியது. பலவுக்கு ஒன்று உரைத்தல் - பல சொல்லுக்கு ஒரு சொல்லையே பதிலாக உரைத்தல்; சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் சின்மொழியாள் என்றபடி. கமலத் தாமரை: இருபெயரொட்டு; தாமரையவர் - தாமரைமலர் மாலையையணிந்த அந்தணர். சான்றோர் - அறிவால் நிறைந்த பெரியோர். உரையன்றியே குறிப்பாள் - சொல்லாமலே குறிப்பறிந்து ஒழுகுவாள். குலக்கொடி: தலைவி. குலக்கொடி, எழலும் தொழலும் நில்லாமையும் உரைத்தலும் தன்மையும் உட்கொண்டாள்; (இவையன்றி) உரையன்றியே குறிப்பாள் எனக் கூட்டுக.

(வே - ம்.) சான்றோர் உளம்பெறு தன்மையும். கூ

உண்டியின் உவத்தல்

*[தலைவி சமைத்த உணவினை உண்ட தலைவன் அவ்வுணவை உவந்து கூறல்]*

**443.** முருகொன் றியதல்ல பல்லவத் தல்ல முகிழ்த்தரும்பக்
கருகுங் கயலன்ன கண்சிவப் பூரக் கமழ்புகையுட்
செருகுங் கருணையுந் தீம்பா லடிசிலுந் தேவரன்று
பருகும் அமுதமன் றேஎன்னை யாளும் பசுங்கொடியே.

(கு - ரை.) முருகு ஒன்றுவதும் பல்லவத்தில் முகிழ்ப்பதுமாய அரும்பன்றி, முருகு ஒன்றாததும் பல்லவத்தில் முகிழாததுமாகிய வியர்வைத்துளி தலைவியின் முகத்தில் அரும்ப என்க. முருகு ஒன்றல் - மணம் பொருந்தல். பல்லவம் - தளிர். முகிழ்த்து அரும்ப - துளித்துளியாகத் தோன்ற, 'முருகொன்றியதல்ல பல்லவத்தல்ல' என்றது வியர்வைக்கு வெளிப்படை. ஊர - பரக்க. கமழ்புகை - தாளிப்புப் புகை. உள் - கருனையுள். கருனை - பொரிக்கறி. தீம்பால் அடிசில் - இனிய பாற்சோறு. அன்று தேவர் பருகும் அமுதம்: சநஉ. பசுங்கொடியே: தலைவியே! அரும்ப ஊர (நீ சமைத்த) கருனையும் அடிசிலும் அமுதம் அன்றோ? எனக் கூட்டுக. கo

## காதல்நிலை உரைத்தல்

*[தலைவன் தலைவியருடைய காதலின் சிறப்பைத் தோழி கூறுதல்; கவிக் கூற்றுமாம்]*

**444.** தோளிற் கரும்பு முலையிற் கொடிவிடு தொய்யிலுங்கண்
வாளிற் களவின் மறுமையுந் தீயின் மணிமவுலி
தாளிற் பணியுந் தளரிடை நையத் தனத்தினுடன்
நாளுக்கு நாளு நலம்புதி தாக நடக்கின்றதே.

(கு - ரை.) கரும்பு - மன்மதனுடைய கரும்புவில்; மகளிர் தம் தோளிலும் கொங்கையிலும் கரும்புவில் போன்றும் பூங்கொடி போன்றும் குங்குமக் குழம்பால் எழுதிக்கொள்வது பண்டைக்கால வழக்கு. கொடிவிடு தொய்யில் - பூங்கொடி படர்வதுபோல் எழுதப் பட்ட முலைக்கோலம். களவின் மறு மை - களங்கனி போன்ற கரிய மை. தீயின் மணி மவுலி - நெருப்பினையொத்த செம்மணி கள் அழுத்திய தலைவனது முடி. தாளில் பணியும்-தலைவியின் காலில் பணியவும்; இஃது ஊடலில் நிகழ்வது: சகடு. ஊடற்காலத்துத் தலைவன் தலைவியைப் பணிவது இயல்பு என்பதை "மனைவி உயர்வும் கிழவோன் பணிவும் - நினையுங் காலைப் புலவியுள் உரிய" என்னும் தொல்காப்பியப் பொருளியல் (கூ) நூற்பாவால் அறிக. நை அத்த னம்-வருந்துதற்குக் காரணமான கொங்கையையுடைய தலைவி. நலம்- இன்பம். நடக்கின்றது - தோன்றுகின்றது. தோளிற் கரும்பும், முலையில் தொய்யிலும், கண்ணில் மையும் (பொருந்தவும்) தாளிற் பணியவும் தனத்தினுடன் நலம் நடக்கின்றது எனக் கூட்டுக. கக

### மணமனை சென்ற செவிலிக்குத் தோழி சொல்லியது

*[தலைவியைக் காண வந்த செவிலிக்குத் தோழி தலைவன் தலைவியருடைய ஒழுக்கநெறியைக் கூறுதல்]*

**445.** அணங்குங் கடவு ளணிநெடுந் தேரண்ண லையொழிய
வணங்குங் கடவுள்மற் றொன்றறி யாள்வரி வண்டினங்கள்
இணங்குஞ் சுரிகுழல் வல்லியன் னாள்தங்கு மில்லதன்றிக்
கணங்கொண் டெழுஞ்சுடர் பட்டறி யாதவர் காதலரே.

(கு - ரை.) அணங்கும் கடவுள் - அழகு பொருந்தும் கடவுளாக. அணி - அழகிய. அண்ணல் - தலைவன். கணவனையே கடவுளாகக்கொண்டொழுகும் கற்புடையாள் என்றபடி. 'தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யும் மழை - (குறள் - ருரு). வரி - இசை பாடுகின்ற. இணங்கும் - பொருந்தும். சுரிகுழல் - நுனி சுருண்ட கூந்தலையுடைய. வல்லி அன்னாள் - பூங்கொடிபோன்ற தலைவி. கணங்கொண்டு எழும் சுடர் - ஒளிக்கதிர்த் தொகுதியோடு எழுகின்ற கதிரவன். இல்லதன்றிப் பட்டறியாதவர் என்றது, காதலர் எங்குச் செல்லினும் கதிரவன்படுமுன் இல்லிற்கு வந்துவிடுவார் என்றபடி. (தலைவி) அண்ணலைக் கடவுளாக (அறிவளே) ஒழிய மற்றொன்றைக் கடவுளாக அறியாள்; (நகச). காதலர் இல்லதன்றிப் பட்டு அறியாதவர் எனக் கூட்டுக.

கஉ

### செவிலிக்குத் தோழி இல்வாழ்க்கை நன்றென்றல்

*[தலைவன் தலைவியர் நிகழ்த்தும் இல்வாழ்க்கை முறையை]*

**446.** பானா றடிசிலு மூனார் கொழுங்குறைப் பாகுமுற்ற
தேனார் கருனையுந் தீம்புளிப் பாகுநின் சேயிழையாள்
ஆனாத வன்பி னமைத்திமிழ் வாரி யமுதென்றன்பர்
தானார நல்கி யகமகிழ் கூருந் தகுதியளே.

(கு - ரை.) பால் நாறு அடிசில் - பால் மணம் வீசும் சோறு. ஊன் ஆர் - உணவாகப் பொருந்திய. கொழுங்குறைப் பாகு - கொழுவிய இறைச்சிக் குழம்பு. தேன் ஆர் - இனிமை பொருந்திய. கருனை - பொரிக்கறி. தீம்புளிப் பாகு - இனிய புளிக்குழம்பு. சேயிழையாள் : தலைவி. ஆனாத - நீங்காத. அமைத்து - சமைத்து.

இமிழ் வாரி அமுது - ஒலிக்கின்ற பாற்கடலில் தோன்றிய அமிழ்து. அன்பர்: தலைவர். ஆர - உண்ண. கூரும் - மிகும். அன்பர் அமுதென்று ஆர, சேயிழையாள் அடிசிலும், பாகும், கருணையும், பாகும் அமைத்து நல்கிக் கூரும் தகுதியள் எனக் கூட்டுக: ௪௪௫.

(வே - ம்.) ஊணர்; அமைத்துமிழ்; அமிழ்தினன்பன். இ - வி. ௧௮௦. ௧௫

நற்றாய்க்குச் செவிலி தலைமகள் வாழ்க்கை நன்று என்றல்

447. அருந்தும் பசியு மடுமணற் சோறு மயர்ந்திறைவன்
வருந்தும் பசிக்கு வருந்துமில் வாழ்க்கையும் வேட்கையுடன்
பொருந்தும் விருந்தும் புறந்தரு நீர்மையும் போற்றியவன்
திருந்துந் திறஞ்செய லுங்கற்ற வாநின் திருமகளே.

(கு - ரை.) அருந்தும் பசியும் - தன் பசிக்கு உண்ணுதலையும், மணற்சோறு அடுதல் முதலிய விளையாட்டையும், அயர்ந்து - மறந்து; அடுதல் - சமைத்தல். இறைவன் - தலைவன். வருந்தும் - வருந்தி ஊட்டும், இல்வாழ்க்கை முறையும். வேட்கை - விருப்பம். புறந் தரும் நீர்மை - உபசரித்துக் காக்குந் தன்மை. போற்றி - விடாது கைக்கொண்டு. அவன்: தலைவன். திறம் - வகை. தலைவன் ஒழுக்கந் தவறியவிடத்து அதனைத் தன் வாயாற் கூறாது செய்கையாலேயே திருத்துவாள் என்பாள், 'திருந்தும் திறம் செயலும் கற்றவா' என்றாள். கற்றவா - கற்றது மிகவும் வியத்தற்கு உரியது என்றபடி. திருமகள் பசியும் சோறும் அயர்ந்து வாழ்க்கையும், நீர்மையும் போற்றிச் செயலும் கற்றவா எனக் கூட்டுக.

(வே - ம்.) பசிக்குமில் வாழ்க்கையும் வேட்கையும் வண்மையுடன்; போற்றியன்றி. இ - வி. ௧௮௦. ௧௬

இல்வாழ்க்கை முற்றும்

## உச. பரத்தையிற் பிரிவு

*[பொது மகளிரின் இன்பம் துய்த்தற்குத் தலைவன் தலைவியை விட்டுப் பிரிதல்]*

### புலவிக்கு ஏதுக் கூறல்

*[தலைவனது செயலைக் கண்டோர், 'இது தலைவியின் ஊடலுக்குக் காரணமாகும்' என்றல்]*

**448.** பங்கே ருகத்தண் பழனநல் லூரன் பவனிவரக்
கொங்கேர் நறுங்குழற் கோதையர் கண்டு குவித்தகையும்
அங்கே யவரவ ரன்புக் கருள்செய் தமைத்தகையும்
பொங்கே ரிளமுலை யாள்புல வாவகை போவதன்றே.

(கு - ரை.) பங்கேருகம் தண் பழனம் - தாமரைகளையுடைய குளிர்ந்த மருத நிலத்தின். ஊரன் - ஊர்களையுடைய தலைவன். பவனி - உலா. கொங்கு - பூந்துகள்; மகரந்தமென்பர் வடநூலார். ஏர் - அழகு. கோதையர் - பொது மகளிர். அருள்செய்து அமைத்த கை - கைகாட்டி அருள் செய்தல். பொங்கு ஏர் - பூரிப்பும் அழகு முடைய. முலையாள்: தலைவி. புலவா - ஊடா. கைகுவித்தமையும், அருள் செய்தமையும் புலவாவகை போவதன்று எனக் கூட்டுக. இவ்விரண்டும் புலவி உண்டாதற்குக் காரணம் என்பது கருத்து.

(வே - ம்.) கொங்கேய்; போதவன்றே. இ - வி. கஅ௨. க

### தனித்துழி இறைவி துனித்து அழுதிரங்கல்

*[தலைவனைப் பிரிந்தவிடத்துத் தலைவி துன்பமுற்று வருந்துதல்]*

**449.** மருப்பார் வனமுலை மங்கையர் சேரியில் வைகலுந்தன்
விருப்பா லுறைநல மேவிய காதலர் வேட்கைவெந்தீ
உருப்பா லுருகிய ஆவியும் பாவி யுடம்புங்கொண்டே
இருப்பார் பிறருமுண் டோநெஞ்ச மேயிங் கெனையொழித்தே.

(கு - ரை.) மருப்பு ஆர் - யானைக்கொம்பையொத்த. மங்கையர்: பரத்தையர். வைகலும் - நாள்தோறும். உறைநலம் மேவிய - தங்கியிருக்கும் இன்பத்தைப் பொருந்திய. காதலர் வேட்கைத்தீ - தலைவர் மீது கொண்ட காதற்றீயின். உருப்பால் - வெப்பத்தால். எனை ஒழித்து - என்னையன்றி. நெஞ்சமே ஆவியும் உடம்புங் கொண்டு

இருப்பார் எனையொழித்துப் பிறரும் உண்டோ? எனக் கூட்டுக. யான் ஒருத்தியே இவ்வாறு துன்புறுகின்றேன் என்பது கருத்து. உ

### அடிசில் அமைத்து மடவரல் இரங்கல்

*[தலைவி உணவினைச் சமைத்த பிறகும் தலைவன் உண்ண வராமையின் அவள் வருந்தல்]*

**450.** அலையேற் றியஇப்பி வைத்தடுப் பாக அரும்பவிழ்தேன்
உலையேற் றியசங்கி னித்திலம் பெய்தபி னொண்துகிலார்
கலையேற் றியநுத லாரடுஞ் சோறிடக் கைக்கமலத்
திலையேற்ற வெம்பசி யின்றிலை யோநம் இறைவருக்கே.

(கு - ரை.) அலை ஏற்றிய இப்பி - அலையானது கடலினின்றும் ஒதுக்கிய சிப்பியை, அடுப்பாக வைத்து. தேன் உலை ஏற்றிய சங்கில் - தேனை உலையாகப்பெய்து அடுப்பின்மீது ஏற்றிய சங்காகிய பானையில் நித்திலம் பெய்தபின் - முத்தாகிய அரிசியை இட்டபின். ஒண் துகிலார் - ஒளிபொருந்திய ஆடையை யணிந்தவரும், கலை ஏற்றிய நுதலார் - பிறைத்திங்களையொத்த நெற்றியை உடையவருமாகிய பாங்கியர். அடும் சோறு - சமைத்த சிறுசோற்றை. கமலம் கை இலை ஏற்ற - தாமரைமலர்போன்ற கையையே இலையாக ஏற்ற; இது தலைவி முன்னே சிறுசோறட்டு விளையாடிய காலையில், தலைவன் வந்து இரந்தமையை நினைத்துக்கொண்டு கூறுகின்றதென்க. இறைவர் - தலைவர். வைத்து ஏற்றிய சங்கில் பெய்து அடும் சோறிட ஏற்ற பசி இறைவருக்கு இன்று இல்லையோ? எனக் கூட்டுக. பரத்தையர் மாயையில் அகப்பட்டு உண்ணவும் வரவில்லையே என்று இரங்கியவாறு.

(வே - ம்.) மடவாள் இரங்கல்; பெய்தனல் ஒண்துகிராற், கலைபோற்றிய நுதல் நாம்; இலைபோற்று. இ - வி. கஅஉ. ந

### இரவினும் எய்தா உரவோற்கு இரங்கல்

*[இரவுப்பொழுதினும் இல்லமெய்தாத தலைவனை எண்ணித் தலைவி வருந்தல்]*

**451.** காவும் பருமணற் கானலும் பேயருங் கங்குலினும்
வாவும் பரிநெடுந் தேர்வரக் காண்கிலம் வாவிதொறும்
மேவுங் கருங்கயல் செங்கழு நீரின் மிசைபிறழப்
பூவும் புலவுங் கமழ்புன லூரன் புகழ்ச்சிநன்றே.

(கு - ரை.) கா - நகர்ப்புறச்சோலை. கானல் - கடற்கரைச்சோலை. கங்குல் - இரவு. வாவும் பரி-தாவிச்செல்லும் குதிரைகளைப் பூட்டிய. தேர் - தலைவன் ஏறிச் சென்ற தேர். வாவி - குளம். செங்கழுநீர் - ஒருவகை நீர்ப்பூ. மிசை - மேலே. புலவு - புலால் நாற்றம். ஊரன் - மருதநிலத் தலைவன். நன்று : குறிப்பு மொழி ; நன்றன்று என்றபடி. பூவின் நறுமணமும், புலாலின் தீமணமும் கலந்து தோன்றும் ஊரனாதலின், அவன் புகழும், பரத்தையர் கூட்டுறவால் உண்டாகும் பழியொடு கலந்து தோன்றுகிறது என்பது குறிப்பு. தேர் கங்குலினும் வரக் காண்கிலம்; (ஆதலின்) ஊரன் புகழ்ச்சி நன்று எனக் கூட்டுக.

(வே - ம்.) புகற்சி. இ - வி. ௧௮௨. ௬

### ஈங்கிது என்னெனப் பாங்கி வினாதல்

*[‘இவ்வாறு நீ வருந்துவதற்குக் காரணம் யாது?’ என்று பாங்கி தலைவியை வினவல்]*

452. மறையிற் புணர்வன்றி மன்றற் புணர்வின்று வாய்த்தநன்னாள்
நிறையிற் சிறந்தநன் னீர்மையெல் லாம்நிறை நீருள்நின்று
பொறையற்ற வேட்கையி னாற்புலந் தாரின் நலஞ்சிதையக்
கறையுற்ற வேற்கணல் லாயென்னை யோவந்த காரணமே.

(கு - ரை.) மறையிற் புணர்வு - களவொழுக்கம். மன்றல் புணர்வு - கற்பொழுக்கம். மறையிற் புணர்வாயிற் பல இடையூறுகளால் தலைவனைக் காண இயலாது வருந்துதலும் கூடும். மன்றற் புணர்வு வாய்த்த இன்று அந்நிலை கூடாதாகலின் வருந்துறல் என்னோ? என்றவாறு. நிறை - கற்பு. நல் நீர்மை - நல்ல குணங்கள். நிறைநீருள் - நிறைந்த தன்மையோடு. பொறையற்ற - பொறுக்க முடியாத. வேட்கை - புணர்ச்சி விருப்பம். புலந்தாரின் - ஊடிய மகளிரைப்போல். காதல் மிகுதியால் புலவி தோன்றும் என்பதைத் திருக்குறள், புலவி நுணுக்கம் (௧௩௨). என்னும் அதிகாரத்தால் அறிக. நலம் சிதைய - அழகு கெடும்படியாக. கறை - குருதிக் கறை. நல்லாய் : தலைவியே! நன்னாளாகிய இன்று நின்று புலந்தாரின் சிதைய வந்த காரணம் என்னையோ? எனக் கூட்டுக. ௫

இறைவன் புறத்தொழுக்கு இறைமகள் உரைத்தல்

*[புறத்தொழுக்கு—தலைவன் பரத்தையரோடு கூடி ஒழுகுதல்]*

**453.** வாரேற் றியமுலை மங்கையர் தங்களை வைகலும்பொன்
தேரேற்றி வந்து மகிழ்மணஞ் செய்யவுஞ் சேரியன்றி
ஊரேற் றியபுன லூரன் தகைமையை யுள்ளுந்தொறுந்
தாரேற் றியகுழ லாய்தழ லாமென் றனிநெஞ்சமே.

(கு - ரை.) வார் ஏற்றிய - கச்சணிந்த. மங்கையர் : பரத்தையர். வைகலும் - நாள்தோறும். மணம் செய்தல் - கூடுதல். ஊர் ஏற்றிய - பரத்தையரை ஊரின்கண்ணும் கொண்டு வருகின்ற. ஊரன் - மருத நிலத் தலைவன். உள்ளல் - நினைத்தல். தார் ஏற்றிய குழலாய் - மாலை யணிந்த கூந்தலையுடைய தோழியே. தழலாம் - நெருப்பைப்போல் கொதிக்கின்றது. குழலாய்! மங்கையரை மணஞ்செய்தலும், ஊர் ஏற்றலுமான ஊரன் தகைமையை உள்ளுந்தொறும் என் நெஞ்சம் தழலாம் எனக் கூட்டுக. சு

தலைவியைப் பாங்கி கழறல்

*[கழறல்—இடித்துக் கூறல்]*

**454.** மாலைக் குமுத மலர்தரு தேனுண்ட வண்டுவரக்
காலைக் கமலங் குவிந்தது வோஅருங் கற்பினுக்கங்கு
ஏலக் கருங்குழல் மங்கையர் காதல ரென்செயினும்
சீலத் தியல்புகுன் றார்வருந் தேல்மெய் திருந்திழையே.

(கு - ரை.) குமுதமலர் தரு - அல்லிப்பூத் தந்த; இஃது இரவில் மலர்வதாகலின் 'மாலைக்குமுதம்' என்றாள். காலைக் கமலம் - காலைப் பொழுதில் மலர்வதாகிய தாமரைப்பூ. வண்டு, குமுதத்தின் தேனை உண்டு வந்தமை கருதிக் கமலம் குவியாமைபோல, நீயும் தலைவன் புறத்தொழுக்கங் கருதி அவனை வெறுத்தலாகாது என்பது குறிப்பு. இஃது எடுத்துக்காட் டுவமையணி. குமுதம் பரத்தைக்கும், வண்டு தலைவனுக்கும், கமலம் தலைவிக்கும் உவமை. கற்பினுக்கு - கற்பைக் காத்தற்கு. ஏலம் - மயிர்ச்சாந்து பூசிய. சீலத்து இயல்பு - கற் பொழுக்கத்தின் தன்மை. மெய்-உடம்பு. திருந்திழையே: தலைவியே! குமுதத்தேனுண்ட வண்டு வரக் கமலம் குவிந்ததுவோ? (அதுபோல) காதலர் என் செயினும் மங்கையர் கற்பினுக்கு இயல்பு குன்றார்; (ஆதலின்) மெய் வருந்தேல் எனக் கூட்டுக.

(வே - ம்.) மலர் தரும் ; கற்பினுக்கும். இ - வி. கஅஉ. எ

### செவ்வணி அணிந்து சேடியை விடுத்தல்

*[தலைவி பூப்புற்றதை அறிவிக்கும்பொருட்டு, ஒரு தோழிக்குச் செவ்வாடை உடுத்துச் செஞ்சாந்து பூசிச் செவ்வணி அணிந்து பரத்தை விட்டிலுள்ள தலைவன்பால் அனுப்புதல்]*

455. பரிதி நிறத்த பணிதுகி லார்த்துப் பணைமுலைமேல்
குருதி நிறத்தொளிர் குங்குமஞ் சேர்த்தியிக் கோலங்கொண்டு
கருதிய கற்புக் கடனெறி கூறிநங் காதலர்க்கு
வருதி யெனப்பகர்ந் தேவிடுஞ் சேடியை வாணுதலே.

(து - ரை.) பரிதி நிறத்த பணி துகில் - பரிதிபோன்ற சிவந்த நிறத்தினையுடைய செம்பணி, செந்துகில்களை; பரிதி - கதிரவன்; பணி - அணிகலம்; துகில் - ஆடை. ஆர்த்து - அணிந்து. பணை - பருத்த. குருதி - செந்நீர். குங்குமம் - குங்குமக்குழம்பு. கோலம் - செவ்வணி. கற்புக்கடன் நெறி - கற்புக்காலத்தில் தலைவன் நடந்து கொள்ளவேண்டுங் கடமையாகிய ஒழுக்கத்தை; அஃதாவது, பூப்புக் காலத்தில் தலைவியைப் பிரிதலாகாது என்பது. வருதி - வருவாயாக. சேடி - தோழி. வாணுதல்! தலைவி, சேடியை ஆர்த்துச் சேர்த்துக்கொண்டு காதலர்க்குக் கூறி வருதியெனப் பகர்ந்து விடும் எனக் கூட்டுக.

(வே - ம்.) நிறத்துப் பணித்துகில்; குருதி நிறத்துகிர்; விடு. இ - வி. ௧௮௨.

அ

### செவ்வணி உழையர் கண்டு அழுங்கிக் கூறல்

*[அயலார் அச்செவ்வணியைக் கண்டு வருந்திக் கூறுதல்; உழையர் - அயலார்]*

456. தம்பே ருலகறி தையனல் லார்மனை தங்குமெங்கோன்
நம்பேர் மறந்ததை நாமறிந் திங்ஙனம் நாணழிந்த
செம்பே ரணிநலங் கொண்டுநஞ் சேடியர் சென்றுநிற்பக்
கொம்பே விதித்ததை யோகொடி தேநங் குடிப்பிறப்பே.

(து - ரை.) தையல் நல்லார் - அழகிய பரத்தையர்; பொதுமகளிர் ஆதலின், இவர்தம் பேர் உலகறியப்பட்டதென்க. கோன் - தலைவன். நம்பேர் என்றது, தலைவியை. 'இங்ஙனம்' என்பதன் பின் 'வருந்த' என்னும் ஒரு சொல் வருவிக்க. நாண் அழிந்த-நாணழி

தற்குக் காரணமான: சுடுஎ. செம்பேர் அணி - செவ்வணி. சேடியர்-தோழியர். கொம்பே: தலைவியே! எங்கோன் மறந்ததை அறிந்து நாம் இங்ஙன் (வருந்தவும்) சேடியர் கொண்டு நிற்பவும் (ஊழ்) விதித்தது; நம் குடிப்பிறப்புக் கொடிது எனக் கூட்டுக. ஐயோ, இரக்கக் குறிப்புணர்த்திய இடைச்சொல். கூ

பரத்தையர் கண்டு பழித்தல்

*[பரத்தையர் செவ்வணியைக் கண்டு பழித்தல்]*

**457.** தண்ணந் துறைவன் மனையுறை பாவை தகுதிசொல்லிற்
பண்ணுறன் றியமொழி யீர்வசை யேபனி வார்குவளைக்
கண்ணுங் குழலுங் கருகித் துகிலுங் கனதனமும்
வண்ணஞ் சிவந்து வெளுத்தது நாணு மடமையுமே.

(கு - ரை.) துறைவன்: தலைவன். பாவை: தலைவி. பண் ஒன்றிய - இசை பொருந்திய; திருத்தம் அமைந்த எனலுமாம். மொழியீர்: பரத்தையர் தமக்குள் விளித்துக்கொண்டது. பனி வார் - குளிர்ச்சி மிக்க. கருகி - கருநிறங்கொண்டு; இஃது இயல்பு. துகில் சிவந்து என்றது, செவ்வாடை உடுத்து என்றபடி. தனம் சிவத்தல், செஞ்சாந்து பூசலால். வண்ணம் - நிறம். நாணும் மடமையும் வெளுத்தது என்றது, தோழியைச் செவ்வணியணிந்து விடுத்ததால் அவளுடைய நாணின்மையும் அறிவின்மையும் வெளிப்பட்டதென்று இகழ்ந்தவாறு. மொழியீர்! (பாவைக்கு) கருகிச் சிவந்து வெளுத்தது; (ஆதலின்) பாவையின் தகுதி சொல்லில் வசையே எனக் கூட்டுக. கருகிச் சிவந்து வெளுத்ததென்றது, முரணணி.

(வே - ம்.) வசையேற் பணிவார். இ - வி. கசஅஉ. கo

வாயில் நேர்வித்தல்

*[செவ்வணி கண்டு வரும் தலைவன்மீது தலைவி ஊடல்கொண்டு நிற்கத் தோழி அவ்வூடலைப் போக்கித் தலைவனை ஏற்றுக்கொள்ளுமாறு செய்தல்; வாயில்—தூது; தூதாவார் தோழி முதலியோர்; நேர்வித்தல் - தலைவனை ஏற்றுக்கொள்ளுமாறு உடம்படுவித்தல்]*

**458.** புறத்தா றெழுகி வரினுமிப் போது புகையுயிர்த்தல்
அறத்தாறும் அன்பும் அருளுமன் றேயன்பர் தேர்கடவி
மறத்தாரை வாள்விழி யாய்மணி மாளிகை வாசல்வந்துன்
திறத்தார்வ முற்றுநின் முறெதிர் கோடல் சிறப்புடைத்தே.

(கு - ரை.) புறத்தாறு ஒழுகி - புறத்தொழுக்கம் மேற்கொண்டு : சுடுநடை. புகை உயிர்த்தல் - சினந்து புகை தோன்றுமாறு மூச்செறிதல்: அறத்தாறும் - அறவொழுக்கமும், அன்பும் அருளும் அன்று : சுடுசு. கடவி - செலுத்தி. மறம் தாரை - கொலைத்தொழிலும் கூர்மையும் பொருந்திய. விழியாய் : தலைவியே. மணி - அழகிய. உன்திறத்து - உன்மீது. ஆர்வம் - காதல். விழியாய் ! அன்பர் கடவி வந்து ஆர்வமுற்று வாசல் நின்றார் ; புறத்தாறு ஒழுகிவரினும் இப்போது உயிர்த்தல் அறத்தாறும் அன்பும் அருளுமன்று எனக் கூட்டுக.

(வே . ம்.) திருமாளிகை. இ - வி. கஅஉ. கக

### உழையர் தலைமகன் வரவு உணர்த்தல்

*[தலைவனுடைய ஏவலாளர் அவன் வரவினைத் தலைவிக்கு உணர்த்தல்]*

**459.** நந்தாப் பழனக் கழனிநல் லூரர் நறுங்கழுநீர்ச்
செந்தா ரணிகுழற் சேடிசெல் லாமுன் திருந்திழையார்
சந்தாப மாற வுலகிய னோக்கித் தலைவியிற்கண்
வந்தார் வழுவுவ ரோபெரி யோர்தம் மரபியலே.

(கு - ரை.) நந்தாப் பழனம் - வளங்குன்றாத மருதநிலத்தமைந்த. ஊரர் - மருதநிலத்தலைவர். செந்தார் - சிவந்த மாலையை. சேடி - செவ்வணி அணிந்த தோழி. செல்லாமுன் என்றது, சென்றவுடன் என்றபடி ; மிகையுயர்வு நவிற்சியணி. திருந்திழையார் சந்தாபம் ஆற - தலைவியின் பிரிவுத் துன்பம் தணிய. உலகியல் : தீண்டாநாள் முந்நாளும் நோக்காமையும், நீராடியபின் ஈராறு நாளும் இகவாமையுமாம் (ஆசாரக்கோவை - சுஉ.) இதனைப் "பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும், நீத்தகன் றுறையார் என்மனார் புலவர்" என்னும் தொல்காப்பியக் கற்பியல் (சுசு) நூற்பாவும் வற்புறுத்தும். வழுவுவரோ - தவறுவரோ ; ஓ : எதிர்மறை. மரபு இயல் - தொன்று தொட்டு வரும் ஒழுக்கம். பெரியோர் வழுவுவரோ என்னும் பொதுப்பொருளால், தலைவரும் தம்மொழுக்கம் தவறாதபடி வந்தார் என்னும் சிறப்புப் பொருளை உறுதிப்படுத்தினமையால் இது வேற்றுப்பொருள் வைப்பணியாம். சேடி செல்லாமுன், ஊரரார் நோக்கி ஆற இற்கண் வந்தார் ; பெரியோர் இயல் வழுவுவரோ எனக் கூட்டுக. கஉ

கிழவோள் தன்மை உழையோர் கூறல்

[தலைவியின் நிலைமையை ஏவலாளர் சொல்லிக்கொள்ளுதல்]

460. பலரும் பரவப் பனிமலர்க் காவும் பழனமுஞ்சென்
றுலவுங் குரிசி லொருதனி யேவந் தொளியிழையீர்
இலகுந் திருமனை யெய்துமுன் யாரும் அடுப்பவெய்தா
மலர்மென் குழலி மனந்துனி மாறி மகிழ்வுற்றதே.

(கு - ரை.) பரவ - புகழ. பனி - குளிர்ச்சி. கா - சோலை. பழனம் - வயல். குரிசில் - தலைவன். ஒளியிழையீர்: உழையர் பாங்கியரை விளித்தது. அடுப்ப எய்தா - நெருங்கவொண்ணாத, துனி - முதிர்ந்த புலவி குழலி: தலைவி. ஒளியிழையீர்! குரிசில் மனை வந்து எய்துமுன் குழலியின் மனம் எய்தாத்துனி மாறி மகிழ்வுற்றது எனக் கூட்டுக.

(வே. - ம்.) ஒளியிழையார். கரு

தலைவனும் தலைவியும் கலவியின் மயங்கல்

[கலவி - புணர்ச்சி]

461. உள்ளத் துவகை யொருதலைப் பட்ட விருதலைப்பைம்
புள்ளொத் தினிய புதுமலர்ப் பாயற் புணர்ந்தஇன்ப
வெள்ளக் கடலிடை வீழ்ந்துட னீந்துவர் மெய்மறந்து
வள்ளக் கமல வளவய லூரனு மாதருமே.

(கு - ரை.) ஒருதலைப்பட்ட - உறுதியாகப் பொருந்திய. இருதலைப்புள் - இரண்டு தலைகளையுடைய ஒருவகைப் பறவை; இது பிரியா நட்பிற்கு உவமை கூறப்படும்; 'பிரிவின் றியைந்த துவரா நட்பின் - இருதலைப் புள்ளின் ஒருயி ரமமே' - (அகம்: கஉ.) எனவும், 'ஓர் உயிர்ப் புள்ளின் இருதலை உள்ளொன்று, போர்எதிர்ந் தற்றுப் புலவல்.' (கலி, அக: ௭ - ௬) எனவும் வரூஉம் ஆன்றோர் உரைகளால் அறிக. பாயல் - படுக்கையில். உடன் - ஒன்றாக. வள்ளக் கமலம் - கிண்ணம்போன்ற தாமரைமலர் பொருந்திய. ஊரன் - மருதநிலத்தலைவன். மாதர்-தலைவி. ஊரனும் மாதரும் இருதலைப்புள் ஒத்து வீழ்ந்து மெய்மறந்து நீந்துவர் எனக் கூட்டுக. க௭

### மகப்பொறை கூர்ந்த வண்ணம் உரைத்தல்

*[தலைவி கருப்பமுற்றிக் குழந்தை பெற்றமையைக் கூறுதல்; பொறைகூர்தல் - கருப்ப முற்றுதல்]*

**462.** சீலந் தகைபெறு சாலியன் னாள்சிறு வற்றரித்த
காலந் தமது கவினுறப் பெற்றன காலமின்னும்
கோலந் தருஞ்செங் குமுதமும் நீலமுங் குன்றெடுத்த
பாலன் துயில்கொண்ட பாயலுங் காலைப் பதுமமுமே.

(கு - ரை.) சீலம் தகைபெறு சாலி அன்னாள் - கற்பொழுக்கத்தில் சிறந்த அருந்ததிபோன்ற தலைவி: ௪௨௰. சாலி - அருந்ததி. சிறுவன் தரித்த காலம் - கருப்பமுற்ற காலத்தில். கவின் உறப் பெற்றன - அழகுமிகப் பெற்றன. காலமின் - கார்காலத்து மின்னலை யொத்த இடை; மேனியுமாம்; உவமவாகு பெயர்; பிறவுமன்ன. கோலம் - அழகு. குமுதம் - செவ்வல்லி: வாய். நீலம்: கண். குன்று எடுத்த பாலன் - மலையைக் குடையாகக்கொண்ட கண்ணன்; (அவன்) துயில்கொண்ட பாயல் - கண்ணன் தூங்குதற்குப் படுக்கையாக அமைந்த ஆலிலை: வயிறு. காலைப் பதுமம் - காலையில் மலரும் தாமரை: முகம்; 'காலைக்கமலம்' - ௪௫௪. சாலியன்னாள் தரித்த காலம், மின்னும், குமுதமும், நீலமும், பாயலும், பதுமமும் தமது கவின் உறப்பெற்றன எனக் கூட்டுக.

(வே - ம்.) கவினிறம் பெற்றன; காலமின்னு. இ - வி. ௧௮௩.

### வெள்ளணி அணிந்து விடுத்தல்

*[தலைவி, தான் புதல்வனைப் பெற்றமையைப் பரத்தை வீட்டிலுள்ள தலைவனுக்குத் தெரிவிக்கக் கருதித் தன் தோழிக்கு வெள்ளாடை முதலியன அணிந்து அவளை அனுப்புதல்]*

**463.** துதையுஞ் சுரும்புறை மல்லிகை வேய்ந்துவெண் தூசுபுனைந்
திதையங் கவிவர நித்திலம் பூண்டெதிர்ந் தாருடலம்
புதையம் பனைய விழிமட மாதர்போற் பூண்புதல்வன்
உதையம் புகல இகலிமுன் ஓடுவர் ஊரனுக்கே.

(கு - ரை.) துதையும் சுரும்பு - நெருங்கிய வண்டுகள். வேய்ந்து- சூடி. வெண் தூசு புனைந்து - வெள்ளாடை யுடுத்து. இதையம்

களிவர - உள்ளத்தே களிப்புண்டாக. நித்திலம் - முத்தணி. எதிர்ந் தார் உடலம் புதை - எதிர்த்தவர் மார்பில் அழுந்துகின்ற, அம்பு. மடமாதர் : இளந்தோழியர். பூண் - அணி. புதல்வன் உதையம் புகல - குழந்தை பிறந்தமையைக் கூற. இகலி - 'நான்முன், நீ முன்' என்று மாறுபட்டு; மகிழ்ச்சிக்குரிய செய்தி யாதலின் ஒவ்வொரு வரும் தாமே முன் சென்று அறிவிக்கவேண்டுமென்று ஓடினர். இதை யம், உதையம் : இடைப்போலி. ஊரன் - மருதநிலத்தலைவன். மாதர் வேய்ந்து புனைந்து பூண்டு ஊரனுக்குப் புகல இகலி ஓடுவர் எனக் கூட்டுக.

(வே - ம்.) அகல முன்னோடுவர். இ - வி. கஅ௬. கசு

வரவு கண்டு வாயில் மொழிதல்

*[தலைவன் வரவினைக் கண்டு தூதுவர் அதனைத் தலைவிக்குக் கூறுதல்]*

**464.** புறந்தாழ் சுரிகுழற் பூவையன் னீர்பொறை பூண்டவற்கின்
றறந்தா னுறுதுணை யாயதன் றேதம் அகமகிழ்ந்து
மறந்தாழ் களிற்றன்பர் வந்தன ரால்நம் மரபினுக்குச்
சிறந்தா னொருவன் பிறந்தா னிவனென்று செல்லுமுன்னே.

(கு - ரை.) புறம் தாழ் - முதுகின்புறத்தே தாழ்ந்த. சுரிகுழல்-நுனி சுருண்ட கூந்தலையுடைய. பூவை அன்னீர் - நாகணவாய்ப் புள்ளையொத்த தலைவியே. பொறை பூண்டவற்கு - கருவுற்றுத் தோன்றிய புதல்வற்கு; 'சிறுவற்றரித்த காலம்' - ௪௬௨. அறம் புதல்வன் பிறந்தால் உடனே வரவேண்டுமென்னும் உலகியல் அறம்; ஒருவர்க்கு வரும் நலம் அறமாகிய நல்வினைபற்றியே வருவதாதலால் அது குறித்து 'அறந்தான் உறுதுணை' என்றனர் தூதுவர் என்க. 'உலகியல் நோக்கி' - ௪௫௯. மறம் தாழ் களிற்று அன்பர் - வீரந் தாங்கிய ஆண் யானையையொத்த தலைவர்; சிறந்தான் இவன் ஒருவன்-சிறந்த புதல்வனாகிய இவனொருவன். செல்லுமுன் - சொல்லுதற்குச் செல்லுமுன் : சென்றவுடன் என்பது கருத்து : ௪௫௯. அன்னீர்! ஒருவன் பிறந்தானென்று செல்லுமுன் அன்பர் அகமகிழ்ந்து வந்தனர்; (ஆதலின்) பூண்டவற்கு அறம் துணையாயது எனக் கூட்டுக. கஎ

## வாயில் மறை

*[வாயில்கள் தலைவனைத் தடுத்தல்; வாயில் - தலைவன் தலைவியர்க்குப் பிணக்கு நேர்ந்துழி அதனைப் போக்கி அவர்களை ஒற்றுமைப் படுத்துவோர்; அவர், தோழி, பாணன், பாடினி முதலிய பலராவர்]*

**465.** கையார் வரிவளைக் காரிகை நீயுங் கடும்பரியும்
மையார் விழிவிலை மங்கைய ரில்ல மறந்துவந்த
தெய்யா திருந்திலள் ஐயா அருமணி யின்றெடுத்த
மெய்யாற வும்விர வுந்துனி யாறவும் வேண்டுமின்றே.

(து - ரை.) வரிவளை ஆர் கை காரிகை - கோடுகள் பொருந்திய வளையலை யணிந்த கையையுடைய தலைவி. நீ என்றது, வாயில்கள் தலைவனை நோக்கிக் கூறுவது. கடும்பரி - விரைவாகச் செல்லும் தேர்க் குதிரைகள். விலைமங்கையர் - பொருட் பெண்டிர். எய்யாது - அறியாது. ஐயா - தலைவனே. மணி - மணிபோன்ற மைந்தன்; 'மைந்தன் மனைக்கு மணி' - நீதிவெண்பா. மெய்யாறல் - நலிவு நீங்கி உடலுரம் பெறல். விரவும் துனி ஆறல் - மனத்தில் பொருந்திய மிக்க புலவி நீங்கல்; இது தலைவன் பரத்தமையால் உண்டானது. ஐயா! நீயும் பரியும், மங்கையர் இல்லம் மறந்து வந்ததைக் காரிகை எய்யாதிருந்திலள்; (ஆயினும்) அவள் இன்று மெய்யாறவும் துனியாறவும் வேண்டும் ஆதலின் நீ வாரற்க என்பது கருத்து.

(வே - ம்.) விழிவலை; எய்யாதிருந்திலனையா; இருந்திலம் மையா; மெய்யாரவும் மவர்தந்துணிவாரவும்; மெய்யாறவும் மலர்தம்.
இ - வி. கஅஉ. கஅ

## யாணரைக் காண விரும்பல்

*[தலைவியின் புத்தழகைக் காணத் தலைவன் விரும்புதல்; யாணர் - புதிய அழகு]*

**466.** செய்யுந் தவமுடை யேன்சென்று காண்குவ தென்றுசெவ்வி
மையுண் குவளை மடங்கெழு நோக்கும் மனமகிழ்வும்
கையுங் குழவியுந் தீம்பா லெறிக்குங் கனதனமும்
நெய்யும் பசந்து நிலவெழு மேனியி னீர்மையுமே.

(கு - ரை.) புதல்வன் பிறந்தமைபற்றித் தலைவன் தன்னைத் 'தவமுடையேன்' என்று சொல்லிக்கொண்டான். செவ்வி - அழகிய. குவளை நோக்கு - செங்குவளை மலர்போன்ற கண்ணையும்; பார்வையுமாம். கனம் - பெரிய. நெய்யும் பசந்து - நெய்யாடியதால் பசுமைநிறங் கொண்டு. நிலவு எழும்-குருதிக் குறைவால் வெளுத்துத் தோன்றும். நீர்மை - தன்மை. நோக்கும், மகிழ்வும், கையும், குழவியும், தனமும், நீர்மையும் தவமுடையேன் காண்குவது என்று? எனக் கூட்டுக.

(வே - ம்.) காண்குவதே செலவி; மடங்கொளும்; மேனியும் இ. வி. க அ௬. ௧௧

தோழி வாயில் வேண்டல்

*[தலைவனை ஏற்றுக்கொள்ளுமாறு தோழி தலைவியை வேண்டல்]*

**467.** மருவார் குழலி வருந்திய மெய்யு மகவுங்கையும்
பருவார் முனிந்த பெருந்தன பாரமும் பச்சுடம்பும்
ஒருவாத வுள்ளத் துவகையுங் காணநம் ஊரர்நின்பொன்
திருவாசல் வந்துநின் றாரறி யேனின் திருவுள்ளமே.

(கு - ரை.) மரு ஆர் குழலி-மணம்பொருந்திய கூந்தலையுடைய தலைவியே; குழலி: அண்மைவிளி. மகவும் கையும் - மகவை ஏந்திய கையையும். பருவார் முனிந்த-பெரிய கச்சினையும் 'நீ என்னை மறைத்தற்கு இயலாது' என்று சினக்கின்ற. பச்சுடம்பு - ஈன்றணிமை பொருந்திய உடம்பு. ஒருவாத - நீங்காத; உள்ளத்து ஒருவாத உவகை, புதல்வனைப் பெற்றமையால் உண்டாயிற்றென்க. 'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் .....தாய்' - குறள்: ௬௯. ஊரர் - மருத நிலத்தலைவர். உள்ளம் - உள்ளக்கருத்தை. குழலி! நின்மெய்யும் கையும், தனபாரமும், உடம்பும், உவகையும் காண ஊரர் நின்வாசல் வந்து நின்றார்; அன்பாற் பிணிப்புண்ட காதலர் பிரிந்து பின்பு ஒன்றுகூடுங் காலத்து அவ்வவர் நிலையைக் கண்டு மகிழ விழைவது இயல்பாதலால் 'காண நம் ஊரர்...........நின்றார்' என்று தோழி கூறினள். நின் உள்ளம் அறியேன் எனக் கூட்டுக. நம் ஊரராதலேயன்றி, நின் வாசலின்கண் வந்து நிற்கவும் செய்கின்றாராதலின், அவரை எதிர்கொள்ளலே தக்கதென்பது குறிப்பு.

(வே - ம்.) பயோதரபாரமும். இ - வி. க அ௬. ௨0

வாயில்நேர்வித்தல்

[தோழி தலைவியை உடன்படச்செய்தல்]
தலைவி கூற்று.

468. கரப்பற்ற அன்புட னின்புற மார்வங் கலந்தகொங்கை
பொரப்பெற்ற எங்கையர் தங்களை நீங்கிப் புகன்றதெய்வம்
தரப்பெற்ற செல்வன் திருமுகங் காணத் தலைவனிங்கு
வரப்பெற் றரிதினன் றேமற்று நீயென்னை வாழ்விப்பதே.

(கு - ரை.) கரப்பு அற்ற - வஞ்சனையில்லாத. மார்வம்-மார்பில். கலந்த கொங்கை - நெருங்கிய முலைகள். பொரப்பெற்ற-பொருந்தப் பெற்ற. எங்கையர் - எனது தங்கையராகிய பரத்தையர்; தலைவன் தொடர்புகொண்டிருத்தலின் 'எங்கையர்' என்றாள். புகன்ற-விரும்பத் தக்க. செல்வன் - புதல்வன். அரிதின் - அருமையாக. வாழ்விப்பது- நன்மை செய்வது. தலைவன், செல்வன் முகங்காண, எங்கையரை நீங்கி இங்கு அரிதின் வரப்பெற்றன்றோ நீ என்னை வாழ்விப்பது? எனக் கூட்டுக. இங்ஙனம் அரிதாக வருந் தலைவனை எதிர்கொள்வல் என்பது குறிப்பு.

(வே - ம்.) இன்புற மார்வம். உக

புதல்வனைக் காண்டல்

[தலைவன் புதல்வனைக் காணுதல்]

469. ஆவுங் கனகமும் அந்தணர்க் கீந்தங் கமரர்க்கெல்லாம்
பூவும் புகையும் பொழிந்தவி யேற்றிப் புதியபண்ணும்
பாவும் புனைந்து பரிசிலர் பாடப் பருவநன்றி
யாவும் பெறஎடுத் தான்குடித் தோன்றலை யேந்தலுமே.

(கு - ரை.) ஆ - பசு. கனகம் - பொன். அமரர் - கடவுளர். அவி - கடவுளுண்டி. ஏற்றி - படைத்து. கடவுளர்க்குச் சிறப்புச் செய்தென்றவாறு. பண் - இசைத்தமிழ்ப்பாட்டு. பா - இயற்றமிழ்ச் செய்யுள். புனைந்து - இயற்றி. பரிசிலர் - பரிசுபெற வருவோர். பருவ நன்றி - காலத்திற் செய்யும் உதவி; 'காலத்தினாற் செய்த நன்றி' - குறள். க0உ. பெற - பரிசிலர் பெற; இனி, 'பருவநன்றி யாவும்பெற' என்பதற்கு 'நன்முழுத்தங்கள் பலவும் பொருந்திய நன் னேரத்தில்' என்றுரைத்தலுமாம். தோன்றலை - புதல்வனை. ஏந்தல் -

தலைவன். ஈந்து பொழிந்து ஏற்றி, பரிசிலர் புனைந்து பாட்டியாவும் பெற எந்தலும் தோன்றலை எடுத்தான் எனக் கூட்டுக.

(வே - ம்.) அவிபோற்றி. இ - வி. ௧௮௩. ௨௨

கலந்துழி மகிழ்தல்

*[தலைவன் தலைவியைக் கலந்தவிடத்து மகிழ்தல்]*

**470.** மரகத நன்னிறம் பொன்னிற மான வடிவுமுற்றும்
நிரைதருஞ் சாபமும் நீலோற் பலமும் நிவரரும்பும்
விரைகமழ் தொண்டையு மெல்லியல் கார வெதுப்புங்கண்டு
கரையழி யன்புறு மின்புறு மூரன் களிசிறந்தே.

(கு - ரை.) மரகத நிறம் - தலைவியின் கருமை நிறம்; பசலையால் பொன்னிறமாயிற்றென்க. நிரைதரும் - வரிசையா யமைந்த. சாபம்- வில்லையொத்த புருவம். நீலோற்பலம் - கருங்குவளைமலர்: கண். நிவர் அரும்பு - உயர்ந்த முல்லையரும்பொத்த பல்; தாமரை, கோங்கு அரும்புகளையொத்த கொங்கை யெனக்கொள்க. விரை - மணம். தொண்டை - கொவ்வைக்கனி: வாயிதழ். மெல்லியல் - தலைவி. வெதுப்பு - வெம்மை. கரையழி - எல்லையற்ற. ஊரன் - மருதநிலத் தலைவன். களிசிறந்து - களிப்புமிக்கு. ஊரன், மெல்லியலின் வடிவு முழுவதையும், சாபமும், நீலோற்பலமும், அரும்பும், தொண் டையும் வெதுப்பு (மாகிய இவற்றையு)ங்கண்டு சிறந்து அன்புறும்; இன்புறும் எனக் கூட்டுக. ௨௩

விழிதுயில் கண்டு உவந்துழி உரைத்தல்

*[தலைவன் தலைவியர் மகவொடு துயிலுதலைத் தோழி கண்டு மகிழ்ந்து கூறுதல்]*

**471.** மானுங் கலையு மறிந்தகம் விம்ம மகவும்வல்லி
தானுந் தலைவனுந் தங்குமிப் பாயற்குத் தாழ்வுவண்டும்
தேனுஞ் சுரும்புஞ் செறிகுழ லீந்தச் சேயைப்பெற்ற
கோனுங் கவரியுந் தாணப் பெருத குறையொன்றுமே.

(கு - ரை.) மான் - பெண்மான். கலை - ஆண்மான். அகம் மறிந்து விம்ம - உள்ளம் மடங்கி வருந்த; வருந்தல்: நாம் இவ்வாறு இருத்தற்கில்லையேயென்று கருதியென்க. மகவு - குழந்தை. வல்லி- தலைவி. பாயல் - படுக்கை. தேன்-சுரும்பு: வண்டின் வகை. செறிதல்-

நெருங்குதல். குழலீர் - பாங்கி ஆயமகளிரை விளித்தது. சேய்: புதல்வன். கோன் - தலைவன். கவரி - ஒருவகைமான். குழலீர்! விம்மத் தங்கும் பாயற்குத் தாழ்வு, கோனும் கவரியும் காணப்பெறாத குறையொன்றுமே எனக் கூட்டுக. தலைவன் ஈருருக்கொண்டு ஒன்று துயிலவும் மற்றொன்று காணவும் அமையின் பெரிதும் மகிழ்வான் என்பது கருத்து. இச்செய்யுளின் ஈற்றடி பிழைபட்டிருப்பதாகத் தெரிகிறது. உச

## புலத்தல்

*[தலைவன் தூதுவிட்ட பாங்கியர் முதலாயினோரைத் தலைவி புலத்தல்]*

**472.** ஆம்பால் விரவின தன்பா லறிந்தில ரன்னமன்னீர்
போம்பா லனையசொற் பூவையர் சேரியிற் புல்லியிங்ஙன்
யாம்பா லனைக்கொண் டினிவைகல் போக்குதும் எம்முலையின்
தீம்பால் படிலவர் செய்குறி மார்பிற் சிதையுமன்றே.

(கு - ரை.) ஆம்பால் விரவினது - (தலைவி புதல்வனைப் பெற்றமையால்) உண்டான பால் அவள் உடம்பெல்லாம் கலந்திருப்பதை. அன்னீர்: தலைவி தூதாக வந்தோரை விளித்தது. போம் - நீங்கள் செல்வீராக. பூவையர்: பரத்தையர். வைகல் - பொழுது. படில் - தலைவன் என்னைத் தழுவுகையில் அவன் மார்பில் படுமானால். அவர் செய் குறி - பரத்தையர் தலைவன் மார்பில் செய்த குறி. சிதையும் - கெடும். அன்னமன்னீர்! எம் முலைப்பால் படில் குறி சிதையுமன்றே? (தலைவர்) அறிந்திலர்; சேரிக்குப் போம்; யாம் பாலனைப் புல்லி வைகல் போக்குதும்; எனக் கூட்டுக. அறிந்திருப்பின் நும்மை அனுப்பியிரார் என்பது குறிப்பு.

(வே - ம்.) ஆம்பால் வரையினர்; அறிந்தயிலன்னம். இ - வி. கஅ௲- உரு

## பள்ளியில் அழுங்கல்

*[படுக்கையிற் பொருந்திய தலைவி கலவிக்கு இணங்காளாகத் தலைவன் வருந்தல்; பள்ளி - படுக்கை]*

**473.** துணையேது மின்றி நடுங்குமின் போலுந் துடிமருங்குற்
பிணையே மடநடைப் பெண்ணமு தேயின்பப் பேருததிப்
புணையே யனையபொற் றேனுந் தனமும்பொங்கமளி
யணையே பொருந்த வரும்புற மோசமக் காவதின்றே.

(து - ரை.) துடி மருங்குல் பிணையே - உடுக்கைபோன்ற இடையினையுடைய பெண்மானையொத்த தலைவியே; துடிமருங்குல் என்பதற்கு அசையும் இடையெனினுமாம். இன்ப உததிப்புணை அனைய - இன்பக் கடலைக் கடத்தற் குதவும் தெப்பத்தையொத்த. அமளி அணையே பொருந்த - படுக்கையின் பஞ்சணைப் பக்கத்தே பொருந்த. புறமோ - முதுகோ. 'வறும்புறமோ எமக்காவது' என்றது, தலைவி கலவிக் கிணங்காது வெறுவிய முதுகினைக் காட்டிக் குப்புறப் படுத்துக் கொண்டமையாலென்க. பிணையே! அமுதே! தோளும், தனமும் அணைபொருந்த, எமக்கு இன்று ஆவது புறமோ? எனக் கூட்டுக.

(வே - ம்.) அனைய பொருளும்; பொருந்த வருமற்றமோ.
இ - வி. கஅங. உசு

### பதங்கம் பழிச்சல்

*[தலைவன் தன் கலவிக்கு உதவி புரிந்த பறவையைப் புகழ்தல்]*

474. அறவோர் மொழிந்த வரிந்தமன் காத்த வகன்புறவுக்
குறவோ பதங்கம் வியங்கமன் றேனுத விக்குதவி
நறவோடு தண்புன னாடனென் றேயென்க ணல்கியதால்
மறவோ மிதற்குள்ள வாசியெந் நாளு மடமயிலே.

(து - ரை.) அறவோர் மொழிந்த - நல்லோரால் புகழப்பட்ட. அரிந்தமன் - திருமால்; என்றது சிபியை; மன்னர் அனைவரும் மாலின் கூறாதலின் சிபியை அரிந்தமன் என்றார். 'திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனே' - (திருவாய்மொழி ச - ப, ச - தி, மண்ணை). புறவு: சிபியிடம் அடைக்கலம் புகுந்த புறா. பதங்கம் - பறவை. பதங்கம் உறவோ என்க. வியங்கம் - பறவை, அங்கமற்றது என இருபொருள்பட்டு இரட்டுற மொழிதலாயிற்று; அங்கமற்றது, உதவிக்கு உதவி எவ்வாறு செய்தது என்பது குறிப்பு. நறவு ஓடு - தேன் பாய்கின்ற. புனல் நாடன் - மருதநிலத் தலைவன். சோழன்; இரட்டுற மொழிதல். சோழகுலத்தோனாகிய சிபியிடம் உதவிபெற்ற புறவுக்கு உறவாகிய பதங்கம் அக்குலத்தவனாகிய எனக்குப் பதிலுதவி நல்கியது என்றான். உதவியாவது: ஊடி நின்ற தலைவி அஞ்சித் தானே வந்து தலைவனைத் தழுவிக்கொள்ளுமாறு கத்தியமை. வாசி - தகுதி. மயில் : தலைவி. மயிலே! பதங்கம் புறவுக்கு உறவோ? (ஆயினும்) வியங்கமன்றோ? (அங்ஙனமிருந்தும்) புனல் நாடனென்று

என்கண் உதவிக்கு உதவி நல்கியது; ஆதலால் இப்பதங்கத்திற்குள்ள வாசி எந்நாளும் மறவோம் எனக் கூட்டுக. உதயணனுடன் புலந்து நின்ற பதுமாபதி, பின் கூகையின் குரலைக் கேட்டு அஞ்சி அவனைத் தழுவிக்கொண்டதாகக் கூறும் பெருங்கதைச் செய்தியை இச்செய்யுள் நினைப்பூட்டுதல் காண்க.

(வே - ம்.) அனந்தவன் காத்த; விகங்கம். இ - வி. கஅ௬. உஎ

## புதுப்புனல் வரவு உணர்த்தல்

*[ஆற்றில் புதுவெள்ளம் வந்தமையை ஏவலாளர் தலைவனுக்கு உணர்த்தல்]*

**475.** ஏராடு சிந்துர இந்திர சாப மிறைஞ்சுநுதல்
வேர்வாட நீல விழிசிவப் பாட விளங்கிழையார்
தாராடு பைங்குழற் பின்னக மாடத் தழூஉம்சிவிறிப்
போராட வந்தது தண்புன லாடப் புரவலற்கே.

(த - ரை.) ஏராடு சிந்தூரம் - அழகு பொருந்திய குங்குமம் அணிந்த, நுதல். இந்திரசாபம் இறைஞ்சும் - வானவில்லும் ஒப்பாகாது வணங்கும். நுதல் - நெற்றியில். ஆட - பொருந்த. விளங்கிழையார்: தலைவனுக்குரிய மகளிர். தார் ஆடு - மாலையையணிந்த. குழல் பின்னகம் - கூந்தலின் பின்னல். தழூஉம் - கைக்கொண்ட. சிவிறி - நீர் வீசுங் துருத்தி. ஆட - நீர்விளையாட்டைச் செய்ய. புரவலன் - தலைவன். விளங்கிழையாருடைய நுதலில் வேர்வாடவும், விழி சிவப்பாடவும், பின்னகம் ஆடவும், போராடவும், தண்புனல் புரவலர்க்கு ஆட வந்தது எனக் கூட்டுக.

(வே - ம்.) தழுசிவிறி; புனலாடல். இ - சூஉ. உஅ

## புனையிழை மகளிர் புனலாட்டு விரும்பல்

*[பரத்தையர் தலைவனோடு நீராடுதலை விரும்பி வருதல்]*

**476.** குருகோடு கம்புட் குலமிரிந் தார்ப்பக் கொடுந்திரைசூழ்
இருகோடு மள்ள ரெறிபறை யார்ப்ப இடுமணற்குன்று
அருகோடு தண்புனல் வண்புன லூரனோ டாடுதற்கு
வருகோடி யன்புடை யாரொரு கோடி மடந்தையரே.

(த - ரை.) குருகு - நாரை. கம்புள் குலம் - சம்பங்கோழி என்னும் ஒருவகை நீர்ப்பறவையின் கூட்டம். இரிந்து ஆர்ப்ப -

அஞ்சியோடி யொலிக்க. கொடு - வளைந்த. இருகோடும் - இரண்டு கரைகளிலும். மள்ளர் - உழவர். எறிபறை ஆர்ப்ப - அடிக்கின்ற பறையொலிக்க. புதுவெள்ளம் வந்தால் பறையறைந்து தெரிவித்தல் மருதநில வழக்கு. தண்புனல் - குளிர்ந்த நீரில். ஊரன் - மருதநிலத்தலைவன். கோடி: முன்னது, 'மிக்க' என்றும், 'கடை' என்றும் இரட்டுற மொழிதலாக இருபொருள்படும்; பொருட் பெண்டிராதலின் தம் கடையன்பையே தலையன்புபோல் காட்டுவர் என்பது கருத்து. பின்னது, கோடி: பல என்னும் பொருட்டு. ஆர்ப்ப ஆர்ப்ப ஓடு புனலில் ஆடுதற்கு வரு அன்புடையார் கோடி மடந்தையர் எனக் கூட்டுக.

(வே - ம்.) குலமிருந்து : எறிமணி. இ - வி. கஉ. உக

பரத்தை தற்புகழ்தல்

**[தலைவி தலைவனைச் சிறைசெய்யினும் அவன் தன்னிடம் வாராதிரானென்று பரத்தை தன்னைத்தானே புகழ்ந்துகொள்ளுதல்]**

**477.** அரியார் மதர்விழி யாயமுந் தானும் அகன்துறைவாய்
விரியார் கருங்கழல் மன்புறங் காப்பினும் என்புறமே
புரியா தொழுகுவ னேலழி யாத புகழ்படையாக்
கரியார் திருவின் தரியா துடைகளன் கைச்சங்கமே.

(து - ரை.) அரி ஆர் மதர் விழி ஆயமும் - செவ்வரி பொருந்திய செருக்குற்ற விழிகளையுடைய தோழிக் கூட்டமும். தானும்: தலைவியும். துறைவாய் - நீர்த்துறையிடத்து. விரியார் கருங்கழல் மன் - பெரிய வலிய வீரக்கழலை யணிந்த தலைவனை; கருமை - வலிமை. புறங்காப்பினும் - பாதுகாவல் செய்யினும். என்புறம் - என்னிடத்து. புரியாது ஒழுகுவனேல் - விரும்பி வாராதிருப்பானாயின். புகழ்படையாக் கரியார் திருவின் - பழிபடைத்த தீயோர் செல்வம் நிலையாமைபோல, 'புகழ்படையா' என்பது அருத்தாபத்தியால் அதன் எதிர்மறையாகிய பழிபடைத்தலை உணர்த்திற்று. 'கலர் தேடிய செல்வம்' - கஉகூ. 'கரியார்' என்பதற்கு 'மன்றில் பொய்க்கரி கூறுவார்' என்றுரைப்பினும் பொருந்தும். தரியாது - நிலைபெறாது. சங்கம் - சங்கு வளையல். ஆயமும் தானும் மன்னைக் காப்பினும், துறைவாய் என்புறமே புரியாது ஒழுகுவனேல், கரியார் திருவின் கைச்சங்கம் உடைகவெனக் கூட்டுக.

(வே. - ம்.) விரியார் நறுந்தொடை. இ - வி. கOஉ. நO

### புனலாடியதில்லை என்ற தலைமகற்கு உரைத்தல்

*[பரத்தையரோடு புனலாடவில்லையென்று பொய் கூறிய தலைமகனுக்குத் தலைமகள் கூறல்]*

**478.** ஏந்திய வள்ளத் தினிய நறுமகிழ் வெய்தவைத்து
மாந்திய மாதருன் மால்வரைத் தோள்மலி நீர்ப்புணையா
நீந்திய வாறெம்மை நீமறைத் தாலென் நெடுவிசும்பிற்
காந்திய ஞாயிற் றொளிமறைத் தாரெவர் கைவிரித்தே.

(து - ரை.) வள்ளம் - கிண்ணம். நறா - கள். மாந்திய மாதர் - பருகிய பரத்தையர். மால்வரை தோள் - பெரியமலைபோன்ற தோளை. மலி - மிக்க. புணையா - தெப்பமாகக்கொண்டு. 'மறைத்தால் என்?' என்றது, நீ மறைப்பினும் மறைபடாது என்றபடி. விசும்பில் - வானத்தில். காந்திய - ஒளி வீசுகின்ற. ஞாயிறு - கதிரவன். நறா மாந்திய மாதர் உன்தோளைப் புணையா நீந்தியவாற்றை நீ எமக்கு மறைத்தாலென் ? ஞாயிற்றொளியைக் கைவிரித்து மறைத்தார் எவர்? எனக் கூட்டுக. ஒருவருமில்லை என்றபடி. வேற்றுப்பொருள்வைப் பணி: ௬௫௯. உரையைப் பார்க்க. 'விண்ணியங்கும், ஞாயிற்றைக் கைம்மறைப்பார் இல்' - பழமொழி. ௩௪. ௩௧

### அங்கவர் யாரையும் அறியேன் என்றல்

*[நின்னால் கூறப்படுகின்ற பரத்தையரொருவரையும் 'யான் அறிந்திலேன்' என்று தலைவன் கூறுதல்]*

**479.** மன்னும் புலவியை மாற்றியுந் தேற்றியும் வல்லவண்ணம்
இன்னுந் தெளிந்திலை யென்னையென் னேயென்செய் கேனிதற்கு
முன்னம் படிந்து முழுகுநன் னீர்க்கங்கை முன்றுறையும்
அன்னம் படியுங்கொல் லோஉவ ராழியி லாரணங்கே.

(து - ரை.) மன்னும் புலவியை - பொருந்திய பிணக்கை. தேற்றியும் - தெளியப்பண்ணியும். வல்லவண்ணம் - கூடுமான வரையில். என்னையென்னே : இரக்கக் குறிப்பு. முன்னம் - முன்னெல்லாம். படிந்து - தோய்ந்து. உவர் ஆழி - உப்புக்கடல். அணங்கே : தலைவியே! (என்னால்) வல்லவண்ணம் புலவியை மாற்றியும் தேற்றியும் (நீ) தெளிந்திலை; இதற்கு என் செய்கேன்! கங்கையில் முன்னம் படிந்து முழுகி, அதன் முன்றுறையும் அன்னம்

உவராழியில் படியுமோ? எனக் கூட்டுக. கொல்: அசை. அன்னம் போன்ற யான் கங்கையையொத்த நின்னையன்றி உவராழியன்ன பரத்தையரை மருவேன் என்னும் பொருள் தோன்றினமையின் இச்செய்யுள் பிறிது மொழிதலணி.

> "ஊற்றுநீர்க், கூவல்வாய் வெண்மணல் குறுகச் செல்லுமே
> மேவிப்பூங் கங்கையுள் விழைந்த அன்னமே."
>
> (சீவகசிந்தாமணி).

(வே - ம்.) தெளியிலே; முன்றுறை நீத்தன்னம். இ - வி. கஅ௬. ௬உ

காமக்கிழத்தியைக் கண்டமை கூறல்

**[தலைவனுடைய காமக்கிழத்தியைத் தலைவி தான் கண்டதாக அவனுக்குக் கூறுதல்; காமக்கிழத்தியாவாள்: குலப் பரத்தையின் மகளாய்க் காமங் காரணமாகத் தலைவனால் மணந்துகொள்ளப்பட்டவள். - நம்பி. சூ. ககஉ]**

**480.** தேரொன்று வீதித் தெரிவைநின் பாலனைக் கண்டுகையால்
வாரொன் றணைத்து மணிமுத் தருந்தி மகிழ்ந்திடநான்
ஆரென்று கூற அவளறி யாமனின் அன்னையென்றாள்
நீரின்று சொன்னதெல் லாமென்ன மாயம் நெடுந்தகையே.

(கு - ரை.) தெரிவை: பரத்தை. வார் ஒன்ற - முலைக்கச்சோடு பொருந்த; பெயரெச்ச அகரந்தொக்கது. முத்து அருந்தி - முத்தங் கொண்டு. நான்: தலைவி. அவள்: காமக்கிழத்தி. அறியாமல் - மகிழ்ச்சியால், தன்னைக் கேட்டவர் யாரென்று அறியாமல், பாலன் கேட்டதாக எண்ணி அவனை நோக்கி, நின் அன்னை என்றாள். நீர்: தலைவன். சொன்னது. 'அங்கவர் யாரையும் அறியேன்' (சஎக) என்றது. மாயம் - பொய். நெடுந்தகையே: தலைவனே! வீதியில் தெரிவை பாலனைக் கண்டு அணைத்து அருந்தி மகிழ்ந்திட, நான் 'யார்?' என்று கூற, அவள் 'அன்னை' என்றாள்; (ஆதலின்) நீர் சொன்னதெல்லாம் மாயம் எனக் கூட்டுக. 'யாவரும் விழையும் பொலந்தொடிப் புதல்வனைத் - தேர் வழங்கு தெருவிற் றமியோற் கண்டே - கூரெயிற் றரிவை குறுகினள் யாவரும் - காணுநர் இன்மையிற் செத்தனள் பேணிப் - பொலங்கலஞ் சுமந்த பூண்டாங் கிளமுலை - வருக மாளஎன் னுயிரெனப் பெரிதுவந்து - கொண்டனள்.' அகம். கசு. ௬௬

தலைவியைப் பரத்தை பழித்தல்

481. தேமே குவளையுஞ் செந்நெலுங் கன்னலுஞ் சேரநன்னர்
ஆமேய் கழனி யகன்புன லூரன் அகலமெல்லாம்
யாமே விரும்பின மென்றெம்மை யேசுவர் போலத்தம்மைத்
தாமே பழிப்பர் தலைவியர் தாமுந் தனம்படைத்தே.

(கு - ரை.) தேமே - தேன் பொருந்திய. நெல் - நெற்பயிர். கன்னல் - கரும்பு. நன்னர் ஆ மேய் - நல்ல இயல்பினையுடைய பசு மேய்கின்ற. ஊரன்: மருதநிலத் தலைவன். ஆ தனக்குரிய குவளை முதலியவற்றைச் சேர மேயும் ஊரனாதலின், அவனும் தனக்குரிய மகளிரைத் துய்த்தல் முறையே; இதற்குத் தலைவி வருந்துதல் அறி வின்மையாகும் என்பது குறிப்பு. அகலம் - மார்பு. விரும்பினம் - விரும்பித் தழுவினேம். தனம் - கொங்கை, பொருள்: இரட்டுற மொழிதல். எம்மைப்போலத் தாமும் தனம் படைத்திருந்தும் அவற்றால் தலைவனைத் தம்மிடமே இருத்திக்கொள்ள இயலாத தம் திறமையின்மையை வெளிப்படுத்தலின் 'தம்மைத் தாமே பழிப்பர்' என்றாள். செல்வச் செருக்கால் ஏசுவர் என்பது மற்றொரு பொருள். தலைவியர் தனம் படைத்தும் யாமே அகலத்தை விரும்பினமென்று எம்மை ஏசுவர்போலத் தம்மைப் பழித்துக்கொள்வர் எனக் கூட்டுக.

(வே. - ம்.) சேர்ந்த நன்னீராமே; இ-வி. ௪௦௨. ௩௪.

காமக்கிழத்தி பரத்தையரைப் பழித்தல்

*[தன்னையும் பரத்தையையும் தலைவன் ஒன்றாகக் கருதினனென்று காமக்கிழத்தி (௪௮௦) அறிந்து பரத்தை தனக்கு எவ்வகையிலும் ஈடாகாளென்று பழித்துரைத்தல்]*

482. முருகார் முளரியு முள்ளியு முண்டக மூரியரம்
பொருகா ரிரும்புங் கனகமும் பொன்பொங்கு தாரகையும்
குருகார் தடங்களிற் கெண்டையு மீனெனுங் குரிசிலுக்கு
வருகாதல் நல்கிய எங்கையும் யானும் மடந்தையரே.

(கு - ரை.) முருகு ஆர் முளரி - தேன் பொருந்திய தாமரை மலர். முள்ளி - முள்ளிப்பூ. முண்டகம் - முளரி, முள்ளிகளின் பொதுப்பெயர். மூரி அரம் பொரு - வலிய அரத்தால் அராவப்படும்.

கார் - கரிய. கனகம் - பொன். பொன் - இரும்பு கனகங்களின் பொதுப்பெயர்; இரும்பைக் கரும்பொன் என்றும், கனகத்தைச் செம்பொன் என்றும் அடைமொழி சேர்த்தும் வழங்குவர். பொங்கு தாரகை - ஒளி மிக்க விண்மீன். குருகு ஆர் தடம் - நாரைகள் பொருந்திய குளம். மீன் - தாரகைக்கும் கெண்டைக்கும் பொதுப் பெயர். குரிசில் - தலைவன். எங்கை: பரத்தை (௪௬அ). யான்: காமக்கிழத்தி. முளரிக்கும் முள்ளிக்கும் எத்துணையோ வேற்றுமை யிருப்பினும், எம் குரிசிலுக்கு அவ்விரண்டும் முண்டகமே; அவ்வாறே இரும்பும் கனகமும் பொன்னே; தாரகையும் கெண்டையும் மீனே; (இவ்வாறு உயர்ந்த பொருளையும் தாழ்ந்த பொருளையும் ஒன்றாகக் கருதும் அவனுக்கு) எங்கையும் யானும் ஒரு தன்மையரான மடந்தையரே எனக் கூட்டுக. முளரி முதலியவை ஒப்பாகாமை போல எங்கையும் எனக்கு ஒப்பாகாள் என்பது கருத்து.

(வே - ம்). குருகார் குறுங்கழி; கெண்டையும் நேர்; காதல் மிக்கு வரைந்தவர் யாரும் வனவியரே; மனைவியரே. இ - வி. ௬௦.

நற்பரத்தையை நயப்புப் பரத்தை பழித்தல்

[நற்பரத்தை-சேரிப்பரத்தை; என்றது பொதுமகள். நயப்புப்பரத்தை-காதற்பரத்தை; என்றது பொருள் காரணமாக அன்றித் தன் காதல் காரணமாக ஒருவனுக்கே உரிமை பூண்டு நிற்கும் பரத்தை: நம்பி. ௧௧௩. இவள் சேரிப் பரத்தையைப் பழித்துக் கூறல்]

**483.** கோடலஞ் செங்கைநல் லார்கொங்கை யேற்றமென் கொங்கினுடன்
பாடலங் காவும் பருமணற் குன்றும் பயின்றுதமர்
ஆடலும் பாடலுங் கண்டுகொண் டாடுவ தன்றியன்பின்
ஊடலுங் கூடலு முண்டுகொல் லோபொய்கை யூரனுக்கே.

(து - ரை.) கோடல் - செங்காந்தளையொத்த, கை. நல்லார் - பெண்களுடைய. கொங்கை ஏற்றம் என் - கொங்கையின் சிறப்பினாற் பெற்ற பயன் யாது என்றவாறு. கோடலஞ் செங்கை நல்லாருடைய கொங்கையின் ஏற்றத்தால் அவர் பெற்ற பயன் யாவை? ஒருபயனுமில்லை; தலைவன் எம்முடனே ஆடலும் பாடலும் ஊடலுங் கூடலும் நிகழ்த் தித்திரி கின்றானேயறின் அவர்கள்பாற் சென்று சார்தல்

இல்லை என்க. கோங்கினுடன் பாடலங் கா - கோங்க மரங்களும் பாதிரி மரங்களும் நெருங்கிய சோலை. பயின்று - சேரிப்பரத்தையுடன் சென்று விளையாடி. தமர் - சேரிப்பரத்தையைச் சேர்ந்தோர். ஊடல் - இன்பப் பிணக்கு. பொய்கை - குளம். ஊரன் - மருதநிலத் தலைவன். (சேரிப்பரத்தையொடு) பயின்று கொண்டாடுவதன்றி, அவளொடு ஊரனுக்கு ஊடலும் கூடலும் உண்டுகொல் எனக் கூட்டுக. ஊரனொடு இன்பநுகரும் தகுதி எமக்கேயுண்டு; அவட் கில்லையென்று பழித்தபடி.

(வே - ம்.) ஏற்றமு மெங்களுடன்; பயின்று நம்பால். க௦௨. ௫௬

சுடரோடு கூறல்

*[தலைவன் வாராமையால் தலைவி மனங்கலங்கித் தான் வழிபடும் விளக்கை வேண்டல்]*

**484.** பொலன்கலன் சேர்த்திப் புரிநூ லணிந்து புனைவயிரம்
இலங்குதண் டேற்றி யினியநெய் யூட்டி யிருவினையேன்
வலங்கொளுஞ் செஞ்சுட ரேமறந் தாரென்ன வஞ்சினமுட்
கலங்குகின் றேனரு ளாய்கது வாமற் கடைக்கணித்தே.

(து - ரை.) பொலன் கலன் - பொன்னணி. புரிநூல் - விளக்குத்திரி. புனை வயிரம் இலங்கு தண்டு ஏற்றி - அழகும் உறுதியும் பெற்று விளங்கும் விளக்குத் தண்டின்மீது வைத்து. நெய் ஊட்டி-பசுநெய் விட்டு. இருவினையேன்-பெரிய தீவினையையுடையயான். வலங்கொளும் - சூழ் வந்து வணங்கும். சுடரே - விளக்கே. வஞ்சினம் - 'பிரியேன்' என்று தலைவன் கூறிய உறுதிமொழி: கஅ. அருளாய் - தலைவன் வருமாறு அருள் செய்க. கதுவாமல் - தலைவரைச் சென்று பற்றி வெதுப்பாமல். கதுவுதல் - பற்றுதல்; அஃது ஈண்டுப் பற்றி வெதுப்புதலை உணர்த்திற்று. அவர் சூள் மறந்த தவற்றினைக் கருதி அவரை வருத்தாது கடைக்கணித்து அருளாய்! என்று தலைவி வேண்டுகின்றாள். கடைக்கணித்து - கடைக்கண் நோக்கஞ் செய்து. சேர்த்தி அணிந்து ஏற்றி ஊட்டி வலங்கொளும் சுடரே! வஞ்சினம் மறந்தாரென்ன உள்ளம் கலங்குகின்றேன்; கதுவாமல் கடைக்கணித்து அருளாய் எனக் கூட்டுக. ௫௭

### கனவில் கண்டு மயங்கல்

[தலைவி தலைவனைக் கனவில் கண்டமையைத் தோழிக்குக் கூறி வருந்தல்]

485. நெய்யுண் சுரிகுழல் நேரிழை யாய்நென்னல் நீளிரவில்
மையுண் குவளை மலிபுன லூரன் மலர்க்கமலக்
கையுந் தலையுமென் காலுமொன் றுன கனவுதன்னை
மெய்யென் றருவினை யேன்விழித் தேனென் விழியிணையே.

(கு - ரை.) நெய் உண் - எண்ணெய் தடவப்பட்ட. சுரிகுழல் - நுனிசுருண்ட கூந்தலையுடைய. நேரிழையாய்: பாங்கியே. நென்னல்: நேற்று. மையுண் குவளை மலி - கருங்குவளை மலர் மிக்க. ஊரன் தலைவனுடைய. கையும் தலையும் காலும் ஒன்றுதலாவது: தலைவி புலந்ததாகவும், தலைவன் அப்புலவியைப் போக்குதற்கு அவள் காலைப் பற்றிக்கொண்டு தலைவணங்கித் தாழ்ந்ததாகவும் கனவு கண்டமை, நேரிழையாய்! நென்னலிரவில் ஊரன் கையும் தலையும், என் காலும் ஒன்றுன கனவுதன்னை மெய்யென்று வினையேன் விழியிமை விழித்தேன் எனக் கூட்டுக.

(வே - ம்.) காது மொன்றுன ; விழியிணையே. ௩அ

### பாணன் வாயில் மறை

[தலைவன் தூதுவிட்ட பாணனைத் தலைவி முனிந்து வாயில் மறுத்தல்]

486. ஏவார் நயனியர் தன்மைக் கியைந்தன்றி யின்மைசொல்லாக்
கோவாய பாண குறியுமுண் டோகுறித் தார்தமில்லம்
காவாத வூரரெம் தங்கையர் முற்றும் அகற்றிடினும்
மேவா துடற்றினும் போகா வுளரெவ் விடத்தினுமே.

(கு - ரை.) ஏ ஆர் நயனியர் - அம்பையொத்த கண்களையுடைய பரத்தையர். இயைந்தன்றி - ஏற்றவாறு பொய் கூறுதலன்றி இன்மை சொல்லா - தானுகப் பொய் கூறுத. கோ ஆய பாண - தலைமை யமைந்த பாண ; அண்மைவிளி. குறி - தலைவியைப்பற்றிய நினைப்பு. குறித்தார்தம் இல்லம் - மனைவியாகக் குறிக்கப்பட்ட எனது வீட்டை. ஊரர் : தலைவர். தங்கையர் ; பரத்தையர். முற்றும் அகற்றிடினும் - வேண்டாமென்று அறவே விலக்கிடினும்.

மேவாது உட்டிறினும்-அன்புறாது தன்புறத்தினும். எவ்விடத்தினும் போகா உளர் - பரத்தையரை நீங்கி எவ்விடத்திற்கும் போகாது அங்கேயே இருக்கின்றார். பாண! ஊரர், அகற்றிடினும் உடற்றிடினும் போகாவுளர்; (அவர்க்கு) குறியுமுண்டோ? எனக் கூட்டுக. அங்ஙனமாய தலைவர்க்கு இங்கிடமில்லையென்று வாயில் மறுத்தவாறு.

பாணன் கூற்று

[‘நின் முனிவுக்கு யான் காரணனல்லேன் ஆதலின், என்னை முனிவது வீண்’ என்று பாணன் தலைவியை நோக்கிக் கூறுதல்]

487. ஆறு முனிவுக் கடியேன் பொருளல்ல வாயினுமிங்
கேருத விண்ணப்ப மிங்கிது கேட்டரு ளெற்றிவுளி
மாறு தழுங்கப் புடைத்தா ரிருக்கவம் மத்திகையை
வேருகி நின்று வெறுப்பதென் பாவம் விளங்கிழையே.

(கு - ரை.) ஆறு முனிவுக்கு - தணியாத சினத்திற்கு. ஏருத விண்ணப்பம் - (நின் மனத்திற்கு) ஏருத வேண்டுகோளாயினும். எற்று இவுளி - அடிக்கப்படும் குதிரை. அழுங்க - வருந்த. புடைத்தார் - அடித்தவர். மத்திகை - குதிரைச் சம்மட்டி. விளங்கிழையே: தலைவியே: முனிவுக்குப் பொருள் அடியேன் அல்ல (ஆதலின்) ஏருத விண்ணப்பமாயினும் கேட்டருள்; இவுளி (தன்னை) புடைத்தாரை வெருது மத்திகையை வெறுப்பது என்? பாவம்! [இரக்கக் குறிப்பு] எனக் கூட்டுக. ‘எய்தவ னிருக்க அம்பென்ன செய்யும்’ என்னும் பழமொழியின் பொருளை உட்கொண்டதிது. ௯௦

விறலி வாயில் மறை

[தலைவன் தூதாக அனுப்பிய விறலியைத் தலைவி வாயில் மறுத்தல்; விறலி—பாடினி; பாணன் மனைவி]

488. அயிலுங் கயலு மனையகண் ணஞ்சன மாற்றிவஞ்சத்
துயிலுந் துடைத்தவன் றேசெவி தூர்ந்தது சோர்ந்ததுள்ளம்
மயிலின் புறத்து முருகனைப் போல வருமகிணன்
பயிலும் பரத்தையர் பாடியிற் பாடினி பாடிலியே.

(கு - ரை.) அயில் - வேல். அஞ்சனம் - கண்ணுக்கு அணிந்த மை; அதனை மாற்றல்; அழுகையால் மை கரைந்து அழிதல். துயிலும் துடைத்த - தூக்கத்தையும் ஒழிந்த. மாற்றித் துடைத்தவன் தலைவன்

என்க; அவன் பிரிவே இவற்றிற்குக் காரணமாதலின். வஞ்சத் துயில் என்றாள், தலைவனோடு துயிலும் சென்றமையின். அன்றே. தலைவன் பிரிந்து சென்ற அன்றே. தூர்ந்தது - அடைந்தது; கேட்கவில்லை என்றபடி. மகிணன் பயிலும் - மருதநிலத் தலைவன் தங்கியுள்ள. பாடி - சேரி. பாடு இனி - இனிப் பாடுவாயாக. பாடினியே! மாற்றித் துடைத்த அன்றே செவி தூர்ந்தது; உள்ளம் சோர்ந்தது; (ஆதலின் நின்பாட்டு என் செவியிலோ உள்ளத்திலோ ஏறாது; அவ்விரண்டும் சீர்பெற அமைந்த) பரத்தையர் பாடியில் (சென்று) இனிப் பாடு எனக் கூட்டுக. 'முருகனைப்போல வரு' என்றது, தலைவன் இவ்விரண்டு பரத்தையரோடு உலாவருகின்றான் என்னும் குறிப்பிற்று. ஈற்றடியில் மடக்கு என்னும் சொல்லணி வந்திருத்தல் காண்க.

(வே - ம்.) செவி தாழ்த்தது. இ - வி. கஅ௲. சக

கூத்தர் வாயில் மறை

*[தலைவன் தூதாக அனுப்பிய கூத்தர்க்குத் தலைவி வாயில் மறுத்தல்]*

**489.** வடிக்கண் ணியரொடு வந்தென்னை நீவந் தனைசெயினும்
நடிக்கும் பழைய நடத்திலொன் றும்இந் நடிமறவார்
அடிக்கண் அதிரக் கழல்விரி நாமங்கொள் ஆரியஇப்
படிக்கண் நகர்முழு தும்பாடி யாடும் பரத்தையரே.

(து - ரை.) வடி - கூரிய பார்வை. கண்ணியர் - கூத்தரைச் சேர்ந்த மகளிர். வந்தனை செய்தல் - தலைவனை ஏற்றுக்கொள்ளுமாறு வணங்கல். நடம் - கூத்து. நடத்தி லொன்றென்றது, என்னை வஞ்சிக்கும்பொருட்டுப் பொய் வணக்கம் செய்கின்றாய் என்றபடி. நடி - நடிப்பு. நாமம் கொள் ஆரிய - வஞ்சனை கொண்ட ஆரியக் கூத்த; விளி. ஆரியக் கூத்தர், தமிழ்க் கூத்தரென்னும் இருவகையி னருள் இவன் ஆரியக்கூத்தரைச் சேர்ந்தோனவன். படிக்கண் - உலகிலுள்ள; படி - உலகு. ஆரிய! நீ கண்ணியரோடு வந்து என்னை வந்தனை செயினும் (எனக்கு அது) நடத்திலொன்றாம்; பரத்தையர் இந்நடி மறவார்; ஆதலின் அங்குச் சென்று நடிக்க என்பது கருத்து.

(வே - ம்.) வந்தனை நீ வந்தனை செயலுன்; நடத்திலொன்றே; அதிர்கழல் வீரிய நாமங்கொள் ஆரிய; நாமங்கள். இ - வி. கஅ௲.

### காமக்கிழத்தி வாயில் வேண்டல்

*[காமக்கிழத்தி (௪௮0) தலைவியை வேண்டல்]*

**490.** வெறுக்கத் தகுவன செய்யினும் ஊரன் விளங்கிழைநீ
பொறுக்கத் தகுதியென் போலல்லை யேயெம் புரவியின்றிச்
சிறுக்கைத் தலங்கொண்டு தேர்கட வாநின்ற சிங்கம்பெற்றும்
கறுக்கத் தகுவதன் றேசிவப் பூரநின் கண்ணிணையே.

(கு - ரை.) ஊரன் - மருதநிலத் தலைவன். விளங்கிழை : தலைவியே ; விளி. தகுதி - தக்கவளாவாய். எம்போலல்லை என்றது, எமக்காயின் பொறுமையின்மையும் தகும்; நினக்கது தகாது என்றபடி. புரவி - குதிரை. சிறு கைத்தலம் கொண்டு - தனது சிறிய கையால். 'சிறுகை' எனற்பாலது எதுகை நோக்கி வலிமிக்கு நின்றது. தேர் கடவாநின்ற - சிறு தேரைச் செலுத்துகின்ற. சிங்கம் பெற்றும் - சிங்கம்போன்ற புதல்வனைப் பெற்றும்; தாய்மைநிலை எய்தியும் என்றபடி. கறுக்கத்தகுவது அன்று - சினங்கொள்ளத்தகாது. சிவப்பு : சின மிகுதியால் தோன்றுவது. ஊர - பரக்க. விளங்கிழை! நீ எம்போலல்லை ; ஊரன் செய்யினும் நீ பொறுக்கத்தகுதி ; சிங்கம் பெற்றும் நின் கண்ணிணை சிவப்பூரக் கறுக்கத் தகுவதன்று எனக் கூட்டுக. 'வெறுக்க பொறுக்க' என்றதும், 'கறுக்க சிவக்க' என்றதும் முரண்.

(வே - ம்.) பொறுக்கத்தகாத எம்போலில்லையே ; சிறுக்கத்தலம் ; கறுக்கத்தகுவனென்றே; சிவப்பூரும். இ - வி. ௧௮௩. ௭௩

### காமக்கிழத்தி கூற்று

*[இனிப் பரத்தையரோடு நட்புக்கொள்ள லாகாதென்று காமக்கிழத்தி தலைவனுக்குக் கூறுதல்]*

**491.** பைக்கொண்ட வல்குற் பருமம் புனையும் பரத்தையர்மேல்
மெய்க்கொண்ட வம்பு மிகுத்தனை யேல்வினை செந்நெலொடு
மைக்கொண்ட நீல வளவய லூர வளைப்பலுன்னைக்
கைக்கொண்ட எங்கள் கவினவித் தேகுநின் காதல்கொண்டே.

(கு - ரை.) பைக்கொண்ட அல்குல் - பாம்பின் படம்போன்ற அல்குலின்மீது : ௨௨௩. பருமம் - இடையணி ; பதினெட்டுக் கோவைகளைக் கொண்டது. வம்பு - புதிய காதல். மைக்கொண்ட நீலம் - கருங்குவளைமலர். ஊர : தலைவ ; அண்மை விளி. வளைப்பல் -

தடுப்பேன். கவின் - நின் பிரிவால் தொலைந்த எம் அழகு. காதல் - நீ எமக்களித்த காதல் நோய். ஊர! பரத்தையர்மேல் வம்பு மிகுத்த னையேல், 'நின் காதல்கொண்டு எங்கள் கவினளித்து ஏகு' என்று உன்னை வளைப்பல் எனக் கூட்டுக. 'மெய்க்கொண்ட அன்பு' என்று பாடமிருப்பின் பொருள் சிறக்கும். 'துறைவனை - ......வண்ணந்தா என்கம் தொடுத்து' - ஐந்திணை எழுபது கூசு. ௬௪

விருந்து கண்டு இறைவி பெருந்துனி ஒழிதல்

*[தலைவன் விருந்தொடு வந்ததைக் கண்டு தலைவியின் பெரிய ஊடல் நீங்குதல்; கவிக்கூற்று]*

**492.** வண்டார் கொழுநன் வரவது கேட்டு மலர்க்கணம்பு
கொண்டாள் புருவச் சிலைகுனித் தாள்தன் குளிர்பிறைசூழ்
வெண்டா மரையின் வெயர்த்துயிர்த் தாள்நல் விருந்தயலே
கண்டாள் முகமலர்ந் தாள்புரந் தாளருங் கற்பினையே.

(கு - ரை.) வண்தார் கொழுநன் - வளவிய மாலை யணிந்த கணவன். கண் அம்பு - கண்ணீர். புருவச்சிலை குனித்தாள் - வில்லை யொத்த புருவத்தை நெறித்தாள். பிறை சூழ் - பிறைபோன்ற நெற்றியையுடைய. வெண்தாமரையில் - வெண்தாமரை மலர்போன்று துன்பத்தால் விளர்த்துள்ள முகத்தில். உயிர்த்தாள் - பெருமூச் செறிந்தாள். புரந்தாள் - பேணினாள். விருந்து புரந்தாளைக் கற்பினைப் புரந்தாளாகக் கூறினர், அஃதுடையாட் கது கடனாகலின். ஊடலால், கண்ணம்பும், சிலைக்குனிப்பும், வெயர்ப்பும், உயிர்ப்பும் தோன்றின வெனினும், கற்புடையாளாதலின் விருந்தைக் கண்டதும் மலர்ந்து புரந்தாள் என்க. வில்லை வளைத்து அம்பு கொண்டு வெகுண்டெழுந் தாள் என வேறொரு பொருளும் தோன்றிற்று.

(வே - ம்.) மகிழ்நன் வருவது; குளிர்வெண் பனிசூழ் - வெண் டாமரை வியர்த்தாள்; புலர்ந்தாள். இ - வி. கஅ௩. ௬௫

விருந்துடன் வந்தோன் அறிந்துடன் மகிழ்தல்

*[விருந்தொடு வந்த தலைவன், தலைவி புலவி யொழிந்தமை யறிந்து மகிழ்தல்]*

**493.** கருந்துன்று வார்குழற் கன்னியில் வாழ்க்கையுங் கையுஞ்செவ்வாய்
முருந்தொன்று மூரல் முறுவலுங் காண முகமறியா
விருந்தொன்றி வேறென்றின் மீளா அருந்துனி மீட்கநல்ல
மருந்தொன்று வந்திங்ங னேமன மேயின்று வாய்த்ததுவே.

(கு - ரை.) கரு துன்று வார் குழல் கன்னி - கருமையும் நெருக்கமும் நீட்சியும் பொருந்திய கூந்தலையுடைய தலைவியினது. கை - கைவண்மை; அஃதாவது விருந்தினர்க்கு இடுதல். முருந்து ஒன்று மூரல் முறுவல் - மயிலிறகின் அடியையொத்த பல்லின் சிரிப்பு; மூரல் - பல்; முறுவல் - சிரிப்பு. காண-யான் காணும்படியாக. விருந்து ஒன்றி - விருந்தென்னும் பெயரைப் பொருந்தி. வேறு ஒன்றின் - விருந்தல்லாத வேறொரு வாயிலாலும். மீளா - நீங்காத. துனி - முதிர்ந்த புலவி. வாய்த்தது - பொருந்திற்று. மனமே! கன்னியின் வாழ்க்கையும், செவ்வாயும், முறுவலும் காணவும் துனி மீட்கவும் விருந்தொன்றி மருந்தொன்று இன்று வந்து வாய்த்தது எனக் கூட்டுக.

(வே - ம்.) கருந்தொன்று; கண்ணி; முறுவலுங் கூர; விருந்தொன்று; வந்து வாய்த்ததுவே. இ - வி. கஅ௩. ௪௬

சேக்கையிற் புலத்தல்

*[விருந்துகண் டொளித்த ஊடல் பள்ளியில் மீண்டும் தோன்றல்; சேக்கை—பள்ளி]*

494. திருத்தியன் போடு திளைக்கின்ற இன்பச் செருக்கிடையே
கருத்திலங் குற்ற கலாமிங் கறிந்திலம் காதலியான்
ஒருத்தியென் றுன்னை யொருவனென் றேயிருந் தேனினிநீ
இருத்தியென் றேமொழி யாஇழிந் தாள்பள்ளி யின்னகையே.

(கு - ரை.) திருத்தி - புலவி நீக்கி. திளைக்கின்ற - நுகர்கின்ற. செருக்கு - களிப்பு. கருத்தில் - தலைவியின் கருத்தில். கலாம் - சினம்; பகையுமாம். உனக்கு யானொருத்தியே காதலியென்றும், அவ்வாறே நீயும் என்னிடம் காதலுடைய ஒருவன் என்றும் எண்ணியிருந்தேன்; நின் பரத்தமை அதனைப் பொய்யாக்கிற்று என்பது குறிப்பு. இருத்தி - தனித்திருப்பாயாக. மொழியா - மொழிந்து. பள்ளி - படுக்கையினின்றும். இன்னகை: தலைவி. 'இருந்தேன்; இருத்தி' என்று மொழியா இன்னகை பள்ளி இழிந்தாள்; (அதற்குக் காரணமான) கலாம் இன்னதென்று அறிந்திலம் எனக் கூட்டுக. இது தலைவன் தனக்குள் கூறி வருந்தல்.

(வே - ம்.) திருத்திய அன்பர்; செவ்விச் செருக்கிடையே கலாபம் அறிந்திலம்; ஒழித்தாள்; பள்ளியின்னகமே, இ - வி. கஅ௩.

சீறேலென்று அவள் சீறடி தொழுதல்

['சினவாதே' யென்று தலைவன் தலைவியினுடைய சிறிய அடிகளில் விழுந்து வணங்கல்]

495. படர்ந்த கலாமின்ன தென்றுரை யாமல் பயிலமளி
கடந்த கலாபங் கலைபுறஞ் சூழக் கதந்தணியத்
தொடர்ந்தக லாத துணையடித் தாமரை சூடவள்ளல்
மடந்தை பொருதென்செய் வாள்மலி நீர்கண்கள் மல்கினளே.

(து - ரை.) படர்ந்த கலாம் - (தலைவி தன் மனத்தில்) நினைத்த ஊடல்; படர்தல் - நினைத்தல்; 'படரே உள்ளல் செலவு மாகும்.' (தொல்). கலாம் - ஊடல். அமளி கடந்த கலாபம் - பள்ளியை விட்டு நீங்கிச் சென்ற மயிலையொத்த தலைவி. கலை புறஞ் சூழ - ஆடையை உடுத்தாநிற்க. கதம் தணிய - அவள் சினந்தணியும்படி யாக. தொடர்ந்து - பின் சென்று. வள்ளல் சூட - தலைவன் தன் தலையில் படுமாறு வணங்க. மடந்தை: தலைவி. மலி - மிக்க. மல்கினள் - பெருக்கினாள். கண்ணீர்மல்கினள்: சினைவினை முதன் மேல் நின்றது. கண்களில் நீர் மல்கல், தலைவன்மீதுண்டான இரக்கத்தால். கலாபம் கலைபுறஞ்சூழ, வள்ளல் கதந்தணியச் சூட மடந்தை பொருது என் செய்வாள்? [தலைவன் குற்றத்தைப் பொறுத்தாள் என்றபடி.] கண்கள் நீர்மல்கினள் எனக் கூட்டுக. 'ஊரன் மலர்க்கமலக் - கையுந்தலையுமென் காலுமொன்றான கனவு' - கஅ௬.

(வே - ம்.) சூடுவலிம் - மடந்தை கலாமகலாமலிநீர். இ - வி. சஅ௬. சஅ

இலைது எங்கையர் காணின் நன்றன்றென்றல்

['நீ என்காலில் வணங்குதலைப் பரத்தையர் கண்டால் நினக்கு இழிவுண்டாகும்' என்று தலைவி தலைவனை நோக்கிக் கூறுதல்]

496. தொடிவைத்த செங்கை யலவ னுலாவத் துறைசெயத்தோர்
வடிவொத்த சிந்தை மலிபுன லூர வணங்கியநின்
முடிவைத்த செங்கையு மென்முலை யாக முயங்கவந்தென்
அடிவைத்த செங்கையு மெங்கையர் காணி லறவுநன்றே.

(து - ரை.) தொடி வைத்த செங்கை - வீரவளை யணிந்த சிவந்த கையையுடைய, ஊர. அலவன் - நண்டு. செயத்தோர் வடிவொத்த -

வெற்றிவீரரின் உருவத்தையொத்த, ஊர. செங்கையும் வடிவும் (நற்) சிந்தையும் பொருந்திய, துறையையுடைய ஊர என இயைக்க. இனி, 'துறை செய்ததோர்' என்ற பாடத்திற்குப் பரத்தையரது தொடி யணிந்த செங்கையாகிய அலவன் தனக்கு உலாவுந் துறையாகச் செய்த உடலின் வடிவத்தைப் போன்று மனத்திலும் பலவகைப் புள்ளிக ளமைந்த மலிந்த புனலூரனே என்று பொருள் கொள்க. நண்டு உலா வுந் துறையிற் புள்ளிகள் பல அமைதல்போலப் பரத்தையின் கைகளா கிய நண்டு உலாவுதலினுலே ஊரனின் உடம்பின்மேல் வளைத்தழும்பு பல உளவாகித் துறையைப் போன்றது என்க. தலைவனுடைய உடம் பின் வடிவினைப்போன்று அவனது மனத்திலும் புள்ளி அஃதாவது வளைத்தழும்பு அமைந்து கிடந்தன என்க. மனத்தில் புள்ளியமைதலா வது எங்ஙனமெனின், அவ்வளைத் தழும்புகளை அவன் பலமுறை நினைத்து மகிழுங்கால் அப்புள்ளிகள் அவன் மனத்தின்கண்ணும் உள வாயின என்க. இவ்வாறு நின் வடிவிலும் மனத்திலுமுள்ள அடையா ளங்கள் எம்மால் அறியப்படுதல்போல நீ என்னை வணங்குந் தன்மை எங்கையரால் அறியப்படின் அது மிகவுந் தீதாம் என்று குறிப்பித்தபடி. முடி - தலைமீது. ஆகம் முயங்க-மார்பைத் தழுவ. அடி வைத்த-காலைப் பற்றிய. எங்கையர் - பரத்தையர்; சகுஅ. அறவும் - மிகவும். நன்று: குறிப்பு மொழி; நன்றன்று; தீது என்றபடி; ஊர! என் ஆகம் முயங்க வந்து, நின் முடியிலும் என் அடியிலும் வைத்த செங்கையை எங் கையர் காணில் நன்று எனக் கூட்டுக.

(வே - ம்.) செங்கயலே வானுலாவும்; துறை செய்ததோர். இ - வி. கஅகூ சகூ

புலவி

*[தலைவியின் ஊடல் தணியாது நீடல்; தலைவி கூற்று]*

497. பங்கய மல்லற் பழனநன் னுடும் பதியுமில்லும்
எங்கையர் போல இனியமல் லேமெங்கள் பால்தொடர்பு
செங்கயல் பாயுங் கருங்கய மேவிய சேவலன்னம்
சங்கய லேதிரி தண்புன லூர தருவதன்றே.

(து - ரை.) பங்கயம் மல்லல் பழனம் - தாமரை பொருந்திய வளமார்ந்த மருதநிலத் தமைந்த. பதி-ஊர். எங்கையர்: சககூ. எங்கைய ருடைய நாடும் பதியும் இல்லுமே நினக்கு இன்பஞ் செய்வன என்பது குறிப்பு. கயம் - குளம். சேவல் அன்னம் - ஆணன்னம்.

சங்கு அயலே - சங்கின் பக்கத்தே. தண் புனல் ஊர - குளிர்ந்த நீரையுடைய மருதநிலத்தூர்க்குத் தலைவனே. தன் இனமல்லாத சங்கின்பின்னே அன்னந் திரியும் ஊரன் என்றதனால், இவனும் தன்னின மல்லாத பரத்தையர்பின் திரிவான் என்பது குறிப்பு. ஊர! (யாம்) இனியமல்லேம்; (ஆதலின்) எங்கள்பால் தொடர்பு (நினக்குத்) தகுவதன்று எனக் கூட்டுக. 'செங்கயல்' கருங்கயம்' என்பது முரண்.

(வே - ம்.) பாய. இ - வி. கஅங. ௯0

## புலவி நீக்கல்

*[தலைவி தன்புலவி நீங்கிக் கூறுதல்; நீங்கல் என்று இருப்பிற் சிறக்கும்]*

498. குளங்கெழு தாமரை வண்டின மேற்குதி கொண்டகெண்டை
இளங்கமு கின்குலை சிந்துநன் னாட இறைஞ்சுசெந்நெல்
வளங்கெழு நாடும் வயல்சூழ் நகரு மரபுமிக்கோய்க்
குளங்கெழு கேண்மைநன் றேஎங்க ளோடிவ் வுலகத்திலே.

(கு - ரை.) கெழு - பொருந்திய. தாமரை வண்டு - தாமரையில் தங்கிய வண்டு. கமுகின் குலை - பாக்கு மரத்தின் குலை. நாட - மருதநிலத்தலைவ. இறைஞ்சு-(கதிர்கள் முற்றி) வளைந்துள்ள. மரபு - குலம். கேண்மை-உறவு. 'குளங்கெழு தாமரை......நன்னாட' என்றதனால் தனக்கு உறுதுணையாகிய நீரின் தொடர்பினை விடுத்துப், பூவில் வண்டினம் இரிந்து புலம்பப், பாக்குப் பழங்கள் புலவு நாறி நீரில் விழப் பாய்ந்து, மீண்டும் நீரில் வந்து விழுங் கெண்டை வாழும் நாடன் என்றமையால், தனக்கு உறுதுணையாகிய என்னை நீத்துப், பல பூக்களில் தேனை நுகரும் வண்டினம்போன்ற பொதுமகளிரைப் புணர்ந்து கலைத்துப், பின் அவர் புலம்ப நீங்கி, பூத்து நின்ற பரத்தையொருத்தி தன் இனத்திலிருந்து நீங்குமாறு அவட்குக் காதலை உண்டாக்கி, அவளும் நின்னை நாடி வரும்படி செய்து, பின் என் இல்லிற்கும் வந்தனை என்று குறிப்பித்தவாறு. நாட! இவ்வுலகத்தில் நாடு, நகர், மரபு இவற்றால் சிறப்பு மிக்க உனக்கு எங்களோடு கேண்மை (பொருந்தல்) நன்றோ? எனக் கூட்டுக. தலைவனுக்கு வேண்டிய குல உயர்வும் கல்வி கொடை முதலிய சிறப்பும் அறிந்த தலைவி 'மிக்கோய்க்கு உளங்கெழு கேண்மை நன்றோ' 'என வியந்து கூறினாள். ௯க

### பாங்கி தலைவன் கொடுமை சாற்றல்

*[கொடுமை—கொடிய இயல்பை]*

**499.** இன்னா தனவு மினிய தெனாமல் தினையனவு
மன்னா மகிழ்வு மிகழ்வும்வந் தால்வளர் காட்டெருமை
நன்னா குறங்கு நளிர்புன லூரன் நலஞ்சிறந்த
பொன்னார் வனமுலை யென்னநின் னோடு புலப்பதுவே.

(கு - ரை.) இன்னாதனவும் - துன்பந் தருவனவும். தினை அ(ன்)னவும் இனியதெனாமல் - தினையையொத்த சிறிய இன்பமேனும் உள்ளதென்று சொல்லற்கின்றி. மன்னா - நிலைபெறாத. நாகு - இளம்பெண்கன்று; நாகமரமுமாம். ஊரன்: அண்மைவிளி. பொன் ஆர் - பொன்னிறமுள்ள பசலை யமைந்த. வனமுலை: தலைவி. புலப்பது - ஊடுவது. காட்டெருமை நாட்டில் வந்து உறங்கும் ஊரனாதலின், நீயும் தலைவியின் இல்லை நீங்கிப் பரத்தையர் சேரியில் தங்கும் இயல்பினனாவாய் என்பது குறிப்பு. ஊரன்! (தலைவிக்கு) இன்னாதனவும், மன்னா மகிழ்வும், இகழ்வும் வந்தால் வனமுலை நின்னோடு புலப்பது என்ன! எனக் கூட்டுக. இத்தகைய நின்னொடு புலத்தலே தக்கதென்றவாறு. இனி, வேறொருபொருள் வருமாறு:— மன்னா! புனலூரனே! இன்னாதனவும்-(முன்பு) துன்பந்தரும் சேட்படை முதலியனவும். இனியது எனா மகிழ்வும் - இனியது என்று மகிழ்வும். மற்று இனியனவும் - இதுபோழ்து தலைவி செய்யும் இனிய செயல்களும். இகழ்வும் - இகழ்ச்சிக்கு உரியனவாகவும். வந்தால் - வந்து துன்புறுத்தினால். நின்னொடு புலப்பதிற் பயன் யாது என்க. இப்பொருட்கு 'மன்னா' என்பதனை விளியாகக்கொண்டு, மற்று இனையனவும் எனப் பிரித்து, இனையனவும் என்பதனை இனியனவும் எனத் திருத்திக்கொள்ளுதலும் வேண்டும். ௫௨

### தோழி வாயில் மறுத்தல்

*[தலைவனைத் தடுத்தல்]*

**500.** நெறியா ரலங்கல் மணிமுடி யாயென்றும் நின்னையன்றி
அறியா இவளிங் கரியளென் றேமண்ணி லாரிடத்தும்
குறியாத அன்புடைக் கொம்பனை யாஊரக் குறுகியந்தண்
முறியார் களப முலைமுகந் தோறு முயங்குவதே.

(கு - ரை.) நெறி ஆர் அலங்கல் - ஒழுங்கமைந்த மாலையை யணிந்த. முடியாய் : தலைவனே. இவள் : தலைவி. அரியள் என்றே - அடைதற்கு அரியவளென்று எண்ணியோ ; ஏ : வினைப்பொருட்டு. குறியாத - நிலையில்லாத ; 'அன்பின் விழையார் பொருள் விழையும் ஆய்தொடியார்' - குறள்: ௯௧௧. கொம்பு அனையார் - பூங்கொம்பை யொத்தபரத்தையர். முறி ஆர் - தழையுடை யணிந்த ; முறி - தளிர் வடிவமாக எழுதப்பட்ட குங்குமக் கோலமுமாம்; முறியார் களப முலை - மாவின் தளிரையொத்த மேனியிலுள்ள களபம் பூசிய முலை எனலு மாம். களபம் - சந்தனக்குழம்பு. "முறிமேனி முத்த முறுவல்" - குறள். இயற்கையாகத் தளிர்நிறமும் செயற்கையாகக் குங்குமக் குழம்பின் வண்ணமுங் கொண்ட முலை என்க. முயங்குவது - புணர்வது. மணிமுடியாய் ! கொம்பனையாரைக் குறுகி முயங்குவது இவள் அரியளென்றே? எனக் கூட்டுக.

(வே - ம்.) முடியாயின்று; முயல்க சென்றே. இ - வி. ௫௩.
௧௮௩.

வாயில் நேர்வித்தல்

*[தலைவனை ஏற்றுக்கொள்ளுமாறு தோழி தலைவிக்குக் கூறி அவளை உடன்படச் செய்தல்]*

501. பூவே யனையர் புரிகுழற் பாவையர் பூவையயில்
மாவே யனையர் வரிகழற் காளையர் வாணெடுங்கண்
ஏவே யனைய இலங்கிழை யாய்நின் றிரங்கலென்னே
நீவே யனைய நிரைவளைத் தோளின் நிறம்பசந்தே.

(கு - ரை.) புரிகுழல் பாவையர் - நுனி சுருண்ட கூந்தலை யுடைய மகளிர். பூவை அயில் - பூவிலுள்ள தேனைப் பருகுகின்ற. மா - வண்டு. வரி கழல் காளையர் - கட்டமைந்த வீரக்கழலை யணிந்த ஆடவர். வாள் - ஒளி. ஏ - அம்பு. இலங்கிழையாய்: தலைவியே. வேய் அனைய - மூங்கிலையொத்த, தோளின். நிரைவளை - வரிசையான வளையலை யணிந்த. பசந்து - பசலை கொண்டு. இலங்கிழையாய்! பாவையர் பூ அனையர் ; காளையர் மா அனையர் ; (ஆதலின்) நீ பசந்து இரங்கல் என்? எனக் கூட்டுக. (௪௱௪.) வண்டோ ரனையர் ஆடவர் ; பூவோரனையர் மகளிர் என்பது ; என்னை? வண்டுகள் தாதுதுமிடத்து, 'நன்மலரே ஊதுவேம் ; அல்லாதது ஊதேம்' என்னு ; எல்லா மலரும் ஊதும் ; இனிப் பூவாயினக்கால், 'எம்மையே

ஊதாது எல்லாப் பூவும் ஊதினீர்' என்று புலவாதன்றே! - இறைய னாகப்பொருள். சூ. ௫௦. உரை. என்ற பகுதி ஒப்புநோக்கத்தக்கது.

(வே - ம்.) அனைய; பூவில் வரு: தோளி. இ - வி. கஅ௩. ௫௪

புதல்வனை வாயில் நேர்வித்தல்

[புதல்வனை வாயிலாக அமைத்துக்கொள்ளுமாறு தோழி தலைவனுக்குக் கூறுதல்]

502. முரிய விசும்பு முழங்கமுன் வந்த முதுகளிற்றைத்
திரிய முனிந்த திறலினன் நீயின்றென் சேரிவரக்
கரிய நறுங்குஞ்சி கிஞ்சுக வாயிதழ்க் கன்னலின்சொல்
அரிய இளங்களிற் றுக்கஞ்சு வானென்கொ லாண்டகையே.

(கு - ரை.) விசும்பு முரிய - வானம் வெடிக்கும்படியாக. முழங்க - முழங்கி; எச்சத்திரிபு; களிறு (அச்சத்தால்) முழங்க முனிந்தான் என் றியைத் துரைத்தலுமாம். முன் வந்த களிற்றை - களவுக் காலத்தே தலைவியைஎதிர்த்து வந்த யானையை: ௩௫அ. திரிய - அழியும்படியாக. திறலினன் நீ - வல்லமையுடையவனாகிய நீ. குஞ்சி - தலைமயிர். கிஞ்சுகம் - முருக்கமலரையொத்த. கன்னல் இன்சொல் - கருப்பஞ் சாற்றையொத்த இனிய சொல். குஞ்சியையும், இதழையும், சொல்லையுமுடைய களிறென்க; களிறு: புதல்வன். அஞ்சுவான் என் என்றது, 'புதல்வனை எடுத்துக்கொண்டு அவனையே வாயிலாகவுங் கொண்டு செல்க' என்று குறிப்பித்தபடி. ஆண்டகையே: தலைவனே! முதுகளிற்றை முனிந்த நீ இளங்களிற்றுக்கு அஞ்சுவான் என் எனக் கூட்டுக. கொல்: அசை. ௫௫

புதல்வன் வாயில் வேண்டல்

[புதல்வனை வாயிலாகக் கொண்டு வருகின்ற தலைவனை மறுத்தலாகா தென்று தோழி தலைவியை வேண்டுதல்]

503. பண்டுவந் தார்சிலர் பாணரும் பாகரும் போனுமல்ல
விண்டுவந் தாலன்ன மென்குழ லாய்விரை யார்பழன
வண்டுவந் தாலும் வளவய லூரன் மதலையையுங்
கொண்டுவந் தாலென்கொ லோஇனி நீதுனி கொள்கின்றதே.

(கு - ரை.) பண்டு - முன்பு. வந்தார் சிலர் - வந்த சிலராகிய; வந்தாரென்னும் வினைமுற்றுப் பெயரெச்சமாயிற்று, 'இருவகை முற்றும் ஈரெச்சமாகலும்' - (இலக்கணக் கொத்து - அஉ.) என்று

ராகலின். விண்டு - முகில். குழலாய்: தலைவியே. விரை ஆர் பழனம் வண்டு - தேனை யுண்ணுகின்ற மருதநிலத்து வண்டு; விரை- தேன். ஆலும் - ஒலிக்கும். ஊரன் - மருதநிலத் தலைவன். மதலை - புதல்வன். துனி - முதிர்ந்த புலவி. புதல்வனையே வாயிலாகக்கொண்டு வருகின்றமையின் நீ மறுத்தலாகாதென்பது குறிப்பு. குழலாய்! பண்டுபோலன்றி, ஊரன் கொண்டு வந்தால், நீ இனித் துனி கொள்கின்றது என்? எனக் கூட்டுக. கொல், ஓ: அசைகள். ௫௬

புதல்வற் புலத்தல்

[தலைவனைத் தழுவிய புதல்வனைத் தலைவி புலந்து கூறல்]

504. மைவார் குழல்மட மங்கையர் தங்கள் வதுவையுன்னிக்
கைவா ரணங்கட வும்பெரு மானைக் கலுழ்ந்தழைத்துன்
செவ்வா யமுத மணிந்தசெஞ் சாந்தஞ் சிதையப்புல்லி
இவ்வாறு செய்ததெல் லாமவர் மேனியி லேறுவதே.

(து - ரை.) மை வார் குழல் மட மங்கையர் - கருமையும் நீட்சியும் பொருந்திய கூந்தலையுடைய இளம்பரத்தையர். வதுவை உன்னி - கூட்டத்தை யெண்ணி. கை வாரணம் - துதிக்கையை யுடைய யானை வடிவமுள்ள உருவம். இதனைக்,

"கடியரணம் பாயாநின் கைபுனை வேழம்
தொடியோர் மணலின் உழக்கி அடியார்ந்த
தேரைவாய்க் கிண்கிணி ஆர்ப்ப இயலும்என்
போர்யானை"

என வரூஉம் (கலி: அகூ) கருத்து ஈண்டுக் காண்க. கடவும் - செலுத்தும். பெருமான்: தலைவன். கலுழ்ந்து - அழுது. உன் என்றது, புதல்வனை. அமுதம் அளைந்த உமிழ்நீர் ஒழுகியூறிய. சாந்தம் - புதல்வன் மார்பிலுள்ள சந்தனம். சிதையப் புல்லி - கெடும் படியாகத் தழுவி. அவர்: பரத்தையர். உன்னிக் கடவும் பெருமானை அழைத்துப் புல்லிச் செய்தது ஏறுவதே ஆதலின் நீ ஏன் அவனைப் புல்லினுய் என்று புதல்வனைத்தலைவி புலந்தவாறு காண்க. தலைவன் புதல்வனைத் தழுவுகையில் அவன் மார்பிலுள்ள சந்தனம் தலைவன் மார்பில் ஒட்டப் பின், அவன் பரத்தையரைத் தோய்கையில் அவர் மேனியிற் படியுமாதலின் இவ்வாறு கூறினளென்க.

(வே - ம்.) பெருமானை; செவ்வாய் முதல அணிந்த; யாவர் மேல் இனி ஏறுவதே; இ. வி. கஅ௩. ௫௭

### மகற்கு அறிவுறுத்தல்

[‘நின் தந்தையின் தீயொழுக்கங்களை நீயுங் கற்றுக்கொள்ளாதே’ யென்று தலைவி புதல்வனுக்கு அறிவுரை கூறல்]

505. கொய்யுஞ் சுவற்பரி யும்குலப் பாகுமுட் கோலுமில்லா
வையங் கடவு மழகளி றேவருந் தாமலெங்கை
செய்யும் பெருந்தவ மேகலந் தாருழைத் தீமையையும்
பொய்யுங் கலாதொழி வாய்புன லூரனைப் போலவின்றே.

(கு - ரை.) கொய்யும் சுவல் பரி - கத்தரிக்கப்படுகின்ற பிடரி மயிரையுடைய குதிரை; சுவல் - பிடரி மயிர். பாகு - தேர்ப்பாகன். முள்கோல் - தாற்றுக்கோல். வையம் கடவும் - சிறுதேரைச் செலுத்தும். மழகளிறே - இளயானைபோன்ற என் புதல்வனே. எங்கை: பரத்தை. தவமே கலந்தார் உழை - தவத்தால் அவரைப் புணர்ந்த தலைவரிடத்தமைந்த. ஊரன்: தலைவன்; ஈண்டுச் சுட்டுப் பொருட்டாய் நின்றது. ‘கலந்தார்’ என்பதற்குப் பரத்தையரைக் கூடி யொழுகுவோர் எனப் பொதுவாக உரைத்தலுமாம். களிறே! கலந்தாருழைத் தீமையையும் பொய்யையும் அவ்வூரனைப்போல் (நீயும்) இன்று கல்லாதொழிவாய் எனக் கூட்டுக.

(வே - ம்.) மதகளிறே; தீமையும் அப்பொய்யும். இ. வி. கஅங. ருஅ

### மகற் பழித்து உரைத்தல்

[கோயிலுக்கு அனுப்பப்பட்ட புதல்வன் வரும்போது தன் தந்தைக்குரிய பரத்தையரில்லம் சென்று வந்தானென்று கருதித் தலைவி அவனைப் பழித்தல்]

506. குன்றே யனைய கடவுட் குலம்வலங் கொண்டுவந்த
தென்றே விடுத்த திருவினை யேயினி யெங்கையர்பால்
சென்றே வருக மறக்கவின் றேசெம்ம லூரன்செல்வக்
கன்றே யுனக்குங் கசந்தன வோஇக் கனதனமே.

(கு - ரை.) குலம் - கோயில். வலம் கொண்டு - சூழ் வந்து வணங்கி. வந்ததென்று - வருக என்று; ‘வருகென்றே’ என்று பாடமிருப்பிற் சிறக்கும். விடுத்தது இருவினையே - நின்னைப் போக விட்டது என் பெரிய தீவினையே. எங்கையர்: பரத்தையர். செம்மல் ஊரன் - பெருமையிற் சிறந்த தலைவனுடைய. கன்றே - புதல்வனே!

தான் வெறுக்கின்றுளாதலின் தலைவனுடைய கன்றே என்றுள். கன தனம் - பெரிய கொங்கையின் பாலுண்ணல். உனக்கும் - தலைவனுக்கேயன்றி உனக்கும். புதல்வன் பரத்தையரில்லம் சென்றுனென்பதை உட்கொண்டு அவனைப் பாலுண்ணுமைமேலிட்டுப் பழித்தவாறு. கன்றே! உனக்கும் இத்தனம் கசந்தனவோ? (நின்னை) விடுத்தது இருவினையே; இனிச் சென்றே(னும்) வருக; (அன்றி எம்மை) இன்றே (மறப்பினும்) மறக்கவெனக் கூட்டுக. ருகூ

உணர்ப்புவயின் வாரா ஊடல்

*[தான் தெளிவிக்கவும் தெளியாத தலைவியின் ஊடலைத் தலைவன் எடுத்துக்கூறல்; உணர்ப்பு—தெளிவித்தல்]*

**507.** கருகாத நீலமுங் கூருப் பவளமுங் கால்வளையும்
இருகார் முகம்பற்ப ராகமும் வானவி லின்றமுத்தும்
சருகாய நெஞ்சத் திடையெழுங் காமத் தழல்முகத்தும்
உருகா வயிரமு முண்டுகொ லோநம் ஒளியிழைக்கே.

(து - ரை.) நீலம் - குவளைமலர்போன்ற கண்; அது கருகி நிற்றலே இயல்பாயினும் சினத்தாலும் அழுகையாலும் சிவந்து நிற்றலின் கருகாத நீலமென்றுர். கூருப் பவளம் - ஊடலால் பேசாத வாய்; பவளம்: பவளம்போன்ற வாயிதழ். கால் வளையும் - இரு நுனியும் வளைந்த. இரு கார்முகம் - வில்லையொத்த இரண்டு புருவங்களையுடைய. பற்ப ராகம் - தாமரைமலரையொத்த முகத்தின் சிவப்பும்; பற்பம் - தாமரை; ராகம் - சிவப்பு; இந்நிறமும் ஊடலால் தோன்றியதே. வானவில் - இந்திரவில்லையொத்த நெற்றி. முத்து - முத்துப்போன்ற வியர்வைத்துளி. சருகாய - சருகைப்போல் பசையற்ற. உருகா வயிரம் - இரக்கமற்ற சினமிக்க மனவயிரம். ஒளியிழைக்கு: தலைவிக்கு. நெஞ்சம் சருகாகுமாறு காமங் கைம்மிக்க இந்நிலையினும், ஊடலின் காரணமாகத் தலைவிக்குத் தோன்றிய மெய் வேறுபாடுகள் நீங்கினவில்லையே என்று தலைவன் வருந்திக் கூறியவாறு. அன்றியும் எத்தகைய பொருளும் நெருப்பிற்கு இளகுதல் இயல்பாகலான், 'காமத் தழலகத்தும் உருகா வயிரம்' எனத் தலைவியின் புலவியை வியந்தவாறு. நீலம், பவளம், பதுமராகம், முத்து, வயிரம் என்னும் இத்துணை ஒளிமணிகளும் தலைவிக்கு உண்டோ! என்று தலைவன் வியந்து கூறியதாகவும் வேறொரு பொருள் தோன்றுதல் காண்க. கூ0

கழிந்தது நிகழ்த்தல்

*[தலைவன் தலைவியின் முன்னையன்பை யெண்ணி வருந்தல்]*

508. ஈன்றோர் வருந்த இருஞ்சுரப் போக்கும் எயினரில்லின்
மான்றேல் படுத்து வதியுந் துயிலும் வனத்திடையே
ஊன்றோய் கடுங்கணை நின்னையர் தோன்ற ஒளித்ததுவும்
கான்றோய் மலர்க்குழ லாய்மற வேனொரு காலத்துமே.

(கு - ரை.) ஈன்றோர் - தலைவியின் பெற்றோர். சுரப்போக்கு- உடன்போக்கில் தலைவனுடன் பாலை நிலவழியிற் சென்றமை. எயினர் - பாலைநில மக்கள். வதியும் துயிலும் - தங்கித்துயின்றமையும்: ௩௮௨. ஊன் தோய் கடுங்கணை நின்னையர் - பகைவர் உடலிற் றைக்கின்ற கடிய அம்பையுடைய நின் [தலைவி] தந்தை தன்னையர். ஒளித்தது: ௪௨௨. கான் தோய் - மணம்பொருந்திய. குழலாய்: தலைவியே! போக்கும், துயிலும், ஒளித்ததும் (யான்) ஒருகாலத்தும் மறவேன்எனக் கூட்டுக. யான் முன்னை நிகழ்ச்சியை எண்ணி அன்புறுவேன்; நீயோ முற்றிலும் வேறுபட்ட ஒருத்தியாயினும் என்று தலைவன் புலந்துரைத்தவாறு. இத்துறை பிறகோவைகளில் 'தலைமகள் புலவி தணியாளாகத் தலைமகன் ஊடல்' என்று வழங்கப் பெறும். 'பேதைநெஞ் சேவஞ்சம் பெற்றவிவள் - நாராயம் நீத்தன் றுயிர்த்துணை யாகி நமைக்கலவா - வாரா வழியி லடிநோவ வந்த மயி லல்லளே' - கலைசைக்: ௪௨௧. ௬௧

தலைவற்குத் தோழி கூறல்

*[நின் பிணக்கு நீங்கித் தலைவியின் பிணக்கை நீக்குவாயாக என்று கூறல்]*

509. நிழலைச் சுளித்து நிமிர்களிற் றுயந்த நீர்கொண்டன்றி
அழலைத் தழல்கொண் டவித்தவ ரார்அமு தார்குமுத
மழலைக் கிளிமொழி வஞ்சியன் னுள்நெஞ்சும் வாள்விழியும்
சுழலச் சுழலுந் துனியொழிப் பாயத் துனியொழிந்தே.

(கு - ரை.) நிழலைச் சுளித்து நிமிர் களிற்றாய் - தன்னிழலையே வேற்று யானையென்று வெகுண்டெழுகின்ற யானைப்படைகளை யுடைய தலைவனே. அழல், தழல் - நெருப்பு. அமுது ஆர் குமுதம்- தேன்போன்ற உமிழ்நீர் பொருந்திய செவ்வல்லிமலரையொத்த வாய். மழலை - இளஞ்சொல்; கிளிமொழிபோன்ற மழலையென்க. வஞ்சி

அன்னாள் - வஞ்சிக்கொடிபோன்ற தலைவி. குமுதமும் மழலையு முடைய வஞ்சியன்னாளென்க. துனி - முதிர்ந்த புலவி. அத்துனி என்றது, தலைவன் கொண்ட துனியை. அழலை நீராலன்றித் தழலாலவித்தல் இயலாமைபோலத் துனியை அன்பாலன்றித் துனியா லகற்றல் ஆகாமையின், 'துனியொழிந்து வஞ்சியன்னாளின் துனியொழிப்பாய்' என்றானென்க. களிற்றாய்! அவித்தவர் ஆர்? (ஆதலின்) ஒழிந்து ஒழிப்பாய் எனக் கூட்டுக. இச்செய்யுள் வேற்றுப் பொருள்வைப்பணி. ௩௨

ஆற்றாமை வாயில்

*[தலைவன் தன் ஆற்றாமையே வாயிலாகத் தலைவியிடம் சென்று உரைத்தல்]*

**510.** வில்லார் புருவம் நெரியத் திருநுதல் வேர்வரும்பக்
கல்லார மன்னநின் கண்பனி கூரக் கலந்தொருசொற்
சொல்லாத தொண்டைத் துவர்வா யதரந் துடித்துநிற்ப
அல்லார் குழலணங் கேயப ராத மறிந்திலனே.

(கு - ரை.) நெரிய - வளைய. நுதல் - நெற்றியில். அரும்ப- தோன்ற. கல்லாரம் - குவளைமலர். பனி கூர - நீர் மிக. கலந்து - அன்பு கலந்து. தொண்டைத் துவர் வாய் அதரம் - கொவ்வைக்கனி. போன்ற சிவந்த வாயிதழ்; தொண்டை - கொவ்வைக்கனி; துவர் - சிவப்பு; அதரம் - இதழ். அல் ஆர் குழல் அணங்கே - இருள் நிறைந்த கூந்தலையுடைய தலைவியே. அபராதம் - யான் செய்த குற்றம். அணங்கே! நெரிய அரும்பக் கூரத் துடித்து நிற்ப (இவற்றிற்குக் காரணமாகவுள்ள யான் செய்த) அபராதம் அறிந்திலன் எனக் கூட்டுக. ௩௩

தலைவன் பொய்ம்மை தலைவி கூறல்

*[தன் பரத்தமையை மறைத்தற்பொருட்டுத் தலைவன் கூறிய பொய்யுரைகளைத் தலைவி அவன்முன் எடுத்துக் கூறல்]*

**511.** தேனுகர் வண்டும் ஞிமிறுஞ் சுரும்புஞ் செறிகுவளைப்
பூநகு தண்புனற் பொய்கைநல் லூரர் புதுப்புனலும்
கானவர் புள்ளுங் கடவுளும் வாசியுங் காய்சினமால்
யானையு மாவர்சொல் லோநாளும் நாளும்வந் தெங்கையரே.

(கு - ரை.) நுகர் - உண்கின்ற. ஞிமிறு, சுரும்பு: வண்டின் வகை. செறி - நெருங்கிய. பூ நகு - பூக்கள் மலர்கின்ற. பொய்கை -

குளங்களையுடைய. ஊரர்: தலைவர்க்கு; அண்மை விளியுமாம். புதுப்புனல் - புதுவெள்ளம். கான் அமர் புள் - காட்டிற் பொருந்திய பறவை. வாசி - குதிரை. காய் சினம் மால் யானை - கொதிக்கின்ற சினத்தையும் மதத்தையுமுடைய யானை. அடுக்கு: பன்மை யுணர்த் திற்று. எங்கையர்: பரத்தையர். ஊரர்க்கு எங்கையர் புனலும், புள்ளும், கடவுளும், வாசியும், யானையும் ஆவர்கொல் எனக் கூட்டுக. ஓ: அசை. தலைவன் நாடோறும் பரத்தையரில்லஞ் சென்று வந்து, ஊடிய தலைவிக்கு 'யான் புதுப்புனலாடற்கும், புள்வேட்டையாடற் கும், கடவுள்விழாக் காணற்கும், வாசி யானை ஊர்தற்கும் சென் றேன்' என்று கூறியவற்றைப் பொய்யென உணர்ந்த தலைவி தலைவனை நகைத்துரைத்தவாறு. ௬௱௯

புணர்ச்சியின் மகிழ்தல்

*[தலைவன் மகிழ்ந்துரைத்தல்]*

512. சுரும்புங் குவளையும் அன்றிலும் பேடுந் துணர்விரிபூங்
கரும்புங் கவளக் களிறுமன் றேகடற் பாலமுதம்
அரும்புந் துணைமுலை யாகங் குளிப்ப அறிவழிந்து
விரும்புங் கலவி நிலத்திரு வேமும் விளங்கிழையே.

(து - ரை.) சுரும்பு - வண்டு. அன்றில் - ஆணன்றில்; பேடு - பெண்ணன்றில்: இஃது ஆணும் பெண்ணும் இணைபிரியாது வாழும் ஒருவகைப் பறவை; உகங. துணர்விரி - கொத்தாக மலர்கின்ற. கவளக் களிறு - கவளங் கொள்ளும் ஆண் யானை; கவளம் - யானை யுணவு. கடல் பால் அமுதம் - கடல்போன்ற பாலாகிய அமுதம். அரும்பும் - சுரக்கின்ற. ஆகம் குளிப்ப - என் மார்பில் அழுந்த. கலவி நிலத்து - புணர்ச்சிக்குரிய பாயலில். விளங்கிழையே' தலைவியே! (யாம்) இருவேமும் கலவிநிலத்து அறிவழிந்து சுரும்புங் குவளையும், அன்றிலும் பேடும், கரும்புங் களிறும் (ஒப்பேம்) அன்றே! எனக் கூட்டுக. சுரும்பும், அன்றிலும், களிறும் தலைவற் குவமையென்றும், குவளையும், பேடும், கரும்பும் தலைவிக் குவமை யென்றும் அறிக. மென்மையாக நுகர்தற்குச் சுரும்பும், வன்மையாக நுகர்தற்குக் களிறும், ஒன்றி நுகர்தற்கு அன்றிலும் உவமையாம். 'பவழவாய் பரவை யல்குல் என்றிவை பருகும் வேலான் - கவழமார் களிறுபோன்முன் காதலி கரும்பை யொத்தாள், தவழ்மதுக் கோதை

மாதர் தாமரைப் பூவ தாக - உமிழ்நகை வேலினானும் ஒண்சிறை மணி வண்டொத்தான்' - சிந்தாமணி: ககக. கூடு

புணர்ச்சியின் விதும்பல்

*[வேட்கை மிகவினான் தலைவி கலவியில் விரைந்த உள்ளத்த ளாதல்]*

**513.** நிறைபோ னதுமட நாணமும் போயது நின்றநெஞ்சம்
அறைபோன தன்றிங் கதன்வழி யேயென் அணிவளையும்
இறைபோ னதுபின்னை நீயுமிங் கில்லை யிலங்கிழையாய்
பொறைபோன அன்புடை யாரெங்ங னேபின் புலம்புவதே.

(து - ரை.) நிறை - மனத்தை நிறுத்துங் குணம். அறை போனது - கீழற்றுப் போயிற்று. வளை - வளையல். இறை போனது- முன்கையினின்றும் கழன்று போயிற்று. நீ என்றது, தோழியை. இலங்கிழையாய்: தோழியே. பொறைபோன அன்புடையார் - தாங்க முடியாத வேட்கை கொண்ட என்போன்ற மகளிர்; 'அன்புடையார்: எனத் தலைவி தன்னையே பிறர்போலக் கூறினாளென அறிக. புலம்பு வது - கலவிக்கு இணங்காது பிணங்குவது, இலங்கிழையாய்! நிறை, நாண், நெஞ்சம், வளை போயின; நீயும் இல்லை; பின் பொறைபோன அன்புடையார் புலம்புவது எங்ஙன்? எனக் கூட்டுக. 'தலைவன் தவறுணர்ந்த நீ அவனுடன் புலவாது கலவிக் கியைந்த தென்னை?' என்ற தோழிக்குத் தலைவி மறுமொழி கூறியதாக அமைந்தது இச் செய்யுளென அறிக. 'நிணந்தீயி லிட்டன்ன நெஞ்சினார்க் குண்டோ, புணர்ந்தூடி நிற்பே மெனல், - குறள் கஉகூ0.

(வே - ம்.) புணர்ச்சியில் வெதும்பல்; அவன் வழியே. கூகூ

பாங்கி தலைவனைப் புகழ்தல்

**514.** அறத்திற் றருமன் பொருளிற் றனபதி யாய்ந்தஇன்பத்
திறத்திற் சிலைமதன் சிந்தையிற் புந்தி திருந்துவண்மைப்
புறத்திற் புவியயல் போற்றுங் கலையிற் பொதியமுனி
மறத்திற் சிறந்த வளவய லூரன் மடங்கலின்றே.

(து - ரை.) தருமன் - இயமன்; இவன் அறம் வழுவாதவன் என்று நூல்கள் அறையும்; 'தருமன் தண்ணளியால்' - சிந்தாமணி. தனபதி - இருநிதிக்கிழவன் [குபேரன்]. சிலைமதன்-கரும்பு வில்லை

யுடைய மன்மதன். சிந்தையிற் புந்தி - அறிவில் புதன். வண்மைப் புறத்தில் - கொடையில். புவி - நிலமகள். அயல் போற்றும் - அயல் நாட்டவரும் போற்றத்தக்க. கலை - கல்வி. பொதியமுனி - அகத்தியன். மறத்தில் - வீரத்தில். ஊரன் - மருதநிலத்தலைவன். மடங்கல் - விலங்கரசு. ஊரன் இன்று அறம் முதலியவற்றால் தருமன் முதலியவர்களை ஒப்பானெனக் கூட்டுக. கூஎ

பாங்கி தலைவியைப் புகழ்தல்

515. கற்புக் கருந்ததி நாணுக்கு மானக் கவரிநன்மான்
பொற்புக்கும் வாய்ந்த பொறைக்கும்பொன் பூமகள் கோமகன்றன்
அற்புத் துணைவி யறத்துக் கெலாமன்னை யாடகமால்
வெற்புக் குயர்ந்த மனைக்குநந் தாத விளக்கொளியே.

(கு - ரை.) கற்புக்கு அருந்ததி: டுகூஉ. மயிர் நீப்பினும் உயிர் வாழாததாய் மானமுடையார்க்கு உவமை கூறப்படுதலின் 'மானக்கவரி மான்' என்றார். பொற்புக்குப் பொன் - அழகில் திருமகளை யொப்பாள். பொறை - பொறுமை. பூமகள் - நிலமகள். பொற்புக்குப் பொன், பொறைக்குப் பூமகள் எனக் கூட்டுக; நிரல்நிறைப் பொருள்கோள். 'அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல......பொறுத்தல் தலை' - குறள்: கடுக. கோமகன் - தலைவன். அற்பு - அன்பு. துணைவி: தலைவி. அறத்துக்கு எலாம் அன்னை - அறங்கள் புரிவதில் உலகத்திற்கு அன்னையாகிய உமையை ஒப்பாள். ஆடகம் மால் வெற்புக்கு - பொன்தன்மை வாய்ந்த பெரிய மேருமலையினும். நந்தாத - கெடாத. 'மனைக்கு விளக்கம் மடவாள்' - நான்மணிக் கடிகை: கOரு. துணைவி, கற்புக்கு அருந்ததியையும், நாணுக்குக் கவரிமானையும், பொற்புக்குப் பொன்னையும், பொறைக்குப் பூமகளையும், அறத்துக்கு அன்னையையும், மனைக்கு ஒளியையும் ஒப்பாளெனக் கூட்டுக. கூஅ

பரத்தையிற் பிரிவு முற்றும்

## உரு. ஓதற் பிரிவு

***[கல்வி காரணமாகத் தலைவன் தலைவியைப் பிரிதல்]***

### தோழிக்கு உரைத்தல்

***[கல்வி காரணமாகத் தான் பிரிய எண்ணி யிருப்பதைத் தலைவன் தோழிக்கு உரைத்தல்]***

**516.** தானே யருங்கலை தந்தவன் சங்கப் பலகையின்கீழ்
மானே பதங்கள் வருந்தமுன் நின்றதும் வாய்த்தசெஞ்சொல்
தேனே யருட்பொருள் தேடவும் பாணர்பின் சென்றதுவும்
கானே கமழ்கொன்றை யானறி வோர்தரங் காட்டியதே.

(கு - ரை.) *கலை - கல்வி. தந்தவன்: சிவபெருமான். மானே : தலைவன் தோழியை விளித்தது. பதங்கள் - கால்கள். 'முன் நின்றது' என்றது, சிவபெருமான் தருமிக்கு எழுதிக் கொடுத்த பாட்டில் குற்ற முளதாகக் கூறிய நக்கீரர் முதலிய புலவர் சங்கப்பலகைமீ திருக்கத் தான் கீழ் நின்றமையை. செஞ்சொல் தேன் ஏய் - செவ்விய சொற்க ளாகிய தேனில் பொருந்திய. அருள் பொருள் தேடவும் - அருள் வளர்ச்சிக் குரிய பொருட் கூறுகளை ஆராய்ந்ததும்; இது, சிவபெரு மான் சங்கப்புலவராயிருந்து தமிழாராய்ந்தமையைக் குறித்து நின்றது; தமிழ்மொழி இனிமை வாய்ந்ததாகலின் 'தேன்' என்றும், அதன்கண் அகப்பொருள் அருளை மிகுப்பதாகலின், 'அருட்பொருள்' என்றும் கூறினர். பாணர்பின் சென்றது என்றது: சிவபெருமான் விறகு விற்போனாய் வந்து பாணபத்திரன் அடிமையெனக்கூறி இசை பாடி ஏமநாதனை வென்றமையை. கான் கமழ் கொன்றையான்-மணங் கமழுங் கொன்றைமாலையணிந்த சிவபெருமான். அறிவோர் தரம் - கற்றோரின் சிறப்பை. மானே! கலைதந்தவனாகிய கொன்றையான் நின்றதும், தேடினதும், சென்றதுவும் காட்டியதே எனக் கூட்டுக; ஆதலின் யானும் கற்கச் செல்வேனென்று ஓதற் பிரிவு உணர்த்திய வாறு.* க

### தலைவிக்கு உரைத்தல்

***[தலைவன் கல்வி காரணமாகப் பிரிந்ததைத் தோழி தலைவிக்கு உரைத்தல்]***

**517.** பணந்தாங் குலகிற் பலகலை நூலும் பழுதறவே
உணர்ந்தா ருணர்வை யுணர்தலுற் றுணரா ராதபுல்லர் [ய்
குணந்தா ளெனநுடங் குங்கொடி போலிடைக் கொவ்வைச்செவ்வா
மணந்தாழ் மடமயி லேவரு வாரின்று மன்னவரே.

(து - ரை.) பணம் தாங்கு உலகில் - ஆதிசேடன் தன் தலையால் தாங்குகின்ற இந்நிலவுலகில்; பணம் - பாம்பின் படம்; பொருளை முதன்மையாக உடைய உலகெனலுமாம்: 'பொருளில்லார்க் கிவ்வுல கம் இல்லா கியாங்கு' - (குறள். உசஎ.) என்றாராகலின். உணர்ந் தார் உணர்வை உணர்தல் உற்றார் - கற்றாருடைய அறிவைக் கற்கும் பொருட்டுத் தலைவர் சென்றிருக்கின்றார். புல்லர்-அற்பர். நுடங்கும் - அசையும். புல்லர் குணம் ஒருநிலையில் நில்லாது அலையுமாதலின், அஃது இடைக்கு உவமை கூறப்பட்டது. மணம் தாழ் - மகிழ்ச்சி பொருந்திய; கற்புறு மகளிர்க்குரிய இயற்கை நறுமணம் பொருந்திய எனலுமாம். இடையையும் வாயையும் உடைய மயிலே என்க; மயில்: தலைவி. மயிலே! மன்னவர் உணர்தலுற்றார்; இன்று வருவார் எனக் கூட்டுக. தலைவி வருந்துவாளென எண்ணி வருதலையும் உடன் கூறினாளென்க. உ

பிரிவு உடன்படாமை

*[தலைவன் பிரிவுக்குத் தோழி உடன்படாமை]*

518. பாயுங் கயலொண் பழனநல் லூரளம் பாவையைநீத்
தாயுங் கலையி னகத்திலை போலு மளியினமேன்
மாயஞ்செய் துள்ள மயங்க முயங்கி மருவியஅப்
பேயின் பிறத்தும் பிரிதலின் னாவென்று பேசுவரே.

(து - ரை.) பழனம்-வயல். ஊர: தலைவ; அண்ணல்விளி. பாவை- தலைவி. நீத்து - பிரிந்து. ஆயும் கலையின் அகத்து - நின்னால் ஆரா யப்படும் நூல்களில்; கலை - நூல். அளி இனம் இலைபோலும் - அன்பைப்பற்றிக் கூறும் பொருட் கூறுகள் இல்லைபோலும்; இருந் தால் தலைவியின் அன்பை நீத்துச் செல்லமாட்டாய் என்பது கருத்து; அளி - அன்பு. மாயஞ் செய்தல்: பெண்வடிவங்கொண்டு தோன்றி மயக்கல். முயங்கி மருவிய - தழுவிக் கலந்த. இன்னா - துன்பம் தருவதாகும். ஊர! நீத்து ஆயும் கலையினகத்து அளியினம் இலை போலும்; (அது கிடக்க; பெரியோர்) பேயின் பிறத்தும் பிரிதல் இன்னாவென்று பேசுவரே எனக் கூட்டுக. 'பேயைப் பிரிதலும் இன்னாதா யிருக்கத் தலைவியை நீங்குதல் யாங்ஙனம் இயலும்?' என்றது தொடர்நிலைச் செய்யுட் பொருட் பேறணியாம். 'இன்னாதே, பேஎயொ டானும் பிரிவு' - பழமொழி. கஉஉ.

" பேயோ டேனும் பிரிவொன் றின்னா
தென்பர் பிறரெல்லாம்."

(சுந்தரர் தேவாரம்)

இச்செய்யுளும் முன் செய்யுளும் வைப்புமுறை மாறியுள்ளன போலும். ௩

தலைமகள் கார்ப்பருவம் கண்டு இரங்கல்

*[தலைவன் மீண்டு வருவதாகக் குறித்துச் சென்ற கார்காலம் வந்தும் அவன் வாராமையால் தலைவி வருந்துதல்]*

**519.** கற்றவர் கற்ற கலைமாக் கடற்கரை காண்பதற்கே
உற்றவ ருற்ற துணர்ந்திலர் போலொரு மூன்றரணம்
செற்றவர் கற்றைச் சடைக்கொன்றை காட்டத் திருமடந்தை
கொற்றவர் போலிவ் விருவிசும் பேறிய கொண்டல்களே.

(கு - ரை.) கலை மா கடல் - கல்வியாகிய பெருங்கடலின். உற்றவர் - சென்ற தலைவர். உற்றது - கார்ப்பருவம் வந்துற்றதை. போல் - போலும்; அசையுமாம். மூன்று அரணம் - மூன்று பறக்கும் கோட்டைகளையும் [திரிபுரம்.] செற்றவர் - எரித் தழித்த சிவபெருமானது. சடைக்கொன்றை காட்ட - சடையில் அணியப்படும் கொன்றைப் பூக்கள் மரங்களில் மலர்ந்து கார்காலம் வந்தமையைக் காட்ட; இது கார்காலத்தில் மலர்தற்கு உரியது. கொற்றவர் - திருமால்; திருமாலைக் கொண்டலுக்கு உவமையாக்கியது எதிர்நிலையணி. இருவிசும்பு - பெரிய வானில். கொண்டல்- நீர்கொண்ட கருமுகில். திருமடந்தையை மார்பிற்கொண்ட திருமால் விசும்பி லேறுதல்போல மின்னலைத் தன்னகத்தே கொண்ட கொண்டல்கள் விசும்பிலேறின என்க. மின்னுக்குத் திருமடந்தையும் கொண்டலுக்கு மாலும் உவமை. கொன்றை காட்டக் கொண்டல்களும் ஏறின; (இவ்வாறு கார்காலம்) உற்றது உற்றவர் உணர்ந்திலர்போலும் எனக் கூட்டுக. ச

ஓதற் பிரிவு முற்றும்

## உ௯. காவற் பிரிவு

*[உலகியல் அறங்கள் சிதையாது காத்தற்கும், நாடு காத்தற்குமாகத் தலைவன் தலைவியைப் பிரிதல்]*

### பிரிவு உணர்த்தல்

*[தலைவன், தான் காவல் காரணமாகப் பிரிந்து செல்லுதலைத் தோழிக்கு அறிவித்தல்]*

**520.** அல்லவை நீக்கி யறப்புறங் காக்கவும் ஆதுலர்கள்
சொல்லுவ கேட்டவர் துன்பந் துடைக்கவும் சூழ்கடற்பார்
எல்லையி லொன்றையொன் றின்னு செயுமிகல் வாட்டுதற்கும்
செல்லுவ தேகட னும்நாடு காவல் சிறந்தவர்க்கே.

(து - ரை.) அல்லவை - அறமல்லாதவை : தீயவை; 'அல்லவை தேய அறம்பெருகும்' - திருக்குறள். ௯௬. அறப்புறம் காக்கவும் - அறத்தைப் பாதுகாக்கவும். ஆதுலர் - வறியோர். துடைக்கவும் - நீக்கவும். பார் எல்லையில் - இவ்வுலக வரைப்பில். ஒன்றை ஒன்று - ஒருநாட்டை மற்றொரு நாடு. இன்னு செயும் இகல் வாட்டுதற்கும் - போரிட்டுத் துன்பஞ் செய்கின்ற மாறுபாட்டை அடக்குதற்கும். சிறந்தவர்க்கு - சிறந்த அரசர்க்கு, காக்கவும் துடைக்கவும் வாட்டுதற்கும் செல்லுவதே கடனும் எனக் கூட்டுக. யானும் அரசனுதலின் செல்வேன் என்பது கருத்து. க

### பிரிவு உடன்படாமை

*[தலைவன் பிரிவுக்குத் தோழி உடன்படாமை]*

**521.** பண்காவல் கொண்ட பனிமொழிச் செங்கைப் பசுங்கிளிக்கும்
கண்காவ லென்பது கண்டும்செல் வீர்கொல் கருங்கடல்சூழ்
மண்காவல் கொண்ட வடிநெடு வேல்முடி மன்னவர்க்குப்
பெண்காவல் கொள்கை பெரும்பழி போலும் பெருந்தகையே.

(து - ரை.) பண் காவல் கொண்ட பனிமொழி - இசை நிலை பெற்ற குளிர்ந்த சொல்லையும். பசுங்கிளி: தலைவி ; மொழியையும் கையையும் உடைய கிளி யென்க. உம் கண் காவல் என்பது கண்டும் - உமது கண்ணின் பார்வையே அவளுயிர்க்குக் காவலாக அமைந்துள்ளது என்பதை யறிந்தும்; நீ பிரிந்தால் தலைவி யிறப்பாளென்பது கருத்து ; செல்வீர்கொல்: செல்லலாகாது என்றபடி. வடி - கூரிய.

*பழிபோலும் என்றது குறிப்பு மொழி; பெண்ணைக் காவாமையே பழி என்றபடி; ஆதலின் நீயும் பிறகாவலைவிட்டு இவளைக் காப்பாயாக என்பது கருத்து.* **பெருந்தகையே:** *தலைவரே! செல்வீர்கொல்? மன்னவர்க்குப் பழிபோலும் எனக் கூட்டுக.*

(வே - ம்.) *பணிமொழி; என்பதும்; கண்டு சொல்வீர்சொற்; மணிநெடுவேல். இ - வி. கஅ௬.* ௨

தலைவன் பிரிவு பாங்கி தலைவிக்கு உணர்த்தல்

**522.** ஆடுங் கொடிநெடுந் தேரன்பர் நாளை யறப்புறனும்
நாடும் புரக்க நயந்தனர் போலும் நறைமதமாக்
கோடுங் குரும்பையுஞ் செவ்விள நீருங் குறித்தசெப்பும்
ஓடும் புறங்கண் டுயர்தன பாரத்தி லொல்கிடையே.

(கு - ரை.) *அன்பர் - அன்பு பொருந்திய தலைவர்; அன்பின்றிப் பிரிந்தாரென்று கருதற்க என்பது குறிப்பு. அறப்புறன் - அறநிலையம். புரக்க - காக்க. நயந்தனர் - விரும்பிச் சென்றார்.* **போலும்:** *ஒப்பில் போலியாக வந்த அசை. நறை மதமாக் கோடும் - மணம் பொருந்திய மதத்தையுடைய யானையின் கொம்பும். குரும்பை - பனையின் இளங்காய். கோடும், குரும்பையும், இளநீரும், செப்பும் ஓடுதல், கொங்கைக்கு ஒப்பாகாமையால் என்க. புறங்கண்டு உயர் - வென்று ஓங்குகின்ற. பாரத்தில் - பாரத்தால். ஒல்கு இடையே - அசைகின்ற இடையையுடைய தலைவியே! அன்பர் நயந்தனர் எனக் கூட்டுக.* ௩

தலைமகள் கூதிர்ப்பருவம் கண்டு வருந்தல்

***[தலைவன் மீண்டு வருவதாகக் குறித்துச் சென்ற கூதிர்க்காலம் வந்தும் அவன் வராமையால் தலைவி வருந்துதல்; கூதிர்க்காலம்— ஐப்பசி கார்த்திகைத் திங்கள்கள்]***

**523.** நிறைநூல் எழிலி பொழிந்துகண் மாறிய பின்னைநின்ற
குறைதூழ் புறவு குழைப்பவின் சோருங் குழந்துளிகொண்
டுறைதூறை வாடை யலைக்குமிந் நாளிங் கழிந்திலர்கொல்
நறைதூழ் மலர்க்குழ லாய்நாடு காவல் நயந்தவரே.

**(கு - ரை.)** சூல் எழிலி - **கருக்கொண்ட முகில். கண் மாறிய** பின்னை - கார்ப்பருவத்தே மழை பொழிந்து நீங்கிய பிறகு. குறை - **எஞ்சிய** நீரையுடைய முகில். புறவு குழைப்ப - **முல்லைநிலம் தளிர்க்கும்படியாக.** விண் சோரும்-**வானினின்றும் பெய்கின்ற. துளி-மழைத் துளி.** அறை சூறை வாடை அலைக்கும் - சுழன்று வீசும் வாடைக் **காற்றானது வருத்துதலையுடைய. நாள் - கூதிர்ப்பருவ நாளை. நறை - தேன். குழலாய்: தோழியே. நயந்தவர் - விரும்பிச் சென்ற தலைவர். குழலாய்! நயந்தவர், மாறிய பின்னை எழிலிக்குறை சோரும் துளி கொண்டு வாடை அலைக்கும் இந்நாளை அறிந்திலர்கொல்? எனக் கூட்டுக.** வாராமைக்குக் காரணம் என்னோ என்று வருந்தியவாறு.

(வே - ம்.) குழைபயன் சோரும்; நன்னாளிங்கு. இ-வி. க௯அ

காவற் பிரிவு முற்றும்

## உஎ. பகைதணி வினைப் பிரிவு

*[தம்முள் பகைகொண்ட இருவேந்தருடைய பகைமையைத் தணிவித்து அவரை நட்பினராக்கும்பொருட்டுத் தலைவன் தூதாகப் பிரிந்து செல்லுதல் ; இது 'தூதிற் பிரிவு' என்றும் கூறப்படும்]*

### பிரிவு உணர்த்தல்

*[தூது காரணமாகப் பிரிந்து செல்லக் கருதிய தலைவன் அதனைத் தோழிக்கு உணர்த்தித் தான் மீண்டு வருமளவும் தலைவியை ஆற்றுவிக்குமாறு கூறல்]*

**524.** மூளா அரும்பகை மூண்டிரு வேந்தர்கள் மொய்யமரில்
மாளா வகைசென்று மாற்றுதல் வேண்டி மணிவரைவேய்த்
தோளாய் பிரிந்து வருநா ளளவும் சுரும்பிமிரும்
தாளார் மலர்க்குழ லாள்வருந் தாவகை சாற்றுகவே.

(து - ரை.) மொய் அமரில் - வலிய போரில். சென்று - தூதாகச் சென்று. மாற்றுதல் - போரை யொழித்தல். மணிவரை வேய்த் தோளாய் - அழகிய மூங்கிலையொத்த தோளையுடைய தோழியே; வரை வேய் ; ஒருபொருட் பன்மொழி ; கணுவையுடைய மூங்கிலு மாம். சுரும்பு இமிரும் - வண்டுகள் ஒலிக்கின்ற. தாள் - காம்பு; குழலாள்: தலைவி. சாற்றுக - ஆறுதல் கூறுக. தோளாய்! வேந்தர்கள் மாளாவகை மாற்றுதல் வேண்டிப் பிரிந்து சென்று வருநாள் அளவும் குழலாள் வருந்தாவகை சாற்றுக எனக் கூட்டுக.

(வே - ம்.) அரும்பழி ; சுரும்பிமிர்பூங். இ - வி. கஅசு. க

### தோழி பிரிவு விலக்கல்

**525.** வேயுங் கரும்பும் விரும்பிய தோளிந்த மெல்லியலும்
ஆயும் பகைகொண் டிருக்கவைத் தோஎதிர்ந் தார்முனையில்
பாயும் புரவிப் படையிரு வேந்தர் பகைத்தவரைப்
போயுந் தணித்துப் பொருந்திடு மாறு வருந்துவதே.

(து - ரை.) வேய் - மூங்கில். வேயும் கரும்பும் விரும்பல், தோளுக்கு உவமையாகப் பொருந்தற் கென்க. கரும்பு, குங்குமக்

குழம்பால் எழுதப்பெற்றதுமாம். மெல்லியல்: தலைவி. ஆயும் பகை கொண்டு - தலைவன் வருவதாகக் குறித்த நாளை யெண்ணி யாய்ந்து, பிரிந்தமையால் அவனிடம் பகை கொண்டு. முனையில் - போர் முனையில். புரவிப்படை - குதிரைப்படைகளையுடைய. வேந்தராகிய பகைத்தவர் என்க. தணித்து - பகை தணித்து. பொருந்திடுமாறு - நட்பாகப் பொருந்துமாறு. மெல்லியலைப் பகைகொண்டிருக்க வைத்தோ பகைத்தவரைப் பொருந்திடுமாறு போயும் வருந்துவது! எனக் கூட்டுக. ஈண்டு இல்லாத பகையை மெல்லியலுக் காக்கி, அப்பகை தணிக்க ஆண்டுச் சென்று வருந்துவதேன்? என்பது கருத்து.

(வே - ம்.) துணிந்து. இ - வி. கஅசு. உ

## பாங்கி தலைவிக்கு உணர்த்தல்

*[தலைவன் பிரிந்து சென்றமையை உணர்த்தல்]*

**526.** பரிகெழு தானை யிகலிரு வேந்தர் பகைதணிப்ப
வரிகழ லாண்மைநம் மன்னர்சென் றூர்கொல் மணியருவி
சொரிமழை தாழ்வரைத் தோகையஞ் சாயல் துடிமருங்குல்
புரிகுழல் வாணகைப் பூண்முலை நாண்மலர்ப் பொற்கொடியே.

(து - ரை.) பரிகெழு தானை - குதிரைகளோடுங்கூடிய படைகளையுடைய. இகல்-மாறுபட்ட. வரி கழல்-கட்டமைந்த வீரக்கழலை யணிந்த. மன்னர்: தலைவர். மணி-மணிகளோடு; மணி - அழகுமாம். மழை தாழ்வரை-முகில் படிகின்ற மலையிலுள்ள, தோகை அம் சாயல்-மயில்போன்ற சாயலையும், துடி மருங்குல் - உடுக்கையையொத்த இடுப்பினையும், புரிகுழல் - நுனி சுருண்ட கூந்தலையும், வாள் நகை-ஒளிபொருந்திய பற்களையும். பூண் - அணிகலம். நாள்மலர்ப் பொற்கொடியே - அன்றலர்ந்த பூக்களையுடைய அழகிய கொடிபோன்ற தலைவியே. சாயல், மருங்குல், குழல், நகை, முலை இவற்றையுடைய கொடியே! நம்மன்னர் பகை தணிப்பச் சென்றார் எனக் கூட்டுக. கொல்: அசை. 'ஒருவீர் ஒருவீர் மிக்காரை' ஒறுப்பல்யான், என்று பாண்டியன் மாகீர்த்திபோல் பிரிதல் பகைதணி வினை.

(வே - ம்.) தோகையஞ் சாரல். ௩

### முன்பனிப் பருவம் கண்டு இரங்கல்

***[தலைவன் மீண்டு வருவதாகக் குறித்துச் சென்ற முன்பனிப் பருவம் வந்தும் அவன் வாராமையால் தலைவி வருந்துதல்; முன்பனிப் பருவம்—மார்கழி தைத்திங்கள்கள்]***

**527.** பருந்தார் சுடரிலை வேற்படை வேந்தர் பகைதணிப்பப்
பிரிந்தார் வருகிலர் பெய்வளை யாய்பிர சம்புலர்ந்து
கருந்தா மரையெனச் செந்தா மரைகரு கப்பெருக
வருந்தார் வருந்துற மஞ்சுதெற் கோட வரும்பனியே.

(து - ரை.) பருந்து ஆர் - பருந்துகள் நிறைந்த; அது நிறைதல், உணவு கிடைக்குமென்று. சுடர் இலைவேல் - ஒளிபொருந்திய இலை வடிவமாகச் செய்த வேல். பிரிந்தார் - பிரிந்து சென்ற தலைவர். பெய் வளையாய் - இடப்பட்ட வளையல்களையுடைய தோழியே. பிரசம் புலர்ந்து - தேன் வற்றி. என - என்று சொல்லும் படியாக. பெருகக் கருக - மிகவும் கருக; பனிக்காலத்தில் தாமரை மலர் கருகுதல் இயல்பு; துன்பத்தால் தலைவனைப் பிரிந்த மகளிர் முகம் கருக என்னும் பொருளுங் கொள்க. வருந்தார் - இதற்குமுன் வருந்தாத மகளிரும். மஞ்சு - பனிமப்பு, தெற்கு நோக்கிச் செல்லல். அக்கால இயல்பு; 'மங்குல் மாமழை தென்புலம் படரும் - பனியிருங் கங்குல்' - அகம் உசு. பனி வரும் - பனிக்காலம் வாரா நின்றது பெய் வளையாய்! புலர்ந்து எனக் கருக வருந்துற ஓட பனி வரும்; (இன்னும்) பிரிந்தார் வருகிலர் எனக் கூட்டுக. யான் வருந்துகின் றேன் என்பது குறிப்பு.

(வே - ம்,) பகை வேந்தர்; புலந்து; வருந்துர மஞ்சுதற்கோடி. இ - வி. கஅசு. ௬

**பகைதணி வினைப் பிரிவு முற்றும்**

## உஅ. உற்றுழிப் பிரிவு

*[தன் நண்பனுக்குத் துன்பம் நேர்ந்தவிடத்து, அவனுக்குத் துணை செய்யும்பொருட்டுத் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்லுதல்; உற்றுழி—துன்பம் உற்றவிடத்து; உற்றுழி உதவியும்'— புறம். கஅங; 'உற்றுழித் தீர்வார்'—மூதுரை கஎ; இது 'துணைவயிற் பிரிவு' எனவும் வழங்கப்பெறும்]*

### பிரிவு உணர்த்தல்

*[நட்பரசனுக்குத் துணைசெய்யும்பொருட்டுப் பிரிந்து செல்லக் கருதிய தலைவன், அதனைத் தோழிக்குணர்த்தித் தான் மீண்டு வருமளவும் தலைவியை ஆற்றுவிக்குமாறு கூறல்]*

**528.** காந்துஞ் சினத்துப் புகர்முக வெங்கர டக்களிற்று
வேந்தன் பகைவினை முன்செல்லு மால்பின் மிகுசெருவில்
சேர்ந்தங் குதவி செயச்செல்ல வேண்டுமின் செய்வளையாய்
சாந்தம் புரிகுழ லாள்வருந் தாவகை சாற்றுகவே.

(கு - ரை.) காந்தும் - வெம்புகின்ற. புகர் - செம்புள்ளிகள் பொருந்திய. கரடக் களிற்று - மதயானைகளையுடைய; கரடம்-மதம். பகைவினை முன் செல்லும் - போர்முனை நோக்கிச் செல்லாநிற்கும்; பகைவினை - போர். ஆல் - ஆதலால்; அசையுமாம். செருவில் - போரில். மின் செய் - ஒளி செய்கின்ற. வளையாய்: தோழியே. சாந்தம் புரிகுழலாள் - மயிர்ச்சாந்து பூசப்பட்ட நுனிசுருண்ட கூந்தலையுடைய தலைவி. இச்செய்யுளின் ஈற்றடி, ருஉ௪-ஆம் செய்யுளின் ஈற்றடியோடு ஒத்திருத்தல் காண்க. வளையாய்! வேந்தன் செல்லும்; ஆதலால் செல்லவேண்டும்; சாற்றுக எனக் கூட்டுக. க

### பிரிவு விலக்கல்

*[தோழி தலைவனை விலக்குதல்]*

**529.** கன்னற் சிலைமதன் காந்துஞ் செருவிற் கலங்குகின்ற
இன்னற் குதவிசெய் தாலென்ன தாகு மிருஞ்செருவில்
மன்னர்க் குதவி செயப்பிரி யும்வரி யுங்கழற்கால்
செந்நெற் பழனக் கழனிநல் லூரஎஞ் சேயிழைக்கே.

(கு - ரை.) கன்னல் சிலை மதன் - கரும்பு வில்லையுடைய மன்மதன். காந்தும் செருவில் - வெம்மைமிகும் போரில். இன்னல்- துன்பம். என்னது ஆகும் - என்ன தவறாய்விடும்; பெரிதும் நன்மையுண்டு என்றபடி. இருஞ்செருவில் - பெரிய போரில். மன்னர் - நட்பரசர். கழல் வரியும் கால் - வீரக்கழலை யணிந்த காலை யுடைய, ஊர; வரிதல் - கட்டுதல். செந்நெல் பழனக் கழனி என்பது ஊர்க்கடை; பழனம் - மருதநிலத்தமைந்த. சேயிழை : தலைவி. உதவி செயப் பிரியும் ஊர! மதன் செருவில் கலங்குகின்ற சேயிழையின் இன்னற்கு உதவி செய்தால் என்னதாகும்? எனக்கூட்டுக. வீட்டுப் போர்க்கு உதவாது வெளிப்போர்க்கு உதவச் செல்வது என்? என்று பிரிவு விலக்கியவாறு.

(வே - ம்.) காதும்; பிரியும் மவர் வான்றொடு காச்: இ - வி. ௧௮௬. ௨

தலைவிக்கு உரைத்தல்

*[தலைவன் பிரிவைத் தோழி தலைவிக்கு உரைத்தல்]*

**530.** வகையுற்ற தார்புனை மன்னர்க்கு மன்னர் மறங்கெழுவான்
பகையுற் றுழியுத விக்கிசைந் தாரணி பைங்குரும்பைத்
தகையுற்று வம்பு தருக்கியம் போருகஞ் சாய்த்தறவே
மிகையுற் றெழுந்தன பாரம்பொ ருவிடை மெல்லியலே.

(கு - ரை.) வகையுற்ற - அழகு பொருந்திய. தார் புனை - மாலையை யணிந்த. மன்னர்க்கு-நட்பரசர்க்கு. மன்னர் - நம் தலைவர். மறம் கெழு வான் பகை உற்றுழி - வீரமிக்க பெரும்போர் உற்ற விடத்து. குரும்பைத் தகை உற்று - தென்னை, பனங்குரும்பைகளின் அழகைப் பொருந்தி. வம்பு தருக்கி - கச்சுடன் பொருது. அம்போ ருகம் சாய்த்து - தாமரை முகையை வென்று. அறவே மிகையுற்று - மிகவும் பெருத்து. இடை மெல்லியலே - இடுப்பினையுடைய தலைவியே. உற்றுத் தருக்கிச் சாய்த்து உற்றெழும் தனமென இயைக்க. மெல்லியலே! மன்னர்க்குப் பகையுற்றுழி மன்னர் உதவிக்கு இசைந்து சென்றார் எனக் கூட்டுக. ௩

### பாணனைப் பாசறை விடுத்தல்

*[தலைவி, தன் துன்பத்தைச் சொல்லுமாறு பாணனைத் தலைவனிருக்கும் பாசறைக்கு அனுப்புதல்; பாசறை—போர்புரியும் வீரர் தங்குதற் கிட்ட பாடி வீடு]*

531. தகைமெலி யக்கொங்கை தங்குபைம் பொன்னும்வெஞ் சாயகப்பூத்
தொகைமெலி யப்படுந் துன்பமுஞ் சொல்க தொழுதிறைஞ்சாப்
பகைமெலி யத்தங்கு பாசறை மேற்செல்லும் பாணமுல்லை
முகைமலி யப்புனை தொங்கலெங் கேள்வர்தம் முன்புசென்றே.

(கு - ரை.) தகை மெலிய - அழகு கெடுமாறு. கொங்கை தங்கு- முலைமீது பொருந்திய. பொன் - பொன்னிறமான பசலை. வெம் பூச்சாயகம் தொகை-மன்மதனுடைய கொடிய பூவம்புகளின் கூட்டம்; சாயகம் - அம்பு. மெலியப்படும் - யான் வருந்தத் தைக்கின்ற. இறைஞ்சாப் பகை மெலிய - வணங்காத பகைவர் வருந்த. பாசறை மேல் - பாசறையிடத்து. மலியப் புனை தொங்கல் - நிறைய வைத்துத் தொடுத்த மாலையை யணிந்த. கேள்வர்; தலைவர். பாசறைமேற் செல்லும்பாண! (அங்குத்) தங்கும் கேள்வர் முன்பு சென்று பொன்னும் துன்பமும் சொல்க எனக் கூட்டுக.

(வே . ம்.) தாங்கு; சொல்லு; இறைஞ்ச; செல்லு பாணன்; அம் கேள்வன்றன். இ - வி. ௧௮௯. ௪

### பாணனைத் தலைவன் கேட்டல் .

*[பாசறையிடத்துச் சென்ற பாணனை நோக்கி, 'தலைவி என்ன கூறி யனுப்பினாள்?' என்று தலைவன் கேட்டல்]*

532. தேதா வெனமுரல் செவ்வழி யாழ்கொண்டு சேரிவிட்டுப்
போதாத பாணரெப் போதுவந் தீர்புல வுண்பருந்து
மீதாடு பாசறை வாய்வினை யேனுக்கு வேனெடுங்கண்
தூதார் வனமுலைத் தோகையென் னேநின்று சொல்லியதே.

(கு - ரை.) தேதா : இசைக் குறிப்பு ; 'வண்டு தேதேயெனுந் தில்லையான்' - திருக். ௮௨. முரல் - இசைக்கின்ற. செவ்வழி - ஒருவகைப் பண். போதாத - வேறெங்கும் செல்லாத. பாணர் - பாணரே ; விளி ; பன்மை உயர்த்தற்பொருட்டு ; உடன்வந்தாரைச் சேர்த்து விளித்ததூஉமாம். புலவு - இறைச்சி. மீது ஆடு - மேலே

பறக்கின்ற. வினையேன்: தலைவன். சூது ஆர் - சூதாடு கருவியை யொத்த. தோகை: தலைவி. பாணர்! பாசறைவாய் எப்போது வந்தீர்? தோகை வினையேனுக்குச் சொல்லியது என்? எனக் கூட்டுக.

(வே - ம்.) சேதாவனமுலை ; புலவும் பருந்து. இ - வி. கஅகூ.

### பாணன் கழறல்

*[கழறல்—தலைவனுக்குக் கூறுதல்]*

**533.** திருவடி வீழ்ந்தடி யேன்திரு வேவிடை யென்றுசெப்பப்
பருவர லெம்பெரு மாட்டி பகர்ந்தது பற்றலரைப்
பொருதிகல் வென்ற புனைமணித் தேரும் புரவலரும்
வருவது கண்டிட யாம்பெற்றி லேமென்னும் வாசகமே.

(து - ரை.) திருவடி - தலைவியின் காலில். அடியேன்: பாணன். திருவே: பாணன் தலைவியை விளித்தது. விடை - தலைவனிடம் சென்று வருதற்கு விடை தருக. பருவரல் - துன்பத்தையுடைய. பெருமாட்டி - தலைவி. பகர்ந்தது - கூறியது. பற்றலரை - பகைவரை. இகல் - போரை. மணி புனை - மணிகளிழைத்த. புரவலர்- தலைவர். வாசகம் - சொல். அடியேன் அடிவீழ்ந்து செப்ப, 'புரவலர் வருவதை யாம் கண்டிடப் பெற்றிலேம்' என்னும் வாசகமே, பெருமாட்டி பகர்ந்தது எனக் கூட்டுக. நீ இன்னம் திரும்பி வரவில்லையே என்று தலைவி வருந்துகின்றாள்என்றவாறு.

(வே - ம்.) கண்டு சொலப் பெற்றிலேம். இ - வி. கஅசு. சு

### தலைவன் பாசறைப் புலம்பல்

***[தலைவியின் துன்பநிலையைக் கேட்ட தலைவன், 'இனி மீண்டு சென்று அவளைக் காண்டல் எந்நாளோ?' என்று வருந்தல்]***

**534.** சாந்தங் கமழுந் தடமுலை யாணின்ற தன்மையது
வேந்தன் பகைமுற்றி மீளலெந் நாள்வெயில் போயொளித்துக்
காந்துங் கடுங்கன லும்பொடி போர்க்குங் கடைப்பனிநாள்
போந்திங் கிருந்துவிட் டேனென்ன பாவம் புகல்வதுவே.

(து - ரை.) தட - பெரிய. முலையாள்: தலைவி. 'அது' என்றது, பாணன் கூறியதை உட்கொண்டு. வேந்தன் - நட்பரசன். முற்றி

முடித்து ; அழித்தென்றபடி. வெயில் - கதிரவன். ஒளித்து-ஒளிப்ப; எச்சத் திரிபு. காந்தும் - வெம்மைமிகும். கனலும் பொடி போர்க்கும்- (குளிருக் காற்றாது) தீயும் நீறாகிய போர்வையைப் போர்த்துக் கொள்ளும் ; கதிரவன் மறைதலும், நெருப்பு நீறு பூத்தலும் இயல்பா யிருக்க, அவற்றைப் பனிக்கொடுமைக் காற்றாது நிகழ்ந்தனவாகக் கூறியது தற்குறிப்பேற்றவணி. கடைப்பனி நாள் - பின்பனிக் காலத்தில் : அது மாசி, பங்குனித் திங்கள். போந்து - வந்து. 'என்ன பாவம் புகல்வது' என்பது, ஒருலக வழக்குச் சொற்றொடர்; இரக் கத்தின்கண் வருவது. முலையாள் தன்மை அது; ஒளிப்பப் போர்க்கும் பனிநாள் இங்குப் போந்து இருந்துவிட்டேன்! மீளல் எந்நாள்! என்ன பாவம் புகல்வது எனக் கூட்டுக.

(வே - ம்.) தன்மை இது; மீள எண்ணேன்; போந்தும். இ - வி. கஅசு. எ

உருவெளி

[வினைமுற்றி மீளுந் தலைவன், இடைவழியில் தலைவியின் உருவெளித் தோற்றங் கண்டு, அதனைத் தேர்ப்பாகனொடு கூறல்]

535. வரிதருங் காஞ்சி மணிநெடுந் தேரும் வயங்கெழில்வார்
பரியும் இருகட் பகடுமை வாட்படை யுங்குவிந்து
திரிய முனிந்தது தேர்வல வாகல வாச்செருவிட்
டரிய முனிந்திறை கொண்டகல் காலையி லெத்திக்குமே.

(கு - ரை.) முதலிரண்டடி தலைவிக்கும், நால்வகைப் படைக்கும் இரட்டுற மொழிதல்; தலைவிமேற் செல்லுங்கால் :—வரிதரும் - கட்டப்பட்ட. காஞ்சி - இடையணி ; எண்கோவைகளைக் கொண்டது. மணி - அழகிய. தேர் - தேர்த்தட்டையொத்த அல்குல் : உவமவாகு பெயர். வயங்கு எழில் வார் பரியும் - விளங்குகின்ற அழகிய கச்சினை அறுக்கும்; வார் - கச்சு: பரிதல் - அறுத்தல். இரு கண் பகடும் - யானை மத்தகம் போன்ற இரு கொங்கைகளும் ; பகடு-யானை ; அது முதலாகு பெயராய் மத்தகத்தை யுணர்த்தப், பின் அஃது உவமவாகு பெயராய்க் கொங்கையை உணர்த்தி இருமடியாகு பெயராய் நின்றது; கண்-முலைக்காம்பு. மை வாள் படை-மைதீட்டிய வாட்படை போன்ற கண்.

இனி, நால்வகைப் படைமேற் செல்லுங்கால்:—வரிதரும் அழகிய, தேர். காஞ்சி : புறத்திணைகளுள் ஒன்று; அது காஞ்சிப்பூச் சூடிப் பகைவரை எதிர்த்துப் பொருதல்; 'உட்காது எதிரூன்றல் காஞ்சி' - (பன்னிரு.) காஞ்சி மணி நெடுந் தேர் - காஞ்சிப்போர் செய் தற்குரிய மணிகள் கட்டப்பட்ட நீண்ட தேர். வார் பரி - கடிவாளம் பூண்ட குதிரை. இரு கண் பகடு - இரண்டு விழிகளையுடைய யானை. மை - குருதிக்கறை படிந்த. வாள் படை - வாள் தாங்கிய காலாட் படைகள்.

குவிந்து - ஒருங்கு சேர்ந்து. திரிய முனிந்தது - யான் பின்னிடும்படியாக வெகுண்டது. வலவா - தேர்ப்பாகனே. செரு இட்டு- பொருது. இரிய - பகைவர் அஞ்சியோட. முனிந்து - சினந்து. இறை கொண்டு - (பாசறையில்) தங்கி; கப்பங்கொண்டு எனலுமாம். அகல் காலையில் - (பாசறையை விட்டு) நீங்கி வரும்போது. வலவா ! முனிந்து இரியச் செருவிட்டு இறை கொண்டு (பின்) அகல்காலையில் எத்திக்கிலும் தேரும், பரியும், பகடும், படையும் குவிந்து முனிந்தது எனக் கூட்டுக.

(வே - ம்.) வரிதரு; வயங்கெழுவான்; இருங்கண்; அகல்வார் செரு. இ - வி. கஅரு. அ

### தோழி நிமித்தம் கூறல்

**[தலைவன் வருதற்கு உரிய நற்குறிகளைக் கண்ட தோழி அதனைத் தலைவிக்குக் கூறுதல்]**

**536.** அரவிசைக் குந்திரு வல்குனல் லாயடை யார்மடியப்
பொரவிசைக் கும்பரி பூண்டபொற் றேர்நம் புரவலர்தாம்
வரவிசைக் கும்பல்லி வாமந் துடிக்கும் வரிநெடுங்கண்
இரவிசைக் குங்குழ லோடிள வாடையின் றென்செய்யுமே.

(து - ரை.) அரவு இசைக்கும் - பாம்பின் படத்தை யொக்கும். திரு அல்குல் நல்லாய் - அழகிய அல்குலையுடைய தலைவியே; அல்குல் - பெண் குறி. அடையார் மடிப - பகைவர் மாய. பொர இசைக்கும் பரி - பொருதற்குப் பொருந்தும் குதிரை. புரவலர் - தலைவர். வரவு இசைக்கும் - வருதலைக் கூறும். வாமம் கண் - இடப்பக்கத்துக் கண். வரி - செவ்வரி. ஆடவர்க்கு வலக்கண்ணும்,

பெண்டிர்க்கு இடக்கண்ணும் துடித்தல் நற்குறி என்பர் பெரியோர். இரவு இசைக்கும் குழல் - இரவுப் பொழுதில் ஒலிக்கும் புல்லாங் குழல். வாடை - வாடைக் காற்று. குழலோசையும், வாடையும் தலைவனைப் பிரிந்த மகளிர்க்கே துன்பஞ் செய்யுமாகலின், தான் கண்ட நற்குறிகளால் தலைவன் வருதல் ஒருதலையெனத் துணிந்த தோழி 'குழலோடு வாடை என் செய்யும்' என்றாளென்க. நல்லாய்! பல்லி, புரவலர் வரவு இசைக்கும்; (அதுவுமன்றி) வாமக்கண் துடிக் கும்; (ஆதலின்) குழலோடு வாடை இன்று (நின்னை) என் செய்யும்? எனக் கூட்டுக. 'பல்லியும் பாங்கொத்து இசைத்தன - நல்லெழில் உண்கணும் ஆடுமா லிடனே' - கலி. கஉ.

(வே - ம்.) பூண்டு. இ - வி. கஅசு. க

### வினைமுற்றி மீண்டது

*[தலைவன் வினைமுற்றி மீண்டமையைத் தோழி தலைவிக்கு உணர்த்தல்]*

537. புங்கம் படவண் டிமிர்தருங் கோதைப் புரிகுழலாய்
அங்கம் படர்கொண் டழிவதென் னேயினி யன்றினரைப்
பங்கம் படவென்ற பன்மணித் தேர்வெம் பரிகடவிச்
சங்கம் படக முழங்கவந் தார்நந் தலைவரின்றே.

(கு - ரை.) புங்கம்பட - கூட்டமாக. இமிர்தரும் - ஒலிக்கும். கோதை-மாலையை யணிந்த. குழலாய்: தலைவியே. அங்கம் - உடம்பு. படர் - துன்பம். அன்றினர் - பகைவர். பங்கம்பட - கெடும்படி யாக. வெம்பரி கடவி - விரைவாகச் செல்லும் குதிரையைச் செலுத்தி. படகம் - வெற்றி முரசு. குழலாய்! அன்றினரை வென்ற தலைவர் கடவி முழங்க இன்று வந்தார்; இனி (நீ) படர்கொண்டு அங்கம் அழிவது என்? எனக் கூட்டுக.

(வே - ம்.) இமிர் நறும்; இனியாடினரை. இ - வி. கசுசு. க0

### தலைவன் வந்துழித் தலைவி மகிழ்ச்சி

*[தலைவன் வருகின்றமையைக் கண்ட தலைவி மகிழ்ந்து கூறுதல்]*

538. பரியுங் கரியும் பரிநெடுந் தேரும் படைகவிந்து
விரியுங் கடலன்ன தானையும் வேந்தும்வெம் போர்கடந்து
வரியுங் கழல்முடி மன்னர்நின் றேத்த வரும்பரிசு
தெரியுந் தெரியிழை யிர்காண வாருமிச் சேணிலத்தே.

(கு - ரை.) பரி - குதிரை. கரி - யானை. படை கவிந்து - காலாட் படைகளும் சூழ்ந்து; படைக்கலங்களுமாம். தானையும் நால்வகைப் படைகளும். வேந்து: தலைவன். கடந்து - வென்று. வரியும் கழல் - கட்டப்பட்ட வீரக்கழலையும், முடியையும் அணிந்த. ஏத்த - புகழ. வரும் பரிசு - வருகின்ற தன்மை. தெரியிழையீர்: தோழிகளே. சேண் நிலம் - மேட்டிடம்; தூரத்தில் வருவாரை உயரமான இடத்திலிருந்து பார்த்தால் தெரியுமாதலின் 'சேணிலத்து வாரும்' என்றாள்; சேண் - சேய்மையுமாம். தெரியிழையீர்! கடந்து ஏத்த வேந்தும் தானையும் வரும் பரிசு காண இச்சேணிலத்து வாரும் எனக் கூட்டுக. சேண் - சேய்மையெனக் கொள்ளின், வேந்தும் தானையும் சேணிலத்து வரும் பரிசு காண வாரும் என இயையும்.

(வே - ம்.) துறை: தலைவி கூற்று; படை கவின்று; மன்னன் பொற்றேரில். இ - வி. கஅகூ. கக

வலம்புரி வாழ்த்து

*[தலைவனது சங்கோசையைக் கேட்ட தலைவி அதனை வாழ்த்துதல்]*

**539.** மேலோட நின்று விரைகின்ற ஆவிக்கும் பாவிவிழிச்
சேலோடு நீர்க்குந் தெருமந்த நெஞ்சிற்குஞ் செஞ்சடையோன்
காலோ குறுமுனி கையோ மடுவின் கரையில்வந்த
மாலோ இறைவர் மணிநெடுந் தேரில் வலம்புரியே.

(கு - ரை.) மேல் ஓட - உடம்பை விட்டு மேல் நோக்கி ஓடு தற்கு; ஆவி நுண்பொருள் ஆதலின் மேல் நோக்கி ஓட என்றான்; ஆவி - உயிர்; அஃது ஓடல், பிரிவாற்றாமையாலென்க. விழிச்சேல்: உருவகம்; சேல் ஓடு நீர் - கண்ணீர். நீரினின்றும் சேல் ஓடலன்றிச் சேலினின்றும் நீர் ஓடுமென்றது ஒரு நயம்; 'நீர், அடக்கும் கயல்' - (உ0) என்று முன்னும் வந்தமை காண்க. தெருமந்த - சுழன்ற. செஞ்சடையோன் - சிவபெருமான். குறு முனி - அகத்திய முனிவர். கரையில் வந்த மால் - முதலையால் பற்றப்பட்ட யானையரசைக் [கஜேந்திரன்] காத்தற்கு மடுக்கரையில் வந்த திருமால். இறைவர் வலம்புரியானது; ஆவிக்குக் காலோ, நீர்க்குக் கையோ, நெஞ்சிற்கு மாலோ என நிரனிறையாகக் கூட்டுக; இது நிரனிறையணி. சிவ பெருமான் கால், காலனை உதைத்து மார்க்கண்டன் ஆவியைக் காத்த

மையால், 'ஆவிக்குக் காலோ' என்றும், அகத்தியன் கை, கடல் நீரை எல்லாம் உழுந்தளவாக அடக்கி நின்றமையால், 'நீர்க்குக் கையோ' என்றும், திருமால், யானையரசின் நெஞ்சத் தெருமரலை நீக்கியமையால், 'நெஞ்சிற்கு மாலோ' என்றுங் கூறினாள். இறைவர் - தலைவர். வலம்புரி - ஒருவகைச் சிறந்த சங்கு. சங்கொலி கேட்ட தலைவிக்கு ஆவி நிலைத்து, நீரடங்கி, தெருமரல் ஒழிந்தது என்பது கருத்து. கஉ

உற்றுழிப் பிரிவு முற்றும்

## உசு. பொருள்வயிற் பிரிவு

*[பொருள் தேடுங் காரணமாகத் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்லுதல்]*

### பிரிவு உணர்த்தல்

*[பொருள் தேடுங் காரணமாகப் பிரிந்து செல்லக் கருதிய தலைவன், அப்பொருளின் சிறப்பை அறிவிக்கு முகத்தான் தன் பிரிவை உணர்த்தல்]*

**540.** அருள்கொண் டியற்று மறமும் அறநெறி யாய்ந்தமென்பூச்
சுருள்கொண்ட கோதையர் தோள்புண ரின்பமுந் தூழ்சுரும்பு
மருள்கொண்டு பாடு மதுமலர்ச் சோலை மயிலனையாய்
பொருள்கொண் டொழியமுற் றுதென்று ஞாலம் புகலுமின்றே.

(கு - ரை.) கோதையர் - மகளிர்; அவர் தோளை அறநெறியில் புணர்தலாவது, மணஞ்செய்து மருவல்; இதனால் பொதுமகளிரையும், பிறர்க்குரிய மகளிரையும் புணர்தல் அறமும், இன்பமும் ஆகாதென்பது பெற்றாம். சுரும்பு - வண்டு. மருள் - மயக்கம்; இது தேனுண்டமையால் உண்டானது. மது - தேன். மயிலனையாய்: தலைவன் பாங்கியை விளித்தது. கொண்டொழிய - பெற்றாலன்றி. முற்றாது - நிறைவுறாது. ஞாலம் புகலும் - உயர்ந்தோர் கூறுவர். மயிலனையாய்! அறமும், இன்பமும் பொருள் கொண்டொழிய முற்றாதென்று ஞாலம் புகலும் எனக் கூட்டுக. ஆதலின் யானும் அப்பொருளீட்டற்குச் செல்லுவேன் என்பது கருத்து. அறனீனும் இன்பமு மீனும் திறனறிந்து - தீதின்றி வந்த பொருள்' - (குறள். எருச.) 'வடுவிலா வையத்து மன்னிய மூன்றில், நடுவண தெய்த இருதலையும் எய்தும்'-(நாலடி. ககச.)



### தோழி செலவு அழுங்குவித்தல்

*[புதல்வனைவிடச் சிறந்த பொருளொன்று தேடுதற்கு இல்லையெனக் கூறித் தோழி தலைவன் செலவைத் தடுத்தல்]*

**541.** சேலுங் கயலு மனையகண் ணாள்சிறு வன்சதங்கைக்
காலுந் தளர்நடை யுங்கையும் வையமுங் கன்னலுந்தீம்
பாலுங் கலந்த பவளத் தமுதுந் தவளமுத்தும்
போலும் பொருட்பிரி வும்முள வோநம் புரவலனே.

(த - ரை.) கண்ணாள்: தலைவியினுடைய. சிறுவன் - புதல்வன். வையம் - சிறு தேர். கன்னல் - கருப்பஞ் சாறு. கலந்த-கன்னலும் பாலும்போன்ற சுவை கலந்த. பவளத்து அமுது - பவளம்போன்ற வாயின்கண் ஊறும் நீர். தவளமுத்து - வெண்முத்தையொத்த பற்கள்; தவளம் - வெண்மை. போலும் பொருள் பிரிவு - இவற்றையொத்த பொருள்களைத் தேடுதற்குரிய பிரிவு. இவை தேடினும் கிடையா ஆதலின் இவற்றைப் பிரிந்து செல்லற்க என்பது கருத்து. நீ தேடக் கருதும் பொருளினும் புதல்வனே சிறந்த பொருள் என்றபடி. 'தம்பொருள் என்பதம் மக்கள்' - (குறள். சுங.) புரவலனே - தலைவனே! கால் முதலியவை போலும் பொருட் பிரிவு உளவோ? எனக் கூட்டுக. உ

அமையாமை கூறிச் செலவு அழுங்குவித்தல்

*[தலைவன் தலைவியைப் பிரியாதிருத்தலின் இன்றியமையாமையைத் தோழி அவனுக்கு எடுத்துக் கூறி அவன் பிரிந்து செல்லா வண்ணம் தடுத்தல்]*

542. மன்னிய செல்வமு மாரு இளமையும் வேறகலா
இன்னுயி ரும்பெறி லேதமுண் டோஇகல் வேனெடுங்கண்
மின்னிய நுண்ணிடை மென்னடை யன்ன மெலியவந்திங்கு
உன்னிய வொண்பொருள் மேல்வள்ள லேயிங் கொருப்பட்டதே.

(த - ரை.) மன்னிய - நிலைபெற்ற. மாரு - நீங்காத. வேறு அகலா - உடம்பினின்றும் வேறுபட்டுப் பிரியாத; 'காகத் திருகண்ணிற் கொன்றே மணிகலந் தாங்கிருவர், ஆகத்துள் ஓருயிரே' பெற்றிருப்பவராதலின், 'தலைவியி னுயிரினின்றும் வேறுபட்டுப் பிரியாத' என்றுரைப்பினுமாம். ஏதம் - தவறு. செல்வம், இளமை, உயிர் என்பன மூன்றும் நிலையற்றவை என்பது கருத்து. 'இளமையும் நில்லா யாக்கையும் நில்லா, வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா' என்பது மணிமேகலை. (உஉ. கநடு-சு) இகல்வேல் - போர் புரியும் வேலையொத்த. மின்னிய - மின்னலைப்போன்று ஒளிர்கின்ற. கண்ணையும், இடையையும், நடையையுமுடைய அன்ன மென்க; அன்னம்: தலைவி. உன்னிய - கருதிய. வள்ளலே: தலைவனே. ஒருப்பட்டது - பிரிந்து செல்ல உடன்பட்டது. வள்ளலே! மன்னிய செல்வம் முதலியவற்றைப் பெறில் மெலிய

ஒருப்பட்டதில் ஏதமுண்டோ? எனக் கூட்டுக. நீ பிரியில், இன்பம் நுகர்தற்குரிய இளமை வீணே கழியும்; தலைவியின் உயிரும் நீங்கும்; நீ தேடிச் செல்லும் செல்வமும் நிலையுடையதன்று; ஆதலின் இவளைப் பிரிதல் ஏதமுடைத்தென்பது கருத்தாகலின் இச்செய்யுள், உடன்படல்போல் விலக்கி நின்ற முன்ன விலக்கணியாம்.

(வே - ம்.) உன்னியல். க

## தலைவிக்குப் பிரிவு உணர்த்தல்

*[தலைவன் பொருள் காரணமாகப் பிரிந்து செல்வதைத் தோழி தலைவிக்கு உணர்த்தல்]*

**543.** படைத்தார் படைத்த பொருளால் முயன்ற பயனுலகில்
கிடைத்தா ரவரவ ரென்பது கேட்டுமுன் கேடில்செல்வம்
உடைத்தாய அன்பின ரொண்பொருள் தேடி யுதவலுள்ளத்
தடைத்தா ரணிவளை யாயடை யாத அகன்புலத்தே.

(கு - ரை.) படைத்தார் - பொருள் படைத்தவர்; படைத்தா ராகிய அவரவர் என்க. முயன்ற பயன் - அடையக் கருதி முயன்ற பயனை. கிடைத்தார் - கிடைக்கப்பெற்றார். 'பொருளானு மெல்லாம்' - (குறள். ௧00௨.) என்பது - என்று உலகினர் கூறும் மொழியை. கேடு இல் செல்வம் - கெடுதலில்லாத பொருள்; என்றது கல்வியை. 'கேடில் விழுச்செல்வம் கல்வி' - என்பது (திருக்குறள், ௪00.) அன்பினர்: தலைவர். பொருள் செய்தல் ஈதற்கே ('ஈதற்குச் செய்க பொருளை' - கடுகம்) யாதலின், 'பொருள் தேடி உதவல் உள்ளத்து அடைத்தார்' என்றார். உதவல் - வறியார்க் கீதல். உள்ளத்து அடைத்தல் - கருதல். அணிவளையாய் - தலைவியே. அடையாத - செல்லவொண்ணாத. அகன் புலத்தே - பரந்த வேற்று நாட்டிடத்தே. அணிவளையாய்! அன்பினர் கேட்டுப் புலத்துப் பொருள் தேடி உதவலை உள்ளத்து அடைத்தார் எனக் கூட்டுக. உ

## தலைவி நிலைகூறி விடுத்தல்

*[தலைவியின் துன்ப நிலையைத் தோழி தலைவனுக்குக் குறிப்பா லுணர்த்தி அவனைப் போக விடுதல்]*

**544.** இனவா ரணந்திரி வெஞ்சுரம் போக இரும்பொருட்கு
நினைவா கினுமமை விலக்குநி லேம்செல்லு நீள்புனத்து
மனவா ரகலல்குல் வல்லியை நீர்வரு வார்சிலரை
வினவா தொழியும் வினவின்முற் றுது விளையுமக்கே.

(து - ரை.) இன வாரணம் திரி - கூட்டமான யானைகள் திரிகின்ற. வெஞ்சுரம் - கொடிய பாலை வனத்தில். இரு - பெரிய. மனவு ஆர் அகல் அல்குல் வல்லியை - மணிக்கோவையாகிய இடையணி பொருந்திய அகன்ற அல்குலையுடைய தலைவியின் நிலைமையை; மனவு - மணி: அது சினையாகு பெயராய் இடையணிக்காயிற்று. முற்றுது - முடிவு போகாது. வினை - பொருள் தேடும் வினை. (தலைவரே!) பொருட்குப் போக நினைவாகில் விலக்குகிலேம்; நீர் புனத்து வருவாரை வல்லியை(ப்பற்றி) வினவாது ஒழியும்; வினவின் உமக்கு வினை முற்றுது எனக் கூட்டுக. வருவாரை வினவின் அவரால் கேட்கப்படுவது தலைவியின் இறப்பேயாதலின் 'வினை முற்றுது' என்றாள். ௫

இரவு நீட்டம் கூறிச் செலவு அழுங்குவித்தல்

*['நீ இல்லாத இரவு, தலைவிக்குப் பல்லூழியாகத் தோன்றுமாதலின் நீ பிரியற்க' என்று தோழி தலைவனை விலக்குதல்]*

**545.** ஒருநா ழிகைசெல்லி லொன்பதி னுயிர மூழிசெல்லும்
அருநா ழிகையவை யாறைந்தும் நீந்தி யருவரைகள்
இருநாலு மாழ்கட லேழுங் கடந்தினி யாமமென்றாழ்
வருநாளு முண்டுகொ னீசென்ற நாளிம் மதிநுதற்கே.

(து - ரை.) நாழிகை - இருபத்துநான்கு நிமிடங் கொண்டது. ஊழி - நெடுங்காலம்; யுக முடிவுமாம். செல்லும் - செல்வதுபோல் தோன்றும். ஆறு ஐந்து-முப்பது நாழிகை; ஓரிரவு முப்பது நாழிகை கொண்டதாகும்; அருநாழிகை என்றாள், கழிதற்கருமையின். நீந்தி என்றது, இரவுப்பொழுதினைக் கடத்தலின் அருமை யுணர்த்தி நின்றது. இருநால் வரைகள் - எட்டுக் குலமலைகள். என்றாழ் - ஞாயிறு. நீ சென்ற நாள் - நீ பிரிந்து சென்ற காலத்தில். மதி நுதற்கு: தலைவிக்கு, நீ சென்ற நாள் ஒரு நாழிகை செல்வது ஒன்பதினுயிரம் ஊழியாகத் தோன்றும்; அத்தகைய நாழிகை முப்பதினையும் நீந்தி, வரை கடல்களையும் கடந்து (இவ்விரவுப் பொழுதினை யொழித்தற்கு) என்றாழ் வருநாளும் உண்டுகொல்?' எனக் கூட்டுக. நீ சென்றால், தலைவி ஓரிரவு தானும் தரியாள்; என்றாழ் வருமுன் இறப்பினை யுறுவாள்; ஆதலின் நீ செல்லற்க என்பது கருத்து. ௬

### பிரிவு ஆற்றமை

*[பிரிவாற்றாத தலைவி, தலைவன் தன்னை மறந்து சென்றமையைத் தன் நெஞ்சிற்குக் கூறி வருந்துதல்]*

**546.** புறந்தா ழளகஞ் சரியப் புளகம் புரியக்கொங்கை
சிறந்தாக மூழ்கித் திளைத்ததெல் லாம்செல்வ மேவிரும்பி
மறந்தார் முடிய மறந்தன ராயின் மடநெஞ்சமே
இறந்தா லினிப்பிற வாகாப்பெண் பால்வந் தெழுமையுமே.

(கு - ரை.) புறம் தாழ் அளகம் - முதுகின் புறத்தே தாழ்ந்த கூந்தல். கொங்கை புளகம் புரிய - மகிழ்ச்சியால் முலை விம்ம. ஆகம் மூழ்கி - முலைத்தடத்தே படிந்து. திளைத்தது - கலவியின்பம் நுகர்ந்ததை. மறந்தார் - மறந்த தலைவர்; வினையாலணையும் பெயர். முடிய - முற்ற. பெண்பால் வந்து பிறவு ஆகா - பெண்ணாகப் பிறத்தலாகாது: எழுமையும் - எழுவகைப் பிறப்பின்கண்ணும்; பிறப்பேழாவன: மக்கள், வானவர், நரகர், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன என்பனவாம். நெஞ்சமே! மறந்தார் சரியப் புரிய மூழ்கித் திளைத்ததெல்லாம் மறந்தனராயின், இனி எழுமையும் பெண்பால் பிறவாகா எனக் கூட்டுக. ௭

### வன்புறை எதிரழிதல்

*[‘வருந்தற்க’ என்று வற்புறுத்துந் தோழியின் எதிரே தலைவி கழிந்ததையெண்ணிக் கவலுற்றுக் கூறல்]*

**547.** நகையாடி வைகலுஞ் சென்றுமென் றுநிற்பர் நானவரைத்
தகையா துமக்கிது தன்மையென் றேன்தணப் போமினியென்
றுகையா மணிநெடுந் தேர்சுரம் போயினர் ஒண்பொருட்கென்
மிகையா லெனக்கிங்ங னேவந்த தாலிந்த வெந்துயரே.

(கு - ரை.) நகையாடி - சிரித்துக்கொண்டே விளையாட்டாக. வைகலும் - நாள்தோறும். சென்றும் என்று நிற்பர் - செல்வேம் என்று கூறுவர் தலைவர்; சென்றும்: கால மயக்கம். அவரை: தலைவரை. தகையாது - தடுக்காது. இது - இவ்வாறு ‘சென்றும் சென்றும்’ என்று கூறுதல். தன்மை என்றேன் - (நுமக்கு இவ்வாறு கூறுதல்) இயல்பென்று கூறி அசட்டை செய்தேன்; அவ்வாறு செய்தமையால், தணப்போம் - பிரிவோம். தேர் உகையா - தேரைச் செலுத்தி. சுரம் - பாலைநில வழியே. மிகையால் - (உண்மையாகவே

பிரிவரென்றுணராது அசட்டை செய்த) குற்றத்தால். அவர் என்னு கிற்பர்; நான் தகையாது என்றேன்; (அதனால்) இனித் தணப்போம் என்று உகையாப் பொருட்டுப் போயினர்; என் மிகையால் இந்தத் துயர் வந்தது எனக் கூட்டுக. யான் தகையாது இகழ்ந்தமையினு லேயே அவர் தணந்தார்; அம்மிகையின்றித் தகைந்திருப்பனேல் தலைவர் போயிரார் என்று கூறித் தலைவி வருந்தியவாறு. அ

## பிரிவு ஆற்றுவித்தல்

**[தோழி தலைவியின் பிரிவுத் துன்பத்தை ஆற்றுவித்தல்]**

**548.** இருங்கற் புடையவ ரின்புறு மாடவ ரேகுவதும்
அருங்கற் புடையவ ராற்றுந் திறனு மணியிழைபொன்
மருங்கிற் படர்முலை யாயவர் மீண்டு வருவதுவும்
கருங்கற் புடைதழு வுங்கடல் ஞாலம் கடனென்னுமே.

(கு - ரை.) இருங் கற்பு உடையவர் இன்புறும் ஆடவர் - பெருங்கல்வி படைத்தவர்களாகிய இன்ப மிக்க ஆண்கள்; கற்பு - கல்வி; கேடில் செல்வம், உடைத்தாய அன்பினர் (டு௬௩) என முன்னும் வந்திருத்தல் காண்க. ஏகுவதும் - பிரிந்து செல்வதும். கற்புடையவர் - கற்பினையுடைய மகளிர். அணி இழை - அழகிய நகைகளும், பொன் - பொன் போன்ற தேமலும், மருங்கில் படர் முலையாய் - தன்னிடத்தே பொருந்தப்பெற்ற முலையினையுடைய தலைவியே. அவர்; தலைவர். கருங்கல் புடை - சக்கரவாளமலையின் பக்கத்தே, தழுவும் கடல் - பொருந்திய பெரும்புறக்கடல் சூழ்ந்த, ஞாலம் - உலகிலுள்ள பெரியோர். சக்கரவாளமலை இவ்வுலகினைச் சூழ்ந்துள்ள தென்பதும், அதனை யடுத்துப் பெரும்புறக்கடல் அமைந் துள்ள தென்பதும் நூற்கொள்கை. முலையாய்! ஏகுவதும், திறனும், வருவதுவும் ஞாலம் கடன் என்னும் எனக் கூட்டுக.

(வே - ம்.) இன்புற; கடனென்றமே. இ - வி. கஅசு. கசு

## இல்லத் தழுங்கல்

**[தலைவியின் வருத்த மிகுதியைக் கண்ட தலைவன் தன் செலவினைத் தவிர்ந்து வீட்டில் தங்குதல்]**

**549.** தொழுது வணங்கி மணங்கமழ் தார்பெய்து தொய்யில்மெய்யில்
எழுதி முயங்கி மயங்கின மாக இருங்கயற்கண்
அழுது சிவந்து பசந்தது நாமிங் ககலுவமேல்
பழுது பிறந்து விடும்தனி யானி பனிமொழிக்கே.

(து - ரை.) தொழுது - கைகூப்பித் தொழுது. வணங்கி - தலையால் வணங்கி. தலைவன் தலைவியை வணங்கலுண்டென்பதை, (சஅ௬, சகூ௬)-ஆம் பாடல்களாலும் அறிக. தார்பெய்து - தலைவியின் கூந்தலில் மாலையை யணிந்து. மெய்யில் தொய்யில் எழுதி - தலைவியின் முலைமீதும் தோள்மீதும் குங்குமக்கோலத்தை எழுதி. முயங்கி - புணர்ந்து. கயல் கண்-கயல்மீன்போன்ற தலைவியின் கண். அகலுவமேல் - பிரிந்து செல்லுவமேல். ஆவி பழுது பிறத்தலாவது, உயிர் நீங்குதல். பனிமொழிக்கு - குளிர்ந்த சொல்லையுடைய தலைவிக்கு. தலைவன் ஆராவன்பொடு நிகழ்த்திய கலவியில், தலைவி அவன் பிரிதற்குறிப்பு உணர்ந்தாளாக அவ்வளவிற்கே அவளுடைய கண் அழுது சிவந்து பசந்தது ; அதன்மேல் அகலலும் செய்யின் பனிமொழிக்கு ஆவி பழுது பிறந்துவிடுமென்றெண்ணித் தலைவன் செலவழுங்கினானென்க. இவட்கு ஆவி ஒன்றே உள்ளதென்பான், 'தனி ஆவி' என்றான். சிவந்து பசந்தது என்றது முரண். இ - வி. அங. க0

தலைமகன் செலவு அழுங்கல்

*[தலைவன் சிறிது தூரம் சென்று, பின் தலைவியை நினைந்து, 'இவ்வழி நாம் முன் சென்ற வழியன்று' என்று பாகனொடு கூறிச் செலவழுங்குதல்]*

**550.** வரியரி தங்கு மருணெறிக் கானமும் வானருவி
சொரிதரு துங்கக் கிரியுமுண் டோகொய் சுவற்கவனப்
பரிபுர நீள்குரப் பாய்பரித் தேர்வல்ல பாகஎன்றும்
தெரிவரி தாலிது வோபண்டு நாம்சென்ற சேணெறியே.

(து - ரை.) வரி - புலி ; உசங, ஙசக. அரி - விலங்கரசு : சிங்கம். மருள் நெறி - மயங்கத்தக்க வழிகளையுடைய. கானம் - காடு. துங்கம் கிரி - உயர்ந்த மலை. கொய் சுவல் - கத்தரிக்கப்பட்ட கழுத்து மயிர். கவனம் - விரைவு. பரிபுரம் - கிண்கிணி யணிந்த. குரம் - குளம்பு. பாய்பரி - பாய்ந்து செல்லும் குதிரைகள் பூட்டிய. சுவலும், கவனமும், பரிபுரமும், குரமுமுடைய பரியென்க. பாக : விளி. பண்டு - முன்பு. சேண் நெறி - தூர வழி. பாக ! பண்டு நாம் சென்ற சேணெறி இதுவோ? (அந்நெறியில்) கானமும் கிரியும் உண்டோ? (இந்நெறி) என்றும் தெரிவரிது; ஆதலால் மீண்டு இல்லஞ் செல்லுவோம் என்பது கருத்து. கக

### சுரத்திடை அழுங்கல்

*[பொருள் கூட்டச் சென்ற தலைவன், இடைச்சுரத்தே தலைவியை நினைந்து வருந்திய நெஞ்சொடு புலந்து செலவழுங்கல்]*

**551.** சென்றே பொருள்முற்றி மீளுத லன்றெனில் தேர்ந்திதனை
அன்றே தவிர்தலன் றேயறி வார்தொழில் ஆரழல்திண்
குன்றே நெருங்குங் கொடுஞ்சுரத் தென்னையுங் கொண்டுவந்து
நின்றே வருந்துநெஞ் சேயஞ்சு வேனின் நிலையதற்கே.

(கு - ரை) தேர்ந்து - ஆராய்ந்து. இதனை - பொருள் தேடப் புறப்படுதலை. அன்றே - பிரியக் கருதிய அன்றே. ஆர் அழல் திண் குன்று நெருங்கும் - நிறைந்த வெம்மையும் திண்மையும பொருந்திய குன்றுகள் நிறைந்த. நெஞ்சினை வேறாகப் பிரித்துக் கூறலின், 'என்னையும்' என்றான். நிலை - இடைச்சுரத்தே நின்று வருந்தும் நிலை. நெஞ்சே! அறிவார் தொழில், மீளுதல் அன்றெனில் தவிர்தலன்றே? (அங்ஙனமிருக்க) சுரத்து வருந்தும் நின் நிலைக்கு அஞ்சுவேன் எனக் கூட்டுக.

(வே - ம்.) வினைமுற்றி மீளுவது, என் செய்வேன் இந்நிலை தனக்கே. இ - வி. அரு. கஉ

### சுரத்திடைக் கனவோடு புலம்பல்

*[பொருள் முற்றி மீண்ட தலைவன், சுரத்திடைக் கனவில் தலைவியைக் கண்டு தழுவி விழித்தபின் அவளைக் காணுமையால் கனவை வெறுத்துக் கூறல்]*

**552.** வனவேய் பொருதடந் தோள்வடந் தோய்முலை வல்லிபுல்ல
நனவே யெனவுன்னி நாட்டந் திறந்துள ஞானமிலார்
எனவே தனிநின் றிரங்கவெங் கானத் திகலுங்கங்குல்
கனவே யுனக்குங் கனவெய்து மாலொரு காலத்திலே.

(கு - ரை.) வனவேய்பொரு - அழகிய மூங்கிலையொத்த. வடம் தோய் - மாலை யணிந்த. தோளையும் முலையையுமுடைய வல்லி யென்க; வல்லி: தலைவி. வல்லி புல்ல - (கனவில்) தலைவியைத் தழுவிய தாகத் தோன்ற, அதனை. உன்னி - நினைத்து. நாட்டம் - கண். உளம் ஞானமிலாரென - அகத்தே மெய்யறிவற்றாரைப்போல. இரங்க - வருந்தும்படியாக. இகலும் - பகைக்கும். கங்குல் கனவே-

இரவில் தோன்றும் கனவே. 'உனக்கும் கனவெய்தும்' என்றது, யான் கனவு கண்டு வருந்துதல்போல நீயும் வருந்துதல் வேண்டுமென்னும் குறிப்பிற்று. புல்ல உன்னித் திறந்து இரங்க இகலும் கனவே! ஒருகாலத்தில் உனக்கும் கனவெய்தும் எனக் கூட்டுக.

(வே - ம்.) வல்லுப் புல்ல; துறந்துநன் ஞானமில்லார்; இகழுங் கங்குல். இ - வி. ௧௮௫. ௧௫

## உருவெளி

*[பொருள் முற்றி மீண்டு வருந் தலைவன் சுரத்திடையே தலைவியின் உருவெளித் தோற்றத்தைக் கண்டு கூறுதல்]*

**553.** விரும்பும் பொருள்முற்றி வெவ்வினை யேனின்று மீளுநெறி
இரும்பும் பொறியெழுங் கானமன் றேஇள நீருமந்தண்
கரும்புங் கமுகுங் கதலியுஞ் சேல்களுங் காமரிசைச்
சுரும்பும் பயில்குழல் சோலையும் நீகொண்டு தோன்றுவதே.

(து - ரை.) 'இரும்பும் பொறி எழும் கானம்' என்றது, கானத்தின் வெம்மையை உணர்த்தி நின்றது; பொறி - தீப்பொறி. இளநீர் : கொங்கை. அம் தண் - அழகிய குளிர்ந்த, கரும்பு: தோள். கமுகு - பாக்கு மரம்: கழுத்து. கதலி-வாழை: தொடை. சேல்கள் : கண்கள். காமர் இசை - அழகிய இசை பாடுகின்ற. சுரும்பும் பயில் குழல் சோலை - வண்டுகள் பொருந்தியகூந்தலாகிய சோலை. நீ என்றது, தலைவியின் உருவெளித் தோற்றத்தை. தோன்றியதே - தோன்றியவிதம் என்னே என்று வியந்தவாறு. நெறி கானமன்றோ! (அங்ஙனமிருக்க, இவண் மருதநிலத்திற்குரிய) இளநீர் முதலியவற்றை நீ கொண்டு தோன்றுவதே! எனக்கூட்டுக. கொங்கை முதலியவற்றை இளநீர் முதலியனவாகக் கூறியது உருவகவணி. ௧௬

## தலைவி இளவேனிற் பருவம் கண்டு புலம்பல்

*[தலைவன் மீண்டு வருவதாகக் குறித்துச் சென்ற இளவேனிற் பருவம் வந்தும் அவன் வாராமையால் தலைவி வருந்துதல்; இளவேனில்—சித்திரை, வைகாசித் திங்கள்கள்]*

**554.** தளவே பொருநகைத் தையனல் லாய்நம் தனத்திளம்வே
றுளவே தனமென் றெழுந்தன ராக உயங்கியநம்
அளவே நெருங்கும் அருங்குயில் வேலை வரவழைக்கும்
இளவேனில் வந்தும் வருகிலர் காதல ரின்னமுமே.

(கு - ரை.) தளவு பொரு நகைத் தையல் நல்லாய் - முல்லை முகையையொத்த பற்களையுடைய அழகிய தோழியே; தளவு-முல்லை; நகை - பல்; தையல் - அழகு. தனம் : முன்னது முலை, பின்னது செல்வம். ஒழிந்தனராக - பிரிந்து சென்ற காரணத்தால். உயங்கிய- வருந்திய. நெருங்கும் அருங்குயில் என்றது, குயில் தன் குரலால் தலைவியை வருத்துதலை; நெருங்குதல் - கொல்லல்; ஈண்டு வருத்த மிகுதியை உணர்த்திற்று, 'கொல்லப் பயன்படுங் கீழ்' (குறள். ௧0௭அ). என்றவிடத்திற்போல. வேள் - மன்மதன். இளவேனில் காம வேளுக்கு விழாச் செய்யுங் காலமாதலின், அக்காலத்திற் குயில் கூவுதலை 'வேளை வரவழைக்கும்' என்றாள். 'குயில் மாருதமாம், தேர்த்தனி வீரன் திருநாளும் வந்தது சேர்மின் சென்றீர்......என்று ஆர்த்தது' - தஞ்சை. ௨௨௨. காதலர்: தலைவர். நல்லாய்! காதலர் ஒழிந்தனராக, குயில் வேளை அழைக்கும் வேனில் வந்தும் இன்னமும் வருகிலர் எனக் கூட்டுக. யான் எங்ஙனம் ஆற்றுவல் என்பது கருத்து. கஙு

## பிரிவு ஆற்றமை

[('இப்பிறை கழிந்து அடுத்த பிறை தோன்றுகையில் வருவேன்' என்று கூறிச் சென்ற தலைவன் இன்னும் வரவில்லையேயென்று தோழியிடம் கூறித் தலைவி வருந்தல்]

**555.** மறித்துப் பிறையொன்று வந்திடுங் காலை வருவலென்று
குறித்துப் பிரிந்தனர் கோல்வளை யாய்மென் குவளையங்கண்
நெறித்துப் புனைந்து நறுநுதல் நீவி நிரைவளைகைச்
செறித்துப் பணைமுலை மேல்தொய்யில் தீட்டிய செங்கையரே.

(கு - ரை.) மறித்துப் பிறை - அடுத்த பிறை; மறித்துப் பிறை யொன்று வந்திடுங் காலை என்றது, ஒரு திங்களுக்குள் என்றபடி. குறித்து - வருங்காலம் குறித்து. கோல் வளையாய் - திரண்ட வளையலை யணிந்த தோழியே. குவளையங்கண் நெறித்து - குவளைப் போதின் அழகிய வாய் நெகிழ மலர்த்தி; நெறித்தல் - கையால் அழுத்தி மலர்வித்தல். புனைந்து - தலைவியின் கூந்தலில் சூட்டி. நறு நுதல் நீவி - நல்ல நெற்றியைத் தடவி. கை நிரைவளை செறித்து - தலைவியின் கையில் வரிசையான வளையல்களை யணிந்து. பணை - பருத்த. தொய்யில் - குங்குமக்கோலம். தீட்டுதல் - எழுதுதல்.

செங்கையர் - சிவந்த கையையுடைய தலைவர். கோல் வளையாய்! செங்கையர் குறித்துப் பிரிந்தனர் எனக் கூட்டுக. இன்னமும் வந்திலரே என்பது கருத்து. கசு

## பிழைத்தது பருவமென்று இரங்கல்

**[மறுபிறை தோன்றியும் தலைவர் வாராமையால், அவர் குறித்த பருவம் பிழைத்ததென்று கூறித் தலைவி வருந்துதல்]**

**556.** **அரும்புறு கொங்கை யலருறு கோதை யயிலுறுகண்**
**கரும்புறும் இன்சொல் கனங்குழை யாய்களி கொண்டுவண்டு**
**சுரும்புறு மென்கொன்றை சூழ்சடை பேரொளி தோன்றுசெக்கர்ப்**
**பெரும்பிறை தோன்றியும் தோன்ருர் பொருளிற் பிரிந்தவரே.**

(**கு - ரை.**) அரும்பு உறு கொங்கை - தாமரை முகைபோன்ற முலை. உறு: உவமவுருபு. 'கரும்புற்ற செந்நெல் வயற்கமலேசர்' என்னும் திருவாரூர் நான்மணிமாலையினும் இவ்வுருபு வருதல் காண்க. அலர் உறு கோதை - மலரணிந்த கூந்தல். அயில் உறு - வேல் போன்ற. குழையாய்: தோழியே. கொங்கையையும், கோதையையும், சொல்லையுமுடைய கனங்குழை என்க. களி - களிப்பு. சுரும்பு: வண்டின் வகை. 'தூங்கிசை வண்டும் தேனும் சுரும்பொடு ஞிமிறும் பாட' என்னும் நைடதச் செய்யு(கசு)ளில் வண்டின் வகைகள் காண்க. கொன்றை - கொன்றைமாலை. செக்கர் - செவ்வானம். 'சடைசூழ் கொன்றைபோல்' என மாறுக; சடை - சிவபெருமானது செஞ்சடை. சடைசூழ் கொன்றைபோல் செவ்வானத்தே பிறை தோன்றிற்றென்க; சடை செக்கர்க்கும், கொன்றை பிறைக்கும் உவமை. இனிக் கொன்றை சூழ் சடைபோல் ஒளி தோன்று செக்கர்ப் பெரும்பிறை என்பதற்குக், கொன்றை அணியப்பெற்ற இறைவனது சடையின்மேல் இருக்கும் பிறையைப்போல ஒளிபொருந்திய செவ்வானில் தோன்றும் பிறை எனப் பொருள் கொண்டு சடையைப் போன்று செக்கரும், அதன்மேல் இருக்கும் பிறையைப் போன்று பிறையும், வண்டு சூழ்தல் போன்று கருங் கொண்டலும், கொன்றைபோன்று வான்மீனும் தோன்றும் எனினும் அமையும். தோன்ருர் - வந்தாரிலர். பிரிந்தவர்: தலைவர். கனங்குழையாய்! பிரிந்தவர் பிறை தோன்றியும் தோன்ருர் எனக் கூட்டுக. கஎ

### வரவு மொழிதல்

**[தலைவர் பொருள் முற்றி மீண்டு வந்தாரென்று தோழி தலைவிக்கு உரைத்தல்]**

**557.** **குரவலர் பூங்குழ லார்நெடு வீதி குறுகிவண்டு**
**விரவலர் தூவி மிகமிக வாழ்த்த வியந்துமுன்னின்**
**றிரவல ரேத்த இனவளை யார்ப்ப இயமுழங்கப்**
**புரவல ரின்றுவந் தார்திரு வேதம் பொருள்முடித்தே.**

(கு - ரை.) குரவு அலர் பூங்குழலார் - குராம்பூவை யணிந்த அழகிய கூந்தலையுடைய மகளிர்; பூ - அழகு. வண்டு விரவு அலர் தூவி - வண்டுகள் படிந்துள்ள பூக்களைத் தலைவன்மீது தூவி. வியந்து - மதித்து. இரவலர் ஏத்த - பரிசிலர் புகழ. வளை இனம் ஆர்ப்ப - சங்குக் கூட்டங்கள் ஒலிக்க. இயம் - பல்வகை வாத்தியங்களும். புரவலர்: தலைவர். திருவே: தோழி தலைவியை விளித்தது. திருவே! புரவலர் முடித்து, வாழ்த்த ஏத்த ஆர்ப்ப முழங்க வந்தார் எனக் கூட்டுக.

(வே - ம்.) குறுக, தாவ; வாழ்த்தி. இ - வி. கஅகூ. கஅ

### 'கடிதின் வந்தீர்' எனும் ஈன்றட்குத் தலைவன் கூறல்

**[தலைவன் விரைவில் வந்துவிட்டதாகக் கூறிமகிழ்ந்த செவிலித்தாய்க்குத் தான் அவ்வாறு விரைந்து வந்தமைக்குக் காரணம் புதல்வனும், தலைவியின் உயிர்ப்பும், கண்ணீருமே யென்று அவன் கூறுதல்]**

**558.** **கருங்குல வெற்பும் கடும்புன லாறும்வெங் கானுமெல்லாஞ்**
**சுருங்க இமைப்பொழு திற்கொண்டு மீண்டன தோகையன்னுள்**
**மருங்கு லெடுத்த மகவுமுள் ளாவி வருந்துயிர்ப்பும்**
**நெருங்கும் வளைக்கையின் நீவநில் லாதகண் ணீரும்வந்தே.**

(கு - ரை.) கருங்குல வெற்பு - பெரிய கூட்டமான மலைகள். கடும் புனல் - விரைந்து செல்லும் நீரையுடைய. வெம் கானம் - கொடிய காடு. சுருங்க - அண்மையிலுள்ளன என்று கூறுமாறு. தோகை யன்னுள் - மயில்போன்ற சாயலையுடைய தலைவி. மருங்குல் எடுத்த - இடுப்பில் எடுத்துவைத்துக்கொண்டிருக்கின்ற. மகவு - புதல்வன். ஆவி - உயிர். உயிர்ப்பு - பெருமூச்சு. வளைக் கையில் நீவ - வளையலணிந்த கையால் துடைக்கவும். மகவும், உயிர்ப்பும்,

கண்ணீரும் வந்து சுருங்கக்கொண்டு மீண்டன எனக் கூட்டுக. மகவு முதலியவற்றின்மேலுள்ள எண்ணமே தன்னை விரைந்துவரச் செய்தமையால் 'அவை கொண்டு மீண்டன' என்றான். விரைந்து வந்ததற்குக் காரணம் மகவு முதலியனவே என்பது கருத்து. ௧௧

நினைத்தமை கூறல்

**['பொருள் கருதிச் சென்ற இடத்தே என்னை நினைத்ததுண்டோ' என்று கேட்ட தலைவிக்குத் தலைவன், 'பகலில் உருவெளிப்பாட்டிலும், இரவில் கனவிலும் தோன்றிப் பிரியாதிருக்கின்ற நின்னை யான் நினைத்தல் எங்ஙனம்?' என்று தான் நினைத்த படியை நயம்படக் கூறுதல்; உருவெளிப்பாடும், கனவும் நினைவின் மிகுதியால் நிகழ்வன வென்க]**

**559.** எண்ணா அரும்பொரு ளேகுஞ் சுரத்தி லெனைப்பகலும்
கண்ணார வந்துன் கவினலங் காட்டுதி கங்குலெல்லாம்
தண்ணார் மலர்ப்பள்ளி தங்கவி டாது தழுவுதிநீ
பெண்ணா ரமுதனை யாய்வினை யேனைப் பிரிந்ததின்றே.

(**து - ரை.**) பொருள் எண்ணா - பொருளீட்டலை எண்ணி. எனைப் பகலும் - ஒவ்வொரு பகற்பொழுதிலும்; எனை - எனக்கு என வேற்றுமை மயக்கமாகக் கொள்ளலுமாம். கண்ணாரக் காட்டுதி என இயைக்க. உன் என்றது, தலைவியை. கவின் நலம் - அழகின் நன்மையை. கங்குல் - இரவில். தண் ஆர் - குளிர்ச்சிபொருந்திய. பள்ளி - படுக்கை. அமுதனையாய்: தலைவன் தலைவியை விளித்தது. அமுதனையாய்! சுரத்தில் பகலும் காட்டுதி; கங்குல் தழுவுதி; (இவ்வாறு) நீ வினையேனைப் பிரிந்ததின்றே எனக் கூட்டுக. பிரிந்தாரை நினைத்தலன்றே உலகத்தில் வழக்கம்? அங்ஙனமிருக்கக் கனவிலும் நனவிலும் பிரியாத நின்னை யான் நினைத்த லெங்ஙனம் இயலும்? என்று எதிர்மறை முகத்தால், கனவிலும் நனவிலும் தோன்றுமாறு நினைத்த தன் நினைவின் மிகுதியை நயம்படப் புலப்படுத்தவாறு காண்க. தலைவி, கனவிலும் உருவெளிப்பாட்டிலும் தோன்றியமையை முறையே-௫௫௨, ௫௫௩-ஆம் செய்யுட்களாலறிக. 'உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியேன், ஒள்ளமர்க் கண்ணாள் குணம்' - (௧௧௨௫.) என்னும் குறளை இச்செய்யுள் நினைப்பூட்டுகின்றது. ௨௦

### காணா நிலை உரைத்தல்

***[தலைவன் பிரிந்து சென்றிருந்த இடத்தில் தலைவியை முகக்கண்ணாற் காணாத வருத்தமான நிலைமையை அவன் அவட்குச் சொல்லுதல்]***

**560.** **வானகத் தேநின்று வந்தனை யாயிங்ஙன் நீவருந்த**
**யானகத் தேகொண் டிராததெந் நாளுன்னை யெய்தியவெங்**
**கானகத் தேயுண் மறந்தனை யோஅருங் கங்குலினும்**
**ஊனகத் தேகொண் டொளித்தனை யோகண் துயின்றிலவே.**

(**து - ரை.**) *வானகத்தே நின்று வந்தனையாய்* - வானுலகத்திலிருந்து வந்தாற்போன்ற எழிலுடைய நங்கையே! (யான் நின்னைப் பிரிந்ததாக வருந்துகின்றாயே) *எய்திய வெம் கானகத்தே* - யான் போயிருந்த வெப்பமான காட்டினிடத்திலே, *அரும் கங்குலினும்* - காண்பதற்கு அரிய இரவிலும், *நீ வருந்த* - நீ வருந்தும்படியாக, *யான்* - நான், *அகத்தே கொண்டிராதது எந்நாள்* - உன்னை என் மனத்தினிடத்தே கொண்டிராமல் விட்டுவிட்டிருந்தது எப்பொழுது? (ஒருநாளும் நான் உன்னை மறக்கவில்லையே;) *உள்* - அங்ஙனமிருக்க நீ என் உள்ளே யிருந்தும், *மறந்தனையோ* - நான் உன்னையே நினைத்துக்கொண்டிருந்ததை மறந்துவிட்டாயோ? *ஊனகத்தே கொண்டு ஒளித்தனையோ* - என் உடம்பினிடத்தை இருப்பிடமாகக்கொண்டு அதனுள் மறைந்திருந்தாயோ (அதனால்தான் நீ என் முகக் கண்ணிற்குப் புலப்படவில்லையோ?) *கண் துயின்றிலவே* - அதன் காரணமாக நின்னைக் காண விதும்பிய என் கண்களும் உறங்குதலைச் செய்திலவே, நீ புறத்தே காணப்படாமல் அகத்தே மட்டும் இருந்து கொண்டாயோ? இப்பொழுது எங்கேயோ வானுலகத்திலிருந்து வந்தாற்போன்று என் முன்னே வந்து நிற்கின்றாய் என்றவாறு.

*தலைவன் கூற்றாகக்கொள்க:*—தலைவி பிரிவு காரணமாக வருந்த அவளை நோக்கித் தலைவன், இவ்வளவு நாளும் என் அகத்தில் பிரியாமல்தானே இருந்தாய்? இப்பொழுது புறத்திலும் காணப்பட்டு நிற்கின்றாய். எங்கேயோ வானுலகத்திலிருந்து வந்ததுபோல என் முன்னே நிற்கின்றாய். "நீ இவ்வாறு வருந்த, எய்திய வெங்கானகத்தே அருங் கங்குலினும் யான் (உன்னை) அகத்தே கொண்டிராதது எந்நாள்? உள் மறந்தனையோ? ஊனகத்தே கொண்டு ஒளித்தனையோ? கண் துயின்றிலவே" எனக் கூட்டுக.

உன்னை அகத்தில் பிரிந்திலன், நீயும் உள்ளிருந்து அதனை அறிந்திருக்கலாமே; மறந்தாயோ; அல்லது உள்ளே ஒளித்துக்கொண்டாயோ என்க. உக

### பள்ளியிடை மகிழ்ச்சி

*[பாயலில் தலைவியைக் கூடி இன்புற்ற தலைவன் 'இனி வாடைக் காற்றிற்கும் மழைத்துளிக்கும் வருந்தேன்' என்று கூறி மகிழ்தல்]*

**561.** முருந்தே யனைய முறுவலும் செவ்வி முகமுங்கண்டு
மருந்தே யனைய மழலையுங் கேட்டு மதுகரஞ்சூழ்
செருந்தே ரலங்கல் செறிகுழல் மோந்துசித் தங்களிகூர்ந்
திருந்தே னினிவருந் தேனினி வாடை யெறிதுளிக்கே.

(கு - ரை.) முருந்து - மயிலிறகின் அடி. முறுவல் - பல். செவ்வி - அழகிய. மருந்து - அமிழ்து. மழலை - மென்சொல். மதுகரம் - வண்டு. செருந்து ஏர் அலங்கல் செறிகுழல் - செருந்தி மலராலாய அழகிய மாலையை அணிந்த கூந்தல்; செருந்து-செருந்தி மலர்; ஏர் - அழகு; அலங்கல் - மாலை. களிகூர்ந்து - களிப்பு மிகுந்து. வாடை எறி துளிக்கு - வாடைக்காற்றுத் தூற்றுகின்ற மழைத்துளிக்கு: ரு௬௯. (தலைவியின்) முறுவல் முதலியவற்றைக் கண்டும், கேட்டும், மோந்தும் களிகூர்ந்து இருந்தேன்; இனித் துளிக்கு வருந்தேன் எனக் கூட்டுக. உஉ

### தலைவியைத் தலைவன் மிகுதி கண்டு வியத்தல்

*[தலைவன் பெதும்பைப் பருவத்தா ளொருத்தியை மணந்து இல்லிற் கழைத்துவர அவளை உவந்தெதிர்கொண்ட தலைவியின் உயர் குணத்தைக்கண்டு தலைவன் புகழ்ந்து கூறல் மிகுதி—மேன்மைக்குணம்]*

**562.** வெதிர்கொண்ட தோளியென் மேல்வைத்த காதல்கொல் விண்வட
கதிர்கொண்ட மீனன்ன கற்பினாற் பான்மைகொல் காய்கனகப்[பால்
பிதிர்கொண்ட மென்முலை பின்முறை வேட்பப் பெதும்பையையின்
றெதிர்கொண் டதுமண மங்கல மானதும் ஏற்றுவந்தே.

(கு - ரை.) வெதிர்கொண்ட தோளி-மூங்கிலையொத்த தோளையுடைய தலைவி. விண் வடபால் - வானத்தின் வடபாகத்தேயுள்ள. கதிர் - ஒளி. மீன் - அருந்ததியென்னும் வான்மீன்: சஉ0. கற்பின்

நல் பான்மைகொல் - கற்பினது நல்ல இயல்புதானோ. கனகப் பிதிர் - பொற்றுகள் சிந்தியதையொத்த சுணங்கு; உவமவாகு பெயர். மென்முலை: தலைவி; மென்முலையாளாகிய பெதும்பையை என்றியைத்தலுமாம்; பெதும்பை எட்டு முதல் பதினொரு வயதிற்குட் பட்ட இளையாள்: ௩0. பின்முறை வேட்ப - இரண்டா முறையாக மணக்க. மணமங்கலம் - திருமணம்; இருபெயரொட்டுப் பண்புத்தொகை; மணமாகிய மங்கலமென விரியும். உவந்து ஏற்று - மகிழ்ந்து உடன்பட்டு. பெதும்பையை இன்று வேட்ப, மங்கலமானதும் மென்முலை உவந்தேற்று (அப்பெதும்பையை) எதிர் கொண்டது, தோளி என்மேல் வைத்த காதல்கொல்? (அன்றி) கற்பின் பான்மைகொல்? எனக் கூட்டுக. தலைவன் மற்றொருத்தியை மணந்தவிடத்துத் தலைவி புலவாது உவந்தெதிர்கொண்டமையால் இவ்வாறு உயர்த்திக் கூறினனென்க. உ௩

இல்லறம்

*[பிரிவுத் துன்பம் நீங்கித் தலைவனும் தலைவியும் புதல்வனொடு இன்புற்றிருக்கும் இல்லறச் சிறப்பினைக் கூறுதல்]*

**563.** வேந்தன் பொருளுக்கு வெஞ்சுரம் போய்வந்த வெம்மையெல்லாம்
பூந்தண் பெடையமர் சேக்கையில் போக்கினள் பூவையன்னாள்
ஏந்தும் புதல்வனை யின்புற மார்பி லெடுத்தணைத்து
மோந்துந் தலைவ ருடன்முலை யாகம் முயங்கியுமே.

(கு - ரை.) வேந்தன்: தலைவன். வெம்மை - காதற்றீ. பெடை - அன்னப்பெடை; ஈண்டு முதலாகு பெயராய் அதன் இறகினையுணர்த்திற்று; அன்னப் பறவையின் இறகால் அணையியற்றல் மரபு. அமர் - பொருந்திய. சேக்கை - படுக்கை. பூவை அன்னாள்: தலைவி. ஆகம் - மார்பு. முயங்கல் - தழுவல். பூவையன்னாள் வெம்மையை எல்லாம், சேக்கையில் மோந்தும் முயங்கியும் போக்கினள் எனக் கூட்டுக. உ௪

பொருள்வயிற் பிரிவு முற்றும்

## ௯௦. துறவறம்

*[மக்களொடு மகிழ்ந்து மனையறங் காத்து மிக்க காமவேட்கை தீர்ந்துழித் தலைவனும் தலைவியும் தம் பதி நீங்கித் துறவறம் காத்தலை (நம்பி. ௧௧௫)ச் சொல்லுதல்]*

**564.** அல்லொடு நண்பக லைம்புல னுலரும் போகந்துய்த்து
வல்லியு மல்லல் வளவய லூரனு மாதருமே
சொல்லிய கேள்வித் துறைமுடி வாய்ந்து துணைவியரோ
டில்லறங் காத்துத் துறவறந் தாங்க லியைந்தனரே.

(கு - ரை.) அல்லொடு பகல் - இரவும் பகலும்; அல் - இரவு. ஐம்புலன் - மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன; அவற்றால் போகந்துய்த்தலாவது, கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறிதலாம் (குறள் - ௧௧௦௧.); போகம் துய்த்தல் - இன்பம் நுகர்தல். வல்லி: தலைவி. மல்லல் - வளன்; மல்லல் வளம் என்பன, ஒரு பொருட் பன்மொழி. ஊரன்: தலைவன். மாதர்: தோழியர் முதலியோர். கேள்வித் துறை முடிவு ஆய்ந்து - மறையின் கூறுகள் உணர்த்தும் முடிந்த பயனை ஆராய்ந்து; கேள்வி - மறை. துணைவியரோடு - மனைவியரோடு. தாங்கல் இயைந்தனர் - மேற்கொண்டனர். வல்லியும், ஊரனும், மாதரும் துய்த்து ஆய்ந்து காத்து இயைந்தனர் எனக் கூட்டுக. இத்துறை, அகப்பொருட் கோவைகள் எல்லாவற்றிலுமின்றி அருமையாகவே காணப்படுகின்றது.

(வே - ம்.) தாங்கள்.

துறவறம் முற்றும்

அம்பிகாபதி கோவை முற்றிற்று.

# செய்யுள் முதற்குறிப்பு


| செய்யுள் | பக்கம் |
|---|---|
| அடுங்காலவேலை | 134 |
| அணங்கரவல்கு | 201 |
| அணங்குங் கடவு | 264 |
| அணங்குந் தெரிவையும் | 25 |
| அந்நாள் முதனின்று | 259 |
| அயிலுங் கயலு | 290 |
| அரவந் தருமணி | 124 |
| அரவிசைக் குந்திரு | 323 |
| அரவுங் களிறு | 166 |
| அரியா மதகரி | 114 |
| அரியார்-யாயமுந் | 283 |
| அரியார் - யாலமன் | 123 |
| அருகாத அன்புட | 237 |
| அருகுங் கலவி | 173 |
| அருந்தும் பசியு | 265 |
| அரும்புறு கொங்கை | 337 |
| அருவியுஞ் சாரலு | 81 |
| அருளம்பிகாபதி | 1 |
| அருள்கொண் டியற்று | 327 |
| அலையேற்றிய! இப்பி | 267 |
| அல்லவை நீக்கி | 312 |
| அல்லொடு நண்பக | 343 |
| அவிகொண்ட வெங்கன | 175 |
| அவ்வாறு புல்லி | 99 |
| அழியு மிரும்புன | 111 |
| அளகந் திருத்தி | 18 |
| அளியாற் பெருகி | 137 |
| அளைதா ழரவும் | 74 |
| அறத்திற் றருமன் | 307 |
| அறந்தங்கு வானிலு | 257 |
| அறவோர் மொழிந்த | 281 |
| அறுகால் படஇருள் | 17 |
| அறையுங் கடலன்ன வன்பி | 169 |
| அறைவா ரொருவரை | 147 |
| அற்புறஞ் செல்ல | 161 |
| அனைத்தாய தன்னக | 243 |
| அன்பே மருவி | 249 |
| அன்போ டுருகிய | 227 |
| அன்னே வதுவை | 247 |
| அன்னையு முரு மலை | 142 |
| அன்னை யொறுப்பினும் | 211 |
| ஆக்குஞ் செயலென் | 54 |
| ஆடுங் கழங்கும் | 66 |
| ஆடுங் கொடிநெடுந் | 313 |
| ஆடுந் துறையி | 214 |
| ஆடும் படவர | 131 |
| ஆமைதன் பார்ப்பை | 145 |
| ஆம்பால் விரவின | 280 |
| ஆயின் றெனக்கு | 208 |
| ஆவுங் கனகமும் | 278 |
| ஆழுங் கனைகட | 107 |
| ஆரு முனிவுக் | 290 |
| இங்கென்னிளங்கொடி | 181 |
| இடமாஞ் சிறுகுடில் | 17 |
| இடிக்கொத் துறுமு | 128 |
| இதுமலர் செம்பொ | 158 |
| இயலுங் கலவை | 104 |
| இரப்பா ரொருவர்க் | 85 |
| இரவிற் பகல்பெரி | 164 |
| இருகாலுமில்லை | 171 |
| இருகுன் றனைய | 251 |
| இருங்கற் புடையவ | 332 |
| இரும்பாவை பெற்றனை | 240 |
| இருவி மறுகுலை | 150 |
| இருளும் புயலும் | 55 |
| இலவுங் கவிரு | 165 |
| இலனென்னு நாவினர்க் | 218 |
| இல்லா தியம்பவு | 83 |

| செய்யுள் | பக்கம் | செய்யுள் | பக்கம் |
|---|---|---|---|
| இளங்கொம் பொருதனி | 28 | எனக்காவி நின்னை | 78 |
| இளவேய் பொரும் இரு | 19 | என்போல நீரு | 235 |
| இனத்துக்கு மேய்ந்த | 159 | என்போல் மலரம்பில் | 27 |
| இனவா ரணந்திரி | 329 | என்னால் உளது | 73 |
| இன்றலங்கார | 148 | என்னாவி யன்னவர்சொல் | 205 |
| இன்னாத கானு | 219 | என்னாவி யன்னவர்க் | 105 |
| இன்னா தனவு | 298 | என்னையர்க்கென்று | 251 |
| இன்னா நெறியுங் குறி | 200 | ஏடார் மலர்க்குழல் | 243 |
| இன்னிசை வண்டுறை | 260 | ஏந்திய வள்ளத் | 284 |
| இன்னே யிரங்குமென் | 249 | ஏராடு சிந்துர | 282 |
| ஈங்கா ரிவர்நினை | 48 | ஏவார் நயனியர் | 289 |
| ஈன்றோர் வருந்த | 304 | ஏற்று மருப்பு | 153 |
| உகையார் முகிலி | 90 | ஐயோ மருங்கு | 101 |
| உடனா கியநின் | 165 | ஒடிக்குங் கரும்பி | 169 |
| உடுக்குங் கலையன்றி | 51 | ஒருகா லமுமன்னை | 140 |
| உடுக்குந் தழைகொண்டு | 199 | ஒருகா லுமையவ | 3 |
| உண்ணின்ற வேட்கை | 141 | ஒருதனி யேநின் | 18 |
| உமையா டலைவுனை | 170 | ஒருநா ழிகைசெல்வி | 330 |
| உய்யா மடநெஞ்ச | 12 | ஒருநாள் பிரிய | 172 |
| உரவெங் கடலொலி | 147 | ஒருநாள் வரினு | 149 |
| உரவெங் களிற்றண்ண | 164 | ஒருவரு மேவலர் | 140 |
| உரிதோ லரவு | 143 | ஒன்றிக் கலந்தங் | 239 |
| உருமுங் கிரியு | 109 | ஒன்றே யுளங்கொண் | 244 |
| உருவது மன்னுங் | 82 | ஓங்கும் பலவுங் | 247 |
| உருவுந் திருவுந் | 198 | கங்குற் சிறந்து | 148 |
| உரைக்கும் பெயரும் | 47 | கங்குற் றலைநின்ற | 163 |
| உவரும் புலவும் | 47 | கடந்தந்த வெங்கைக் | 195 |
| உழிபார்த் துடனுறை | 134 | கடமலை என்பர் | 49 |
| உள்ளங் களிப்ப | 53 | கடவா ரணந்திரி | 135 |
| உள்ளத் துவகை | 273 | கடற்பாற் றரளஞ் | 137 |
| உள்ளந் தடுப்ப வினை | 170 | கடனாக நிற்பது | 221 |
| உறித்தாழ் கரகமு | 238 | கடுங்கா லெறியக் | 136 |
| உறுந்தாரை என்னொடு | 62 | கணைக்குங் கரும்புங் | -156 |
| ஊரம் பலுமல | 185 | கணையொன்றிய இரு | 62 |
| ஊருங் கலிகெழு | 223 | கண்டா லெழலுங் | 262 |
| ஊனொன் றியஇன் | 35 | கரப்பற்ற அன்புட | 278 |
| ஊன்றோய் சுடர்வடி | 254 | கரிதாகி மென்குழல் | 16 |
| எங்கா தலர்செல்ல | 176 | கருகாத நீலமும் | 303 |
| எண்ணா அரும்பொரு | 339 | கருகிய பைங்கயல் | 5 |

| செய்யுள் | பக்கம் |
| --- | --- |
| கருங்கால வெண்குரு | 191 |
| கருங்குல வெற்புங் | 338 |
| கருநாண் மலர்க்குழற் | 172 |
| கருந்தா மரையன்ன கண்ணியர் | 77 |
| கருந்தாமரையன்ன கண்கழு | 187 |
| கருந்துன்று வார்குழற் | 293 |
| கருமோ கரவரி | 246 |
| கரும்புண்ட ரீக | 10 |
| கருவார் புயலென்றுங் | 226 |
| கலவஞ் செறிமயி | 126 |
| கலைமதிக் கும்புல | 216 |
| கல்லார் சுரத்தில் | 242 |
| கல்லுங் கழையுந் | 89 |
| கழியார் கருங்கடல் | 204 |
| கழுது முறங்கு | 152 |
| களிதங்கு தோகைக் | 159 |
| கறியுறு சாரற் | 7 |
| கற்புக் கருந்ததி | 308 |
| கற்றவர் கற்ற | 311 |
| கனமே கருங்குழல் | 23 |
| கனையிருள் வந்து | 139 |
| கன்னற் சிலைமதன் | 318 |
| கன்னுகமீது | 122 |
| காதல் மடந்தையர் | 20 |
| காந்துஞ் சினத்துப் | 318 |
| காயமுந் திண்ணமுங் | 248 |
| காலையு நண்பக | 109 |
| காவும் பருமணற் | 267 |
| கானே குழல்வல்லி | 112 |
| கிளைத்துக் கிளைத்தென்னைக் | 194 |
| குணங்குற்ற மென்னுமிக் | 215 |
| குணங்கெடவற்றிய | 189 |
| குரவலர் பூங்குழ | 338 |
| குருகைக் கறிக்கப் | 118 |
| குருகோடு கம்புட் | 282 |
| குருந்தம் நரந்தங் | 16 |
| குருவி பசுங்கிளி | 81 |
| குலனும் நலனுங் | 252 |

| செய்யுள் | பக்கம் |
| --- | --- |
| குழிவந்த பைங்கண்வெங் | 131 |
| குளிக்குஞ் சுனையினுங் | 46 |
| குளங்கெழு தாமரை | 297 |
| குறுந்தாள் மலர்க்குர | 220 |
| குன்றம் அழைக்கக் | 9 |
| குன்றே யனைய | 302 |
| கூருகிர்ப் பைங்கண் | 127 |
| கூர்ந்த சினக்களி | 230 |
| கூவிக் குயிலை | 99 |
| கூற்றங் கரந்து | 98 |
| கூனுங் கழைவிற் | 106 |
| கையார் வரிவளைக் | 276 |
| கையாற் றழுவின | 206 |
| கையுந் தழையுங் கருகி | 80 |
| கைவால் வளைகறங் | 44 |
| கொண்டல் வெளுக்குங் | 200 |
| கொத்தார் நறுமலர் | 121 |
| கொந்தார் மலர்க்குழல் | 142 |
| கொம்மைப் பணைமுலை | 69 |
| கொம்மைய வென்றிக் | 250 |
| கொய்கின்ற வேனலுங் | 110 |
| கொய்யுஞ் சுவற்பரி | 302 |
| கோவையை வென்றசெவ் | 195 |
| கொன்னூர் விழிதுயில் | 115 |
| கொன்னே யரவு | 120 |
| கொன்னே வெகுண்டு | 207 |
| கோடலஞ் செங்கைநல் | 287 |
| கோடிய தண்பிறை | 43 |
| கோடையுங் கொண்ட | 89 |
| சங்கமுழங்க | 229 |
| சந்தார் வனமுலை | 181 |
| சாந்தகிற் போதுந் | 51 |
| சாந்தங் கமழுந் | 321 |
| சாந்தந் தருமித் | 86 |
| சாயா வறிவுந் | 84 |
| சான்றோர் வரவு | 198 |
| சிமையார் தடவரைச் | 196 |
| சிலைக்கே பயிலுந் | 31 |
| சிலைமேல் முகிலன்ன | 64 |

| செய்யுள் | பக்கம் |
|---|---|
| சினத்துறை வாங்கிய | 59 |
| சினவெங் குறவர்பின் | 110 |
| சீதஞ்செய் திங்கள் | 119 |
| சீலந் தகைபெறு | 274 |
| சீறுங் களிற்றினந் | 58 |
| சுரிகுழல் வண்டுஞ் | 22 |
| சுரியோர் நறுங்குழல் | 9 |
| சுருங்கா விரிசினைச் | 6 |
| சுரும்பும் குவளையும் | 306 |
| சுரும்பெழு கூந்தலுஞ் | 23 |
| சுழிக்கே அழுந்து | 28 |
| சுறவார் கனங்குழைத் | 144 |
| சுறவே குழையு | 108 |
| சூதார் வனமுலைத் | 97 |
| செங்கால் மடநடை | 174 |
| செஞ்சே லனைய | 115 |
| செஞ்சேல் பொரு குழை | 125 |
| செய்யுந் தவமுடை | 276 |
| செல்லத் தகுவிறல் | 100 |
| செல்லுஞ் சுரமனல் | 223 |
| செழுங்கொண்ட லும்மதி | 253 |
| செறியா தவருறு | 61 |
| சென்றுக நின்ற | 254 |
| சென்றே பொருள் முற்றி | 334 |
| சேணார் கொடிநெடுந் | 100 |
| சேயவற் காறு | 212 |
| சேலுங் கயலு | 327 |
| சொல்லேன் உனக்கும் | 26 |
| சோகா னலஞ்சுட | 157 |
| சோலைத் திருமுரு | 213 |
| சோலையில் வந்தபைந் | 70 |
| சோறு முழுமடற் | 177 |
| தகைமெலி யக்கொங்கை | 320 |
| தண்ணந் துறைவன் | 271 |
| தம்பே ருலகறி | 270 |
| தருக்குங் களிறு | 86 |
| தலையாய நண்புடை | 68 |
| தழங்கும் அருவியுந் | 42 |
| தழைக்கின்ற சந்தனத் | 54 |

| செய்யுள் | பக்கம் |
|---|---|
| தளவந் தருநகை | 117 |
| தளவே பொருநகைத் | 335 |
| தள்ளா வளமையுந் | 5 |
| தனியே யிடந்தலைப் | 46 |
| தன்னால் வருந்திய | 61 |
| தன்னில் கடவுளர் | 63 |
| தன்னையுந் தோளையுந் | 160 |
| தாயென்செய் தாளென்று | 233 |
| தாரூர் குழலிக்கு | 56 |
| தார்கால மன்றலங் | 189 |
| தானே யருங்கலை | 309 |
| திருத்தியன் போடு | 294 |
| திருந்தா மொழியுந் | 216 |
| திருந்திய திண்பொருப் | 13 |
| திருந்திய பஞ்சென | 224 |
| திருந்திய வாறு | 118 |
| திருவடி வீழ்ந்தடி | 321 |
| திருவே அனைய | 31 |
| திருவோ வரையுறை | 2 |
| திரைவார் கருங்கடற் | 76 |
| திரைவான் முழக்கின் | 183 |
| தினைக்காவல் மாறி | 261 |
| தினைமாவு மால்வரைத் | 96 |
| தீட்டாத கூர்மைநின் | 179 |
| தீட்டிய தொய்யிற் | 103 |
| தீதாகி லென்னன்றி | 87 |
| துஞ்சத் தகும்பிடி | 183 |
| துணையேது மின்றி | 280 |
| துதையுஞ் சுரும்புறை | 274 |
| துப்போது சேயிதழ்த் | 244 |
| துறைவாய் மணற்சிற்றி | 76 |
| தூசுங் கலையுந் | 6 |
| தூயசெந் தாமரைப் | 13 |
| தென்செய்த பண்ணின் | 25 |
| தேதா வெனமுரல் | 320 |
| தேமே குவளையுஞ் | 286 |
| தேய்கின்ற திங்கள் | 113 |
| தேரிணங் குந்திரு | 193 |
| தேருங் கருங்கலை | 50 |

| செய்யுள் | பக்கம் |
|---|---|
| தேரொன்று வீதித் | 285 |
| தேரோ திருவல்குல் | 37 |
| தேருத அன்பினர் | 173 |
| தேற்றிய வஞ்சினம் | 258 |
| தேனுகர் வண்டும் | 305 |
| தொகத்தா மரைவெஞ் | 224 |
| தொடிவைத்த செங்கை | 295 |
| தொடுப்பார் தொடுத்தலர் | 232 |
| தொழுது வணங்கி | 332 |
| தோளானும் வெய்ய | 6 |
| தோளிற் கரும்பு | 263 |
| தோளுந் தொடியுந் | 20 |
| தோற்றந் திருவனை | 231 |
| தோற்றந் திருவென்று | 30 |
| நகையாடி வைகலுஞ் | 331 |
| நடைபோல் குறுகும் | 39 |
| நண்போ டினியதொர் | 245 |
| நந்தாப் பழனக் | 272 |
| நம்போ லெளியவ | 132 |
| நலமார் கலவி | 93 |
| நவரேகை அன்ன | 32 |
| நன்றே யினியவர் | 177 |
| நன்றே யுமக்கவர் | 235 |
| நிரையார் மலர்க்குழல் | 116 |
| நிழலைச் சுளித்து | 304 |
| நிறைசூல் எழிலி | 313 |
| நிறைபோ னதுமட | 307 |
| நினையாமல் நல்வினை | 11 |
| நினையோ மறந்தும் | 8 |
| நீங்கிற் சிறிது | 8 |
| நீடுங்கொல் லோகொண்ட | 15 |
| நீயோ திருமக | 92 |
| நீருங் கனலு | 130 |
| நீலம் பவளம் | 43 |
| நீருக வேலை நெருப் | 29 |
| நெய்யுண் சுரிகுழல் | 289 |
| நெய்யொன்று நீள்சுடர் | 225 |
| நெறியா ரலங்கல் | 298 |
| நோய்நாடி யானுற்ற | 210 |
| பங்கய மல்லற் | 296 |
| பங்கே ருகத்தன் | 266 |
| பங்கே ருகமலர்ப் பாதம் | 92 |
| பங்கே ருகமலர்ப் பாயலை | 124 |
| பஞ்சென வஞ்சும் | 237 |
| படர்ந்த கலாமின்ன | 295 |
| படைத்தார் படைத்த | 329 |
| பணந்தாங் குலகிற் | 309 |
| பண்காவல் கொண்ட | 312 |
| பண்டு தமக்குப் பரிந் | 203 |
| பண்டுவந் தார்சிலர் | 300 |
| பண்ணார் பணிமொழி | 34 |
| பண்ணார் பனிமொழிப் | 188 |
| பண்ணார் மொழிமென் | 57 |
| பண்பட்ட சொல்லி | 209 |
| பரவுங் குரிசில் | 167 |
| பரிகெழு தானை | 316 |
| பரிதி நிறத்த | 270 |
| பரியுங் கரியும் | 324 |
| பருந்தார் சுடரிலை | 317 |
| பருவ மடுத்தது வந்திலர் | 191 |
| பலரும் பரவப் | 273 |
| பறியிடை யென்பைப் | 129 |
| பனிநின்ற சோலைப் | 259 |
| பனியேர் நறுமலர்ப் பாயலிற் | 91 |
| பனியேர் நறுமலர்ப் பாவை | 95 |
| பன்னாள் முயன்று | 257 |
| பாங்காய இன்பப் | 261 |
| பாடின மேதகு | 95 |
| பாடும் குலம் இன | 31 |
| பாணர் சுரும்பும் | 201 |
| பாயுங் கயலொண் | 310 |
| பாவியெனக்குப் | 186 |
| பாவையர் கொய்யும் | 229 |
| பாண றடிசிலு | 264 |
| புகையாட நெஞ்சம் | 78 |
| புங்கம் படவண் | 324 |
| புதியார் வருமிடம் | 64 |
| புல்லத் தருவதும் | 12 |

| செய்யுள் | பக்கம் |
|---|---|
| புழற்கா லனகுவ | 125 |
| புள்ளும் புனலும் | 130 |
| புறத்தா னொருமுகி | 271 |
| புறந்தாழ் சுரிகுழற் பூவை | 275 |
| புறந்தாழ் புரிகுழற் | 234 |
| புறந்தாழ் விரிசிலைப் | 179 |
| புறந்தா ழளகஞ் | 331 |
| புறவார் நறுமுல்லை | 15 |
| புனத்தே வருவர்நல் | 49 |
| புனையுந் தரள | 75 |
| பூங்கற்ப வண்தழை | 66 |
| பூங்கேச மன்றல் | 41 |
| பூணார் வனமுலைப் | 255 |
| பூணுந் தரள நிரை | 21 |
| பூணொன்று மென்முலைப் | 210 |
| பூவடி வாளி | 240 |
| பூவே யனையர் | 299 |
| பூவையுண் டோபுனக் | 233 |
| பெடைநின்று காண | 96 |
| பெறுதற் கரிய | 146 |
| பேணத் தகுந்தன் | 162 |
| பேணுங் குலனும் | 71 |
| பேதா யறிவின் | 90 |
| பேதைப் பருவங் | 227 |
| பேரோத ஞாலம் | 30 |
| பைக்கொண்ட வல்குற் | 292 |
| பைந்தார் விடலையும் | 241 |
| பொருகுன் றனைய | 55 |
| பொருமாறு கொண்டு | 117 |
| பொலன்கலன் சேர்த்திப் | 288 |
| பொற்பிணை யாமடப் | 60 |
| பொன்றாத காதற் | 94 |
| பொன்னார் நறுமலர்ப் | 98 |
| போகின்ற வானப் | 220 |
| போரே கருதி | 250 |
| போற்றுந் தினைவிளை | 155 |
| போனார் வருக இருநிதி | 187 |
| மகரஞ் செறியும் | 33 |
| மகிழ்ந்தாவி யொன்றி | 72 |

| செய்யுள் | பக்கம் |
|---|---|
| மஞ்சறி யாமினும் | 83 |
| மணங்கே தகைதரும் | 206 |
| மணியார் வனமுலை | 151 |
| மதிகண் டலருங் | 162 |
| மதிகாட் டியநுதல் | 197 |
| மதிமுற் றியதன்ன | 184 |
| மயில்போல் இனியமென் | 14 |
| மரகத நன்னிறம் | 279 |
| மருண்முற் றியகளி | 194 |
| மருப்பார் வனமுலை | 266 |
| மருமந்த மாருதம் | 167 |
| மருமாந் தளிர்புரை | 44 |
| மருவந் தனத்து | 190 |
| மருவார் குழலி | 277 |
| மருவிய செங்கதிர் | 45 |
| மலைக்கோடி யின்மழை | 214 |
| மல்லற் பணில | 105 |
| மறக்கும் பரிசறி | 36 |
| மறித்துப் பிறையொன்று | 336 |
| மறியார் தடங்கண் | 213 |
| மறியுங் கயலு | 231 |
| மறையிற் புணர்வன்றி | 268 |
| மறைவந்தென் மேனி | 176 |
| மனங்கா வலருழை | 102 |
| மன்னிய செல்வமு | 328 |
| மன்னும் புலவியை | 284 |
| மாயக் கலவி | 180 |
| மாலைக் குமுத | 269 |
| மாவிடை கொள்ள | 228 |
| மாவின் கொழுந்தளி | 2 |
| மாவையும் இன்சொல் | 67 |
| மாறார் வளைய | 113 |
| மானுங் கலையு | 279 |
| மர்னுங் கிளியு | 230 |
| மிகலே யொழியக் | 22 |
| மிகுத்தேன் ஒருகிளி | 71 |
| மின்கண் புதைக்கு | 103 |
| மின்குறை கூற | 59 |
| மின்சென்ற வேற்கண்ணி | 255 |

| செய்யுள் | பக்கம் |
|---|---|
| மின்னே தழைகொண்டு | 52 |
| மின்னே மருங்குல் | 221 |
| மின்னே யவர்தந்த | 145 |
| மீளா தொழிவதே | 242 |
| மீனறி யாத விரிகடல் | 141 |
| முச்சங்க வண்டமிழ் | 182 |
| முதுவான் மதியை | 128 |
| முரிய விசும்பு | 300 |
| முரியுஞ் சிலைநுதல் | 114 |
| முருக விழுங்குழல் | 260 |
| முருகார் முளரியு | 286 |
| முருகொன் றியதல்ல | 262 |
| முருந்தே யனைய | 341 |
| முலைக்கா மணிவடம் | 65 |
| முலைமுற் றியமென் | 217 |
| முளைக்கும் பிறையை | 178 |
| முறம்போற் றழைசெவி | 107 |
| முற்று முகிழ்நகை | 239 |
| முற்றும் பழுதற்ற | 39 |
| முன்ஆவி வந்த | 38 |
| முன்செல்ல நாணும் | 226 |
| முன்நாள் வருந்தி | 33 |
| முன்றிலு மன்னை | 157 |
| முன்னே அறிஞர் | 27 |
| மூசிய வண்டு | 3 |
| மூளா அரும்பகை | 315 |
| மெய்வாய்கண் மூக்குச் | 37 |
| மேகஞ் சிறந்த | 123 |
| மேகந் தழுவும் | 94 |
| மேலிங் கொருபடி | 79 |
| மேலோட நின்று | 325 |
| மேவியொன் றுரெம்மை | 246 |
| மைக்கண் குவளை மலரின் | 205 |
| மைக்கார் தவழ | 143 |
| மைந்நிற வார்குழல் | 156 |
| மையோ டரிக்-வண்ணங் | 228 |
| மைய்யோ டரிக்-வள்ளலுந் | 236 |
| மைவார் குழல்மட | 301 |
| மொய்ம்மால் வரையன்ன | 79 |

| செய்யுள் | பக்கம் |
|---|---|
| மொய்யா டகமுடித் | 193 |
| யாங்காணு மாவி | 7 |
| யாமம் புணர்குறி | 133 |
| யாயுங் கடலு மலைப்ப | 174 |
| யாழிற் பொலிதரு | 199 |
| யானும் அறிவு | 29 |
| வகையுற்ற தார்புனை | 319 |
| வடக்குங் குமக்கொங்கை | 11 |
| வடமால் வரைநிலை | 222 |
| வடம்பரிக் குந்தன | 138 |
| வடிக்கண்ணியரொடு | 291 |
| வண்டலை யும்பொன் | 36 |
| வண்டார் கொழுநன் | 293 |
| வரலிங் கரிய | 133 |
| அரவிந்த மன்ன | 121 |
| வரவிங் கரிதன்று | 115 |
| வரிதருங் காஞ்சி | 322 |
| வரிநீல மன்ன | 218 |
| வரியரி தங்கு | 333 |
| வரியுங் கரியும் | 209 |
| வரியேர் நெடுங்கண் | 10 |
| வருமந்த வெல்லையில் | 136 |
| வல்லார் களபமுலை | 185 |
| வல்லிக் கொடியிடை | 120 |
| வல்லினும் நல்ல | 219 |
| வல்லே வருக | 184 |
| வழங்குங் கொடுவரி | 190 |
| வழிகின்ற தெள்ள | 19 |
| வளையார் முளரி | 57 |
| வனவேய் பொருதடந் | 334 |
| வாமா னுகளு | 161 |
| வாரண மாவின் மருப்பும் | 203 |
| வாரேற் றியமுலை | 269 |
| வார்க்குன் றனமுலை | 152 |
| வாவிகண் டேன்மலர்ச் | 34 |
| வாவியொன் றுத | 102 |
| வாளா நமக்கு | 40 |
| வாளாது நின்றென்னை | 87 |
| வானக முற்ற | 56 |

| செய்யுள் | பக்கம் |
| --- | --- |
| வானகத் தேநின்று | 340 |
| வானஞ் சொரிக | 236 |
| விடவா யரவை | 180 |
| விண்ணுங் கருகுங் | 224 |
| விண்போய் வளரிள | 48 |
| விரியுங் கடலுல | 126 |
| விரும்பும் பொருள்முற்றி | 335 |
| விலையாக்கி வேலை | 24 |
| வில்லார் நுதலும் | 211 |
| வில்லார் புருவம் | 305 |
| வில்லும் பிறையுந் | 84 |
| விழிகாட்டு நவ்வி | 196 |
| விழிகுழி யும்படி | 192 |
| விழியுஞ் சிவந்து | 208 |
| விற்கொண்ட காளையர் | 253 |
| வினைவருஞ் செங்கதிர் | 73 |
| வீழ்கின்ற தண்புனல் | 119 |
| வெங்கோல் நடாத்திய | 21 |
| வெதிர்கொண்ட தோளி | 341 |
| வெயிலே விடுகுழை | 35 |
| வெல்லப் பிறந்த | 88 |
| வெறுக்கத் தகுவன | 292 |
| வென்றே புகழ்புனை | 68 |
| வேந்தன் பொருளுக்கு | 342 |
| வேமாறு செல்ல எம் | 232 |
| வேயுங் கரும்பும் | 315 |
| வேலுஞ் சிலையுமில் | 258 |
| வேறிங் கொருதுணை | 149 |
| வைவைத்த வேலண்ணல் | 32 |